உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சேக்கிழார்சுவாமிகளருளிச்செய்த

திருத்தொண்டர்புராணமென்னும்

பெரியபுராணம்

முதற்காண்டம்

இரண்டாம்பாகம் மூலமும்,

ஸ்ரீகைலாயபரம்பரைத் திருவண்ணாமலைஆதீனம்

ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான்சுவாமிகள்

இயற்றிய பதவுரையும்,

பையூர்க்கோட்டம்

பெருவாயல்

சுந்தரமுதலியாரவர்கள் குமாரர்

கிருஷ்ணசுவாமிமுதலியாரவர்களால்

சென்னை

பா-சிவலிங்கையரவர்களது

ஆதிகலாநிதி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

கலியுகாப்தம்-௪௯௯௩-க்கு

விக்ருதிஷு கன்னிரவி.

Registered Copy-right.

அறிவிப்பு.

இப்புத்தகங்கள் சென்னை கோமளீச்சுரன்பேட்டை நாகப்பமுதலியார் வீதி உஅ-வது கதவிலக்கமுள்ள வீட்டில் விற்கப்படும். பெரியபுராணம் முதற்காண்டம் பாயிரந் தொடங்கிச் சண்டேசுரநாயனார்புராணம்வரையில் ககூ-நாயன்மார்புராணமும் சந்தானசாரியரிலொருவராகிய கொற்றவன்குடி-உமாபதிசிவாசாரியாரருளியசேக்கிழார்சுவாமிகள்புராணமும் திருமுறைகண்டபுராணமும் நம்பியாண்டார்நம்பி திருவந்தாதியும் (கூச) படஞ்சேர்த்துக் கட்டடஞ்செய்த காபி க-க்கு விலை ரூபா-கூ; அணா-ச, கட்டடமில்லாத படமுள்ள காபி க-க்கு விலை ரூபா-ரு, அணா-அ, கட்டடமும் படமுமில்லாத காபி க-க்கு விலை ரூபா-ச, அணா-அ.

௸ புராணம் முதற்காண்டம் இரண்டாம்பாகம் திருநாவுக்கரசுசுவாமிகள்புராணமுதல் நமிநந்தியடிகள்புராணம் வரையில் எ-நாயன்மார்புராணம் நகூ-படஞ்சேர்த்துக்கட்டடஞ்செய்த காபி க-க்கு விலை ரூபா-உ, அணா-கரு, படமில்லாத காபி க-க்கு விலை ரூபா-உ, அணா-ரு, படமும் பயிண்டுமில்லாத காபி க-க்கு விலை ரூபா-க, அணா-கந, ௸ புராணத்தில் இரண்டாவது காண்டம் முதற்பாகம் திருஞானசம்பந்தசுவாமிகள்புராணம் படத்துடன் கட்டடஞ்செய்த காபி க-க்கு விலை ரூபா-கூ, அணா-ச, கட்டடமும் படமுமில்லாத காபி க-க்கு விலை ரூபா-ரு, அணா-அ, படமும் கட்டடமுமில்லாத காபி க-க்கு விலை ரூபா-ச, அணா-அ, சேக்கிழார்சுவாமிகள் புராணமும் திருமுறைகண்டபுராணமும் பொழிப்புரை காபி க-க்கு விலை ரூபா-அரை.

புராண அட்டவணை.

எண்.	புராணம்.	பக்கம்.
	திருத்தொண்டர்புராணம்.	
க	திருநாவுக்கரசுசுவாமிகள்புராணம்...	க
உ	குலச்சிறைநாயனார்புராணம்...	உகரு
௩	பெருமிழலைக்குறும்பநாயனார்புராணம்...	உகசு
ச	காரைக்காலம்மையார்புராணம்...	உஉக
ரு	அப்பூதியடிகள்நாயனார்புராணம்...	உசரு
சு	திருநீலநக்கநாயனார்புராணம்...	உருஅ
எ	நமிநந்தியடிகள்நாயனார்புராணம்...	உஎ0

படத்தின் அட்டவணை.

எண்.	படத்தின் அம்சங்கள்.	பக்கம்.
க	திருநாவுக்கரசுசுவாமிகள்...	க
உ	மருணீக்கியார் தருமசேனராகிப் பிடகாகமத்தைச்சமணர்களுக்குப் போதித்தது...	கரு
ங	திலகவதியார் திருவதிகை ஆலயத்தில் அருமைத்திருத்தொண்டுசெய்தது...	கங
ச	திலகவதியார் தம் சகோதரரை மீண்டும் சைவத்திற் புகுவிக்கச் சிவபிரானைத்துதிக்கச் சூலையால் தடுத்தாட்கொள்வதாகக் கூறியது ..., ...	கஎ
ரு	மருணீக்கியார் தமக்கைபாலடைந்து திருநீறுபெற்றுச் சூலைநீங்கப் பதிகமோதினது...	உங
சு	சமணர்வாகீசர்பாதம்பணிந்து வருந்திப் பாடலிபுரம் அழைத்துச்சென்றது...	ஙரு
எ	பல்லவன் சமணர்கள் துர்ப்போதனையால் வாகீசரை நீற்றறையிலிட்டது...	ஙசு
அ	வாகீசருக்குவிஷத்தை உண்பித்தும் இறவாமையால் மீண்டும்யானையை ஏவ அது சமணரைவதைத்து வாகீசரைப்பணிந்து காட்டிற்சென்றது...	சங
கூ	சமணர்கள் வாகீசரைக்கல்லிற்கட்டிக் கடலில்விட அவரைக்கெடிலநதி முகத்துவாரத்திற்சேர்க்கும்படி சிவபிரான் வருணனுக்கு ஆக்கியாபித்தது...	சஅ
க0	வருணன் வாகீசரைக்கெடிலநதிமுகப்பிற்சேர்க்க அவர்திருப்பாதிரிப்புலியூராலயத்தைத் தெரிசிக்கச்சென்றது... ...	ருக
கக	பல்லவராஜன் வாகீசரைப்பணிந்து தான் சைவனாகிப் பாடலிபுரத்திலுள்ள சமணப்பாழியையிடித்துக் குணவதீச்சுரமென்னு மாலயத்தைக்கட்டினது...	ருஅ
கஉ	திருத்தூங்கானைமாடத்தில் திருநாவுக்கரசுசுவாமிகளுக்கு இடபமுத்திரையுஞ் சூலமுத்திரையுந்தரித்தது... ...	சு0
கங	திருநாவுக்கரசுசுவாமிகளுக்குச் சிவபிரான் திருநல்லூரில் திருவடிதீட்சைசெய்தது...	அங
கச	திருநாவுக்கரசுசுவாமிகள் அப்பூதியடிகள்நாயனார் மாளிகையிற்சென்று அவர் மூத்தகுமாரனுக்கு விஷந்தீண்டினதை நிவர்த்திசெய்தது...	அக
கரு	திருநாவுக்கரசுசுவாமிகளும் திருஞானசம்பந்தசுவாமிகளும் திருவீழிமிழலையில் படிக்காசுபெற்றது...	கக0
கசு	திருநாவுக்கரசுசுவாமிகள் திருமறைக்காட்டில் வேதம்பூசித்துச் சாத்தினகதவைத்திறந்தது...	ககசு
கஎ	திருமறைக்காட்டில் திருநாவுக்கரசுசுவாமிகளோடிருந்த திருஞானசம்பந்த சுவாமிகளிடத்தில் மங்கையர்க்கரசியார் தூதரை அனுப்பிச் சைவக்குன்றிச் சமண்பெருகினதைத் தெரிவித்தது...	கஉஅ
கஅ	வடதளி ஆலயம் சமணர்களால் மூடப்பட்டிருந்ததை வாகீசர் வெளிக்கண்டது...	கஙக
ககூ	வடதளி ஆலயத்துக்கு அரசனால் விதானம் கட்டியபின் வாகீசர்தரிசித்தது...	கஙங

எண்.	படத்தின் அம்சங்கள்.	பக்கம்.
உ0	வாகீசருக்குச் சிவபிரான் கட்டமுதளித்துத் திருப்பைஞ்ஞீலிக்கு வழிகாட்டினது...	கஙரு
உக	வாகீசர் உத்தரகைலாயத்தைத் தரிசிக்கச்சென்றது...	கசுச
உஉ	திருநாவுக்கரசுசுவாமிகள் ஸ்ரீகைலாயகோலத்தைத் திருவையாற்றில் தரிசித்தது...	கசுஉ
உங	அப்பர்சுவாமிகள் ஆளுடையபிள்ளையாரது முத்துச்சிவிகையைத்தாங்கினது...	கஅகூ
உச	திருநாவுக்கரசுசுவாமிகளை ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள் ஆலிங்கனம்செய்தது...	ககூ0
உரு	வாகீசர்திருப்பூம்புகலூரில் உழவாரத்திருப்பணி செய்யுங்கால் சிவபெருமான் நவமணிகளும் அரம்பையரும் தோன்றச் செய்தது...	உ0ரு
உசு	திருநாவுக்கரசுசுவாமிகள் திருப்பூம்புகலூரில் சித்திரைச்சதயத்தில் முத்தியடைந்தது...	உகஉ
உஎ	குலச்சிறைநாயனார்...	உகங
உஅ	பெருமிழலைக்குறும்பநாயனார்...	உகசு
உகூ	காரைக்காலம்மையார் திருமணமுதலியது...	உஉக
ங0	காரைக்காலம்மையார் சிவபெருமானைவேண்டிப் பேய்வடிவம்பெற்றது...	உஙச
ஙக	காரைக்காலம்மையார் தலையால்வணங்கி ஸ்ரீ கைலாயம்சென்றது...	உஙகூ
ஙஉ	காரைக்காலம்மையார் திருவாலங்காட்டில் நடனதரிசனம்செய்தது...	உசக
ஙங	அப்பூதியடிகள்நாயனார் திருத்தொண்டு...	உளங
ஙச	திருநீலநக்கநாயனார் திருத்தொண்டு...	உருஅ
ஙரு	திருநீலநக்கநாயனார் திருநீலகண்டப்பெரும்பாணருக்கு வேதிகையில் இடம்கொடுத்தது...	உசுசு
ஙசு	நமிநந்தியடிகள் திருத்தொண்டு...	ங00

தேவார அட்டவணை.

எண்.	தலம்.	பண்.	தேவாரம்.	பக்கம்.
௧	திருவதிகைவீரட்டானம்	கொல்லி	கூற்றாயினவாறுவிலக்ககிலீர் ...	௨௫
௨	,,	மறுமாற்றத்திருத்தாண்டகம்	நாமார்க்குங்குடியல்லோ ...	௩௩
௩	,,	தனித்திருக்குறுந்தொகை	மாசில்வீணையுமாலைமதியமு ...	௩௭
௪	,,	காந்தாரம்	சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ் ...	௪௩
௫	நமச்சிவாயப்பதிகம்	காந்தாரபஞ்சமம்	சொற்றுணைவேதியன்சோதிவானவன் ...	௪௮
௬	திருப்பாதிரிப்புலியூர்	திருவிருத்தம்	ஈன்றாளுமாயெனக்கெந்தையுமா ...	௫௨
௭	திருவதிகைவீரட்டானம்	எழைத்திருத்தாண்டகம்	வெறிவிரவுகூவிளநற்றொங்கலானை ...	௫௬
௮	திருத்தூங்கானைமாடம்	திருவிருத்தம்	பொன்னார்திருவடிக்கொன்றுண்டு ...	௬0
௯	கோயிற்றிருநேரிசை	கொல்லி	பத்தனாய்ப்பாடமாட்டேன் ...	௬௭
௧0	கோயில்	திருக்குறுந்தொகை	அன்னம்பாலிக்குந்தில்லைச்சிற்றம்பலம் ...	௬௮
௧௧	திருக்கழிப்பாலை	காந்தாரம்	வனபவளவாய்திறந்து ...	௭0
௧௨	கோயில்	திருக்குறுந்தொகை	பனைக்கைமும்மதவேழமுரித்தவன் ...	௭௧
௧௩	,,	பெரியதிருத்தாண்டகம்	அரியானையந்தணர்தஞ்சிந்தையானை ...	௭௨
௧௪	,,	திருநேரிசை	செஞ்சடைக்கற்றைமுற்றத் ...	௭௪
௧௫	திருக்கழுமலம்	திருவிருத்தம்	பார்கொண்டுமூடிக்கடல்கொண்ட ...	௭௯
௧௬	திருவாவடுதுறை	திருத்தாண்டகம்	நம்பனைநால்வேதங்கரைகண்டானை ...	௮௧
௧௭	திருச்சத்திமுற்றம்	திருவிருத்தம்	கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமை ...	௮௨
௧௮	திருநல்லூர்	திருத்தாண்டகம்	நினைந்துருகுமடியவரைநையவைத்தார் ...	௮௩
௧௯	விஷந்தீர்த்ததிருப்பதிகம்	இந்தளம்	ஒன்றுகொலாமவர்சிந்தையுயர்வரை ...	௮௯
௨0	திருப்பழனம்	பழந்தக்கராகம்	சொன்மாலைபயில்கின்றகுயிலினங்காள் ...	௯௧
௨௧	திருஆரூர்	திருவிருத்தம்	குலம்பலம்பாவருகுண்டர்முன்னே ...	௯௫
௨௨	,,	போற்றித்திருத்தாண்டகம்	கற்றவர்களுண்ணுங்கனியே ...	,,
௨௩	,,	சீகாமரம்	காண்டலேகருத்தாகினைத்திருந்தேன் ...	௯௭

எண்.	தலம்.	பண்.	தேவாரம்.	பக்கம்.
௨௪	திருவாரூர்பழமொழி	காந்தாரம்	மெய்யெலாம்வெண்ணீறுசண்ணித்தமேனி ...	௯௮
௨௫	திருவாரூர்	,,	பாடிளம்பூதத்தினானும்பவளச்செவ்வா ...	௧00
௨௬	திருவாரூர்த்திருவாதிரை	குறிஞ்சி	முத்துவிதானமணிப்பொற்கவரிமுறையாலே ...	௧0௩
௨௭	திருவீழிமிழலை	திருத்தாண்டகம்	போரானையீருரிவைப்போர்வையானை ...	௧௧0
௨௮	திருமறைக்காடு	திருக்குறுந்தொகை	ஓதமால்கடல்பரவியுலகெலா ...	௧௧௬
௨௯	,,	,,	பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ ...	௧௧௭
௩0	திருவாய்மூர்	,,	எங்கேயென்னையிருந்திடந்தேடி ...	௧௨௨
௩௧	,,	திருத்தாண்டகம்	பாடவடியார்பரவக்கண்டேன் ...	௧௨௪
௩௨	திருஆவடுதுறை	திருநேரிசை	மாயிருஞாலமெல்லாமலரடி ...	௧௨௯
௩௩	திருஆறைவடதளி	திருக்குறுந்தொகை	தலையெலாம்பறிக்குஞ்சமண்கையரு ...	௧௩௩
௩௪	திருவண்ணுமலை	திருநேரிசை	ஓதிமாமலர்கவியுமையவள்பங்காமிக்க ...	௧௩௮
௩௫	திருஏகம்பம்	காந்தாரம்	கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவார்பால் ...	௧௪௩
௩௬	,,	திருத்தாண்டகம்	கூற்றவன்காண்கூற்றுவனைக் ...	௧௪௫
௩௭	திருவொற்றியூர்	,,	வண்டோங்குசெங்கமலக்கழுநீர்மல்கு ...	௧௪௯
௩௮	திருப்பாசூர்	திருக்குறுந்தொகை	முந்திமூவெயிலெய்தமுதல்வனார் ...	௧௫௨
௩௯	திருவாலங்காடு	திருத்தாண்டகம்	ஒன்றாவுலகனைத்துமானார்தாமே ...	௧௫௪
௪0	திருக்காளத்தி	,,	விற்றூணொன்றில்லாதநல்கூர்ந்தான்காண் ...	௧௫௬
௪௧	திருக்கயிலை	போற்றித்திருத்தாண்டகம்	வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றி ...	௧௬௫
௪௨	திருவையாறு	திருத்தாண்டகம்	ஆரார்திரிபுரங்கணீறாநோக்கு ...	௧௭0
௪௩	,,	,,	ஓசையொலியெலாமானாய்நீயே ...	௧௭௧
௪௪	,,	காந்தாரம்	மாதர்ப்பிறைக்கண்ணியானை ...	௧௭௪
௪௫	,,	திருக்குறுந்தொகை	சிந்தைவாய்தலுளான்வந்து ...	௧௭௬
௪௬	,,	,,	சிந்தைவண்ணத்தராய்த்திறம் ...	,,
௪௭	,,	திருநேரிசை	கங்கையைச்சடையுள்வைத்தார் ...	௧௭௭
௪௮	,,	,,	குண்டனாய்ச்சமணரோடேகூடி ...	௧௭௮
௪௯	,,	,,	தானலாதுலகமில்லைசகமலா ...	,,

எண்.	தலம்.	பண்.	தேவாரம்.	பக்கம்.
ருo	,,	திருவிருத்தம்	குறுவித்தவாகுற்றநோய்வினை ...	கஎகூ
ருக	,,	,,	சிந்திப்பரியனசிந்திப்பவர்க்குச் ...	,,
ருஉ	,,	,,	அந்திவட்டத்திங்கட்கண்ணியனை ...	கஅo
ருங	திருப்பூந்துருத்தி	திருத்தாண்டகம்	நில்லாதநீர்சடைமேனிற்பித்தானை ...	கஅக
ருச	,,	திருக்குறுந்தொகை	கொடிகொள்செல்வவிழாக்குணலை ...	கஅங
ருரு	,,	திருவிருத்தம்	மாலினைமாலுறநின்றான்மலை ...	,,
ருசு	பலவகை	திருத்தாண்டகம்	நேர்ந்தொருத்தியொருபாகத் ...	கஅச
ருஎ	தனித்	,,	அப்பனீயம்மைநீயையனுநீ ...	கஅரு
ருஅ	திருஅடைவு	,,	பொருப்பள்ளிவரைவில்லாப்புர ...	கஅஎ
ருகூ	திருஅங்கமாலை	சாதாரி	தலையேநீவணங்காய் ...	,,
சுo	திருவாலவாய்	திருத்தாண்டகம்	முளைத்தானையெல்லார்க்குமுன்னே ...	ககூஉ
சுக	,,	திருநேரிசை	வேதியர்வேதகீதர்விண்ணவ ...	ககூரு
சுஉ	திருப்பூவணம்	திருத்தாண்டகம்	வடிவேறுதிரிசூலந்தோன்றுந் ...	,,
சுங	திருவிராமேச்சரம்	திருநேரிசை	பாசமுங்கழிக்ககில்லாவரக்கரை ...	ககூஅ
சுச	நின்ற	திருத்தாண்டகம்	இருநிலனாய்த்தீயாகிநீருமாகி ...	உoக
சுரு	தனித்	தாண்டகம்	ஆமயந்தீர்த்தடியேனை ...	உoஉ
சுசு	,,	க்ஷேத்திரக்கோவை	தில்லைச்சிற்றம்பலஞ்செம்பொன் ...	,,
சுஎ	குறைந்த	திருநேரிசை	வென்றிலேன்புலன்களைந்தும் ...	உoங
சுஅ	தனித்	,,	தொண்டனேன்பட்டதென்னே ...	,,
சுகூ	ஆருயிர்த்	திருவிருத்தம்	எட்டாந்திசைக்குமிருதிசைக்கு ...	,,
எo	தசபுராணம்	பழம்பஞ்சுரம்	பருவரையொன்றுசுற்றியரவங் ...	உoச
எக	பாவநாசம்	,,	பற்றற்றார்சேர்பழம்பதியை ...	,,
எஉ	சரக்கறைத்	திருவிருத்தம்	விடையும்விடைப்பெரும்பாகா ...	,,
எங	திருவாரூர்	திருத்தாண்டகம்	பொய்ம்மாயப்பெருங்கடலிற்புலம் ...	உoஅ
எச	திருப்புகலூர்	,,	எண்ணுகேனென்சொல்லியெண்ணு ...	உகக

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫	௮	அழ்தயா	அழியாத
௨௪	௨௨	டாநா	டநா
௨௮	௧௯	தம்மிச்சைநிரம்பவரயபெறும்	மெய்ம்மைப்பணிசெய்தவிருப்பதனுல்
,,	௧௪	மெய்ம்மைப்பணிசெய்த விருப்பதனுல்	தம்மிச்சைநிரம்பவரம்பெறும்
௪௨	௩௦	பிளிறொளி	பிளிறொலி
௪௩	௨௪	தவராசனுகிய	தவமன்னராகிய
௪௪	௨௪	குலவோ	குவவோ
௪௬	௪	டிடவீசி	டிட
,,	,,	ஈண்டவர்	வீசி ஈண்டவர்
,,	௧௭	கலக்கின்ற	கலக்குகின்ற
௪௮	௩௫	கலம்மர	கலமர
௪௯	௧௪	தொண்டர்	தொண்டர்கள்
௬௨	௧௨	உடம்பாலமையாமையின்	உடம்பாலமையாமைகருதியும்
௬௬	௮	நின்றுடுக	நின்றுடு
௬௮	௩௮	பாலிச்கு	பாலிக்கு
௯௧	௨௮	பதிகத்தைச்	பாடலிற்
௧௦௪	௨௩	பின்சொல்ல	பின்செல்ல
௧௦௬	௧௬	திருமுடி	சடைமுடி
௧௧௧	௨௦	உயதவ	உயர்தவ
,,	௨௯	யெடுத்தக	யெடுத்த
,,	௩௦	த்தேய்த்	தேய்த்
௧௧௪	௧௨	திருமுடி	சடையின்
௧௨௨	௧௩	திருத்தாண்டகம்	திருக்குறுந்தொகை
௧௨௩	௨௩	செல்லுவர்	செல்லுமவர்
௧௨௪	௨௧	திறம்பித்தே	திறப்பித்தே
௧௨௭	௮	அவ்வேவுகாரர்திருமறை	அவ்வேவுகாரர்சிவபிரான் வீற்றிருந்தருளும் திருமறைக்
௧௪௦	௩௯	செய்யவையர்	செய்யமெய்யர்
௧௬௧	௩௦	அருட்சுர	அருஞ்சுர
௧௬௪	௯	யயில்	வயில்
௧௭௨	௨௯	தீண்டோன்	திண்டோள்
௧௮௩	௧௮	போங்குந்	பொங்குந்
௨௪௦	௩	பாடும்	யாடும்
௨௬௭	௧௭	மரயா	மகரயா
௨௭௪	௧௫	செய்தழு	செய்தெழு
௨௭௯	௪௩	ந்து	ய்து
௨௮௦	௨௬	தட்டா	தாட்டா

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாண்மரபில் குறுக்கையர் குடியில் புக
ழனார் மாதினியாருக்கு மைந்தராக மருணீக்கியார் என்னும் திருநாவுக்கரசுசுவாமிகள் திருவவதாரஞ்செய்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பர்சுவாமிகளென்னும்

திருநாவுக்கரசுசுவாமிகள் புராணம்.

நான்காவது

திருநின்றசருக்கம்.

கடவுள்வாழ்த்து.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்.

நூல்.

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய வொண்ணாமை யுணராதேன்.

(இ-ள்.) திருநாவுக்கரசுவளர்திருத்தொண்டினெறிவாழ=திருநாவுக்கரசென்னுந் திருப்பெயரையுடையவரும் திருத்தொண்டின்வழி வாழும்படி; வருஞானத்தவமுனிவர்வாகீசர்=அவதரித்த ஞானத்தையுடைய தவமுனிவருமாகிய வாகீசரது; வாய்மைதிகழ்பெருநாமச்சீர்பரவலுறுகின்றேன்=மெய்ம்மை விளங்கிய பெரிய சரிதத்தின் சிறப்பைத் துதிக்கின்றேன்; பேருலகிலொருநாவுக்குரைசெய்யவொண்ணாமையுணராதேன்=அகன்ற நிலவுலகத்தில் அதனை ஒருநாவால் எடுத்துக்கூற முடியாமையை அறியாதயான்.

நாவுக்கரசென்றலும் வாகீசரென்றலும் ஒருபொருளவாயினும், தமிழ்மொழி வடமொழியால் நாம வேறுபாடாயிருத்தலின் வேறுகூறினர். நாமமென்பது ஈண்டுச் சரிதமென்னுந் துணையாய் நின்றது. (க)

தொன்மைமுறை வருமண்ணின் றுகளன்றித் துகளில்லா
நன்மைநிலை யொழுக்கத்தி னலஞ்சிறந்த குடிமல்கிச்
சென்னிமதி புனையவளர் மணிமாடச் செழும்பதிகண்
மன்னிநிறைந் துளதுதிரு முனைப்பாடி வளநாடு.

(இ-ள்.) தொன்மைமுறைவருமண்ணின்றுகளன்றித்துகளில்லா=பழமையாகிய அறநெறியேவருகின்ற மண்ணிலுதித்த புழுதித் துகளன்றித் தம்மிடத்து வேறுகுற்றமில்

லாத; நன்மைநிலையொழுக்கத்தினலஞ்சிறந்தகுடிமல்கி—நல்ல அறநிலைக்குரிய ஒழுக்கத்தால் மிகச்சிறப்படைந்த குடிகள் நெருங்கி; சென்னிமதிபுனைவளர்மணிமாடச் செழும்பதிகள்—சிகரங்களில் சந்திரன் தங்குதலால் அலங்கரிக்கும்படி உயர்ந்த மணிகளிழைத்த மண்டபங்களையுடைய அழகிய பல ஊர்கள்; மன்னிநிறைந்துளதுதிருமுனைப்பாடிவளநாடு—நிலைபெற்று நிறைந்தது வளந்தங்கிய திருமுனைப்பாடிநாடு.—எ-று.

தொன்மைமுறைவருமொழுக்கம் என இயையும். (உ)

புனப்பண்ணை மணியினொடும் புறவினறும் புதுமலரின்
கனப்பெண்ணி றிரைசுமந்து கரைமருங்கு பெரும்பகட்டோர்
இனப்பண்ணை யுழும்பண்ணை யெறிந்துலவி யெவ்வுலகும்
வனப்பெண்ண வரும்பெண்ணை மாநதிபாய் வளம்பெருகும்.

(இ-ள்.) புனப்பண்ணைமணியினொடும்—குறிஞ்சிநிலத்திலிருக்கும் தொகுதியான இரத்தினங்களோடும்; புறவினறும்புதுமலரின்கனப்பு—முல்லைநிலத்திலிருக்கும் நறுமணங்கமழும் புதியமலர்களின் தொகுதிகளையும்; எண்ணிறிரைசுமந்துகரைமருங்கு—அளவிறந்த திரைக்கரங்களால் வாரி இருகரையிலும்; பெரும்பகட்டேரினப்பண்ணையுழும்பண்ணையெறிந்துலவி—பெரிய கடாக்கள் பூட்டிய ஏர்த்தொகுதிகள் உழப்பட்ட வயல்களிலெறிந்து சஞ்சரித்து; எவ்வுலகும்வனப்பெண்ணவரும்—எவ்வுலகத்தாரும் தன் பெருமையை மதிக்கும்படி பெருக்கெடுக்கும்; பெண்ணைமாநதிபாய்வளம்பெருகும்—பெரிய பெண்ணையாறுனது பாய்தலால் வளம்பெருகியிருக்கும்.—எ-று. (ங)

காலெல்லாந் தகட்டுவரால் கரும்பெல்லாங் கண்பொழிதேன்
பாலெல்லாங் கதிர்ச்சாலி பரப்பெல்லாங் குலைக்கமுகு
சாலெல்லாந் தரளநிரை தடமெல்லாஞ் செங்கழுநீர்
மேலெல்லா மகிற்றூபம் விருந்தெல்லாந் திருந்துமனை.

(இ-ள்.) காலெல்லாந்தகட்டுவரால்—வயலுக்கு நீர்பாய்ச்சும் கால்களிலெல்லாம் அச்சவடிவமான வரால் மீன்களுள்ளன; கரும்பெல்லாங்கண்பொழிதேன்—கரும்புகடோறும் வெடித்துக் கணுக்களினின்றும் பொழிகின்ற தேனுள்ளன; பாலெல்லாங் கதிர்ச்சாலி—பக்க இடங்கடோறும் கதிரையுடைய செந்நெற்பயிர்களுள்ளன; பரப்பெல்லாங்குலைக்கமுகு—பரந்த இடங்களிலெல்லாம் குலைகளையுடைய கமுகமரங்களுள்ளன; சாலெல்லாந்தரளநிரை—படைச்சால்களிலெல்லாம் முத்துக்களின் வரிசைகளுள்ளன; தடமெல்லாஞ்செங்கழுநீர்—வாவிகளிலெல்லாஞ் செங்கழுநீர் மலர்களுள்ளன; மேலெல்லாமகிற்றூபம்—மேல்வீடுகளிலெல்லாம் அகிற்கட்டையினாலாகிய புகைகளுள்ளன; விருந்தெல்லாந்திருந்துமனை—திருத்தமான மனைகளிலெல்லாம் விருந்தினருளர். விருந்து என்றது புதிதாகவந்தவர்களை. (ச)

கடைஞர்மிடை வயற்குறைத்த கரும்புகுறை பொழிகொழுஞ்சா
றிடைதொடுத்த தேன்கிழிய விழிந்தொழுகு நீத்தமுடன்
புடைபரந்து ஞிமிறொலிப்பப் புதுப்புனல்போய் மடையுடைப்ப
உடைமடையக் கரும்படுகட் டியினடைப்ப வூர்கடொறும்.

(இ-ள்.) கடைஞர்மிடைவயற்குறைத்த—பள்ளர்கள் நெருக்கமாக வயல்களில் துண்டித்த; கரும்புகுறைபொழிகொழுஞ்சாறு—கரும்பினது அடித்துண்டுகளினின்றும் பொழிகின்ற கொழுமையாகிய சாறுனது; இடைதொடுத்ததேன்கிழிய—இடையிடையே கட்டியிருக்கும் தேன்கூடுகள் கிழிதலால்; இழிந்தொழுகுநீத்தமுடன்—பெருகியோ

டுகின்ற தேன்வெள்ளத்தோடு; புடைபரந்துஞிமிறொலிப்ப=பக்கங்களில் பரவி வண்டு கள் ஒலிக்கும்படி செல்கின்ற; புதுப்புனல்போய்மடையுடைப்ப=புதிய நீரோடுசென்று வரம்புகளையுடைத்துவிட; உடைமடையக்கரும்படுகட்டியின்=உடைக்கப்பட்ட மடை யை அக்கரும்பைக்காய்ச்சிய வெல்லக்கட்டியினால்; அடைப்பவூர்கடொறும்=நாட்டில் ஊர்கடோறும் அடைப்பார்கள்.—எ-று. (ரு)

கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கை முகங்காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகங்காட்டப்
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞரார்ப் பொலிபிறங்க
நெருங்கியசா துரங்கபல நிகர்ப்பனவா நிறைமருதம்.

(இ-ள்.) நிறைமருதம்=வளம் நிறைந்த மருதநிலங்கள்; கருங்கதலிப்பெருங் குலைகள்=கருவாழைகளின் பெரிய குலைகள்; களிற்றுக்கைமுகங்காட்ட=யானைகளின் துதிக்கையினோடுகூடிய முகத்தின்வடிவத்தைக் காண்பிக்க; மருங்குவளர்கதிர்ச்செந் நெல்=அருகில் வளர்கின்ற செந்நெற்கதிர்கள்; வயப்புரவிமுகங்காட்ட=வெற்றியினை யுடைய குதிரைகள் முகத்தின் வடிவத்தைக்காண்பிக்க; பெருஞ்சகடுதேர்காட்ட=பெ ரியபண்டிகள் தேரின் வடிவத்தைக் காண்பிக்க; வினைஞரார்ப்பொலிபிறங்க=பள்ளர்க ளுடைய ஆரவாரம் படைவீரர் ஒலிபோல்விளங்க; நெருங்கியசாதுரங்கபலநிகர்ப்பன வாம்=அதனால் நெருக்கமான நால்வகைச் சேனைகளுள்ள இடத்தை ஒத்திருக்கும்.(சு)

நறையாற்றுங் கமுகுநவ மணிக்கழுத்தி னுடன்கூந்தற்
பொறையாற்ரு மகளிரெனப் புறம்பலைதண் டலைவேலித்
துறையாற்ற மணிவண்ணச் சுரும்பிரைக்கும் பெரும்பெண்ணை
நிறையாற்று நீர்க்கொழுந்து படர்ந்தேறு நிலைமையதால்.

(இ-ள்.) நறையாற்றுங்கமுகு=வாசனை கமழும் கமுகமரங்கள்; நவமணிக்க ழுத்தினுடன்=முத்துமுதலிய ஒன்பது மணிகளையணிந்த கழுத்துடன்; கூந்தற்பொறை யாற்ருமகளிரென=கேசபாரத்தைப் பொறுக்காத மகளிர்களைப்போல; புறம்பலைதண் டலைவேலித்துறை=புறம்பேயலைகின்ற சோலைகளாகிய வேலியையுடைய கரையில்; ஆற்றமணிவண்ணச்சுரும்பிரைக்கும்=மிக நீலமணிபோலும் நிறத்தையுடைய வண்டு கள் ஆரவாரிக்கும்; பெரும்பெண்ணைநிறையாற்றுநீர்க்கொழுந்து=பெரிய பெண்ணையா ற்றினது நிறைந்த நீர்க்கொழுந்தானது; படர்ந்தேறுநிலைமையது=பரவிப்படர்கின்ற நிலைமையையுடையது (அம்மருதநிலம்.)—எ-று. ஆல்-அசை.

கமுகு பழங்களையும், காய்களையும், பாளைகளையும், பச்சோலைகளையும் உடைமை யால், நவமணிக்கழுத்தினுடன் கூந்தற்பொறையாற்ரு மகளிரென உவமைகூறினர்.(எ)

மருமேவு மலர்மேய மாகடலி னுட்படியும்
உருமேக மெனமண்டி யுகைத்தகருங் கன்றுபோல்
வருமேனிச் செங்கண்வரான் மடிமுட்டப் பால்சொரியுங்
கருமேதி தனைக்கொண்டு கரைபுரள்வ திரைவாவி.

(இ-ள்.) மருமேவுமலர்மேய=வாசனை கமழ்கின்ற பூக்களை மேயும்படி; மாகடலி னுட்படியும்=பெரிய கடலில் நீருண்ணும்பொருட்டுப்படியும்; உருமேகமெனமண்டி= கருநிறமுடைய மேகம்போல வாவியில் விழுந்து; உகைத்தகருங்கன்றுபோல்=முட்டுகி ன்ற கரிய கன்றைப்போல; வருமேனிச்செங்கண்வரான்மடிமுட்ட=வருகின்ற மேனி யையும் சிவந்த கண்களையும் உடைய வரால்மீன்கள் மடிகளைமுட்ட;பால்சொரியுங்கருமே

திதனைக்கொண்டு=பாலைச்சொரிகின்ற கரிய எருமைகளை அடித்துக்கொண்டு; கரைபு ரள்வதிரைவாவி=கரைபுரளுகின்றன திரைகளையுடைய வாவிகள்.—எ-று. (அ)

மொய்யளிசூழ் நிரைநீல முழுவலயங் களினலையச்
செய்யதளிர் நறுவிரலிற் செழுமுகையி னகஞ்சிறப்ப
மெய்யொளியி னிழற்காணு மாடியென வெண்மதியை
வையமகள் கையணைத்தாற் போலுயர்வ மலர்ச்சோலை.

(இ-ள்.) மொய்யளிசூழ்நிரை=திரண்டு சூழ்கின்ற வண்டுகளின் கூட்டங்கள்; நீலமுழுவலயங்களினலைய=முழுதும் நீலமணியாற்செய்த வளையல்கள்போல அசையவும்; செய்யதளிர்நறுவிரலில்=சிவந்த தளிராகிய நறிய விரல்களினிடத்து; செழுமுகையினகஞ்சிறப்ப=நகத்தைப்போல் செழித்த பூவரும்புகள் சிறப்படையவும்; மெய்யொளியினிழற்காணுமாடியென=தன் திருமேனி அழகின் பிரதிபிம்பத்தைப் பார்த்தற்குரிய கண்ணாடியென்று; வெண்மதியைவையமகள்கையணைத்தாற்போல்=பூதேவியானவள் வெள்ளிய சந்திரனைக் கைகளால் அணைத்தாற்போல; உயர்வமலர்ச்சோலை=உயர்ந்திருக்கின்றன மலர்களையுடைய சோலைகள்.—எ-று. வலயம்=வளையல்.

மொய்யளிசூழ்நிரை நீலமுழுவலயங்களினலைய என்பதற்கு வண்டுகள் திரண்டு சூழ்கின்ற. நீலமலர்கள் முழுதும் நீலமணியாற்செய்த வாகுவலயங்கள்போல அசைய என்றுரைப்பினுமமையும். (கூ)

எயிற்குலவும் வளம்பதிக ளெங்குமணந் தங்கும்வயற்
பயிர்க்கண்விய லகலிடங்கள் பரந்துயர் நெற்கூடுகளும்
வெயிற்கதிர்மென் குழைமகளிர் விரவிய மாடமுமேவி
மயிற்குலமு முகிற்குலமு மாறுட மருங்காடும்.

(இ-ள்.) எயிற்குலவும்வளம்பதிகளெங்கும்=மதில்சூழ்ந்த வளந்தங்கிய அந்நாடெங்கும்; மணந்தங்கும்வயற்பயிர்க்கண்வியலகலிடங்கள்பரந்துயர்நெற்கூடுகளும்=மணம் வீசும் வயற்பயிரமைந்த இடங்களிலுள்ள மிக அகன்ற களங்களில் விரிந்து உயர்ந்திருக்கும் நெற்கூடுகளிலும்; வெயிற்கதிர்மென்குழைமகளிர்விரவியமாடமும்=காந்தியுள்ள ஒளியைவீசுகின்ற மிருதுவான குண்டலங்களையணிந்த மகளிர்கள் நெருங்கியிருக்கும் மாடங்களிலும்; மயிற்குலமுமுகிற்குலமுமேவி=மயிற்கூட்டங்களும் முகிற்கூட்டங்களும் தங்கி; மாறுடமருங்காடும்=கண்டார்க்கு ஒன்றோடொன்று வேற்றுமையின்றி இருக்க அவ்விடங்களில் ஆடாநிற்கும்.—எ-று. நெற்கூடு=நெற்கட்டியசேர். (க0)

மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
யறந்தரு நாவுக்கரசு மாலால சுந்தரரும்
பிறந்தருள வுளதானு னம்மளவோ பேருலகிற்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு.

(இ-ள்.) மறந்தருதீநெறிமாற=பாவத்தை விளைவிக்கும் தீயசமயநெறிகள் கெடும்படிக்கு; மணிகண்டர்வாய்மைநெறி=நீலகண்டமுடைய சிவபிரானருளிய மெய்ந்நெறியாகிய சைவமார்க்கத்திற்கூறும்; அறந்தருநாவுக்கரசும்=அறங்களை நிலைநிறுத்திய ஆண்டவரசும்; ஆலால்சுந்தரரும்=ஆளுடைய நம்பியும்; பிறந்தருளவுளதானுல்=அவதரிக்கும்படி இருக்குமேல்; பேருலகிற்சிறந்த=பெரியநிலவுலகிற்சிறந்த; திருமுனைப்பாடித்திறம்பாடுஞ்சீர்ப்பாடு=அத்திருமுனைப்பாடிநாட்டின்வளத்தைப் பாடுகின்றபெருமை; நம்மளவோ=நம்மளவன்று.—எ-று. (கக)

இவ்வகைய திருநாட்டி லெனைப்பல வூர்களுமென்று
மெய்வளங்க ளோங்கவரு மேன்மையன வாங்கவற்றுட்
சைவநெறி யேழுலகும் பாலிக்குந் தன்மையினாற்
றெய்வநெறிச் சிவம்பெருக்குந் திருவாரூர் திருவாரூர்.

(இ-ள்.) இவ்வகையதிருநாட்டில்=இச்சிறப்புடைய அத்திருமுனைப்பாடி நாட்டில்; எனைப்பலவூர்களுமென்றும்=எல்லாவூர்களும் எந்நாளும்; மெய்வளங்களோங்கவருமேன்மையன=அழிதயாவளங்கள் நாள்தோறும் வளரும்படிக் கிருக்கும் மேன்மையுடையன; ஆங்கவற்றுட்சைவநெறியேழுலகும்பாலிக்குந்தன்மையினால்=அவ்வூர்களுள் சைவமார்க்கத்தை ஏழுலகின்கண்ணும் வளர்விக்கும் மேன்மையுடைமையினால்; திருவாரூர்திருவாரூர்=திருமகள் வாழும் ஊராகிய திருவாரூர்; தெய்வநெறிச்சிவம்பெருக்கும்=தெய்வீகமாகிய நன்மார்க்கத்தை ஓங்கச்செய்யும்.—எ-று. (கஉ)

ஆங்குவன முலைகள்சுமந் தணங்குவன மகளிரிடை
ஏங்குவன நூபுரங்க ளிரங்குவன மணிக்காஞ்சி
ஓங்குவன மாடநிரை யொழுகுவன வழுவிலறம்
நீங்குவன தீங்குநெறி நெருங்குவன பெருங்குடிகள்.

(இ-ள்.) ஆங்குவனமுலைகள்சுமந்து=அத்திருவாரூரில் அழகிய முலைகளைத் தாங்குதலினால்; அணங்குவனமகளிரிடை=வருந்துகின்றன மாதர் இடைகள்; ஏங்குவன நூபுரங்கள்=அவர் காலிற்றரித்த சிலம்புகள் அரற்றுகின்றன;இரங்குவனமணிக்காஞ்சி=மணிகளழுத்திய அவர் மேகலைகள் சிற்றொலி செய்கின்றன; ஓங்குவனமாடநிரை=மாடவரிசைகள் உயர்ந்திருக்கின்றன; ஒழுகுவனவழுவிலறம்=வழுவில்லாத அறங்கள் பெருகுகின்றன; நீங்குவனதீங்குநெறி=தீநெறிகள் விலகுகின்றன; நெருங்குவனபெருங்குடிகள்=பெரியகுடிகள் நாள்தோறும் நெருங்குகின்றன.—எ-று. (கங)

மலர்நீலம் வயல்காட்டு மைஞ்ஞீல மதிகாட்டும்
அலர்நீடு மறுகாட்டு மணியூசல் பலகாட்டும்
புலர்நீல விருள்காட்டும் பொழுதுழவ ரொலிகாட்டுங்
கலநீடு மனைகாட்டுங் கரைகாட்டாப் பெருவளங்கள்.

(இ-ள்.) மலர்நீலம்வயல்காட்டும்=நீலமலர்களை வயல்கள் தம்மிடத்துக் காட்டுகின்றன; மைஞ்ஞீலமதிகாட்டும்=கறுத்த மறுவைப் பூரணசந்திரன் காட்டுகின்றது; அலர்நீடுமறுகு=விசாலமாகிய நீண்ட வீதிகள்; ஆட்டும்அணியூசல்பலகாட்டும்=ஆட்டப்பட்ட அழகிய ஊசல் பலவற்றைக் காட்டாநிற்கும்; புலர்நீலவிருள்காட்டும்பொழுது=விடிகின்ற கன்னியிருளிருக்கும் வைகறைப் பொழுதில்; உழவரொலிகாட்டும்=உழவர்களது ஒலி ஒலிக்கும்; கரைகாட்டாப்பெருவளங்கள்=அளவுபடாத பெரிய வளங்களை; கலநீடுமனைகாட்டும்=பலபண்டங்கள் நிறைந்த வீடுகள் காட்டும்.—எ-று. (கச)

தலத்தின்கண் விளங்கியவத் தனிப்பதியி லனைத்துவித
நலத்தின்கண் வழுவாத நடைமரபிற் குடிநாப்பண்
விலக்கின்மனை யொழுக்கத்தின் மேதக்க நிலைவேளாண்
குலத்தின்கண் வரும்பெருமைக் குறுக்கையர்தங் குடிவிளங்கும்.

(இ-ள்.) தலத்தின்கண்விளங்கியவத்தனிப்பதியில்=நிலவுலகத்தில்விளக்கமடைந்திருக்கின்ற அந்த ஒப்பற்றநகரத்தில்; அனைத்துவிதநலத்தின்கண்வழுவாத=எல்லாவித நன்மைகளினும் தவறாத; நடைமரபிற்குடிநாப்பண்=ஒழுக்கத்தையுடைய மரபினர்க

ளது குடிகளினிடையே; விலக்கின்மனையொழுக்கத்தின்மேதக்கநிலை—தவறாத இல்லொழுக்கத்தில் மேம்பட்ட நிலைமையுள்ள; வேளாண்குலத்தின்கண்வரும்பெருமை—வேளாளர் மரபில் தொன்றுதொட்டுவரும்பெருமையமைந்த; குறுக்கையர்தங்குடிவிளங்கும்—குறுக்கையர் குடிப்பிறப்பானது விளக்கமடைந்திருக்கும்.—எ-று. (கரு)

அக்குடியின் மேற்றோன்ற லாயபெருந் தன்மையினார்
மிக்கமனை யறம்புரிந்து விருந்தளிக்கு மேன்மையினார்
ஒக்கல்வளர் பெருஞ்சிறப்பி னுளரானா ருளரானார்
திக்குநில வும்பெருமை திகழவரும் புகழனார்.

(இ-ள்.) அக்குடியின்மேற்றோன்றலாயபெருந்தன்மையினார்—அக்குறுக்கையர் குடியில் மேம்பட்ட முதல்வராய பெருந்தன்மையை யுடையவரும்; மிக்கமனையறம் புரிந்து—மேலாய இல்லறத்தை நடத்தி; விருந்தளிக்குமேன்மையினார்—விருந்தினர்களைப்பாதுகாக்கும் மேன்மையையுடையவரும் ஆகிய; திக்குநிலவும்பெருமைதிகழவரும் புகழனார்—திக்குகளெல்லாம் விளங்கியிருக்கும் பெருமை தோன்ற அவதரித்த புகழனாரென்பவர்; ஒக்கல்வளர்பெருஞ்சிறப்பினுளரானாருளரானார்—சுற்றத்தோடுவளர்ந்தபெருஞ்சிறப்பையுடையவராயிருந்தார்.—எ-று. (கசு)

புகழனார் தமக்குரிமைப் பொருவில்குலக் குடியின்கண்
மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றி
னிகழுமலர்ச் செங்கமல நிரையிதழி னகவயினிற்
றிகழவருந் திருவனைய திலகவதி யார்பிறந்தார்.

(இ-ள்.) புகழனார்தமக்குரிமைப்பொருவில்குலக்குடியின்கண் = அவருக்குரிய ஒப்பற்ற குலத்தினையுடைய மரபின்கண்; மகிழவருமணம்புணர்ந்த = மகிழ்ச்சிக்கேதுவான விவாகஞ்செய்த; மாதினியார்மணிவயிற்றில்—மாதினியாரென்னும் பத்தினியினது திருவயிற்றில்; நிகழுமலர்ச்செங்கமலம்—விகசிக்கின்ற செந்தாமரைமலரினது; நிரையிதழினகவயினில்—வரிசையான இதழ்க்கோயிலினில்; திகழவருந்திருவனைய—விளங்கி யிருக்கும் திருமகளை யொத்த; திலகவதியார்பிறந்தார்—திலகவதியார் என்பவர் அவதரித்தார்.—எ-று. (கஎ)

திலகவதி யார்பிறந்து சிலமுறையாண் டகன்றதற்பின்
அலகில்கலைத் துறைதழைப்ப வருந்தவத்தோர் நெறிவாழ
உலகின்வரு மிருணீக்கி யொளிவிளங்கு கதிர்போல
மலருமரு ணீக்கியார் வந்தவதாரஞ் செய்தார்.

(இ-ள்.) திலகவதியார்பிறந்து—திலகவதியார் அவதரித்து; சிலமுறையாண்டகன்றதற்பின்—முறையாகச் சிலவருடங்கள் சென்றபின்பு; அலகில்கலைத்துறைதழைப்ப—எண்ணிறந்த வேதாகமங்களிற்கூறும் அறங்கள் ஓங்கவும்; அருந்தவத்தோர்நெறிவாழ—அரியதவத்தினரது ஒழுக்கம் வாழ்வடையவும்; உலகின்வருமிருணீக்கி—நிலவுலகின்கண் வருகின்ற இருளைநீக்கி; ஒளிவிளங்குகதிர்போல—பிரகாசிக்கின்ற சூரியனைப்போல;மலருமருணீக்கியார்வந்தவதாரஞ்செய்தார்—உதிக்கும் மருணீக்கியாரென்னும் திருப்பெயரையுடைய புத்திரர்வந்து அவதரித்தார்.—எ-று. (கஅ)

மாதினியார் திருவயிற்றின் மன்னியசீர்ப் புகழனார்
காதலனா ருதித்ததற்பின் கடன்முறைமை மங்கலங்கண்
மேதகுநல் வினைசிறப்ப விரும்பிய பாராட்டினுடன்
ஏதமில்பல் கிளைபோற்ற விளங்குழவிப் பதங்கடந்தார்.

(இ-ள்.) மாதினியார்திருவயிற்றில்—தமது மனைவியாகிய மாதினியாரது திருவயிற்றின்கண்; காதலனுருதித்ததற்பின்—மருணீக்கியாரென்னும் புதல்வர் அவதரித்தபின்பு;மன்னியசீர்ப்புகழனார்—நிலைபெற்ற சிறப்பையுடைய புகழனாரானவர்;கடன்முறைமைமங்கலங்கள்—விதிப்படி செய்யும் மங்கலங்களாகிய; மேதகுநல்வினைசிறப்ப—மேம்பட்ட நல்வினைகளைச் சிறக்கச்செய்ய; விரும்பியபாராட்டினுடன்—தம்மால் விரும்பத்தக்க கொண்டாட்டோடு; ஏதமில்பல்கிளைபோற்ற—குற்றமற்ற பலசுற்றத்தாரும் வரிசைசெய்ய; இளங்குழவிப்பதங்கடந்தார்—அப்புதல்வர் இளமையாகிய குழந்தைப் பருவங்கடந்தார்.—எ-று.

கடன்முறைமைமங்கலங்களாவன:—சாதகன்மம் நாமகரணம்முதலியன. (கசூ)

மருணீக்கி யார்சென்னி மயிர்நீக்கு மணவினையுந்
தெருணீர்ப்பன் மாந்தரெலா மகிழ்சிறப்பச் செய்ததற்பின்
பொருணீத்தங் கொளவீசிப் புலன்கொளுவ மனமுகிழ்த்த
சுருணீக்கி மலர்விக்குங் கலைபயிலத் தொடங்குவித்தார்.

(இ-ள்.) மருணீக்கியார்சென்னிமயிர்நீக்குமணவினையும்—மருணீக்கியாரது சிரசின்கணுள்ளமயிரை நீக்குகின்றசௌளகன்மமும்; தெருணீர்ப்பன்மாந்தரெலாம்—தெளிந்தகுணத்தோடுகூடிய பலசுற்றத்தாரெல்லாம்; மகிழ்சிறப்பச்செய்ததற்பின்—மகிழ்ச்சியடையும்படி செய்தபின்பு; பொருணீத்தங்கொளவீசி—பொருள்களை வெள்ளமாக எடுத்துத் தானஞ்செய்து; புலன்கொளுவ—செவிப்புலன்வழியாக உணர்வுண்டாகவும்; மனமுகிழ்த்த சுருணீக்கிமலர்விக்கும்—இதயத்தின்கண் அறியாமையாற் குவிந்த முகுளத்தைப்பிரித்து மலரச்செய்கின்ற; கலைபயிலத்தொடங்குவித்தார்—நூல்களைப்படிக்கும்படி வித்தியாரம்பஞ் செய்வித்தார்.—எ-று.

சௌளகன்மத்திற்கு முற்பட்ட உபநிஷ்கிரமணம், கர்னவேதனம் முதலிய சடங்குகளையுந் தழுவிநிற்றலில் உம்மை இறந்தது தழீஇயது. நான்காம்வருணத்தார்க்கு உபநயனமின்மையால் சௌளகன்மங் கூறி உபநயனங் கூறுதொழிந்தார். (உ0)

தந்தையார் களிமகிழ்ச்சி தலைசிறக்கு முறைமையினாற்
சிந்தைமலர்ந் தெழுமுணர்விற் செழுங்கலையின் றிறங்களெல்லா
முந்தைமுறைமை யிற்பயின்று முதிரவறி வெதிரும்வகை
மைந்தனார் மறுவொழித்த விளம்பிறைபோல் வளர்கின்றார்.

(இ-ள்.) தந்தையார்களிமகிழ்ச்சி—புகழனார்க்குப் பெருங்களிப்பானது; தலைசிறக்குமுறைமையினால்—மிகச்சிறக்குங் காரணத்தால்; சிந்தைமலர்ந்தெழுமுணர்வில்—தம் இதயத்தினின்றும் விகசித்துதிக்கும் அறிவினிடத்து; செழுங்கலையின்றிறங்களெல்லாம்—செப்பமானநூல்களின் வேறுபாடுகளையெல்லாம்; முந்தைமுறைமையிற்பயின்று—தொன்றுதொட்டு நூல்கற்கும் முறைப்படி பயிற்சிசெய்து; முதிரவறிவெதிரும்வகை—அறிவுமுதிர்ந்து வளரும்படி; மைந்தனார்மறுவொழித்தவிளம்பிறைபோல்வளர்கின்றார்—மருணீக்கியார் களங்கநீங்கிய இளம்பிறைபோல நாள்தோறும் வளர்கின்றாராயினார்.—எ-று. (உக)

அந்நாளிற் றிலகவதி யாருக்காண் டாறிரண்டின்
முன்னாக வொத்தகுல முதல்வேளாண் குடித்தலைவர்
மின்னார்செஞ் சடையண்ணல் மெய்யடிமை விருப்புடையார்
பொன்னாரு மணிமௌலிப் புரவலன்பா லருளுடையார்.

(இ-ள்.) அந்நாளிற்றிலகவதியாருக்கு=அந்தநாளில் திலகவதியார் என்னும் புத்திரிக்கு; ஆண்டாறிரண்டில்=பன்னிரண்டாம் வயதில்; முன்னாகவொத்தகுலமுதல்வேளாண்குடித்தலைவர்=தொன்றுதொட்டுத் தம்மரபிற்கொத்த வேளாண்குடியிற்பிறந்த முதன்மையான தலைவரும்; மின்னார்செஞ்சடையண்ணல்=மின்போல விளங்கும் சிவந்த சடையையுடைய சிவபிரானது; மெய்யடிமைவிருப்புடையார்=மெய்மையான அடிமைத்தொழிலில் விருப்பமுடையவரும்; பொன்னாருமணிமவுலி=பொன்னாற் செய்த மணிகளழுத்திய முடியையுடைய; புரவலன்பாலருளுடையார்=தன் அரசனிடத்து அன்புள்ளவரும்.—எ-று.

அன்பை அதன்மிகுதிபற்றி அருளென்றார். இதனை மணவினைமுடியாது தம்மரசர்க்காய்ப் பகைப்புலஞ்சென் றுயிர்துறந்தமையாற்காண்க. (உஉ)

ஆண்டகைமைத் தொழிலின்க ணடலரியே றெனவுள்ளார்
காண்டகைய பெருவனப்பிற் கலிப்பகையா ரெனும்பெயரார்
பூண்டகொடைப் புகழனார் பாற்பொருவின் மகட்கொள்ள
வேண்டியெழுங் காதலினான் மேலோரைச் செலவிட்டார்.

(இ-ள்.) ஆண்டகைமைத்தொழிலின்கண்=ஆண்தன்மையாகிய வீரத்தொழிலில்; அடலரியேறெனவுள்ளார்=எதிர்த்த பகைவருக்கு வலிய சிங்கேறுபோன்றவராகிய; காண்டகையபெருவனப்பில்=யாவரும் விரும்பத்தக்க பேரழகினையுடைய; கலிப்பகையாரெனும்பெயரார்=கலிப்பகையாரென்னும் பெயருடையவர்; பூண்டகொடைப்புகழனார்பால்=யாவருக்கும் வரையாது கொடுக்கும் வள்ளற்றன்மைபூண்ட புகழனாரிடத்து; பொருவின்மகட்கொள்ளவேண்டியெழுங்காதலினால்=ஒப்பற்றபுத்திரியைத்தான்விவாகஞ் செய்துகொள்ள விரும்பி உள்ளத்திலெழும் பெருவிருப்பால்; மேலோரைச்செலவிட்டார்=தஞ்சுற்றத்தாருள் முதியோரை மகட்கேட்கும்படி அனுப்பினார்.—எ-று.

இவ்விரண்டுங் குளகம். (உ௩)

அணங்கனைய திலகவதி யார்தம்மை யாங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும் வந்தபடி யறிவிப்பக்
குணம்பேசிக் குலம்பேசிக் கோதில்சீர்ப் புகழனார்
பணங்கொளர வகலல்குற் பைந்தொடியை மணநேர்ந்தார்.

(இ-ள்.) அணங்கனையதிலகவதியார்தம்மை=சீதேவிபோலும் அழகுள்ள திலகவதியாரை; ஆங்கவர்க்குமணம்பேசிவந்தவரும்=அந்தக் கலிப்பகையாருக்கு மணம் பேசும்பொருட்டுவந்த முதியவரும்; வந்தபடியறிவிப்ப=தாங்கள் வந்தகாரணத்தைப் புகழனார்க்குச்சொல்ல; குணம்பேசிக்குலம்பேசி=கலிப்பகையாரது குணத்தை விசாரித்துக் குலத்தை விசாரித்து; கோதில்சீர்ப்புகழனார்=குற்றமற்ற சிறப்பையுடைய புகழனாரானவர்; பணங்கொளரவகலல்குல்=பாம்பின்படம்போலும் அகன்ற அல்குலையுடைய; பைந்தொடியைமணநேர்ந்தார்=பசிய வளையலையணிந்த திலகவதியாரை மணஞ்செய்து கொடுப்பதற்கு உடன்பட்டார்.—எ-று. (உச)

கன்னிதிருத் தாதையார் மணமிசைவு கலிப்பகையார்
முன்னணைந்தா ரறிவிப்ப வதுவைவினை முடிப்பதன்முன்
மன்னவற்கு வடபுலத்தோர் மாறேற்க மற்றவர்மேல்
அன்னவர்க்கு விடைகொடுத்தா னவ்வினைமே லவரகன்றார்.

(இ-ள்.) கன்னிதிருத்தாதையார்மணமிசைவு=புகழனுர் தனது புத்திரியைமணஞ் செய்துகொடுக்க இசைந்ததை; கலிப்பகையார்முன்னணைந்தாரறிவிப்ப=மணம்பேச வந்தவர்கள் கலிப்பகையார்க்குத் தெரிவிக்க; வதுவைவினைமுடிப்பதன்முன்=அவர் விவாகவினையை முடித்துக் கொள்வதற்குமுன்; மன்னவற்குவடபுலத்தோர்=தன்னு டைய அரசன்மேல் வடதேசத்துள்ள மாற்ருர்; மாறேற்கமற்றவர்மேல்=படையெடு த்துவர அவ்வரசர்கள்மேல்; அன்னவர்க்குவிடைகொடுத்தான்=போர்செய்யும்படி அக் கலிப்பகையாருக்கு அவ்வரசன் அனுமதிசெய்தான்; அவ்வினைமேலவரகன்ருர்=அப் போர்த்தொழிலை மேற்கொண்டு அக்கலிப்பகையார் போனுர்.—எ-று. (உரு)

வேந்தற்குற் றுழிவினைமேல் வெஞ்சமத்தில் விடைகொண்டு
போந்தவரும் பொருபடையு முடன்கொண்டு சிலநாளிற்
காய்ந்தசினப் பகைப்புலத்தைக் கலந்துகடுஞ் சமர்க்கடலை
நீந்துவார் நெடுநாள்க ணிறைவெம்போர்த் துறைவிளைத்தார்.

(இ-ள்.) வேந்தற்குற்றுழி=தன் அரசனுக்கு மாற்றரசரால் இடுக்கண் நேரிட் டவிடத்து; வெஞ்சமத்துவினைமேல்விடைகொண்டு=அவ்விடையூறை நீக்கும் போர் த்தொழிலாகிய வினையின்மேல் அனுமதி பெற்றுக்கொண்டு; போந்தவரும்பொரு படையுமுடன்கொண்டு=சென்ற கலிப்பகையாரும் போர்செய்யும் சேனைகளையும் தம் முடன் அழைத்துக்கொண்டு; சிலநாளிற்காய்ந்தசினப்பகைப்புலத்தைக்கலந்து=சிலதி னத்தில் மிக்க கோபமுள்ளபகைவர் போர்செய்யுமிடத்தை அடைந்து; கடுஞ்சமர்க்கட லைநீந்துவார்=கடிய போர்க்கடலைக்கடக்குங் கருத்துடையவராய்; நெடுநாள்கணிறை வெம்போர்த்துறைவிளைத்தார்=அனேகநாள் மிக்ககொடிய போர்த்தொழிலைச் செய்து வந்தார்.—எ-று.

சிலநாளிற் பகைப்புலத்தைக்கலந்து என இயையும். இல்-சாரியை. (உசு)

ஆயநா ளிடையிப்பா லணங்கனையா டனைப்பயந்த
தூயகுலப் புகழனுர் தொன்றுதொடு நிலையாமை
மேயவினைப் பயத்தாலே யிவ்வுலகை விட்டகலத்
தீயவரும் பிணியுழந்து விண்ணுலகிற் சென்றடைந்தார்.

(இ-ள்.) ஆயநாளிடையிப்பால்=கலிப்பகையார் பகைவரோடு போர்செய்து கொண்டிருக்கும்நாளில் திருவாமூரில்; அணங்கனையாடனைப்பயந்த=சிதேவிபோலும் திலகவதியாரைப்பெற்ற; தூயகுலப்புகழனுர்=நற்குலத்திற்பிறந்த புகழனுர்; தொன்று தொடுநிலையாமைமேயவினைப்பயத்தால்=பழமையாய்வரும் நிலையாமையை விளைத்தற் கேதுவாய தீவினைப்பயத்தால்; இவ்வுலகைவிட்டகல=இந்நிலவுலகத்தைவிட்டு நீங் கிப்போகும்படியாக; தீயவரும்பிணியுழந்து=மிக்க கொடும்பிணியால் வருந்தி; விண் ணுலகிற்சென்றடைந்தார்=விண்ணவருலகம் அடைந்தார்.—எ-று.

ஆயுள்செல்வம் நிலையாமைக்குத் தீவினை யேதுவாதலின் நிலையாமை மேயவினை என்றும், விண்ணுலகு சென்றடைதற்குரிய புண்ணிய மிகுதியுடையரோனும் தீவினையும் அனுபவித்தன்றித் தொலையாமையின் தீயவரும்பிணியுழந்து என்றுங்கூறினர். ஏ-அசை.

மற்றவர்தா முயிர்நீப்ப மனைவியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையுந் துகளாக வேநீத்துப்
பெற்றிமையா லுடனென்றும் பிரியாத வுலகெய்துங்
கற்புநெறி வழுவாமற் கணவனுருடன் சென்ருர்.

(இ-ள்.) மற்றவருயிர்நீப்ப—அவ்வாறான புகழனார் உயிரைவிட; மனைவியார்மாதினியார்—அவர் மனைவியாராகிய மாதினியாரும்; சுற்றமுடன்மக்களையும்—தம் சுற்றத்தாரையும் மக்களிருவரையும்; துகளாகநீத்து—ஒருபொருளாக மதியாமல் துறந்து; பெற்றிமையாலுடனென்றும்—மேம்பாட்டால் கணவனுடன் என்றும்; பிரியாதவுலகெய்தும்—தான் நீங்காதிருக்கும் உலகத்தை அடையும்; கற்புநெறிவழுவாமல்—கற்பு நெறிதவறாமல்; கணவனாருடன்சென்றார்—கணவனாருடன் சிதையேறி உயிர்நீத்தனர்.—எ-று.

சிதையேறி உயிர்நீத்தலாவது;—ஈமவிறகிற் றீக்கொளுவி நெய்க்குடம்பெய்து அதன்மேல் வீழ்தல். துகள்—மதியாப்பொருள். தாம்-ஏ-அசை. (உஅ)

தாதையா ரும்பயந்த தாயாருமி றந்ததற்பின்
மாதரார் திலகவதி யாருமவர் பின்வந்த
காதலனார் மருணீக்கி யாருமனக் கவலையினாற்
பேதுறுநற் சுற்றமொடும் பெருந்துயரி லழுந்தினார்.

(இ-ள்.) தாதையாரும்பயந்ததாயாருமிறந்ததற்பின்—தம்மைப்பெற்ற புகழனார் மாதினியார் என்னும் இருவரும் இறந்தபிறகு; மாதரார்திலகவதியாரும்—அவர்புத்திரியாகிய திலகவதியாரும்; அவர்பின்வந்தகாதலனார்மருணீக்கியாரும்—அவர்பின் உதித்த புதல்வராகிய மருணீக்கியாரும்; மனக்கவலையினால்—மனதிலுண்டாகிய துயரத்தினால்; பேதுறுநற்சுற்றமொடும்—வருந்துகின்ற நல்லசுற்றத்தாரோடும்; பெருந்துயரிலழுந்தினார்—பெரியதுயர்க்கடலில் முழுகினார்.—எ-று. (உகூ)

ஒருவாறு பெருங்கிளைஞர் மனந்தேற்றத் துயரொழிந்து
பெருவான மடைந்தவர்க்குச் செய்கடன்கள் பெருக்கினார்
மருவார்மேன் மன்னவற்கா மலையப்போங் கலிப்பகையார்
பொருவாரும் போர்க்களத்தி லுயிர்கொடுத்துப் புகழ்கொண்டார்.

(இ-ள்.) ஒருவாறுபெருங்கிளைஞர்மனந்தேற்றத்துயரொழிந்து—பெரிய சுற்றத்தார்கள் மனத்தைத்தேற்ற அவ்விருவரும் ஒருவாறு துயரம்நீங்கி; பெருவானமடைந்தவர்க்கு—பெரியவிண்ணுலகத்தை அடைந்த அவ்விருவருக்கும்; செய்கடன்கள்பெருக்கினார்—செய்யவேண்டிய நீர்க்கடன் முதலியவற்றைச் செய்தார்கள்; மருவார்மேன்மன்னவற்கா—பகைவரிடத்துத் தம் அரசனுக்காக; மலையப்போங்கலிப்பகையார்பொருவாரும்—போர்செய்யும்படி அடுத்த கலிப்பகையாராகிய அவரும்; போர்க்களத்திலுயிர்கொடுத்துப்புகழ்கொண்டார்—அமர்க்களத்தில் உயிரைக்கொடுத்துப் புகழுடம்பைப் பெற்றார்.—எ-று. நீர்க்கடன்:—தர்ப்பணாதிகள். (௩0)

வெம்முனைமேற் கலிப்பகையார் வேல்வேந்த னேவப்போய்
அம்முனையிற் பகைமுருக்கி யமருலக மாள்வதற்குத்
தம்முடைய கடன்கழித்த பெருவார்த்தை தலஞ்சாற்றச்
செம்மலர்மேற் றிருவனைய திலகவதி யார்கேட்டார்.

(இ-ள்.) கலிப்பகையார்வேல்வேந்தனேவ—கலிப்பகையார் வேலேந்திய தம் மரசன் அனுப்ப; வெம்முனைமேற்போய்—கொடிய போர்முகத்துச்சென்று; அம்முனையிற்பகைமுருக்கி—அப்போர்முனையிலுள்ள பகைவரைக்கொன்று; அமருலகமாள்வதற்கு—விண்ணுலகத்தை அரசாளும்பொருட்டு; தம்முடையகடன்கழித்த—புறங்கொடாது போர்செய்யும் தம்முறைமையைக்கழித்த; பெருவார்த்தைதலஞ்சாற்ற—பெரிய

வார்த்தையை உலகத்திலுள்ளார்கூற; செம்மலர்மேற்றிருவனைய—செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் சீதேவியையொத்த; திலகவதியார்கேட்டார்—திலகவதியார் கேள்விப் பட்டார்.—எ-று.

அப்புகழ் அழியாது நிலவுதலிற் பெருவார்த்தை என்றார். (நூக)

எந்தையுமெம் மனையுமவர்க் கெனைக்கொடுக்க விசைந்தார்கள்
அந்தமுறை யாலவர்க்கே யுரியதுதா னாதலினால்
இந்தவுயி ரவருயிரோ டிசைவிப்ப னெனத்துணிய
வந்தவர்தம் மடியிணைமேன் மருணீக்கி யார்விழுந்தார்.

(இ-ள்.) எந்தையுமெம்மனையும்—என்தந்தையாரும் தாயாரும்; அவர்க்கெனைக் கொடுக்கவிசைந்தார்கள்—அவருக்கு என்னை விவாகஞ்செய்துகொடுக்க உடன்பட்டார் கள்; அந்தமுறையாலவர்க்கே—அத்தாய்தந்தையர்கள் நியமித்த முறைமையினால் இந்த உயிர் அவருக்கே; உரியதாதலினால்—உரியதாதலினால்; இந்தவுயிரவருயிரோடு—இந்த உயிரைவிண்ணுலகிற்சென்ற அவருயிருடன்; இசைவிப்பனெனத்துணிய—கூட்டுவிப்ப னென்று நிச்சயிக்க;வந்தவர்தம்மடியிணைமேன்மருணீக்கியார்விழுந்தார்—மருணீக்கியார் வந்துதமக்கையாராகிய திலகவதியார் திருவடியில்விழுந்து வணங்கினார்.—எ-று.

தான்-அசை. (நூஉ)

அந்நிலையின் மிகப்புலம்பி யன்னையுமத் தனுமகன்ற
பின்னையுநா னுமைவணங்கப் பெறுதலினா லுயிர்தரித்தேன்
என்னையினித் தனிக்கைவிட் டேகுவீ ரெனில்யானு
முன்னமுயிர் நீப்பனென மொழிந்திடரி னழுந்தினார்.

(இ-ள்.) அந்நிலையின்மிகப்புலம்பி—மருணீக்கியார் திலகவதியார் திருவடியில் வீழ்ந்துகிடக்கும் நிலைமையில் மிகவும் அழுது; அன்னையுமத்தனுமகன்றபின்னையும்—தாய்தந்தையர் இறந்த பின்பும்; நானுமைவணங்கப்பெறுதலினாலுயிர்தரித்தேன்—அடியேன் அவர்களைப்போல் உம்மைப்பாவித்து வணங்கப்பெற்றதனால் உயிர்தரித்திருந் தேன்; என்னையினித்தனிக்கைவிட்டு—அவ்வாறு கருதிய என்னை இனிமேல் தனியே நீக்கி; ஏகுவீரெனில்—செல்வீரேயானால்; யானுமுன்னமுயிர்நீப்பனெனமொழிந்து—நானும் உமக்குமுன் உயிரிழப்பேனென்றுகூறி; இடரினழுந்தினார்—இடர்க்கடலுள்முழு கினார்.—எ-று. (நூா)

தம்பியா ருளராக வேண்டுமென வைத்ததயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க வுயிர்தாங்கி
அம்பொன்மணி நூலுங்கா தனைத்துயிர்க்கு மருடாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்.

(இ-ள்.) திலகவதியார்தம்பியாருளராகவேண்டுமெனவைத்ததயா—அதுகேட்ட திலகவதியார் தம்முடைய தம்பியார் உயிரோடிருக்கவேண்டுமென்று அவர்மேல் வைத் திருக்கும் பேரன்பானது; உம்பருலகணையவுறுநிலைவிலக்க—உயிரை நீக்கி விண்ணுல கத்தை யடையவேண்டுமென்று கருதும் நிலைமையை விலக்க அதனால்; உயிர்தாங்கியம் பொன்மணிநூலுங்காது—தம்முயிரைத் தாங்கிக்கொண்டு மேல் அழகிய பொன்மணி முதலியவற்றோடு சேர்ந்த ஆபரணங்களைத் தரியாமல்; அனைத்துயிர்க்குமருடாங்கி—எல்லா உயிரிடத்தும் அருளுடையராய்; இம்பர்மனைத்தவம்புரிந்திருந்தார்—இந்நிலவுல கத்துமனையிலிருந்து செய்யும் தவத்தைச் செய்திருந்தார்.—எ-று.

வைதவ்விய மடைந்தார்க்குப் பொன்மணிசேர்ந்த அணியணிதல் பழுதாதலின் அம்பொன்மணி நூறுங்காதென்றார். (ருச)

மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
ஆசிலறச் சாலைகளுந் தண்ணீர்ப்பந்தரு மமைப்பார்.

(இ-ள்.) மாசின்மனத்துயரொழிய=திலகவதியார் உயிரோடிருக்குங்காரணத்தால் குற்றமில்லாத மனத்திற் றுயர் நீங்க; மருணீக்கியார்நிரம்பி=மருணீக்கியார் நிரம்பிய வயதடைந்து; தேசநெறிநிலையாமைகண்டு=உலகியலின் நிலையின்மையை யுணர்ந்து; அறங்கள்செய்வாராய்=அதனால் தருமங்களைச்செய்ய விரும்பினவராய்; காசினிமேற்புகழ்விளங்கநிதியளித்து=நிலவுலகின்கண் புகழுண்டாகத் திரவியங்களைச் செலவுசெய்து; கருணையினலாசிலறச்சாலைகளும்=கிருபையினால் குற்றமற்ற தருமசாலைகளையும்; தண்ணீர்ப்பந்தருமமைப்பார்=தண்ணீர்ப்பந்தல்களையும் அமைப்பாராயினார்.—எ-று.

அறச்சாலைகள்:—அன்னமிடும்சாலை கல்விச்சாலை வைத்தியசாலை முதலியன(ருரு)

காவளர்த்துங் குளந்தொட்டுங் கடப்பாடு வழுவாமன்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்து
நாவலர்க்கு வளம்பெருக நல்கியுநா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத வீகைவினைத் துறைநின்றார்.

(இ-ள்.) காவளர்த்துங்குளந்தொட்டும்=வழிகளில் இளைப்பாறுதற்குரிய சோலைகளை வளர்த்தும் அங்கு விடாய் தணித்தற்குரிய குளங்களை வெட்டியும்; கடப்பாடுவழுவாமல் = ஈகைநிலைமையில் குறைவுபடாமல்; மேவினர்க்குவேண்டுவனமகிழ்ந்தளித்தும்=தன்னையடைந்தவர்க்கு அவர்விரும்பியபொருள்களை மகிழ்ச்சியோடு கொடுத்தும்; விருந்தளித்தும்=விருந்தினரைப்பாதுகாத்தும்; நாவலர்க்குவளம்பெருகநல்கியும்=கவிவாணர்க்கு வளமுண்டாகப் பொருள்களைக் கொடுத்தும்; நானிலத்துள்ளோர்யாவருக்கும்=இவ்வாறு அகன்ற நிலவுலகத்தில் உள்ளயாவருக்கும்; தவிராதவீகைவினைத்துறைநின்றார்=இல்லையென்று கரவாது கொடுக்கும்அறநெறியில்நின்றார்.—எ-று.

கடப்பாடுவழுவாமல் என்பதற்குத்தாம் நிற்கும்நன்னெறியில்வழுவாமல் என்றுரைப்பினுமமையும். காவளர்த்தல்குளந்தொட்டல்முதலியன ஈண்டுபொதுத்தன்மம். ருசு

நில்லாத வுலகியல்பு கண்டுநிலை யாவாழ்க்கை
அல்லேனென் றறத்துறந்து சமயங்க ளானவற்றி
னல்லாறு தெரிந்துணர நம்பரரு ளாமையினாற்
கொல்லாமை மறைந்துறையு மமண்சமயங் குறுகினார்.

(இ-ள்.) நில்லாதவுலகியல்புகண்டு=நிலையுதலில்லாத இவ்வுலகவாழ்க்கையைக் கண்டு; நிலையாவாழ்க்கையல்லேனென்று=நிலையில்லாத இவ்வுலகவாழ்க்கைக்கு யான் உரியனல்லேனென்று; அறத்துறந்து=முற்றத்துறந்துமேல்; சமயங்களானவற்றினல்லாறு தெரிந்துணர=அகம்புறம் ஆகியசமயங்களுள் இதுநன்னெறி இதுதீநெறி என்று தெரிந்துணரும்படி; நம்பரருளாமையினால்=சிவபிரான் அருள்செய்யாமையினால்; கொல்லாமைமறைந்துறையும்=கொல்லாமை என்னும் அறமொன்றில்மறைந்திருக்கின்ற; அமண்சமயங்குறுகினார்=சமணசமயத்தையடைந்தார்.—எ-று.

3. மருணீக்கியார் தாய்தந்தையரிறந்தபின் உலகவாழ்க்கை அநித்தியமென்றுணர்ந்து அதனையிகழ்ந்து மனத்தெளிவுற்று முத்திநெறியடையக் கருத்துடன்
டறிந் சமயசாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்யும்போது சைனசமயத்துக்கொள்கைகளை மேன்மையானதாகச் சமண்பள்ளிக்குச் சென்று அதிலுள்ள நூல்களை
ப்பயின்று தருமசேனரெனப் பெயர்பூண்டு அச்சமயசாஸ்திரமுடைய பிடகமென்பதைத் தமது மாணாக்கருக்குப் போதித்து அச்சமயத்தின் அதிக
மேம்பாட்டையடைந்தனர்.

அமண்சமயம் பிறப்பு வீடுகளின் நிலைமையை உள்ளவாறுணர்த்தாது கொல்லாமை ஒன்றையே கூறிநிற்றலில்கொல்லாமைமறைந்துறையும் என்றார். (௩௭)

பாடலிபுத் திரமென்னும் பதியணைந்து சமண்பள்ளி
மாடணைந்தார் வல்லமணர் மருங்கணைந்து மற்றவர்க்கு
வீடறியு நெறியிதுவே யெனமெய்போற் றங்களுடன்
கூடவரு முணர்வுகொளக் குறிபலவுங் கொளுவினார்.

(இ-ள்.) பாடலிபுத்திரமென்னும் பதியணைந்து—அச்சமண்சார்படைந்தமருணீக்கியார் பாடலிபுத்திரமென்னும் நகரத்திற்சென்று; சமண்பள்ளிமாடணைந்தார்—அங்குச்சமணர்கள்வாழும் பாழியிடத்தடைந்தார்; வல்லமணர்மருங்கணைந்து—வலிய அமணர்கள் அவர் அருகில்வந்து; அவர்க்குவீடறியுநெறியிதுவேயென—அவர்க்குவீட்டையறியும் மெய்ந்நெறி இம்மார்க்கமேயென்று; மெய்போற்றங்களுடன் கூடவருமுணர்வுகொள—மெய்யைப்போலத்தங்களோடு அவர்சேரும்படி வருகின்ற உணர்வுமனதில்நிலையாக; குறிபலவுங்கொளுவினார்—குறித்தறியும் பலநூல்களையும் போதித்தார்கள்.—எ-று.

மெய்போற்கொளுவினாரென இயையும். குறிபலவுங்கொளுவினார் என்பதற்கு ஆருகதநூலிற்கூறியதியானபாவனை முதலியவற்றை உபதேசித்தாரென்றுரைப்பினும் அமையும். (௩௮)

அங்கவரு மமண்சமயத் தருங்கலைநூ லானவெலாம்
பொங்குமுணர் வுறப்பயின்றே யந்நெறியிற் புலன்சிறப்பத்
துங்கமுழு வுடற்சமணர் சூழ்ந்துமகிழ் வாரவர்க்குத்
தங்களின்மே லாந்தரும சேனரெனும் பெயர்கொடுத்தார்.

(இ-ள்.) அங்கவருமமண்சமயத்து—அம்மருணீக்கியாரும் சமணசமயத்திலுள்ள; அருங்கலைநூலானவெலாம்—அரிய பெருநூல்களையெல்லாம்; பொங்குமுணர்வுறப்பயின்று—மிக்க அறிவினிடத்துத் தங்கும்படி ஓதி; அந்நெறியிற்புலன்சிறப்ப—அந்நூல்வழியில் உணர்வோங்க அதனால்; துங்கமுழுவுடற்சமணர்—நீண்டமறைக்காத உடம்பையுடைய சமணர்கள்; சூழ்ந்துமகிழ்வாரவர்க்கு—இவரைச்சூழ்ந்து மகிழ்ச்சியடைவாராய் அவர்க்கு; தங்களின்மேலாம்—தங்களினின்றும் மேலான; தருமசேனரெனும்பெயர்கொடுத்தார்—தருமசேனரென்னும் பட்டப்பெயரைக் கொடுத்தார்கள்.—எ-று. ஏ-அசை. ()

அத்துறையின் மீக்கூரு மமைதியினா லகலிடத்திற்
சித்தநிலை யறியாத தேரரையும் வாதின்கண்
உய்த்தவுணர் வினில்வென்றே யுலகின்கண் ணொளியுடைய
வித்தகரா யமண்சமயத் தலைமையினின் மேம்பட்டார்.

(இ-ள்.) அத்துறையின்மீக்கூருமமைதியினால்—அச்சமண சமயத்தில் கல்விமிகுந்த நிலைமையினால்; அகலிடத்தில்சித்தநிலையறியாததேரரையும்—நிலவுலகத்தில் மனம் ஒருப்படும்நெறி இதுவென்றுணராத புத்தரையும்; வாதின்கண்உய்த்தவுணர்வினில்வென்று—வாதத்தில்செலுத்திய உணர்வின் மிகுதியால்வென்று; உலகின்கண்ணொளியுடைய வித்தகராய்—உலகினிடத்துப் புகழுடைய பெரியோராய்; அமண்சமயத்தலைமையினின்மேம்பட்டார்—சமண சமயத்துள்ள தலைமையான ஒழுக்கத்தில் மேம்பட்டொழுகினார்.—எ-று. ஏ-அசை. (௪௦)

அந்நெறியின் மிக்கா ரவரொழுக வான்றதவச்
செந்நெறியின் வைகுந் திலகவதி யார்தாமுந்
தொன்னெறியின் சுற்றத் தொடர்பொழியத் தூயசிவ
நன்னெறியே சேர்வதற்கு நாதனரு ணண்ணுவார்.

(இ-ள்.) அந்நெறியின்மிக்காரவரொழுக—அந்த மருணீக்கியார் அச்சமணநெறியிற் சிறந்தவராய் ஒழுகிவர; ஆன்றதவச்செந்நெறியில்வைகுந்திலகவதியார்தாமும்—உயர்ந்த தவமார்க்கமாகிய நல்லசைவ நெறியிலிருக்கிற திலகவதியாரும்; தொன்னெறியின் சுற்றத்தொடர்பொழிய—தொன்றுபட்ட முறைமையினையுடைய உறவினரது சம்பந்தம்நீங்க; தூயசிவநன்னெறியேசேர்வதற்கு—தூய்மையான நல்ல சிவபதத்தையே அடையும்படிக்கு; நாதனருணண்ணுவார்—சிவபிரான் திருவருளைப் பெறுங்கருத்துடையரானார்.—எ-று. (சக)

பேராத பாசப் பிணிப்பொழியப் பிஞ்ஞகன்பால்
ஆராத வன்புபெற வாதரித்த வம்மடவார்
நீரார் கெடிலவட நீள்கரையி னீடுபெருஞ்
சீரார் திருவதிகை வீரட்டானஞ் சேர்ந்தார்.

(இ-ள்.) பேராதபாசப்பிணிப்பொழிய—தம்மைநீங்காத ஆணவாதி பாசபந்தம் நீங்கவும்; பிஞ்ஞகன்பாலாராதவன்புபெற—சிவபிரானிடத்து அடங்காதபேரன்பைத் தானடையவும்; ஆதரித்தவம்மடவார்—விரும்பியவத் திலகவதியார்; நீரார்கெடிலவடநீள்கரையினீடு—நீர்நிறைந்த கெடிலநதியின்நீண்ட வடகரையிலிருக்கின்ற; பெருஞ்சீரார்—பெருஞ் சிறப்பினையுடைய; திருவதிகைவீரட்டானஞ்சேர்ந்தார்—திருவதிகை வீரட்டானத்தை அடைந்தார்.—எ-று. (சஉ)

சென்றுதிரு வீரட்டா னத்திருந்த செம்பவளக்
குன்றையடி மிசைப்பணிந்து கோதில்சிவ சின்னம்
அன்றுமுதற் றாங்கி யார்வமுறத் தங்கையாற்
றுன்றுதிருப் பணிகள் செய்யத் தொடங்கினர்.

(இ-ள்.) சென்றுதிருவீரட்டானத்திருந்த—திருவதிகையிற்சென்று திருவீரட்டானம் என்னும் ஆலயத்தில் வீற்றிருந்தருளும்; செம்பவளக்குன்றையடிமிசைப்பணிந்து—சிவந்த பவளமலைபோலும் சிவபிரான் திருவடிகளில்வணங்கி; கோதில்சிவசின்னமன்றுமுதற்றாங்கி—குற்றமற்றசிவசின்னங்களை அந்நாள்முதலாகத் தரித்துக்கொண்டு; ஆர்வமுறத்தங்கையால்—அன்பானது மீக்கூரத்தம்முடையகையினால்; துன்றுதிருப்பணிகள் செய்யத்தொடங்கினர்—திருப்பள்ளித்தாமமமைத்தல்முதலான பல திருப்பணிகளைச் செய்யும்படி தொடங்கினர்.—எ-று. (சங)

புலர்வதன்முன் றிருவலகு பணிமாறிப் புனிறகன்ற
நலமலியான் சாணத்தா னன்குதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளுந் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினுற் றிருப்பணிகள் பலசெய்தார்.

(இ-ள்.) புலர்வதன்முன்றிருவலகுபணிமாறி—பொழுதுவிடிவதற்குமுன் நீராடி ஆலயத்துள் திருவலகிட்டு; புனிறகன்றநலமலியான்சாணத்தால்—ஈன்றணிமைத்தல்லாத நல்லபசுவினுடைய கோமயத்தால்; நன்குதிருமெழுக்கிட்டு—நன்றாகத் திருமெழுக்கிட்டு



தந்தையார் அவருக்கு விவாகத்தில், தனதுயிரை அவரோடுடன் சேர்க்க
ல் விழுந்து புலம்ப, அம்பொருட்டு உயிர் தாங்கி தவநெறியுடையவராகி இவ்வின்னர் நகரிந்து திருவதிகை
ல் திருவலகிடுதல், திருமெழுகிடுதல், திருமாலைதொடுத்தல் முதலிய திருப்பணியிலிருந்தனர்.

மேல்; மலர்கொய்துகொடுவந்து—நல்ல மலர்களைப் பறித்துக்கொண்டுவந்து; மாலைகளு ந்தொடுத்தமைத்து—திருப்பள்ளித் தாமங்களையுந் தொடுத்துச்சாத்தி; பலர்புகழும்பண் பினால்—யாவரும் எடுத்துக்கூறும் முறைமையோடு; திருப்பணிகள்பலசெய்தார்—பல திருப்பணிகளை அத்திலகவதியார்செய்தார்.—எ-று. (சச)

நாளுமிகும் பணிசெய்து குறைந்தடையு நன்னாளிற்
கேளுறுமன் புறவொழுகுங் கேண்மையினார் பின்பிறந்தார்
கோளுறுதீ வினைமுந்தப் பரசமயங் குறித்ததற்கு
மூளுமனக் கவலையினான் முற்றவருந் துயருழந்து.

(இ-ள்.) கேளுறுமன்புறவொழுகுங்கேண்மையினார்—சுற்றத்தாரிடத் தன்புண் டாகவொழுகும் நண்புடைய திலகவதியார்; நாளுமிகும்பணிசெய்து—நாடோறும் மிக்க திருப்பணிகளைச்செய்து; குறைந்தடையுநன்னாளில்—குறைந்து விண்ணப்பஞ்செய்தொ ழுகும் நல்லநாளில்; பின்பிறந்தார்கோளுறுதீவினைமுந்த—தம்பியாராகிய மருணீக்கி யார் குற்றத்தைவிளைக்கும் கொடியபழவினையானது தம்மை வந்தடைதலால்; பரசம யங்குறித்ததற்கு—பரசமயத்தை யடைந்ததற்கு; மூளுமனக்கவலையினால்—தம்மிடத்து ண்டாகும் மனவருத்தத்தினால்; முற்றவருந்துயருழந்து—மிகத்துயர மடைந்து.—எ-று.

குறைந்தடைதலாவது:—தம்பியார்க்குறுதி பயக்கும் நிலைமையை யருளவேண் டுமென்று குறைந்து விண்ணப்பஞ்செய்தல். (சரு)

தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழுதென்னை
ஆண்டருளு நீராகி லடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்று மெடுத்தருள
வேண்டுமெனப் பலமுறையும் விண்ணப்பஞ் செய்தனரால்.

(இ-ள்.) தூண்டுதவவிளக்கனையார்—தூண்டுகின்ற தவவிளக்கை யொத்ததிலக வதியார்; சுடரொளியைத்தொழுது—மிக்கஒளிவடிவினராகிய சிவபிரானை வணங்கி; என்னையாண்டருளுநீராகில்—என்னை யடிமைக்கொள்ளும் கடவுளாகில்; அடியேன் பின்வந்தவனை—அடியேனுடைய தம்பியை; ஈண்டுவினைப்பரசமயக்குழிநின்றும்—மிக்க தீவினையை விளைவிக்கும் சமண்சமயமாகிய படுகுழியினின்றும்; எடுத்தருளவேண்டு மென—எடுத்தருளவேண்டுமென்று; பலமுறையும்விண்ணப்பஞ்செய்தனர்—பலதரமும் விண்ணப்பஞ் செய்தார்.—எ-று.

இவ்விரண்டுங்குளகம். ஆல்-அசை. ஆண்டருளினீராகிலென்றும் பாடம். (சசு)

தவமென்று பாயிடுக்கித் தலைபறித்து நின்றுண்ணும்
அவமொன்று நெறிவீழ்வான் வீழாமே யருளுமெனச்
சிவமொன்று நெறிநின்ற திலகவதி யார்பரவப்
பவமொன்றும் வினைதீர்ப்பார் திருவுள்ளம் பற்றுவார்.

(இ-ள்.) தவமென்றுபாயிடுக்கி—தவமிதென்று மூங்கிற்றட்டையை இடுக்கிக் கொண்டு; தலைபறித்து நின்றுண்ணும்—தலைமயிரைப்பறித்து நின்றுண்ணும் தொழிலையு டைய; அவமொன்றுநெறிவீழ்வான்—தீநெறியாகிய சமணக்குழியில் வீழ்பவனை; வீழா மேயருளுமென—வீழாவண்ணம் அருளிச்செய்யுமென்று; சிவமொன்றுநெறிநின்ற தில கவதியார்பரவ—நன்மைசேர்ந்த சைவநெறியில் நிற்கின்ற திலகவதியார் விண்ணப்பஞ் செய்ய; பவமொன்றும் வினைதீர்ப்பார்—தம்மடியார்க்குப் பிறப்பால்வரும் தீவினைப்

பகுதியை நீக்கியருளும் கருத்துடைய சிவபிரானுர்; திருவுள்ளம்பற்றுவார்—அத்திலக வதியாருக்குத் திருவுளம் பற்றியருளலாயினுர்.—எ-று.

வீழ்வான் என்பது முக்காலத்துக்கும் பொதுவாய் நின்றது. (சஎ)

மன்னுதபோ தனியார்க்குக் கனவின்கண் மழவிடையார்
உன்னுடைய மனக்கவலை யொழிநீயுன் னுடன்பிறந்தான்
முன்னமே முனியாகி யெனையடையத் தவமுயன்ருன்
அன்னவனை யினிச்சூலை மடுத்தாள்வ மெனவருளி.

(இ-ள்.) மன்னுதபோதனியார்க்கு—நிலைபெற்ற தவத்தையே தனமாகவுடைய அத்திலகவதியாருக்கு; மழவிடையார்கனவின்கண்—இளமையினையுடைய விடையை வாகனமாகக்கொண்டருளும் சிவபிரான் கனவின்கண்வெளிப்பட்டு; உன்னுடையமன க்கவலையொழிநீ—நீ உன்னுடைய மனத்துயரத்தைநீக்கு; உன்னுடன்பிறந்தான்—உன் தம்பி; முன்னமேமுனியாகி—முற்பிறப்பில் முனியாய்; எனையடையத்தவமுயன்ருன்— என்னையடையும் படிக்குத்தவஞ்செய்தான்; அன்னவனையினி—அவனை இனிமேல்; சூலை மடுத்தாள்வமெனவருளி—சூலைநோயைக் கொடுத்துநாம் ஆட்கொள்வோமென்றருளிச் செய்து.—எ-று.

முன்னமே முனியாகி என்றதற்குச்சரிதம்;—ஆரியாவர்த்தத்திலுதித்து வேதவே தாங்கங்களை ஓதியுணர்ந்த சிவபத்தராகிய சுதபாமுனி என்பவர், நருமதாதீரத்தில் வசி த்துக்கொண்டிருந்த சாந்தரென்னும் முனிவர் தன்மாணவகர்களுக்கு உபநிடதங்களின் அருத்தமாகிய ஜீவான்ம பரமான்ம ஐக்கியத்தை உபதேசிக்குங்கால் அவருழைச்சென்று வேதம் அப்பிராமாணியமென்று சைனமதத்தைப் பிரசங்கஞ்செய்தனர். அப்பொழுது அம்முனிவர் வெகுண்டு நீ வேதபாஹ்யனுய்ச் சைனமதத்திற் பிரவேசி என்று சபித்த னர். அதனுல் அம்முனிவர் சைனமதத்திற் பிரவேசித்தனரென்று அகத்தியபக்த விலாச த்திற்கூறப்படும். (சஅ)

பண்டுபுரி நற்றவத்துப் பழுதினள விறைவழுவுந்
தொண்டரையா ளத்தொடங்குஞ் சூலைவேதனை தன்னைக்
கண்டருநெற் றியாருளக் கடுங்கனல்போ லடுங்கொடிய
மண்டுபெருஞ் சூலையவர் வயிற்றினிடைப் புக்கதால்.

(இ-ள்.) பண்டுபுரிநற்றவத்து—முற்பிறப்பில்செய்த நற்றவத்தில்; இறையளவு பழுதின்வழுவும்—ஒருசிறிய குற்றத்தால் வழுவிய; தொண்டரையாளத்தொடங்கும்— தொண்டராகிய மருணீக்கியாரை ஆளுதற்கேதுவாகவரும்; சூலைவேதனைதன்னை—சூலை நோயை; கண்டருநெற்றியரருள—நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான் அவருக்குக்கொ டுக்க; கடுங்கனல்போலடுங்கொடிய—கொடியவடவானலம்போல வருத்தும்தீய; மண்டு பெருஞ்சூலை—மிகப்பெரிய சூலைநோயானது; அவர்வயிற்றினிடைப்புக்கது—அவர் வயி ற்றிற்புகுந்தது.—எ-று. ஆல்-அசை.

முன் சுதபாமுனியாயிருக்குங்கால் அவரது நற்றவமும் பத்திமையும்விளக்கிய பண்டுபுரிநற்றவமென்றும், அவர்சாந்தரென்னும் முனிவரோடு வாதித்துத் தவறுண்ட மையின் இறைவழுவும் என்றும், அச்சாபத்தாற்புகுந்த மதத்திற்பயனின்மைவிளக்கி அதினின்றும் நீக்கவந்தமையின் ஆளத்தொடங்கும் சூலைவேதனையென்றும் கூறினர். சகூ

அடைவிலமண் புரிதரும சேனர்வயிற் றடையுமது
வடவனலுங் கொடுவிடமும் வச்சிரமும் பிறவுமாங்

க. திலகவதியார் சமண்புகுந்ததைத் திலகவதியாரறிந்து மனம்வருந்தி மீண்டும் தம்பியை சைவத்திற்புகுவிக்க அருள்செய்யும்படி வீரட்டா னேசுரரைப் பன்முறைப் பிரார்த்தித்தது. உ. வீரட்டானேசுரர் திலகவதியார் சொற்பனத்திற்றோன்றி உமது தம்பி முன்னே வாகீசமுனிவராகி நம்மையடையத் தவஞ்செய்தது ஓர்காரணத்தால் விலகி...

கொடியவெலா மொன்ருகு மெனக்குடரி னகங்குடையப்
படருழந்து நடுங்கியமண் பாழியறை யிடைவீழ்ந்தார்.

(இ-ள்.) அடைவிலமண்புரிதருமசேனர்வயிற்றடையுமது—ஒழுக்கமில்லாத சமணநெறியிலொழுகும் தருமசேனனென்னும் மருணீக்கியாருடைய வயிற்றினிடத்தடைந்த அந்நோயானது; வடவனலுங்கொடுவிடமும்வச்சிரமும்—வடவாமுகமும் கொடிய ஆலாகலமும் வச்சிராயுதமும்; பிறவுமாங்கொடியவெலாமொன்ருகுமென—மற்றுமுள்ள தீயபொருள்களெல்லாம் ஒன்ருய்ச்சேர்ந்தது என்றுசொல்லும்படி; குடரினகங்குடையப்படருழந்துநடுங்கி—குடரினுள்ளே குடைய அதனுல்வருந்தி நடுக்கமுற்று; அமண்பாழியறையிடைவீழ்ந்தார்—சமணர்கள் வாழும் பள்ளியின்கணுள்ள அறையிலே மூர்ச்சித்துவிழுந்தார்.—எ-று. இந்நான்குங் குளகம். (டுo)

அச்சமயத் திடைத்தாமுன் னதிகரித்து வாய்த்துவரும்
விச்சைகளாற் றடுத்திடவு மேன்மேலு மிகமுடுகி
உச்சமுற வேதனைநோ யோங்கியெழ வாங்கவர்தா
நச்சரவின் விடந்தலைக்கொண் டெனமயங்கி நவையுற்ருர்.

(இ-ள்.) அச்சமயத்திடை—அந்தச் சமணசமயத்தில்; தாமுன்னதிகரித்துவாய்த்துவரும்—தாம் முன்னே அப்பியசித்துக் கைவந்திருக்கும்; விச்சைகளாற்றடுத்திடவும்—விஞ்சை மந்திரங்களினுல் தடுக்கவும் தடைபடாமல்; மேன்மேலுமிகமுடுகி—மேலும் மேலும் அதிகமாகவளர்ந்து; உச்சமுறவேதனைநோய்—உச்சமாகத் துயரத்தைவிளைக்கும் அந்நோயானது; ஓங்கியெழவாங்கவர்—மேற்கொண்டெழ அத்தருமசேனர்; நச்சரவின் விடந்தலைக்கொண்டெனமயங்கிநவையுற்ருர்—பாம்பின் விடவேகம் தலைக்கொண்டாற்போல மயக்கமடைந்து துன்புற்ருர்.—எ-று. தாம்-அசை. (டுக)

அவர்நிலைமை கண்டதற்பி னமண்கையர் பலரீண்டிக்
கவர்கின்ற விடம்போன்முன் கண்டறியாக் கொடுஞ்சூலை
இவர்தமக்கு வந்ததினி யாதுசெய லென்றழிந்தார்
தவமென்று வினைபெருக்கிச் சார்பல்லா நெறிசார்வார்.

(இ-ள்.) அவர்நிலைமைகண்டதற்பின்—அத்தருமசேனர் நோயால்வருந்தும் நிலைமையைப் பார்த்தபின்பு; தவமென்றுவினைபெருக்கிச்சார்பல்லாநெறிசார்வார்—தாம் நிற்பது தவநெறியென்று பாவத்தைவளர்த்து நற்சார்பல்லாத சமணசமயத்தில் ஒழுகுகின்றவர்களாகிய; அமண்கையர்பலரீண்டி—கீழோராகும் சமணர்கள் பலர்கூடி; கவர்கின்றவிடம்போல்—உயிரைப்போக்குகின்ற பாம்பின் விடத்தைப்போல; முன்கண்டறியாக்கொடுஞ்சூலை—முன்னே நாம் பார்த்தறியாத கொடிய சூலைநோய்; இவர்தமக்குவந்தது—இவருக்குவந்தது; இனியாதுசெயலென்றழிந்தார்—இதனை நீக்குதற்கு இனி என் செய்வது என்று வருந்திஞர்கள் —எ-று. (டுஉ)

புண்டலைவன் முருட்டமணர் புலர்ந்துசெய லறியாது
குண்டிகைநீர் மந்திரித்துக் குடிப்பித்துந் தணியாமை
கண்டுமிகப் பீலிகொடு காலளவுந் தடவிடவும்
பண்டையினு நோவுமிகப் பரிபவத்தா லிடருழந்தார்.

(இ-ள்.) புண்டலைவன்முருட்டமணர்—மயிர்பறித்தலாற் புண்ணேடுகூடிய தலையையுடைய வலிய முருடர்களாகிய சமணர்கள்; புலர்ந்துசெயலறியாது—மனம்புலர்ந்து

அந்நோயைத்தீர்க்கும் முறைமையை அறியாமல்; குண்டிகைநீர்மந்திரித்துக்குடிப்பித்தும்—கமண்டலத்தின்கணுள்ள நீரை அபிமந்திரித்துக் குடிக்கச்செய்தும்; தணியாமைகண்டு—அந்நோய் நீங்காமலிருக்கப்பார்த்து; மிகப்பீலிகொடுகாலளவுந்தடவிடவும்—மிகவும் மயிற்பீலியைக்கொண்டு சிரம்முதல் கால்வரைக்கும் தடவவும்; பண்டையினுநோவுமிக—முன் இருந்ததினும் வேதனைமேற்பட; பரிபவத்தாலிடருழந்தார்—அவமானத்தால் வருந்தினார்கள்.—எ-று. (ருங)

தாவாத புகழ்த்தரும சேனர்க்கு வந்தபிணி
ஓவாது நின்றிடலு மொழியாமை யுணர்ந்தாராய்
ஆவாநா மென்செய்கோ மென்றழிந்த மனத்தினராய்ப்
போவார்க ளிதுநம்மாற் போக்கரிதா மெனப்புகன்று.

(இ-ள்.) தாவாதபுகழ்த்தருமசேனர்க்குவந்தபிணி—கெடாத புகழினையுடைய தருமசேனர்க்குவந்த சூலைநோயானது; ஓவாதுநின்றிடலும்—அவர்செய்யும் மந்திரசாதனத்தால் நீங்காது நிற்கவும்; ஒழியாமையுணர்ந்தாராய்—சமணர்கள் தம்மால் அது நீங்காமையை அறிந்தவர்களாய்; ஆவாநாமென்செய்கோம்—ஆ! ஆ!! நாமிதற்கு என்செய்வோம்; என்றழிந்தமனத்தினராய்—என்றுவருந்தும் மனமுடையவர்களாய்; இதுநம்மாற்போக்கரிதாமெனப்புகன்றுபோவார்கள்—இது நம்மாற் போக்கக்கூடாததா யிருக்கின்றதென்று சொல்லிப் பாழியைவிட்டுப் போவார்களாயினர்.—எ-று.

ஆவாவென்பது ஈண்டாச்சரியக்குறிப்பு. (ருச)

குண்டர்களுங் கைவிட்டார் கொடுஞ்சூலை கைக்கொண்டு
மண்டிமிக மேன்மேலு முடுகுதலான் மதிமயங்கிப்
பண்டையுற வுணர்ந்தார்க்குத் திலகவதி யாருளராக்
கொண்டவர்பா லூட்டுவான் றனைவிட்டார் குறிப்புணர்த்த.

(இ-ள்.) குண்டர்களுங்கைவிட்டார்—குண்டர்களாகிய சமணர்களும் இந்நோய்க்குத் தீர்வில்லை என்று கைவிட்டார்கள்; கொடுஞ்சூலைகைக்கொண்டு—கொடிய சூலைநோயானது அவர் வயிற்றைப் பற்றிக்கொண்டு; மண்டிமிகமேன்மேலும்—நெருங்கி மிக மேலும்மேலும்; முடுகுதலான்மதிமயங்கி—வளர்தலால் அறிவுமயங்கி; பண்டையுறவுணர்ந்தார்க்கு—பழைய நண்பைக்கருதிய தருமசேனர்க்கு; திலகவதியாருளராக்கொண்டு—திலகவதியாரொன்னும் தமக்கையார் உளராக மனதிற்கருதி; அவர் பாலூட்டுவான்றனை—அத்திலகவதியாரிடத்துக்குப்பாகஞ்செய்து அன்னமிடுகின்றவனை; விட்டார் குறிப்புணர்த்த—தன்மனக்கருத்தை அவருக்குத் தெரிவிக்கும்படி அனுப்பினார்.—எ-று.

அடிசிலமைத்து இலையிலிடாது கவளக்கணக்காகக் கையிலிடுதெலில் ஊட்டுவானென்றார். (ருரு)

ஆங்கவன்போய்த் திருவதிகை தனையடைய வருந்தவத்தார்
பூங்கமழ்நந் தனவனத்தின் புறம்பணையக் கண்டிறைஞ்சி
யீங்கியா னுமக்கிளையா ரேவலினால் வந்ததெனத்
தீங்குளவோ வெனவினவ மற்றவனுஞ் செப்புவான்.

(இ-ள்.) ஆங்கவன்போய்த்திருவதிகைதனையடைய—தருமசேனரால் அனுப்பப்பட்ட ஊட்டுவான்போய்த் திருவதிகையையடைய; அருந்தவத்தார்பூங்கமழ்நந்தனவனத்தின்—அரியதவத்தையுடைய திலகவதியார் பூக்கள் மணங்கமழ்கின்ற திருநந்தனவன

த்தின்; புறம்பணையக்கண்டிறைஞ்சி—புறம்பேவர அவளைக்கண்டு வணங்கி; ஈங்கியானு மக்கிளையாரோவலினல்வந்ததென—இவ்விடத்து நான்வந்தது உம்முடைய தம்பியார் கட்டளையினலென்றுகூற; தீங்குளவோவெனவினவ—அவனுக்கு ஏதேனும் தீங்குநேரிட்டதுண்டோ என்றுகேட்க; மற்றவனுஞ்செப்புவான்—அவ்வூட்டுவோனும் சொல்லுகின்றான்.—எ-று. (ருசு)

கொல்லாத சூலைநோய் குடர்முடக்கித் தீராமை
யெல்லாருங் கைவிட்டா ரிதுசெயலென் முன்பிறந்த
நல்லாள்பாற் சென்றியம்பி நானுய்யும் படிகேட்டிங்
கல்லாகும் பொழுதணைவா யென்றானென் றறிவித்தான்.

(இ-ள்.) கொல்லாதசூலைநோய்—உயிரை உடம்பில்நின்றும் நீக்காமல் வருத்துகின்ற சூலைநோயானது; குடர்முடக்கித்தீராமை—குடர்களைச் சுருட்டியிழுத்து மருந்துமந்திரங்களால் தீராமையினல்; எல்லாருங் கைவிட்டார்—சமணமுனிவர்களெல்லாரும் கைவிட்டார்கள்; இதுசெயலென்முன்பிறந்த—இச்செய்தியை எனக்கு முன்பிறந்த; நல்லாள்பாற்சென்றியம்பி—தமக்கையாரிடத்துப்போய்ச்சொல்லி; நானுய்யும்படிகேட்டு—நான்பிழைக்கும்வழியைக்கேட்டுக்கொண்டு; இங்கல்லாகும்பொழுதணைவாயென்றான்—இவ்விடத்து இராப்பொழுது அணையுங்காலத்து வந்துசேர்வாயென்றான்; என்றறிவித்தான்—என்று தெரிவித்தான்.—எ-று. (ருஎ)

என்றவன்முன் கூறுதலும் யானங்குன் னுடன்போந்து
நன்றறியா ரமண்பள்ளி நண்ணுகிலே னெனுமாற்றஞ்
சென்றவனுக் குரையென்று திலகவதி யார்மொழிய
அன்றவனு மீண்டுபோய்ப் புகுந்தபடி யவர்க்குரைத்தான்.

(இ-ள்.) என்றவன்முன்கூறுதலும்—இவ்வாறு அவ்வூட்டுவோன் அத்திலகவதியார் முன்சொல்லவும்; திலகவதியார்யானங்குன்னுடன்போந்து—திலகவதியார் நான் அவ்விடத்திற்கு உன்னுடனேசென்று; நன்றறியாரமண்பள்ளி—நன்மார்க்கத்தையறியாத சமணர்களது பாழியை; நண்ணுகிலேனெனுமாற்றம்—அடையமாட்டேனென்னும் சொல்லை; சென்றவனுக்குரையென்றுமொழிய—நீபோய் அவனுக்குச் சொல்லென்றுகூற; அன்றவனுமீண்டுபோய்—அன்றைக்கு அந்த ஊட்டுவோனும் திரும்பிப்போய்; புகுந்தபடியவர்க்குரைத்தான்—நடந்த செய்தியைத் தருமசேனர்க்குச்சொன்னான்.—எ-று. (ருஅ)

அவ்வார்த்தை கேட்டலுமே யயர்வெய்தி யிதற்கினியான்
எவ்வாறு செய்வனென வீசரருள் கூடுதலால்
ஒவ்வாவிப் புன்சமயத் தொழியாவித் துயரொழியச்
செவ்வாறு சேர்திலக வதியார்தாள் சேர்வனென.

(இ-ள்.) அவ்வார்த்தை கேட்டலுமயர்வெய்தி—திலகவதியார் சொல்லியனுப்பிய வார்த்தையைக்கேட்டவுடன் மனம்வருந்தி; இதற்கினியானெவ்வாறுசெய்வனென—இந்நோய் நீக்குதற்கு உபாயம் இனிமேல் யான் எவ்விதத்தாற் செய்வேனென்றுகருத; ஈசரருள்கூடுதலால்—அப்பொழுது சிவபிரான் திருவருளானது அவர்க்கு ஒரு சிறிதுண்டானபடியால்; ஒவ்வாவிப்புன்சமயத்து—சேரும் நெறியல்லாத இப்புல்லிய சமணசமயத்து; ஒழியாவித்துயரொழிய—நீங்காத இப்பெரியநோயானது நீங்கும்படி; செவ்வாறுசேர்திலகவதியார்தாள்சேர்வனென—செந்நெறியிற் செல்கின்ற திலகவதியாரது திருவடிகளை யானடைவேனென்று.—எ-று. ஏ-அசை. (ருக)

எடுத்தமனக் கருத்துய்ய வெழுதலா லெழுமுயற்சி
யடுத்தலுமே யயர்வொதுங்கத் திருவதிகை யணைவதனுக்
குடுத்துழலும் பாயொழிய வுறியுறுகுண் டிகையொழியத்
தொடுத்தபீ லியுமொழியப் போவதற்குத் துணிந்தெழுந்தார்.

(இ-ள்.) எடுத்தமனக்கருத்துய்யவெழுதலால்—தாம் நிச்சயித்த மனக்கருத்தானது உய்யும் நெறிக்கேதுவாக உதிக்கின்றமையால்; எழுமுயற்சியடுத்தலும்—எழாநின்ற முயற்சிவரவும்; அயர்வொதுங்கத்திருவதிகையணைவதனுக்கு—அதனால் துயரம் நீங்கத் திருவதிகை வீரட்டானத்தை யணைவதற்கேதுவாக; உடுத்துழலும்பாயொழிய—உடுத்துத்திரியும் பாயுந்தவிர்ந்துவிட; உறியுறுகுண்டிகையொழிய—உறியில் தூக்கியிருக்கின்ற கமண்டலமும் தவிர்ந்துவிட; தொடுத்தபீலியுமொழிய—சேர்த்துக்கட்டியிருக்கும் மயிற்பீலிக்குஞ்சமும் ஒழிந்துவிட; போவதற்குத்துணிந்தெழுந்தார்—போகும்படி நிச்சயித்துப் புறப்பட்டார்.—எ-று. இவ்விரண்டுங்குளகம். ஏ-அசை. (௬0)

பொய்தருமா லுள்ளத்துப் புன்சமண ரிடங்கழிந்து
மெய்தருவா னெறியடைவார் வெண்புடைவை மெய்சூழ்ந்து
கைதருவார் தமையூன்றிக் காணுமே யிரவின்கட்
செய்தவமா தவர்வாழுந் திருவதிகை சென்றடைவார்.

(இ-ள்.) பொய்தருமாலுள்ளத்து—பொய்யை விளைவிக்கும் மயக்கம்நிறைந்த மனதையுடைய; புன்சமணரிடங்கழிந்து—கீழோராகிய சமணர்களிடத்தினின்றும் நீங்கி; மெய்தருவானெறியடைவார்—மெய்யை விளைவிக்கும் மேலான சைவநெறியை அடைய விரும்பினவராகிய மருணீக்கியார்; வெண்புடைவைமெய்சூழ்ந்து—வெள்ளிய உடையை உடுத்துக்கொண்டு; கைதருவார்தமையூன்றி—தமக்கு ஆதரவாகக் கைகொடுத்து வருகின்ற ஏவலாளரைப் பிடித்துக்கொண்டு; காணுமேயிரவின்கண்—அன்றிரவில் பிறர்காணுமல்; செய்தவமாதவர்வாழும் — தவஞ்செய்யும் பெரியமுனிவர்கள் வாழ்கின்ற; திருவதிகைசென்றடைவார்—திருவதிகை வீரட்டானத்தைநோக்கிச் செல்வாராயினர்.

சுலவிவயிற் றகங்கனலுஞ் சூலைநோ யுடன்றொடரக்
குலவியெழும் பெருவிருப்புக் கொண்டணையக் குலவரைபோன்
றிலகுமணி மதிற்சோதி யெதிர்கொடிரு வதிகையினிற்
றிலகவதி யாரிருந்த திருமடத்தைச் சென்றணைந்தார்.

(இ-ள்.) சுலவிவயிற்றகங்கனலும்—வயிற்றினுள்ளே சுடலைச்சுற்றி எரிகின்ற; சூலைநோயுடன்றொடர—சூலைநோயானது தன்னுடு தொடர்ந்துவரவும்; குலவியெழும்பெருவிருப்புக்கொண்டணைய—அதனுற் சலியாது தம் உள்ளத்துவிளங்கி எழாநின்ற பெருவிருப்பானது தம்மைக்கொண்டு செலுத்தவும்; குலவரைபோன்றிலகும்—குலமலைகளையொத்து விளங்கும்; மணிமதிற்சோதியெதிர்கொடிருவதிகையினில் — மணிகளிழைத்த மதிலினது ஒளியானது எதிரோ பத்திபாய்கின்ற திருவதிகைவீரட்டானத்தில்; திலகவதியாரிருந்த—திலகவதியார் எழுந்தருளியிருக்கும்; திருமடத்தைச்சென்றணைந்தார்—திருமடத்திற்குப் போய்ச்சேர்ந்தார்.—எ-று. (௬௨)

வந்தணைந்து திலகவதி யாரடிமே லுறவணங்கி
நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயனனையீர்
இந்தவுடற் கொடுஞ்சூலைக் கிடைந்தடைந்தே னினிமயங்கா
துய்ந்துகரை யேறுநெறி யுரைத்தருளு மெனவுரைத்து.

(இ-ள்.) வந்தணைந்து=திலகவதியார் திருமடத்தில்வந்து; திலகவதியாரடிமே லுறவணங்கி=அவர்திருவடிகளில் சாஷ்டாங்கமாக வணங்கி; நந்தமதுகுலஞ்செய்த=நமது குலத்தினர்செய்த; நற்றவத்தின்பயனனையீர்=நல்லதவத்தின் பயன்போல்வாரே; இந்தவுடற்கொடுஞ்சூலைக்கு=இந்த உடலினிடத்துள்ள கொடிய சூலைநோயால்; இடைந்தடைந்தேன்=வருந்தி உம்மையடைந்தேன்; இனிமயங்காதுய்ந்து=இனிமேல் புறமார்க்கத்து மயங்கிச்செல்லாமற் பிழைத்து; கரையேறுநெறி=பிறவிக்கடலைக்கடந்து கரையேறும்வழியை; உரைத்தருளுமெனவுரைத்து=நீர் கட்டளையிட்டருள்வீர் எனக்கூறி.()

தாளிணைமேல் விழுந்தயருந் தம்பியார் தமைநோக்கி
யாளுடைய நம்பெருமா னருணினைந்து கைதொழுது
கோளில்பர சமயநெறிக் குழியில்விழுந் தறியாது
மூளுமருந் துயருழந்தீ ரெழுந்திரீ ரெனமொழிந்தார்.

(இ-ள்.) தாளிணைமேல்விழுந்தயரும்=தமது திருவடிகளில் விழுந்து வருந்துகின்ற; தம்பியார்தமைநோக்கி=மருணீக்கியாரைப்பார்த்து; ஆளுடையதம்பெருமான்=தம்மையடிமையாகவுடைய தமது பிரானது; அருணினைந்துகைதொழுது=திருவருளை நினைந்து வணங்கி; கோளில்பரசமயநெறிக்குழியிலறியாதுவிழுந்து=அறிஞர்களாற் கொள்ளு நெறியல்லாத புறச்சமயமாகிய குழியில் அறியாதுவிழுந்து; மூளுமருந்துயருழந்தீர்=அதிகரிக்கின்ற கொடுந்துயரில் அழுந்தினீர்; எழுந்திரீரெனமொழிந்தார் = எழுந்திரும் என்றுசொன்னார்.—எ-று. இவ்விரண்டும்குளகம்.

எழுந்திரீர் என்றது வணங்குதலினின்றும் எழுந்திருமென்றும் சமணசமயக்குழியினின்றும் எழுமென்றும் பொருள் குறித்தவாறறிக. (சுச)

மற்றவுரை கேட்டலுமே மருணீக்கி யார்தாமும்
உற்றபிணி யுடனடுங்கி யெழுந்துதொழ வுயர்தவத்தோர்
கற்றைவே ணியரருளே காணுமிது கழலடைந்தோர்
பற்றறுப்பார் தமைப்பணிந்து பணிசெய்வீ ரெனப்பணித்தார்.

(இ-ள்.) அவ்வுரைகேட்டலும்=அவர் சொன்னவார்த்தை கேட்டவுடன்; மருணீக்கியார்தாமும்=மருணீக்கியாரும்; உற்றபிணியுடனடுங்கியெழுந்துதொழ=தம்மை வருத்துகின்ற சூலைநோயோடு உடல் நடுக்கமுற்று எழுந்துவணங்க; உயர்தவத்தோர்=உயர்ந்ததவத்தையுடைய திலகவதியார்; கற்றைவேணியரருளேகாணுமிது=இந்நோயுமக்குவந்தது கூட்டமான சடைமுடியையுடைய சிவபிரானுரது திருவருளென்றே அறியும்; கழலடைந்தோர்பற்றறுப்பார்தமைப்பணிந்து=அதனல் அதுநீங்கத் திருவடியையடைந்தவர்களது பாசத்தொடக்கை நீக்கியருளும் அப்பிரானை வணங்கி; பணிசெய்வீரெனப்பணித்தார்=திருத்தொண்டுசெய்யும் என்று கட்டளையிட்டருளினுர்.—எ-று.

மற்று-ஏ-அசை. (சுரு)

என்றபொழு தவரருளை யெதிரேற்றுக் கொண்டிறைஞ்ச
நின்றதபோ தனியாரு நின்மலன்பே ரருணினைந்து
சென்றுதிரு வீரட்டம் புகுவதற்குத் திருக்கயிலைக்
குன்றுடையார் திருநீற்றை யஞ்செழுத்தோ திக்கொடுத்தார்.

(இ-ள்.) என்றபொழுதவரருளை=திலகவதியார் இவ்வாறு கூறியபொழுது அத்திலகவதியாரது அருளை; எதிரேற்றுக்கொண்டிறைஞ்ச=மருணீக்கியார் அங்கீகரித்துக்

கொண்டு பின்னும் வணங்க; நின்றதபோதனியாரும்=அங்குநின்ற திலகவதியாரும்; நின்மலன்பேரருணினைந்து=சிவபிரானது பெருங்கருணையைச் சிந்தித்துக்கொண்டு; சென்றுதிருவீரட்டம்புகுவதற்கு=அவருடன் தாமும்சென்று திருவதிகை வீரட்டத்தை அடையும்பொருட்டு; திருக்கயிலைக்குன்றுடையார் திருநீற்றை=திருக்கயிலைமலையையுடையாரது திருவெண்ணீற்றை; அஞ்செழுத்தோதிக்கொடுத்தார்=திருவைந்தெழுத்தை யுச்சரித்துக் கொடுத்தருளினார்.—எ-று. (சுசு)

திருவாளன் றிருநீறு திலகவதி யாரளிப்பப்
பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங்
குருவார வணிந்துதமக் குற்றவிடத் துய்யுநெறி
தருவாராத் தம்முன்பு வந்தார்பின் றாம்வந்தார்.

(இ-ள்.) திருவாளன்றிருநீறு=மேலான நிரதிசயசம்பத்தையுடைய சிவபிரானது திருவெண்ணீற்றை; திலகவதியாரளிப்ப=திலகவதியார் மருணீக்கியாருக்குக்கொடுக்க; பெருவாழ்வுவந்ததென=தமக்குப் பெரிய சம்பத்தானது வந்ததென்று; பெருந்தகையார்பணிந்தேற்று=மருணீக்கியார் தொழுது வாங்கி; அங்குருவாரவணிந்து=அவ்விடத்துத் திருமேனியில் பொருந்தும்படிக்குத் தரித்துக்கொண்டு; தமக்குற்றவிடத்துய்யுநெறிதருவாராய்=தமக்கு ஆபத்து நேரிட்டவிடத்து உய்யுநெறியைக் கொடுக்கின்றவராய்; தம்முன்புவந்தார்பின்றாம்வந்தார்=தமக்கு முன்பிறந்த திலகவதியார் பின்னே தாம் சென்றார்.—எ-று.

இச்சூலைநோயன்றிப் பிறவிநோயையுங் கெடுத்துப் பேரானந்தம் விளைக்குமெனு முணர்வுதித்தலிற் பெருவாழ்வு வந்ததெனக் கருதினர் என்க. (சுஎ)

நீறணிந்தா ரகத்திருளு நிறைகங்குற் புறத்திருளு
மாறவருந் திருப்பள்ளி யெழுச்சியினின் மாதவஞ்செய்
சீறடியார் திருவலகுந் திருமெழுக்குந் தோண்டியுங்கொண்
டாறணிந்தார் கோயிலினு ளடைந்தவரைக் கொடுபுக்கார்.

(இ-ள்.) நீறணிந்தாரகத்திருளும்=திருவெண்ணீறணிந்த மருணீக்கியாரது உளத்திருளாகிய அஞ்ஞானமும்; நிறைகங்குற்புறத்திருளும்=நிறைந்த இரவாகிய புறவிருளும்; மாறவருந்திருப்பள்ளியெழுச்சியினில்=நீங்குதற்கேதுவாக வருகின்ற திருப்பள்ளியெழுச்சிக்காலமாகிய வைகறையில்; மாதவஞ்செய்சீறடியார்=பெரிய தவத்தைச்செய்கின்ற திலகவதியார்; திருவலகுந்திருமெழுக்குந்தோண்டியுங்கொண்டு=திருவலகையும் திருமெழுக்கிடும் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு; ஆறணிந்தார்கோயிலினுள்=கங்கைநதியை அணிந்த சிவபிரானது திருக்கோயிலினுள்; அடைந்தவரைக்கொடுபுக்கார்=சென்று அவரைக் கொண்டுபோனார்.—எ-று.

சூரியோதயத்தாற் புறவிருணீங்குங்காலமும், திருவருளுதயத்தால் மருணீக்கியார் மலவிருணீங்குங்காலமும் அத்திருப்பள்ளியெழுச்சியாதலில் அகத்திருளும் புறத்திருளு மாறவருந் திருப்பள்ளியெழுச்சி என்றார். (சுஅ)

திரைக்கெடில வீரட்டா னத்திருந்த செங்கனக
வரைச்சிலையார் பெருங்கோயி றொழுதுவலங் கொண்டிறைஞ்சித்
தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து தம்பிரான் றிருவருளால்
உரைத்தமிழ்மா லைகள்சாத்து முணர்வுபெற வுணர்ந்துரைப்பார்.

(1. மருணீக்கியார்) (2. திலகவதியார்)

மருணீக்கியார் ஊட்டுவான் துணைக்கொண்டு அன்றிரவிலொருவருமறியாது திருவதிகையைச்சார்ந்து தமக்கைத் திருவடியைத்தொழுது அன்னையே இச்சூலை நீங்க அருளெனத்துதிக்க, அவர் திருவருளைச் சிந்தித்து எழுந்திருக்கச்சொன்னது. தம்பி நடுங்கி நிற்பதைக் கண்டு இது சிவன்செயலாலுண்டானதாலவனைத்தொழுது பணியெனக்கூறி ஆலயத்துக்கழைத்துப்போக, சிவத்தைச் சிந்தித்துபஞ்சாக்கரமோதி விபூதிகொடுக்கத் தரித்துக்கொண்டபின் ஆலயத்துட்சென்றனர். மருணீக்கியார் சிவபெருமானைத் தொழுதுநிற்க அருளானனருளால் பதிகமோதும்படி உணர்ச்சி உண்டாகிப் பதிகமோதச் சூலை நீங்கிற்று. இது சிவன்செயலெனத் துதித்தபோது எம்பெருமானவரைநோக்கி பதிகமோதின தன்மையால் இனி நாவுக்கரசெனப்பெயருண்டாகுகவென வசரீரிகூற, கேட்டு ஆநந்தபரவசராகி சிவச்சின்னம்பூண்டு மனவாக்குக்காயங்களால் தொண்டுசெய்து வந்தனர்.

(இ-ள்.) திரைக்கெடிலவீரட்டானத்திருந்த=அலைவீசுகின்ற கெடிலநதியின் வடகரையின்கணுள்ள திருவீரட்டானத்திருக்கின்ற; செங்கனகவரைச்சிலையார்பெருங் கோயில்=மேருவில்லுடையார் வீற்றிருந்தருளும் பெரிய திருவாலயத்தை; வலங்கொண்டுதொழுதிறைஞ்சி=வலமாகவந்து சிரசின்மேற் கைகூப்பிவணங்கி; தரைத்தலத்தின்மிசைவீழ்ந்து=பின் நிலமுறச் சாஷ்டாங்கமாக வணங்கியெழுந்து; தம்பிரான்திருவருளால்=சிவபிரான் திருவருளால்; உரைத்தமிழ்மாலைகள்சாத்தும்=தமிழ்ச்சொல்லாகிய பதிகமாலையைச் சூட்டும்; உணர்வுபெறவுணர்ந்துரைப்பார்=உணர்வுண்டாகச் சிவபிரான் திருவருளைச் சிந்தித்துக்கொண்டு பாடுவாராயினர்.—எ-று.

உணர்வுபெற என்றதனால் திருவருள் பதிந்தென்றும், உணர்ந்து என்றதனால் அதனால் விளக்கப்பட்ட கரணமுடையாராய் என்றும் கொள்க. (சுசு)

வேறு.

நீற்றானிறைவா கியமேனியுட னிறையன்புறுசிந் தையினேசமிக
மாற்றார்புரமாற் றியவேதியனை மருளும்பிணிமா யையறுத்திடுவான்
கூற்றாயினவா றுவிலக்ககிலீ ரெனநீடியகோ திறிருப்பதிகப்
போற்றாலுலகே ழின்வருந்துயரும் போமாறெதிர்நின் றுபுகன்றனரால்.

(இ-ள்) நீற்றானிறைவாகியமேனியுடன்=விபூதியினால் நிறைவடைந்த திருமேனியுடன்; நிறையன்புறுசிந்தையினேசமிக=குறையாத அன்புமிக்க உள்ளத்தின் பெருவிருப்பானதுண்டாக; மாற்றார்புரமாற்றியவேதியனை=அசுரர்களது திரிபுரத்தை எரித்தருளிய வீரட்டேசனை; மருளும்பிணிமாயையறுத்திடுவான்=தனக்கு மயக்கத்தைவிளைக்கும் சூலைநோயையும் பிறவிக்கேதுவான மாயாமலத்தின் பந்தத்தையும் நீக்கும்படி; கூற்றாயினவாறுவிலக்ககிலீரெனநீடிய=கூற்றாயினவாறு விலக்ககிலீரென்று முதலெடுத்த; கோதிறிருப்பதிகப்போற்றால்=குற்றமற்ற திருப்பதிகத்தின் துதியினால்; உலகேழின்வருந்துயரும்போமாறு=தந்துயரோயன்றி ஏழுலகத்தாருக்குவரும் துன்பமும் நீங்கும்வண்ணம்; எதிர்நின்றுபுகன்றனர்=சிவபிரான் திருமுன்னேநின்று பாடியருளினார்.—எ-று. ஆல்-அசை.

இத்திருப்பதிகம் ஓதுங்கால் மண்ணுலகின்கணுள்ளாரை மனந்தூயராக்கி இறைஞானங்கொடுத்துப் பிறவிநோயைக் கெடுத்தலன்றி விண்ணுலகின்கணுள்ளாரையும் கேட்டமாத்திரத்தால் சிவஞானமுடையராகச் செய்தலின் உலகேழின் வருந்துயரும் போமாறென்றார். (எ0)

திருச்சிற்றம்பலம்.

திருவதிகைவீரட்டானம் - பண் - கொல்லி.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர் கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும் பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியே குடரோடுதொடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. (க)

நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தே னினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பதுகண்டறியேன் வயிற்றோடுதொடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னைநலிவதனை நணுகாமற்றுரந்துகரந்துமிடீ
ரஞ்சேலுமென்னீரதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. (உ)

பணிந்தாரனபாவங்கள்பாற்றவல்லீர் படுவெண்டலையிற்பலிகொண்டு ழல்வீர், துணிந்தேயுமக்காட்செய்துவாழலுற்றுற் சுடுகின்றதுசூலைதவிர்த் தருளீர், பிணிந்தார்பொடிக்கொண்டுமெய்பூசவல்லீர் பெற்றமேற்றுகந்தீர் சுற்றும்வெண்டலைகொண், டணிந்தீரடிகேளதிகைக்கெடில வீரட்டானத் துறையம்மானே. (ரு)

முன்னம்மடியேனறியாமையினுன் முனிந்தென்னைநலிந்துமுடக்கியிடப்
பின்னையடியேனுமக்காளும்பட்டேன் சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றே தலையாயவர்தங்கடனுவதுதா
னன்னநடையாரதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. (௪)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற் கரைநின்றவர்கண்டுகொளென்று சொலி, நீத்தாயகயம்புகநூக்கியிட நிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறி யேன், வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன் வயிற்றேடுதொடக்கிமுட க்கியிட, வார்த்தார்புனலாரதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே (ரு)

சலம்பூவொடுதூபமறந்தறியேன் றமிழோடிசைபாடன்மறந்தறியே
னலந்தீங்கிலுமுன்னைமறந்தறியே னுன்னுமமென்னுவின்மறந்தறியே
னுலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வா யுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளா
யலந்தேனடியேனதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. (சூ)

உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளுமொருவர்தலைகாவலிலா மையினல்,வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றுல் வலிக்கின்றதுசூலைதவிர் த்தருளீர், பயந்தேயென்வயற்றினகம்படியே பறித்துப்புரட்டியறுத்தீர்த்தி டாநா,னயர்ந்தேனடியேனதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே.()

வலித்தேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன் வஞ்சம்மனமொன்றுமி லாமையினுற், சலித்தாலொருவர்துணையாருமிலைச் சங்கவெண்குழைக்கா துடையெம்பெருமான், கலித்தேயென்வயிற்றினகம்படியே கல்க்கிமலக்கி ட்டுக்கவர்ந்துதின்ன, அலுத்தேனடியேனதிகைக்கெடில வீரட்டானத்து றையம்மானே. (அ)

பொன்போலமிளிர்வதொர்மேனியினீர் புரிபுன்சடையீர்மெலியும்பிறையீர்
துன்பேகவலைபிணியென்றிவற்றை நணுகாமற்றுரந்துகரந்துமிடீ
றொன்போலிகளும்மையினித்தெளியா ரடியார்படுவதிதுவேயாகி
லன்பேயமையுமதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. (கூ)

போர்த்தாயங்கோரானையினீருரிதோல் புறங்காடரங்காநடமாடவல்லா
யார்த்தாரரக்கன்றனைமால்வரைக்கீ ழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தா லென்வேதனையானவிலக்கியிடா
யார்த்தார்புனல்சூழதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் - நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வீரட்டானேசுவரர், தேவியார் - திருவதிகைநாயகி.

இந்தப்பதிகம் - சூலைநோய்தீர ஓதியருளியது.

மன்னும்பதிகம் மதுபாடியபின் வயிறுற்றடுசூ லைமறப்பிணிதான்
அந்நின்றநிலைக் கணகன்றிடலு மடியேனுயிரோ டருடந்ததெனச்
செந்நின்றபரம் பொருளானவர்தந் திருவாரருள்பெற் றசிறப்புடையோர்
முன்னின்றதெருட் சிமருட்சியினுன் முதல்வன்கருணைக் கடன்மூழ்கினரே.

(இ-ள்.) மன்னும்பதிகம்மதுபாடியபின்=நிலைபெற்ற திருப்பதிகத்தைப் பாடிய பின்பு; வயிறுற்றடுசூலைமறப்பிணி=வயிற்றினிடத்துத் தங்கிவருத்திய கொடிய சூலைநோயானது; அந்நின்றநிலைக்கணகன்றிடலும்=அவ்வாறு வேதனைசெய்து நின்றநிலைமையினின்று நீங்கவும்; அடியேனுயிரோடருடந்ததென=அந்நோய் நீக்கம் அடியேனது உயிரையும் திருவருளையும் கொடுத்ததென்று; செந்நின்றபரம்பொருளானவர்தம் = செவ்வனே வெளிப்பட்டுநின்ற உலககாரணரான சிவபிரானது; திருவாரருள்பெற்றசிறப்புடையோர்=மோட்சலட்சுமிக்கிடமான திருவருளைப்பெற்ற மேன்மையையுடைய மருணீக்கியார்; முன்னின்றதெருட்சிமருட்சியினுல்=தன்னிடத்துதித்த தெளிவுமயலினுல்; முதல்வன்கருணைக்கடன்மூழ்கினர்=சிவபிரானது திருவருளாலாகிய பேரானந்தக் கடலில் மூழ்கினுர்.—எ-று. தான்-ஏ-அசை.

அந்நோய்நீக்கம் உடம்பினின்று உயிரை நீங்காமற்செய்தலும் அருண்மார்க்கத்திற் புகுத்தலும் திருவருளால் விளைத்தலின் உயிரோடருடந்ததென்முர். தெளிவுமயலாவது:—உலகப்பொருளிற் பற்றுடையாஞக்கு அப்பற்றுமுறுகிவளருங்கால் தன்வசமாக்கி நிற்றல்போலப் பரஞானப்பற்ருகிய மெய்யுணர்ச்சி முறுகிவளருங்கால் தன்வசமாக்கி நிற்றல். அப்பேரன்பால் இடையருத ஞானனந்தமடைதலில் கருணைக்கடல் மூழ்கினர் என்முர். (எக)

அங்கங்களடங் கவுரோமமெலா மடையப்புளகங் கண்முகிழ்த்தலரப்
பொங்கும்புனல்கண் கள்பொழிந்திழியப் புவிமீதுவிழுந் துபுரண்டயர்வார்
இங்கென்செயலுற் றபிழைப்பதனு லேருதபெருந் திடரேறிடநின் [வார்.
றங்குங்கருணைப் பெருவெள்ளமிடத் தகுமோவெனவின் னனதாமொழி

(இ-ள்.) அங்கங்களடங்கவுரோமமெலாமடைய=திருமேனி முழுதுமுள்ள உரோமங்களெல்லா மொருங்கு; புளகங்கண்முகிழ்த்தலர=புளகாங்கிதமாய் விகசித்துத் தோற்ற; பொங்கும்புனல்கண்கள்பொழிந்திழிய = இடையருது சொரிகின்ற ஆனந்த பாஷ்பமானது கண்களினின்றும் ஒழுக; புவிமீதுவிழுந்துபுரண்டயர்வார்=நிலத்தில் விழுந்து புரண்டு ஆனந்தபரவசமாகின்ற அம்மருணீக்கியார்; இங்கென்செயலுற்றபிழைப்பதனுல்=இவ்விடத்து என்செயலால்வந்த தவறுகாரணமாக; ஏருதபெருந்திடரேறிட=பாய்ச்சுதற்கரிய பெரிய மேட்டின்கண் பாயும்படி; நின்றங்குங்கருணைப் பெருவெள்ளமிட=உம்முடைய நிலைபெற்ற கருணையாகிய பெரிய நீரைப்பாய்ச்ச; தகுமோவெனவின்னனதாமொழிவரர்=தக்கதா என்று இவ்வாருன மொழிகளை எடுத்துக்கூறுவார்.—எ-று.

உரோமம் அச்சமிகுதியானும் ஆர்வமிகுதியானும் முகிழ்க்குமேனும் ஈண்டு ஆர்வமிகுதிபற்றியேகொள்க. ஏருதபெருந்திடர் என்றதனுல் திருவருட்பாத்திரனுதற்குரியனுகாமல் தன்குற்றத்தால் புன்சமயத்துப்புகுந்து இருந்த தன்னைத்தடுத்தாண்ட அருமைப்பாடு பெரிதாயிருந்ததென்பது போந்தவாறுணர்க. அக்கருணை புந்தமுத்தி இரண்டினும் நீங்காதிருத்தலிற் றங்குங் கருணையென்முர். (எஉ)

பொய்வாய்மைபெருக் கியபுன்சமயப் பொறையில்சமணீ சர்புறத் துறையாம், அவ்வாழ்குழியின் கண்விழுந்தெழுமா றறியாதுமயங் கியவம் புரிவேன், மைவாசநறுங் குழன்மாமலையாண் மணவாளன்மலர்க் கழல்வந் தடையும், இவ்வாழ்வுபெறத் தருசூலையினுக் கெதிர்செய்குறையென் கொ லெனத்தொழுதார்.

(இ-ள்.) பொய்வாய்மைபெருக்கிய=பொய்யை மெய்யாக விரித்துக் கூறுகின்ற; புன்சமயப்பொறையில்சமணீசர்=புன்சமயத்தையுடைய பொறுமையில்லாத சமணராகிய நீசர்கள் அனுஷ்டிக்கும்; புறத்துறையாமவ்வாழ்குழியின்கண்விழுந்து=புறச்சமயமாகிய அந்த படுகுழியில் விழுந்து; எழுமாறறியாதுமயங்கியவம்புரிவேன்=அதினின்றும் ஏறும்வழியை அறியாமல் மயக்கமடைந்து அவத்தொழில் செய்கின்ற நான்; மைவாசநறுங்குழன்மாமலையாண்மணவாளன்=மயிர்ச்சாந்து கமழும் நறுவிய கேசபாரத்தையுடைய உமாதேவியார்க்கு நாயகராகிய சிவபிரானது; மலர்க்கழல்வந்தடையும்=தாமரை மலர்போலும் திருவடிகளை வந்துசாரும்; இவ்வாழ்வுபெறத்தருசூலையினுக்கு=இப்பெரிய வாழ்வைப் பெறும்படி கொடுக்கின்ற சூலைநோய்க்கு; எதிர்செய்குறையென்கொலெனத்தொழுதார்=எதிராகச் செய்கின்ற இன்றியமையாத வுபகாரம் யாதென்று அச்சூலைநோயைச்சுட்டி வணங்கினார்.—எ-று.

குறை=இன்றியமையாத உபகாரம். மலர்க்கழல் வந்தடையு மிவ்வாழ்வாகிய திருவருளானந்தத்தை யானடையக் கொடுக்கும் சூலைநோய் அத்திருவருள்வடிவாதலின் அதற்கின்றியமையா உபகாரம் யாதென்று அதனைத் தொழுதனரென்க. (எ௩)

மேவுற்றவிவ்வே லையினீடியசீர் வீரட்டமமர்ந் தபிரானருளப், பாவுற்றலர்செந் தமிழின்சொல்வளம் பதிகத்தொடைபா டியபான்மையினால், நாவுக்கரசென் றுலகேழினுநின் னுமங்கணயப் புறநண்ணுகவென், றியாவர்க்கும்வியப் புறமஞ்சுறைவா னிடையேயொருவாய் மையெழுந்ததுவே.

(இ-ள்.) மேவுற்றவிவ்வேலையில்=இவ்வாறு துதிசெய்த சமயத்து; நீடியசீர்வீரட்டமமர்ந்தபிரானருள=உயர்ந்த புகழினையுடைய திருவீரட்டத்தில் வீற்றிருந்தருளும் சிவபிரான் அருள்செய்த காரணத்தால்; பாவுற்றலர்செந்தமிழின்சொல்வளம்பதிகத்தொடை=செய்யுளுக்கிசைந்து விளங்கிய செந்தமிழ்ச் சொல்வளமமைந்த திருப்பதிகமாலையை; பாடியபான்மையினால்=பாடியருளிய முறைமையினால்; நாவுக்கரசென்றுலகேழினும் = திருநாவுக்கரசென்று ஏழுலகின்கண்ணும்; நின்னுமநயப்புறநண்ணுகவென்று=உன்னுடைய பெயர் சிறந்து விளங்கத்தக்கதென்று; யாவர்க்கும்வியப்புற=அங்குள்ள யாவர்க்கும் வியப்புண்டாகும்படி; மஞ்சுறைவானிடையொருவாய்மையெழுந்தது=மேகங்கள் வாழ்கின்ற வானினிடத்து ஒரு அசரீரிவாக்குதித்தது.—எ-று. கள்-ஏ - அசை. நின்னன்னும நயப்புறவென்றும்பாடம். (எ௪)

இத்தன்மைநிகழ்ந் துழிநாவின்மொழிக் கிறையாகியவன் பருமின்னெடு நாட், சித்தந்திகழ்தீ வினையேனடையுந் திருவோவிதுவென் றுதெருண்டறியா, அத்தன்மையனு யவிராவணனுக் கருளுங்கருணைத் திறமானவதன், மெய்த்தன்மையறிந் துதுதிப்பதுவே மேல்கொண்டுவணங் கினர்மெய்யுறவே.

(இ-ள்.) இத்தன்மைநிகழ்ந்துழி—இவ்வாறு வானின்கண் அசரீரிவாக் குதித்த விடத்து; நாவின்மொழிக்கிறையாகியவன்பரும்—திருநாவுக்கரசென்னும் திருப்பெயர் தாங்கிய அவ்வடியவரும்; இந்நெடுநாட்சித்தந்திகழ்தீவினையேன்—இந்த நெடுநாளாகத் தீவினைவிளங்கிய சித்தத்தை யுடைய யான்; அடையுந்திருவோவிதுவென்று—அடையுந் தரமான செல்வமோ இதுவென்று; தெருண்டறியாவத்தன்மையனுயவிராவணனுக்கு—சிவபிரான் பெருமையைத் தெளிந்துள்ளவாறறியாத அஞ்ஞான முடையனுய இராவணனுக்கும்; அருளுங்கருணைத்திறமான—அருள்செய்கின்ற காருணியத்தின் கூறுபாடான; அதன்மெய்த்தன்மையறிந்து—அத்திருவருளின் உண்மைப்பகுதியை யறிந்து; துதிப்பதுவேமேல்கொண்டு வணங்கினர்மெய்யுற—தம்பதிகத்தில் துதிக்கின்றதையே நியமமாகக்கொண்டு சாஷ்டாங்கமாக நிலமுறவணங்கினர்.—எ-று.

அத்தன்மையனுய விராவணன் என்றதனுல் தம்மை மதியாது செருக்குற்றுத் திருக்கயிலையை எடுத்த இராவணனென்றும், அருளுங்கருணைத்திறம் என்றதனுல் வழுத் துங்கால் அவனிடத்து வெறுப்பின்றி யருளும் பரங்கருணைத் திறமென்றும், துதிப் பதுவே மேல்கொண்டு என்றதனுல் பத்தாவதுபாடலில் அவ்விராவணனைவைத்துப் பாடினுரொன்றுங்கொள்க. (எ௫)

பரசுங்கருணைப் பெரியோனருளப் பறிபுன்றலையோர் நெறிபாழ்பட
வந், தரசிங்கருள்பெற் றுலகுய்ந்ததெனு வடியார்புடைசூ ழதிகைப்பதி
தான், முரசம்படகந் துடிதண்ணுமையாழ் முழவங்கிளைதுந் துபிகண்டை
யுட, னிரைசங்கொலியெங் குமுழங்குதலா னெடுமாகடலென் னநிறைந்
துளதே.

(இ-ள்.) பரசுங்கருணைப்பெரியோனருள—யாவரும் துதிக்கும் கருணையையு டைய சிவபிரானருள்செய்ய; பறிபுன்றலையோர்நெறிபாழ்பட—மயிர்பறித்த புல்லிய தலையையுடைய சமணர்சமயம் அழியும்படி; வந்தரசிங்கருள்பெற்றுலகுய்ந்ததெனு—திருநாவுக்கரசு இவ்விடத்துவந்து திருவருளைப்பெற்றதனுல் உலகம்பிழைத்ததென்று சொல்லி; அடியார்புடைசூழதிகைப்பதி—அடியார்கள் அருகிற்சூழ்ந்த திருவதிகைத்தலமானது; முரசம்படகந்துடிதண்ணுமையாழ்—முரசப்பறையும் படகப்பறையும் துடியும் தண்ணுமைப்பறையும் யாழும்; முழவங்கிளைதுந்துபிகண்டையுடன்—மத்தளமும் புள்ளாங்குழலும் துந்துபியும் கண்டாமணியோடு; நிரைசங்கொலியெங்குமுழங்குதலால்—வரிசையான சங்குகளின் ஒலியும் எவ்விடத்தும் ஒலித்தலால்; நெடுமாகடலென்னநிறைந்துளது—நீண்ட பெரிதாகிய கடலொலிபோல அவ்வொலிகளால் நிறைந்தது.—எ-று. தான் - ஏ - அசை. (எசு)

மையற்றுறையே றிமகிழ்ந்தலர்சீர் வாகீசர்மனத் தொடுவாய்மையுடன்
மெய்யுற்றதிருப் பணிசெய்பவராய் விரவுஞ்சிவசின் னம்விளங்கிடவே
யெய்துற்றதியா னமறுவுணர்வு மீறின்றியெழுந் திருவாசகமுங்
கையிற்றிகழும் முழைவாரமுடன் கைத்தொண்டுகலந் துகசிந்தனரோ.

(இ-ள்.) மையற்றுறையேறிமகிழ்ந்தலர்சீர்வாகீசர்—மயக்கமாகிய சமணமென்னும் படுகுழியின் கரையையேறி அதனுல் மகிழ்ச்சியடைந்து பரம்பிய புகழையுடைய திருநாவுக்கரசர்; மனத்தொடுவாய்மையுடன்மெய்யுற்றதிருப்பணிசெய்பவராய் — மனத்தோடு சேர்ந்த உண்மையினுல் மெய்ம்மையான திருத்தொண்டுசெய்யுங் கருத்துடையராய்; விரவுஞ்சிவசின்னம்விளங்கிட—திருமேனியில் நெருங்கிய விபூதி உருத்திராக்கங்

கள் பிரகாசிக்க; எய்துற்றதியானமருவுணர்வும்—திருவருளால் தம் உள்ளத்துதித்த திருவடித்தியானம் நீங்காத உண்ர்ச்சியும்; ஈறின்றியெழுந்திருவாசகமும் — அவ்வுணர்ச்சியோடு வரம்பின்றி உதிக்கும் திருப்பதிகமும்; கையிற்றிகழும்முழைவாரமுடன்—அவ்வுணர்ச்சியோடு திருத்தொண்டுசெய்யு நிமித்தம் திருக்கரத்திலேந்திய உழைவாரத்தோடும்; கைத்தொண்டுகலந்துகசிந்தனர்—காயிகமாகிய திருத்தொண்டையுஞ்செய்து மனமுருகினார்.—எ-று. ஏ - இரண்டும் அசை. (எஎ)

மெய்ம்மைப்பணிசெய் தவிருப்பதனால் விண்ணோர்தனிநா யகனார்கழலிற், றம்மிச்சைநிரம்ப வரம்பெறுமத் தன்மைப்பதிமே வியதாபதியார், பொய்ம்மைச்சமயப் பிணிவிட்டவர்முன் போதும்பிணிவிட் டருளிப்பொருளா, எம்மைப்பணிகொள் கருணைத்திறமிங் கியார்பெற்றனரென் னவிறைஞ்சினரே.

(இ-ள்.) தம்மிச்சைநிரம்பவரம்பெறும்—உண்மையான திருத்தொண்டு செய்ததனாற் சிவபிரானுக்குதித்த கருணையினால்; மெய்ம்மைப்பணிசெய்தவிருப்பதனால்—தங்கருத்து நிரம்பும்படி வரத்தைப் பெறுதற்கேதுவான; அத்தன்மைப்பதிமேவியதாபதியார்—அத்திருவதிகைப்பதியில் வாசஞ்செய்துகொண்டிருக்கும் திலகவதியார்; பொய்ம்மைச்சமயப்பிணிவிட்டவர்—பொய்ச்சமயமாகிய பிணியை நீங்கித் தன் தம்பியார்; முன்போதும்பிணிவிட்டருளி—முன்னே ஈண்டு வருதற்கேதுவான சூலைநோயையனுப்பியருளி; எம்மைப்பொருளாப்பணிகொள்கருணைத்திறம்—எம்மையும் ஒருபொருளாகப் பணிகொண்ட கருணையின் பகுதியை; இங்கியார்பெற்றனரென்னவிண்ணோர்தனிநாயகனார்கழலிலிறைஞ்சினர்—இவ்விடத்து யார்பெற்றார்களென்று தேவர்களுக்கு ஒப்பற்ற முதல்வராகிய சிவபிரான் திருவடிகளில் வணங்கினர்.—எ-று. ஏ-அசை.

மெய்ம்மைப்பணி—காயவாக்கு மனங்களொருப்பட்டபணி. விருப்பதனா லென்றதற்குத் திலகவதியார் பத்திமையாலென்றுரைப்பினுமமையும், அவ்வாறுரைக்குங்கால் விருப்பதினா லிறைஞ்சினரெனக் கூட்டுக. (எஅ)

வேறு.

இன்ன தன்மையி லிவர்சிவ நெறியினை யெய்தி
மன்னு பேரருள் பெற்றிடர் நீங்கிய வண்ணம்
பன்னு தொன்மையிற் பாடலி புத்திர நகரிற்
புன்மை யேபுரி யமணர்தாங் கேட்டது பொறாராய்.

(இ-ள்.) இன்னதன்மையிலிவர் சிவநெறியினையெய்தி—சூலைநோய் காரணமாய் ஆண்டவரசு சைவநெறியையடைந்து; மன்னுபேரருள்பெற்றிடர் நீங்கியவண்ணம்—நிலைபெற்ற திருவருளைப்பெற்றுப் பிறவித்துன்பத்தை நீங்கிய முறைமையை; பன்னுதொன்மையிற்பாடலிபுத்திரநகரில்—எடுத்துக்கூறும் பழமையினையுடைய பாடலிபுத்திரமென்னும் நகரத்தில்; புன்மையேபுரியமணர்கேட்டதுபொறாராய்—புன்றொழிலையே விரதமாகக்கொண்டொழுகும்சமணர்கள் கேள்வியுற்றுஅதைப்பொறாதவர்களாய்.-எ-று. தாம்-அசை. (எகூ)

தருமசே னர்க்கு வந்தவத் தடுப்பருஞ் சூலை
யொருவ ராலுமிங் கொழிந்திடா மையிலவ ருயப்போய்ப்
பெருகு சைவராய்ப் பெயர்ந்துதம் பிணியொழிந் துய்ந்தார்
மருவு நம்பெருஞ் சமயம்வீழ்ந் ததுவென மருள்வார்.

(இ-ள்.) தருமசேனர்க்குவந்தவத் தடுப்பருஞ்சூலை—நம் சமயத்திருந்த தருமசேன ரென்னுங் குரவருக்குவந்த எவ்வாற்றாலும் தடுத்தற்கரிய கொடிய அச்சூலைநோயானது; ஒருவராலுமிங்கொழிந்திடாமையில்—இவ்விடத்துள்ள ஒருவராலும் நீங்காத படியால்; அவருயப்போய்ப் பெருகுசைவராய்ப்பெயர்ந்து—அவருய்யும்பொருட்டுச்சென்று முன் போல மிக்க சைவராகி மீண்டு; தம்பிணியொழிந்துய்ந்தார்—தம்முடைய சூலைநோய் நீங்கிப் பிழைத்தார் அதனல்; மருவுநம்பெருஞ்சமயம் வீழ்ந்ததுவெனமருள்வார்—நிலை யாயுள்ள நமது பெரிய மதமானது அழிந்ததென்று மயங்குவாராயினர்.—எ-று.

வீழ்ந்தது எனத்துணிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்டது. (அ0)

மலையும் பல்சம யங்களும் வென்றுமற் றவரால்
நிலையும் பெற்றவிந் நெறியினி யழிந்ததென் றழுங்கிக்
கொலையும் பொய்மையு மிலமென்று கொடுந்தொழில் புரிவோர்
தலையும் பீலியுந் தாழவந் தொருசிறை சார்ந்தார்.

(இ-ள்.) மலையும்பல்சமயங்களும்வென்று—ஒன்றோடொன்று மாறுபட்ட பல் சமயங்களையும் வாதித்துவென்று; மற்றவரானிலையும்பெற்றவிந்நெறி—அச்சமயிகளால் அழியாமையையும் பெற்ற இந்தச்சமயமானது; இனியழிந்ததென்றழுங்கி—இனியழிந்து போயிற்றென்று வருந்தி; கொலையும்பொய்மையு மிலமென்று—கொலைத்தொழிலும் பொய்சொல்லுதலும் யாம் செய்யோமென்று:கொடுந்தொழில்புரிவோர்—கொடுந்தொழி லையே செய்யும் சமணர்கள்; தலையும்பீலியுந்தாழவந்தொருசிறை சார்ந்தார்—தலையும் பீலி யும் தாழும்படி வந்து ஓரிடத்துக் கூடினர்கள்.—எ-று.

தம்மதம் தாழ்வடைந்த நாணத்தால் தலையும் அவ்விசனத்தாற் கைசோர்தலிற் பீலி க்கற்றையும் தாழவந்தனவெனக்கொள்க. (அக)

இவ்வ கைப்பல வமணர்க டுயருட னீண்டி
மெய்வ கைத்திற மறிந்திடில் வேந்தனும் வெகுண்டு
சைவ ஞகிநம் விருத்தியுந் தவிர்க்குமற் றினிநாஞ்
செய்வ தென்னென வஞ்சனை தெரிந்துசித் திரிப்பார்.

(இ-ள்.) இவ்வகைப்பல வமணர்கடுயருடனீண்டி—இவ்வாறாகப் பலசமணர்கள் துயரத்தோடுகூடி; மெய்வகைத்திற மறிந்திடில்—உண்மைப்பகுதியின் கூறுபாட்டை அறிந்தால்; வேந்தனும்வெகுண்டு—பல்லவனும் கோபங்கொண்டு; சைவனுகிநம்விருத் தியுந்தவிர்க்கும்—சைவனுகி நம்முடைய ஜீவனத்தையும் நிறுத்துவான்; மற்றினிநாஞ்செ ய்வதென்னென—இதற்கு வேறுநாம் இனிச்செய்யலாவது யாதென்று; வஞ்சனைதெரி ந்து சித்திரிப்பார்—இதற்கிவ்வாறாகச் சொல்லவேண்டுமென்றெண்ணிக் கற்பிப்பாராயி னர்.—எ-று.

சண்டுச்சித்திரித்தல் பொய்யை மெய்போலக்கற்பித்தல். (அஉ)

தவ்வை சைவத்து நிற்றலிற் றருமசே னருந்தாம்
பொய்வ குத்ததோர் சூலைதீர்ந் திலதெனப் போயிங்
கெவ்வ மாகவந் தெய்திஞ் சமயலங் கனமுந்
தெய்வ நிந்தையுஞ் செய்தன ரெனச்சொலத் தெளிந்தார்.

(இ-ள்.) இங்கெவ்வமாகவந்தெய்தி—இவ்விடத்துக் கபடமாக வந்திருந்து (எல் லாநூல்களையுங் கற்றுக்கொண்டு); தவ்வைசைவத்துநிற்றலில்—தன் தமக்கையார் சைவ சமயத்தில் நிற்கின்றபடியால்; தருமசேனரும்—தருமசேனரும்; தாம்பொய்வகுத்ததோர்

சூலை=தாம் பொய்யாக வகுத்த ஓர் சூலைநோயானது; தீர்ந்திலதெனப்போய்=எம்மிடத்துள்ள நோய் தீர்க்கும் வித்தைகளால் நீங்கவில்லை யென்றுசொல்லி அங்குச்சென்று; நஞ்சமயலங்கனமும்=நம்முடைய சமயலங்கனத்தையும்; தெய்வநிந்தையுஞ் செய்தனரொன=நந்தெய்வ நிந்தையையும் செய்தனரொன்று; சொலத்தெளிந்தார்=அரசனுடன் சொல்லுதற்கு நிச்சயித்தார்கள்.—எ-று.

லங்கனம்=தாண்டுதல் அதாவது விடுதல், தருமசேனருமென்னும் உம்மை தவ்வைசைவத்துநிற்றலில் தருமசேனருமென இறந்ததுதழீஇயது. அரசன் அச்சூலை இச்சமயத்தில் நீங்காதிருந்த தென்றையுருமற் பொய்வகுத்ததோர் சூலை என்றும், அதனுல் அது நமக்குக் கண்கூடான மந்திரசாதனங்களால் தீரவில்லையென்னுங் கருத்தால் தீர்ந்திலதெனப் போயென்றும், நோய்நீங்கிய காரணத்தால் அத்திருவதிகை சென்றனரேனும் சமயாசாரத்தை ஒழியாதிருத்தல்வேண்டும்; அவ்வாறின்றி ஒழிந்தனரொன்னுங் கருத்தால் சமயலங்கனமென்றும், சமயலங்கனம்செயினும் தெய்வநிந்தை செய்யாதிருத்தல் நலம் அவ்வாறின்றித் தெய்வநிந்தையும் பாசுரங்களாற் செய்தனரொனத் தெய்வநிந்தை என்றும் கூறினரொன்க. (அரு)

சொன்ன வண்ணமே செய்வது துணிந்ததுன் மதியோர்
முன்ன நாஞ்சென்று முறைப்படு வோமென முயன்றே
யின்ன தன்மையி லிருட்குழாஞ் செல்வது போல
மன்ன னாகிய பல்லவ னகரில்வந் தணைந்தார்.

(இ-ள்.) சொன்னவண்ணமேசெய்வதுதுணிந்த=சொல்லிய பிரகாரமே செய்யும்படி நிச்சயித்த; துன்மதியோர்=நன்மதியில்லாத சமணர்கள்; முன்னநாஞ்சென்று முறைப்படுவோமெனமுயன்று=அரசன் இதைக் கேள்விப்பட முன்னம் நாம் அவனிடத்திற்சென்று முறையிடுவோமென்று முயற்சித்து; இன்னதன்மையிலிருட்குழாஞ்செல்வதுபோல=இவ்வாறான முறைமையினுல் இருட்கூட்டமானது சஞ்சரிப்பதுபோல; மன்னனாகியபல்லவனகரில்வந்தணைந்தார்=சோழவம்சத்தரசனாகிய பல்லவராசனுடைய நகரத்தில்வந்து சேர்ந்தார்கள்.—எ-று. ஏ-அசை.

பல்லவன்=நடுநாட்டிலிருக்கும் சோழவம்சத்தரசன். (அச)

உடை யொழிந்தொரு பேச்சிடை யின்றிநின் றுண்போர்
கடை யணைந்தவன் வாயில்கா வலருக்கு நாங்கள்
அடை யவந்தமை யரசனுக் கறிவியு மென்ன
இடை யறிந்துபுக் கவருந்த மிறைவனுக் கிசைத்தார்.

(இ-ள்.) உடையொழிந்தொருபேச்சிடையின்றிநின்றுண்போர் = ஆடையுடாமல் உண்ணுங்கால் ஒருவரையுமாடாமல் நின்றுகொண்டுண்ணும் அமணர்கள்; கடையணைந்து=அரண்மனைவாசலில்வந்து; அவன்வாயில்காவலருக்கு=அவ்வரசனது வாயிலாளருக்கு; நாங்களடையவந்தமை = நாமெல்லாம் ஒருங்குசேர்ந்துவந்த செய்தியை; அரசனுக்கறிவியுமென்ன=எம்மரசனுக்குத் தெரிவியுங்களென்று சொல்ல; அவருமிடையறிந்துபுக்கு=அவ்வாயிலாளரும் சமயம்பார்த்து அரண்மனைக்குள்ளே புகுந்து; தமிறைவனுக்கிசைத்தார்=தம் அரசனுக்குச் சொன்னார்கள்.—எ-று.

உண்ணும்போ துரையாடாமை பழுதாயினவாறென்னெனின்; நீர்வேட்டன் முதலிய இன்றியமையாதவற்றிற்கும் உரையாடாது மனக்குறையோடுண்டலிற் பழுதாயிற்றென்க. (அரு)

வேறு.

அடிகண்மா ரெல்லாரு மாகுலமாய் மிகவழிந்து
கொடிநுடங்கு திருவாயிற் புறத்தணைந்தா ரெனக்கூற
வடிநெடுவேன் மன்னவனு மற்றவர்சார் பாதலினற்
கடிதணைவா னவர்க்குற்ற தென்கொலெனக் கவன்றுரைத்தான்.

(இ-ள்.) அடிகண்மா ரெல்லாருமாகுலமாய் மிகவழிந்து=சாதுசரணங்களாகிய முனிவர்களெல்லாரும் வியாகுலத்தால் மிகவும் மன்ம்வருந்தி; கொடிநுடங்குதிருவாயிற்புறத்தணைந்தாரெனக்கூற=கொடியாடை அசைகின்ற அரண்மனைவாயிலின் புறத்தே வந்தார்களென்றுசொல்ல; வடிநெடுவேன் மன்னவனுமவர் சார்பாதலினல்=கூர்மையான நீண்ட வேலையேந்திய அப்பல்லவனும் அச்சமணர்களுடைய மத உடன்பாடுள்ளவனதலினல்; கடிதணைவானவர்க்குற்ற தென்கொலெனக்கவன் றுரைத்தான்=அவ்வாறு விரைந்துவருதற்கு அவர்க்குற்ற துயரம் யாதென்று மனம் வருந்தி அழைத்துவரச் சொன்னர்.—எ-று. மற்று-அசை. (அசு)

கடைகாவ லுடையார்கள் புகுதவிடக் காவலன்பா
னடையாடுந் தொழிலுடையார் நண்ணித்தா மெண்ணியவா
றுடையாரா கியதரும சேனர்பிணி யுற்றாராய்ச்
சடையானுக் காளாய்நின் சமயமழித் தாரென்றார்.

(இ-ள்.) கடைகாவலுடையார்கள் புகுதவிட=வாயிலாளர்கள் அரண்மனையினுள் புகுவிக்க; காவலன்பானடையாடுந் தொழிலுடையார்நண்ணி=பல்லவனிடத்து உயிரோடு சஞ்சரிக்குந் தொழிலொன்றையேயுடைய சமணர்கள்சென்று; தாமெண்ணியவாறு=தாம் முன்சொல்ல நினைந்தவாறே; உடையாராகியதருமசேனர்=தமக்கு முதல்வராகிய தருமசேனர்; பிணியுற்றாராய்=சூலைநோயடைந்தவர்போற்காட்டி; சடையானுக்காளாய்=சிவனுக்கு அடிமையாய்; நின்சமயமழித்தாரென்றார்=உன்சமயத்தை அழித்துவிட்டார் என்று கூறினர்.—எ-று.

உறுதிபயக்கும் அறம்புரிந்து அதனற்பயனடைவதே மக்களுயிர்க்கு ஆக்கப்பாடு அவ்வாறன்றி அறம்போற்காட்டியொழுகி அதன்பயனடையாமையின் நடையாடுந்தொழிலுடையாரென்றார். (அஎ)

விரையலங்கற் பல்லவனு மதுகேட்டு வெகுண்டெழுந்து
புரையுடைய மனத்தினராய்ப் போவதற்குப் பொய்ப்பிணிகொண்
டுரைசிறந்த சமயத்தை யழித்தொழியப் பெறுவதே
கரையிறவத் தீரதனுக் கென்செய்வ தெனக்கனன்றான்.

(இ-ள்.) விரையலங்கற் பல்லவனுமதுகேட்டு=வாசனைகமழும் ஆத்திமாலையணிந்த பல்லவனும் அச்சமணர்கள் சொல்லைக்கேட்டு; வெகுண்டெழுந்து=கோபங்கொண்டெழுந்து; புரையுடையமனத்தினராய்=குற்றந்தங்கிய மனமுடையவராய்; போவதற்குப்பொய்ப்பிணிகொண்டு=இம்மதத்தை விட்டுப்போகப் பொய்யாகியதோர் நோயைக்கற்பித்துக்கொண்டு; உரைசிறந்தசமயத்தையழித்தொழியப்பெறுவதே=புகழாற்சிறந்த நம் சமயத்தை யழித்து நீங்குவது தகுதியா தகுதியன்று; கரையிறவத்தீர்=அளவுபடாத தவத்தையுடைய முனிவர்களே; அதனுக்கென்செய்வதெனக்கனன்றான்=அதற்குச்செய்யத்தக்கது யாதென்று கோபித்தான்.—எ-று. (அஅ)

தலைநெறியா கியசமயந் தன்னையழித் துன்னுடைய
நிலைநின்ற தொல்வரம்பி னெறியழித்த பொறியிலியை
யலைபுரிவா யெனப்பாவி வாயாலஞ் சாதுரைத்தார்
கொலைபுரியா நிலைகொண்டு பொய்யொழுகு மமண்குண்டர்.

(இ-ள்.) தலைநெறியாகியசமயந்தன்னையழித்து—மேலாம் நெறியாகிய ஆருகதமதத்தைக்கெடுத்து; உன்னுடையநிலைநின்றதொல்வரம்பின்—நீ அனுஷ்டித்துவரும் நிலைமையில்நின்ற பழைய ஒழுக்கத்தின்; நெறியழித்தபொறியிலியை — நெறியைக்கெடுத்த அறிவில்லாதவனை; அலைபுரிவாயெனவாயால்அஞ்சாதுரைத்தார் — வருத்துவாயென்று அஞ்சாது வாயாற் சொன்னார்கள்; கொலைபுரியாநிலைகொண்டுபொய்யொழுகும்பாவியமண்குண்டர்—கொல்லா விரதமொன்றையே மேலான அறமெனக்கொண்டு அவ்வறத்திலும் பற்றிலராய்ப் பொய்யாக ஒழுகுகின்ற பாவிகளாகிய சமண்குண்டர்கள்.—

பல்லவனுக்கு வெகுளிமூட்டுங் கருத்தினராய் உன்வரம்பின் நெறியழித்த பொறியிலியை என்றார். வரம்பினெறி யழித்தல்—அரசன் அம்மதத்தனாக அவனாணையை இகந்துசேறல். அவர்வாய் தீயமொழிபயின்றன என்பது விளக்குதற்கு வாயென வேண்டா கூறினர். ஓர்சிறிதும் குற்றமில்லாத தூயோரை வருத்தச் சொன்ன அவர் பெரும்பிழைகருதிப் பொய்யொழுகும் பாவியமண்குண்டர் என்றார். (அகூ)

அருள்கொண்ட வுணர்வின்றி நெறிகோடி யறிவென்று
மருள்கொண்ட மன்னவனு மந்திரிக டமைநோக்கித்
தெருள்கொண்டோ ரிவர்சொன்ன தீயோனைச் செறுவதற்குப்
பொருள்கொண்டு விடாதென்பாற் கொடுவாரு மெனப்புகன்றான்.

(இ-ள்.) அருள்கொண்டவுணர்வின்றிநெறிகோடி—உயிரிடத்துவைத்த இரக்கத்தைத் தமக்குறுதியாகக்கொண்ட உணர்வில்லாமல் முறைதவறி; மருள்அறிவென்றுகொண்டமன்னவனும்—மயக்க உணர்வை அறிவென்றுகொண்ட பல்லவனும்; மந்திரிகடமைநோக்கி—மந்திரிமார்களைப்பார்த்து;தெருள்கொண்டோரிவர்சொன்ன—தெளிவுடையவர்களாகிய இம்முனிவர்கள் குற்றஞ்சாட்டிச் சொன்ன; தீயோனைச்செறுவதற்கு—அக்கொடிய தருமசேனனைத் தண்டிப்பதற்கு; பொருள்கொண்டுவிடாது—அவனிடத்துக் கைப்பொருள் வாங்கிக்கொண்டு விட்டுவிடாமல்; என்பாற்கொடுவாருமெனப்புகன்றான்—என்னிடத்துக் கொண்டுவாருங்கள் என்றுசொன்னான்.—எ-று.

பொருள்கொண்டு விடாதென்பதற்கு அவனை ஒருபொருளாகக்கருதி விட்டுவிடாமல் என்றுரைத்தலு மொன்று. பொருளாகக் கருதிவிடுதல்—மேலாம் ஒரு அறநெறியில் நிற்பாரைச்செறுதல் அறமன்று எனக்கருதிவிடல். நெறிகோடல்—பகைநொதுமல் நட்பு என்னும் மூவரிடத்தும் ஒப்பநாடி அறங்கூறாது வழுவுதல். மருள்—விபரீதம். மருளை அறிவென்று கொள்ளுதல்—பொய்யை மெய்யாகக் கொள்ளுதல். (௯0)

அரசனது பணிதலைநின் றமைச்சர்களு மந்நிலையே
முரசதிருந் தானையொடு முன்சென்று முகில்சூழ்ந்து
விரைசெறியுஞ் சோலைசூழ் திருவதிகை தனைமேவிப்
பரசமயப் பற்றறுத்த பான்மையினார் பாற்சென்றார்.

(இ-ள்.) அமைச்சர்களுமந்நிலையே— மந்திரிமார்களும் அப்பொழுதே; அரசனதுபணிதலைநின்று—அரசன் ஏவலைச் சிரமேற்கொண்டு; முரசதிருந்தானையொடு முன்

சென்று=முரசப்பறையை ஒலிக்கின்ற சேனைகளோடு முற்பட்டுச்சென்று; முகில்சூழ்ந்துவிரைசெறியுஞ்சோலைசூழ்=மேகங்களாற் சூழப்பட்டு வாசனைகமழும் சோலைகள் சூழ்ந்த; திருவதிகைதனைமேவி=திருவதிகை என்னும் திருப்பதியை அடைந்து; பரசமயப்பற்றறுத்த=புறச்சமயமாகிய சைனமதத்தின்பற்றை முற்றத்துறந்த; பான்மையினார்பாற்சென்றார்=திருநாவுக்கரசரிடத்துச் சென்றார்கள்.—எ-று. (௧௧)

சென்றணைந்த வமைச்சருடன் சேனைவீ ருருஞ்சூழ்ந்து
மின்றயங்கு புரிவேணி வேதியனு ரடியவரை
யின்றுநுமை யரசனழைத் தெமைவிடுத்தான் போதுமென
நின்றவரை நேர்நோக்கி நிறைதவத்தோ ருரைசெய்தார்.

(இ-ள்.) சென்றணைந்தவமைச்சருடன்சேனைவீரரும்=அத்திருவதிகையைச் சேர்ந்த மந்திரிமார்களோடு சேனுதிபர்களும்; மின்றயங்குபுரிவேணிவேதியனுரடியவரைச் சூழ்ந்து=மின்போலவிளங்கும் முறுக்கிய சடைமுடியையுடைய சிவபிரான் அடியவராகிய வாகீசமுனிவரை ஒருங்குசேர்ந்து; இன்றுநுமையரசனழைத்து=இன்றைக்கு உம்மை நம்மரசன் அழைத்துவரும்படி; எமைவிடுத்தான்போதுமென=எம்மை அனுப்பினுன் வருவீராக என்றுகூற; நின்றவரைநேர்நோக்கிநிறைதவத்தோருரைசெய்தார்=நிரம்பிய தவத்தினையுடைய ஆண்டவரசு தன்னருகுநின்ற மந்திரிமுதலாயினரை நேரேபார்த்து அருளிச் செய்தார்.—எ-று. (௧௨)

நாமார்க்குங் குடியல்லோ மென்றெடுத்து நான்மறையின்
கோமானை நதியினுடன் குளிர்மதிவாழ் சடையானைத்
தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத்தாண் டகம்பாடி.
யாமாறு நீரழைக்கு மடைவிலமென் றருள்செய்தார்.

(இ-ள்.) நான்மறையின்கோமானை=நான்குவேதங்களின் உட்பொருளாய முதல்வரை; நதியினுடன்குளிர்மதிவாழ்சடையானை=கங்கைநீருடன் தண்ணிய இளம்பிறைவாழும் சடைமுடியையுடையவரை; நாமார்க்குங்குடியல்லோமென்றெடுத்து=நாமார்க்குங் குடியல்லோமென்று முதலெடுத்து; தேமாலைச்செந்தமிழின்=இனிய செந்தமிழ்ப் பாமாலையாகிய; செழுந்திருத்தாண்டகம்பாடி=இன்பத்தை விளைக்கும் திருத்தாண்டகத்தாற்பாடி; நீரழைக்குமடைவு=நீவிர் அழைக்குமியல்பு; ஆமாறிலமென்றருள்செய்தார்=பொருத்தமாக இல்லோமென் றருளிச்செய்தார்.—எ-று.

ஆமாறில மென்றதனுல் நாம் அரசன்குடியாகில் அவனேவலால் நீரழைத்தல் கடன். யாவர்க்கும் மேலாம் இயல்புடைய சிவபிரான் அடிமையாதலில் நீரழைத்தல் முறைமையன் றென்றுணர்க. (௧௫)

மறுமாற்றத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோ நரகத்திலிடர்ப்படோநடலையில்லோ, மேமாப்போம்பிணியறியோம்பணிவோமல்லோ மின்பமேயெந்நாளுந்துன்பமில்லை, தாமார்க்குங்குடியல்லாத்தன்மையான சங்கரனற்சங்கவெண்குழையோர்காதிற், கோமாற்கேநாமென்றுமீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சேவடியிணையேகுறுகினோமே. (௧)

அகலிடமேயிடமதாமூர்கடோறு மட்டுண்பாரிட்டுண்பார்விலக்காரையம், புகலிடமாமம்பலங்கள்பூமிதேவி யுடன்கிடந்தாற்புரட்டாள்பொய்

யன்றுமெய்யே, யிகலுடையவிடையுடையானேன்றுகொண்டா னினியே துங்குறைவிலோமிடர்கடீர்ந்தோந், துகிலுடுத்துப்பொன்பூண்டுதிரிவார் சொல்லுஞ் சொற்கேட்கக்கடவோமோதுரிசற்றேமே. (௨)

வாராண்டகொங்கையர்சேர்மனையிற்சேரோ மாதேவாமாதேவாவென் றுவாழ்த்தி, நீராண்டபுரோதாயமாடப்பெற்றே நீறணியுங்கோலமேநிகழ ப்பெற்றேங், காராண்டமழைபோலக்கண்ணீர்சோரக் கன்மனமேநன்மன மாக்கவாயப்பெற்றேம்,பாராண்டுபகடேறித்திரிவார்சொல்லும் பணிகேட் கக்கடவோமோபற்றற்றேமே. (௩)

உறவாவாருருத்திரபல்கணத்தினேர்க ளுடுப்பனகோவணத்தொடுகீ ளுளவாமன்றே, செறுவாருஞ்செறமாட்டார்தீமைதானு நன்மையாச்சிறப் பதேபிறப்பிற்செல்லோ, நறவார்பொன்னிதழிநறுந்தாரோன்சீரார் நமச்சி வாயஞ்சொல்லவல்லோநாவாற், சுறவாருங்கொடியானைப்பொடியாக்கண்ட சுடர்நயனச்சோதியையேதொடர்வுற்றேமே. (௪)

என்றுநாமியாவர்க்குமிடைவோமல்லோ மிருநிலத்திலெமக்கெதிரா வாருமில்லை,சென்றுநாஞ்சிறுதெய்வஞ்சேர்வோமல்லோஞ் சிவபெருமான் றிருவடியேசேரப்பெற்றே, மொன்றினாற்குறையுடையோமல்லோமன்றே யுறுபிணியார்செறலொழிந்திட்டோடிப்போனார், பொன்றினார்தலைமாலைய ணிந்தசென்னிப் புண்ணியனைநண்ணியபுண்ணியத்துளோமே. (௫)

மூவுருவின்முதலுருவாயிருநான்கான மூர்த்தியேயென்றுமுப்பத்து மூவர், தேவர்களுமிக்கோருஞ்சிறந்துவாழ்த்துஞ் செம்பவளத்திருமேனிச் சிவனேயென்னு, நாவுடையார்நமையாளவுடையாரன்றே நாவலந்தீவகத்தி னுக்குநாதரான, காவலரேயேவிவிடுத்தாரேனுங் கடவமலோங்கடுமையொ டுகளவற்றேமே. (௬)

நிற்பனவுநடப்பனவுநிலனுநீரு நெருப்பினொடுகாற்றுகிநெடுவானாகி, யற்பமொடுபெருமையுமாயருமையாகி யன்புடையார்க்கெளிமையதாயளக் கலாகாத், தற்பரமாய்ச்சதாசிவமாய்த்தானுமியானு மாகிநின்றதன்மையனை நன்மையோடும், பொற்புடையபேசக்கடவோம்பேயர் பேசுவனபேசுது மோபிழையற்றேமே. (௭)

ஈசனையெவ்வுலகினுக்குமிறைவன்றன்னை யிமையவர்தம்பெருமானை யெரியாய்மிக்க,தேசனைச்செம்மேனிவெண்ணீற்றானைச் சிலம்பரையன்பொ ற்பாவைநலஞ்செய்கின்ற, நேசனைநித்தலுநினையப்பெற்றே நின்றுண்பா ரெம்மைநினையச்சொன்ன, வாசகமெல்லாமறந்தோமன்றே வந்தீரார்மன்ன வனாவான்றானோ. (௮)

சடையுடையான்சங்கக்குழையோர்காதன் சாம்பலும்பாம்புமணிந்த மேனி, விடையுடையான்வேங்கையதண்மேலாடை வெள்ளிபோற்புள்ளியு

தருமசேனர் மீண்டும் சைவத்திற் பிரவேசித்ததைச் சமணர்களுணர்ந்து மகாராசனறிந்தாலவனும் சைவனுகி நமதுசமயமுமழிந்துவிடுமென்று முன்னரோ வேறுவகையாகத் தெரிவிக்க ஆலோசித்தனர். சமணர்கள் ராஜனிடஞ்சென்று தருமசேனன் தன் தங்கைபால் சேரவிரும்பி பொய்யாகத் தனக்குச் சூலையுண்டானதாகவும், அது நமது மந்திரத்தால் தீரவில்லையென்றும் நம் சமயத்தை மிக அலட்சித்து தங்கைபால் சேர்ந்திருக்கின்றனனென்று கூற, அரசன் அவனை யாதுசெய்யலாமென்று வினவ நீற்றறையில் வைப்பதே நலமென, அவ்வாறே கட்டளையிட, சமணர்கள் திருவதிகையில் திருநாவுக்கரசரை வணங்கி பல்லவராஜன் தங்களை அழைத்துவரச் சொன்னதாகச்சொல்ல, நாமங்கு வரோமென்று கூறினர். இனி யாதுசெய்வோமென்று திகைத்து நாயனுர் பாதத்தில் வீழ்ந்து குறையிரக்கவேண்ட நாயனுர் க்ஷேமங்கூறிச் சமணர்களுடன் சென்றனர்.

ழைமான்றோல்சார்ந்த, வுடையுடையானம்மையுடையான்கண்டீ ரும்மோடுமெற்றுமுளராய்நின்ற, படையுடையான்பணிகேட்கும்பணியோமல்லோம் பாசமறவீசும்படியோநாமே. (௯)

நாவாரநம்பனையேபாடப்பெற்றோ நாணற்றூர்நள்ளாமேவிள்ளப்பெற்றோ, மாவாவென்றெமையாள்வானமரர்நாத னயனொடுமாற்கறிவரியவனலாய்நீண்ட,தேவாதிதேவன்சிவனென்சிந்தை சேர்ந்திருந்தான்றென்றிசைக்கோன்றனேவந்து, கோவாடிக்குற்றேவல்செய்கென்றாலுங் குணமாகக்கொள்ளோமெண்குணத்துளோமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆண்டவர சருள்செய்யக் கேட்டவரு மடிவணங்கி
வேண்டியவர்க் கொண்டேக விடையுகைத்தார் திருத்தொண்டர்
ஈண்டுவரும் வினைகளுக்கெம் பிரானுளனென் றிசைந்திருந்தார்
மூண்டசினப் போர்மன்னன் முன்னணைந்தங் கறிவித்தார்.

(இ-ள்) ஆண்டவரசருள்செய்யக்கேட்டவரும்=ஆளுடைய அரசு இவ்வாறருளிச்செய்ய அதைக்கேட்ட மந்திரிமுதலானவர்களும்; அடிவணங்கிவேண்டியவர்க்கொண்டேக=அவர் திருவடிகளில் வணங்கிக் குறையிரந்து அவரை அழைத்துக்கொண்டுபோக; விடையுகைத்தார்திருத்தொண்டர்=சிவபிரான் அடியராகிய அவ்வாகீசமுனிவரும்; ஈண்டுவரும்வினைகளுக்கு=இங்கே இவ்வரசனால்வரும் இடுக்கணைக்களைதற்கு; எம்பிரானுளனென்றிசைந்திருந்தார்=தடுத்தாட்கொண்ட எம்பிரானருளொன்று மனமொருப்பட்டு அங்கிருந்தருளினார்; மூண்டசினப்போர்மன்னன்முன்னணைந்தங்கறிவித்தார்=அம்மந்திரி முதலானவர்கள் சொலித்தெழும் கோபத்தீயினையுடைய போர்த்தொழிலில் வல்லவனாகிய பல்லவனிடத்திற்சென்று தெரிவித்தார்கள்.—எ-று.

இடுக்கணீக்குதற்கு முதல்வனுளனாகப் பிறரானிய இடுக்கண் யாதுசெய்யுமென்று வாட்டமின்றியிருத்தலில் இசைந்திருந்தார் என்றார். (௯௪)

பல்லவனு மதுகேட்டுப் பாங்கிருந்த பாயுடுக்கை
வல்லமணர் தமைநோக்கி மற்றவனைச் செய்வதினிச்
சொல்லுமென வறந்துறந்து தமக்குறுதி யறியாத
புல்லறிவோ ரஞ்சாது நீற்றறையி லிடப்புகன்றார்.

(இ-ள்.) பல்லவனுமதுகேட்டு=பல்லவராசனும் அவர் சொன்னவார்த்தையைக்கேட்டு; பாங்கிருந்தபாயுடுக்கைவல்லமணர்தமைநோக்கி=அருகிலிருந்தபாயை உடையாகவுடைய வலிய சமணரைப்பார்த்து; மற்றவனைச்செய்வதினிச்சொல்லுமென=அத்தருமசேனனை இனிச் செய்யவேண்டிய காரியத்தைச் சொல்லுமென்றுகேட்க; அறந்துறந்து தமக்குறுதியறியாதபுல்லறிவோரஞ்சாது=அறநெறியை நீங்கித் தமக்கென ஓர் மறுமைப்பயனையும் அறியாத சிற்றறிவினையுடைய சமணர்கள் தீய கொடுந்தொழிலென்று தம்முள்ளத்தோர் சிறிதும் அச்சமின்றி; நீற்றறையிலிடப்புகன்றார்=நீற்றறையில் விடும்படி சொன்னார்கள்.—எ-று.

அறமுண்டையராய்த் தம் முயிர்க்குறுதியுணர்ந்தோர் இவ்வாறுசெய்ய நினையாராதலின் அறந்துறத்தலும் உறுதியறியாமையும் புல்லறிவினராதலை வலியுறுத்திநின்றன. ()

அருகணைந்தார் தமைநோக்கி யவ்வண்ண஦ஞ் செய்கவெனப்
பெருகுசினக் கொடுங்கோலான் மொழிந்திடலும் பெருந்தகையை
யுருகுபெருந் தழல்வெம்மை நீற்றறையி னுள்ளிருத்தித்
திருகுகருந் தாட்கொளுவிச் சேமங்கள் செய்தமைத்தார்.

(இ-ள்.) பெருகுசினக்கொடுங்கோலான்=மிக்க சினத்தையுடைய கொடுங்கோலரசனாகிய பல்லவன்; அருகணைந்தார்தமைநோக்கி=அருகில் நின்ற ஏவலாளரைப்பார்த்து; அவ்வண்ணஞ்செய்கவெனமொழிந்திடலும்=அவர் சொன்னபடியே செய்வீர்களாக என்று சொன்னவுடனே; பெருந்தகையை=ஆண்டவரசாகிய வாகீசரை; உருகு பெருந்தழல்வெம்மை=தன்னிடத்துச்சேர்ந்த உலோகங்களைத் திரவமாக்கும் பெரிய தீயின் வெப்பத்தையுடைய; நீற்றறையினுள்ளிருத்தி=நீற்றறையி னுள்ளேவைத்து; திருகுகருந்தாட்கொளுவி=முறுக்காக இருக்கும் இரும்பினாற்செய்த தாளைக்கொளுவி; சேமங்கள்செய்தமைத்தார்=அடைத்துவைத்தார்கள்.—எ-று.

சிலதாள்கள் உள்ளே முறுக்காகச் செய்திருத்தலிற் றிருகுகருந்தாளென்றார். உருக்கு என்பது உருகு என விகாரமாயிற்று. (௯௬)

ஆண்டவர சதனகத்து ளணைந்தபொழு தம்பலத்துத்
தாண்டவமுன் புரிந்தருளுந் தாணிழலைத் தலைக்கொண்டே
யீண்டுவருந் துயருளவோ வீசனடி யார்க்கென்று
மூண்டமன நேர்நோக்கி முதல்வனையே தொழுதிருந்தார்.

(இ-ள்.) ஆண்டவரசதனகத்துளணைந்தபொழுது=ஆண்டவரசு அந்நீற்றறையிலிருந்தபொழுது; அம்பலத்துத்தாண்டவமுன்புரிந்தருளும்=திருவம்பலத்தில் ஆனந்தத்தாண்டவம் வெளிப்பட்டுச் செய்தருளும்; தாணிழலைத்தலைக்கொண்டு=குஞ்சிதபாதநிழலைச் சிரமேற்கொண்டு; ஈண்டுவருந்துயருளவோ=இவ்வுலகத்தில்நேரிடுந் துன்பங்கள் உளவோ; ஈசனடியார்க்கென்று=சிவபிரான் அடியவர்க்கென்று; மூண்டமன நேர்நோக்கி=கிளர்ந்தமனதை நேராகச்செய்து; முதல்வனையேதொழுதிருந்தார்=சிவபிரானையேவணங்கி இருந்தார்.—எ-று.

ஈசனடியார்க்குத் துயருண்டாகாமையின் அவரடியானாகிய எனக்கும் துயருண்டாகாதெனத் துணிந்தனரென்க. (௯௭)

வெய்யநீற் றறையதுதான் வீங்கிளவே னிற்பருவந்
தைவருதண் டென்றலலை தண்கழுநீர்த் தடம்போன்று
மொய்யொளிவெண் ணிலவலர்ந்து முரன்றயா ழொலியினதா
யையர்திரு வடிநீழ லருளாகிக் குளிர்ந்ததே.

(இ-ள்.) வெய்யநீற்றறை=(அப்பொழுது) கொடிய நீற்றறையானது; வீங்கிளவேனிற்பருவந்தைவரு=மிக்க இளவேனிற்பருவத்தில் மிருதுவாக அடிக்கின்ற; தண்டென்றலலை=குளிர்ந்ததென்றலால் அலைக்கப்பட்ட; தண்கழுநீர்த்தடம்போன்று=தட்பமான செங்கழுநீர்த் தடாகத்தையொத்து; மொய்யொளிவெண்ணிலவலர்ந்து=பரந்த வெள்ளொளியாகிய நிலவைவீசி; முரன்றயாழொலியினதாய்=வாசிக்கின்ற யாழினது ஓசை உடையதாய்; ஐயர்திருவடிநீழல்=சிவபிரான் திருவடிநிழலாகிய; அருளாகிக்குளிர்ந்தது=அருண்மயமாய்க் குளிர்ந்திருந்தது.—எ-று. தான்-ஏ-அசை.

அவரகத்தருள் தட்பமாதல்போல அதனால் விபவமடங்கிய நீற்றறையும் வெம்மை நீங்கிற்றென்பது கருத்து. (௯௮)

சமணர்கள் திருநாவுக்கரசரை பாடலீபுரத்துக் கழைத்துப்போய் நீற்றலறையில் வைத்து கதவடைத்து முத்திரையிட்டு காவலும் வைத்து
ப்போயினபின் அரசன் - எ - வதுநாள் சமணர்களுக்குக் கியாபகப்படுத்தி நீற்றறையைத்திறந்து பார்க்கச்சொல்ல, நாயனருக்கு யாது
துன்பமுமின்றி சிவபெருமானருளால் தென்றல் வீசக் குளிர்ந்து சுகமாக விருந்ததைக்கண்டு சமணர்கள்வெட்கமுற்றனர்.

தனித்திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாசில்வீணையு மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலு
மூசுவண்டறை பொய்கையும்போன்றதே
யீசனெந்தை யிணையடிநீழலே. (௧)

நமச்சிவாயவே ஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே. (௨)

ஆளாகாராளா னாரையடைந்துய்யார்
மீளாவாட்செய்து மெய்ம்மையுணிற்கிலார்
*தோளாதசுரையோ தொழும்பர்செவி
வாளாமாய்ந்து மண்ணாகிக்கழிவரே. (௩)

நடலைவாழ்வுகொண் டென்செய்திர்நாணிலீர்
சுடலைசேர்வது சொற்பிரமாணமே
கடலினஞ்சமு துண்டவர்கைவிட்டால்
உடலினார்கிடந் தூர்முனிபண்டமே. (௪)

பூக்கைக்கொண்டரன் பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டர னாமநவில்கிலார்
ஆக்கைக்கேயிரை தேடியலமந்து
காக்கைக்கேயிரை யாகிக்கழிவரே. (௫)

குறிகளுமடை யாளமுங்கோயிலும்
நெறிகளுமவர் நின்றதோர்நேர்மையும்
அறியவாயிர மாரணமோதிலும்
பொறியிலீர்மன மென்கொல்புகாததே. (௬)

வாழ்த்தவாயும் நினைக்கமடநெஞ்சுந்
தாழ்த்தச்சென்னியுந் தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர் தூவித்துதியாதே
வீழ்த்தவாவினை யேனெடுங்காலமே. (௭)

எழுதுபாவைநல் லார்திறம்விட்டுநான்
றொழுதுபோகநின் றேனையுஞ்சூழ்ந்துகொண்
டுழுதகால்வழி யேயுழுவான்பொருட்
டிழுதைநெஞ்சமி தென்படுகின்றதே. (௮)

* தோளாதசுரையென்பது-துவாரமிடாத சுரைக்காய்.

நெக்குநெக்கு நினைபவர்நெஞ்சுளே
புக்குநிற்கும்பொன் ஞர்சடைப்புண்ணியன்
பொக்கமிக்கவர் பூவுநீருங்கொண்டு
நக்குநிற்ப னவர்தமைநாணியே. (௯)

விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போன்
மறையநின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுக்கோனட் டுணர்வுக்கயிற்றினுன்
முறுகவாங்கிக் கடையமுன்னிற்குமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

வேறு.

மாசின்மதி நீடுபுனன் மன்னிவளர் சென்னியனைப்
பேசவினி யானையுல காளுடைய பிஞ்ஞகனை
யீசனையெம் பெருமானை யெவ்வுயிருந் தருவானை
யாசையிலா ராவமுதை யடிவணங்கி யினிதிருந்தார்.

(இ-ள்.) மாசின்மதிநீடுபுனன்மன்னிவளர்சென்னியனை=குற்றமற்ற இளம்பிறையும் மிக்க கங்கையும் நிலைபெற்று வாழ்கின்ற சடைமுடியையுடைய சிவபிரானை; பேசவினியானை=பேசுதற்கு இனிமையுடையவரை; உலகாளுடையபிஞ்ஞகனை = எல்லா உலகங்களையும் காக்கின்ற முதல்வரை; ஈசனையெம்பெருமானை=ஈசனை எமது கடவுளை; எவ்வுயிருந்தருவானை=எல்லா உயிர்களையும் படைத்தவரை; ஆசையிலாராவமுதை= அடியாரது பெருவிருப்பில் தெவிட்டாது நிறைந்த அமுதம்போல்வாரை; அடிவணங்கி யினிதிருந்தார்=வணங்கிக்கொண்டு இனிதாக வீற்றிருந்தருளினுர்.—எ-று.

பேசவினியான் என்றது திருநாமங்களை ஓதுவார்க்கு அந்நாமத்துள் இன்புருவாய் விரவிநிற்றல். விண்ணேரமுதின் விருப்பு ஓர்கால் தெவிட்டவும்படும் இவ்வின்பம் அவ்வாறின்றி மேன்மேல்வளர்ந்து நிலைபெறுதலின் ஆராவமுது என்முர். இனிதிருத்தல் அதனுல் வாதிக்கப்படாதிருத்தல். (௯௯)

ஓரெழுநாள் கழிந்ததற்பி னுணர்விலம ணரையழைத்துப்
பாருமினி நீற்றறையை யெனவுரைத்தான் பல்லவனுங்
காரிருண்ட குழாம்போலு முருவுடைய காரமணர்
தேருநிலை யில்லாதார் நீற்றறையைத் திறந்தார்கள்.

(இ-ள்.) ஓரெழுநாள்கழிந்ததற்பின்=எழுநாள் சென்றபிறகு; பல்லவனும்= பல்லவராசனும்; உணர்விலமணரையழைத்து=அறிவில்லாத சமணர்களை அழைத்து; பாருமினிநீற்றறையை எனவுரைத்தான்=இனி நீற்றறையைத் திறந்துபாரும் என்று சொன்னுன்; காரிருண்டகுழாம்போலும்=இருண்ட மேகக்கூட்டம்போலும்;உருவுடையகாரமணர்=கருநிறத்தையுடைய சமணர்கள்; தேருநிலையில்லாதார்=தெளிந்த நிலைமையில்லாதவர்களாய்; நீற்றறையைத்திறந்தார்கள்=நீற்றறையைத் திறந்தார்கள்.—எ-று.

நாயனுர் இந்த நீற்றறையின்வேகத்தால் வேவாது பிழைத்திருக்கும் நிலைமையை உணராமையால் தேருநிலையில்லாதார் என்முர். (௧00)

ஆனந்த வெள்ளத்தி னிடைமூழ்கி யம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
யூனந்தா னிலராகி யுவந்திருந்தார் தம்மைக்கண்
டீனந்தங் கியதிலதா மென்னவதி சயமென்றார்.

(இ-ள்.) ஆனந்தவெள்ளத்தினிடைமூழ்கி—பேரானந்த வெள்ளத்தில் முழுகி; அம்பலவர்தேனுந்துமலர்ப்பாதத்தமுதுண்டு—நடேசப் பிரானது தேன்றுளிக்கும் தாமரைமலர்போலும் குஞ்சிதபாதத்தினின்றும் பெருகும் ஆனந்தாமுதத்தையுண்டு; தெளிவெய்தியூனந்தானிலராகி—தெளிவடைந்து தான் ஓர்கேடும் இல்லாதவராய்; உவந்திருந்தார்தம்மைக்கண்டு—மகிழ்ந்து வீற்றிருந்தருளும் ஆண்டவரசை அச்சமணர்கள்கண்டு; ஈனந்தங்கியதிலதாம்—நேரிட்டதுயரம் ஒன்றுமில்லை; என்னவதிசயமென்றார்—இது என்ன ஆச்சரியம் என்று சொன்னார்கள்.—எ-று. (௧௦௧)

அதிசயமன் றிதுமுன்னை யமண்சமயச் சாதகத்தால்
இதுசெய்து பிழைத்திருந்தா னெனவேந்தற் குரைசெய்து
மதிசெய்வ தினிக்கொடிய வல்விடமூட் டுவதென்று
முதிரவரும் பாதகத்தோர் முடைவாயான் மொழிந்தார்கள்.

(இ-ள்.) அதிசயமன்றிது—இது ஓர் வியப்பன்று; முன்னையமண்சமயச்சாதகத்தால்—முன்தானிருந்த சமணசமயத்தில் கற்றுக்கொண்ட மந்திரசாதகத்தால்; இதுசெய்துபிழைத்திருந்தானென—இந்நீற்றறையில்தான் வேவாமல்செய்து பிழைத்துக்கொண்டிருக்கின்றானென்று; வேந்தற்குரைசெய்து—பல்லவனுக்குச்சொல்லி; மதிசெய்வதினி—இனிச்செய்யவேண்டிய யோசனையாவது; கொடியவல்விடமூட்டுவதென்று—கொல்லுந்தொழிலையுடைய விடத்தை யுண்ணச்செய்வதேயென்று; முதிரவரும்பாதகத்தோர்—பரிபாகமடைந்த பாவத்தையுடையவர்கள்; முடைவாயான்மொழிந்தார்கள்—தீநாற்றமுடைய வாயால் சொன்னார்கள்.—எ-று. (௧௦௨)

ஆங்கதுகேட் டலுங்கொடிய வமண்சார்பாற் கெடுமன்னன்
ஓங்குபெரு மையலினா னஞ்சூட்டு மெனவுரைப்பத்
தேங்காதார் திருநாவுக் கரசரையத் தீயவிடப்
பாங்குடைய பாலடிசி லமுதுசெயப் பண்ணினார்.

(இ-ள்.) ஆங்கதுகேட்டலும்—அவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்து; கொடியவமண்சார்பாற்கெடுமன்னன்—தீயசமண்சார்பினாற்கெட்ட அரசன்; ஓங்குபெருமையலினால்—மிகப் பெரிய மயக்கவுணர்வினால்; நஞ்சூட்டுமெனவுரைப்ப—நஞ்சை யூட்டுமென்று சொல்ல; தேங்காதார்திருநாவுக்கரசரை—தீத்தொழில்செய்வதற்கு அஞ்சாத சமணர்கள் வாகீசரை; அத்தீயவிடப்பாங்குடைய—கொல்லுந்தொழிலையுடைய கொடிய விடத்தோடுகலந்த; பாலடிசிலமுதுசெயப்பண்ணினார்—பாலன்னத்தைத் திருவமுது செய்யும்படி செய்வித்தார்கள்.—எ-று. (௧௦௩)

நஞ்சுமமு தாமெங்க ணாதரடி யார்க்கென்று
வஞ்சமிகு நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே
செஞ்சடையார் சீர்விளக்குந் திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமண ரிடுவித்த பாலடிசின் மிசைந்திருந்தார்.

(இ-ள்.) எங்கணாதரடியார்க்கு—எங்கள் முதல்வராகிய சிவபிரான் அடியவர்களுக்கு; நஞ்சுமமுதாமென்று—தீயநஞ்சமும் அமுதாம் என்று; வஞ்சமிகுநெஞ்சுடை-

யார்—கபடமிக்கமனமுடைய சமணர்களது; வஞ்சனையாம்படியறிந்து—வஞ்சகத்தை யறிந்து; செஞ்சடையார்சீர்விளங்கும்—சிவபிரானது திருவருள் விளங்கியிருக்கும்; திற லுடையார்—வெற்றிப்பாட்டையுடைய ஆண்டவரசு; தீவிடத்தால்வெஞ்சமணரிடுவி த்த—கொடியசமணர்கள் தீயவிடத்தால் அமைத்துக்கொடுத்த; பாலடிசின்மிசைந்திரு ந்தார்—பாலன்னத்தைத் திருவமுது செய்திருந்தருளினார்.—எ-று.

நஞ்சும் என்பது கொடுமையின் உயர்வு குறித்தமையால் உம்மை உயர்வுசிறப்பு. ஏ-அசை. (௧0௪)

பொடியார்க்குந் திருமேனிப் புனிதர்க்குப் புவனங்கண்
முடிவாக்குந் துயர்நீங்க முன்னைவிட மமுதானாற்
படியார்க்கு மறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுத மாவதுதா னற்புதமோ.

(இ-ள்.) பொடியார்க்குந்திருமேனிப்புனிதர்க்கு—திருவெண்ணீறு பரந்திருக் கும் திருமேனியையுடைய சிவபிரானுக்கு; புவனங்கண்முடிவாக்குந்துயர்நீங்க—மூன் றுலகத்தையும் அழிக்கும் துயரம் நீங்குதற்கேதுவாக; முன்னைவிடமமுதானால்—முன்னா ளிலுதித்த ஆலாகலம் அமுதானால்; படியார்க்குமறிவரிய—இந்நிலவுலகத்தில் யாவரா லும் அறிதற்கரிய; பசுபதியார்தம்முடையவடியார்க்கு—சிவபிரானுடைய அடியவரா கிய இவர்க்கு; நஞ்சமுதமாவதுதானற்புதமோ—ஓர்விடம் தன்வேகமடங்கி அமுதாயு ண்ணப்படுவது ஆச்சரியமோ ஆச்சரியமன்று.—எ-று.

திருமால் பிரமன்முதலியோரைத்தன் வேகத்தான் மூர்ச்சிக்கச்செய்யும் கொடிய ஆலாகலத்தை ஓர்சிறிதாயடக்கி அமுதுசெய்து அதனால் மூர்ச்சிக்கப்படாத பிரானார் திருவருள்வழிநிற்கும் அடியார்கரு மலை மரம் செடி முதலியவற்றினுண்டாயவிடம் அமுதாவது ஆச்சரியமன்றென்றாராயிற்று. (௧0௫)

அவ்விடத்தை யாண்டவர சமுதுசெய்து முன்னிருப்ப
வெவ்விடமு மமுதாயிற் றெனவமணர் வெருக்கொண்டே
யிவ்விடத்தி லிவன்பிழைக்கி லெமக்கெல்லா மிறுதியெனத்
தெவ்விடத்துச் செயல்புரியுங் காவலற்குச் செப்புவார்.

(இ-று.) அவ்விடத்தை—அவரிட்டநஞ்சமுதை; ஆண்டவரசமுதுசெய்துமுன் னிருப்ப—ஆண்டவரசு அவர்முன்னே திருவமுதுசெய்திருக்க; வெவ்விடமுமமுதாயிற் றென—கொடியவிடமும் இவருக்கு அமுதமாயிற்றென்று; அமணர்வெருக்கொண்டு— சமணர்கள் அஞ்சி; இவ்விடத்திலிவன்பிழைக்கில்—இந்த இராசாங்கத்தில் இவன்பிழை த்திருக்கில்; எமக்கெல்லாமிறுதியென—எமக்கெல்லாம் இறப்பு நேரிடுமென்று கருதிக் கொண்டு; தெவ்விடத்துச்செயல்புரியும்—பகைவரிடத்துச்செய்யும் கொடுந்தொழிலை ஆண்டவரசிடத்துச்செய்யும்; காவலற்குச்செப்புவார்—அப்பல்லவனுக்குச் சொல்லு வார்கள்.—எ-று.

ஒப்பநாடிமுறைபுரியாமையாற் றெவ்விடத்துச் செயல்புரியுங் காவலன் என்றார்.()

நஞ்சுகலந் தூட்டிடவு நஞ்சமயத் தினில்விடந்தீர்
தஞ்சமுடை மந்திரத்தாற் சாதியாவகை தடுத்தான்
எஞ்சும்வகை யவற்கிலதே லெம்முயிரு நின்முறையுந்
துஞ்சுவது திடமென்றார் சூழ்வினையின் றுறைநின்றார்.

(இ-ள்.) நஞ்சுகலந்தூட்டிடவும்—இத்தருமசேனனுக்கு நஞ்சினைப் பாலடிசிலிற் கலந்தூட்டவும்; நஞ்சமயத்தினில்விடந்தீர்தஞ்சமுடைமந்திரத்தால்—நமது சைனமதத்

தில் விடத்தை நீக்குதற்குச் சாதனமாயுள்ள விஞ்சையினால்; சாதியாவகைதடுத்தான்= அந்த விடம் தன்னைக்கொல்லாமல் தடைசெய்தான்; எஞ்சும்வகையவற்கிலதேல்=அவனுக்கு உயிர் இறுதியாம்படி செய்வகை யின்றாயின்; எம்முயிருநின்முறையும்=எம்முடைய உயிரும் உன்னுடைய அரசுரிமையும்; துஞ்சுவதுதிடமென்றார்=அழிவது நிச்சயமென்று சொன்னார்கள்.—எ-று.

ஊட்டிடவும் என்ற உம்மை நீற்றறையிலன்றி விடமூட்டவும் பிழைத்தான் என இறந்ததுதழீஇயது. (கoஎ)

மற்றவர்த மொழிகேட்டு மதிகெட்ட மன்னவனுஞ்
செற்றவனை யினிக்கடியுந் திறமெவ்வா றெனச்செப்ப
உற்றவரு மந்திரசா தகநாங்க ளொழிந்திடநின்
கொற்றவயக் களிற்றெதிரே விடுவதெனக் கூறினார்.

(இ-ள்.) மற்றவர்தம்மொழிகேட்டு=அச்சமணர்கள் கூறும் வார்த்தையைக்கேட்டு; மதிகெட்டமன்னவனும்=புத்தியில்லாத பல்லவனும்; செற்றவனையினிக்கடியுந்திறமெவ்வாறெனச்செப்ப=நம்மதத்தைக்கெடுத்த தருமசேனனை இனிமேல் தண்டிக்கும் வகைமை எவ்வாறென்று சொல்ல; உற்றவரும்=அங்குள்ள சமணர்களும்; மந்திரசாதக நாங்களொழிந்திட=மந்திரசாதனங்களை நாங்கள் நீங்க; நின்கொற்றவயக்களிற்றெதிரே விடுவதெனக்கூறினார்=நினது வெற்றியையுடைய பட்டவர்த்தனத்திற்கு எதிரிலே மிதிக்கும்படி விடத்தக்கதென்று சொன்னார்கள்.—எ-று.

மந்திரசாதகம் என்றது மாரணமாக்கும் ஆபிசாரவேள்விமுதலியன. அவை செய்யினும் இவரைவெல்லுதல் கூடாதென்னுங் கருத்தையுடையரோனும் அரசனுக்குத் தம்மிடத்து மந்திரசாதகமுண்மை புலப்படுத்துவாராய் மந்திரசாதகமொழிந்திட என்றும், மந்திரசாதகங்கள் செய்யினும் சிலநாள்கழியும் என்னும் கருத்தினராய்க் களிற்றெதிரே விடுவதென்றுங்கூறினார். (கoஅ)

மாபாவிக் கடையமணர் வாகீசத் திருவடியாங்
காபாலி யடியவர்பாற் கடக்களிற்றை விடுகென்னப்
பூபாலர் செயன்மேற்கொள் புலைத்தொழிலோ னவர்தம்மேற்
கோபாதி சயமான கொலைக்களிற்றை விடச்சொன்னான்.

(இ-ள்.) மாபாவிக்கடையமணர்=பெரிய பாவிகளாகிய இழிந்த சமணர்கள்; வாகீசத்திருவடியாம்=வாகீசமுனிவர் என்னும்; காபாலியடியவர்பால்=சிவபிரான் அடியாரிடத்து; கடக்களிற்றைவிடுகென்ன=மதம்மிக்க யானையை மிதிக்கவிடுக என்று சொல்ல; பூபாலர்செயன்மேற்கொள்புலைத்தொழிலோன்=அரசர்களது செயலைத்தான் மேற்கொண்ட புலைத்தொழிலினனாகிய பல்லவன்; அவர்தம்மேல்=அவ்வாண்டவரசிடத்து; கோபாதிசயமான=மிக்க கோபத்தையுடைய; கொலைக்களிற்றைவிடச்சொன்னான்=கொல்லுந்தொழிலையுடைய யானையை விடும்படி சொன்னான்.—எ-று.

அரசர்தொழிலை மேற்கொண்டிருத்தலிற் பூபாலர் செயன்மேற்கொள் என்றும், இழிதொழில் செய்தலிற் புலைத்தொழிலான் என்றுங்கூறினர். விடுகவென்றது விடுகென நின்றது. (கoகூ)

கூடத்தைக் குத்தியொரு குன்றமெனப் புறப்பட்டு
மாடத்தை மறித்திட்டு மண்டபங்க ளுடைத்தெற்றித்
தாடத்திற் பரிக்காரர் தலையிடறிக் கடகளிற்றின்
வேடத்தால் வருங்கூற்றின் மிக்கதொரு விறல்வேழம்.

(இ-ள்.) கூடத்தைக்குத்தி—தான்வாழும் கூடத்தைக் கொம்பினாற்குத்தி; ஒரு குன்றமெனப்புறப்பட்டு—ஒருமலை என்று சொல்லும்படி புறப்பட்டு; மாடத்தைமறித்திட்டு—மாளிகைகளை அழித்து; மண்டபங்களெடுத்தெற்றி—மண்டபங்களை எடுத்து வீசி; தாட்டிற்பரிக்காரர்தலையிடறி—அடியெடுத்து வைப்பதனால் முன்செல்லும் குத்துக்கோற்காரருடைய தலைகளை இடறி; கடகளிற்றின்வேடத்தால்வரும்—மதம்பாய்கின்ற யானையின் உருவங்கொண்டுவருகின்ற; கூற்றின்மிக்கதொருவிறல்வேழம்—இயமனினும் மிக்க தோற்றத்தையுடையது வலியினையுடைய ஓர்யானை.—எ-று.

முன்வெய்ய கோற்பாகர்மூவர் என்றதனால் ஈண்டு பரிக்காரர் என்றது குத்துக்கோற்காரரையென்க. அவர்கள் குத்துக்கோலைப்பரித்துச்சேறலிற் பரிக்காரரொன்றாயிற்று. (கக0)

வேறு.

பாசத்தொடை நிகளத்தொடர் பறியத்தறி முறியா
மீசுற்றிய பறவைக்குலம் வெருவத்துணி விலகா
ஊசற்கர மெதிர்சுற்றிட வுரறிப்பரி யுழறா
வாசக்கட மழைமுற்பட மதவெற்பெதிர் வருமால்.

(இ-ள்.) பாசத்தொடைநிகளத்தொடர்பறிய—காலிற்பூட்டியிருக்கும் கயிறுகளும் சங்கிலித்தொடரும் அறுந்துபோக; தறிமுறியா—கட்டுத்தறியைமுறித்து; மீசுற்றியபறவைக்குலம்வெருவ—மேலே பறக்கின்ற புட்குலங்கள் அஞ்சும்படி; துணிவிலகா—துணிவோடுவிலகாத; ஊசற்கரமெதிர்சுற்றிட—ஊசல்போல் அசைகின்ற துதிக்கையானது முன்னேசுற்ற; உரறிப்பரியுழறா—மிக்க கோபங்கொண்டு குதிரைகளைக்கலக்கி; வாசக்கடமழைமுற்பட—வாசனைகமழும் மதமாகிய மழை முன்னேபெருக; மதவெற்பெதிர்வரும்—மதத்தையுடைய யானையாகிய ஓர்மலையானது நாயனாருக்கெதிரில் வருகின்றது.—எ-று. ஆல்-அசை. (ககக)

இடியுற்றெழு மொலியிற்றிசை யிபமுட்கிட வடியிற்
படிபுக்கற நெளியப்படர் பவனக்கதி விசையிற்
கடிதுற்றடு செயலிற்கிளர் கடலிற்படு கடையின்
முடிவிற்கன லெனமுற்சின முடுகிக்கடு கியதே.

(இ-ள்.) இடியுற்றெழுமொலியில்—அந்த யானையானது இடிபோலெழுகின்ற பிளிறொளியினால்; திசையிபமுட்கிட—திசைக்களிறுகள் அச்சமடையவும்; அடியிற்படிபுக்கறநெளிய—அடியெடுத்துவைத்தலினால் பூமியாழ்ந்து மிகவும் நெளியவும்; படர்பவனக்கதிவிசையிற்கடிதுற்று—செல்கின்ற வாயுவினது மிக்கவிசைபோல விரைந்துவந்து; அடுசெயலிற்கிளர்கடலிற்படு—கொல்லுந்தொழிலில் மிக்ககடலில் உண்டாகின்ற; கடையின்முடிவிற்கனலென—ஊழித்தீக்கொப்பென்று சொல்லும்படி; முற்சினமுடுகிக்கடுகியது—முற்பட்ட கோபத்தோடுநடந்து வேகமாய்வந்தது.—எ-று. ஏ-அசை. (ககஉ)

மாடுற்றணை யிவுளிக்குல மறியச்செறி வயிரக்
கோடுற்றிரு பிளவிட்டறு குறைகைக்கொடு முறியச்
சாடுற்றிடு மதில்தெற்றிகள் சரியப்புடை யணிசெற்
றூடுற்றகல் வெளியுற்றதவ் வடர்கைக்குல வரையே.

(இ-ள்.) அவ்வடர்கைக்குலவரை—கொல்லுந்தொழிலையுடைய கையோடுகூடிய அரசுவாவாகிய மலை; மாடுற்றணையிவுளிக்குலமறிய—சமீபித்துவருகின்ற குதிரைக்கூட்டங்கள் இறக்கும்படி; செறிவயிரக்கோடுற்றிருபிளவிட்டு—வயிரமுடைய கொம்பினால்

நாயனார் இதிலும் தப்பித்துக்கொண்டனன் இனி அவருக்கு விடமூட்ட வேண்டு மெனக்கூறி அரசன் அநுமதிபெற்று நாயனாருக்கு விடத்தை உண்பிக்க, அது எம் பெருமானருளால் அமிர்தமாகி சுகித்திருக்க, இனி அவரை யானையின் காலிலிடறி விப்பது நலமென, அவ்வாறு விடைபெற்று நாயனார்முன் யானையை ஏவ அது நாயனாரை வலம்வந்து பணிந்து எவின சமணர்கள் யாவரையும் கொன்று காட்டிற் சென்றது.

இருபிளவாகச்செய்து; அறுகுறைகைக்கொடுமுறிய—அற்றகுறையைக் கையிலெடுத்துக்கொண்டு முறியும்படி; சாடுற்றிடுமெதில்தெற்றிகள்சரிய—அடிக்கப்படும் மதில்களும் திண்ணைகளும் சரியும்படி; புடையணிசெற்று—அருகிலுள்ள அலங்காரங்களை அழித்து; ஆடுற்றகல்வெளியுற்றது—அசைந்துகொண்டு அகன்றவெளியிடத்தில் வந்தது.—எ-று. ஏ-அசை. (௧௧௩)

பாவக்கொடு வினைமுற்றிய படிறுற்றடு கொடியோர்
நாவுக்கர செதிர்முற்கொடு நணுகிக்கரு வரைபோல்
ஏவிச்செறு பொருகைக்கரி யினையுய்த்திட வெருளார்
சேவிற்றிகழ் பவர்பொற்கழ றெளிவுற்றனர் பெரியோர்.

(இ-ள்.) பாவக்கொடுவினைமுற்றிய—பாவமாகிய தீச்செயலில்முதிர்ந்த; படிறுற்றடுகொடியோர்—பொய்யுடையராய்க் கொல்லுகின்ற சமணர்கள்; செறுபொருகைக்கரியினை—பகைவரைக்கொல்கின்ற போர்த்தொழிலமைந்த துதிக்கையையுடைய யானையை; நாவுக்கரசெதிர்முற்கொடுநணுகி—திருநாவுக்கரசின்முன்னே கொண்டுசென்று; கருவரைபோலேவியுய்த்திட—கரியமலையைப்போல இவரைக்கொல்லென்று பயில்காட்டிவிட; வெருளார்சேவிற்றிகழ்பவர்பொற்கழல்—அதற்கு அஞ்சாதவராய் இடபத்தை வாகனமாகக் கொண்டருளும் சிவபிரானுடைய அழகிய திருவடிகளை; தெளிவுற்றனர்பெரியோர்—சிந்தைசெய்தார் அவ்வாண்டவரசு.—எ-று. (௧௧௪)

வேறு.

அண்ணலருந்தவவேந்த ரானைதம்மேல்வரக்கண்டு
விண்ணவர்தம்பெருமானை விடையுவந்தேறும்பிரானைச்
சுண்ணவெண்சந்தனச்சாந்து தொடுத்ததிருப்பதிகத்தை
மண்ணுலகுய்யவெடுத்து மகிழ்வுடனேபாடுகின்றார்.

(இ-ள்.) அண்ணலருந்தவவேந்தர்—பெருமையிற்சிறந்த அரிய தவராசனாகிய வாகீசர்; ஆனைதம்மேல்வரக்கண்டு—அவ்யானையானது தம்மேல்வருதலைப்பார்த்து; விண்ணவர்தம்பெருமானை—தேவர்க்கெல்லாம் முதல்வரை; விடையுவந்தேறும்பிரானை—இடபத்தைவிரும்பி நடாத்தும் பிரானை; சுண்ணவெண்சந்தனச்சாந்து—சுண்ணவெண் சந்தனச்சாந்தென முதலில்; தொடுத்ததிருப்பதிகத்தை—தொடுக்கப்பட்ட திருப்பதிகமாலையை; மண்ணுலகுய்யவெடுத்து—நிலவுலகத்தார் உய்யும்படியெடுத்து; மகிழ்வுடனேபாடுகின்றார்—மகிழ்ச்சியுடன் பாடுவாராயினார்.—எ-று. ஏ-அசை. (௧௧௫)

திருவதிகைவீரட்டானம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ் சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும் வளரும்பவளநிறமு
மண்ணலரண்முரணேறு மகலம்வளாயவரவுந்
திண்ணன்கெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (௧)

பூண்டதேர்கேழலெயிறும் பொன்றிகழாமைபுரள
நீண்டதிண்டோள்வலஞ்சூழ்ந்து நிலாக்கதிர்போலவெண்ணூலுங்
காண்டகுபுள்ளின்சிறகுங் கலந்தகட்டங்கக்கொடியு

மீண்டுகெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (உ)

ஒத்தவடத்திளநாக முருத்திரபட்டமிரண்டு
முத்துவடங்கண்டிகையு முளைத்தெழுமுவிலைவேலுஞ்
*சித்தவடமுமதிகைச்சேணுயர் வீரட்டஞ்சூழ்ந்து
தத்துகெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (ங)

மடமான்மறிபொற்கலையு மழுப்பாம்பொருகையில்வீணை
குடமால்வரையதிண்டோளுங் குனிசிலைக்கூத்தின்பயில்வு
மிடமால்தழுவியபாக மிருநிலனேற்றசுவடுந்
தடமார்கெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (ச)

பலபலகாமத்தராகிப் பதைத்தெழுவார்மனத்துள்ளே
கலமலக்கிட்டுத்திரியுங் கணபதியென்னுங்களிறும்
வலமேந்திரண்டுசுடரும் வான்கயிலாயமலையும்
நலமார்கெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (ரு)

கரந்தனகொள்ளிவிளக்குங் கறங்குதுடியின்முழக்கும்
பரந்தபதினெண்கணமும் பயின்றறியாதனபாட்டும்
அரங்கிடைநூலறிவாள ரறியப்படாததோர்கூத்தும்
நிரந்தகெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (சு)

கொலைவரிவேங்கையதளுங் குலவோடிலங்குபொற்றோடும்
விலைபெறுசங்கக்குழையும் விலையில்கபாலக்கலனும்
மலைமகள்கைக்கொண்டமார்பு மணியார்ந்திலங்குமிடறு
முலவுகெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (எ)

ஆடல்புரிந்தநிலையு மரையிலசைத்தவரவும்
பாடல்பயின்றபல்பூதம் பல்லாயிரங்கொள்கருவி
நாடற்கரியதோர்கூத்து நன்குயர்வீரட்டஞ்சூழ்ந்து
ஓடுங்கெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (அ)

சூழுமரவத்துகிலுந் துகில்கிழிகோவணக்கீளும்
யாழின்மொழியவளஞ்சவஞ் சாதருவரைபோன்ற
வேழமுரித்தநிலையும் விரிபொழில்வீரட்டஞ்சூழ்ந்து

* சித்தவடம்-என்பது இந்தத்தலத்துக்குச் சமீபத்திலிருப்பது.

தாழுங்கெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (கூ)

நரம்பெழுகைகள்பிடித்து நங்கைநடுங்கமலையை
யுரங்களெல்லாங்கொண்டெடுத்தா னென்பதுமொன்றுமலற
வரங்கள்கொடுத்தருள்செய்வான் வளர்பொழில்வீரட்டஞ்சூழ்ந்து
சிரம்புகெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (கo)

திருச்சிற்றம்பலம்.

இந்தப்பதிகம் சமணர்களேவிய யானை அஞ்சும்படி ஓதியருளியது.

வஞ்சகர்விட்டசினப்போர் மதவெங்களிற்றினைநோக்கிச்
செஞ்சடைநீண்முடிக்கூத்தர் தேவர்க்குந்தேவர்பிரானார்
வெஞ்சுடர்மூவிலைச்சூல வீரட்டர்தம்மடியோநாம்
அஞ்சுவதில்லையென்றென்றே யருந்தமிழ்பாடியறைந்தார்.

(இ-ள்.) வஞ்சகர்விட்டசினப்போர்=சமணராகிய வஞ்சகர்விட்ட கோபத்தோடு போர்த்தொழில்செய்யும்; மதவெங்களிற்றினைநோக்கி=மதத்தையுடைய கொடிய அந்த யானையைப்பார்த்து; செஞ்சடைநீண்முடிக்கூத்தர்=சிவந்த சடையாகிய நீண்டமுடியையுடைய கூத்தரும்; தேவர்க்குந்தேவர்பிரானார்=தேவர்க்கும் ஆதிதேவனென்னும் பிரானருமாகிய; வெஞ்சுடர்மூவிலைச்சூல=மிக்க ஒளியைவீசுகின்ற மூவிலையையுடைய சூலத்தையேந்திய; வீரட்டர்தம்மடியோநாம்=வீரட்டேசர் அடியோம் நாம்; அஞ்சுவதில்லையென்றென்று=யாம் ஒன்றுக்கும் அஞ்சுவதில்லை அஞ்சுவதில்லை என்று; அருந்தமிழ்பாடியறைந்தார்=அரிய தமிழ்ப்பதிகத்தினைப் பாடிச்சொன்னார்.—எ-று. ஏ-அசை. ()

தண்டமிழ்மாலைகள்பாடித் தம்பெருமான்சரணாகக்
கொண்டகருத்திலிருந்து குலாவியவன்புறுகொள்கைத்
தொண்டரைமுன்வலமாகச் சூழ்ந்தெதிர்தாழ்ந்துநிலத்தில்
எண்டிசையோர்களுங்காண விறைஞ்சியெழுந்ததுவேழம்.

(இ-ள்.) தண்டமிழ்மாலைகள்பாடி=தட்பமான திருப்பதிகமாலையைப்பாடி; தம்பெருமான்சரணாகக்கொண்டகருத்திலிருந்து=தமது முதல்வராகிய சிவபிரானைப் புகலாகக்கொண்ட கருத்தோடிருந்து; குலாவியஅன்புறுகொள்கைத்தொண்டரை=விளங்கிய அன்புமிக்க கொள்கையையுடைய ஆண்டவரசை; முன்வலமாகச்சூழ்ந்தெதிர்தாழ்ந்து=முன்னே வலமாகவந்து அவர் திருமுன்னே வணங்கி; நிலத்திலெண்டிசையோர்களுங்காண=நிலவுலகத்தில் எட்டுத்திக்கிலுள்ளோருங் காணும்படி; இறைஞ்சியெழுந்ததுவேழம்=வணங்கியெழுந்தது அந்த யானை.—எ-று. (ககஎ)

ஆண்டவரசைவணங்கி யஞ்சியவ்வேழம்பெயரத்
தூண்டியமேன்மறப்பாகர் தொடக்கியடர்த்துத்திரித்து
மீண்டுமதனையவர்மேன் மிறைசெய்துகாட்டிடவீசி
ஈண்டவர்தங்களையேகொன் றமணர்மேலோடிற்றெதிர்ந்தே.

(இ-ள்.) ஆண்டவரசைவணங்கி அஞ்சியவ்வேழம்பெயர=அந்த யானையானது வாகீசரைவணங்கி அவரைத் தீங்குசெய்தற்கஞ்சி நீங்கிச்செல்ல; தூண்டியமேன்மறப்

பாகர்—அதனைச் செலுத்தும்நிமித்தம் மேற்கொண்டிருக்கும் வலியையுடைய பாகர்கள்; தொடக்கியடர்த்துத்திரித்து—அதைப்பந்தித்து அங்குசத்தால் குத்தித்திருப்பி; மீண்டுமதனையவர்மேல்—மீளவும் அவ்யானையை அவ்வாகீசரிடத்து; மிறைசெய்துகாட்டிடவீசி—வருத்திக்கொல்லென்று சூசிப்பிக்க; ஈண்டவர்தங்களையேகொன்று—அது அவ்வாறுசெய்யாமல் எடுத்தெறிந்து கூடியிருக்கும் அப்பாகர்களையேகொன்று; அமணர்மேலெதிர்ந்தோடிற்று—சமணமுனிவர்கள்மேல் எதிர்த்தோடியது.—எ-று. ஏ-அசை.

மிறை—துன்பம். இதனை வெஞ்சமண்குண்டர்கள் செய்வித்த தீயமிறைகளெல்லாம் என்று பின்வருஞ் செய்யுளாலுணர்க. (௧௧௮)

ஓடியருகர்கடம்மை யுழறிமிதித்துப்பிளந்து
நாடிப்பலரையுங்கொன்று நகரங்கலங்கிமறுக
நீடியவேலைகலக்கு நெடுமந்தரகிரிபோல
ஆடியலியானையம்மன் னற்காகுலமாக்கியதன்றே.

(இ-ள்.) ஓடியருகர்கடம்மை—ஓடிச்சென்று சமணர்களை; உழறிமிதித்துப்பிளந்து—கலக்கிக் காலால்மிதித்து இரண்டாகக்கிழித்து; நாடிப்பலரையுங்கொன்று—தேடிப்பலசமணர்களையும் இவ்வாறுகொன்று; நகரங்கலங்கிமறுக—அந்நகரத்திலுள்ளார் கலக்கமடைந்துவருந்த; நீடியவேலைகலக்கும்நெடுமந்தரகிரிபோல—பெரியகடலைக் கலக்கின்ற நீண்டமந்தரமலையைப்போல; ஆடியலியானை—வெற்றிமிக்க இலக்கணமமைந்த யானையானது; அம்மன்னர்க்கு ஆகுலமாக்கியது—அப்பல்லவராசனுக்குத் துன்பத்தை விளைத்தது.—எ-று.

இயல்—யானைநூலிற் கூறுமிலக்கணம். ஆடியலியானை என்பதற்கு அசையுமியல்புடைய யானையென்றுரைத்தலுமொன்று. அன்று-ஏ-அசை. (௧௧௯)

யானையின்கையிற்பிழைத்த வவ்வமண்கையர்களெல்லா
மானமழிந்துமயங்கி வருந்தியசிந்தையராகித்
தானைநிலமன்னன்றாளிற் றனித்தனிவீழ்ந்துபுலம்ப
மேன்மைநெறிவிட்டவேந்தன் வெகுண்டினிச்செய்வதெனென்றான்.

(இ-ள்.) யானையின்கையிற்பிழைத்த—அவ்யானைகையில் அகப்படாது ஓடிப்பிழைத்த; அவ்வமண்கையர்களெல்லாம்—அந்தச்சமணராகிய கீழோர்களெல்லாம்; மானமழிந்துமயங்கி—தமக்குரிய மதிப்பிழந்து மயக்கமடைந்து; வருந்தியசிந்தையராகி—வருந்தும் எண்ணமுடையவர்களாய்; தானைநிலமன்னன்றாளில்—சேனைகளையுடைய நிலவுலகத்தரசனாகிய பல்லவனது பாதங்களில்; தனித்தனிவீழ்ந்துபுலம்ப—வேறுவேறு நிலமுற விழுந்துவணங்கி அழ; மேன்மைநெறிவிட்டவேந்தன்—நல்லொழுக்கத்தை இழந்தபல்லவன்; வெகுண்டினிச்செய்வதெனென்றான்—கோபித்து இனிச்செய்வதென்னவென்று கேட்டான்.—எ-று.

இனையவமண்கையர் என்றுபாடமாயின் இத்தன்மையராய் அமண்கையரொன்றுரைக்க. (௧௨௦)

நங்கள்சமயத்தினின்றே நாடியமுட்டிகிலையால்
எங்களைதிறேறழிய யானையாவிவ்வண்ணநின்சீர்ப்
பங்கப்படுத்தவன்போகப் பரிபவந்தீருமுனக்குப்
பொங்கழல்போகவதன்பின் புகையகன்றாலெனவென்றார்.

(இ-ள்.) நங்கள்சமயத்தினின்று=நம்முடையசமயத்தில் நின்று; நாடியமுட்டிநிலையால்=அறிந்துகொண்டமுட்டி நிலையினால்; எங்களெதிரோறழிய=நாங்கள் யானையை அவன்மேல் ஏவுந்தொழில்கெட; யானையாலிவ்வண்ணம்=அவ்யானையினால் ஏவிய எம்மையேகொல்லும் வண்ணம்செய்து; நின்சீர்ப்பங்கப்படுத்தவன்போக=உன்னுடையகீர்த்தியை அவமதித்த இத்தருமசேனன் இறந்துபோனால்; பரிபவந்தீருமுனக்கு=உனக்குத் துன்பம்நீங்கும்; பொங்கழல்போகவதன்பின்=மிக்க அழல் அவிந்தபின்; புகையகன்றாலெனவென்றார்=புகையும் நீங்கினாற்போல் என்று சொன்னார்கள்.—எ-று.

ஏ-பிரிநிலை. எதிரோற்று=எதிரிற் செல்லென்று ஏவுதல். முட்டிநிலை=விடம், கொடுவிலங்கு,சுரநோய்முதலியன தம்மைவாதியாமை நிறுத்தல். அது அவ்வாறாதல் இவ்விருத்தத்தில்முட்டி நிலையால் எங்களெதிரோறழியவென்றும் ஆளுடைய பிள்ளையார்புராணத்துவிடம் நீக்குழிதியான பாவனை நிலைமுட்டி என்றுங் கூறுதலாலுணர்க. (கஉக)

அல்லிருளன்னவர்கூற வரும்பெரும்பாவத்தவன்பின்
றொல்லைச்சமயமழித்துத் துயரம்விளைத்தவன்றன்னைச்
சொல்லுமினிச்செய்வதென்னச் சூழ்ச்சிமுடிக்குந்தொழிலோர்
கல்லுடன்பாசம்பிணித்துக் கடலிடைப்பாய்ச்சுகவென்றார்.

(இ-ள்.) அல்லிருளன்னவர்கூற=யாம இருள்போலும் நிறத்தையுடைய சமணர்கள்சொல்ல; அரும்பெரும்பாவத்தவன்பின்=மிகப்பெரிய பாவத்தையுடைய பல்லவன்பின்பு; தொல்லைச்சமயமழித்து=பழமையான சைனமதத்தையழித்து; துயரம்விளைத்தவன்றன்னை=எமக்கெல்லாம் இடுக்கண்செய்த தருமசேனனை; சொல்லுமினிச்செய்வதென்ன=இனிச்செய்வதை சொல்லுமென்றுகூற; சூழ்ச்சிமுடிக்குந்தொழிலோர்=தாங் கருதிய எண்ணத்தை முடிக்குந்தொழிலையுடைய சமணர்கள்; கல்லுடன்பாசம்பிணித்து=கருங்கல்லுடன் பாசத்தாற்பிணித்து; கடலிடைப்பாய்ச்சுகவென்றார்=கடலினிடத்து தள்ளுங்களென்று சொன்னார்கள்.—எ-று. (கஉஉ)

ஆங்கதுகேட்டவரச னவ்வினைமாக்களைநோக்கித்
தீங்குபுரிந்தவன்றன்னைச் சேமமுறக்கொண்டுபோகிப்
பாங்கொருகல்லிலணைத்துப் பாசம்பிணித்தோர்படகில்
வீங்கொலிவேலையிலேற்றி வீழ்த்துமினென்றுவிடுத்தான்.

(இ-ள்.) ஆங்கதுகேட்டவரசன்=அச்சமணர் சொன்னவார்த்தையைக் கேட்ட பல்லவன்; அவ்வினைமாக்களைநோக்கி=அக்கொடுந்தொழிலைச்செய்யும் ஏவலாளர்களைப் பார்த்து; தீங்குபுரிந்தவன்றன்னை=எமக்கு இடையூறுசெய்த அத்தருமசேனனை; சேமமுறக்கொண்டுபோகி=காவலாக அழைத்துக்கொண்டுபோய்; பாங்கொருகல்லிலணைத்து=அங்கு ஒருகல்லோடுசேர்த்து; பாசம்பிணித்தோர்படகில்ஏற்றி=கயிற்றாற்கட்டி ஓர்படகிலேற்றி; வீங்கொலிவேலையில்=மிக்க ஒலியையுடைய கடலில்; வீழ்த்துமினென்றுவிடுத்தான்=விழுத்துங்களென்று சொல்லியனுப்பினான்.—எ-று. (கஉ௩)

அவ்வினைசெய்திடப்போகு மவருடன்போயருகந்த
வெவ்வினையாளருஞ்சென்று மேவிடநாவுக்கரசர்
செவ்வியதாந்திருவுள்ளஞ் சிறப்பவவருடன்சென்றார்
பவ்வத்தின்மன்னவன்சொன்ன படிமுடித்தாரப்பதகர்.

(இ-ள்.) அவ்வினைசெய்திடப்போகும்=அக்கொடுந்தொழிலைச் செய்யச்செல்லும்; அவருடன்=ஏவலாளருடன்; அருகந்தவெவ்வினையாளருஞ்சென்றுமேவிட=சமணர்களாகிய கொடுவினைசெய்வாரும் தாம் இருந்த இடத்தினின்றும் நீங்கிக்கூடிவர; நாவுக்க

ரசர்செவ்வியதாந்திருவுள்ளஞ்சிறப்ப=திருநாவுக்கரசர் செப்பமான தமது திருவுள்ளம் சிறக்கும்படி; அவருடன்சென்ருர்=அச்சமணர்களோடு எழுந்தருளினர் அப்போது; அப்பதகர்=அப்பாவிகள்; பவ்வத்தின்மன்னவன்சொன்னபடி=சமுத்திரத்தில் தம்மரசன் சொன்னபடியே; முடித்தார்=இட்டார்கள்.—எ-று. (கஉச)

அப்பரிசவ்வினைமுற்றி யவரகன்றேகியபின்னர்
ஒப்பருமாக்கடல்புக்க வுறைப்புடைமெய்த்தொண்டர்தாமும்
எப்பரிசாயினுமாக வேத்துவனெந்தையையென்று
செப்பியவண்டமிழ்தன்னற் சிவனஞ்செழுத்துந்துதிப்பார்.

(இ-ள்.) அப்பரிசவ்வினைமுற்றி=அவ்வாறே கடலில்வீழ்த்தி; அவரகன்றேகிய பின்னர்=அவ்வேவலாளர்கள் நீங்கிச்சென்றபின்; ஒப்பருமாக்கடல்புக்க=ஒப்பற்ற பெரியகடலிலழுந்திய; உறைப்புடைமெய்த்தொண்டர்தாமும்=உறைப்பானமெய்ப்பத்தியையுடைய ஆண்டவரசும்; எப்பரிசாயினுமாக=இக்கடலில் ஆழினுமாக மிதப்பினுமாக; எத்துவனெந்தையையென்று=ஈண்டு எமது முதல்வராகிய பிரானைத் துதிப்பேனென்று; செப்பியவண்டமிழ்தன்னல்=பாடிய வளமமைந்த திருப்பதிகத்தால்; சிவனஞ்செழுத்துந்துதிப்பார்=சிவபிரானது திருவைந்தெழுத்தையும் துதிப்பாராயினர்.()

வேறு.

சொற்றுணை வேதிய னென்னுந் தூய்மொழி
நற்றமிழ் மாலையா நமச்சி வாயவென்
றற்றமுன் காக்குமைந் தெழுத்தை யன்பொடு
பற்றிய வுணர்வினற் பதிகம் பாடினர்.

(இ-ள்.) சொற்றுணைவேதியனென்னும்=சொற்றுணை வேதியனென்னும்; தூய மொழிநற்றமிழ்மாலையா=தூய்மையானமொழியை முதலிலுடைய நல்லமாலையாக; நமச்சிவாயவென்று=நமச்சிவாய என்றுமுடித்து; அற்றமுன்காக்குமைந்தெழுத்தை= பிறவித்துன்பத்தை முன்னின்றுகாக்கும் திருவைந்தெழுத்தை; அன்பொடுபற்றிய உணர்வினல்=மெய்யன்போடு சிந்தித்த உணர்ச்சியினல்; பதிகம்பாடினர்=பதிகத்தைப் பாடி யருளினர்.—எ-று. (கஉரு)

நமச்சிவாயப்பதிகம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடி பொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே. (க)

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
யாவினுக்கருங்கலம் மரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக்கருங்கல நமச்சிவாயவே. (உ)

விண்ணுறவடுக்கிய விறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவை யொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயவே. (ங)

சமணர் திருநாவுக்கரசைக் கல்விற்கட்டி கடலிலிட, அவர் தன்னை தடுத்தாட்கொண்ட பெம்மானைத்தொழுது பஞ்சாக்கரப்பதிகமோத, பெம்மானார் வருணனை யழைத்து நமது நாவுக்கரசு கடலில் கல்லின்மீது மிதக்கின்றனன். அவனை திருப்பாதிரிப்புலியூர் கெடிலநதிமுகப்பின்கண் சேர்க்கக் கடவையெனக் கட்டளையிட்டனர்.

இடுக்கண்பட்டிருக்கினு மிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோ
மடுக்கற்கீழ்க்கிடக்கினு மருளினுமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயவே. (௪)

வெந்தநீறருங்கலம் விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கல மருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந் திகழுநீண்முடி
நங்களுக்கருங்கல நமச்சிவாயவே. (௫)

சலமிலன்சங்கரன் சார்ந்தவர்க்கல்லால்
நலமிலனொடொறு நல்குவானலன்
குலமிலராகினுங் குலத்திற்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே. (௬)

வீடினருலகினில் விழுமியதொண்டர்
கூடினரந்நெறி கூடச்சென்றலு
மோடினேனோடிச்சென் றுருவங்காண்டலு
நாடினேனடிற்று நமச்சிவாயவே. (௭)

இல்லகவிளக்கது விருள்கெடுப்பது
சொல்லகவிளக்கது சோதியுள்ளது
பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயவே. (௮)

முன்னெறியாகிய முதல்வன்முக்கணன்
றன்னெறியேசர ணாதறிண்ணமே
யந்நெறியேசென்றங் கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே. (௯)

மாப்பிணைதழுவிய மாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடி பொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக் கிடுக்கணில்லையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சமணர்கள் கற்றூணிற்கட்டிக் கடலிலேவீழ்த்தினபோது ஓதியருளியது.

பெருகியவன்பினர் பிடித்தபெற்றியால்
அருமலரோன்முத லமரர்வாழ்த்துதற்
கரியவஞ்செழுத்தையு மரசுபோற்றிடக்
கருநெடுங்கடலினுட் கன்மிதந்ததே.

(இ-ள்.) பெருகியவன்பினர்பிடித்தபெற்றியால்=மிக்க அன்பினராய் உறுதியாகக்கொண்ட நிலைமையோடு; அருமலரோன்முதலமரர்வாழ்த்துதற்கரிய=அரிய பிரமன் முதலாகிய தேவர்கள் வாழ்த்துதற்கு அருமையாகிய; அஞ்செழுத்தையுமரசுபோற்றிட=திருவைந்தெழுத்தையும் திருநாவுக்கரசு துதிசெய்திட; கருநெடுங்கடலினுட்கன்மிதந்தது=அதனால் கரிய நீண்ட கடலினிடத்துக் கல்லானது மிதந்தது.—எ-று. ஏ - அசை.

அப்பெருங்கல்லுமங் கரசுமேற்கொளத்
தெப்பமாய்மிதத்தலிற் செறிந்தபாசமுந்
தப்பியததன்மிசை யிருந்ததாவில்சீர்
மெய்ப்பெருந்தொண்டனார் விளங்கித்தோன்றினார்.

(இ-ள்.) அப்பெருங்கல்லுமங்கரசுமேற்கொள=அந்தப் பெரிய கல்லும் வாகீசர் மேல் வீற்றிருக்கும்படிக்கு; தெப்பமாய்மிதத்தலில்=தெப்பமாய்த்தான் மிதத்தலினால்; செறிந்தபாசமுந்தப்பியது=அதனிடத்திற் பிணிக்கப்பட்ட கயிறுகளும் நெகிழ்ந்தன; அதன்மிசையிருந்த=அக்கல்லின்மேல் வீற்றிருந்த; தாவில்சீர்மெய்ப்பெருந்தொண்டனார்=அழியாத சிறப்பமைந்த மெய்யராகிய வாகீசமுனிவர்; விளங்கித்தோன்றினார்=விளக்கமடைந்து தோற்றினார்.—எ-று. (கஉஅ)

இருவினைப்பாசமு மலக்கலார்த்தலின்
வருபவக்கடலில்வீழ் மாக்களேறிட
அருளுமெய்யஞ்செழுத் தரசையிக்கடல்
ஒருகன்மேலேற்றிட லுரைக்கவேண்டுமோ.

(இ-ள்.) இருவினைப்பாசமுமலக்கலார்த்தலின்=நல்வினை தீவினையாகிய பாசமும் ஆணவமலமாகிய கல்லும் தம்மைப்பிணித்ததனால்; வருபவக்கடலில்வீழ்மாக்களேறிட=இடையறாது வருகின்ற பிறவியாகிய கடலில் முழுகிய மனிதர்கள் அக்கடலின்கரையை ஏறும்படி; அருளுமெய்யஞ்செழுத்து=அருளைச்செய்கின்ற மெய்ம்மையாகிய திருவைந்தெழுத்து; அரசையிக்கடலொருகன்மேலேற்றிடல்=திருநாவுக்கரசை இக்கடலில் கட்டிவிட்ட ஒருகல்லின்மேல் கரையேறச்செய்தலை; உரைக்கவேண்டுமோ=ஓர் புதுமையாகக் கூறவேண்டியதில்லை.—எ-று.

எண்ணும்மை விகாரத்தாற்றொக்கது. உரைக்கவேண்டுமோ வென்றதனால் தானே கரையேற்றுமென்றாயிற்று. இருவினைப்பாசம், மும்மலக்கலென்று பிரித்து இருவினைப் பாசத்தால் மும்மலக்கலோடு பிணிக்கப்படுதலின் என்றுரைப்பின் இருவினை மும்மலத்துளொன்றாதலின் அது பொருந்தாமையுணர்க. (கஉகூ)

அருணயந்தஞ்செழுத் தேத்தப்பெற்றவக்
கருணைநாவரசினைத் திரைக்கரங்களாற்
றெருணெறிநீர்மையிற் சிரத்திற்றாங்கிட
வருணனுஞ்செய்தனன் முன்புமாதவம்.

(இ-ள்.) அருணயந்தஞ்செழுத்தேத்தப்பெற்ற=சிவபிரான் திருவருளை நாடித் திருவைந்தெழுத்தைத் துதிக்கும்படிபெற்ற; அக்கருணைநாவரசினை=அந்தக்கருணையே திருவுருவாகக்கொண்ட ஆண்டவரசை; திரைக்கரங்களால்=திரையென்னும் கைகளினால்; தெருணெறிநீர்மையிற்சிரத்திற்றாங்கிட=இவர் மகிமையைத்தெளிந்த முறைமையாகிய குணத்தோடு சிரசினால் தாங்க; வருணனுஞ்செய்தனன்முன்புமாதவம்=வருணதேவனும் பெரிய தவத்தை முன்புசெய்தான்போலும்.—எ-று. (கஙo)

வருணன் நாவுக்கரசரை திருப்பாதிரிப்புலியூர் கெடிலநதி முகத்துவாரத்தின் கரைசேர்க்க, அப்பதியின்கணுள்ள சிவனடியார்கள் நாயனாரைத்தொழு து அவருடன் ஆலயத்திற்சென்றனர்.

வாய்ந்தசீர்வருணனே வாக்கின்மன்னரைச்
சேர்ந்தடைகருங்கலே சிவிகையாயிட
ஏந்தியேகொண்டெழுந் தருளுவித்தனன்
பூந்திருப்பாதிரிப் புலியூர்ப்பாங்கரில்.

(இ-ள்.) வாய்ந்தசீர்வருணனே=மேம்பட்ட சிறப்பினையுடைய வருணதேவனே; வாக்கின்மன்னரை=திருநாவுக்கரசை; சேர்ந்தடைகருங்கலே சிவிகையாயிட=தன்னை யடுத்துக் கரையையடைந்த கருங்கல்லே சிவிகையாக; ஏந்திக்கொண்டெழுந்தருளுவித்தனன்=திரைக்கரங்களாற்றாங்கிக்கொண்டு எழுந்தருளச்செய்வித்தனன்; பூந்திருப்பாதிரிப்புலியூர்ப்பாங்கரில்=பொலிவினையுடைய திருப்பாதிரிப்புலியூர்க்கருகில்.-எ-று. ஏகாரம் தேற்றம். (கஙக)

அத்திருப்பதியினி லணைந்தவன்பரை
மெய்த்தவக்குழாமெலா மேவியார்த்தெழ
எத்திசையினுமர வென்னுமோசைபோற்
றத்துநீர்ப்பெருங்கட லானுமார்த்ததே.

(இ-ள்.) அத்திருப்பதியினிலணைந்தவன்பரை=அத்திருப்பாதிரிப்புலியூரில் கரையேறிய ஆண்டவரசை; மெய்த்தவக்குழாமெலாமேவியார்த்தெழ=அங்குவாழும் மெய்யடியார் தொகுதிகளெல்லாம் கிட்டி மகிழ்ச்சியால் ஆரவாரித்து சூழ்ந்துவர; எத்திசையினுமரவென்னுமோசைபோல்=எத்திக்கினும் அவர்கள் அரகரவென்னும் ஓசைபோல; தத்துநீர்ப்பெருங்கடலானுமார்த்தது=அலையெறிகின்ற நீரையுடைய பெரியகடலும் ஒலித்தது.—எ-று. ஏ-அசை. (கஙஉ)

தொழுந்தகைநாவினுக் கரசுதொண்டர்முன்
செழுந்திருப்பாதிரிப் புலியூர்த்திங்கள்வெண்
கொழுந்தணிசடையனைக் கும்பிட்டன்புற
விழுந்தெழுந்தருணெறி விளங்கப்பாடுவார்.

(இ-ள்.) தொழுந்தகைநாவினுக்கரசு=யாவராலும் வணங்கப்படும் மேன்மையையுடைய திருநாவுக்கரசு; தொண்டர்முன்=அடியார்களோடு; செழுந்திருப்பாதிரிப்புலியூர்=செழுமை தங்கிய திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருந்தருளும்; திங்கள்வெண்கொழுந்தணிசடையனைக்கும்பிட்டு=வெள்ளிய இளம்பிறையைச்சூடிய சடைமுடியையுடைய சிவபிரானை வணங்கி; அன்புறவிழுந்தெழுந்து=பின்பு அன்போடு நிலமுறச்சாட்டாங்கமாகவணங்கி எழுந்து; அருணெறிவிளங்கப்பாடுவார்=சைவநெறியானது விளங்கும்படி பாடுவாராயினர்.—எ-று.

சைவாகமம் சிவபிரான் அருளாற்கூறுதலின் அச்சைவம் அருணெறியென்றாயிற்றென்க. (கஙங)

வேறு.

ஈன்றாளுமாயெனக் கெந்தையுமாகி யெனவெடுத்துத்
தோன்றாத்துணையா யிருந்தனன் றன்னடி யோங்கட்கென்று
வான்றாழ்புனற்கங்கை வாழ்சடையானைமற் றெவ்வுயிர்க்குஞ்
சான்றாமொருவனைத் தண்டமிழ்மாலைகள் சாத்தினரே.

(இ-ள்.) ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாகியெனவெடுத்து=திருப்பதிகத்தின் முதலில் ஈன்றாளுமாயெனக் கெந்தையுமாகியென்றெடுத்து; தோன்றாத்துணையாயிருந்தனன்

தன்னடியோங்கட்கென்று—தோன்றாத்துணையாயிருந்தனன் தன்னடியோங்கட்கென்று அத்திருவிருத்தத்தின் இறுதியில்வைத்து; வான்றாழ்புனற்கங்கைவாழ்சடையானை—விண்ணினின்றும் இழிந்த நீராகிய கங்கைநதிவாழ்கின்ற சடையையுடையவருக்கு; மற்றெவ்வுயிர்க்குஞ்சான்றாமொருவனை—அடியாரல்லாத பிறவுயிர்களுக்கும் சிவசாட்சியாய் மறைந்திருக்கின்ற ஒருவருக்கு; தண்டமிழ்மாலைகள்சாத்தினர்—தட்பமான திருப்பதிக மாலையைச்சாத்தினர்.—எ-று. ஏ-அசை.

தோன்றாத்துணையாயிருத்தல்—அடியருணர்வில் வெளிப்பட்டு அவரைத் தன் வசமாக்கி அவர்க்குவரும் இடுக்கணை அவரறியாது களைதல். மற்றெவ்வுயிர்க்குஞ்சான்றாய்நிற்றல்—அவ்வுயிர்களறியாது அவ்வுயிருட்கலந்து வினைவழியுணர்த்தி அந்தரியாமியாய் நிற்றல். (௧௬௪)

திருப்பாதிரிப்புலியூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஈன்றாளுமாயெனக் கெந்தையுமாயுடன் றோன்றினராய்
மூன்றாயுலகம் படைத்துகந்தான்மனத் துள்ளிருக்க
வேன்றானிமையவர்க் கன்பன்றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத்துணையா யிருந்தனன்றன்னடி யோங்களுக்கே. (௧)

பற்றாய்நினைந்திடப் போதுநெஞ்சேயிந்தப் பாரைமுற்றுஞ்
சுற்றாயலைகடன் மூடினுங்கண்டேன் புகனமக்கு
உற்றானுமையவட் கன்பன்றிருப்பா திரிப்புலியூர்
முற்றாமுளைமதிக் கண்ணியினான்றன மொய்கழலே. (௨)

விடையான்விரும்பியென் னுள்ளத்திருந்தா னினிநமக்கிங்
கடையாவவல மருவினைசாரா நமனையஞ்சோம்
புடையார்கமலத் தயன்போல்பவர்பா திரிப்புலியூ
ருடையானடிய ரடியடியோங்கட் கரியதுண்டே. (௩)

மாயமெலாமுற்ற விட்டிருணீங்கி மலைமகட்கே
நேயநிலவ விருந்தானவன்றன் றிருவடிக்கே
தேயமெலாநின் றிறைஞ்சுந்திருப்பா திரிப்புலியூர்
மேயநல்லான்மலர்ப் பாதமென்சிந்தையு ணின்றனவே. (௪)

வைத்தபொருணமக் காமென்றுசொல்லி மனத்தடைத்துச்
சித்தமொருக்கிச் சிவாயநமவென் றிருக்கினல்லான்
மொய்த்தகதிர்மதி போல்வாரவர்பா திரிப்புலியூ
ரத்தனருள்பெற லாமோவறிவிலாப் பேதைநெஞ்சே. (௫)

கருவாய்க்கிடந்துன் கழலேநினையுங் கருத்துடையே
னுருவாய்த்தெரிந்துன்ற னாமம்பயின்றே னுனதருளாற்
றிருவாய்ப்பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்
றருவாய்சிவகதி நீபாதிரிப்புலி யூரரனே. (௬)

எண்ணுதமர ரிரக்கப்பரவையு ணஞ்சையுண்டாய்
திண்ணரசுரர் திரிபுரந்தீயெழச் செற்றவனே
பண்ணார்ந்தமைந்த பொருள்கள்பயில்பா திரிப்புலியூர்க்
கண்ணார்நுதலாய் கழனங்கருத்தி லுடையனவே. (எ)

புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க்கிரங்கி யிருந்தருள்செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடைமேல்வைத்த தீவண்ணனே. (அ)

மண்பாதலம்புக்கு மால்கடன்மூடிமற் றேழுலகும்
விண்பாறிசைகெட் டிருசுடர்வீழினு மஞ்சனெஞ்சே
திண்பானமக்கொன்று கண்டோந்திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக் கடவுட்சுடரான் கழலிணையே. (௯)

திருந்தாவமணர்தந் தீநெறிப்பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கே சரணம்புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தாவரக்க னுடனெரித்தாய்பா திரிப்புலியூ
ரிருந்தாயடியே னினிப்பிறவாமல்வந் தேன்றுகொள்ளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம்-நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தோன்றாத்துணையீசுவரர், தேவியார்பெயர்-தோகையம்பிகையம்மை.

மற்றுமினையன வண்டமிழ்மாலைகள் பாடிவைகி
வெற்றிமழவிடை வீரட்டர்பாத மிகநினைவில்
உற்றதொர்காதலி னங்குநின்றேகியொன் னார்புரங்கள்
செற்றவர்வாழுந் திருவதிகைப்பதி சென்றடைவார்.

(இ-ள்.) மற்றுமினையனவண்டமிழ்மாலைகள்பாடிவைகி=வேறும் இத்தன்மையனவாகிய வளவிய திருப்பதிகமாலைகளைப் பாடியருளி அங்குவசித்து; வெற்றிமழவிடைவீரட்டர்பாதம்=வெற்றியுடைய இளமையான இடபத்தை வாகனமாகக் கொண்டருளும் வீரட்டேசரது திருவடிகளிடத்தில்; மிகநினைவிலுற்றதொர்காதலின்=மிகவும் தங் கருத்தில் உற்றவிருப்பத்தால்; அங்குநின்றேகி=அத்திருப்பாதிரிப்புலியூரினின்றும் எழுந்தருளி; ஒன்னார்புரங்கள்செற்றவர்வாழும்=பகைவரது புரங்களை எரித்த வீரட்டேசர் வீற்றிருந்தருளும்; திருவதிகைப்பதிசென்றடைவார்=திருவதிகைப்பதியை அடைவாராயினர்.—எ-று. (௧௩௫)

தேவர்பிரான்திரு மாணிகுழியுந் தினைநகரு
மேவினர்சென்று விரும்பியசொன்மலர் கொண்டிறைஞ்சிப்
பூவலர்சோலை மணமடிபுல்லப் பொருண்மொழியின்
காவலர்செல்வத் திருக்கெடிலத்தைக் கடந்தணைந்தார்.

(இ-ள்.) தேவர்பிரான்திருமாணிகுழியும்=தேவர்க்கெல்லாம் முதல்வராகிய சிவபிரான் வீற்றிருந்தருளும் திருமாணிகுழியையும்; தினைநகரும்மேவினர்சென்று=திருத்

திணைகளையும் விரும்பிச்சென்று; விரும்பியசொன்மலர்கொண்டிறைஞ்சி=தம்மால் விரும்பப்பட்ட பாமாலைகளைக்கொண்டுவணங்கி; பூவலர்சோலைமணமடிபுல்ல=சோலையில் மலர்ந்திருக்கின்ற மலர்களின் மணமானது தமது திருவடிகளிற்பொருந்த; பொருண்மொழியின்காவலர்=பொருளமைந்த வாகீசமுனிவர்; செல்வத்திருக்கெடிலத்தைக்கடந்தணைந்தார்=செல்வம் நிறைந்த கெடிலநதியைக்கடந்துசென்றார்.—எ-று. (கசுசு)

வெஞ்சமண்குண்டர்கள் செய்வித்ததீய மிறைகளெல்லாம்
எஞ்சவென்றேறிய வின்றமிழீச ரெழுந்தருள
மஞ்சிவர்மாடத் திருவதிகைப்பதி வாணரெல்லாந்
தஞ்செயல்பொங்கத் தழங்கொலிமங்கலஞ் சாற்றலுற்றார்.

(இ-ள்.) வெஞ்சமண்குண்டர்கள்செய்வித்த=கொடிய சமணர்களாகிய கோளர்கள் பல்லவனாற்செய்வித்த; தீயமிறைகளெல்லாமெஞ்சவென்று=கொடிய துயரங்களெல்லாம் தம்மைவாதியாமல் அகலும்படி வென்று;ஏறியவின்றமிழீசரெழுந்தருள=சமுத்திரத்தில் மிதந்துகரையேறிய இனிய ஆண்டவரசர் எழுந்தருளலும்; மஞ்சிவர்மாடத்திருவதிகைப்பதிவாணரெல்லாம்=மேகங்கள்தவழ்கின்றதிருவதிகையின்கண்வாழும்அடியார்களெல்லாம்; தஞ்செயல்பொங்க=தங்களுடைய செயலினாற் குதூகலமுண்டாக; தழங்கொலிமங்கலஞ்சாற்றலுற்றார்=மிக்க ஒலியோடு மங்கலவாழ்த்தெடுத்துக் கூறினார்கள்.—எ-று.

குண்டர் என்றதுகபடர், கோளர், முரட்டுடம்புடையவர் எனப் பிரகிருதத்திற்கேற்கப் பொருள்படும். (கசுஎ)

மணிநெடுந்தோரணம் வண்குலைப்பூக மடற்கதலி
இணையுறநாட்டி யெழுநிலைக்கோபுரந் தெற்றியெங்குந்
தணிவில்பெருகொளித் தாமங்கணாற்றிச்செஞ் சாந்துநீவி
யணிநகர்முன்னை யணிமேலணிசெய் தலங்கரித்தார்.

(இ-ள்.) மணிநெடுந்தோரணம்=மணிகளழுத்திய நீண்ட மகரதோரணங்களையும்; வண்குலைப்பூகமடற்கதலி=வளமாகிய குலைகளையுடைய கமுகமரங்களையும் மடல்களையுடைய வாழைமரங்களையும்; இணையுறநாட்டி=நெருங்கநாட்டி; எழுநிலைக்கோபுரந்தெற்றியெங்கும்=எழுநிலையையுடைய கோபுரங்களிலும் திண்ணைகளிலும்; தணிவில்பெருகொளித்தாமங்கணாற்றி=குறைவின்றி மிக்கு விளங்கும் பொன்னரிமாலைகளைத்தூக்கி; செஞ்சாந்துநீவி=செஞ்சந்தனக்குழம்பால் மெழுக்கிட்டு; அணிநகர்முன்னையணிமேல்=அழகிய நகரத்தை முன்னுள்ள அலங்காரத்தினும் அதிகமாக; அணிசெய்தலங்கரித்தார்=சிறப்புச்செய்து அலங்கரித்தார்கள்.—எ-று. (கசுஅ)

மன்னியவன்பின் வளநகர்மாந்தர் வயங்கிழையார்
இன்னியநாதமு மேழிசையோசையு மெங்கும்விம்மப்
பொன்னியல்சுண்ணமும் பூவும்பொரிகளுந் தூவியெங்குந்
தொன்னகரின்புறஞ் சூழ்ந்தெதிர்கொண்டனர் தொண்டரையே.

(இ-ள்.) மன்னியவன்பின்வளநகர்மாந்தர்=நிலைபெற்ற அன்பினையுடைய வளந்தங்கிய அந்நகரத்தில் வாழும் மனிதர்களும்; வயங்கிழையார்=விளங்குகின்ற ஆபரணத்தையணிந்த மாதர்களும்; இன்னியநாதமுமேழிசையோசையும்=இனிமையாக ஒலிக்கின்ற வாத்தியங்களின் முழக்கமும் ஏழுசுரங்களினுடைய இசையும்; எங்கும் விம்ம=

எவ்விடத்து மிக்கொலிக்க; பொன்னியல்சுண்ணமும்=பொன்போலும் நிறத்தையுடைய சுண்ணப்பொடிகளையும்; பூவும்பொரிகளும்எங்குந்தூவி=மலர்களையும் பொரிகளையும் எங்குந்தூவி; தொன்னகரின்புறஞ்சூழ்ந்து=பழைய நகர்ப்புறத்தேவந்து சூழ்ந்து; எதிர்கொண்டனர்தொண்டரை=ஆண்டவரசை எதிர்கொண்டார்கள்.—எ-று. ஏ-அசை. ()

தூயவெண்ணீறு துதைந்தபொன்மேனியுந் தாழ்வடமு
நாயகன்சேவடி தைவருஞ்சிந்தையு நைந்துருகிப்
பாய்வதுபோலன்பு நீர்பொழிகண்ணும் பதிகச்செஞ்சொன்
மேயசெவ்வாயு முடையார்புகுந்தனர் வீதியுள்ளே.

(இ-ள்.) தூயவெண்ணீறுதுதைந்த=தூய்மையாகிய வெள்ளிய திருவெண்ணீறு நெருங்கப்பூசிய; பொன்மேனியும்தாழ்வடமும்=பொன்போலும்திருமேனியும் கழுத்தில் திருவடையாளமாலையும்; நாயகன்சேவடிதைவருஞ்சிந்தையும்=சிவபிரான் திருவடிகளைத் தியானஞ்செய்கின்ற கருத்தும்; நைந்துருகிப்பாய்வதுபோல்=உள்ளிருந்த அன்பு கசிந்துருகிப் பாய்வதுபோல்; அன்புநீர்பொழிகண்ணும்=ஆனந்த அருவிசொரிகின்ற கண்ணும்; பதிகச்செஞ்சொன்மேயசெவ்வாயும்=செப்பமாகிய சொல்லமைந்த திருப்பதிகங்களை அருளிச்செய்கின்ற சிவந்தவாயும்; உடையார்புகுந்தனர்வீதியுள்=உடைய ஆண்டவரசு திருவதிகைவீதியிற் புகுந்தருளினார்.—எ-று. ஏ-அசை. (கசo)

கண்டார்கள்கைதலை மேற்குவித்திந்தக் கருணைகண்டால்
மிண்டாயசெய்கைய மண்கையர்தீங்கு விளைக்கச்செற்றம்
உண்டாயினவண்ண மெவ்வண்ணமென்றுரைப் பார்கள்பின்னுந்
தொண்டாண்டுகொண்ட பிரானைத்தொழுது துதித்தனரே.

(இ-ள்.) கண்டார்கள்கைதலைமேற்குவித்து=வாகீசமுனிவரைக்கண்ட அத்திருவதிகையின்கண் வாழ்வோர்கள் கை தலைமேற்கொண்டு; இந்தக்கருணைகண்டால்=இக்கருணையுருவாகிய திருக்கோலத்தைத் தரிசித்தால்; மிண்டாயசெய்கையமண்கையர்=கொடிய தொழிலையுடைய சமணர்களாகிய இழிந்தோர்கள்; தீங்குவிளைக்க=இவர்க்கு இடையூறுசெய்தற்கு ஏதுவாக; செற்றமுண்டாயினவண்ணமெவ்வண்ணமென்று=அவர்க்குப் பகைமை உண்டாயினவாறு எவ்வாறென்று; உரைப்பார்கள்=சொல்வார்கள்; பின்னுந்தொண்டாண்டுகொண்டபிரானை=பின்னும் அவர் தீங்கு இவர்க்குவாராது காத்த பெருங்கருணைகருதி அவரைத்தொண்டாக அடிமைக்கொண்ட வீரட்டேசரை; தொழுது துதித்தனர்=வணங்கித் துதித்தார்கள்.—எ-று.ஏ-அசை. (கசக)

இவ்வண்ணம்போல வெனைப்பலமாக்க ளியம்பியேத்த
மெய்வ்வண்ணநீற்றொளி மேவுங்குழாங்கள் விரவிச்செல்ல
அவ்வண்ணநண்ணிய வன்பரும்வந்தெய்தி யம்பவளச்
செவ்வண்ணர்கோயிற் றிருவீரட்டானத்தைச் சேர்ந்தனரே.

(இ-ள்.) இவ்வண்ணம்போல=இதுபோல; எனைப்பலமாக்களியம்பியேத்த=மற்றைய பலமனிதர்களும் புகழ்ந்து துதிக்க; மெய்வ்வண்ணநீற்றொளி=திருமேனியிடத்து நிறத்தையுடைய திருநீற்றினொளி; மேவுங்குழாங்கள்விரவிச்செல்ல=விளங்கி யிருக்கும் திருக்கூட்டங்கள் திரண்டுவர;அவ்வண்ணநண்ணியவன்பரும்வந்தெய்தி=அவ்வாறெழுந்தருளிய வாகீசமுனிவர் திருவுளம் மகிழ்ந்துசென்று; அம்பவளச்செவ்வண்ணர்கோயில்=அழகிய பவளம்போலும் சிவந்த நிறத்தையுடையவரது கோயிலாகிய; திருவீரட்டானத்தைச்சேர்ந்தனர்=திருவீரட்டானத்தை யடைந்தார்.—எ-று. (கசஉ)

உம்பர்தங்கோனை யுடையபிரானையுள் புக்கிறைஞ்சி
நம்புறுமன்பின யப்புறுகாதலி னூற்றிளைத்தே
எம்பெருமான்றனை யேழையேனான்பண் டிகழ்ந்ததென்று
தம்பரிவாற்றிருத் தாண்டகச்செந்தமிழ் சாற்றிவாழ்ந்தார்.

(இ-ள்.) உம்பர்தங்கோனைஉடையபிரானை—தேவர்க்கு முதல்வனை எம்மையாளாகவுடைய தலைவனை; உள்புக்கிறைஞ்சி—திருக்கோயிலினுள்ளே புகுந்து வணங்கி; நம்புறுமன்பின்—மிகவும் விரும்புகின்ற அன்பினால்; நயப்புறுகாதலினூற்றிளைத்து—உதிக்கும் பேரன்பில்முழுகி; எம்பெருமான்றனையேழையேனான்—எமது பிரானை யேழையேனாகிய நான்; பண்டிகழ்ந்ததென்று—முன்னே இகழ்ந்துகூறியதென்று இறுதியில்வைத்து; தம்பரிவாற்றிருத்தாண்டகச்செந்தமிழ்—தங்குற்றத்திற்குப்பரியுங் கருத்தோடு செந்தமிழாலாகிய திருத்தாண்டகத்தை; சாற்றிவாழ்ந்தார்—பாடி வாழ்வடைந்தார்.--எ-று.

ஏ - அசை. (கசரு)

திருவதிகைவீரட்டானம் - ஏழைத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வெறிவிரவுகூவிளநற்றெருங்கலானை வீரட்டத்தானைவெள்ளேற்றினானைப்
பொறியரவினானைப்புள்ளூர்தியானைப் பொன்னிறத்தினானைப்புகழ்தக்கானை
யறிதற்கரியசீரம்மான்றன்னை யதியரையமங்கையமர்ந்தான்றன்னை
யெறிகெடிலத்தானையிறைவன்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே.

வெள்ளிக்குன்றன்னவிடையான்றன்னை வில்வலான்வில்வட்டங்காய்ந்தான்றன்னைப், புள்ளிவரிநாகம்பூண்டான்றன்னைப் பொன்பிதிர்ந்தன்னசடையான்றன்னை, வள்ளிவளைத்தோள்முதல்வன்றன்னை வாராவுலகருளவல்லான்றன்னை, யெள்கவிடுபிச்சையேற்பான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (உ)

முந்தியுலகம்படைத்தான்றன்னை மூவாமுதலாயமூர்த்திதன்னைச், சந்தவெண்டிங்களணிந்தான்றன்னைத் தவநெறிகள்சாதிக்கவல்லான்றன்னைச், சிந்தையிற்றீர்வினையைத்தேனைப்பாலைச் செழுங்கோயில்வீரட்டமேவினானை, யெந்தைபெருமானையீசன்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (ங)

மந்திரமுமறைப்பொருளுமானான்றன்னை மதியமுஞாயிறுங்காற்றுந்தீயு, மந்தரமுமலைகடலுமானான்றன்னை யதியரையமங்கையமர்ந்தான்றன்னைக், கந்தருவஞ்செய்திருவர்கழல்கைகூப்பிக் கடிமலர்கள்பலதூவிக்காலைமாலை, யிந்திரனும்வானவருந்தொழச்செல்வானை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே.

ஒருபிறப்பிலானடியையுணர்ந்துங்காணா ருயர்கதிக்குவழிதேடிப்போகமாட்டார், வருபிறப்பொன்றுணராதுமாசுபூசி வழிகாணாதவர்போல்வார் மனத்தனாகி, யருபிறப்பையறுப்பிக்குமதிகையூரா னம்மான்றனடியிணையேயணைந்துவாழா, திருபிறப்பும்வெறுவியராயிருந்தார்சொற்கேட்டேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (ரு)

ஆறேற்கவல்லசடையான்றன்னை யஞ்சனம்போலுமிடற்றான்றன்னைக்
கூறேறக்கூறமரவல்லான்றன்னைக் கோல்வளைக்கைமாதராள்பாகன்றன்னை
நீறேற்கப்பூசுமகலத்தானை நின்மலன்றன்னைநிமலன்றன்னை
யேறேற்கவேறுமாவல்லான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௬)

குண்டரக்கனாயுழன்றுகையிலுண்டு குவிமுலையார்தம்முன்னேநாணமின்றி, யுண்டியுகந்தமணேநின்றார்சொற்கேட் டுடனாகியுழிதந்தேனுணர்வொன்றின்றி, வண்டுலவுகொன்றையங்கண்ணியானை வானவர்களேத்தப்படுவான்றன்னை, யெண்டிசைக்குமூர்த்தியாய்நின்றான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (எ)

உறிமுடித்தகுண்டிகைகையிற்றூக்கி யூத்தைவாய்ச்சமணர்க்கோர்குண்டரக்கனாய்க், கறிவிரவுநெய்சோறுகையிலுண்டு கண்டார்க்குப்பொல்லாதகாட்சியானேன், மறிதிரைநீர்ப்பவ்வநஞ்சுண்டான்றன்னை மறித்தொருகால்வல்வினையேனினைக்கமாட்டேன், னெறிகெடிலநாடர்பெருமான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (அ)

நிறைவார்ந்தநீர்மையாய்நின்றான்றன்னை நெற்றிமேற்கண்ணொன்றுடையான்றன்னை, மறையானைமாசொன்றில்லாதான்றன்னை வானவர்மேல்மலரடியைவைத்தான்றன்னைக், கறையானைக்காதார்குழையான்றன்னைக் கட்டங்கமேந்தியகையினானை, யிறையானையெந்தைபெருமான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௯)

தொல்லைவான்சூழ்வினைகள்சூழப்போந்து தூற்றியேனாற்றியேசுடராய்நின்று, வல்லையேயிடர்தீர்த்திங்கடிமைகொண்ட வானவர்க்குந்தானவர்க்கும்பெருமான்றன்னைக், கொல்லைவாய்க்குருந்தொசித்துக்குழலுமூதுங் கோவலனுநான்முகனுங்கூடியெங்கு, மெல்லைகாண்பரியானையெம்மான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௧௦)

மூலமறைக்கப்பட்டுநீராடாப்பெண்கள் முறைமுறையானந்தெய்வமென்றுதீண்டித், தலைபறிக்குந்தன்மையர்களாகிநின்று தவமென்றவஞ்செய்துதக்கதோரார், மலைமறிக்கச்சென்றவிலங்கைக்கோனை மதனழியச்செற்றசேவடியினானை, யிலைமறித்தகொன்றையந்தாரான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

வேறு.

அரியயனுக்கரியானை யடியவருக்கெளியானை
விரிபுனல்சூழ்திருவதிகை வீரட்டானத்தமுதைத்
தெரிவரியபெருந்தன்மைத் திருநாவுக்கரசுமனம்
பரிவுறுசெந்தமிழ்ப்பாட்டுப் பலபாடிப்பணிசெயுநாள்.

(இ-ள்.) அரியயனுக்கரியானை=திருமால் பிரமன் என்னும் இருவர்க்கும் அரியவரை; அடியவருக்கெளியானை=மெய்யடியார்க்கு எளிவந்தவரை; விரிபுனல்சூழ்=

பரந்த கெடிலநதியானது சூழ்ந்த; திருவதிகைவீரட்டானத்தமுதை—திருவதிகைவீரட்டானத்து வீற்றிருந்தருளும் அமுதம்போல்வாரை; தெரிவரியபெருந்தன்மைத்திருநாவுக்கரசு—யாவராலுமறிதற்கரிய மகிமையையுடைய ஆண்டவரசு; மனம்பரிவுறுசெந்தமிழ்ப்பாட்டு—மனதுக்கு அன்பைவிளைக்கும் செந்தமிழாலாகிய பாடல்கள்; பலபாடிப்பணிசெயுநாள்—பலவற்றை யங்கருளிச்செய்து உழவாரப்பணி செய்துகொண்டிருக்குநாளில்.—எ-று. (கசச)

புல்லறிவிற்சமணர்க்காய்ப் பொல்லாங்குபுரிந்தொழுகும்
பல்லவனுந்தன்னுடைய பழவினைப்பாசம்பறிய
அல்லலொழிந்தங்கெய்தி யாண்டவரசினைப்பணிந்து
வல்லமணர்தமைநீத்து மழவிடையோன்றாளடைந்தான்.

(இ-ள்.) புல்லறிவிற்சமணர்க்கா—சிறிய அறிவினையுடைய சமணர்களுக்காக; பொல்லாங்குபுரிந்தொழுகும்பல்லவனும்—ஆண்டவரசுக்கு தீச்செய்கைகளைச்செய்து நடக்கும் பல்லவராசனும்; தன்னுடையபழவினைப்பாசம்பறிய—தன்னைப்பற்றிய தீவினையோடு சேர்ந்த மலமானது நீங்க; அல்லலொழிந்தங்கெய்தி—பிறவித்துயரத்தினின்று நீங்கி திருவதிகையையடைந்து; ஆண்டவரசினைப்பணிந்து—ஆண்டவரசினை வணங்கி; வல்லமணர் தமைநீத்து—கொடியவர்களாகிய சமணர்களைவிட்டு; மழவிடையோன்றாளடைந்தான்—சிவபிரான் திருவடிகளையடைந்தான்.—எ-று.

இவ்விரண்டுங் குளகம். (கசரு)

வீடறியாச்சமணர்மொழி பொய்யென்றுமெய்யுணர்ந்த
காடவனுந்திருவதிகை நகரின்கட்கண்ணுதற்குப்
பாடலிபுத்திரத்திலமண் பள்ளியொடுபாழிகளுங்
கூடவிடித்துக்கொணர்ந்து குணதரவீச்சரமெடுத்தான்.

(இ-ள்.) வீடறியாச்சமணர்மொழிபொய்யென்று—வீட்டுநெறியின் இயல்பு இவ்வண்ணமென்று அறியாத சமணர்கள் கூறும் சொல் பொய்யென்று; மெய்யுணர்ந்தகாடவனும்—மெய்ந்நெறியையுணர்ந்த பல்லவனும்; திருவதிகைநகரின்கட்கண்ணுதற்கு—திருவதிகைநகரினிடத்துச் சிவபிரானுக்கு; பாடலிபுத்திரத்திலமண்பள்ளியொடு—பாடலிபுத்திரத்திலுள்ள அமணர்கள் வசிக்கும் பள்ளிகளுடன்; பாழிகளுங்கூடவிடித்துக்கொணர்ந்து—கோயில்களையும் ஒருங்கு இடித்துக்கொண்டுவந்து; குணதரவீச்சரமெடுத்தான்—குணதரவீச்சரமென்னும் ஆலயத்தைக்கட்டினான்.—எ-று.

பல்லவர்க்குக் காடவரென்றும்பெயர். (கசசு)

இந்நாளிற்றிருப்பணிகள் செய்கின்றவின்றமிழ்க்கு
மன்னனவாகீசத் திருமுனியுமதிச்சடைமேற்
பன்னகமணிந்தவர்தம் பதிபலவுஞ்சென்றிறைஞ்சிச்
சொன்னமத்தமிழ்புனைந்து தொண்டுசெய்வான்றொடர்ந்தெழுவார்.

(இ-ள்.) இந்நாளிற்றிருப்பணிகள்செய்கின்ற—அவ்வாறிருக்கும் நாளில் உழவாரத்திருத்தொண்டுசெய்கின்ற; இன்றமிழ்க்குமன்னனவாகீசத்திருமுனியும்—இனிய தமிழுக்கு அரசராகிய வாகீசமுனிவரும்; மதிச்சடைமேற்பன்னகமணிந்தவர்தம்—இளம்பிறையணிந்த சடைமுடியின்மேல் பலபாம்பையணிந்த பிரானது; பதிபலவுஞ்சென்றிறைஞ்சி—திருப்பதிகள் பலவற்றினும் போய்வணங்கி; சொன்னமத்தமிழ்புனைந்து—எடுத்துக்கூறும் திருநாமமாகிய தமிழ்மாலையைப்பாடி; தொண்டுசெய்வான்றொடர்ந்தெழுவார்—திருத்தொண்டுசெய்யும்படி திருவுளத்திற்கருதி எழுவாராயினர்.—எ-று. (கசஎ)

[illegible] திருவதிகையில் தொண்டுசெய்திருக்க, இவரது உண்மையையறிந்த சமணராஜனாகிய பல்லவன் சமணர்களால் இவர்க்குத் தீங்கு விளைந்ததைக்கருதி துக்கித்து தான் சைவனாகி சமணர்கள் பாழி பள்ளி ஆலய முதலியது மிடிப்பித்து பல்லவனீச்சுரமென்னும் ஓர் சிவாலயம் கட்டுவித்து சிவலிங்கப்பிரதிட்டைசெய்து வழிப்பட்டு வந்தனன்.

திருவதிகைப்பதிமருங்கு திருவெண்ணெய்நல்லூரும்
அருளுதிருவாமாத்தூர் திருக்கோவலூர்முதலா
மருவுதிருப்பதிபிறவும் வணங்கிவளத்தமிழ்பாடிப்
பெருகுவிருப்புடன்விடையார் மகிழ்பெண்ணகடமணைந்தார்.

(இ-ள்.) திருவதிகைப்பதிமருங்கு=திருவதிகைக்குச்சமீபமாயுள்ள; திருவெண்ணெய்நல்லூரும்=திருவெண்ணெய்நல்லூரென்னும் திருப்பதியையும்; அருளுதிருவாமாத்தூர்=அருளைச்செய்யும் திருவாமாத்தூரும்; திருக்கோவலூர்முதலா=திருக்கோவலூரும் முதலாக; மருவுதிருப்பதிபிறவும்=அதன்சமீபத்துள்ள பிறதிருப்பதிகளையும்; வணங்கிவளத்தமிழ்பாடி=வணங்கி வளவிய தமிழ்ப்பதிகம்பாடி; பெருகுவிருப்புடன் விடையார்மகிழ்=மிக்க விருப்போடு சிவபிரான் மகிழ்ந்தருளும்; பெண்ணகடமணைந்தார்=பெண்ணகடம் என்னும் திருப்பதியை அடைந்தருளினார்.—எ-று. (கசஅ)

கார்வளருமாடங்கள் கலந்தமறையொலிவளர்க்குஞ்
சீருடையந்தணர்வாழுஞ் செழும்பதியினகத்தெய்தி
வார்சடையார்மன்னுதிருத் தூங்கானைமாடத்தைப்
பார்பரவுந்திருமுனிவர் பணிந்தேத்திப்பரவினார்.

(இ-ள்.) கார்வளருமாடங்கள்=மேகங்கள் தவழ்கின்ற மாடங்கள்தோறும்; கலந்தமறையொலிவளர்க்கும்=சுரம் இசைந்த வேதங்களின் ஓசையை ஓதுதலால் வளரச்செய்யும்; சீருடையந்தணர்வாழும்=சிறப்புடைய மறையவர்கள்வாழும்; செழும்பதியினகத்தெய்தி=செழுமைதங்கிய பெண்ணகடம் என்னும் திருப்பதியையடைந்து; வார்சடையார்மன்னு=நீண்ட சடைமுடியையுடைய சிவபிரானார் வீற்றிருந்தருளும்; திருத்தூங்கானைமாடத்தை=திருத்தூங்கானைமாடமென்னும் திருக்கோயிலை; பார்பரவுந்திருமுனிவர்=நிலவுலகத்தார் துதிசெய்யும் வாகீசமுனிவர்; பணிந்தேத்திப்பரவினார்=நிலமுறவணங்கி அஞ்சலிசெய்து தோத்திரஞ்செய்தார்.—எ-று. (கசகூ)

புன்னெறியாமமண்சமயத் தொடக்குண்டுபோந்தவுடல்
தன்னுடனேயுயிர்வாழத் தரியேனான்றரிப்பதனுக்
கென்னுடையநாயகநின் னிலச்சினையிட்டருளென்று
பன்னுசெழுந்தமிழ்மாலை முன்னின்றுபாடுவார்.

(இ-ள்.) புன்னெறியாமமண்சமயத்தொடக்குண்டுபோந்த=இழிந்த நெறியாகிய சமணசமயச்சார்பில் பிணிப்புண்டுவந்த; உடல்தன்னுடனேயுயிர்வாழத்தரியேனான்=உடம்புடனேகூடி உயிர்வாழ்தற்கு ஆற்றேன்; தரிப்பதனுக்கென்னுடையநாயக=அவ்வுடலோடுகூடி வாழ்தற்கு என்னுடைய முதல்வனே; நின்னிலச்சினையிட்டருளென்று=உன்னுடைய இடபமுத்திரையும் சூலமுத்திரையும் இட்டருளென்று; பன்னுசெழுந்தமிழ்மாலை=யாவரும் துதிக்கத்தக்க செந்தமிழ்த்திருப்பதிகத்தை; முன்னின்றுபாடுவார்=திருமுன்னேநின்று பாடுவாராயினார்.—எ-று. (கருo)

பொன்னார்ந்ததிருவடிக்கென் விண்ணப்பமென்றெடுத்து
முன்னாகியெப்பொருட்கு முடிவாகிநின்றவனைத்
தன்னகத்துமைபாகங் கொண்டவனைச்சங்கரனை
நன்னாமத்திருவிருத்த நலஞ்சிறக்கப்பாடுதலும்.

(இ-ள்.) பொன்னார்ந்ததிருவடிக்கு=பொன்போற்சிவந்த திருவடிகளுக்கு; என் விண்ணப்பமென்றெடுத்து=அடியேன் விண்ணப்பமென்று முதலெடுத்து; முன்னாகியெ

ப்பொருட்குமுடிவாகின்றவனே—எப்பொருட்குமுதலாயும் எப்பொருட்குமுடிவாயும் நிற்கின்றவனே; தன்னகத்துமைபாகங்கொண்டவனேச்சங்கரனே—தன் திருமேனியோடு உமையாளை ஓர்கூற்றிற்கொண்ட பிரானே சங்கரனென்னுந் திருநாமமுடையவனே; நன்னமத்திருவிருத்தம்—நன்மையுடைய திருநாமமாகிய திருவிருத்தத்தை; நலஞ்சிறக்கப்பாடுதலும்—சொல்வளம் பொருள்வளஞ் சிறக்கப்பாடவும்.—எ-று.

முன்னாதல்—எப்பொருளுமுதித்தற்குத் தான் முன்னிற்றல். முடிவாதல்—எப்பொருளுமொடுங்குதற்குத் தான் இடமாதல். முன்னாய் நிற்கும்பொருளே முடிவாய் நிற்றலின் அவ்வாறு கூறினர். (கருக)

திருத்தூங்கானைமாடம் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்திருவடிக் கொன்றுண்டுவிண்ணப்பம் போற்றிசெய்யு
மென்னாவிகாப்பதற் கிச்சையுண்டேலிருங் கூற்றகல
மின்னாருமூவிலைச் சூலமென்மேற்பொறி மேவுகொண்டாற்
றுன்னார்கடந்தையுட் டூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே. (க-உ-ங-ச)

ஆவாசிறுதொண்ட னென்னினைந்தானென் றரும்பிணிநோய்
காவாதொழியிற் கலக்குமுன்மேற்பழி காதல்செய்வார்
தேவாதிருவடி நீறென்னைப்பூசுசெந் தாமரையின்
பூவார்கடந்தையுட் டூங்கானைமாடத்தெம் புண்ணியனே. (ரு-சு-எ-அ-கூ)

கடவுந்திகிரி கடவாதொழியக் கயிலையுற்றான்
படவுந்திருவிர லொன்றுவைத்தாய்பனி மால்வரைபோ
லிடபம்பொறித்தென்னை யேன்றுகொள்ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங்கடந்தையுட் டூங்கானைமாடத்தெந் தத்துவனே. (கO)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சுடர்க்கொழுந்தீசர், தேவியார்-கடந்தைநாயகியம்மை.

நீடுதிருத்தூங்கானை மாடத்துநிலவுகின்ற
ஆடகமேருச்சிலையா னருளாலோர்சிவபூத
மாடொருவரறியாமே வாகீசர்திருத்தோளிற்
சேடுயர்மூவிலைச்சூலஞ் சினவிடையினுடன்சாத்த.

(இ-ள்.) நீடுதிருத்தூங்கானைமாடத்து—உயர்ந்த திருத்தூங்கானை மாடமென்னும் திருக்கோயிலில்; நிலவுகின்றஆடகமேருச்சிலையானருளால்—வீற்றிருந்தருளுகின்ற பொன்மலையை வில்லாகக்கொண்டருளும் சிவபிரான் திருவருளினால்; ஓர்சிவபூதமாடொருவரறியாமே—ஓர் சிவபூதமானது அருகிலுள்ள ஒருவரும் அறியாமல்; வாகீசர்திருத்தோளில்—வாகீசமுனிவரது இரண்டுதிருத்தோள்களிலும்; சேடுயர்மூவிலைச்சூலம்—திரட்சியோடுயர்ந்த மூவிலைச்சூலமுத்திரையை; சினவிடையினுடன்சாத்த—கோபத்தையுடைய விடையினது இலச்சினையோடு சாத்தியருள.—எ-று. (கருஉ)

இருவரும் சீகாழியில் பிள்ளையார் திருமாளிகையில் வீற்றிருந்தனர்.

நாவுக்கரசு திருத்தூங்கானைமாடத்தைத் தெரிசித்து சமணச்சார்பிலிருந்த இவ்வுடலைத்தாங்க அருவருக்கின்றேன். சுவாமிகள் இலச்சினையை தரிக்க வேண்டுமெனத்துதிக்க, ஓர் சிவபூதம் தோன்றுமற்றொன்றி நாயனார் தோளில் தரிக்க, மகிழ்ந்து சிதம்பரத்தைத்தெரிசித்து சீகாழிக்குச் செல்லு கையில், வழியில் திருக்கூட்டத்துடன் ஸ்ரீஞானசம்பந்தவள்ளலாரைக் கண்டு வணங்க, அவர் அப்பரோ எழுந்திருமெனத் திருக்கரத்தாலெவி

ஆங்கவர்தந்திருத்தோளி லார்ந்ததிருவிலச்சினையைத்
தாங்கண்டுமனங்களித்துத் தம்பெருமானருணினைந்து
தூங்கருவிகண்பொழியத் தொழுதுவிழுந்தார்வத்தால்
ஓங்கியசிந்தையராகி யுய்ந்தொழிந்தேனெனவெழுந்தார்.

(இ-ள்.) ஆங்கவர்தந்திருத்தோளில்=அவ்வாகீசமுனிவர் தம்முடைய தோள்களில்; ஆர்ந்ததிருவிலச்சினையை=விளக்கமாயிருந்த அத்திருவடையாளத்தை; தாங்கண்டுமனங்களித்து=தாம் தரிசித்து திருவுளங்களிப்படைந்து; தம்பெருமானருணினைந்து=தமது முதல்வரது திருவருளைநினைந்து; தூங்கருவிகண்பொழிய=இடையறுதொழுகும் ஆனந்த அருவியானது கண்ணினின்றும்சொரிய; தொழுதுவிழுந்து=சாஷ்டாங்கமாக வணங்கி; ஆர்வத்தாலோங்கியசிந்தையராகி=விருப்பால் மிக்க திருவுள்ளமுடையராய்; உய்ந்தொழிந்தேனெனவெழுந்தார்=அடியேன் உய்ந்தேனென்று எழுந்தார்.—எ-று.

இம்மூன்றுங் குளகம். (௧௫௩)

தூங்கானைமாடத்துச் சுடர்க்கொழுந்தினடிபரவிப்
பாங்காகத்திருத்தொண்டு செய்துபயின்றமருநாட்
பூங்கானின்மணங்கமழும் பொருவிறிருவரத்துறையும்
தேங்காவின்முகிலுறங்குந் திருமுதுகுன்றமும்பணிந்து.

(இ-ள்.) தூங்கானைமாடத்துச்சுடர்க்கொழுந்தினடிபரவி=திருத்தூங்கானைமாடமென்னும் கோயிலில் வீற்றிருந்தருளும் சிவபிரான் திருவடிகளைத்துதித்து; பாங்காகத்திருத்தொண்டுசெய்துபயின்று=நன்றாகத் திருத்தொண்டுசெய்து; அமருநாள்=வசித்திருக்கும் நாளில்; பூங்கானின்மணங்கமழும்=பூஞ்சோலையின் மணம்வீசுகின்ற; பொருவிறிருவரத்துறையும்=ஒப்பற்ற திருவரத்துறையும்; தேங்காவின்முகிலுறங்கும்=தேன் துளிக்கின்ற சோலைகளிடத்து மேகங்கள் உறங்குகின்ற; திருமுதுகுன்றமும்பணிந்து=விருத்தாசலத்தையும் வணங்கி.—எ-று. (௧௫௪)

வண்டமிழ்மென்மலர்மாலை புனைந்தருளிமருங்குள்ள
தண்டுறைநீர்ப்பதிகளிலுந் தனிவிடையார்மேவியிடங்
கொண்டருளுந்தானங்கள் கும்பிட்டுக்குணதிசைமேற்
புண்டரிகத்தடஞ்சூழ்ந்த நிவாக்கரையேபோதுவார்.

(இ-ள்.) வண்டமிழ்மென்மலர்மாலைபுனைந்தருளி=வளவிய தமிழ்ச்சொற்களாகிய மெல்லிய மலர்களாற்றொடுத்த திருப்பதிகமாலையைச்சாத்தியருளி; மருங்குள்ளதண்டுறைநீர்ப்பதிகளிலும்=அதனருகிலுள்ள குளிர்ந்த நீர்த்துறைகளையுடைய திருப்பதிகளிலும்; தனிவிடையார்மேவிஇடங்கொண்டருளுந்தானங்கள்கும்பிட்டு=ஒப்பற்ற இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபிரான் வீற்றிருந்தருளும் கோயில்களையும் வணங்கி; புண்டரிகத்தடஞ்சூழ்ந்த=தாமரைவாவிகள்சூழ்ந்த; நிவாக்கரையேகுணதிசைமேற்போதுவார்=நிவா என்னும் நதிக்கரையின்வழியே கீழத்திசைநோக்கி வருகின்ற திருநாவுக்கரசர்.—எ-று. (௧௫௫)

ஆனாதசீர்த்தில்லை யம்பலத்தேயாடுகின்ற
வானாறுபுடைபரக்கு மலர்ச்சடையாரடிவணங்கி
ஊனாலுமுயிராலு முள்ளபயன்கொளநினைந்து
தேனாருமலர்ச்சோலைத் திருப்புலியூர்மருங்கணைந்தார்.

(இ-ள்.) ஆனாதசீர்த்தில்லையம்பலத்தேயாடுகின்ற=நிறைவாகிய சிறப்பினையுடைய தில்லையம்பலத்தின்கண் நிருத்தஞ்செய்கின்ற; வானாறுபுடைபரக்கும்=கங்கையானது ஓர்பாலில் பெருகிக்கொண்டிருக்கும்; மலர்ச்சடையாரடிவணங்கி=மலர்கள் நிறைந்த சடைமுடியையுடைய சிவபிரான் திருவடியை வணங்கி; ஊனாலும்உயிராலும்=உடம்பாலும் உயிரினாலும்; உள்ளபயன்கொளநினைந்து=அடைதற்குரிய பிரயோசனந்தான் பெறும்படி கருதி; தேனாருமலர்ச்சோலை=தேன்நிறைந்த மலர்களையுடைய சோலைசூழ்ந்த; திருப்புலியூர்மருங்கணைந்தார்=சிதம்பரத்தின் சமீபத்தில் அடைந்தார்.—எ-று.

இம்மூன்றுங் குளகம். உயிர் இயக்கியவாறே உடம்பு அதன்வழித்தாய் ஒற்றுமைப்பட நிற்பினும், யாத்திரைசேறல் கைத்தொண்டுசெய்தல் முதலியன உடம்பையின்றி உயிருக்கு அமையாமைக்கருதியும் சிவபிரானைத்தரிசித்தலும் தரிசித்தமாத்திரத்துப் பேரானந்தமடைதலும் உயிரானேயன்றி உடம்பாலமையாமையின் ஊனாலும் உயிராலுமென வேறுபிரித்துக் கூறினர். (கருசு)

வேறு.

நாவுக்கரசரு மிருவர்க்கரியவர் நடமாடியதிரு வெல்லைப்பான்
மேவித்தலமுற மெய்யிற்றொழுதபின் மேன்மேலெழுதரு விழைவோடுங்
காவிற்களிமயின் மகிழ்வுற்றெதிரெதி ராடக்கடிகமழ் கமலஞ்சூழ்
வாவித்தடமலர் வதனம்பொலிவுறு மருதத்தண்பணை வழிவந்தார்.

(இ-ள்.) நாவுக்கரசருமிருவர்க்கரியவர்நடமாடிய=வாகீசமுனிவரும் திருமால் பிரமன் என்னும் இருவர்க்கும் தேடுதற்கரிய சிவபிரான் ஆனந்தநிருத்தஞ்செய்தருளும்; திருவெல்லைப்பான்மேவி=திருவெல்லையிடத்து அடைந்து; தலமுறமெய்யிற்றொழுதபின்=நிலமுறும்படி சாஷ்டாங்கம் வணங்கியபின்பு; மேன்மேலெழுதருவிழைவோடும்=மேலும்மேலும் எழாநின்ற பேரன்போடும்; காவிற்களிமயின்மகிழ்வுற்றுஎதிரெதிராட=சோலைகளில்வாழும் களிப்பையுடைய மயில்கள் மகிழ்ச்சியடைந்து எதிரெதிரே நின்று நடிக்க; கடிகமழ்கமலஞ்சூழ்வாவித்தடமலர்வதனம்பொலிவுறும்=அதைக்காணுதற்கு மணங்கமழ்கின்ற தாமரைமலர்கள்சூழ்ந்த வாவித்தடமானது மலராகிய முகங்களால் பொலிவடைந்திருக்கும்; மருதத்தண்பணைவழிவந்தார்=குளிர்ந்தமருதநிலத்தின் வழியாகவந்தார்.—எ-று. (கருஎ)

முருகிற்செறியிதழ் முளரிப்படுகரின் முதுமேதிகள்புது மலர்மேயும்
அருகிற்செறிவன மெனமிக்குயர்கழை யளவிற்பெருகிட வளரிக்குப்
பெருகிப்புடைமுதிர் தரளஞ்சொரிவன பெரியோரவர்திரு வடிவைக்கண்
டுருகிப்பரிவுறு புனல்கண்பொழிவன வெனமுன்புளவள வயலெங்கும்.

(இ-ள்.) முருகிற்செறியிதழ்முளரிப்படுகரின்=வாசனையோடு நெருங்கிய இதழ்களையுடைய தாமரைமலர்களுள்ள நீர்நிலைகளிடத்து; முதுமேதிகள்புதுமலர்மேயும்=முதிய எருமைகள் புதியமலர்களை மேய்கின்ற; அருகிற்செறிவனமெனமிக்குயர்கழையளவில்=நெருங்கிய காடுபோல் மிகவளர்ந்துயர்ந்தமூங்கில்களின் அளவாக; பெருகிடவளரிக்கு=உயரமாக வளர்ந்திருக்கின்ற கரும்புகள்; பெருகிப்புடைமுதிர்தரளஞ்சொரிவன=பருத்துக் கணுக்களில் முதிர்ந்திருக்கின்ற முத்தைச் சொரிகின்றன; பெரியோரவர்திருவடிவைக்கண்டு=வாகீசமுனிவரது திருவுருவத்தைத் தாங்கண்டு; உருகிப்பரிவுறுபுனல்கண்பொழிவனவென=மனமுருகி அன்பாலுறுகின்ற நீரைக் கண்ணினின்றும் பொழிகின்றனபோல; முன்புளவளவயலெங்கும்=வளவிய வயல்களிடத்து எங்கும் உள்ளன.—எ-று.

பெருகிமுதிர்ந்த தரளம் என இயையும். (கருஅ)

அறிவிற்பெரியவ ரயனெற்பணைவய லவைபிற்படும்வகை யணைகின்முர்
பிறவிப்பவநெறி விடுவீரிருவினை பெருகித்தொடர்பிணி யுறுபாசம்
பறிவுற்றிடவணை யுமினென்றிருபுடை பயில்சூழ்சினைமிசை குயில்கூவுஞ்
செறிவிற்பலதரு நிலையிற்பொலிவுறு திருநந்தனவன மெதிர்கண்டார்.

(இ-ள்.) அறிவிற்பெரியவர்=அறிவிற்சிறந்த வாகீசமுனிவர்; அயனெற்பணைவயலவை=அயலிலுள்ள நெல்விளையும் மருதநிலத்தின் வயல்கள்; பிற்படும்வகையணைகின்முர்=பின்னிடும்படி செல்கின்முர்; பிறவிப்பவநெறிவிடுவீர்=பிறவிக்கேதுவான பாவநெறிகளைவிடுங் கருத்துடையீர்; இருவினைபெருகித்தொடர்பிணியுறுபாசம்=நல்வினை தீவினையென்னும் இருவினையும் மிக்குச்சங்கிலிபோலப்பிணிக்கப்பட்ட பாசங்கள்; பறிவுற்றிடவணையுமினென்று=நீங்கும்படி இத்திருப்பதியை அடையுங்களென்று; இருபுடைபயில்சூழ்சினைமிசைகுயில்கூவும்=இருமருங்குமுள்ள சூழ்ந்த கிளைகளிலிருந்து குயில்கள் கூவுகின்ற; செறிவிற்பலதருநிலையிற்பொலிவுறு=நெருக்கமுடைய பலமரநிலைகளினால் பொலிவடைந்திருக்கின்ற; திருநந்தனவனமெதிர்கண்டார்=திருநந்தனவனத்தை எதிரேகண்டார்.—எ-று.

பவநெறிவிடுவீர் பறிவுற்றிடவணையுமின் என்று சினைமிசைகுயில்கூவும் தருநிலை எனக்கூட்டுக. நிலை=இருப்பு. (கருக)

அவர்முன்பணிவொடு தொழுதங்கணைவுற வணிகொம்பரின்மிசை யருகெங்குந், தவமுன்புரிதலில் வருதொண்டெனுநிலை தலைநின்றுயர்தமி ழிறையோரா, மிவர்தந்திருவடி வதுகண்டதிசய மெனவந்தெதிரர கரவென்றே, சிவமுன்பயின்மொழி பகர்கின்றனவளர் சிறைமென்கிளியொடுசிறு பூவை.

(இ-ள்.) அவர்முன்பணிவொடுதொழுதங்கணைவுற=திருநந்தனவனத்தின் முன் வாகீசமுனிவர் வணக்கத்தோடுதொழுது அங்கெழுந்தருள; அணிகொம்பரின்மிசையருகெங்கும்=அலங்காரமான அந்நந்தனவனத்தருகெல்லாம் உள்ள அழகிய கொம்புகளின் மேல்; தவமுன்புரிதலில்வருதொண்டெனுநிலை=முற்பிறப்பில் தவஞ்செய்தலினால் தமக்குவந்திருக்கும் அடிமை என்கின்ற நிலைமையில்; தலைநின்றுயர்தமிழிறையோராம்=முதலாகநின்று உயர்வாகிய திருநாவுக்கரசு என்னும்; இவர்தந்திருவடிவதுகண்டு=இவரது திருவேடத்தைக்கண்டு; அதிசயமெனவந்தெதிரரகரவென்று=ஈதோர் அற்புதமென்று எதிரேவந்து அரகரவென்று சொல்லி; சிவமுன்பயின்மொழிபகர்கின்றன=மங்களமாக முன்னேபயின்ற வாழ்த்துமொழிகளை ஓதுகின்றன; வளர்சிறைமென்கிளியொடுசிறுபூவை=வளர்ந்த மிருதுவான சிறகினையுடைய கிளிப்பிள்ளைகளோடு சிறிய நாகணவாய்ப் புட்கள்.—எ-று. ஏ - அசை. (கசுo)

அஞ்சொற்றிருமறை யவர்முன்பகர்தலு மவருந்தொழுதுமு னருள்கூரு
நெஞ்சிற்பெருகிய மகிழ்வுங்காதலு நெறியன்பொடுமுறை தடமொறச்
செஞ்சொற்றிருமறை மொழியந்தணர்பயி றில்லைத்திருநக ரெல்லைப்பான்
மஞ்சிற்பொலிநெடு மதில்சூழ்குடதிசை மணிவாயிற்புறம் வந்துற்முர்.

(இ-ள்.) அஞ்சொற்றிருமறையவர்முன்பகர்தலும்=அக்கிளிகளும் நாகணவாய்ப் புட்களும் அழகிய வார்த்தையினால் தாம்பயின்ற வேதங்களை அவ்வாண்டவரசின்முன் ஓதவும்; அவருந்தொழுது=அவைகளை அந்நாயனாரும் அஞ்சலிசெய்து; முனருள்கூரும் நெஞ்சிற்பெருகியமகிழ்வுங்காதலும்=முன்னே திருவருள்மிக்க திருவுள்ளத்தினிடத்து

மிகுந்த மகிழ்ச்சியும் பெருவிருப்பமுமுள்ள; நெறியன்பொடுமுரைதமொற—முறைமையான அன்பொடு வார்த்தை குழறும்படி; செஞ்சொற்றிருமறைமொழியந்தணர்பயில்—மதுரமான சொல் நிறைந்த வேதங்களையோதும் தில்லைமூவாயிரவர் வாழ்ந்திருக்கின்ற; தில்லைத்திருநகரெல்லைப்பால்—திருத்தில்லையென்னும் திருநகரத்தின் எல்லைக்கண்; மஞ்சிற்பொலிநெடுமதில்சூழ்—மேகங்களோடு பொலிவடைந்திருக்கும் நீண்ட மதில்சூழ்ந்த; குடதிசைமணிவாயிற்புறம்வந்துற்றார்—மேற்குத்திக்கிலுள்ள அழகிய திருவாயிலின்புறத்தே அடைந்தருளினார்.—எ-று. (௧௬௧)

அல்லற்பவமற வருளுந்தவமுத லடியாரெதிர்கொள வவரோடு
மல்லற்புனல்கமழ் மாடேவாயிலின் வழிபுக்கெதிர்தொழு தணைவுற்றார்
கல்வித்துறைபல வருமாமறைமுதல் கலைகண்டுடையவர் கழல்பேணுஞ்
செல்வக்குடிநிறை நல்வைப்பிடைவளர் சிவமேநிலவிய திருவீதி.

(இ-ள்.) அல்லற்பவமறவருளுந்தவமுதல்—தம்மையடைந்த அடியார்க்குப் பிறவித்துயர்கெடும்படி அருளைச்செய்யும் வாகீசமுனிவர்; அடியாரெதிர்கொளவவரோடு—அடியார்கள் தம்மை எதிர்கொள்ள அவ்வடியார்களோடு; மல்லற்புனல்கமழ்மாடேவாயிலின்வழிபுக்கு—வளந்தங்கிய நீர்மணம் வீசுகின்ற அருகிலுள்ள மதில்வாயிலின்வழியே புகுந்து; எதிர்தொழுதணைவுற்றார்—எதிரேவணங்கி அணைந்தார் யாங்ஙனமெனில்; அருமாமறைமுதல்பலகல்வித்துறை—அரிய முதன்மையான வேதமுதலானபலநூல்களையும்; கலைகண்டுடையவர்கழல்பேணும்—முற்றவுணர்ந்து எம்மையாளாகவுடைய சிவபிரான் திருவடிகளை விரும்பும்; செல்வக்குடிநிறைநல்வைப்பிடைவளர்—செல்வம்நிறைந்த தில்லைமூவாயிரவர்கள் நிறைந்திருக்கும் நல்லதிருத்தில்லைநகரத்தில் விசாலமான; சிவமேநிலவியதிருவீதி—சிவமணம்வீசும் திருவீதியிடத்து.—எ-று. (௧௬௨)

நவமின்சுடர்மணி நெடுமாலையுநறு மலர்மாலையுநிறை திருவீதிப்
புவனங்களின்முத லிமையோர்தடமுடி பொருதுந்தியமணி போகட்டிப்
பவனன்பணிசெய வருணன்புனல்கொடு பணிமாறவுமவை பழுதாமென்
றெவருந்தொழுதெழு மடியார்திருவல கிடுவார்குளிர்புனல் விடுவார்கள்.

(இ-ள்.) நவமின்சுடர்மணிநெடுமாலையும்—புதுமையாகிய ஒளியை வீசுகின்ற நவரத்தினமாலைகளும்; நறுமலர்மாலையுநிறைதிருவீதி—நறிய பூமாலைகளும் நிறையத்தூக்கியிருக்கும் திருவீதியில்; புவனங்களின்முதலிமையோர்—சொர்க்கமுதலிய புவனங்களில் முதல்வரான தேவர்களுடைய; தடமுடிபொருதுந்தியமணிபோகட்டி—பெரிய முடியானது ஒன்றோடொன்றுராஞ்சி அதினின்றுஞ் சிறிய இரத்தினங்களைப்போக்கி; பவனன்பணிசெய—வாயுதேவன் திருவலகிட; வருணன்புனல்கொடுபணிமாறவும்—வருணதேவன்நீரைத்தெளித்துப் பணிசெய்யவும்; அவைபழுதாமென்று—அவ்விரண்டும் குற்றமாமென்று; எவருந்தொழுதெழுமடியார்—யாவரும் எழுந்து வணங்குதற்குரிய அடியார்கள்; திருவலகிடுவார்குளிர்புனல்விடுவார்கள்—திருவலகிடுவார்கள் குளிர்ந்த நீரையும் தெளிப்பார்கள்.—எ-று. (௧௬௩)

மேலம்பரதல நிறையுங்கொடிகளில் விரிவெங்கதிர்நுழை வரிதாகுங்
கோலம்பெருகிய திருவீதியைமுறை குலவும்பெருமையர் பணிவுற்றே
ஞாலந்திகழ்திரு மறையின்பெருகொலி நலமார்முனிவர்க ளொலியோடும்
ஓலம்பெருகிய நிலையேழ்கோபுர முறையேகொடுதொழு துள்புக்கார்.

(இ-ள்.) மேலம்பரதலநிறையுங்கொடிகளில்=ஆகாயத்தின்மேல் நிறையக்கட்டியிருக்கும் கொடியாடைகளில்; விரிவெங்கதிர்நுழைவரிதாகும்=விரிந்த வெம்மையாகிய சூரியகிரணங்கள் நுழையக்கூடாமலிருக்கும்; கோலம்பெருகியதிருவீதியை=அழகுமிக்க திருவீதியை; முறைகுலவும்பெருமையர்பணிவுற்று=முறைமையாக விளங்கிய பெருமையையுடைய ஆண்டவரசு வணங்கி; ஞாலந்திகழ்திருமறையின்பெருகொலி=நிலவுலகத்தில் விளங்குகின்ற வேதங்களின் பெரிய ஒலியானது; நலமார்முனிவர்கடுதியோடும்=நன்மைமிக்க முனிவர்களது துதியோடும்; ஓலம்பெருகியநிலையேழ்கோபுரம்=வாசலில்மிக்கு ஒலிக்கின்ற ஏழ்நிலையையுடைய கோபுரத்தை; முறைகொடுதொழுதுள்புக்கார்=முறையாகப்பணிந்து உள்ளேபுகுந்தார்.—எ-று. ஏ-அசை. (கசுச)

வளர்பொற்கனமணி திருமாளிகையினை வலம்வந்தலமரு வரைநில்லா
வளவிற்பெருகிய வார்வத்திடையெழு மன்பின்கடனிறை யுடலெங்கும்
புளகச்செறிநிரை விரவித்திருமலி பொற்கோபுரமது புகுவார்முன்
களனிற்பொலிவிட முடையார்நடநவில் கனகப்பொதுவெதிர் கண்ணுற்றார்.

(இ-ள்.) வளர்பொற்கனமணிதிருமாளிகையினைவலம்வந்து=உயர்ந்த பொன்மயமாய் மேகங்களால் அழகுசெய்யப்பட்ட திருக்கோயிலை வலமாகவந்து; அலமருவரைநில்லா=சுழுமளவும் நில்லாமல்; அளவிற்பெருகியவார்வத்திடையெழும்=அளவில்லாமற் பெருகுகின்றவிருப்பின்கணுதிக்கும்; அன்பின்கடனிறையுடலெங்கும்=அன்பாகிய கடலானது நிறைந்த திருமேனிமுழுதும்; புளகச்செறிநிரைவிரவி=நெருங்கிய உரோமாஞ்சிதங்கள் கலந்து; திருமலிபொற்கோபுரமதுபுகுவார்=அழகுமிக்க கோபுரத்துள்ளே புகுகின்றவர்; முன்களனிற்பொலிவிடமுடையார்=முன்னே கண்டத்தில் பொலிந்திருக்கும் விடத்தையுடையார்; நடநவில்கனகப்பொதுவெதிர்கண்ணுற்றார்=நடனஞ்செய்கின்ற கனகசபையை எதிரில் தரிசித்தருளினார்.—எ-று.

கோபுரமதுபுகுவார்முன்கண்ணுற்றாரென்றதனால், மேற்குக்கோபுரத்தினுள் புகுந்து திருமாளிகையை வலம்வந்தபின்பு கீழ்த்திசைக்கணுள்ள இரண்டாங்கோபுரத்திற் புகுந்தவர் திருவணுக்கன் திருவாயில்புகுந்து கனகப்பொதுவைமுன்னே தரிசித்தாரெனப் போந்தவாறறிக. (கசுரு)

நீடுந்திருவுட னிகழும்பெருகொளி நிறையம்பலநினை வுறநேரே
கூடும்படிவரு மன்பாலின்புறு குணமும்பெறவரு நிலைகூடத்
தேடும்பிரமனு மாலுந்தேவரு முதலாம்யோனிக டெளிவொன்றா
வாடுங்கழல்புரி யமுதத்திருநட மாராவகைதொழு தார்கின்றார்.

(இ-ள்.) நீடுந்திருவுடனிகழும்பெருகொளி=மேலான முத்தித்திருவோடு விளங்காநின்ற பெரிய ஒளியானது; நிறையம்பலநினைவுற=நிறைந்திருக்கும் திருவம்பலத்தைத் தன்கருத்தில் பொருந்தும்படி; நேரேகூடும்படிவருமன்பால்=கண்ணெதிரே தரிசிக்கத் தம்மிடத்துதிக்கும் பேரன்பினால்; இன்புறுகுணமும்பெறவருநிலைகூட=ஆனந்த பரவசமாகும் குணமும் தான் அடைதற்கு ஏதுவாக இருக்கும் நிலைமைவந்தடைய; தேடும்பிரமனுமாலும்=முன்னாளில்தேடியறியாத திருமால் பிரமன் என்னும் இருவரும்; தேவருமுதலாம்யோனிகடெளிவொன்றா=தேவர்முதலிய பலயோனிகளது உணர்விற்கு விடயமாய்; ஆடுங்கழல்புரியமுதத்திருநடம்=தூக்கியாடும் குஞ்சிதபாதம் திருவம்பலத்திற்செய்கின்ற முத்திவடிவான ஆனந்தத்திருநடனத்தை; ஆராவகைதொழுதார்கின்றார்=தம் உள்ளத்துத் தெவிட்டாதவண்ணம் வணங்கி நிறைவடைவாராயினர்.—எ-று. குணமும் பெறவருநிலைகூடத் திருநடந்தொழுதார்கின்றார் எனக்கூட்டுக.

ஒளியுள்ள பொருட்கெல்லாம் ஒளிகொடுத்துச் சுயஞ்சோதியாய் நிற்றலில் பெருகொளிநிறையம்பலமென்றும், நினைவுக்கெட்டாத அப்பரம்பொருளாய திருவம்பலம் நினைவுக்கு அடங்க வெளிப்பட்டு நிற்றலில் நினைவுறவென்றும், அத்திருவம்பலமே வே

ளிப்பட்டிருக்குந் திருவுரு விதுவென வருமன்பால் பேரானந்தம் நிகழ்தலில் இன்புறு குணமும் பெறவென்றுங்கூறினர். உம்மை உயர்வுசிறப்பு. முன் பிரமன் மால்காணு இலிங்கமூர்த்தியாகிய சகளத்திருவுரு ஈண்டு அவர்முதலிய யோனிகள்காண வெளிப்பட்டு நிற்றலில் தெளிவொன்ருவாடுங்கழல்புரியமுதத் திருநடமென்று கூறினர். (கசுசு)

கையுந்தலைமிசை புனையஞ்சலியன கண்ணும்பொழிமழை யொழியாதே
பெய்யுந்தகையன கரணங்களுமுட னுருகும்பரிவின பேறெய்து
மெய்யுந்தலமிசை விழுமுன்பெழுதரு மின்ருழ்சடையொடு நின்ருடுமை
மையன்றிருநட மெதிர்கும்பிடுமவ ரார்வம்பெருகுத லளவின்ருல்.

(இ-ள்.) கையுந்தலைமிசைபுனையஞ்சலியன=கைகளும் சிரமேற் குவித்துச்சூட்டிய அஞ்சலியையுடையன; கண்ணும்பொழிமழையொழியாதுபெய்யுந்தகையன=இரண்டுகண்ணும் பொழிகின்ற ஆனந்தக்கண்ணீர் நீங்காது சொரியும் தன்மையுடையன; கரணங்களும்உடனுருகும்பரிவின=மனமுதலிய உட்கரணங்கள் நான்கும் ஒருங்கேசேர்ந்து உருகுதற்கேதுவான அன்பையுடையன; பேறெய்துமெய்யுந்தலமிசைவிழுமுன்பெழுதரும்=தன்னுலாகிய பயனையடைந்த உடம்பு நிலத்தின்மேல் விழுவதும் முன்னே எழுவதுமாயிருக்கும்; மின்ருழ்சடையொடுநின்ருடும்=மின்போல் விளங்குகின்ற பின்ருங்கும் சடையோடுநின்று நிருத்தஞ்செய்யும்; ஐயன்றிருநடமெதிர்கும்பிடும்=சிவபிரான் திருநடனத்தை எதிரே தரிசிக்கின்ற; அவரார்வம்பெருகுதலளவின்று=அவ்வாகீசத்திருவடிகளது விருப்பானது மேன்மேல்வளர்தல் ஓரளவிலடங்காது.-எ-று. ஏ-ஆல்-அசை.

இத்தன்மையர்பல முறையுந்தொழுதெழ வென்றெய்தினையென மன்ருடு
மத்தன்றிருவருள் பொழியுங்கடைவிழி யருள்பெற்றிடவரு மானந்த
மெய்த்தன்மையினில் விருத்தத்திருமொழி பாடிப்பின்னையு மேன்மேலுஞ்
சித்தம்பெருகிய பரிவாலின்புறு திருநேரிசைமொழி பகர்கின்ருர்.

(இ-ள்.) இத்தன்மையர்பலமுறையுந்தொழுதெழ=இத்தன்மையராய் வாகீசர் பலதரமும் வணங்கியெழ; என்றெய்தினையென=என்று வந்தாயென்று; மன்ருடும்அத்தன் திருவருள்பொழியும்=மன்றில் ஆனந்தநிருத்தஞ்செய்தருளும் நடேசப்பிரான் திருவருள்பொழிகின்ற; கடைவிழியருள்பெற்றிடவரும்=கடைக்கண்ணேக்கருளைத் தான் பெறுதலால் வருகின்ற; ஆனந்தமெய்த்தன்மையினில்விருத்தத்திருமொழிபாடி=ஆனந்தமாகிய உண்மைத்தன்மையோடு கருநட்டகண்டனை என்னும் திருவிருத்தமாகிய திருப்பதிகத்தைப்பாடி; பின்னையுமேன்மேலும்=பின்பும் மேலும்மேலும்; சித்தம்பெருகியபரிவால்=திருவுள்ளத்துப் பெருக்கெடுத்த அன்பினுல்; இன்புறுதிருநேரிசைமொழிபகர்கின்ருர்=இன்பத்தை விளைக்கும் திருநேரிசையையும் பாடுவாராயினர்.—எ-று. (கசுஅ)

வேறு.

பத்தனுய்ப்பாடமாட்டே னென்றுமுன்னெடுத்துப்பண்ணு
லத்தவுன்னுடல்காண்பா னடியனேன்வந்தவாறென்
றித்திறம்போற்றிநின்றே யின்றமிழ்மாலைபாடிக்
கைத்திருத்தொண்டுசெய்யுங் காதலிற்பணிந்துபோந்தார்.

(இ-ள்.) பத்தனுய்ப் பாடமாட்டேனென்று முன்னெடுத்துப்பண்ணுல்=பத்தனுய்ப் பாடமாட்டேனென்று பண்ணேடு முதலெடுத்து; அத்தவுன்னுடல்காண்பான் அடியனேன்வந்தவாறென்று=அச்செய்யுளிறுதியில் அத்தவுன்னுடல்காண்பானடியனேன் வந்தவாறென்று முடித்து; இத்திறம்போற்றிநின்று=இவ்வாறு துதித்துநின்று; இன்றமிழ்மாலைபாடி=இனிய தமிழாலாகிய திருநேரிசைத் திருப்பதிகத்தைப்பாடி; கைத்திருத்தொண்டுசெய்யும்=உழவாரத்தொண்டுசெய்யும்; காதலிற்பணிந்துபோந்தார்=விருப்பால் வணங்கிச் சபையின் புறம்பேபோந்தருளினர்.—எ-று. (கசுசு)

கோயிற்றிருநேரிசை-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பத்தனய்ப்பாடமாட்டேன் பரமனேபரமயோகி
யெத்தினற்பத்திசெய்கே னென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லை யம்பலத்தாடுகின்ற
வத்தாவுன்னடல்காண்பா னடியனேன்வந்தவாறே. (க)

கருத்தனய்ப்பாடமாட்டேன் காம்பனதோளிபங்கா
வொருத்தராலறியவொண்ணத் திருவுருவுடையசோதீ
திருத்தமாந்தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டி நேர்படவந்தவாறே. (உ)

கேட்டிலேன்கிளைபிரியேன் கேட்குமாகேட்டியாகில்
நாட்டினேனின்றன்பாதம் நடுப்படநெஞ்சினுள்ளே
மாட்டில்நீர்வாளைபாயு மல்குசிற்றம்பலத்தே
கூட்டமாங்குவிழலையாள் கூடநீயாடுமாறே. (ங)

சிந்தையைத்திகைப்பியாதே செறிவுடையடிமைசெய்ய
வெந்தைநீயருளிச்செய்யா யாதுநான்செய்வதென்னே
செந்தியார்வேள்வியோவாத் தில்லைச்சிற்றம்பலத்தே
யந்தியும்பகலுமாட வடியிணையலசுங்கொல்லோ. (ச)

கண்டவாதிரிந்துநாளுங் கருத்தினல்நின்றன்பாதங்
கொண்டிருந்தாடிப்பாடிக் கூடுவன்குறிப்பினலே
வண்டுபண்பாடுஞ்சோலை மல்குசிற்றம்பலத்தே
யெண்டிசையோருமேத்த விறைவநீயாடுமாறே. (ரு)

பார்த்திருந்தடியனேனன் பரவுவன்பாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னை மூவரில்முதல்வனென்ப
னேத்துவாரிடர்கடீர்ப்பாய் தில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான் கூடநான்வந்தவாறே. (சா)

பொய்யினைத்தவிரவிட்டுப் புறமலாவடிமைசெய்ய
வையநீயருளிச்செய்யா யாதியேயாதிமூர்த்தி
வையகந்தன்னின்மிக்க மல்குசிற்றம்பலத்தே
பையநுன்னடல்காண்பான் பரமநான்வந்தவாறே. (எ)

மனத்தினர்திகைத்துநாளு மாண்பலாநெறிகண்மேலே
கனைப்பராலென்செய்கேனே கறையணிகண்டத்தானே
தினைத்தனைவேதங்குன்ருத் தில்லைச்சிற்றம்பலத்தே
யனைத்துநின்னிலயங்காண்பா னடியனேன்வந்தவாறே. (அ)

நெஞ்சினைத்தூய்மைசெய்து நினைக்குமாநினைப்பியாதே
வஞ்சமேசெய்தியாலோ வானவர்தலைவனேநீ
மஞ்சடைசோலைத்தில்லை மல்குசிற்றம்பலத்தே
யஞ்சொலாள்காணநின்று வழகநீயாடுமாறே. (கூ)

மண்ணுண்டமாலவனு மலர்மிசைமன்னிஞனும்
விண்ணுண்டதிருவுருவம் விரும்பினுர்காணமாட்டார்
திண்ணுண்டதிருவேமிக்க தில்லைச்சிற்றம்பலத்தே
பண்ணுண்டபாடலோடும் பரமநீயாடுமாறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

நீடியமணியின்சோதி நிறைதிருமுன்றின்மாடும்
ஆடுயர்கொடிசூழ்பொற்றே ரணிதிருவீதியுள்ளுங்
கூடியபணிகள்செய்து கும்பிடுந்தொழிலராகிப்
பாடியபுனிதவாக்கின் பணிகளும்பயிலச்செய்வார்.

(இ-ள்.) நீடியமணியின்சோதிநிறை=உயர்ந்த இரத்தினங்களின் ஒளிநிறைந்த திருமுன்றின்மாடும்=திருமுன்றிலிடத்தும்; ஆடுயர்கொடிசூழ்=அசைதலுடைய உயர்ந்த கொடிசூழ்ந்த; பொற்றேரணிதிருவீதியுள்ளும்=அழகிய தேரானது அலங்காரம்செய்கின்ற திருவீதியுள்ளும்; கூடியபணிகள்செய்து=தம்மாற்கூடிய திருப்பணிகள்செய்து; கும்பிடுந்தொழிலராகி=வணங்குந் தொழிலுடையராய்; பாடியபுனிதவாக்கின்=தம்மால் பாடப்பட்ட தூய்மையான திருப்பதிகத்தின்; பணிகளும்பயிலச்செய்வார்=பணிகளையும் பொருந்தச்செய்வாராயினர்.—எ-று. (கஎo)

அருட்பெருமகிழ்ச்சிபொங்க வன்னம்பாலிக்குமென்னுந்
திருக்குறுந்தொகைகள்பாடித் திருவுழவாரங்கொண்டு
பெருத்தெழுகாதலோடும் பெருந்திருத்தொண்டுசெய்து
விருப்புறுமேனிகண்ணீர் வெண்ணீற்றுவண்டலாட.

(இ-ள்.) அருட்பெருமகிழ்ச்சிபொங்க=திருவருளால் தம்முள்ளத்துப் பேரானந்தம் அதிகரிக்க; அன்னம்பாலிக்குமென்னும்=அன்னம்பாலிக்கும் என்னு முதலையுடைய; திருக்குறுந்தொகைகள்பாடி=திருக்குறுந் தொகையைப்பாடி; திருவுழவாரங்கொண்டு=அழகிய உழவாரப்படையைக் கரத்தில் தாங்கிக்கொண்டு; பெருத்தெழுகாதலோடும்=மேம்பட்டெழாநின்ற ஆசையோடு; பெருந்திருத்தொண்டுசெய்து=பெரிய கைத்திருத்தொண்டையும் செய்து; விருப்புறுமேனிகண்ணீர்வெண்ணீற்றுவண்டலாட=யாவரும் விரும்பத்தக்க திருமேனியினிடத்துக் கண்ணீரானது திருவெண்ணீறுடன் விரவி வண்டலாட்டயர.—எ-று.

சுண்ணத்தோடு நீர்விரவி மகளிர்கள் ஒருவர்மேல் ஒருவர் தெறித்து வண்டலாட்டயர்தல்போலக் கண்ணீர் திருமேனிவெண்ணீற்ருேடுவிரவி நீற்றைக் கரைத்தொழுகலின் வண்டலாட என்ருர். (கஎக)

கோயிற்றிருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

அன்னம்பாலிக்குந் தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்கு மேலுமிப்பூமிசை
யென்னன்பாலிக்கு மாறுகண்டின்புற
வின்னம்பாலிக்கு மோவிப்பிறவியே. (க)

அரும்பற்றப்பட வாய்மலர்கொண்டுநீர்
சுரும்பற்றப்படத் தூவித்தொழுமினே
கரும்பற்றச்சிலைக் காமனைக்காய்ந்தவன்
பெரும்பற்றப்புலி யூரெம்பிரானையே. (உ)

அருச்சுற்றவினை யாலடர்ப்புண்டுநீ
ரொரிச்சுற்றக்கிடந் தாரொன்றயலவர்
சிரிச்சுற்றுப்பல பேசப்படாமுனந்
திருச்சிற்றம்பலஞ் சென்றடைந்துய்ம்மினே. (௩)

அல்லலென்செயு மருவினையென்செயுந்
தொல்லைவல்வினைத் தொண்டர்தானென்செயுந்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலவனார்க்
கெல்லையில்லதோ ரடிமைபூண்டேனுக்கே. (௪)

ஊனிலாவி யுயிர்க்கும்பொழுதெலா
நானிலாவி யிருப்பனென்னாதனைத்
தேனிலாவிய சிற்றம்பலவனார்
வானிலாவி யிருக்கவும்வைப்பரோ. (௫)

சிட்டர்வானவர் சென்றுவரங்கொளுஞ்
சிட்டர்வாழ்தில்லைச் சிற்றம்பலத்துறை
சிட்டன்சேவடி கைதொழச்செல்லுமச்
சிட்டர்பாலணு கான்செறுகாலனே. (௬)

ஒருத்தனாருல கங்கட்கொருசுடர்
திருத்தனார்தில்லைச் சிற்றம்பலவனார்
விருத்தனாரிளை யார்விடமுண்டவெ
மருத்தனாரடி யாரையறிவரே. (௭)

விண்ணிறைந்ததோர் வெவ்வழலின்னுரு
வெண்ணிறைந்த விருவர்க்கறிவொணாக்
கண்ணிறைந்த கடிபொழிலம்பலத்
துண்ணிறைந்துநின் றாடுமொருவனே. (௮)

வில்லைவட்டப்பட வாங்கியவுணர்தம்
வல்லைவட்டம்மதின் மூன்றுடன்மாய்த்தவன்
றில்லைவட்டத்திசை கைதொழுவார்வினை
யொல்லைவட்டங்கடந் தோடுதலுண்மையே. (௯)

நாடிநாரண னான்முகனென்றிவர்
தேடியுந்திரிந் துங்காணவல்லரோ
மாடமாளிகை சூழ்தில்லையம்பலத்
தாடிபாதமென் னெஞ்சுளிருக்கவே. (௧௦)

மதுரவாய்மொழி மங்கையோர்பங்கினன்
சதுரன்சிற்றம் பலவன்திருமலை
யதிரவார்த்தெடுத் தான்முடிபத்திற
மிதிகொள்சேவடி சென்றடைந்துய்ம்மினே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

மேவியபணிகள்செய்து விளங்குநாள்வேட்களத்துச்
சேவுயர்கொடியார்தம்மைச் சென்றுமுன்வணங்கிப்பாடிக்
காவியங்கண்டர்மன்னுந் திருக்கழிப்பாலைதன்னி
னாவினுக்கரசர்சென்று நண்ணினர்மண்ணோர்வாழ.

(இ-ள்.) மேவியபணிகள்செய்துவிளங்குநாள்=தமக்குரிய பதிகத்திருத்தொண் டும் உழவாரத்தொண்டுமாகிய பணிகளைச்செய்துகொண்டிருக்கும் நாளில்; வேட்களத் துச்சேவுயர்கொடியார்தம்மை=திருவேட்களத்தில் வீற்றிருந்தருளும் இடபந்தீட்டிய கொடியையுடைய சிவபிரானை; சென்றுமுன்வணங்கிப்பாடி=அடைந்து திருமுன்னே வணங்கிப் பதிகம்பாடி; காவியங்கண்டர்மன்னும்=நீலமலர்போலும் கரிய கண்டத்தை யுடைய சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருக்கழிப்பாலைதன்னில்=திருக்கழிப்பாலையில்; மண்ணோர்வாழநாவினுக்கரசர்சென்றுநண்ணினர்=உலகத்தார் வாழும்படி திருநாவுக்க ரசர் சென்றடைந்தார்.—எ-று. இவ்விரண்டுங் குளகம். (கஎ௨)

வேறு.

சினவிடையேறுகைத்தேறு மணவாளநம்பிகழல் சென்றுதாழ்ந்து
வனபவளவாய்திறந்து வானவர்க்குந்தானவனே யென்கின்றாளென்
றனையதிருப்பதிகமுட னன்புறுவண்டமிழ்பாடி யங்குவைகி
நினைவரியார்தமைப்போற்றி நீடுதிருப்புலியூரை நினைந்துமீள்வார்.

(இ-ள்.) சினவிடையேறுகைத்தேறும்=கோபத்தையுடைய இடபேற்றை வாக னமாகக்கொண்டருளும்; மணவாளநம்பிகழல்சென்றுதாழ்ந்து=மணவாளநம்பி திருவ டிகளைச்சென்று வணங்கி; வனபவளவாய்திறந்துவானவர்க்குந்தானவனேயென்கின்றா ளென்று=வனபவளவாய்திறந்து வானவர்க்குந்தானவனே என்கின்றாளென்று முதலெ டுத்து; அனையதிருப்பதிகமுடன்அன்புறுவண்டமிழ்பாடியங்குவைகி=அத்திருப்பதிகத் தோடு அன்புமிக்க பிறதிருப்பதிகங்களையும்பாடி அவ்விடத்திருந்து; நினைவரியார்தமை ப்போற்றி=நினைவினால் அறிதற்கரியராகிய சிவபிரானைத்துதித்து; நீடுதிருப்புலியூரை நினைந்துமீள்வார்=மேன்மைமிக்க திருப்புலியூரை நினைந்து மீள்வாராயினர்.—எ-று. ()

திருக்கழிப்பாலை-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வனபவளவாய்திறந்து வானவர்க்குந்தானவனே யென்கின்றாளாற்
சினபவளத்திரடோண்மேற் சேர்ந்திலங்குவெண்ணீற்ற னென்கின்றாளா
லனபவளமேகலையோ டப்பாலைக்கப்பாலா னென்கின்றாளாற்
கனபவளஞ்சிந்துங் கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ. (க)

அடர்ப்பரியவிராவணனை யருவரைக்கீழடர்த்தவனே யென்கின்றாளாற்
சுடர்ப்பெரியதிருமேனிச் சுண்ணவெண்ணீற்றவனே யென்கின்றாளான்
மடற்பெரியவாலின்கீ ழறநால்வர்க்கன்றுரைத்தா னென்கின்றாளாற்
கடற்கருவிசூழ்ந்த கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ. (க0)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பால்வண்ணநாதர், தேவியார் - வேதநாயகியம்மை.

மனைப்படப்பிற் கடற்கொழுந்து வளைசொரியுங் கழிப்பாலை மருங்குநீங்கி
நனைச்சினைமென் குளிர்ஞாழற் பொழிலூடு வழிக்கொண்டு நண்ணும்போதி
னினைப்பவர்த மனக்கோயில் கொண்டருளு மம்பலத்து நிருத்தனாரைத்
தினைத்தனையாம் பொழுதுமறந் துய்வனோ வெனப்பாடித் தில்லைசார்ந்தார்.

(இ-ள்.) மனைப்படப்பிற்கடற்கொழுந்து—மனைப்புறத்துள்ள தோட்டத்தில் சமுத்திரத்தினது அலைகள்; வளைசொரியுங்கழிப்பாலைமருங்குநீங்கி—சங்குகளை வீசுகின்ற திருக்கழிப்பாலையினின்று நீங்கி; நனைச்சினைமென்குளிர்ஞாழற்பொழிலூடு—முகைகளையுடைய கிளையினிடத்து மிருதுவான குளிர்ந்த மணம்வீசும் சுரபுன்னைச்சோலையின்வழியே; வழிக்கொண்டுநண்ணும்போதில்—நடந்துவரும்போதில்; நினைப்பவர்தமனக்கோயில்கொண்டருளும்—தம்மை இடைவிடாது நினைக்கும் அடியார்களது மனத்தைக் கோயிலாகக்கொண்டருளும்; அம்பலத்து நிருத்தனாரை—அம்பலத்து நிருத்தஞ்செய்யும் சிவபிரானை; தினைத்தனையாம்பொழுதுமறந்துய்வனோ—தினையளவாம்பொழுதும் மறந்து அடியேன் உய்வேனோ; எனப்பாடித்தில்லைசார்ந்தார்—என்று திருக்குறுந்தொகை பாடிச்சிதம்பரத்தையடைந்தார்.—எ-று. (கஎச)

கோயிற்றிருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பனைக்கைமும்மத வேழமுரித்தவ
னினைப்பவர்மனங் கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடமா மம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழு தும்மறந்துய்வனோ. (க)

தீர்த்தனைச்சிவ னைச்சிவலோகனை
மூர்த்தியைமுத லாயவொருவனைப்
பார்த்தனுக்கருள் செய்தசிற்றம்பலக்
கூத்தனைக்கொடி யேன்மறந்துய்வனோ. (உ)

கட்டும்பாம்புங் கபாலங்கைமான்மறி
யிட்டமாயிடு காட்டெரியாடுவான்
சிட்டர்வாழ்தில்லை யம்பலக்கூத்தனை
யெட்டனைப்பொழு தும்மறந்துய்வனோ. (ங)

மாணிபால்கறந் தாட்டிவழிபட
நீணுலகெலா மாளக்கொடுத்தவ
னாணியைச்செம்பொ னம்பலத்துண்ணின்ற
தாணுவைத்தமி யேன்மறந்துய்வனோ. (ச)

பித்தனைப்பெருங் காடரங்காவுடை
முத்தனைமுளை வெண்மதிசூடியைச்
சித்தனைச்செம்பொ னம்பலத்துண்ணின்ற
வத்தனையடி யேன்மறந்துய்வனோ. (ரு)

நீதியைநிறை வைமறைநான்குட
னோதியையொரு வர்க்குமறிவொணாச்
சோதியைச்சுடர்ச் செம்பொனினம்பலத்
தாதியையடி யேன்மறந்துய்வனோ. (சு)

மைகொள்கண்டனெண் டோளன்முக்கண்ணினன்
பைகொள்பாம்பரை யார்த்தபரமனூர்
செய்யமாதுறை சிற்றம்பலத்தெங்க
ளையனையடி யேன்மறந்துய்வனே. (எ)

முழுதும்வானுல கத்துளதேவர்கள்
தொழுதுபோற்றியுந் தூயசெம்பொன்னினு
லெழுதிமேய்ந்தசிற் றம்பலக்கூத்தனை
யிழுதையேன்மறந் தெங்ஙனமுய்வனே. (அ)

காருலாமலர்க் கொன்றையந்தாரனை
வாருலாமுலை மங்கைமணாளனைத்
தேருலாவிய தில்லையுட்கூத்தனை
யார்கிலாவமு தைமறந்துய்வனே. (கூ)

ஓங்குமால்வரை யேந்தனுற்றான்சிரம்
வீங்கிவிம்முற வூன்றியதாளினான்
றேங்குநீர்வயல் சூழ்தில்லைக்கூத்தனைப்
பாங்கிலாத்தொண்ட னேன்மறந்துய்வனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

அரியானையென்றெடுத்தே யடியவருக்கெளியானை யவர்தஞ்சிந்தை
பிரியாதபெரியதிருத் தாண்டகச்செந்தமிழ்பாடிப் பிறங்குசோதி
விரியாநின்றெவ்வுலகும் விளங்கியபொன்னம்பலத்து மேவியாடல்
புரியாநின்றவர்தம்மைப் பணிந்துதமிழாற்பின்னும் போற்றல்செய்தார்.

(இ-ள்.) அரியானையென்றெடுத்து=அரியானை என்று முதலெடுத்து; அடியவருக்கெளியானை=அடியார்க்கு எளிவருங்கருணையுடையானை; அவர்தஞ்சிந்தைபிரியாதபெரியதிருத்தாண்டகச்செந்தமிழ்பாடி=அவ்வடியாரிதயத்துநீங்காத பெரிய திருத்தாண்டகமென்னும்செந்தமிழ்ப்பதிகத்தைப்பாடியருளி; பிறங்குசோதிவிரியாநின்று=விளக்கமான ஒளியைப்பரப்பி; எவ்வுலகும்விளங்கியபொன்னம்பலத்துமேவி=எவ்வுலகத்தும் விளங்கியிருக்கும் கனகசபையின்கண்கூடி; ஆடல்புரியாநின்றவர்தம்மைப்பணிந்து=நிருத்தஞ்செய்தருளும் நடேசப்பிரானைவணங்கி; தமிழாற்பின்னும்போற்றல்செய்தார்=செந்தமிழ்த்திருப்பதிகத்தால் மீண்டும் துதிசெய்தார்.—எ-று. ஏ-அசை. (களடு)

கோயிற்பெரியதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானை யருமறையினகத்தானையணுவையார்க்குந், தெரியாததத்துவனைத்தேனைப்பாலைத் திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றைக், கரியானைநான்முகனைக்கனலைக்காற்றைக் கனைகடலைக்குலவரையைக்கலந்துநின்ற, பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (க)

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக் காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதினானை, யற்றார்க்குமலந்தார்க்குமருள்செய்வானை யாரூரும்புகுவானையறிந்தோமன்றே, மற்றாருந்தன்னொப்பாரில்லாதானை வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தப், பெற்றானைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (உ)

கருமானினுரியதளேயுடையாவீக்கிக் கனைகழல்கள்கலந்தொலிப்பவனல்கையேந்தி, வருமானத்திரடோள்கண்மட்டித்தாட வளர்மதியஞ்சடைக்கணிந்துமானேர்நோக்கி, யருமானவாண்முகத்தாளமர்ந்துகாண வமரர்கணமுடிவணங்கவாடுகின்ற, பெருமானைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௩)

அருந்தவர்கடொழுதேத்துமப்பன்றன்னை யமரர்கடம்பெருமானை யரனைமூவா, மருந்தமரர்க்கருள்புரிந்தமைந்தன்றன்னை மறிகடலுங்குலவரையு மண்ணும்விண்ணுந், திருந்தொளியதாரகையுந்திசைகளெட்டுந் திரிசுடர்களோரிரண்டும்பிறவுமாய, பெருந்தகையைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௪)

அருந்துணையையடியார்தமல்லறீர்க்கு மருமருந்தையகன்ஞாலத்தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ்சுற்றமும்பற்றும்விட்டு வான்புலன்களகத்தடக்கிமடவாரோடும், பொருந்தணைமேல்வரும்பயனைப்போகமாற்றிப் பொதுநீக்கித்தனைநினையவல்லோர்க்கென்றும், பெருந்துணையைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௫)

கரும்பமருமொழிமடவாள்பங்கன்றன்னைக் கனவயிரக்குன்றனையகாட்சியானை, யரும்பமரும்பூங்கொன்றைத்தாரான்றன்னை யருமறையோடாறங்கமாயினானைச், சுரும்பமருங்கடிபொழில்கள்சூழ்தென்னூரச் சுடர்க்கொழுந்தைத்துளக்கிலாவிளக்கைமிக்க, பெரும்பொருளைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௬)

வரும்பயனையெழுநரம்பினோசையானை வரைசிலையாவானவர்கண்முயன்றவாளி, யரும்பயஞ்செயவுணர்புரமெரியக்கோத்த வம்மானையலைகடனஞ்சயின்றான்றன்னைச், சுரும்பமருங்குழன்மடவார் கடைக்கண்ணோக்கிற் றுளங்காதசிந்தையராய்த் துறந்தோருள்ளப், பெரும்பயனைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (எ)

காரானையீருரிவைப்போர்வையானைக் காமருபூங்கச்சியேகம்பன்றன்னை, யாரேனுமடியவர்கட்கணியான்றன்னை யமரர்களுக்கறிவரியவளவிலானைப், பாரோரும்விண்ணோரும்பணியநட்டம் பயில்கின்றபரஞ்சுடரைப் பரனையெண்ணில், பேரானைப்பெரும்பற்றப் புலியூரானைப்பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (அ)

முற்றாதபான்மதியஞ்சூடினானை மூவுலகுந்தானாயமுதல்வன்றன்னைச், செற்றார்கள்புரமூன்றுஞ் செற்றான்றன்னைத் திகழொளியைமரகதத்தைத்தேனைப்பாலைக், குற்றாலத்தமர்ந்துறையுங்குழகன்றன்னைக் கூத்தாடவல்லானைக் கோனைஞானம், பெற்றார்கள்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (கூ)

காரொளியதிருமேனிச்செங்கண்மாலுங் கடிக்கமலத்திருந்தயனுங்காணாவண்ணஞ், சீரொளியதழற்பிழம்பாய்நின்றதொல்லைத் திகழொளியைச்சிந்தைதனைமயக்கந்தீர்க்கு, மேரொளியையிருநிலனும்விசும்பும்விண்ணுமேழுலகுங்கடந்தண்டத்தப்பாலின்ற, பேரொளியைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (கo)

திருச்சிற்றம்பலம்.

செஞ்சடைக்கற்றைமுற்றத் திளநிலாவெறிக்குமென்னுஞ் சிறந்தவாய்மையஞ்சொல்வளத் தமிழ்மாலையதிசயமாம் படிபாடியன்புசூழ்ந்த [யுந்
நெஞ்சுருகப்பொழிபுனல்வார் கண்ணிணையும்பரவியசொன் னிறைந்தவாதஞ்செயலினொழியாத திருப்பணியுமாறாது சாருநாளில்.

(இ-ள்.) செஞ்சடைக்கற்றைமுற்றத்திளநிலாவெறிக்குமென்னும்=செஞ்சடைக்கற்றைமுற்றத் திளநிலாவெறிக்குமென்னும் முதலோடு; சிறந்தவாய்மையஞ்சொல்வளத்தமிழ்மாலை=சிறப்படைந்த மெய்ம்மையாகிய அழகிய சொல்வளமமைந்த தமிழ்ச்செய்யுள்களாலாய திருப்பதிகமாலையை; அதிசயமாம்படிபாடி=யாவரும் வியக்கும்படிபாடியருளி; அன்புசூழ்ந்தநெஞ்சுருகப்பொழிபுனல்வார்கண்ணிணையும்=அன்பு நிறைந்த திருவுள்ளமானது உருகுதலினால் பொழிகின்ற ஆனந்தக்கண்ணீர் ஒழுகுகின்ற கண்களும்; பரவியசொன்னிறைந்தவாயும்=அத்திருப்பதிகங்களோதுகின்ற சொல்நிறைந்த திருவாயும்; தஞ்செயலினொழியாததிருப்பணியும்=தம்செயலினின்றும் நீங்காத உழவாரத்திருப்பணியும்; மாறாதுசாருநாளில்=நீங்காது இருக்கும் நாளில்.—எ-று. (களசு)

கோயிற்றிருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

செஞ்சடைக்கற்றைமுற்றத் திளநிலாவெறிக்குஞ்சென்னி
நஞ்சடைகண்டனாரைக் காணலாநறவநாறு
மஞ்சடைசோலைத்தில்லை மல்குசிற்றம்பலத்தே
துஞ்சடையிருள்கிழியத் துளங்கெரியாடுமாறே. (க)

மதியிலாவரக்கனோடி மாமலையெடுக்கநோக்கி
நெதியன்றோணெரியவூன்றி நீடிரும்பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய்தில்லைதன்னுண் மல்குசிற்றம்பலத்தே
யதிசயம்போலநின்று வனலெரியாடுமாறே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மூலத்தானநாயகர்-சபாநாதர், தேவியார்-சிவகாமியம்மை.

கடையுகத்திலாழியின்மேன் மிதந்ததிருக்கழுமலத்தி னிருந்தசெங்கண்
விடையுகைத்தார்திருவருளால் வெற்பரையன்பாவைதிரு முலைப்பாலோடு
மடையநிறைசிவம்பெருகி வளர்ஞானங்குழைத்தூட்ட வமுதுசெய்த
வுடையமறைப்பிள்ளையார் திருவார்த்தையடியார்க ளுரைப்பக்கேட்டார்.

(இ-ள்.) கடையுகத்திலாழியின்மேன்மிதந்த=கற்பாந்தத்தில் பெருகும் சமுத்திரத்தின்மேல் தோணியாகமிதந்த; திருக்கழுமலத்தினிருந்த=சீகாழி என்னுந் திருப்பதியில் வீற்றிருந்த; செங்கண்விடையுகைத்தார்திருவருளால்=சிவந்த கண்களையுள்ள இடபத்தை வாகனமாக ஊர்ந்தருளும் சிவபிரான் திருவருளினால்; வெற்பரையன்பாவைதிருமுலைப்பாலோடும்=உமாதேவியார் தான்கொடுக்கும் திருமுலைப்பாலோடும்; அடைய நிறைசிவம்பெருகிவளர்=எங்கும்நிறைந்த சிவத்தையுணர்ந்து மேற்கிளர்ந்துவளர்கின்ற; ஞானங்குழைத்தூட்ட வமுதுசெய்த=பரஞானத்தைக்குழைத்துத் திருவமுதுசெய்விக்க அதனையுண்டருளிய; உடையமறைப்பிள்ளையார்திருவார்த்தை=மறைஞானமுடைய ஆளுடைய பிள்ளையார் சரிதத்தை; அடியார்களுரைப்பக்கேட்டார்=அடியார்கள் சொல்லக் கேள்விப்பட்டார்.—எ-று. இவ்விரண்டுங் குளகம். (கஎஎ)

ஆழிவிடமுண்டவரை யம்மைதிருமுலையமுத முண்டபோதே
யேழிசைவண்டமிழ்மாலை யிவனெம்மானெனக்காட்டி யியம்பவல்ல
காழிவரும்பெருந்தகைசீர் கேட்டலுமேயதிசயமாங் காதல்கூர
வாழியவர்மலர்க்கழல்கள் வணங்குதற்குமனத்தெழுந்த விருப்புவாய்ப்ப.

(இ-ள்.) ஆழிவிடமுண்டவரை=பாற்கடலில்பிறந்த ஆலகாலத்தைத் திருவமுது செய்தருளிய சிவபிரானை; அம்மைதிருமுலையமுதமுண்டபோதே=உமாதேவியார் அருளிய திருமுலைப்பாலைத்திருவமுதுசெய்தவுடனே; இவனெம்மானெனக்காட்டி=இவனே எமது முதல்வனென்று சுட்டிக்காட்டி; ஏழிசைவண்டமிழ்மாலையியம்பவல்ல=ஏழிசையோடுகூடிய வளவிய தமிழ்ப்பதிகத்தை அருளிச்செய்யவல்ல; காழிவரும்பெருந்தகைசீர்கேட்டலும்=சீகாழியில் அவதரித்த ஆளுடையபிள்ளையாரது சரிதத்தைக்கேட்டவளவில்; அதிசயமாங்காதல்கூர=அதிசயம் விளைக்கும் பேரன்பானது அதிகரிக்க; அவர்மலர்க்கழல்கள்வணங்குதற்கு=அவர் திருவடிகளை வணங்கும்பொருட்டு; மனத்தெழுந்தவிருப்புவாய்ப்ப=தம் உள்ளத்துதித்த விருப்பமுண்டாக.—எ-று.

காதல்கூர மனத்தெழுந்த விருப்பெனக்கூட்டுக. ஏ-வாழி-அசை. (கஎஅ)

அப்பொழுதேயம்பலத்து ளாடுகின்றகழல்வணங்கி யருண்முன்பெற்றுப்
பொய்ப்பிறவிப்பிணியோட்டுந் திருவீதிபுரண்டுவலங் கொண்டுபோந்தே
யெப்புவனங்களுநிறைந்த திருப்பதியி னெல்லையினை யிறைஞ்சியேத்திச்
செப்பரியபெருமையினார் திருநாரையூர்பணிந்து பாடிச்செல்வார்.

(இ-ள்.) அப்பொழுதேயம்பலத்துளாடுகின்றகழல்வணங்கி=ஆளுடையபிள்ளையாரைத்தரிசிக்கும் விருப்புண்டானபோதே திருவம்பலத்துள் ஆனந்ததிருத்தம்செய்தருளும் திருவடிகளைவணங்கி; அருண்முன்பெற்று=அவர் திருவருளை முன்பெற்று; பொய்ப்பிறவிப்பிணியோட்டுந்திருவீதி=பொய்யாகிய பிறவிநோயை ஓட்டுதற்கேதுவான திருவீதியில்; புரண்டுவலங்கொண்டுபோந்து=அங்கத்தால் புரண்டு வலமாகவந்து சென்று; எப்புவனங்களுநிறைந்த=எவ்வுலகங்களினும் நிறைந்த; திருப்பதியினெல்லையினை இறைஞ்சியேத்தி=திருவம்பலத்தின் திருவெல்லையை வணங்கித்துதித்து; செப்பரியபெ

ருமையினுர்—சொல்லுதற்கரிய மகிமையையுடைய திருநாவுக்கரசர்; திருநாரையூர்பணிந்துபாடிச்செல்வார்—திருநாரையூர் என்னும் திருப்பதியைவணங்கித் திருப்பதிகம்பாடியெழுந்தருளுவாராயினர்.—எ-று. ஏ-அசை.

எப்புவனங்களுநிறைந்த என்பதற்கு எப்புவனங்களினுள்ளாரும் நிறைந்திருக்கின்ற திருப்பதி என்றுரைத்தலுமொன்று. இவ்விரண்டுங் குளகம். (கஎகூ)

தொண்டர்குழாம்புடைசூழத் தொழுதகரத்தொடுநீறு துதைந்தகோலங்
கண்டவர்தமனங்கசிந்து கரைந்துருகுங்கருணைபுறம் பொழிந்துகாட்டத்
தெண்டிரைவாய்க்கன்மிதப்பி லுகைத்தேறுந்திருநாவுக் கரசர்தாமும்
வண்டமிழாலெழுதுமறை மொழிந்தபிரான்றிருப்புகலி மருங்குசார்ந்தார்.

(இ-ள்.) தொண்டர்குழாம்புடைசூழ—அடியார்கூட்டம் தம்மைச்சூழ்ந்துவர; தொழுதகரத்தொடுநீறுதுதைந்தகோலம்—அஞ்சலிசெய்யும் திருக்கரத்தோடு திருநீறு நன்ருகப்பூசிய திருக்கோலத்தை; கண்டவர்தமனங்கசிந்துகரைந்துருகுங்கருணை—தரிசித்தாரது மனம் இளகிக்கரைந்து உருகுதற்கேதுவான திருவுள்ளக்கருணையானது; புறம்பொழிந்துகாட்ட—தான் அகத்துள்ள நிலைமையைப் புறத்தேபொழிந்து யாவர்க்கும் வெளிப்படுத்த; தெண்டிரைவாய்க்கன்மிதப்பில்—தெள்ளிய அலைகளையுடைய கடலில் சமணர்களிட்ட கல்லாகிய தெப்பத்தில்; உகைத்தேறுந்திருநாவுக்கரசர்தாமும்—செலுத்தி ஏறிய வாகீசமுனிவரும்; வண்டமிழாலெழுதுமறைமொழிந்தபிரான்—வளவிய தமிழ் மொழியினுல் எழுதாமறையாகிய வேதப்பொருளை எழுதும் மறையாகப்பாடியருளும் ஆளுடையபிள்ளையார் அவதரித்த; திருப்புகலிமருங்குசார்ந்தார்— சீகாழியின் சமீபத்தை யடைந்தார்.—எ-று. (கஅ௦)

நீண்டவரைவில்லியார் வெஞ்சூலைமடுத்தருளி நேரேமுன்னு
ளாண்டவரசெழுந்தருளக் கேட்டருளியாளுடைய பிள்ளையாருங்
காண்டகையபெருவிருப்புக் கைமிக்கதிருவுள்ளக் கருத்தினோடு
மூண்டவருண்மனத்தன்பர் புடைசூழவெழுந்தருளி முன்னேவந்தார்.

(இ-ள்.) நீண்டவரைவில்லியார்—உயர்ந்த மாமேருவை வில்லாகக்கொண்ட சிவபிரானுர்; வெஞ்சூலைமடுத்தருளி—கொடிய சூலைநோயை வயிற்றிற்சேர்த்தருளி; நேரேமுன்னுளாண்டவரசு—தாமே முன்னுளில் தடுத்தாட்கொண்ட திருநாவுக்கரசு; எழுந்தருளக்கேட்டருளி—எழுந்தருளிவரக்கேட்டு; ஆளுடையபிள்ளையாரும்—ஆளுடைய பிள்ளையாரும்; காண்டகையபெருவிருப்புக்கைமிக்க—தாம் அவரைத் தரிசிக்கவேண்டுமென்கின்ற பேரவாவானது மேற்கொண்ட; திருவுள்ளக்கருத்தினோடு—திருவுள்ளக்குறிப்போடும்; மூண்டவருண்மனத்தன்பர்—திருவருள் வளர்ந்தோங்கிய உள்ளத்தையுடைய அடியார்கள்; புடைசூழவெழுந்தருளிமுன்னேவந்தார்—அருகிற்சூழ எழுந்தருளி அவர் திருமுன்னேவந்தார்.—எ-று. (கஅக)

தொழுதணைவுற்றுண்டவர சன்புருகத்தொண்டர்குழாத் திடையேசென்று
பழுதில்பெருங்காதலுட னடிபணியப்பணிந்தவர்தங் கரங்கள்பற்றி
யெழுதரியமலர்க்கையா லெடுத்திறைஞ்சிவிடையின்மேல் வருவார்தம்மை
யழுதழைத்துக்கொண்டவர்தா மப்பரோயெனவவரு மடியேனென்றுர்.

(இ-ள்.) தொழுதணைவுற்றுண்டவரசு—அவர் எழுந்தருளுங்கால் வாகீசமுனிவர் அஞ்சலியாகக்குவித்த கரங்களுடையராய் எழுந்தருளிவந்து; அன்புருகத்தொண்டர்கு

ழாத்திடையேசென்று = அன்பானது கசிந்துருகும்படி அடியார்கூட்டத்திடையேபோய்; பழுதில்பெருங்காதலுடன்டிபணிய = குற்றமற்ற பேரன்போடுபிள்ளையார் திருவடிகளில் பணிய; பணிந்தவர்தங்கரங்கள்பற்றி = வணங்கிய ஆண்டவரசரது திருக்கரங்களைப் பிடித்து; எழுதரியமலர்க்கையாலெடுத்திறைஞ்சி = ஓவியர்களால் எழுதுதற்கரிய தமது திருக்கரங்களால் எடுத்து அஞ்சலிசெய்து; விடையின்மேல்வருவார்தம்மை = விடையின்மேல் எழுந்தருளிவரும் சிவபிரானை; அழுதழைத்துக்கொண்டவர் = திருத்தோணிச்சிகரம்பார்த்து அழுது தமக்குக் காட்சிகொடுக்கும்படி செய்துகொண்ட ஆளுடையபிள்ளையார்; அப்பரேயெனவவருமடியேனென்றார் = அப்பரே என்று வினவ அவரும் அடியேனென்று அருளிச்செய்தார்.—எ-று. தாம்-அசை. (கஅஉ)

அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதஞானங்கொடுப்ப வழுகைதீர்ந்த, செம்பவளவாய்ப்பிள்ளை திருநாவுக்கரசரெனச் சிறந்தசீர்த்தி, யெம்பெருமக்களுமியைந்த கூட்டத்திலரனடியா ரின்பமெய்தி, யும்பர்களும் போற்றிசைப்பச் சிவம்பெருகு மொலிநிறைத்தா ருலகமெல்லாம்.

(இ-ள்.) அம்பிகைசெம்பொற்கிண்ணத்து = உமையம்மை சிவந்த பொற்கிண்ணத்தில்; அமுதஞானங்கொடுப்பவழுகைதீர்ந்த = திருமுலைப்பாலோடு ஞானத்தையும் குழைத்துக்கொடுக்க அழுகை நீங்கிய; செம்பவளவாய்ப்பிள்ளை = சிவந்த பவளம்போலும் திருவாயையுடைய ஆளுடையபிள்ளையார்; திருநாவுக்கரசரென = திருநாவுக்கரசு என்று சொல்லப்படும்; சிறந்தசீர்த்தியெம்பெருமக்களுமியைந்தகூட்டத்தில் = மிகு புகழையுடைய எமது இரண்டுபெருமக்களும் கலந்த திருக்கூட்டத்திலுள்ள; அரனடியாரின்பமெய்தி = சிவனடியார் இன்பமடைந்து; உம்பர்களும்போற்றிசைப்ப = வானவர்களும் துதிசெய்ய; சிவம்பெருகுமொலிநிறைத்தாருலகமெல்லாம் = மங்கலம் மிக்க ஓசையை உலகமெல்லாம் நிறைத்தார்கள்.—எ-று.

சிவம்பெருகுமொலி என்றதனால் சிவன் மகாதேவன் அரன் சங்கரன் எனக்கூறும் திருநாமங்களை உச்சரித்தனரென்க. சிவம்பெருகுதல் ஓதுவார்க்கு நாவுக்கினிதாய்ச் சுவை தந்து களிப்பை வளர்த்துநிற்றல். (கஅ௩)

பிள்ளையார்கழல்வணங்கப் பெற்றேனென் றரசுவப்பப் பெருஞானவள்ளலார்வாகீசர் தமைக்காணப் பெற்றதற்கு மகிழ்ச்சிபொங்க, உள்ளநிறைகாதலினு லொருவரொருவரிற்கலந்த வுண்மையோடும், வெள்ளநீர்த் திருத்தோணி வீற்றிருந்தார்கழல்வணங்கும் விருப்பின்மிக்கார்.

(இ-ள்.) பிள்ளையார்கழல்வணங்கப்பெற்றேனென்றரசுவப்ப = ஆளுடையபிள்ளையார் திருவடிகளைத் தொழப்பெற்றேனென்று ஆண்டவரசு மகிழ்ச்சியடைய; பெருஞானவள்ளலார் = மிக்க சிவஞானத்தையுடைய ஆளுடையபிள்ளையார்; வாகீசர்தமைக்காணப்பெற்றதற்குமகிழ்ச்சிபொங்க = வாகீசமுனிவரைத் தரிசிக்கப்பெற்ற ஏதுவால் மகிழ்ச்சி மீக்கூர; உள்ளநிறைகாதலினல் = திருவுள்ளத்துநிறைந்த பெருவிருப்போடு; ஒருவரொருவரிற்கலந்தவுண்மையோடும் = ஒருவருள்ளத்தோடு ஒருவருள்ளங்கலந்த மெய்ம்மையோடும்; வெள்ளநீர்த்திருத்தோணிவீற்றிருந்தார் = பிரளயவெள்ளத்து மிதந்த திருத்தோணியின்கண் வீற்றிருந்தருளும் சிவபிரானர்; கழல்வணங்கும்விருப்பின்மிக்கார் = திருவடிகளை வணங்கும் விருப்பத்தில் மிக்காராயினர்.—எ-று. (கஅச)

அருட்பெருகுதனிக்கடலு முலகுக்கெல்லாமன்புநிறைகடலுமாமெனவும்பொங்கும், பொருட்சமயமுதற்சைவ நெறிதான்பெற்றபுண்ணி

யக்கண்ணிரண்டெனவும் புவனமுய்ய, விருட்கடுவுண்டவரருளு மகிலமெல்லாமீன்றுடன்றிருவருளு மெனவுங்கூடித், தெருட்கலைஞானக்கன்றுமரசுஞ்சென்றுசெஞ்சடைவானவர்கோயில் சேர்ந்தாரன்றே.

(இ-ள்.) உலகுக்கெல்லாம்அருட்பெருகுதனிக்கடலும்—உலகுக்கெல்லாம் கருணைபாலிக்கின்ற ஓர்கடலும்; உலகுக்கெல்லாமன்புநிறைகடலுமாமெனவும்—உலகுக்கெல்லாம் அன்புநிறைந்த ஓர்கடலும் ஒக்குமென்றுசொல்லவும்; பொங்கும்பொருட்சமயமுதற்சைவநெறி—பொலிவுதங்கிய சிவபரம்பொருளை முதலாகக்கொண்ட சமயமாகிய சைவமார்க்கம்; தான்பெற்றபுண்ணியக்கண்ணிரண்டெனவும்—தான்பெற்றுக்கொண்ட புண்ணியவடிவமாகிய இரண்டுகண்ணெனவும்; புவனமுய்யவிருட்கடுவுண்டவரருளும்—உலகமுய்யும்பொருட்டுக் கருநிறமுடைய ஆலாகலத்தை அமுதுசெய்தருளும் சிவபிரானது திருவருளும்; அகிலமெல்லாமீன்றுடன்றிருவருளுமெனவுங்கூடி—எல்லாவுலகத்தையும் பெற்ற மாதாவாகிய உமாதேவியார் திருவருளும் என்றுசொல்லவும் ஒருங்குசேர்ந்து; தெருட்கலைஞானக்கன்றுமரசுஞ்சென்று—தெளிவமைந்த எல்லாக் கலைஞானங்களையுமுணர்ந்த ஆளுடையபிள்ளையாரும் ஆண்டவரசும் எழுந்தருளி; செஞ்சடைவானவர் கோயில்சேர்ந்தார்—சிவந்த சடையையுடைய சிவபிரான் திருக்கோயிலிலடைந்தார்.—எ-று. அன்று-ஏ-அசை.

அன்புக்கும் அருளுக்கும் வேறுபாடின்றேனும் இரண்டாகப் பிரித்துக்கூறும் கருத்தால் அருளையே அன்பாகக்கூறினர். பின்மூன்றும் அடியில் சிவபிரான் திருவருளும் உமாதேவியார்திருவருளும் ஒன்றாகவும் வேறுபிரித்துக் கூறினாற்போலுமென்க. (கஅ௫)

பண்பயில்வண்டறைசோலை சூழுங்காழிப் பரமர்திருக்கோபுரத்தைப் பணிந்துள்புக்கு, விண்பணியவோங்குபெரு விமானந்தன்னை வலங்கொண்டுதொழுதுவிழுந் தெழுந்தவெல்லை, சண்பைவரு பிள்ளையாரப்பருங்கடம்பிரானைநீர் பாடிரென்னக், கண்பயிலும் புனல்பொழிந்த வரசும்வாய்மைக் கலைபயிலுமொழிபொழியக் கசிந்துபாடி.

(இ-ள்.) பண்பயில்வண்டறைசோலைசூழுங்காழி—இசையைப்பயின்ற வண்டுகள் பாடுகின்ற சோலைசூழ்ந்திருக்கும் சீகாழியில்வீற்றிருந்தருளும்; பரமர்திருக்கோபுரத்தைப்பணிந்துள்புக்கு—தோணியப்பரது திருக்கோபுரத்தைவணங்கி உள்ளேபோய்; விண்பணியவோங்குபெருவிமானந்தன்னை—விண்ணுலகமும் தாழும்படி உயர்ந்த பெரிய விமானத்தை; வலங்கொண்டுதொழுதுவிழுந்தெழுந்தவெல்லை—வலமாகவந்து வணங்கி நிலமுறத்தொழுது எழுந்தபின்பு; சண்பைவருபிள்ளையார்—சீகாழியில் அவதரித்த ஆளுடையபிள்ளையார்; அப்பர்உங்கடம்பிரானைநீர்பாடிரென்ன—அப்பரே உங்கள் பிரானை நீர் பாடுமென்று அருளிச்செய்ய; கண்பயிலும்புனல்பொழிந்தவரசும்—கண்ணினிடத்துப்பொருந்திய நீரைப்பொழிந்த ஆண்டவரசும்; வாய்மைக்கலைபயிலுமொழிபொழியக்கசிந்துபாடி—மெய்மையான கலைகளில் உள்ள நல்லசொற்கள் பொருந்தும்படிக்கு மனக்கசிவோடுபாடி.—எ-று. (கஅசு)

பெரியபெருமாட்டியுடன் றோணிமீது பேணிவீற்றிருந்தருளும் பிரான்முன்னின்று, பரிவுறுசெந்தமிழ்மாலை பத்தியொடும் பார்கொண்டுமூடியெனும் பதிகம்போற்றி, யரியவகைபுறம்போந்து பிள்ளையார்தந் திருமடத்திலெழுந்தருளி யமுதுசெய்து, மருவியநண்புறுகேண்மை யற்றைநாள்போல் வளர்ந்தோங்கவுடன்பலநாள் வைகுநாளில்.

(இ-ள்.) பெரியபெருமாட்டியுடன்=பெரிய நாயகியாருடன்; தோணிமீதுபேணி வீற்றிருந்தருளும்=திருத்தோணியில் விரும்பி வீற்றிருந்தருளும்; பிரான்முன்னின்று= சிவபிரான் திருமுன்னேநின்று; பரிவுறுசெந்தமிழ்மாலை=அன்புமிக்க செந்தமிழ்மாலையாகிய; பார்கொண்டுமூடியெனும்பதிகம்பத்தியோடும்போற்றி=பார்கொண்டுமூடி என்னும் திருப்பதிகத்தைப் பத்தியோடுபாடி; அரியவகைபுறம்போந்து=நீங்குதற்கரிய ஆராமையோடு புறம்பேசென்று; பிள்ளையார்தந்திருமடத்திலெழுந்தருளி=ஆளுடையபிள்ளையார் திருமடத்தில் எழுந்தருளி; அமுதுசெய்து=அங்குத் திருவமுதுசெய்தருளி; மருவியநண்புறுகேண்மை=பொருந்தியகேண்மைமிக்க நண்பானது; அற்றைநாள்போல்வளர்ந்தோங்க=இருவருங்கண்ட நாள்போல மற்றைநாள்களிலும் வளர்ந்தேற; உடன்பலநாள்வைகுநாளில்=உடனேகலந்து பலநாள் வசிக்கும்நாளில்.—எ-று. (கஅஎ)

திருக்கழுமலம்- திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பார்கொண்டுமூடிக் கடல்கொண்டு—ஞான்றுநின் பாதமெல்லா
நாலஞ்சுபுள்ளின மேந்தினவென்பர் நளிர்மதியங்
கால்கொண்டவண்கைச் சடைவிரித்தாடுங் கழுமலவர்க்
காளன்றிமற்றுமுண் டோவந்தணுழி யகலிடமே. (க)

கரையார்கடல்சூ ழிலங்கையர்கோன்றன் முடிசிதறத்
தொலையாமலரடி யூன்றலுமுள்ளம் விதிர்விதிர்த்துத்
தலையாய்க்கிடந்துயர்ந் தான்றன்கழுமலங் காண்பதற்கே
யலையாப்பரிசிவை நாடொறுநந்தம்மை யாள்வனவே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம்-சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - பிரமபுரீசர், தேவியார் - திருநிலைநாயகி.
திருத்தோணியில் வீற்றிருப்பவர் தோணியப்பர்.

அத்தன்மை யினிலரசும்பிள்ளையாரு மளவளாவியமகிழ்ச்சி யளவிலாத, சித்தநெகிழ்ச்சியினேடு செல்லுநாளிற் றிருநாவுக்கரசர்திரு வுள்ளந் தன்னின், மைத்தழையுமணிமிடற்றார் பொன்னிநாட்டு மன்னியதானங்களெல்லாம் வணங்கிப்போற்ற, மெய்த்தெழுந்த பெருங்காதல்பிள்ளையார்க்கு விளம்புதலும்வருமது மேவிநேர்வார்.

(இ-ள்.) அத்தன்மையினிலரசும்பிள்ளையாரும்=அவ்வாறாக ஆண்டவரசும் ஆளுடையபிள்ளையாரும்; அளவளாவியமகிழ்ச்சி=ஒருவரோடொருவர் கலத்தலாலாகிய மகிழ்ச்சியானது; அளவிலாதசித்தநெகிழ்ச்சியினேடுசெல்லுநாளில்=அடங்காதமன வுருக்கத்தோடுண்டாக வசித்துக்கொண்டிருக்கும் நாளில்; திருநாவுக்கரசர்திருவுள்ளந்தன்னில்=வாகீசமுனிவர் திருவுள்ளத்தில்; மைத்தழையுமணிமிடற்றார்=கருநிறம் விளங்கியிருக்கும் நீலமணிபோலும் திருமிடற்றையுடைய சிவபிரான் வீற்றிருந்தருளும்; பொன்னிநாட்டுமன்னியதானங்களெல்லாம்=சோழநாட்டில் நிலைபெற்றுள்ள திருப்பதிகளையெல்லாம்; வணங்கிப்போற்றமெய்த்தெழுந்தபெருங்காதல்=தொழுதுதுதிக்க மெய்மையோடுதித்த பெருங்காதலை; பிள்ளையார்க்குவிளம்புதலும்=ஆளுடைய பிள்ளையார்க்குச்சொல்லவும்; அவருமதுமேவிநேர்வார்=அவ்வாளுடையபிள்ளையாரும் அதற்குடன்படுவாராயினர்.—எ-று. இம்மூன்றுங் குளகம். (கஅஅ)

ஆண்டவரசெழுந்தருளக் கோலக்காவை யவரோடுஞ்சென்றிறை ஞ்சி யன்புகொண்டு, மீண்டருளினரவரும் விடைகொண்டிப்பால் வேதநா யகர்விரும்பும் பதிகளான, நீண்டகருப்பறியலூர் புன்கூர்நீடூர் நீடுதிருக்கு றுக்கைதிரு நின்றியூருங், காண்டகையநனிபள்ளி முதலாநண்ணிக் கண் ணுதலார்கழறொழுது கலந்து செல்வார்.

(இ-ள்.) ஆண்டவரசெழுந்தருள=ஆண்டவரசு சீகாழியினின்றும் எழுந்தருள; கோலக்காவையவரோடுஞ்சென்றிறைஞ்சி=திருக்கோலக்காவுக்கு அவரோடும் ஆளு டைய பிள்ளையார் எழுந்தருளிவணங்கி; அன்புகொண்டுமீண்டருளினர்=அன்புமிக்கூர் ந்து சீகாழிக்குத் திரும்பியருளினர்; அவரும்விடைகொண்டிப்பால்=அவ்வாண்டவர சும் அவரிடத்து அனுமதிபெற்றுக்கொண்டு இதன்மேல்; வேதநாயகர்விரும்பும்பதிக ளான=வேதமுதல்வராகிய சிவபிரான் வீற்றிருந்தருளும் திருப்பதிகளான; நீண்டகரு ப்பறியலூர்புன்கூர்நீடூர்=பெருமைமிக்க திருக்கருப்பறியலூர் திருப்புன்கூர் திருநீடூர்; நீடுதிருக்குறுக்கைதிருநின்றியூரும்=மிக்க திருக்குறுக்கை திருநின்றியூரும்; காண்டகை யநனிபள்ளிமுதலாநண்ணி=காட்சியமைந்த திருநனிபள்ளிமுதலான திருப்பதிகளைய டைந்து ஆங்காங்கு வீற்றிருந்தருளும்; கண்ணுதலார்கழறொழுதுகலந்துசெல்வார்= நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான் திருவடிகளைத்தொழுது அன்போடுகலந்து செல் வாராயினர்.—எ-று. (கஅகூ)

மேவுபுனற்பொன்னியிரு கரையுஞ்சார்ந்து விடையுயர்த்தார்திருச் செம்பொன் பள்ளிபாடிக், காவுயருமயிலாடு துறைநீள்பொன்னிக் கரைத் துருத்திவேள்விக்குடி யெதிர்கொள்பாடி, பாவுறுசெந்தமிழ்மாலை பாடி ப்போற்றிப் பரமர்திருப்பதிபலவும் பணிந்துபோந்தே, யாவுறுமஞ்சாடுவார் கோடிகாவி லணைந்துபணிந்தாவடுதண் டுறையைச்சார்ந்தார்.

(இ-ள்.) மேவுபுனற்பொன்னியிருகரையுஞ்சார்ந்து=பெருக்குப்பொருந்திய புன லையுடைய காவிரியின் இருகரையும்சென்று தென்கரையிலுள்ள; விடையுயர்த்தார்திருச் செம்பொன்பள்ளிபாடி=இடபக்கொடியை எடுத்த சிவபிரான் வீற்றிருந்தருளும் திரு ச்செம்பொன்பள்ளி என்னும் திருப்பதியைப்பாடி; காவுயருமயிலாடுதுறை=சோலை கள் உயர்ந்த திருமயிலாடுதுறை; நீள்பொன்னிக்கரைத்துருத்திவேள்விக்குடி=நீண்ட பொன்னித் தென்கரையிலுள்ள திருத்துருத்தி வடகரையிலுள்ள திருவேள்விக்குடி; எதிர்கொள்பாடி=திருவெதிர்கொள்பாடி முதலிய தலங்களில்; பாவுறுசெந்தமிழ்மாலை பாடிப்போற்றி=பாவுக்கமைந்த செந்தமிழ்த் திருப்பதிகமாலையைப் பாடித்துதித்து; பரமர்திருப்பதிபலவும்பணிந்துபோந்து=சிவபிரான் வீற்றிருந்தருளும் பல திருப்பதி களையும் வணங்கிச்சென்று; ஆவுறுமஞ்சாடுவார்கோடிகாவிலணைந்துபணிந்து=ஆவின்க ணுள்ள கவ்வியம் ஐந்தையும் ஆடியருளும் பிரானரது திருக்கோடிகாவிற்சென்று வண ங்கி; ஆவடுதண்டுறையைச்சார்ந்தார்=தென்கரையிலுள்ள திருவாவடுதுறையை அடை ந்தருளினர்.—எ-று. ஏ-அசை. (ககூ0)

ஆவடுதண்டுறையாரை யடைந்துய்ந்தேனென் றளவிறிருத்தாண்டக முன் னருளிச்செய்து, மேவுதிருக்குறுந்தொகையு நேரிசையுஞ்சந்தவிரு த்தங்க ளானவையும் வேறுவேறு, பாவலர்செந் தமிழ்த்தொடையாற்பள் ளித்தாமம் பலசாத்திமிக்கெழுந்த பரிவினோடும், பூவலயத்தவர்பரவப் பல நாட்டங்கிப் புரிவுறுகைத்திருத்தொண்டு போற்றிச்செய்வார்.

(இ-ள்.) ஆவடுதண்டுறையானையடைந்துய்ந்தேனென்று=திருவாவடுதுறையின் கண் வீற்றிருந்தருளும் சிவபிரானை யடைந்துய்ந்தேனென்று இறுதியிலுடைய; அளவிறிருத்தாண்டகமுன்னருளிச்செய்து=பெருமைக்கோரெல்லையில்லாத திருத்தாண்டகத்தை முன்னேபாடியருளி; மேவுதிருக்குறுந்தொகையுநேரிசையும்=பெருமைபொருந்திய திருக்குறுந்தொகையும் திருநேரிசையும்; சந்தவிருத்தங்களானவையும்=திருச்சந்தவிருத்தங்களும் ஆகிய இவைகளை; வேறுவேறுபாவலர்செந்தமிழ்த்தொடையால்=தனித்தனி செய்யுள்களாக விளங்கும் செந்தமிழ்ப் பதிகங்களினுல்; பள்ளித்தாமம்பலசாத்தி=பல திருப்பள்ளித்தாமங்களைச்சாத்தி; மிக்கெழுந்தபரிவினோடும்=மேற்கொண்டெழுந்த அன்போடும்; பூவலயத்தவர்பரவப்பலநாட்டங்கி=நிலவுலகத்திலுள்ளார் துதிக்கும்படி அங்குப் பலநாள்வசித்து; புரிவுறுகைத்திருத்தொண்டுபோற்றிச்செய்வார்=விரும்பத்தக்க கைத்திருத்தொண்டைப் பேணிச்செய்வாராயினர்.—எ-று. (௧௬௧)

திருவாவடுதுறைத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பனைநால்வேதங் கரைகண்டானை ஞானப்பெருங்கடலை நன்மைதன்னைக், கம்பனைக் கல்லாலிருந்தான்றன்னைக் கற்பகமாயடியார்கட் கருள்செய்வானைச், செம்பொன்னைப் பவளத்தைத்திரளுமுத்தைத் திங்களை ஞாயிற்றைத் தீயைநீரை,யம்பொன்னை யாவடுதண்டுறையுண்மேய வரனடியேயடிநாயே னடைந்துய்ந்தேனே. (௧)

தரித்தானைத் தண்கடனஞ்சுண்டான்றன்னைத் தக்கன்றன்பெருவேள்வி தகர்த்தான்றன்னைப், பிரித்தானைப் பிறைதவழ்செஞ்சடையினானைப் பெருவலியால் மலையெடுத்த வரக்கன்றன்னை, நெரித்தானை நேரிழையாள் பாகத்தானை நீசனேனுடலுறுநோ யானதீர, வரித்தானை யாவடுதண்டுறையுண்மேய வரனடியேயடிநாயே னடைந்துய்ந்தேனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

எறிபுனல்பொன்மணிசிதறு கரைநீர்ப்பொன்னி யிடைமருதைச்சென்றெய்தி யன்பினோடு, மறிவிரவுகரத்தாரை வணங்கிவைகி வண்டமிழ்ப்பாமாலைபல மகிழச்சாத்தி, பொறியரவம்புனைந்தாரைத் திருநாகேச்சரத்துப் போற்றியருந்தமிழ்மாலை புனைந்துபோந்து, செறிவிரைநன்மலர்ச்சோலைப் பழையாறெய்தித் திருச்சத்திமுற்றத்திற் சென்றுசேர்ந்தார்.

(இ-ள்.) எறிபுனல்பொன்மணிசிதறு=வீசுகின்ற அலையானது பொன்னையும் மணியையும் சிதறுகின்ற; கரைநீர்ப்பொன்னியிடைமருதைச்சென்றெய்தி=கரையையுடைய நீர்மயமான காவிரிக்கரையின்கணுள்ள திருவிடைமருதூரை அடைந்து; அன்பினோடுமறிவிரவுகரத்தாரைவணங்கிவைகி=அன்போடு மான்கன்றேந்திய திருக்கரத்தையுடைய சிவபிரானை வணங்கிவசித்து; வண்டமிழ்ப்பாமாலைபலமகிழச்சாத்தி=வளவிய தமிழ்ப்பதிகமாலை பலவற்றை மகிழும்படி சாத்தி; பொறியரவம்புனைந்தாரை=புள்ளியினையுடைய பாம்பை அணிந்தருளிய சிவபிரானை; திருநாகேச்சரத்துப்போற்றி=திருநாகேச்சரத்திற் சென்றுவணங்கி; அருந்தமிழ்மாலைபுனைந்துபோந்து=அரிய திருப்பதிகமாலையைச்சூடி அங்குநின்றும் எழுந்தருளி; செறிவிரைநன்மலர்ச்சோலைப்பழையாறெய்தி=வாசனைகமழும் நல்லமலர்களையுடைய சோலைசூழ்ந்த திருப்பழையாற்றையடைந்து; திருச்சத்திமுற்றத்திற்சென்றுசேர்ந்தார்=திருச்சத்திமுற்றம் என்னும் தலத்திற்கு எழுந்தருளினர்.—எ-று. (௧௬௨)

வேறு.

சென்றுசேர்ந்து திருச்சத்தி முற்றத்திருந்த சிவக்கொழுந்தைக்
குன்றமகடன் மனக்காதல் குலவும்பூசை கொண்டருளும்
என்றுமினிய பெருமானை யிறைஞ்சியியல்பிற் றிருப்பணிகண்
முன்றிலணைந்து செய்துதமிழ் மொழிமாலைகளுஞ் சாத்துவார்.

(இ-ள்.) சென்றுசேர்ந்து—திருச்சத்திமுற்றமென்னும் திருப்பதியை அடைந்து; திருச்சத்திமுற்றத்திருந்தசிவக்கொழுந்தை—அங்கு வீற்றிருந்தருளும் சிவக்கொழுந்தீசரை; குன்றமகடன்மனக்காதல்குலவும்பூசைகொண்டருளும்—பார்ப்பதியாருடைய திருவுள்ளத்துப் பேரன்போடுவிளங்கும் பூசையை ஏற்றுக்கொள்ளும்; என்றுமினியபெருமானையிறைஞ்சி—அடியார்க்கு என்றும் இனியராய் விளங்கும் சிவபிரானை வணங்கி; இயல்பிற்றிருப்பணிகள்—இயல்பான பத்தியோடு உழவாரத்திருப்பணிகளை; முன்றிலணைந்துசெய்து—திருமுற்றத்தின்கண்சென்று செய்தருளி; தமிழ்மொழிமாலைகளுஞ்சாத்துவார்—செந்தமிழ்மொழிகளாலாகிய திருப்பதிகமாலைகளையும் தொடுத்துச் சாத்துவாராயினார்.—எ-று.

இதனால் திருச்சத்திமுற்றம் உமாதேவியார் வழிபட்ட தலம் என்பதுகாண்க. இயல்பிற்செய்தலாவது:—இப்பணிசெய்கின்றேமென நாணேனும் இதனாலுயர்ந்தோமென வகங்காரமேனு முதியாதுசெய்தல். புல்லைச்செதுக்குதல் அதனைச் சேர்த்தெடுத்துப்பணிமாறல் தூய்மைசெய்தல்முதலிய அடங்கப்பணிகளென்றுர். (கசுரு)

கோவாய்முடுகி யென்றெடுத்துக் கூற்றம்வந்து குமைப்பதன்முன்
பூவாரடிக ளென்றலைமேற் பொறித்துவைப்பா யெனப்புகன்று
நாவார்பதிகம் பாடுதலு நாதன்றானு நல்லூரில்
வாவாவென்றே யருள்செய்ய வணங்கிமகிழ்ந்து வாகீசர்.

(இ-ள்.) கோவாய்முடுகியென்றெடுத்து—கோவாய்முடுகி என்று முதலெடுத்து; கூற்றம்வந்துகுமைப்பதன்முன்—இயமன்வந்து வருத்துவதன்முன்; பூவாரடிகளென்றலைமேற்பொறித்துவைப்பாய்—தாமரைமலர்போலும் திருவடிகளை என்சிரசின்மேற் சூட்டிவைப்பாய்; எனப்புகன்று—என்றுகூறி; நாவார்பதிகம்பாடுதலும்—நாநிறையும் படி திருப்பதிகத்தைப்பாடவும்; நாதன்றானும்—சிவக்கொழுந்தீசரும்; நல்லூரில்வாவாவென்றேயருள்செய்ய—திருநல்லூரின்கண் வரக்கடவை வரக்கடவையென்று அசரீரி வாக்கருளிச்செய்ய; வணங்கிமகிழ்ந்துவாகீசர்—அதைக்கேட்டு வாகீசமுனிவர் நிலமுற வணங்கி மகிழ்ச்சியடைந்து.—எ-று. (கசுசு)

திருச்சத்திமுற்றம் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கோவாய்முடுகி யடுதிறற்கூற்றங் குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவ டென்மேற்பொறித்துவை போகவிடின்
மூவாமுழுப்பழி மூடுங்கண்டாய்முழங் குந்தழற்கைத்
தேவாதிருச்சத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே. (க)

பொறித்தோரரக்கன் பொருப்பெடுப்புற்றவன் பொன்முடிதோள்
இறத்தாளொருவிர லூன்றிட்டலற விரங்கியொள்வாள்
குறித்தேகொடுத்தாய் கொடியேன்செய்குற்றக் கொடுவினைநோய்
செறுத்தாய்திருச்சத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே. (கo)

திருச்சிற்றம்பலம்.

அப்பர்சுவாமிகள் திருச்சத்திமுற்றத்தில் சிவபெருமானைப்பணிந்து கூற்றுவன்வருமுன்னர் அடியேன்முடிமீது சுவாமிகள்திருவடியைச் சூட்டருள வேண்டுமெனப் பதிகமோத நல்லூருக்கு வருகவென்றருள அங்கு எம்பெருமான் தமது திருவடியை சென்னிமீதிற் சூட்டியருளினார்.

வேறு.

நன்மைபெரு கருணைநெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்போதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோ மென்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

(இ-ள்.) மன்னுதிருத்தொண்டனார்=நிலைபெற்ற திருத்தொண்டையுடைய வாகீசமுனிவர்; நன்மைபெருகருணைநெறியே=நன்மைமிக்க சிவபிரான் திருவருளின்வழியே; நல்லூரில்வந்தணைந்து=திருநல்லூரின்கண்வந்து; வணங்கிமகிழ்ந்தெழும்போதில்=நிலமுறவணங்கி மகிழ்ந்து எழுந்திருக்கும்பொழுதில்; உன்னுடையநினைப்பதனைமுடிக்கின்றோமென்று=உன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்றோமென்று; அவர்தஞ்சென்னிமிசை=அவருடைய சிரசின்மேல்; பாதமலர்சூட்டினான்சிவபெருமான்=தமது திருவடிகளைச் சிவபெருமான் சூட்டியருளினார்.—எ-று. இவ்விரண்டுங் குளகம்.

எழும்போதிற் சூட்டினானென இயையும். (ககரு)

நனைந்தனைய திருவடியென் றலைமேல்வைத் தாரென்று
புனைந்ததிருத் தாண்டகத்தாற் போற்றிசைத்துப் புனிதனரு
ணினைந்துருகி விழுந்தெழுந்து நிறைந்துமலர்ந் தொழியாத
தனம்பெரிதும் பெற்றுவந்த வறியோன்போன் மனந்தழைத்தார்.

(இ-ள்.) நனைந்தனையதிருவடியென்றலைமேல்வைத்தாரென்று=நனைந்தனைய திருவடியென்றலைமேல் வைத்தாரென்று; புனைந்ததிருத்தாண்டகத்தாற்போற்றிசைத்து=முதற்பாசுரத்தின் ஈற்றடியில்வைத்த திருத்தாண்டகத்தாற்றுதித்து; புனிதனருணினைந்துருகி=சிவபிரான் திருவருளையுன்னி மனமுருகி; விழுந்தெழுந்து=நிலமுறச் சாட்டாங்கமாகவணங்கி எழுந்து; நிறைந்துமலர்ந்து=நிறைவடைந்து இதயம்மகிழ்ந்து; ஒழியாததனம்பெரிதும்பெற்றுவந்த=அழியாத செல்வத்தை மிகப்பெற்று அதனால் மகிழ்வடைந்த; வறியோன்போன்மனந்தழைத்தார்=வறியவனைப்போல் திருவுள்ளக் கிளர்ச்சியடைந்தார்.—எ-று.

நனைந்தனைய திருவடி என்றது மூவகைத்துன்பத்தைச் சமனப்படுத்துந் தட்பமுடையதென்னும் பொருள்படநின்றது. தம்முளக்குறை நீங்குதலில் நிறைந்தென்றும் அதனால் மிகமகிழ்ச்சியடைதலில் மலர்ந்தென்றுங் கூறினர். நினைந்துருகி விழுந்தெழுந்தென்னுங்கால் தன் தரத்துஞ்செய்த கருணைக்காகவுருகி அவ்வாறாமையால் விழுந்தெழுந்தன வென்றுங்கொள்க. (ககசு)

திருநல்லூர்த்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நினைந்துருகுமடியாரைநையவைத்தார் நில்லாமேதீவினைக ணீங்கவைத்தார், சினந்திருகுகளிற்றுரிவைப் போர்வைவைத்தார் செழுமதியின்றளிர்வைத்தார் சிறந்துவானோர், இனந்துருவிமணிமகுடத்தேறத்துற்ற வினமலர்கள்போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி, நனைந்தனையதிருவடியென் றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (க)

பொன்னலத்தநறுங்கொன்றை சடைமேல்வைத்தார் புலியுரியினதள்வைத்தார் புனலும்வைத்தார், மன்னலத்ததிரடோண்மேன் மழுவாள்வைத்

தார் வார்காதிற்குழைவைத்தார் மதியம்வைத்தார், மின்னலத்தநுண்ணி டையாள் பாகம்வைத்தார் வேழத்தினுரிவைத்தார் வெண்ணூல்வைத்தார், நன்னலத்ததிருவடியென் றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார்நல்ல வாறே. (உ)

தோடேறுமலர்க்கொன்றை சடைமேல்வைத்தார் துன்னெருக்கின்வ டம்வைத்தார் துவலைசிந்தப், பாடேறுபடுதிரைகளெறியவைத்தார்பனிமத் தமலர்வைத்தார் பாம்பும்வைத்தார், சேடேறுதிருநுதன்மேனாட்டம்வைத் தார் சிலைவைத்தார்மலைபெற்ற மகளைவைத்தார், நாடேறுதிருவடியென் றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (ங)

வில்லருளிவருபுருவத் தொருத்திபாகம் பொருத்தாகிவிரிசடைமேல ருவிவைத்தார், கல்லருளிவருசிலையாவைத்தாரூராக் கயிலாயமலைவைத்தார் கடவூர்வைத்தார், சொல்லருளியறநால்வர்க்கறியவைத்தார் சுடுசுடலைப் பொடிவைத்தார் துறவிவைத்தார், நல்லருளாற்றிருவடியென்றலைமேல்வை த்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (ச)

விண்ணிரியுந்திரிபுரங்களெரியவைத்தார் வினைதொழுவார்க்கறவைத் தார் துறவிவைத்தார், கண்ணெரியாற்காமனையும்பொடியாவைத்தார் கடிக் கமலமலர்வைத்தார் கயிலைவைத்தார், திண்ணெரியுந்தண்புனலுமுடனே வைத்தார் திசைதொழுதுமிசையமரர் திகழ்ந்துவாழ்த்தி, நண்ணரியதிருவ டியென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (ரு)

உற்றுலவுபிணியுலகத்தெழுமைவைத்தா ருயிர்வைத்தாருயிர்செல்லுங் கதிகள்வைத்தார், மற்றமரர்கணம்வைத்தாரமரர்காணு மறைவைத்தார்கு றைமதியம் வளரவைத்தார், செற்றமலியார்வமொடுகாமலோபஞ் சிறவாத நெறிவைத்தார் துறவிவைத்தார், நற்றவர்சேர்திருவடியென்றலைமேல்வை த்தார்நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (சு)

மாறுமலைந்தாரரணமெரியவைத்தார் மணிமுடிமேலரவைத்தா ரணி கொண்மேனி,நீறுமலிந்தெரியாடனிலாவவைத்தார் நெற்றிமேற்கண்வைத் தார் நிலையம்வைத்தா, ராறுமலிந்தறுதிரைகளெறியவைத்தாராரவத்தாலடி யமரர் பரவவைத்தார், நாறுமலர்த்திருவடியென்றலைமேல்வைத்தார் நல்லூ ரெம்பெருமானார் நல்லவாறே. (எ)

குலங்கண்மிகுமலைகடல்கண்ஞாலம்வைத்தார் குருமணிசேரரவைத் தார் கோலம்வைத்தார், உலங்கிளருமரவத்தினுச்சிவைத்தா ருண்டருளி ன்விடம்வைத்தா ரெண்டோள்வைத்தார், நிலங்கிளரும்புனல்களனுளனில ம்வைத்தார் நிமிர்விசும்பின்மிசைவைத்தார் நினைந்தாரிந்நாள், நலங்கிளரு ந்திருவடியென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே.()

சென்றுருளுங்கதிரிரண்டும் விசும்பில்வைத்தார் திசைபத்துமிருநிலத் திற் றிருந்தவைத்தார், நின்றருளியடியமரர்வணங்கவைத்தார் நிறைதவமு

மறைப்பொருளு நிலவவைத்தார், கொன்றருளிக்கொடுங்கூற்றநடுங்கியோடக் குரைகழற்சேவடிவைத்தார் விடையும்வைத்தார், நன்றருளுந்திருவடியென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௯)

பாம்புரிஞ்சிமதிகிடந்துதிரைகளேங்கப் பனிக்கொன்றைசடைவைத்தார் பணிசெய்வானோர், ஆம்பரிசுதமக்கெல்லாமருளும்வைத்தாரடுசுடலைப்பொடிவைத்தா ரழகும்வைத்தார், ஓம்பரியவல்வினைநோய்தீரவைத்தாருமையையொருபால்வைத்தா ருகந்துவானோர், நாம்பரவுமடியிணையென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானாநல்லவாறே. (௧0)

குலங்கிளரும்வருதிரைகளேழும்வைத்தார் குருமணிசேர்மலைவைத்தார் மலையைக்கையா, லுலங்கிளரவெடுத்தவன்றோண்முடியுநோவவொருவிரலாலுறவைத்தா ரிறைவாவென்று, புலம்புதலுமருளொடுபோர்வாளும்வைத்தார் புகழ்வைத்தார்புரிந்தாளாக் கொள்ளவைத்தார், நலங்கிளருந்திருவடியென் றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பெரியாண்டேசுவரர் - தேவியார் - திரிபுரசுந்தரியம்மை.

நாவுக்கு மன்னர்திரு நல்லூரி னம்பர்பான்
மேவுற்ற திருப்பணிகண் மேவுறநா ளுஞ்செய்து
பாவுற்ற தமிழ்மாலை பலபாடிப் பணிந்தேத்தித்
தேவுற்ற திருத்தொண்டு செய்தொழுகிச் செல்லுநாள்.

(இ-ள்.) நாவுக்குமன்னர்=வாகீசத்திருவடிகள்; திருநல்லூரினம்பர்பால்=திருநல்லூரில் வீற்றிருந்தருளும் சிவபிரானிடத்து; மேவுற்றதிருப்பணிகள்=செய்தற்குரிய திருத்தொண்டுகளை; மேவுறநாளுஞ்செய்து=கருத்துக்கிசையத் தினந்தோறும்செய்து; பாவுற்றதமிழ்மாலைபலபாடி=செய்யுளாலமைந்த பலதிருப்பதிகங்களைப்பாடி; பணிந்தேத்தி=வணங்கித்துதித்து: தேவுற்றதிருத்தொண்டுசெய்தொழுகிச்செல்லுநாள்=தெய்வீகமமைந்த திருத்தொண்டுகளைச் செய்துகொண்டிருக்குநாளில்.—எ-று. தேவுற்ற என்புழி சிவபிரானுக்குரிய என்றுரைத்தலுமொன்று. (௧௬௭)

கருகாவூர் முதலாகக் கண்ணுதலோ னமர்ந்தருளுந்
திருவாரூர் திருப்பாலைத் துறைபிறவுஞ் சென்றிறைஞ்சிப்
பெருகார்வத் திருத்தொண்டு செய்துபெருந் திருநல்லூர்
ஒருகாலும் பிரியாதே யுள்ளுருகிப் பணிகின்றார்.

(இ-ள்.) கண்ணுதலோனமர்ந்தருளும்=நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான்வீற்றிருந்தருளும்; கருகாவூர்முதலாக=திருக்கருகாவூர்முதலாக; திருவாரூர்திருப்பாலைத்துறை=திருவாரூரையும் திருப்பாலைத் துறையையும்; பிறவுஞ்சென்றிறைஞ்சி=மற்றதிருப்பதிகளையும் சென்றுவணங்கி; பெருகார்வத்திருத்தொண்டுசெய்து=உள்ளமுழுதுங்கலந்த பேரன்போடுகூடிய திருப்பணிகளைச்செய்து; பெருந்திருநல்லூர்ஒருகாலும்பிரியாது=பெரிய திருநல்லூரை ஒருகாலமும் நீங்காமல்; உள்ளுருகிப்பணிகின்றார்=திருவுள்ளங்கசிந்து வணங்குவாராயினார்.—எ-று. இவ்விரண்டுங்குளகம்.

ஒருகாலும் என்றது:—காலை உச்சி மாலை யாமம் என்னும் பூசைக்குரிய காலந்தவறாமலென்றுகொள்க. (௧௬௮)

ஆளுடைய நாயகன்ற னருள்பெற்றங் ககன்றுபோய்
வாளைபாய் புனற்பழனத் திருப்பழன மருங்கணைந்து
காளவிட முண்டிருண்ட கண்டர்பணிக் கலன்பூண்டு
நீளிரவி லாடுவார் கழல்வணங்க நேர்பெற்றார்.

(இ-ள்.) ஆளுடையநாயகன்றன்=தம்மையாளாகவுடைய சிவபிரானது; அருள்பெற்றங்ககன்றுபோய்=திருவருளைப்பெற்று அத்திருநல்லூரினின்றும் நீங்கிப்போய்; வாளைபாய்புனற்பழனத்திருப்பழனமருங்கணைந்து=வாளைமீன்கள் தாவிப்பாய்கின்ற நீர் நிறைந்தவயலாற் சூழப்பட்ட திருப்பழனம் என்னும் திருப்பதியையடைந்து; பணிக் கலன்பூண்டு=பாம்பாகிய ஆபரணத்தையணிந்து; நீளிரவிலாடுவார்=நடுயாமத்தின் கண் நிருத்தஞ்செய்பவராகிய; காளவிடமுண்டிருண்டகண்டர்=கரிய ஆலாகலத்தைத் திருவமுதுசெய்து அதனால் இருணிறமடைந்த திருமிடற்றையுடைய சிவபிரானது; கழல்வணங்கநேர்பெற்றார்=திருவடிகளைத் தொழக்கருதினார்.—எ-று.

நீளிரவு என்றது நடுயாமத்தை. இருணிறைந்திருத்தலில், நாடோறும் உயிர்கள் இரவிலடையும் சுழுத்திபோல் மாயை மாமாயையின் காரியப்பொருளாகிய் தூலம் சூக்குமம் பரம் என்னும் உடம்புகளும் தத்துவபுவனங்களும் சங்கரிக்கப்பட உயிர்கள் மாயைவயிற்றுள் மலத்தோடு அடங்கிநிற்கும் மஹாசங்காரகாலத்தை நீளிரவெனக்கூறினர். அதில் பரசிவமூர்த்தி சங்காரதாண்டவமேயன்றி முத்தான்மாக்களுக்கு ஆனந்தம் விளைக்கும் ஆனந்ததாண்டவமும் செய்வர் இவ்விரண்டுமடங்க நீளிரவிலாடுவாரென்றார். பிரகிருதிப் பிரளயமாத்திரங்கொள்ளில் பிரமவிட்டுணுக்களொடுங்கும், மத்திமப்பிரளயத்தில் இராகதத்துவத்தையடைந்த துரியமூர்த்திக்கு அபேதரான உருத்திரமூர்த்தியின் தாண்டவமொன்றுமேகொள்க. இவ்விருவகையும் புராணங்களுள் சிறப்பாயும் பொதுவாயும் கூறப்படுதல் ஆங்காங்கு குறிப்பாலுணர்க. மத்திமப்பிரளயமென்பது உருத்திரமூர்த்தியின் ஓர்நாள். (கசுசு)

அப்பதியைச் சூழ்ந்ததிருப் பதியிலர னார்மகிழும்
ஒப்பரிய தானங்க ளுள்ளுருகிப் பணிந்தணைவார்
மெய்ப்பொருடேர் நாவினுக்கு வேந்தர்தா மேவினார்
செப்பருஞ்சீ ரப்பூதி யடிகளூர் திங்களூர்.

(இ-ள்.) அப்பதியைச்சூழ்ந்ததிருப்பதியில்=அத்திருப்பழனத்தைச் சூழ்ந்த திருப்பதியினில்; அரனார்மகிழுமொப்பரியதானங்கள்=சிவபிரான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் ஒப்பிலாத தலங்களை; உள்ளுருகிப்பணிந்தணைவார்=மனவுருக்கத்தோடுவணங்கிச்செல்கின்றவராய்; மெய்ப்பொருடேர்நாவினுக்குவேந்தர்=உண்மைப்பொருளையுணர்ந்த வாகீசமுனிவர்; செப்பருஞ்சீரப்பூதியடிகளூர்திங்களூர்மேவினார்=எடுத்துச் சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய அப்பூதியடிகளூராகிய திங்களூரையடைந்தார்.—எ-று.

பொய்ப்பொருளாகிய சகத்தைநீக்கிச் சிவத்தை யுணர்தலில் மெய்ப்பொருடேர் நாவினுக்கு வேந்தர் என்றார். தாம்-அசை. (உOO)

அந்தணரின் மேம்பட்ட வப்பூதி யடிகளார்
தந்தனய ருடன்சாலை கூவல்குளந் தருதண்ணீர்ப்
பந்தர்பல வாண்டவர செனும்பெயராற் பண்ணினமை
வந்தணைந்த வாகீசர் கேட்டவர்த மனைநண்ண.

(இ-ள்.) அந்தணரின்மேம்பட்டவப்பூதியடிகளார்=மறையவருள் மேம்பாடுபெற்ற குலத்தினராகிய அப்பூதியடிகள்; தந்தனயருடன்சாலைகூவல்குளந்தரு=தம்புதல்

வரோடு அறச்சாலையும் கிணறும் குளமும் நிழன்மரமும்; தண்ணீர்ப்பந்தர்பல=தண்ணீர்ப்பந்தரும் ஆகிய பலபொருள்களையும்; ஆண்டவரசெனும்பெயராற்பண்ணினமை=திருநாவுக்கரசென்னும் திருப்பெயரால் அமைத்தமையை; வந்தணைந்தவாகீசர்கேட்டு=அங்குவந்த ஆண்டவரசு அங்குள்ளார் சொல்லக்கேட்டு; அவர்தம்மனைநண்ண=அப்பூதியடிகள் திருமனைக்கெழுந்தருள.—எ-று.

அங்குள்ள தண்ணீர்ப்பந்தரைப்பார்த்துத் தந்திருநாமம் வரைந்திருத்தலைநோக்கி வியப்புற்று அங்குள்ளாரைவினவ அவர் இவைகளையெல்லாம் அப்பூதியடிகள் ஆண்டவரசின் திருப்பெயராற் பண்ணினரென்று சொல்லக்கேட்டு அவர்மனை நண்ணவென முடிக்க. மறையவர்க்குரிய ஔபாசனமுதலிய வைதிகநெறியேயன்றிப் பத்திநெறியிலும் மிக்கொழுகலின் அந்தணரின்மேம்பட்ட என்றார். (உ0க)

மற்றவரு மனமகிழ்ந்து மனைவியார் மைந்தர்பெருஞ்
சுற்றமுடன் களிகூரத் தொழுதெழுந்து சூழ்ந்துமொழிக்
கொற்றவரை யமுதுசெயக் குறைகொள்வா ரிறைகொள்ளப்
பெற்றபெருந் தவத்தொண்டர் திருவுள்ளம் பெறப்பெற்றார்.

(இ-ள்.) மற்றவருமனமகிழ்ந்து=அவ்வித இயல்பையுடைய அப்பூதியடிகளும் மனமகிழ்ச்சியடைந்து; மனைவியார்மைந்தர்பெருஞ்சுற்றமுடன்=மனைவியாரும் புதல்வரும் பெருஞ்சுற்றத்தாரும்; களிகூரத்தொழுதெழுந்துசூழ்ந்து=களிப்படையவணங்கி எழுந்து வலமாகவந்து; மொழிக்கொற்றவரையமுதுசெயக்குறைகொள்வார்=வாகீசமுனிவரைத் திருவமுதுசெய்யும்படி தங்குறையை விண்ணப்பஞ்செய்கின்றவர்கள்; இறைகொள்ள=தம்விண்ணப்பத்திற்கு உத்தரவுகொள்ளுதற்கேதுவாக; பெற்றபெருந்தவத்தொண்டர்=மிக்க தவத்தையுடைய வாகீசமுனிவரது; திருவுள்ளம்பெறப்பெற்றார்=திருவுள்ளத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.—எ-று இவ்விரண்டுங் குளகம்.

பெருந்தவம்பெற்ற என்பது பெற்றபெருந்தவமென மாறிநின்றது. (உ0உ)

காண்டகைமை யின்றியுமுன் கலந்தபெருங் கேண்மையினர்
பூண்டபெருங் காதலுடன் போனகமுங் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள்பெற விருப்பினால்
ஆண்டவர சமுதுசெயத் திருவமுதாம் படியமைத்து.

(இ-ள்.) காண்டகைமையின்றியுமுன்=முன் அப்பூதியடிகள் வாகீசமுனிவரைக்காணாதிருந்தும்; கலந்தபெருங்கேண்மையினர்=அவர் அன்பையும் சிவபிரான் திருவருளையும்கேட்டு முன் தம்மிடத்துண்டான பெரியநண்பினையுடைய அப்பூதியடிகள்; பூண்டபெருங்காதலுடன்=தம்முளத்துதித்த பேரன்போடு; போனகமுங்கறியமுதும்=திருவமுதும் கறியமுதுமாக; வேண்டுவனவெவ்வேறுவிதங்கள்பெற=மேல் வேண்டியவற்றை வெவ்வேறுவகைகளாயிருக்க; விருப்பினாலாண்டவரசமுதுசெய=விருப்பத்தோடு வாகீசமுனிவர் அமுதுசெய்தற்கேதுவான; திருவமுதாம்படியமைத்து=திருவமுதாக அமைத்து.—எ-று.

திருநாவுக்கரசரது அன்பையும் திருவருளையும்காணாது கேள்விமாத்திரத்திலுதித்த அன்பெனச்சிறப்பித்தலில் உம்மை உயர்வுசிறப்பு. உணவாம்படி யமைத்தென்னும் பொருளைத் திருவமுதாம்படி என்றது பரிபாடை. அமுதுசெய என்றதுமது. (உ0ங)

திருநாவுக் காசமுது செய்தருள மற்றவர்தம்
பெருநாமஞ் சாத்தியவப் பிள்ளைதனை யழைத்தன்பு
தருஞானத் திருமறையோர் தண்டலையின் வண்கதலிக்
குருநாளக் குருத்தரிந்து கொண்டுவரத் தனிவிட்டார்.

(இ-ள்.) திருநாவுக்கரசமுதுசெய்தருள=திருநாவுக்கரசுநாயனார் திருவமுதுசெய்யும்படி; மற்றவர்தம்பெருநாமஞ்சாத்திய=தம்மால் நண்புசெய்யப்படும் அவ்வாகீசமுனிவரது திருநாமமிட்ட; அப்பிள்ளைதனையழைத்து=மூத்தபிள்ளையை அழைத்து; அன்புதருஞானத்திருமறையோர்=அன்புமிக்க ஞானத்தையுடைய அப்பூதியடிகள்; தண்டலையின்வண்கதலிக்குருநாளக்குருத்து=மனைப்படப்பையில் வளவிய வாழையினது நிறந்தங்கிய நாளத்தோடுகூடியகுருத்தை; அரிந்துகொண்டுவரத்தனிவிட்டார்=அரிந்து கொண்டுவரும்படி தனியே அனுப்பினார்.—எ-று.

குருநாளக்குருத்தென்றதனால் பச்சென்ற நிறம்முழுதும் விரவாது சுருளும் மிக விரியாது உட்டுளையுடைத்தாகிய குருத்தென்க. அதுதூய்மையுடைமையின் அதையே பரிகலத்துக்கமைப்பர். (௨௦௪)

ஆங்கவனும் விரைந்தெய்தி யம்மருங்கு தாழாதே
பூங்கதலிக் குருத்தரியப் புகுமளவி லொருநாகந்
தீங்கிழைக்க வதுபேணான் றிருவமுது செய்தருள
ஓங்குகதலிக் குருத்துக் கொண்டொல்லை வந்தணைந்தான்.

(இ-ள்.) ஆங்கவனும்விரைந்தெய்தி=அப்புதல்வனும் விரைவாகச்சென்று; அம்மருங்குதாழாது=தான்சென்றவிடத்திற் காலந்தாழ்க்காது; பூங்கதலிக்குருத்தரியப்புகுமளவில்=பொலிவுதங்கிய வாழைக்குருத்தை அரியும்போது; ஒருநாகந்தீங்கிழைக்க வதுபேணான்=ஒருபாம்பானதுதீண்ட அத்தீங்கை ஓர் பொருளாக்காது; திருவமுது செய்தருள=ஆண்டவரசு திருவமுதுசெய்யும்படி; ஓங்குகதலிக்குருத்துக்கொண்டு=நீண்டவாழைக்குருத்தை அரிந்துகொண்டு; ஒல்லைவந்தணைந்தான்=விரைவில் வந்தான்.—எ-று.

தாழாமை திருவமுது செய்தற்குக்கால நீட்டிக்குமென்னுங் கருத்தும், பேணாமை திருவமுது செய்தற்கிடையூறுறாது குருத்துக்கொடு செல்லவேண்டுமென்னுங் கருத்தும் உடையானென விளக்கியவாறு. (௨௦௫)

தீயவிடந் தலைக்கொள்ளத் தெருமந்து செழுங்குருத்தைத்
தாயர்கரத் தினினீட்டித் தளர்ந்துதனைத் தழனாக
மேயபடி யுரைசெய்யான் விழக்கண்டு கெட்டொழிந்தேந்
தூயவரிங் கமுதுசெயத் தொடங்காரென் றதுவொளித்தார்.

(இ-ள்.) தீயவிடந்தலைக்கொள்ள=கொடியபாம்பின் விடவேகமானது தலைக்கொள்ள; தெருமந்துசெழுங்குருத்தை=அதனால் மயக்கமடைந்து செழுமையாகிய வாழைக்குருத்தை; தாயர்கரத்தினினீட்டித்தளர்ந்து=தன் தாயார் கையிற்கொடுத்து வருத்தமுற்று; தனைத்தழனாகமேயபடியுரைசெய்யான்=தன்னைத்தழல்போலும் விடத்தையுடைய பாம்பு தீண்டிய முறைமையைச்சொல்லாமல்; விழக்கண்டுகெட்டொழிந்தேம்=நிலத்தில் விழக்கண்டு கெட்டொழிந்தேம்; தூயவரிங்கமுதுசெயத்தொடங்காரென்று=வாகீசமுனிவர் இவனிறப்புணரில் திருவமுது செய்யாரென்று; அதுவொளித்தார்=அச்சவத்தை அவ்விருவரும் மறைத்துவைத்தார்கள்.—எ-று. (௨௦௬)

தம்புதல்வன் சவமறைத்துத் தடுமாற்ற மிலராகி
யெம்பெருமா னமுதுசெய வேண்டுமென வந்திறைஞ்ச
உம்பர்பிரான் றிருத்தொண்ட ருள்ளத்திற் றடுமாற்ற
நம்பர்திரு வருளாலே யறிந்தருளி நவைதீர்ப்பார்.

ஷக்கரசை ஏவ அவர்கொய்யும்போது விஷம் தீண்டியும் குருத்தை அன்னைபாலனித்து உயிர்நீக்க அன்னை அச்சவத்தை மறைத்துவைத்தனர்.

14

௪. அப்பர்சுவாமிகளுக்குப் பரிகலந்திருத்தி உண்ணும்படி பிரார்த்திக்கச் சுவாமிகள் அவர்களது புத்திரசோபத்தைக் குறிப்பாலுணர்ந்து சவத்தைவருவித்து பதிகமோதி எழுப்பினர். ௫. சொல்லரசர் நாயனார் முதலியவர்களுக்கு விபூதியளித்தனர். ௬. தாண்டகச்சதுரர் அப்பூதி நாயனாரும் மக்களும் சூழ அவரது திருமாளிகையி லமுதுண்டு களித்திருந்தனர்.

(இ-ள்.) தம்புதல்வன்சவமறைத்து—உயிர் நீத்துக்கிடந்த தம்புதல்வன் பிணத்தைமறைத்து; தடுமாற்றமிலராகி—அவனால் மனத்தளர்ச்சியில்லாதவர்களாய்; எம்பெருமானமுதுசெயவேண்டுமெனவந்திறைஞ்ச—எம்பெருமானே திருவமுதுசெய்யவேண்டுமென்று வாகீசமுனிவரிடத்திற்சென்று வணங்க; உம்பர்பிரான்றிருத்தொண்டர்—சிவபிரான் திருத்தொண்டராகிய வாகீசத்திருவடிகள்; உள்ளத்திற்றடுமாற்றம்—அவர்கள் உள்ளத்திற் சிறிதிருக்கும் தடுமாற்றத்தை; நம்பர்திருவருளாலேயறிந்தருளி—சிவபிரான் திருவருளாலறிந்து; நவைதீர்ப்பார்—அத்துயரத்தைத் தீர்க்குங்கருத்துடையராய்.—எ-று.

தடுமாற்றமிலராகி என்றது வெளியிற் சிறிதுந்தோற்றாது மறைத்தமை விளக்கியவாறு. (உ௦எ)

அன்றவர்கண் மறைத்ததனுக் களவிறந்த கருணையராய்க்
கொன்றைநறுஞ் சடையார்தங் கோயிலின்முன் கொணர்வித்தே
யொன்றுகொலா மெனப்பதிக மெடுத்துடையான் சீர்பாடப்
பின்றைவிடம் போய்நீங்கிப் பிள்ளையுணர்ந் தெழுந்திருந்தான்.

(இ-ள்.) அன்றவர்கண்மறைத்ததனுக்கு—அன்றைக்கு அவ்விருவரும் அப்புதல்வன் சவத்தை மறைத்துவைத்ததற்காக; அளவிறந்தகருணையராய்—அளவுபடாத பெருங்கருணையுடையவராய்; கொன்றைநறுஞ்சடையார்தம்—அச்சவத்தைத் திருப்பழனம் ஆப்த்சகாயரது; கோயிலின்முன்கொணர்வித்து—சந்நிதிக்கெதிரில் கொண்டுவரச் செய்வித்து; ஒன்றுகொலாமெனப்பதிகமெடுத்து—ஒன்றுகொலாமென்னும் முதலையுடைய திருப்பதிகத்தை எடுத்து; உடையான்சீர்பாட—நம்மையாளாகவுடைய முதல்வரது சிறப்பைப்பாடியருள; பின்றைவிடம்போய்நீங்கி—பின்பு தலைக்கொண்ட விடவேகம் நீங்கி; பிள்ளையுணர்ந்தெழுந்திருந்தான்—அப்புதல்வன் உயிர்பெற்றெழுந்திருந்தான்.—எ-று.

தம்மீதுவைத்த பேரன்பால் இவ்வாறு மறைத்தனரென்னுங் கருத்துடைமைவிளக்கிய அளவிறந்த கருணையராய் என்றும் திருப்பழனத்தாலயத்தைக் கொன்றைநறுஞ்சடையார் கோயிலென்றும் கூறினர். (உ௦அ)

விடந்தீர்த்ததிருப்பதிகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுகொலாமவர் சிந்தையுயர்வரை
யொன்றுகொலாமுய ரும்மதிசூடுவ
ரொன்றுகொலாமிடு வெண்டலைகையது
வொன்றுகொலாமவ ரூர்வதுதானே. (க)

இரண்டுகொலாமிமை யோர்தொழுபாத
மிரண்டுகொலாமிலங் குங்குழைபெண்ணு
ணிரண்டுகொலாமுரு வஞ்சிறுமான்மழு
விரண்டுகொலாமவ ரெய்தினதாமே. (உ)

மூன்றுகொலாமவர் கண்ணுதலாவன
மூன்றுகொலாமவர் சூலத்தின்மொய்யிலை
*மூன்றுகொலாங்கணை கையதுவின்னாண்
மூன்றுகொலாம்புர மெய்தனர்தாமே. (ங)

* வாயுதேவன் பாணத்தின் ஈர்க்கும் விஷ்ணு அதில் பூட்டிய அலகும் அக்கினிதேவன் அந்த அலகின் முனையில் கூர்மையுமாயிருந்ததைப்பற்றி மூன்றுகொலாங்கணையென்றருளிச்செய்தது.

நாலுகொலாமவர் தம்முகமாவன
நாலுகொலாஞ்சன ன்ம்முதற்றோற்றமு
நாலுகொலாமவ ரூர்தியின்பாதங்கள்
நாலுகொலாமறை பாடினதாமே. (௪)

அஞ்சுகொலாமவ ராடரவின்பட
மஞ்சுகொலாமவர் வெல்புலனுவன
வஞ்சுகொலாமவர் காயப்பட்டான்கணை
யஞ்சுகொலாமவ ராடினதாமே. (௫)

ஆறுகொலாமவ ரங்கம்படைத்தன
வாறுகொலாமவர் தம்மகனார்முக
மாறுகொலாமவர் தார்மிசைவண்டின்கா
லாறுகொலாஞ்சுவை யாக்கினதாமே. (௬)

ஏழுகொலாமவ ரூழிபடைத்தன
வேழுகொலாமவர் கண்டவிருங்கட
லேழுகொலாமவ ராளுமுலகங்க
ளேழுகொலாமிசை யாக்கினதாமே. (௭)

எட்டுக்கொலாமவ ரீறில்பெருங்குண
மெட்டுக்கொலாமவர் சூடுமினமல
ரெட்டுக்கொலாமவர் தோளிணையாவன
வெட்டுக்கொலாந்திசை யாக்கினதாமே. (௮)

ஒன்பதுபோலவர் வாசல்வகுத்தன
வொன்பதுபோலவர் மார்பினினூலிழை
யொன்பதுபோலவர் கோலக்குழற்சடை
யொன்பதுபோலவர் பாரிடந்தானே. (௯)

பத்துக்கொலாமவர் பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாமெயி றுந்நெரிந்துக்கன
பத்துக்கொலாமவர் காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடி யார்செய்கைதானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

அருந்தனய னுயிர்பெற்ற வதுகண்டு மமுதுசெயா
திருந்ததற்குத் தளர்வெய்தி யிடருழந்தார் துயர்நீங்க
வருந்துமவர் மனைபுகுந்து வாகீசத் திருமுனிவர்
விருந்தமுது செய்தருளி விருப்பினுடன் மேவுநாள்.

(இ-ள்.) அருந்தனயனுயிர்பெற்றவதுகண்டும்—உயிர்நீத்ததம் அரிய புதல்வன் உயிர் பெற்றதைக்கண்டும்; அமுதுசெயாதிருந்ததற்குத்தளர்வெய்தி—வாகீசமுனிவர் திருவமுதுசெய்யாது காலம் தாழ்த்திருந்ததற்காக மனத்தளர்ச்சியடைந்து; இடருழந்தார்துயர்

நீங்க—இடருழந்தாராய் அத்துயரம் நீங்க; வருந்துமவர்மனைபுகுந்து—வருந்துகின்ற அப்பூதியடிகள் திருமனைக்கெழுந்தருளி; வாகீசத்திருமுனிவர்—வாகீசத்திருவடிகள்; விருந்தமுதுசெய்தருளி—அவர்படைத்த விருந்தைத் திருவமுதுசெய்து; விருப்பினுடன்மேவுநாள்—விருப்போடெழுந்தருளியிருக்கும் நாளில்.—எ-று.

உயிர்நீத்த மகன் உயிர்பெற்றதற்கு மகிழாது திருவமுதுசெய்யத் தாழ்த்ததற்கு வருந்தினரென அவரன்பைச் சிறப்பித்தலின் உம்மை உயர்வுசிறப்பு. (உ0௯)

திங்களூர் தனினின்றுந் திருமறையோர் பின்செல்லப்
பைங்கண்விடைத் தனிப்பாகர் திருப்பழனப் பதிபுகுந்து
தங்குபெருங் காதலொடு தம்பெருமான் கழல்சார்ந்து
பொங்கியவன் பொடுவணங்கி முன்னின்று போற்றிசைப்பார்.

(இ-ள்.) திங்களூர்தனினின்றுந்திருமறையோர்பின்செல்ல—அவர், அப்பூதியடிகள்வாழும் திங்களூரினின்றும் அவர்பின்செல்ல; பைங்கண்விடைத்தனிப்பாகர்—பசிய கண்ணையுடைய இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபிரான் எழுந்தருளியிருக்கும்; திருப்பழனப்பதிபுகுந்து—திருப்பழனம் என்னும் திருப்பதியிற்சென்று; தங்குபெருங் காதலொடு—நிலைபெற்ற பேரன்போடு; தம்பெருமான்கழல்சார்ந்து—தம்முதல்வராகிய சிவபிரான் திருவடியையடைந்து; பொங்கியவன்பொடுவணங்கி—அதிகரித்த பேரன் போடுவணங்கி; முன்னின்றுபோற்றிசைப்பார்—திருமுன்னின்று துதிப்பாராயினர். இவ்விரண்டுங் குளகம். (உ௧0)

புடைமாலை மதிக்கண்ணிப் புரிசடையார் பொற்கழற்கீழ்
அடைமாலைச் சீலமுடை யப்பூதி யடிகடமை
நடைமாணச் சிறப்பித்து நன்மைபுரி தீந்தமிழின்
றொடைமாலைத் திருப்பதிகச் சொன்மாலை பாடினார்.

(இ-ள்.) புடைமாலைமதிக்கண்ணிப்புரிசடையார்—வாகீசமுனிவர் ஓர் புடைவாழும் இளம்பிறையாகிய கொண்டைமாலையணிந்த முறுக்கிய சடையையுடைய சிவபிரானது; பொற்கழற்கீழ்—அழகிய திருவடிக்கீழ்; அடைமாலைச்சீலமுடையப்பூதியடிகடமை—சார்ந்த ஒழுக்கமைந்த பத்தியையுடைய அப்பூதியடிகளை; நடைமாணச்சிறப்பித்து—செய்யுணடைக்கமையப் பதிகத்தைச் சிறப்பித்து; நன்மைபுரிதீந்தமிழின்—நன்மைமிக்க மதுரமான தமிழ்ச்சொற்களால்; தொடைமாலைத்திருப்பதிகச்சொன்மாலை பாடினார்—தொடுக்கப்பட்ட மாலையாகிய திருப்பதிகமென்னும் பாமாலையைப் பாடியருளினார்.—எ-று.

நடைமாணச் சிறப்பித்தலாவது:—அழலோம்பு மப்பூதிகுஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாயெனப்பதிகத்தில் விசேடித்தது. (உ௧௧)

திருப்பழனம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலைபயில்கின்ற குயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டு பண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென் புதுநலமுண்டிகழ்வானோ. (௧)

வஞ்சித்தென்வளைகவர்ந்தான் வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம் பரந்தார்க்கும்பழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலிய வழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்ற சேவடியாய்கோடியையே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

எழும்பணியு மிளம்பிறையு மணிந்தவரை யெம்மருங்குந்
தொழும்பணிமேற்கொண்டருளுந் திருச்சோற்றுத்துறைமுதலாத்
தழும்புறுகேண் மையினண்ணித் தானங்கள் பலபாடிச்
செழும்பழனத் திறைகோயிற் றிருத்தொண்டு செய்திருந்தார்.

(இ-ள்.) எழும்பணியுமிளம்பிறையுமணிந்தவரை—அவர், படத்தை விரித்தெழா நின்ற பாம்பையும் மூன்றாம்பிறையையுமணிந்த சிவபிரானை; எம்மருங்குந்தொழும்பணி மேற்கொண்டு—வீற்றிருந்தருளு மிடந்தோறும் வணங்கும் திருத்தொண்டைமேற்கொண்டு; அருளுந்திருச்சோற்றுத்துறைமுதலா—அடியார்க்கருள்புரியும் திருச்சோற்றுத்துறைமுதலான திருப்பதிகளில்; தழும்புறுகேண்மையினண்ணி—தழும்புற்ற அன்போடடைந்து; தானங்கள்பலபாடி—பல திருப்பதிகளையும் பாடியருளி மீண்டு; செழும்பழனத்திறைகோயில்—செழுமைதங்கிய திருப்பழனத்திலிருக்கும் சுடர்க்கொழுந்தீசரது ஆலயத்தில்; திருத்தொண்டுசெய்திருந்தார்—திருத்தொண்டுசெய்துகொண்டிருந்தார்.-எ-று.

நெடுநாட்பழகிய அன்பாதலிற்றழும்புறு கேண்மையென்றார். திருச்சோற்றுத்துறை அருளாளன் என்னும் மறையவனுக்கு உலவாவமுதளித்ததலம். (உ௧உ)

சாலநாளங் கமர்ந்து தந்தலைமேற் றாள்வைத்த
ஆலமார்மணி மிடற்றா ரணிமலர்ச் சேவடிநினைந்து
சேலுலாம்புனற் பொன்னித் தென்கரை யேறிச்சென்று
கோலநீண் மணிமாடத் திருநல்லூர் குறுகினார்.

(இ-ள்.) சாலநாளங்கமர்ந்து—அவர் நெடுநாள் அங்கெழுந்தருளியிருந்து பின்; தந்தலைமேற்றாள்வைத்த—தம் சிரத்தே திருவடியைச் சூட்டியருளிய; ஆலமார்மணிமிடற்றார்—நஞ்சம் நிறைந்த நீலமணிபோலும் மிடற்றையுடைய பிரானாரது; அணிமலர்ச்சேவடிநினைந்து—அழகிய தாமரைமலர்போலும் சிவந்த திருவடிகளைத்தியானித்து; சேலுலாம்புனற்பொன்னி—சேற்கெண்டைகள் சஞ்சரிக்கின்ற நீர்நிறைந்த காவிரியின்; தென்கரையேறிச்சென்று—தென்கரையைக் கடந்துசென்று; கோலநீண்மணிமாடத்திருநல்லூர்குறுகினார்—அழகுமிக்க மணிகளழுத்திய மாடங்களையுடைய திருநல்லூரென்னும் திருப்பதியையடைந்தார்.—எ-று.

தாள்வைத்தல் என்றது திருவடிதீட்சைசெய்தல். (உ௧௩)

அங்கணைந்து தம்பெருமா னடிவணங்கி யாராது
பொங்கியவன் பொடுதிளைத்துப் போற்றிசைத்துப் பணிசெயுநாட்
டங்குபெருங் காதலினாற் றாமரைமேல் விரிஞ்சனொடு
செங்கண்மா லறிவரியார் திருவாரூர் தொழநினைந்தார்.

(இ-ள்.) அங்கணைந்துதம்பெருமானடிவணங்கி—அவர், அத்திருநல்லூரையடைந்து தம்முதல்வராகிய சிவபிரான் திருவடிகளைவணங்கி; ஆராதுபொங்கியவன்பொடு

திளைத்து—அடங்காது மேற்பட்ட அன்பினால் பேரானந்தவெள்ளத்தில் முழுகி; போற்றிசைத்துப்பணிசெயுநாள்—துதிசெய்து திருத்தொண்டு செய்தொழுகும்நாளில்; தங்குபெருங்காதலினால்—தம்மிடத்திருக்கும் பேரன்பினால்; தாமரைமேல்விரிஞ்சனொடு—தாமரைமலரின்மேல்வாழும் பிரமனோடு; செங்கண்மாலறிவரியார்—திருமால் அறிதற்கரிய சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருவாரூர்தொழநினைந்தார்—திருவாரூரை வணங்க நினைந்தார்.—எ-று. (உகச)

நல்லூரி னம்பரருள் பெற்றுப்போய்ப் பழையாறைப்
பல்லூர்வெண் டலைக்கரத்தார் பயிலுமிடம் பலபணிந்து
சொல்லூர்வண் டமிழ்பாடி வலஞ்சுழியைத் தொழுதேத்தி
யல்லூர்வெண் பிறையணிந்தார் திருக்குடமூக் கணைந்திறைஞ்சி.

(இ-ள்.) நல்லூரினம்பரருள்பெற்றுப்போய்—அவர், திருநல்லூரில் வீற்றிருந்தருளும் சிவபிரான் திருவருள்பெற்று அங்குநின்றகன்று; பழையாறைப்பல்லூர்வெண்டலைக்கரத்தார்பயிலுமிடம்பலபணிந்து—திருப்பழையாறையோடு பற்கள் விளங்கியிருக்கும் வெள்ளிய பிரமகபாலத்தைக் கரத்திலேந்திய சிவபிரான் வீற்றிருந்தருளும் திருப்பதிகள்பலவற்றையும் வணங்கி; சொல்லூர்வண்டமிழ்பாடி—சொல்லமைந்த வளவிய தமிழ்ப்பதிகங்களைப் பாடியருளி; வலஞ்சுழியைத்தொழுதேத்தி—திருவலஞ்சுழியைத்தொழுது துதித்து; அல்லூர்வெண்பிறையணிந்தார்—மாலைக்காலத் துதிக்கின்ற வெள்ளிய மூன்றாம்பிறையைத்தரித்த சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருக்குடமூக்கணைந்திறைஞ்சி—திருக்குடந்தையென்னும் திருப்பதியையடைந்து தொழுது.—எ-று. (உகரு)

நாலூர்தென் றிருச்சேறை குடவாயி னறையூர்சேர்
பாலூரு மின்மொழியாள் பாகனார் கழல்பரவி
மேலூர்தி விடைக்கொடியார் மேவுமிடம் பலபாடிச்
சேலூர்தண் பணைசூழ்ந்த தென்றிருவாஞ் சியமணைந்தார்.

(இ-ள்.) நாலூர்தென்றிருச்சேறை—நாலூர்மயானம் அழகிய திருச்சேறை; குடவாயினறையூர்சேர்—திருக்குடவாயில் திருநறையூர்ச் சித்திச்சரம் என்னும் இத்திருப்பதிகளில் வீற்றிருந்தருளும்; பாலூருமின்மொழியாள்பாகனார்கழல்பரவி—பால்போலும் இனியமொழியையுடைய உமாதேவிபாகரான சிவபிரான் திருவடிகளைவணங்கி; மேலூர்திவிடைக்கொடியார்—ஏறிநடாத்தும் வாகனமாகிய விடையைக் கொடியாகவுடைய சிவபிரான்; மேவுமிடம்பலபாடி—வீற்றிருந்தருளும் பல தலங்களைப்பாடி; சேலூர்தண்பணைசூழ்ந்த—சேல்மீன்கள் உலாவுகின்ற தட்பமான வயல்கள் சூழ்ந்த; தென்றிருவாஞ்சியமணைந்தார்—அழகிய திருவாஞ்சியமென்னும் திருப்பதியை அடைந்தருளினார்.—எ-று.
இவ்விரண்டுங் குளகம். (உகசு)

பெருவாச மலர்ச்சோலைப் பெருவேளூர் பணிந்தேத்தி
முருகாரு மலர்க்கொன்றை முதல்வனார் பதிபிறவுந்
திருவாரும் விளமருடன் சென்றிறைஞ்சி வாகீசர்
மருவாரூ ரொரித்தவர்தந் திருவாரூர் வந்தடைந்தார்.

(இ-ள்.) பெருவாசமலர்ச்சோலைப்பெருவேளூர்பணிந்தேத்தி—மிக்க வாசனை கமழும் மலர்களையுடைய சோலைசூழ்ந்த திருப்பெருவேளூரென்னும் திருப்பதியைவணங்கித் துதித்து; முருகாருமலர்க்கொன்றைமுதல்வனார்பதிபிறவும்—தேன்நிறைந்த கொன்றைமலரைச்சூடிய சிவபிரான் வீற்றிருந்தருளும் பிறதிருப்பதிகளையும்; திருவாரும்

விளமருடன்சென்றிறைஞ்சி—அழகுநிறைந்த திருவிளமமென்னும் திருப்பதியுடன்சென்று வணங்கி; வாகீசர்மருவாரூரெரித்தவர்தந் திருவாரூர்வந்தடைந்தார்—வாகீசமுனிவர்திரிபுரத்தைஎரித்தருளிய சிவபிரான் வீற்றிருந்தருளும் திருவாரூருக்குவந்தருளினர்.

ஆண்டவர செழுந்தருள வாரூரி லன்பர்கடா
நீண்டசடை யார்தம்பா னிறைந்தவருள் பெற்றுடையார்
காண்டகுமா ளிகைமாடங் கவின்சிறந்தோங் கிடவெங்குஞ்
சேண்டிகழ்வீ திகள்பொலியுந் திருமலிமங் கலஞ்செய்தார்.

(இ-ள்.) நீண்டசடையார்தம்பால்—நீண்ட சடைமுடியையுடைய சிவபிரானிடத்து; நிறைந்தவருள்பெற்றுடையார்—நிறைந்த திருவருளைப்பெற்றவர்களாகிய; ஆரூரிலன்பர்கள்—அத்தலத்தில்வாழும் திருவடியார்கள்; ஆண்டவரசெழுந்தருள—வாகீசத்திருவடிகள் திருவாரூருக்கெழுந்தருளிவர; காண்டகுமாளிகைமாடம்—காட்சிக்கினிய திருமாளிகையும் மாடங்களும்; கவின்சிறந்தோங்கிடவெங்கும்—அழகுமிக்குவிளங்க எவ்விடத்தும்; சேண்டிகழ்வீதிகள்பொலியும்—விளக்கமான நீண்ட திருவீதிகள் பொலிவடைதற்கேதுவான; திருமலிமங்கலம்செய்தார்—அழகுபொருந்தும் அலங்காரத்தைச் செய்தார்கள்.—எ-று. தாம்-அசை. (உகஅ)

வேறு.

வல்லமண்குண்டர்தம் மாயைகடந்து மறிகடலிற்
கல்லேமிதப்பாகப் போந்தவர்வந்தா ரெனுங்களிப்பால்
எல்லையிறேண்ட ரெயிற்புறஞ்சென்றெதிர் கொண்டபோது
சொல்லினரசர் வணங்கித்தொழுதுளை செய்தணைவார்.

(இ-ள்.) வல்லமண்குண்டர்தம்மாயைகடந்து—வலிய அமண்குண்டர்கள் செய்த வஞ்சனையை நீங்கி; மறிகடலிற்கல்லேமிதப்பாகப்போந்தவர்—அலைவீசுகின்ற கடலினிடத்துக் கல்லே தெப்பமாகக் கரையேறிவந்த வாகீசமுனிவர்; வந்தாரெனுங் களிப்பால்—இத்தலத்திற் கெழுந்தருளினரென்னும் மகிழ்ச்சியினால்; எல்லையிறேண்டரெயிற்புறஞ்சென்று—அளவிறந்த திருவடியார்கள் மதிலின்புறத்தேசென்று; எதிர்கொண்டபோது—எதிர்கொண்டசமயத்து; சொல்லினரசர்வணங்கித்தொழுது—வாகீசமுனிவர் தம்மைவணங்கினரை வணங்கி அஞ்சலியத்தராய்; உளைசெய்தணைவார்—இவ்வாறருளிச்செய்துகொண்டு செல்வாராயினர்.—எ-று. (உகக)

பற்றொன்றிலாவரும் பாதகராகு மமணர்தம்பால்
உற்றபிணியொழிந் துய்யப்போந்தேன்பெற லாவதொன்றே
புற்றிடங்கொண்டார்தந் தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமென்
றற்றவுணர்வொடு மாரூர்த்திருவீதி யுள்ளணைந்தார்.

(இ-ள்.) பற்றொன்றிலாவரும்பாதகராகும்—அவர், இரக்கம் ஒருசிறிதுமில்லாதிருக்கும் பதகர்களாகிய; அமணர்தம்பாலுற்றபிணியொழிந்து—அமணர்களிடத்துத் தாம் அடைந்த துயரத்தினின்றும் நீங்கி; உய்யப்போந்தேன்பெறலாவதொன்றே—பிழைத்தற் கேதுவாகவந்தயான் அடைதற்குரிய தொன்றுளது அதுயாதெனில்; புற்றிடங்கொண்டார்தந்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமென்று—வன்மீகநாதரடியார்க்கடியராயிருக்கும் புண்ணியமேயென்று பதிகம்பாடிக்கொண்டு; அற்றவுணர்வொடும்—தற்போதங்கழன்ற உணர்ச்சியோடு; ஆரூர்த்திருவீதியுள்ளணைந்தார்—திருவாரூர்த் திருவீதியுள்ளேவந்தார்.—எ-று. (உஉ0)

திருஆரூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவரு குண்டர்முன்னேநமக் குண்டுகொல்லோ
வலம்பலம்பாவரு தண்புனலாரு ரவிர்சடையான்
சிலம்பலம்பாவரு சேவடியான்றிரு மூலத்தானம்
புலம்பலம்பாவரு தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியமே. (க)

குற்றமுடைய வமணர்திறமது கையகன்றிட்
டுற்றகருமஞ்செய் துய்யப்போந்தேனுக்கு முண்டுகொல்லோ
மற்பொலிதோளா னிராவணன்றன்வலி வாட்டுவித்த
பொற்கழலானடித் தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சூழுந்திருத்தொண்டர் தம்முடன்றோரண வாயினண்ணி
வாழிதிருநெடுந் தேவாசிரியன்முன் வந்திறைஞ்சி
யாழிவரைத்திரு மாளிகைவாயி லவைபுகுந்து
நீள்சுடர்மாமணிப் புற்றுவந்தாரைநேர் கண்டுகொண்டார்.

(இ-ள்.) சூழுந்திருத்தொண்டர்தம்முடன்=அவர், தம்மைச் சூழ்ந்துவரும் திருத்தொண்டர்களோடு; தோரணவாயினண்ணி=மகரதோரணங்கள்தூக்கிய திருவாயிலையடைந்து; திருநெடுந்தேவாசிரியன்முன்வந்திறைஞ்சி=மோட்சலட்சுமிக்கு வாசமாக உயர்ந்த தேவாசிரிய மண்டபத்தின் முன்வந்துவணங்கி; ஆழிவரைத்திருமாளிகைவாயிலவைபுகுந்து=சக்கிரவாளமலைபோலச் சூழ்ந்திருக்கும் திருமாளிகையின்வாயிலிற்புகுந்து; நீள்சுடர்மாமணிப்புற்றுவந்தாரை=மிக்க ஒளிதங்கிய நாகமணிகளையுடைய புற்றையிடமாகக்கொண்ட சிவபிரானை; நேர்கண்டுகொண்டார்=நேரேகண்டு தரிசித்தருளினர்.—எ-று. வாழி-அசை. (உஉக)

கண்டுதொழுது கரசரணுதியங் கங்களெல்லாங்
கொண்டபுளகங்க ளாகவெழுந்தன்பு கூரக்கண்க
டண்டுளிமாரி பொழியத்திருமூலட் டானர்தம்மைப்
புண்டரிகக்கழல் போற்றித்திருத்தாண் டகம்புனைந்து.

(இ-ள்.) கண்டுதொழுதுகரசரணாதியங்கங்களெல்லாம்=திருமூலட்டானரைத் தரிசித்துவணங்கி கைகால்முதலிய அவயவங்களெல்லாம்; கொண்டபுளகங்களாகவெழுந்து=எழுந்த உரோமாஞ்சிதத்தையுடையனவாக எழுந்து; அன்புகூரக்கண்கடண்டுளிமாரிபொழிய=அன்புமிகுதலால் கண்களினின்றும் தட்பமான ஆனந்தபாஷ்பமாகிய மழைபொழிய; திருமூலட்டானர்தம்மை=திருவாரூர்த் திருமூலட்டானருடைய; புண்டரிகக்கழல்போற்றி=தாமரைமலர்போலும் சிவந்த திருவடிகளைத்துதித்து; திருத்தாண்டகம்புனைந்து=திருத்தாண்டகமாகிய திருப்பதிகமாலையைச்சாத்தி.—எ-று. (உஉஉ)

திருஆரூர் - போற்றித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கற்றவர்களுண்ணுங் கனியேபோற்றி கழலடைந்தார்செல்லுங்கதியே போற்றி, யற்றவர்கட்காரமுத மானாய்போற்றி யல்லலறுத்தடியேனை யாண்

டாய்போற்றி, மற்றொருவரொப்பில்லா மைந்தாபோற்றி வானவர்கள்போற்று மருந்தேபோற்றி, செற்றவர்தம் புரமெரித்தசிவனேபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (க)

வங்கமலிகடனஞ்ச முண்டாய்போற்றி மதயானையீருரிவை போர்த்தாய்போற்றி, கொங்கலருநறுங்கொன்றைத் தாராய்போற்றி கொல்புலித்தோலாடைக் குழகாபோற்றி, யங்கணனேயமரர்கடம் மிறைவாபோற்றி யாலமாநீழலறஞ் சொன்னாய்போற்றி, செங்கனகத்தனிக்குன்றே சிவனேபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (உ)

மலையான்மடந்தை மணாளாபோற்றி மழவிடையாய் நின்பாதம் போற்றிபோற்றி, நிலையாகவென்னெஞ்சி னின்றாய்போற்றி நெற்றிமேலொற்றைக்கண் ணுடையாய்போற்றி, யிலையார்ந்தமூவிலைவே லேந்திபோற்றி யேழ்கடலுமேழ்பொழிலு மானாய்போற்றி, சிலையாலன்றெயிலெரித்த சிவனே போற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (ந)

பொன்னியலுமேனியனே போற்றிபோற்றி பூதப்படையுடையாய் போற்றிபோற்றி, மன்னியசீர்மறைநான்கு மானாய்போற்றி மறியேறுகையானே போற்றிபோற்றி, யுன்னுமவர்க்குண்மையனே போற்றிபோற்றி யுலகுக்கொருவனே போற்றிபோற்றி, சென்னிமிசை வெண்பிறையாய் போற்றிபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (ச)

நஞ்சுடையகண்டனே போற்றிபோற்றி நற்றவனேநின்பாதம் போற்றிபோற்றி, வெஞ்சுடரோன்பல்லிறுத்த வேந்தேபோற்றி வெண்மதியங்கண்ணி விகிர்தாபோற்றி, துஞ்சிருளிலாட லுகந்தாய்போற்றி தூநீறுமெய்க்கணிந்த சோதிபோற்றி, செஞ்சடையாய் நின்பாதம் போற்றிபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (ரு)

சங்கரனேநின்பாதம் போற்றிபோற்றி சதாசிவனேநின்பாதம் போற்றிபோற்றி, பொங்கரவாநின்பாதம் போற்றிபோற்றி புண்ணியனேநின்பாதம் போற்றிபோற்றி, யங்கமலத் தயனோடுமாலுங்காணா வனலுருவாநின்பாதம் போற்றிபோற்றி, செங்கமலத்திருப்பாதம் போற்றிபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (சா)

வம்புலவுகொன்றைச் சடையாய்போற்றி வான்பிறையும்வாளரவும் வைத்தாய்போற்றி, கொம்பனையநுண்ணிடையாள் கூறாபோற்றி குரைகழலாற் கூற்றுதைத்த கோவேபோற்றி, நம்புமவர்க்கரும்பொருளே போற்றி போற்றி நால்வேதமாறங்க மானாய்போற்றி, செம்பொனேமரகதமே மணியேபோற்றி திருமூலத்தானனே போற்றி. (எ)

உள்ளமாயுள்ளத்தே நின்றாய்போற்றி யுகப்பார்மனத்தென்று நீங்காய் போற்றி, வள்ளலேபோற்றி மணாளாபோற்றி வானவர்கோன்றோடுணித்த

மைந்தாபோற்றி, வெள்ளேயேறேறும் விகிர்தாபோற்றி மேலோர்க்குமேலோர்க்கு மேலாய்போற்றி, தெள்ளுநீர்க்கங்கைச் சடையாய்போற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (அ)

பூவார்ந்தசென்னிப் புனிதாபோற்றி புத்தேளிர்போற்றும்பொருளே போற்றி, தேவார்ந்ததேவர்க்குந் தேவேபோற்றி திருமாலுக்காழி யளித்தாய்போற்றி, சாவாமேகாத்தென்னே யாண்டாய்போற்றி சங்கொத்தநீற்றெஞ் சதுராபோற்றி, சேவார்ந்தவெல்கொடியாய் போற்றிபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி (கூ)

பிரமன்றன்சிரமரிந்த பெரியோய்போற்றி பெண்ணுருவோடாணுருவாய் நின்றாய்போற்றி, கரநான்கு முக்கண்ணு முடையாய்போற்றி காதலிப்பார்க்காற்ற வெளியாய்போற்றி, யருமந்தத்தேவர்க் கரசேபோற்றி யன்றரக்கனேந்நான்கு தோளுந்தாளுஞ், சிரநெரித்தசேவடியாய் போற்றிபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (க0)

திருச்சிற்றம்பலம்.

காண்டலேகருத் தாயினவென்னுங் கலைப்பதிகந்
தூண்டாவிளக்கன்ன சோதிமுன்னின்று துதித்துருகி
யீண்டுமணிக்கோயில் சூழவலஞ்செய் திறைஞ்சியன்பு
பூண்டமனத்தொடு நீடிருவாயிற் புறத்தணைந்தார்.

(இ-ள்.) காண்டலேகருத்தாயினவென்னும்=காண்டலே கருத்தாயினவென்னும் முதலையுடைய; கலைப்பதிகம்=செய்யுளாலமைந்த திருப்பதிகத்தை; தூண்டாவிளக்கன்னசோதிமுன்னின்றுதுதித்துருகி=தூண்டாவிளக்கையொத்த சிவபிரான் முன்னின்று துதித்து மனமுருகி; ஈண்டுமணிக்கோயில்சூழவலஞ்செய்திறைஞ்சி=மணிகளழுத்திய திருக்கோயிலை வளைய வலமாகவந்து வணங்கி; அன்புபூண்டமனத்தொடு=அன்புநிறைந்த மனத்தோடு; நீடிருவாயிற்புறத்தணைந்தார்=உயர்ந்த திருவாயிலினின்றும் நீங்கிப் புறம்பேவந்தருளினார்.—எ-று. இவ்விரண்டுங்குளகம். (உஉரு)

திருவாரூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

காண்டலேகருத்தாகினேத்திருந்தேன்மனம்புகுந்தாய்கழலடி
பூண்டுகொண்டொழிந்தேன்புறம்போயினாலறையோ
வீண்டுமாடங்கணீண்டமாளிகைமேலெழுகொடிவானிளம்மதி
தீண்டிவந்துலவுந்திருவாரூரம்மானே. (க)

நாடினார்கமலம்மலரயனோடிரணியனாகங்கீண்டவ
னாடிக்காணமாட்டாத்தழலாயநம்பானைப்
பாடுவார்பணிவார்பல்லாண்டிசைக்கூறுபத்தர்கள்சித்தத்துள்புக்குத்
தேடிக்கண்டுகொண்டேன்திருவாரூரம்மானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

செய்பமாமணியொளிசூழ் திருமுன்றின்முன்றேவா சிரியன்சார்ந்து
கொய்புலாமலர்ச்சோலைக் குயில்கூவமயிலாலு மாரூரரைக்
கையினற்றொழாதேமுன் கனியிருக்கக்காய்கவர்ந்த கள்வனேனென்
றெய்தரியகையறவாற் றிருப்பதிகமருள்செய்தங் கிருந்தாரன்றே.

(இ-ள்.) செய்யமாமணியொளிசூழ்திருமுன்றின்முன்=செந்நிறமுடைய மாணிக்கங்களினது ஒளிகள் பத்திபாய்ந்திருக்கும் திருமுற்றத்தின்கணுள்ள; தேவாசிரியன் சார்ந்து=தேவாசிரிய மண்டபத்தையடைந்து; கொய்புலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுமாரூரரைக்கையினற்றொழாதேமுன்கனியிருக்கக்காய்கவர்ந்தகள்வனேனென்று= கொய்புலாமலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூரரைக் கையினற்றொழாதே முன்கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனென்று; எய்தரியகையறவால்=அடைதற்கரிய துயரத்தோடு; திருப்பதிகமருள்செய்து=திருப்பதிகத்தை யருளிச்செய்து; அங்கிருந்தார்= அங்கிருந்தருளினர்.—எ-று. அன்று-ஏ-அசை. (உஉச)

திருவாரூர்ப்பழமொழி-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்யெலாம்வெண்ணீறுசண்ணித்தமேனியான்றாடொழாதே
யுய்யலாமென்றெண்ணியுறிதூக்கியுழிதந்தென்னுள்ளம்விட்டுக்
கொய்புலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுமாரூரரைக்
கையினற்றொழாதொழிந்துகனியிருக்கக்காய்கவர்ந்தகள்வனேனே. (க)

என்பிருத்திநரம்புதோல்புகப்பெய்திட்டென்னையோருருவமாக்கி
யின்பிருத்திமுன்பிருந்தவினைதீர்த்திட்டென்னுள்ளங்கோயிலாக்கி
யன்பிருத்தியடியேனைக்கூழாட்கொண்டருள்செய்தவாரூரர்தம்
முன்பிருக்கும்விதியின்றிமுயல்விட்டுக்காக்கைப்பின்போனவாறே. (உ)

பெருகுவித்தென்பாவத்தைப்பண்டெலாங்குண்டர்கள்தஞ்சொல்லேகேட்டு
உருகுவித்தென்னுள்ளத்தினுள்ளிருந்தகள்ளத்தைத்தள்ளிப்போக்கி
யருகுவித்துப்பிணிகாட்டியாட்கொண்டுபிணிதீர்த்தவாரூரர்தம்
அருகிருக்கும்விதியின்றியறமிருக்கமறம்விலைக்குக்கொண்டவாறே. (ங)

குண்டனாய்த்தலைபறித்துக்குவிமுலையார்நகைநாணா*துழிதர்வேனைப்
பண்டமாப்படுத்தென்னைப்பால்தலையிற்றெளித்துத்தன்பாதங்காட்டித்
தொண்டெலாமிசைபாடத்தூமுறுவலருள்செய்யுமாரூரரைப்
பண்டெலாமறியாதேபனிநீராற்பாவைசெயப்பாவித்தேனே. (ச)

துன்னாகத்தேனாகித்துர்ச்சனவர்சொற்கேட்டுத்துவர்வாய்க்கொண்டு
என்னாகத்திரிதந்தீங்கிருகையேற்றிடவுண்டேனேழையேனான்
பொன்னாகத்தடியேனைப்புகப்பெய்துபொருட்படுத்தவாரூரரை
யென்னாகத்திருத்தாதேயேதன்போர்க்காதனாபகப்பட்டேனே. (ரு)

பப்போதிப்பவணனாய்ப்பறித்ததொருதலையோடேதிரிதர்வேனை
யொப்போடவோதுவித்தென்னுள்ளத்தினுள்ளிருந்தங்குறுதிகாட்டி

---

* உழிதருவேனையென்பது-உழிதர்வேனையெனநின்றது.

யப்போதைக்கப்போதுமடியவர்கட்காரமுதாமாரூரனை
யெப்போதுநினையாதேயிருட்டறையின்மலடுகறந்தெய்த்தவாறே. (௬)

கதியொன்றுமறியாதேகண்ணழலத்தலைபறித்துக்கையிலுண்டு
பதியொன்றுநெடுவீதிப்பலர்காணநகைநாணுதுழிதர்வேற்கு
மதிதந்தவாரூரில்வார்தேனைவாய்மடுத்துப்பருகியுய்யும்
விதியின்றிமதியிலியேன்விளக்கிருக்கமின்மினித்தீக்காய்ந்தவாறே. (௭)

பூவையாய்த்தலைபறித்துப்பொறியற்றசமணீசர்சொல்லேகேட்டுக்
காவிசேர்கண்மடவார்கண்டோடிக்கதவடைக்குங்கள்வனேன்றன்
னாவியைப்போகாமைதவிர்த்தென்னையாட்கொண்டவாரூரைப்
பாவியேனறியாதேபாழூரிற் * பயிக்கம்புக்கெய்த்தவாறே. (௮)

ஒட்டாதவாளவுணர்புரமூன்றுமோரம்பின்வாயின்வீழக்
கட்டானைக்காமனையுங்காலனையுங்கண்ணினொடுகாலின்வீழ
அட்டானையாரூரிலம்மானையார்வச்செற்றக்குரோதந்
தட்டானைச்சாராதேதவமிருக்கவவஞ்செய்துதருக்கினேனே. (௯)

மறுத்தானோர்வல்லரக்கனீரைந்துமுடியினொடுதோளுந்தாளு
மிறுத்தானையெழின்முளரித்தவிசின்மிசையிருந்தான்றன்றலையிலொன்றை
யறுத்தானையாரூரிலம்மானையாலாலமுண்டுகண்டங்
கறுத்தானைக்கருதாதேகரும்பிருக்கவிரும்புகடித்தெய்த்தவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

மார்பாரப்பொழிகண்ணீர் மழைவாருந்திருவடிவு மதுரவாக்கிற்
சேர்வாகுந்திருவாயிற் றீந்தமிழின்மாலைகளுஞ் செம்பொற்றாளே
சார்வானதிருமனமு முழவாரத்தனிப்படையுந் தாமுமாகிப்
பார்வாழத்திருவீதிப் பணிசெய்துபணிந்தேத்திப் பரவிச்செல்வார்.

(இ-ள்.) மார்பாரப்பொழிகண்ணீர்மழைவாருந்திருவடிவும்=மார்பு நிறையும்படி பொழிகின்ற மழைபோலும் கண்ணீர்சொரியும் திருவுருவமும்; மதுரவாக்கிற்சேர்வாகுந்திருவாயில்=மதுரமான மொழியோடு சேர்ந்திருக்கும் திருவாக்கினின்றுதிக்கும்; தீந்தமிழின்மாலைகளும்=இனிய திருப்பதிகமாலைகளும்; செம்பொற்றாளேசார்வானதிருமனமும்=சிவந்த பொன்போலும் நிறத்தையுடைய சிவபிரான் திருவடிகளையே சார்வாகக்கொண்டிருக்கும் திருவுள்ளமும்; உழவாரத்தனிப்படையுந்தாமுமாகி=ஒப்பற்ற திருவுழவாரப்படையும் தாமுமாக; பார்வாழத்திருவீதிப்பணிசெய்து=நிலவுலகத்தார்வாழும்படி திருவீதிக்கண் தாம்செய்யும் உழவாரத் திருத்தொண்டுசெய்து; பணிந்தேத்திப்பரவிச்செல்வார்=வணங்கித் துதித்துச் செல்வாராயினர்.—எ-று.

மதுரவாக்கிற் சேர்வாகுந் தீந்தமிழ்மாலையென இயையும். ஈண்டு மதுரவாக்கென்றது பிறர்செவிக்குக்கேட்கும் இனியசொல்லை. அவர் திருவுள்ளம் இருவகைப்பற்றின் சார்பையும் ஒழித்துத் திருவடியே தமக்குச்சார்பென நிற்றலில் செம்பொற்றாளே சார்வான திருமனமென்றார். ஏத்திப்பரவி என்றது ஒரு சொன்னீர்மைத்து. (௨௨௩)

---

* பயிக்கம் - பிச்சை.

நீடுபுகழ்த்திருவாரூர் நிலவுமணிப்புற்றிடங்கொ ணிருத்தர்தம்மைக்
கூடியவன்பொடுகாலங் களிலணைந்துகும்பிட்டுக் கோதில்வாய்மைப்
பாடிளம்பூதத்தினு னெனும்பதிகமுதலான பலவும்பாடி
நாடியவார்வம்பெருக நைந்துமனங்கரைந்துருகி நயந்துசெல்வார்.

(இ-ள்.) நீடுபுகழ்த்திருவாரூர்நிலவும்—அவர், மிக்க புகழுடைய திருவாரூரின்கண் வீற்றிருந்தருளும்; மணிப்புற்றிடங்கொணிருத்தர்தம்மை—மணிகளையுடைய புற்றிடங்கொண்ட தியாகேசரை; கூடியவன்பொடுகாலங்களிலணைந்துகும்பிட்டு—தம் உள்ளத்திற்கலந்த பேரன்போடு காலங்களில் தவறாது சென்றுவணங்கி; கோதில்வாய்மைப் பாடிளம்பூதத்தினனெனும்பதிகமுதலான—குற்றமற்ற மெய்ம்மையையுடைய பாடிளம் பூதத்தினனென்னும் திருப்பதிகமுதலான; பலவும்பாடி—பல திருப்பதிகங்களையும்பாடி; நாடியவார்வம்பெருக—இயானித்தலாலான பெருவிருப்பு மேம்படுதற்கேதுவாக; நைந்துமனங்கரைந்துருகிநயந்துசெல்வார்—திருவுள்ளம்நைந்து அதனாற்கரைந்துருகி நயப்படைந்து செல்வாராயினர்.—எ-று.

நடேசப்பிரானுக்கு அந்தரியாமியாயிருந்து நடத்தும் அசபாநடனம் உண்மை போலத் தியாகேசருக்கும் திநிருத்தமும் ஆனந்த நிருத்தமுமுண்மையின் நிருத்தரென்று கூறினர். (உஉசு)

திருவாரூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடிளம்பூதத்தினனும் பவளச்செவ்வாய்வண்ணத்தானுங்
கூடிளமென்முலையாளைக் கூடியகோலத்தினனு
மோடிள்வெண்பிறையானு மொளிதிகழ்சூலத்தினனு
மாடிளம்பாம்பசைத்தானு மாரூரமர்ந்தவம்மானே. (க)

பையஞ்சுடர்விடுநாகப் பள்ளிகொள்வானுள்ளத்தானுங்
கையஞ்சுநான்குடையானைக் கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப் புகழ்புரிந்தார்க்கருள்செய்யு
மையஞ்சினப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

நான்மறைநூற் பெருவாய்மை நமிநந்தியடிகடிருத் தொண்டினன்மைப்
பான்மைநிலை யாலவரைப் பரமர்திருவிருத்தத்துள் வைத்துப்பாடித்
தேன்மருவுங் கொன்றையார் திருவாரூ ரரனெறியிற் றிகழுந்தன்மை
யானதிறமும்போற்றி யணிவீதிப் பணிசெய்தங் கமருநாளில்.

(இ-ள்.) நான்மறைநூற்பெருவாய்மை—அவர், நான்குவேதநூல்களிற்கூறும் மேலான உண்மைப்பொருளையுணர்ந்த; நமிநந்தியடிகடிருத்தொண்டினன்மைப்பான்மைநிலையாலவரை—நமிநந்தியடிகளுயனார் திருத்தொண்டினது நல்லகுணத்தின் உறுதிகாரணமாக அந்நமிநந்தியடிகளுயனாரை; பரமர்திருவிருத்தத்துள்வைத்துப்பாடி—நாரூர் நறுமலர்நாதனடித் தொண்டனம்பி நந்திநீராற்றிருவிளக்கிட்டமை நீணாடறியுமன்றேயெனச் சிவபிரான் திருவிருத்தத்துள்வைத்துச் சிறப்பித்துப் பாடியருளி; தேன்மருவுங்கொன்றையார்திருவாரூர்—தேன்றங்கிய கொன்றைப்பூமாலையையணிந்த சிவபிரான் திருவா

ரூரின்கண்; அரனெறியிற்றிகழுந்தன்மையானதிறமும்போற்றி—அரனெறியில் வீற்றிருந்தருளும் நிலைமையும் துதித்து; அணிவீதிப்பணிசெய்தங்கமருநாளில்—அழகிய திருவீதியில் உழவாரப்பணிசெய்துகொண்டு அவ்விடத்துவாழும்நாளில்.—எ-று (உஉ௯)

நீராருஞ் சடைமுடியார் நிலவுதிரு வலிவலமு நினைந்துசென்று
வாராரு முலைமங்கை யுமைபங்கர் கழல்பணிந்து மகிழ்ந்துபாடிக்
காராருங் கறைக்கண்டர் கீழ்வேளூர் கன்றாப்பூர் கலந்துபாடி
யாராத காதலினுற் றிருவாரூர் தனின்மீண்டு மணைந்தாரன்றே.

(இ-ள்.) நீராருஞ்சடைமுடியார்நிலவு—கங்கைநதிவாழும் சடைமுடியையுடைய சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருவலிவலமுநினைந்துசென்று—திருவலிவலத்தையும் கருதிச்சென்று; வாராருமுலைமங்கையுமைபங்கர்—அங்கு கச்சணிந்த தனங்களையுடைய உமாதேவியை ஓர் கூற்றில்வைத்த அச்சிவபிரானது; கழல்பணிந்துமகிழ்ந்துபாடி—திருவடிகளைவணங்கித் திருவுள்ளம் மகிழ்ச்சியடைந்து பதிகம்பாடி; காராருங்கறைக்கண்டர்—மேகம்போலும் கரிய கண்டத்தையுடைய பிரானார் வீற்றிருந்தருளும்; கீழ்வேளூர்கன்றாப்பூர்கலந்துபாடி—திருக்கீழ்வேளூரையும் திருக்கன்றாப்பூரையும் அடைந்து பாடி; ஆராதகாதலினுல்திருவாரூர்தனில்மீண்டுமணைந்தார்—அடங்காதபெருவிருப்போடு திருவாரூரில் மீளவும் எழுந்தருளினார்.—எ-று. அன்று-ஏ-அசை. இவ்விரண்டுங்குளகம்.

மேவுதிரு வாதிரைநாள் வீதிவிடங் கப்பெருமாள் பவனிதன்னிற்
றேவருடன் முனிவர்கண்முன் சேவிக்கு மடியார்க ளுடன்சேவித்து
மூவுலகுங் களிகூர வரும்பெருமை முறைமையெலாங் கண்டுபோற்றி
நாவினுக்குத் தனியரசர் நயக்குநா ணம்பர்திரு வருளினாலே.

(இ-ள்.) மேவுதிருவாதிரைநாள்—திருவாதிரைநாளில் வருகின்ற; வீதிவிடங்கப்பெருமாள்பவனிதன்னில்—தியாகப்பெருமான் பவனியில்; தேவருடன்முனிவர்கண்முன்—தேவர்முனிவர்களோடுதிருமுன்னேநின்று;சேவிக்குமடியார்களுடன்சேவித்து—சேவிக்குமடியார்களுடன் தாமும்சேவித்து; மூவுலகுங்களிகூரவரும்பெருமைமுறைமையெலாங்கண்டுபோற்றி—மூவுலகத்தாரும் உள்ளக்கிளர்ச்சி மிகவருகின்ற பவனிச்சிறப்பையெல்லாங் கண்டுதுதித்து; நாவினுக்குத்தனியரசர்நயக்குநாள்—திருநாவுக்கரசர் விரும்பிவாழும்நாளில்; நம்பர்திருவருளினுல்—சிவபிரான் திருவருளால்.—எ-று. ஏ-அசை.

திருப்புகலூ ரமர்ந்தருளுஞ் சிவபெருமான் சேவடிகள் கும்பிட்டேத்தும்
விருப்புடைய வுள்ளத்து மேவியெழுங் காதல்புரி வேட்கைகூர
ஒருப்படுவார் திருவாரூ ரொருவாறு தொழுதகன்றங் குள்ளம்வைத்துப்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பாகர் பதிபிறவும்பணிந்துபோந்தார்.

(இ-ள்.) திருப்புகலூரமர்ந்தருளுஞ்சிவபெருமான்—திருப்புகலூரில் வீற்றிருந்தருளும் சிவபிரான்; சேவடிகள்கும்பிட்டேத்தும்—திருவடிகளை வணங்கித் துதிக்கும்; விருப்புடையவுள்ளத்து—விருப்பத்தோடுகூடிய உள்ளத்தின்கண்; மேவியெழுங்காதல்புரிவேட்கைகூரஒருப்படுவார்—தங்கியெழாநின்ற பெருவிருப்பாலாகிய வேட்கைமிக ஒருப்படுங் கருத்துடையவராய்; திருவாரூர் ஒருவாறுதொழுதகன்று—திருவாரூரை நீங்குங் கருத்தில்லாமல் நீங்கி; அங்குள்ளம்வைத்து—திருவாரூரிலே தம்கருத்தைவைத்து; பொருப்பரையன்மடப்பாவையிடப்பாகர்—மலையரையன் மகளாகிய பார்வதியாரை இடப்பாகத்தில்வைத்த சிவபிரான்; பதிபிறவும்பணிந்துபோந்தார்—வீற்றிருந்தருளும் பல திருப்பதிகளையும் வணங்கிக்கொண்டு திருப்புகலூரைநோக்கி எழுந்தருளினார்.

இவ்விரண்டுங்குளகம். விருப்புபொதுமையால் முன்னுண்டாவது, அவ்விருப்பி னின்றும் உண்டாம்பெருவிருப்புகாதல் எனவும் அதன் மிகுதிவேட்கை எனவுங்கொள்க.

அந்நாளி லாளுடைய பிள்ளையார் திருப்புகலி யதன்கணின்றும்
பன்னகப் பூணணிவார் பயின்றதிருப் பதிபலவும் பணிந்துசெல்வார்
புன்னாக மணங்கமழும் பூம்புகலூர் வந்திறைஞ்சிப் பொருவில்சீர்த்தி
மின்னாரும் புரிமுன்னூன் முருகனார் திருமடத்தின் மேவுங்காலை.

(இ-ள்.) அந்நாளிலாளுடையபிள்ளையார்=அந்தநாளில் ஆளுடையபிள்ளையார்; திருப்புகலியதன்கணின்றும்=சீகாழியினின்றும்; பன்னகப்பூணணிவார்பயின்ற=பலசர்ப்பத்தை ஆபரணமாகவணிந்த சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருப்பதிபலவும்பணிந்துசெல்வார்=பலதிருப்பதிகளையும் வணங்கிச் செல்கின்றவராய்; புன்னாகமணங்கமழும்பூம்புகலூர்வந்திறைஞ்சி=சுரபுன்னைமலர்கள் மணம்வீசும் பொலிவினையுடைய திருப்புகலூருக் கெழுந்தருளி வர்த்தமானீஸ்வரத்தைவணங்கி; பொருவில்சீர்த்திமின்னாரும்புரிமுன்னூல்=ஒப்பற்ற புகழையுடைய மின்போலும் முறுக்குத்தங்கிய உபவீதத்தைத் தரித்த; முருகனார்திருமடத்தின்மேவுங்காலை=முருகநாயனாருடைய திருமடத்தின்கண் எழுந்தருளும்போது.—எ-று. (௨௬௧)

ஆண்டவர செழுந்தருளி யணியாரூர் மணிப்புற்றி லமர்ந்துவாழு
நீண்டசுடர் மாமணியைக் கும்பிட்டு நீடுதிருப் புகலூர்நோக்கி
மீண்டருளி னாரென்று கேட்டருளி யெதிர்கொள்ளும் விருப்பினோடும்
ஈண்டுபெருந் தொண்டர்குழாம் புடைசூழவெழுந்தருளி யெதிரேசென்றார்.

(இ-ள்.) ஆண்டவரசெழுந்தருளி=வாகீசத் திருவடிகளெழுந்தருளி; அணியாரூர்மணிப்புற்றிலமர்ந்துவாழும்=அழகிய திருவாரூரின்கண் மணிகள்நிறைந்த புற்றில் வீற்றிருந்தருளும்; நீண்டசுடர்மாமணியைக்கும்பிட்டு=மிக்க ஒளிதங்கிய மாணிக்கம் போலும் திருமேனியையுடைய தியாகேசரைத் தரிசித்து; நீடுதிருப்புகலூர்நோக்கி=உயர்ந்த திருப்புகலூரைநோக்கி; மீண்டருளினாரென்றுகேட்டருளி=மீண்டெழுந்தருளுகின்றாரென்றுகேட்டு; எதிர்கொள்ளும்விருப்பினோடும்=அவரைத் தாம் எதிர்கொள்ளும்படியான ஆசையோடு; ஈண்டுபெருந்தொண்டர்குழாம்புடைசூழ=நெருங்கிய பெரிய அடியார்கூட்டங்கள் அருகிற்சூழ; எழுந்தருளியெதிரேசென்றார்=எழுந்தருளிவந்து அவரை எதிர்கொண்டார்.—எ-று. இவ்விரண்டுங்குளகம். (௨௬௨)

கரண்டமலி தடம்பொய்கைக் காழியர்கோ னெதிரணையுங் காதல்கேட்டு
வரன்றுமணிப் புனற்புகலூர் நோக்கிவரும்வாகீசர் மகிழ்ந்துவந்தார்
திரண்டுவருந் திருநீற்றுத் தொண்டர்குழா மிருதிறமுஞ் சேர்ந்தபோதி
லிரண்டுநில வின்கடல்க ளொன்றாகி யணைந்தனபோ லிசைந்தவன்றே.

(இ-ள்.) கரண்டமலிதடம்பொய்கைக்காழியர்கோன்=நீர்க்காக்கைகள் மிக்கிருக்கும் வாவிகள்சூழ்ந்த சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார்; எதிரணையுங்காதல்கேட்டு=தமக்கெதிரே எழுந்தருளுகின்ற திருவுள்ளக்குறிப்பைக்கேட்டு; வரன்றுமணிப்புனற்புகலூர்நோக்கிவரும்=மணிகளைக் கிளரிக்கொண்டு பெருகுகின்ற காவிரிவளந்தங்கிய திருப்புகலூரைநோக்கி வருகின்ற; வாகீசர்மகிழ்ந்துவந்தார்=வாகீசமுனிவர் திருவுள்ளமகிழ்ந்தெழுந்தருளினார்; திரண்டுவருந்திருநீற்றுத்தொண்டர்குழாம்=சேர்ந்துவருகின்ற திருமேனியில் திருநீறுவிரவப்பூசிய அடியார்கூட்டங்கள்; இருதிறமுஞ்சேர்ந்த

போதில்—இருபகுதியும் ஒருங்கு குழீஇயசமயத்து; இரண்டுநிலவின்கடல்களொன்றாகி—வெள்ளொளிவீசும் பாற்கடல்களிரண்டு ஒருங்குசேர்ந்து; அணைந்தனபோலிசைந்த—வந்தனபோலிருந்தன.—எ-று. அன்று-ஏ-அசை.

கரண்டம் என்றது காரண்டத்தின் திரிபு. (உருரு)

திருநாவுக் கரசரெதிர் சென்றிறைஞ்சச் சிரபுரத்துத் தெய்வவாய்மைப்
பெருஞான சம்பந்தப் பிள்ளையா ரெதிர்வணங்கி யப்பரோநீர்
வருநாளிற் றிருவாரூர் நிகழ்பெருமை வகுத்துரைப்பீ ரென்றுகூற
வருநாமத் தஞ்செழுத்துப் பயில்வாய்மை யவருமெதி ரருளிச்செய்வார்.

(இ-ள்) திருநாவுக்கரசரெதிர்சென்றிறைஞ்ச—ஆண்டவரசு ஆளுடையபிள்ளையார் எதிர்சென்றுவணங்க; சிரபுரத்துத்தெய்வவாய்மை—சீகாழியின்கண் அவதரித்த தெய்வீகத்தன்மையையுடைய; பெருஞானசம்பந்தப்பிள்ளையார்—பெருமைமிக்க ஆளுடையபிள்ளையார்; எதிர்வணங்கியப்பரோ—அவரெதிரோ தாமும் வணங்கி அப்பரோ; நீர்வருநாளிற்றிருவாரூர்நிகழ்பெருமை—நீர் திருவாரூருக்கெழுந்தருளும்நாளில் அங்குநிகழ்ந்த பவனிப்பெருமையை; வகுத்துரைப்பீரென்றுகூற—வகுத்துக்கூறுமென்று அருளிச்செய்ய; அருநாமத்தஞ்செழுத்துப்பயில்வாய்மையவரும்—அரிய திருநாமமாகிய திருவைந்தெழுத்தும் பயில்கின்ற மெய்ம்மையையுடைய அவ்வாகீசமுனிவரும்; எதிரருளிச்செய்வார்—ஆளுடையபிள்ளையாரெதிரோ அருளிச்செய்வாராயினர்.—எ-று. (உருசு)

வேறு.

சித்தநிலாவுந் தென்றிருவாரூ நகராளு
மைத்தழைகண்ட ராதிரைநாளின் மகிழ்செல்வம்
இத்தகைமைத்தென் றென்மொழிகேனென் றுரைசெய்தார்
முத்துவிதான மணிப்பொற்கவரி மொழிமாலை.

(இ-ள்) தென்றிருவாரூர்நகராளும்—தெற்கின்கணுள்ள திருவாரூர்நகரத்தையரசுசெய்யும்; சித்தநிலாவுமைத்தழைகண்டராதிரைநாளின்மகிழ்செல்வம்—அடியாருள்ளத்து விளங்கி வீற்றிருந்தருளும் கருநிறந்தங்கிய திருமிடற்றையுடைய வீதிவிடங்கப்பெருமான் திருவாதிரைநாளில் பவனிவருகிற சிறப்பை; இத்தகைமைத்தென்றென்மொழிகேனென்று—இவ்வண்ணமுடைத்தென்றெடுத்து எவ்வாறுசொல்லுகேனென்றுகூறி; முத்துவிதானமணிப்பொற்கவரிமொழிமாலையுரைசெய்தார்—முத்துவிதான மணிப்பொற்கவரி என்னும் முதலையுடைய திருப்பதிகமாலையை அருளிச்செய்தார்.—எ-று. (உருரு)

திருவாரூர்த்திருவாதிரைத் திருப்பதிகம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிக
ளத்தனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (க)

நணியார்சேயார் நல்லார்தீயார் நாடோறும்
பிணிதான்றீரு மென்றுபிறங்கிக் கிடப்பாரு
மணியேபொன்னே மைந்தாமணாளா வென்பார்கட்
கணியானாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (உ)

வீதிகடோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள்விட்டுச் சுடர்மாமணிக ளொளிதோன்றச்
சாதிகளாய பவளமுமுத்துத் தாமங்க
ளாதியாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௩)

குணங்கள்பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள்
பிணங்கித்தம்மிற் பித்தரைப்போலப் பிதற்றுவார்
வணங்கிநின்று வானவர்வந்து வைகலு
மணங்கனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௪)

நிலவெண்சங்கும் பறையுமார்ப்ப நிற்கில்லாப்
பலருமிட்ட கல்லவடங்கள் பரந்தெங்கும்
கலவமஞ்ஞை காரென்றெண்ணிக் களித்துவந்
தலமராரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௫)

விம்மாவெருவா விழியாத்தெழியா வெருட்டுவார்
தம்மாண்பிலராய்த் தரியார்தலையான் முட்டுவா
ரெம்மானீச னெந்தையென்னப்ப னென்பார்கட்
கம்மானாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௬)

செந்துவர்வாயார் செல்வன்சேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர்கூடி மயங்குவா
ரிந்திரனாதி வானவர்சித்த ரெடுத்தேத்து
மந்திரனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௭)

முடிகள்வணங்கி மூவாதார்கண் முன்செல்ல
வடிகொள்வேய்த்தோள் வானரமங்கையர் பின்சொல்லப்
பொடிகள்பூசிப் பாடுந்தொண்டர் புடைசூழ
வடிகளாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௮)

துன்பநும்மைத் தொழாதநாள்க ளென்பாரு
மின்பநும்மை யேத்துநாள்க ளென்பாரு
நும்பினெம்மை நுழையப்பணியே யென்பாரு
மன்பனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௯)

பாரூர்பவ்வத் தானைப்பத்தர் பணிந்தேத்தச்
சீரூர்பாட லாடலறாத செம்மாப்பார்ந்
தோரூரொழியா துலகமெங்கு மெடுத்தேத்து
மாரூரன்ற னாதிரைநாளா லதுவண்ணம். (௧0)

திருச்சிற்றம்பலம்.

அம்மொழிமாலைச் செந்தமிழ்கேளா வணிசண்பை
மைம்மலிகண்டத் தண்டர்பிரானார் மகனாருங்
கொய்ம்மலர்வாவித் தென்றிருவாரூர் கும்பிட்டே
யும்முடன்வந்திங் குடனமர்வேனென் றருள்செய்தார்.

(இ-ள்.) அம்மொழிமாலைச்செந்தமிழ்கேளா=அந்த முத்துவிதானமென்னும் செந்தமிழ்த் திருப்பதிகமாலையைக்கேட்டு; அணிசண்பைமைம்மலிகண்டத்தண்டர்பிரானார்

மகனாரும்—அழகிய சீகாழியின்கண் அவதரித்த கருநிறந்தங்கிய திருமிடற்றையுடைய சிவபிரான் திருமகனாராகிய ஆளுடையபிள்ளையாரும்; கொய்ம்மலர்வாவித்தென்றிருவாரூர்கும்பிட்டு—கொய்யத்தக்க மலர்வாவிகள்சூழும் தெற்கின்கணுள்ள திருவாரூரைத்தரிசித்து; உம்முடன்வந்திங்குடனமர்வேனென்றருள்செய்தார்—இத்திருப்புகலூரின்கண் பின் உம்முடன்வந்து இருப்பேனென்றருளிச்செய்தார்.—எ-று. ஏ-அசை. (௨௬௬)

மாமதிலாரூர் மன்னனையங்கு வணங்கச்செந்
தாமரையோடைச் சண்பையர்நாதன் றானேக
நாமருசொல்லி னுதருமார்வத் தொடுபுக்கார்
பூமலர்வாசத் தண்பணைசூழும் புகலூரில்.

(இ-ள்.) மாமதிலாரூர்மன்னனையங்குவணங்க—பெரிய மதில்சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருந்தருளும் தியாகப்பெருமானை அவ்விடத்துத் தரிசனஞ்செய்ய; செந்தாமரையோடைச்சண்பையர்நாதன்றானேக—செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் ஓடையையுடைய சீகாழிப்பதியில் அவதரித்த ஆளுடையபிள்ளையார் எழுந்தருள; நாமருசொல்லினுதருமார்வத்தொடு—வாகீசமுனிவரும் விருப்போடு; பூமலர்வாசத்தண்பணைசூழும்புகலூரில்புக்கார்—பூக்கள் மலர்தலால் மணம்வீசுகின்ற குளிர்ந்தவயல்சூழ்ந்த திருப்புகலூரில் எழுந்தருளினர்.—எ-று. (௨௬௭)

அத்திருமூதூர் மேவியநாவுக் கரசுந்தஞ்
சித்தநிறைந்தே யன்புதெவிட்டுந் தெளிவெள்ள
மொய்த்திழிதாரைக் கண்பொழிநீர்மெய் முழுதாரப்
பைத்தலைநாகப் பூணணிவானைப் பணிவுற்றார்.

(இ-ள்.) அத்திருமூதூர்மேவியநாவுக்கரசும்—அந்தப் பழைய திருப்புகலூரையடைந்த திருநாவுக்கரசரும்; தஞ்சித்தநிறைந்தேயன்புதெவிட்டும்—தம் திருவுள்ளநிறைந்து அன்பானது வழிதலினாலான; தெளிவெள்ளமொய்த்திழிதாரைக்கண்பொழிநீர்—தெளிவாகிய வெள்ளம்போலத் திரண்டுசொரிகின்ற தாரையாகிய ஆனந்தக்கண்ணீர்; மெய்முழுதார—திருமேனிமுழுதும் பரவ; பைத்தலைநாகப்பூணணிவானை—படத்தோடுகூடிய தலையையுடைய சர்ப்பத்தை ஆபரணமாக அணிகின்ற சிவபிரானை; பணிவுற்றார்—வணங்கினார்.—எ-று. (௨௬௮)

தேவர்பிரானைத் தென்புகலூர்மன் னியதேனைப்
பாவியன்மாலைச் செந்தமிழ்பாடிப் பரிவோடு
மேவியகாலந் தோறும்விருப்பிற் கும்பிட்டே
யோவுதலோவு திருப்பணிசெய்தங் குறைகின்றார்.

(இ-ள்.) தேவர்பிரானைத்தென்புகலூர்மன்னியதேனை—அவர், தேவர்க்கெல்லாமதிபரானவரை தெற்கின்கணுள்ள திருப்புகலூரில் வீற்றிருந்தருளும் இனியானை; பாவியன்மாலைச்செந்தமிழ்பரிவோடுபாடி—பாவுக்கமைந்த செந்தமிழ்ப்பதிகமாலையை அன்போடுபாடி; மேவியகாலந்தோறும்—வருகின்ற காலைமுதலிய காலங்கடோறும்; விருப்பிற்கும்பிட்டு—விருப்போடு வணங்கி; ஓவுதலோவுதிருப்பணிசெய்து—குறைவில்லாத கைத்தொண்டையுஞ்செய்து; அங்குறைகின்றார்—அங்கு வசித்திருந்தார்.—எ-று. ஏ-அசை. (௨௬௯)

சீர்தருசெங்காட் டங்குடிநீடு திருநள்ளா
றார்தருசோலை சூழ்தருசாத்தை யயவந்தி
வார்திகழ்மென்முலை யாளொருபாகன் றிருமருகல்
ஏர்தருமன்பாற் சென்றுவணங்கி யின்புற்றார்.

(இ-ள்.) சீர்தருசெங்காட்டங்குடி—அவர், பின்பு சிறப்பமைந்த திருச்செங்காட்டங்குடியும்; நீடுதிருநள்ளாறு—மிக்க திருநள்ளாறும்; ஆர்தருசோலைசூழ்தருசாத்தையயவந்தி—நிறைந்த சோலைசூழ்ந்த சாத்தமங்கையிலுள்ள அயவந்தியும்; வார்திகழ்மென்முலையாளொருபாகன்றிருமருகல்—கச்சணிந்த மிருதுவான முலைகளையுடைய உமாதேவியார் பாகராகிய சிவபிரான் வீற்றிருந்தருளும் திருமருகலும் ஆகிய தலங்களை; ஏர்தருமன்பாற்சென்றுவணங்கியின்புற்ருர்—மிகுந்த அன்போடுசென்று தொழுது திருப்புகலூரிலெழுந்தருளியிருந்தார்.—எ-று. (உசo)

அப்படிசின்னுள் சென்றபினூரர் நகராளுந்
துப்புறழ்வேணிக் கண்ணுதலாரைத் தொழுதிப்பான்
மெய்ப்பொருண்ஞானம் பெற்றவர்வேணு புரத்தெங்கள்
பொற்புரிமுந்நூன் மார்பரும்வந்தார் புகலூரில்.

(இ-ள்.) அப்படிசின்னுள்சென்றபின்—வாகீசமுனிவர் அவ்வாறு யாத்திரைசெய்து திருப்புகலூரில் சின்னுள் எழுந்தருளியிருந்தபின்பு; ஆரூர்நகராளும்துப்புறழ்வேணிக்கண்ணுதலாரைத்தொழுது—திருவாரூர் நகரத்தை அரசுசெய்யும் பவளம்போலும் திருமுடியையுடைய தியாகேசரைத்தொழுது; இப்பான்மெய்ப்பொருண்ஞானம்பெற்றவர்—மீண்டு உண்மைஞானத்தைப் பெற்றவரும்; வேணுபுரத்தெங்கள்பொற்புரிமுந்நூன்மார்பரும்—சீகாழியிலவதரித்த எங்கள் முதல்வரான பொன்போலும் முப்புரிநூலையணிந்த மார்பினருமாகிய ஆளுடையபிள்ளையாரும்; வந்தார்புகலூரில்—திருப்புகலூருக்கெழுந்தருளினர்.—எ-று. (உசக)

வேறு.

பிள்ளையாரெழுந்தருளப் பெருவிருப்பால்வாகீசர்
உள்ளமகிழ்ந்தெதிர்கொண்டங் குடனுறையுநாளின்கண்
வள்ளலார்சிறுத்தொண்டர் மற்றவர்பாலெழுந்தருள
எள்ளருஞ்சீர்நீலநக்கர் தாமுமெழுந்தருளினர்.

(இ-ள்.) பிள்ளையாரெழுந்தருள—ஆளுடையபிள்ளையா ரெழுந்தருள; பெருவிருப்பால்வாகீசர்—அதைக்கேட்டு வாகீசமுனிவர் பெருங்காதலோடு; உள்ளமகிழ்ந்தெதிர்கொண்டு—திருவுள்ளங்களித்து அவரை எதிர்சென்றழைத்துக்கொண்டு; அங்குடனுறையும்நாளின்கண்—அத்திருப்புகலூரில் அவருடன் எழுந்தருளியிருக்கும் நாளில்; வள்ளலார்சிறுத்தொண்டர்—அதைக்கேள்வியுற்ற ஈகையிற்சிறந்த சிறுத்தொண்டநாயனர்; மற்றவர்பாலெழுந்தருள—அங்கெழுந்தருளியிருக்கும் அவ்விருவரிடத்தும் எழுந்தருள; எள்ளருஞ்சீர்நீலநக்கர்தாமுமெழுந்தருளினர்—நல்ல சீர்த்தியையுடைய திருநீலநக்கநாயனரும் அத்திருப்புகலூருக் கெழுந்தருளினர்.—எ-று. (உசஉ)

ஆங்கணையுமவர்களுட னப்பதியிலந்தணரா
மோங்குபுகழ்முருகனர் திருமடத்திலுடனுகப்
பாங்கில்வருஞ்சீரடியார் பலருமுடன்பயில்கேண்மை
நீங்கரியதிருத்தொண்டி னிலையுணர்ந்துநிகழ்கின்ருர்.

(இ-ள்.) ஆங்கணையுமவர்களுடன்—அத்திருப்புகலூரில் எழுந்தருளிய சிறுத்தொண்டர் நீலநக்கர் என்னும் அவ்விருவருடன்; அப்பதியிலந்தணராம்—அப்பதியில்வாழும் அந்தணராகிய; ஓங்குபுகழ்முருகனர்திருமடத்தில்—மிக்க புகழையுடைய முருகநாயனர் திருமடத்தில்; உடனுகப்பாங்கில்வருஞ்சீரடியார்—ஒருவரோடொருவர் ஒருங்குசேர்

ந்து அவ்விடத்தில் வருகின்ற சிறப்பினையுடைய அடியார்கள்; பலருமுடன்பயில்கேண்மை=பலரும் தம்முளத்தில் ஒற்றுமைப்பட்ட கேண்மையையும்; நீங்கரிய திருத்தொண்டின்=நீங்குதற்கரிய திருத்தொண்டின்; நிலைபுணர்ந்துநிகழ்கின்றார்=நிலைமையையும் விசாரித்து வாகீசமுனிவர் ஆளுடையபிள்ளையார் என்னும் இருவரும் ஒழுகுவாராயினார்.—எ-று.

திருத்தொண்டின் நிலைபுணர்தலாவது:—வேண்டுவார்க்கு வேண்டிய போகங் கொடுத்து வீடடைவிக்கும் பெருமையினையுடையதிதுவென்று அதன் மேன்மையை யுணர்தல். (உ௪௩)

திருப்பதிகச்செந்தமிழின் றிறம்போற்றிமகிழ்வுற்றுப்
பொருப்பரையன்மடப்பாவை யிடப்பாகர்பொற்றாளில்
விருப்புடையதிருத்தொண்டர் பெருமையினைவிரித்துரைத்தங்
கொருப்படுசிந்தையினார்க ளுடனுறைவின்பயன்பெற்றார்.

(இ-ள்.) திருப்பதிகச்செந்தமிழின்றிறம்போற்றிமகிழ்வுற்று=அங்கு அவ்விருவரும் பல செந்தமிழ்த் திருப்பதிகங்களைப்பாடி மகிழ்ச்சியடைந்து; பொருப்பரையன்மடப்பாவையிடப்பாகர்பொற்றாளில்=பார்வதியாரை இடப்பாகத்திலுடைய சிவபிரான் திருவடிகளில்; விருப்புடையதிருத்தொண்டர்=விருப்பமிக்க திருவடியார்களுடைய; பெருமையினைவிரித்துரைத்து=உறுதிப்பாட்டைப் பலருமறிய விரித்தருளிச்செய்து; அங்கொருப்படுசிந்தையினார்கள்=அம்முருகனார் திருமடத்தில் ஒருங்கிய சித்தத்தையுடைய அவ்விருவரும்; உடனுறைவின்பயன்பெற்றார்=தம்முட்கலந் திருத்தலாலாகிய பயனையடைந்தார்கள்.—எ-று.

ஏனைக்கடவுளர்பால்வைத்த அன்பினும் சிவபிரான் திருவடிக்கண்வைத்த அன்புசிறந்ததென்பது விளக்கிய பொருப்பரையன் மடப்பாவையிடப்பாகர் பொற்றாளில் விருப்பு என்றார். அடியார்பெருமையை விரித்துரைத்தலாவது:—மீண்டு நிலவுலகத்து வாராத முத்திப்பெருவாழ்வெய்தும் சிறப்புடையதென்று அவர்பெருமையை விரித்துக் கூறல். ஏனையபெருமைகள் அழிதன்மாலையவாய்க்கேடடைதலில். ஒருப்படுசிந்தையென்றது ஐம்புலனுகர்ச்சியிற் செல்லாது தட்பமடைந்த சத்துவமனசை. மெய்யடியார்கள் ஒருங்குசேர்ந்து கலந்திருத்தல் மெய்ப்பொருளை விசாரித்து வீட்டின்பநுகர்தற்கேதுவாகலின் உடனுறைவின்பயன் பெற்றாரென்றார். (உ௪௪)

அந்நாளிற்றமக்கேற்ற திருத்தொண்டினெறியாற்ற
மின்னார்செஞ்சடையண்ணல் மேவுபதிபெனைப்பலவு
முன்னாகச்சென்றேத்தி முதல்வன்றாடொழுவதற்குப்
பொன்னாருமணிமாடப் பூம்புகலூர்தொழுதகன்றார்.

(இ-ள்.) அந்நாளிற்றமக்கேற்ற=அவ்விருவரும் அவ்வாறொழுகும் நாளில் தமக்குரிய; திருத்தொண்டினெறியாற்ற=திருத்தொண்டின் முறைமையைச் செய்தற்கேதுவாக; மின்னார்செஞ்சடையண்ணல்=மின்போலும் விளங்கிய சிவந்த சடையையுடைய சிவபிரான்; மேவுபதியெனைப்பலவும்=வீற்றிருந்தருளும் பிறதிருப்பதிகள் பலவற்றையும்; முன்னாகச்சென்றேத்தி=முற்பட்டுச்சென்றுதுதித்து; முதல்வன்றாடொழுவதற்கு=ஆங்காங்கு சிவபிரான் திருவடிகளை வணங்குநிமித்தம்; பொன்னாருமணிமாடப்பூம்புகலூர்=பொன்மயமான அழகிய மாடங்களையுடைய பொலிவுதங்கிய திருப்புகலூரை; தொழுதகன்றார்=தொழுது நீங்கினார்.—எ-று.

தொழுவதற்குத் தொழுதகன்றாரென இயையும். (உ௪௫)

திருநீலநக்கடிகள் சிறுத்தொண்டர்முருகனுர்
பெருநீர்மையடியார்கள் பிறரும்விடைகொண்டேக
ஒருநீர்மைமனத்துடைய பிள்ளையாருடனரசும்
வருநீர்செஞ்சடைக்கரந்தார் திருவம்பர்வணங்கினுர்.

(இ-ள்.) திருநீலநக்கடிகள்சிறுத்தொண்டர்முருகனுர்=திருநீலநக்க நாயனுரும் சிறுத்தொண்டநாயனுரும் முருகநாயனுரும்; பெருநீர்மையடியார்கள்பிறரும்=மிக்க மேன்மையையுடைய பிற அடியார்களும்; விடைகொண்டேக=விடைபெற்றுக்கொண்டு தாமிருக்குமிடங்களுக்குச்செல்ல; ஒருநீர்மைமனத்துடையபிள்ளையாருடனரசும்=ஒருப்பட்ட திருவுள்ளத்தோடு ஆளுடையபிள்ளையாரும் ஆண்டவரசும்; வருநீர்செஞ்சடைக்கரந்தார்=பெருக்கெடுக்கும் கங்கைநீரைச் சிவந்த சடைக்கண்மறைத்த சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருவம்பர்வணங்கினுர்=திருவம்பர்மாகாளம் என்னும் திருப்பதியை வணங்கினுர்கள்.—எ-று. (உசகூ)

செங்குமுதமலர்வாவித் திருக்கடவூரணைந்தருளிப்
பொங்கியவெங்கூற்றடர்த்த பொன்னடிகடொழுதேத்திக்
குங்குலியக்கலயனுர் திருமடத்திற்குறைவறுப்ப
அங்கவர்பாற்சிவனடியா ருடனமுதுசெய்தார்கள்.

(இ-ள்.) செங்குமுதமலர்வாவி=செவ்வாம்பல்கள் மலர்கின்ற வாவிகளையுடைய; திருக்கடவூரணைந்தருளி=திருக்கடவூரையடைந்து; பொங்கியவெங்கூற்றடர்த்த=மார்க்கண்டேயரைக் கோபித்த யமனை உதைத்தருளிய; பொன்னடிகடொழுதேத்தி=சிவபிரான் திருவடிகளைவணங்கித் துதித்து; குங்குலியக்கலயனுர்திருமடத்தில்=குங்குலியக்கலயநாயனுரது திருமடத்தில்; குறைவறுப்பவங்கவர்பால்=அவர் வேண்டுகோளைமுடிக்க; சிவனடியாருடனமுதுசெய்தார்கள்=சிவனடியாருடன் அம்மடத்தில் அவ்விருவரும் திருவமுதுசெய்தார்கள்.—எ-று. (உசஎ)

சீர்மன்னுந்திருக்கடவூர்த் திருமயானமும்வணங்கி
யேர்மன்னுமின்னிசைப்பா பலபாடியினிதமர்ந்து
கார்மன்னுங்கறைக்கண்டர் கழலிணைகடொழுதகன்று
தேர்மன்னுமணிவீதித் திருவாக்கூர்சென்றடைந்தார்.

(இ-ள்.) சீர்மன்னுந்திருக்கடவூர்த்திருமயானமும்வணங்கி=நிலைபெற்ற சிறப்பினையுடைய திருக்கடவூரைச்சார்ந்த திருமயானத்தையும்வணங்கி; ஏர்மன்னுமின்னிசைப்பாபலபாடி=அழகினையுடைய இனிய இசையோடுகூடிய பல திருப்பதிகமாலைகளைப் பாடியருளி; இனிதமர்ந்து=இத்திருப்பதியில் இனிதாக எழுந்தருளியிருந்து; கார்மன்னுங்கறைக்கண்டர்=கரிய விடந்தங்கிய திருமிடற்றினையுடைய சிவபிரானது; கழலிணைகடொழுதகன்று=திருவடிகளைவணங்கி அங்குநின்றும் நீங்கி; தேர்மன்னுமணிவீதி=தேர்கள் தங்கிய அழகிய வீதிகளையுடைய; திருவாக்கூர்சென்றடைந்தார்=திருவாக்கூர் என்னும் திருப்பதியை அவ்விருவரும் அடைந்தார்கள்.—எ-று. (உசஅ)

சார்ந்தார்தம்புகலிடத்தைத் தான்றேன்றிமாடத்துக்
கூர்ந்தார்வமுறப்பணிந்து கோதிறமிழ்த்தொடைபுனைந்து
வார்ந்தாடுஞ்சடையார்தம் பதிபலவும்வணங்கியுடன்
சேர்ந்தார்கடம்பெருமான் றிருவீழிமிழலையினை.

(இ-ள்.) தான்றோன்றிமாடத்து—அங்குள்ள தான்றோன்றி மாடமென்னுந் திருக்கோயிலில்; சார்ந்தார்தம்புகலிடத்தை—தம்மைச்சார்ந்த அடியார்களுக்குப் புகலிடமாயுள்ள சிவபிரானை; கூர்ந்தார்வமுறப்பணிந்து—ஆர்வம்மிக நிலமுறவணங்கி; கோதிறமிழ்த்தொடைபுனைந்து—குற்றமற்ற தமிழ்ப்பதிகமாலைகளைச்சாத்தி; வார்ந்தாடுஞ்சடையார்தம்—நீண்டு பின் வீழ்ந்தசைகின்ற சடையையுடையசிவபிரானது; பதிபலவும்வணங்கியுடன்—பல திருப்பதிகளையும் வணங்கி உடனே; தம்பெருமான்றிருவீழிமிழலையினைச்சேர்ந்தார்கள்—தம்பெருமான் வீற்றிருந்தருளும் திருவீழிமிழலையென்னும் திருப்பதியை அவ்விருவரு மடைந்தார்கள்.—எ-று. (உசகூ)

வேறு

வீழிமிழலைவந்தணையு மேவுநாவுக்கரசினையுங்
காழிஞானப்பிள்ளையையுங் கலந்தவுள்ளக்காதலினால்
ஆழிவலவனறியாத வடியாரடியாரவர்களுடன்
வாழிமறையோரெதிர்கொண்டு வணங்கவணங்கியுள்புக்கார்.

(இ-ள்.) வீழிமிழலைவந்தணையும்—திருவீழிமிழலையின்கண் எழுந்தருளும்; மேவுநாவுக்கரசினையும்—மேம்பாடு தங்கிய திருநாவுக்கரசினையும்; காழிஞானப் பிள்ளையையும்—சீகாழியில் அவதரித்த ஆளுடையபிள்ளையாரையும்; கலந்தவுள்ளக்காதலினால்—தம் உள்ளத்தொருப்பட்ட விருப்பினால், ஆழிவலவனறியாத—சக்கரத்தையேந்திய திருமாலறியாத; அடியாரடியாரவர்களுடன்—திருவடியையுடைய சிவபிரானடியார்களோடு; மறையோரெதிர்கொண்டுவணங்க—அவ்வூர் மறையவர்களும் எதிர்கொண்டிறைஞ்ச; வணங்கியுள்புக்கார்—அவர்களைத் தாமும்வணங்கி அவ்விருவரும் உள்ளேபுகுந்தார்கள்.—எ-று. வாழி-அசை. (உருo)

மாடவீதியலங்கரித்து மறையோர்வாயின்மணிவிளக்கு
நீடுகதலிதழைப்பூக நிரைத்துநிறைபொற்குடமெடுத்துப்
பீடுபெருகும்வாகீசர் பிள்ளையாருந்தொண்டர்களுங்
கூடமகிழ்ந்துவிண்ணிழிந்த கோயில்வாயில்சென்றணைந்தார்.

(இ-ள்.) மாடவீதியலங்கரித்து—திருக்கோயிலின் மாடவீதியை அலங்காரஞ்செய்து; மறையோர்வாயில்மணிவிளக்கு—மறையவர்கள் தங்கள் மனைவாயில்கடோறும் மணிகளழுத்திய விளக்குகளையும்; நீடுகதலிதழைப்பூகநிரைத்து—நீண்டவாழைகளையும் தழைத்த கமுகமரங்களையும் நிரைத்து; நிறைபொற்குடமெடுத்து—பொன்னாலாகிய பூரண கும்பங்களையெடுத்து; பீடுபெருக—வரிசைகளைச்செய்ய; வாகீசர்பிள்ளையாருந்தொண்டர்களும்—வாகீசரும் ஆளுடையபிள்ளையாரும் அடியார்களும்; கூடமகிழ்ந்து—ஒருங்குகளிப்புற்று; விண்ணிழிந்தகோயில்வாயில்சென்றணைந்தார்—விண்ணிழி விமானக்கோயிலின் வாயிலை அடைந்தார்கள்.—எ-று. (உருக)

சென்றுபுகுந்துதிருவீழி மிழலையமர்ந்தசெங்கனகக்
குன்றவில்லியார்மகிழ்ந்த கோயில்வலமாவந்துதிரு
முன்றில்வணங்கிமுன்னெய்தி முக்கட்செக்கர்ச்சடைமவுலி
வென்றிவிடையார்சேவடிக்கீழ் விழுந்தாரெழுந்தார்விம்மினார்.

(இ-ள்.) சென்றுபுகுந்துதிருவீழிமிழலையமர்ந்த—திருக்கோயில் வாயிலையடைந்து உள்ளேபுகுந்து திருவீழிமிழலை என்னும் திருப்பதியிலுள்ள; செங்கனகக்குன்றவில்லியார்மகிழ்ந்தகோயில்—மேருவில்லையுடைய சிவபிரான் மகிழ்கூர்ந்த விண்ணிழிவிமா

னக் கோயிலை; வலமாவந்துதிருமுன்றில்வணங்கிமுன்னெய்தி=வலமாகவந்து திருமுற்றத்தைவணங்கி முன்னேசென்று; முக்கட்செக்கர்ச்சடைமவுலி=மூன்றுகண்களையும் செக்கர்போலும் சிவந்தசடாமுடியையுமுடைய; வென்றிவிடையார்சேவடிக்கீழ்=வெற்றிப்பாடமைந்த இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபிரானது திருவடிக்கீழ்; விழுந்தாரெழுந்தார்விம்மினர்=தொழுதெழுந்து ஆராமையால் அழுதார்கள்.—எ-று. (உ௫உ)

கைகள்குவித்துக்கழல்போற்றிக் கலந்தவன்புகரைந்துருக
மெய்யில்வழியுங்கண்ணருவி விரவப்பரவுஞ்சொன்மாலை
செய்யசடையார்தமைச்சேரார் தீங்குநெறிசேர்கின்றாரென்
றுய்யுநெறித்தாண்டகமொழிந்தங் கொழியாக்காதல்சிறந்தோங்க.

(இ-ள்.) கைகள்குவித்துக்கழல்போற்றி=கைகளை அஞ்சலியாகச் சிரசின்மேற் குவித்துத் திருவடிகளைவணங்கி; கலந்தவன்புகரைந்துருக=அதனிடத்திற் சேர்ந்த பேரன்பானது நெக்குருக; மெய்யில்வழியுங்கண்ணருவிவிரவ=அவ்வன்புகாரணமாகத் திருமேனியில் வழியாநின்ற ஆனந்தக்கண்ணீரருவி பெருக்கெடுக்க; பரவுஞ்சொன்மாலை=துதிக்கின்ற திருப்பதிகமாலையை; செய்யசடையார்தமைச்சேரார்=வீழிநாதரைச் சேராதார்; தீங்குநெறிசேர்கின்றாரென்று=தீநெறிக்கே சேர்கின்றாரென்று; உய்யுநெறித்தாண்டகமொழிந்து=வீட்டுநெறிக்குரிய திருத்தாண்டகத்தை யருளிச்செய்து; அங்கொழியாக்காதல்சிறந்தோங்க=அங்குநீங்காத பெருவிருப்பானது சிறந்தோங்க.-எ-று.

திருவீழிமிழலை - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

போரானையீருரிவைப் போர்வையானைப் புலியதளேயுடையாடைபோற்றினானைப், பாரானைமதியானைப் பகலானானைப் பல்லுயிராய்நெடுவெளியாய்ப் பரந்துநின்ற, நீரானைக்காற்றானைத் தீயானானைநினையாதார்புரமெரியநினைந்ததெய்வத், தேரானைத்திருவீழி மிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (க)

சவந்தாங்குமயானத்துச் சாம்பலென்பு தலையோடுமயிர்க்கயிறு தரித்தான்றன்னைப், பவந்தாங்குபாசுபத வேடத்தானைப் பண்டமரர்கொண்டுகந்த வேள்வியெல்லாங், கவர்ந்தானைக்கச்சியே கம்பன்றன்னைக் கழலடைந்தான்மேற்கறுத்த காலன்வீழச், சிவந்தானைத்திருவீழி மிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (உ)

அன்றாலின்கீழிருந்தங் கறஞ்சொன்னானை யகத்தியனையுகப்பானை யயன்மாறேட, நின்றானைக்கிடந்தகட னஞ்சுண்டானை நேரிழையைக்கலந்திருந்தே புலன்களைந்தும், வென்றானைமீயச்சூர் மேவினானை மெல்லியலாடவத்தினிறை யளக்கலுற்றுச், சென்றானைத்திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. (௩)

தூயானைச்சுடர்ப்பவளச் சோதியானைத் தோன்றியவெவ்வுயிர்க்குந்துணையாய்நின்ற, தாயானைச்சக்கரமாற் கீந்தான்றன்னைச் சங்கரனைச்சந்தோகசாமமோதும், வாயானைமந்திரிப்பார் மனத்துளானைவஞ்சனையாலஞ்செழுத்

தும் வழுத்துவார்க்குச், சேயானைத்திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (ச)

நற்றவத்தினல்லானைத் தீதாய்வந்த நஞ்சமுதுசெய்தானை யமுதமுண்ட, மற்றமரருலந்தாலு முலவாதானை வருகாலஞ்செல்கர்லம்வந்தகால, முற்றவத்தையுணர்ந்தாரு முணரலாகா வொருசுடரையிருவிசும்பி னூர்முன்றூன்றச், செற்றவனைத்திருவீழி மிழலையானைச்சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (ரு)

மைவானமிடற்றானை யவ்வான்மின்போல் வளர்சடைமேன்மதியானை மழையாயெங்கும், பெய்வானைப்பிச்சாடலாடுவானைப் பில்வாயபேய்க்கணங்க ளார்க்கச்சூலம், பொய்வானைப்பொய்யிலா மெய்யன்றன்னைப் பூதலமுமண்டலமும் பொருந்தும்வாழ்க்கை, செய்வானைத்திருவீழி மிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (சு)

மிக்கானைக்குறைந்தடைந்தார் மேவலானை வெவ்வேறாயிருமூன்று சமயமாகிப், புக்கானையெப்பொருட்கும் பொதுவானானைப் பொன்னுலகத்தவர்போற்றும் பொருளுக்கெல்லாந், தக்கானைத்தானன்றிவேறொன்றில்லாத் தத்துவனைத்தடவரையை நடுவுசெய்த, திக்கானைத் திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (எ)

வானவர்கோன்றோளிறுத்த மைந்தன்றன்னை வளைகுளமுமறைக்காடு மன்னினானை, யூனவனையுயிரவனை யொருநாட்பார்த்த னுயதவத்தினிலையறிய லுற்றுச்சென்ற, கானவனைக்கயிலாயமேவினானைக் கங்கைசேர்சடையானைக் கலந்தார்க்கென்றுந், தேனவனைத்திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (அ)

பரத்தானையிப்பக்கம் பலவானானைப் பசுபதியைப்பத்தர்க்கு முத்திகாட்டும், வரத்தானைவணங்குவார் மனத்துளானை மாருதமாலெரிமூன்று வாயம்பீர்க்கானஞ், சரத்தானைச்சரத்தையுந்தன் றாட்கீழ்வைத்ததபோதனனைச் சடாமகுடத் தணிந்தபைங்கட், சிரத்தானைத்திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (கூ)

அறுத்தானையயன்றலைக ளஞ்சிலொன்றை யஞ்சாதேவரையெடுத்த வரக்கன்றோள்க, ளிறுத்தானையெழுநரம்பி னிசைகேட்டானை யிந்துவினைத்தேய்த்தானை யிரவிதன்பற், பறித்தானைப்பகீரதற்கா வானோர்வேண்டப் பரந்திழியும்புனற்கங்கை பனிபோலாகச், செறுத்தானைத்திருவீழி மிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

முன்னாளயனுந்திருமாலு முடிவுமுதலுங்காணாத
பொன்னார்மேனிமணிவெற்பைப் பூநீர்மிழலையினிற்போற்றிப்
பன்னாள்பிரியாதிலைமையினாற் பயிலக்கும்பிட்டிருப்பாரா
யந்நாண்மறையோர்திருப்பதியி லிருந்தார்மெய்ம்மையருந்தவர்கள்.

(இ-ள்.) மெய்ம்மையருந்தவர்கள்—மெய்மையான அரியதவத்தையுடைய ஆளுடையபிள்ளையார் வாகீசர்என்னும் இருவரும்; முன்னாளயனுந்திருமாலும்—ஆதிகாலத்தில் திருமால் பிரமன் என்னும் இருவரும்; முடிவுமுதலுங்காணாத—அடியையும் முடியையும் தேடிக்காணாத; பொன்னார்மேனிமணிவெற்பை—அழகிய திருமேனியையுடைய மாணிக்கமலைபோலும் சிவபிரானை; பூநீர்மிழலையினிற்போற்றி—பூக்கள் மலரும் வாவிகளையுடைய திருவீழிமிழலையிற்றுதித்து; பன்னாள்பிரியாநிலைமையினால்—பலநாளும் நீங்காதநிலைமையோடு; பயிலக்கும்பிட்டிருப்பாராய்—பொருந்த வணங்கிக்கொண்டிருப்பாராய்; அந்நாண்மறையோர்திருப்பதியில்—அந்தநாளில் மறையவர்கள்வாழும் திருவீழிமிழலையினில்; இருந்தார்—எழுந்தருளி யிருந்தார்கள்.—எ-று.

முன்னாளென்றது இச்சுவேதவராக கற்பத்திற்கு முற்கற்பமென்க. அக்கற்பத்திலேயே இலிங்கவுருவாயிருந்த சிவபிரான் அடியையும் முடியையும் அவ்விருவரும் தேடிக்காணாதிருந்தனரெனப் புராணங்கூறுதலில். (௨௫௪)

சீரின்விளங்குந்திருத்தொண்ட ரிருந்துசிலநாட்சென்றதற்பின்
மாரிசுருங்கிவளம்பொன்னி நதியும்பருவமாறுதலும்
நீரினியன்றவுணவருகி நிலவும்பலமன்னுயிர்களெல்லாம்
பாரின்மலிந்தவிலம்பாட்டிற் படர்கூர்வறுமைபரந்ததால்.

(இ-ள்.) சீரின்விளங்குந்திருத்தொண்டரிருந்து—சிறப்பால் விளங்கிய அடியார்களிருவரும் திருவீழிமிழலையிலிருந்து; சிலநாட்சென்றதற்பின்—சிலநாள் சென்றபிறகு; மாரிசுருங்கிவளம்பொன்னிநதியும்பருவமாறுதலும்—மழைகுறைந்து அதனால் வளத்தோடு பருவகாலத்தில் மாறாதுவரும் காவிரியாறும் பருவத்தில் பெருகாது வறக்கவும்; நீரினியன்றவுணவருகி—அதனால் நீர் காரணமாக உண்டாகும் உணவுகள்குறைந்து; நிலவும்பலமன்னுயிர்களெல்லாம்—விளங்கிய பல உயிர்களும்; பாரில்மலிந்த விலம்பாட்டில்—அந்நாட்டிலுண்டான வறுமையினால்; படர்கூர்வறுமைபரந்தது—துயரமடைதற்கேதுவான பஞ்சகாலம் உண்டாயிற்று.—எ-று. ஆல்-அசை. (௨௫௫)

வையமெங்கும்வற்கடமாய்ச் செல்லவுலகோர்வருத்தமுற
நையுநாளிற்பிள்ளையார் தமக்குநாவுக்கரசினுக்குங்
கையின்மானுமழுவுமுடன் காணக்கனவிலெழுந்தருளிச்
செய்யசடையார்திருவீழி மிழலையுடையாரருள்செய்வார்.

(இ-ள்.) வையமெங்கும்வற்கடமாய்ச்செல்ல—அந்நாடு முழுதும் பஞ்சமுண்டாக; உலகோர்வருத்தமுறநையுநாளில்—அதனால் அந்நாட்டிலுள்ளோர் வருத்தம் மிகுதலால் வருந்தும்நாளில்; பிள்ளையார்தமக்குநாவுக்கரசினுக்கும்—ஆளுடையபிள்ளையாருக்கும் திருநாவுக்கரசுக்கும்; கையின்மானுமழுவுமுடன்காண—திருக்கரத்தில் மான்மழுவோடு காணும்படி; கனவிலெழுந்தருளி—கனவில் வெளிப்பட்டு; செய்யசடையார்—சிவந்த சடையையுடையவராகிய; திருவீழிமிழலையுடையார்—திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளும் சிவபிரான்; அருள்செய்வார்—அருளிச்செய்வாராயினார்.—எ-று. (௨௫௬)

காலநிலைமையாலுங்கள் கருத்தில்வாட்டமுறீரெனினும்
ஏலவும்மைவழிபடுவார்க் களிக்கவளிக்கின்றோமென்று
கோலங்காணவெழுந்தருளிக் குலவும்பெருமையிருவர்க்கு
ஞாலமறியப்படிக்காசு வைத்தார்மிழலைநாயகனார்.

(இ-ள்.) காலநிலைமையாலுங்கள்கருத்தில்=காலவேறுபாட்டால் உங்கள்மனதில்; வாட்டமுறிரெனினும்=வாட்டமடையீராயினும்; ஏலவும்மைவழிபடுவார்க்களிக்க=பொருந்தும் முறைமையால் உங்களை வழிபடும் பரிசனங்களுக்குக் கொடுக்க; அளிக்கின்றேமென்று=நாம் கொடுக்கின்றேமென்று; கோலங்காணவெழுந்தருளி=யாவரும் தம் திருக்கோலத்தைக்காணும்படி பூமியில் அவதரித்து; குலவும்பெருமையிருவர்க்கு=விளங்கும் பெருமையினையுடைய அவ்விருவருக்கும்; மிழலைநாயகனுர்=திருவீழிமிழலையின்கண் வீற்றிருந்தருளும் சிவபிரான்; ஞாலமறியப்படிக்காசுவைத்தார்=நிலவுலகத்தார் அறியும்படி படிக்காசுவைத்தருளினுர்.—எ-று. (உருஎ)

விண்ணின்றிழிந்தவிமானத்தின் கிழக்குமேற்கும்பீடத்தி
லண்ணல்புகலியாண்டகையார் தமக்குமாண்டவரசினுக்கு
நண்ணுநாள்கடொறுங்காசு படிவைத்தருளநானிலத்தி
லெண்ணிலடியாருடனமுது செய்தங்கிருந்தாரிருவர்களும்.

(இ-ள்.) விண்ணின்றிழிந்தவிமானத்தின்=விண்ணிழிவிமானத்தின்; கிழக்குமேற்கும்பீடத்தில்=கிழக்கிலும் மேற்கிலுமுள்ள பீடத்தில் முறையே; அண்ணல்புகலியாண்டகையார்தமக்கும்=பெருமையிற்சிறந்த ஆளுடையபிள்ளையாருக்கும்; ஆண்டவரசினுக்கும்=வாகீசமுனிவருக்கும்; நண்ணுநாள்கடொறுங்காசுபடிவைத்தருள=வரும் நாள்கடோறும் படிக்காசுவைத்தருள அதனுல்; நானிலத்திலெண்ணிலடியாருடன்=அகன்ற நிலவுலகத்தில் அளவில்லாத அடியார்களோடு; அமுதுசெய்தங்கிருந்தாரிருவர்களும்=திருவமுதுசெய்து இருவர்களும் அவ்விடத்தி லிருந்தார்கள்.—எ-று. (உருஅ)

அல்லார்கண்டத்தண்டர்பிரா னருளாற்பெற்றபடிக்காசு
பல்லாறியன்றவளம்பெருகப் பரமனடியாரானுர்க
ளெல்லாமெய்தியுண்கவென விரண்டுபொழுதும்பறைநிகழ்த்திச்
சொல்லாற்சாற்றிச்சோறிட்டார் துயர்கூர்வறுமைதொலைத்திட்டார்.

(இ-ள்.) அல்லார்கண்டத்தண்டர்பிரானருளால்=இருள்போலுங் கருநிறந்தங்கிய கண்டத்தையுடைய சிவபிரான் திருவருளினுல்; பெற்றபடிக்காசு=தாம்பெற்ற படிக்காசினுல்; பல்லாறியன்றவளம்பெருக=பலவாற்றானும் இயைந்த வளங்களுண்டாக; பரமனடியாரானுர்களெல்லாமெய்தியுண்கவென=சிவனடியார்கள் யாவரும் இங்குவந்து உண்ணக்கடவீரென்று; இரண்டுபொழுதும்பறைநிகழ்த்தி=இரண்டுபொழுதும் பறையடிப்பித்து; சொல்லாற்சாற்றி=சொல்லாலும் அழைத்து; சோறிட்டார்=அமுதிட்டார்களாய்; துயர்கூர்வறுமைதொலைத்திட்டார்=துயரம் மிக்கூர்தற்கேதுவான அடியார்கள் வறுமையை நீக்கினுர்கள்.—எ-று. (உருகூ)

ஈசர்மிழலையிறையவர்பா லிமயப்பாவைதிருமுலைப்பா
றேசமுய்யவுண்டவர்தாந் திருமாமகனுராதலினுற்
காசுவாசியுடன்பெற்றுர் கைத்தொண்டாகுமடிமையினுல்
வாசியில்லாக்காசுபடி பெற்றுவந்தார்வாகீசர்.

(இ-ள்.) ஈசர்மிழலையிறையவர்பால்=மிழலைநாதராகிய சிவபிரானிடத்து; இமயப்பாவைதிருமுலைப்பால்=உமையம்மையினது திருமுலைப்பாலை; தேசமுய்யவுண்டவர்தாம்=உலகத்தாரீடேற உண்டருளிய ஆளுடையபிள்ளையார்; திருமாமகனுராதலினுல்=திருக்குமாரராதலின்; காசுவாசியுடன்பெற்றுர்=வட்டத்துடன் படிக்காசைப்பெற்றுர்;

கைத்தொண்டாகுமடிமையினால்=திருமேனிவருந்தக் கைத்தொண்டுசெய்யும் அடிமைத்தன்மையினால்; வாகீசர்வாசியில்லாக்காசுபடிபெற்றுவந்தார்=வாகீசமுனிவர் வாசியில்லாத படிக்காசைப்பெற்றுவந்தார்.—எ-று.

இதனால் திருமேனிவருந்தக் கைத்தொண்டுசெய்தலும் திருமேனிவருந்தாது மகனொன்னும் பெருந்தன்மையோடிருத்தலுமாகிய வேறுபாடுவிளக்கிய வாசியோடும் வாசியின்றியும் மிழலைநாதர் கொடுத்தனரென்றுகொள்க. (உசுo)

ஆறுசடைமேலணிந்தருளு மண்ணல்வைத்தபடிக்காசா
லீறிலாதபொருளுடைய விருவருடையதிருமடங்கள்
சோறுநாளுந்தொண்டர்மகிழ்ந் துண்ணவுண்ணத்தொலையாதே
யேறுபெருமைபுவிபோற்ற வின்புற்றிருக்குமந்நாளில்.

(இ-ள்.) ஆறுசடைமேலணிந்தருளும்=கங்காநதியைத் திருமுடியின்மேல் தரித்தருளும்; அண்ணல்வைத்தபடிக்காசால்=சிவபிரான் வைத்தருளிய படிக்காசினால்; ஈறிலாதபொருளுடைய=குறையாத சம்பத்தையுடைய; இருவருடையதிருமடங்கள்=ஆளுடையபிள்ளையார் திருநாவுக்கரசர் என்னும் இவ்விருவர்களது திருமடங்களில்; சோறுநாளுந்தொண்டர்மகிழ்ந்துண்ணவுண்ணத்தொலையாது=சோற்றை நாள்தோறும் அடியார்கள் மகிழ்ந்து திருவமுதுசெய்யுந்தோறுங் குறையாமல்; ஏறுபெருமைபுவிபோற்ற=வளரும்பெருமையை உலகத்தார் புகழும்படி; இன்புற்றிருக்குமந்நாளில்=இன்பமடைந்திருக்கும் அந்நாளில்.—எ-று. ஏ-அசை. (உசுக)

காலந்தவறுதீர்ந்தெங்குங் கலிவான்பொழிந்தபுனல்கலந்து
ஞாலமெல்லாங்குளிர்தூங்கி யுணவுபெருகிநலஞ்சிறப்ப
மூலவன்பரிருவர்களு மொழிமாலைகளும்பலசாத்தி
நீலகண்டருறைபதிகள் பிறவும்வணங்கநினைவுற்றார்.

(இ-ள்.) காலந்தவறுதீர்ந்து=காலவேறுபாடொழிந்து; எங்குங்கலிவான்பொழிந்தபுனல்கலந்து=எவ்விடத்தும் ஒலியையுடைய மேகங்கள்பொழிந்த நீரானதுகூடி; ஞாலமெல்லாங்குளிர்தூங்கி=நாடுமுழுதுங் குளிர்ந்து; உணவுபெருகிநலஞ்சிறப்ப=உணவுக்குரிய தானியங்கள் விளைந்துவளமோங்க; மூலவன்பரிருவர்களும்=அன்புக்குக் காரணமான அவ்விருவர்களும்; மொழிமாலைகளும்பலசாத்தி=பல திருப்பதிகமாலைகளையும் சாத்தி; நீலகண்டருறைபதிகள்பிறவும்=சிவபிரான் வீற்றிருந்தருளும் திருப்பதிகள் பிறவற்றையும்; வணங்கநினைவுற்றார்=வணங்கும்படி நினைத்தார்கள்.—எ-று.

இவ்விரண்டும் குளகம். (உசுஉ)

வாய்ந்தமிழலைமாமணியை வணங்கிப்பிரியாவிடைகொண்டு
பூந்தண்புனல்சூழ்வாஞ்சியத்திற் றங்கிப்புனிதர்வான்பதிக
ளேய்ந்தவன்பினாலிறைஞ்சி யிசைவண்டமிழ்கள்புனைந்துபோய்ச்
சேர்ந்தார்செல்வத்திருமறைக்கா டெல்லையில்லாச்சீர்த்தியினார்.

(இ-ள்.) வாய்ந்தமிழலைமாமணியைவணங்கி=திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளும் சிவபிரானைவணங்கி; பிரியாவிடைகொண்டு=நீங்காத விடையைப்பெற்றுக்கொண்டு; பூந்தண்புனல்சூழ்வாஞ்சியத்திற்றங்கி=மலர்களையுடைய குளிர்ந்தநீர் சூழ்ந்த திருவாஞ்சியத்தில் எழுந்தருளியிருந்து; புனிதர்வாழ்பதிகளேய்ந்தவன்பினாலிறைஞ்சி=சிவபிரான் வீற்றிருந்தருளும் திருப்பதிகள் பலவற்றையும் உள்ளத்துக்கலந்த பேரன்போடு

வணங்கி; இசைவண்டமிழ்கள்புனைந்துபோய்=இசையோடுகூடிய வளவிய தமிழ்ப்பதிகங்களைப் பாடிப்போய்; எல்லையில்லாச்சீர்த்தியினார்=வரம்பிகந்த புகழையுடைய அவ்விருவரும்; செல்வத்திருமறைக்காடுசேர்ந்தார்=செல்வம் நிறைந்த திருமறைக்காட்டையடைந்தார்கள்.—எ-று. (உசுரு)

மன்றல்விரவுமலர்ப்புன்னை மணஞ்சூழ்சோலையுப்பளத்தின்
முன்றிற்றோறுஞ்சிறுமடவார் முத்தங்கொழிக்குமறைக்காட்டுக்
குன்றவில்லியார்மகிழ்ந்த கோயில்புகுந்துவலங்கொண்டு
சென்றுசேர்ந்தார்தென்புகலிக் கோவுமரசுந்திருமுன்பு.

(இ-ள்.) மன்றல்விரவுமலர்ப்புன்னை=வாசனைவீசுகின்ற மலர்களையுடைய புன்னைமரங்களையும்; மணஞ்சூழ்சோலையுப்பளத்தின்=மணங்கமழ்கின்ற பிறசோலைகளையுமுடைய கழிநிலத்தின்; முன்றிற்றோறுஞ்சிறுமடவார்முத்தங்கொழிக்கும்=முற்றங்கள்தோறும் சிறியபரதவச்சிறுமிகள் முத்தைக்கொழித்து விளையாடும்; மறைக்காட்டுக்குன்றவில்லியார்மகிழ்ந்த=திருமறைக்காட்டில் சிவபிரான் வீற்றிருந்தருளும்; கோயில்புகுந்துவலங்கொண்டு=கோயிலிற்சென்று வலமாகவந்து; தென்புகலிக்கோவுமரசும்=ஆளுடையபிள்ளையாரும் ஆண்டவரசும்; திருமுன்புசென்றுசேர்ந்தார்=சந்நிதியிற் சென்றார்கள்.

பரவையோதக்கழிக்கானற் பாங்குநெருங்குமப்பதியி
லரவச்சடையந்தணனாரை யகிலமறைகளர்ச்சனைசெய்
துரவக்கதவந்திருக்காப்புச் செய்தவந்நாண்முதலிந்நாள்
வரையுமடைத்தேநிற்கின்ற மணிநீள்வாயில்வணங்குவார்.

(இ-ள்.) பரவையோதக்கழிக்கானற்பாங்கு=கடலின் பெருக்கையுடைய கழிநிலத்தில்; நெருங்குமப்பதியில்=அடுத்திருக்கும் அத்திருப்பதியில் வீற்றிருந்தருளும்; அரவச்சடையந்தணனாரை=பாம்பையணிந்த சடையையுடைய சிவபிரானை; அகிலமறைகளர்ச்சனைசெய்து=நான்குவேதங்களும் பூசித்து; உரவக்கதவந்திருக்காப்புச்செய்த=வலியகதவைத் திருக்காப்புச்செய்த; அந்நாள்முதலிந்நாள்வரையும்=அந்தநாள்முதல் இந்தநாளளவும், அடைத்தேநிற்கின்ற=அடைத்திருக்கின்ற; மணிநீள்வாயில்வணங்குவார்=அழகிய திருவாயிலை வணங்குவாராயினர்.—எ-று. (உசுசு)

தொல்லைவேதந்திருக்காப்புச் செய்தவாயிற்றொடர்வகற்ற
வல்லவன்பரணையாமை மருங்கோர்வாயில்வழியெய்தி
யல்லறீர்ப்பார்தமையருச்சிப் பார்கடொழுவாராம்படிகண்
டெல்லையில்லாப்பெரும்புகழா ரிதனையங்குக்கேட்டறிந்தார்.

(இ-ள்.) தொல்லைவேதந்திருக்காப்புச்செய்தவாயிற்றொடர்வகற்ற=பழயவேதங்கள் திருக்காப்பிட்ட திருவாயிலின் பிணிப்பைத்திறக்க; வல்லவன்பரணையாமை=வல்லமையுடைய அடியார்கள் வராமையால்; மருங்கோர்வாயில்வழியெய்தி=அதன் தென்பாலிட்ட ஓர்வாயிலின் வழியேசென்று; அல்லறீர்ப்பார்தமையருச்சிப்பார்கடொழுவாராம்படிகண்டு=பிறவித்துன்பத்தை நீக்கியருளும் சிவபிரானைப் பூசிப்பார்களாயும் வணங்குவாராயு மிருக்குமுறைமையைக்கண்டு; எல்லையில்லாப்பெரும்புகழாரிதனையங்குகேட்டறிந்தார்=அளவுபடாத பெரும்புகழினையுடைய ஆளுடையபிள்ளையாரும் வாகீசமுனிவரும் இச்செய்தியை அங்குள்ளாரை யாதென்று வினவியறிந்தார்கள்.-எ-று.

ஆங்கப்படியையறிந்தருளி யாழித்தோணிபுரத்தரச
ரோங்கும்வேதமருச்சனைசெ யும்பர்பிரானையுள்புக்குத்

தேங்காதிருவோநேரிறைஞ்சத் திருமுன்கதவந்திருக்காப்பு
நீங்கப்பாடுமெப்பரென நீடுந்திருநாவுக்கரசர்.

(இ-ள்.) ஆங்கப்படியையறிந்தருளி=அவ்விடத்து வேதம் திருக்காப்பிட்ட செய்தியையறிந்து; ஆழித்தோணிபுரத்தரசர்=கடலின்கண் மிதந்த சீகாழியில் வீற்றிருந் தருளும் ஆளுடையபிள்ளையார்;ஓங்கும்வேதமருச்சனைசெயும்பர்பிரானை=உயர்ந்த வேத ங்கள் பூசைசெய்த சிவபிரானை; உள்புக்குத்தேங்காதிருவோநேரிறைஞ்ச=திருவாயிலி னுள்ளே புகுந்து வருந்தாது இருவோரும் நேரேவணங்கும்படி; திருமுன்கதவந்திருக் காப்புநீங்கப்பாடுமெப்பரென=திருமுன்னேநின்று திருக்கதவம் திருக்காப்பு நீங்கும்படி அப்பரே பாடுவீரென்றருளிச்செய்ய; நீடுந்திருநாவுக்கரசர்=உயர்ந்த வாகீசமுனிவர். ()

உண்ணீர்மையினாற்பிள்ளையா ருரைசெய்தருளவதனாலே
பண்ணினேருமொழியாளென் றெடுத்துப்பாடப்பயன்றுய்ப்பான்
றெண்ணீரணிந்தார்திருக்காப்பு நீக்கத்தாழ்க்கத்திருக்கடைக்காப்
பெண்ணீரிரக்கமில்லீரே யென்றுபாடியிறைஞ்சுதலும்.

(இ-ள்.) உண்ணீர்மையினாற்பிள்ளையார்=திருவுள்ளத்துக்கலந்த பேரன்பினால் ஆளுடையபிள்ளையார்; உரைசெய்தருளவதனால்=அருளிச்செய்ய அவர் கட்டளையால்; பண்ணினேருமொழியாளென்றெடுத்துப்பாட=பண்ணினேரு மொழியாளென்று முத லெடுத்துத் திருப்பதிகத்தைப்பாடியருள; பயன்றுய்ப்பான்=வாகீசமுனிவர் ஓர்பயனை யடையும்பொருட்டு; தெண்ணீரணிந்தார் திருக்காப்புநீக்கத்தாழ்க்க=தெளிவான கங் கைநதியைத்தரித்த சிவபிரான் திருக்கதவந்திருக்காப்பு நீக்குதலுக்குச் சிறிதுகாலம் நீட் டிக்கச்செய்ய; எண்ணீரிரக்கமில்லீரோயென்று=அதனால் யாம் பாடுதலைக் கருதீர் இரக் கமிலீரொன்று; திருக்கடைக்காப்புப்பாடியிறைஞ்சுதலும்=திருக்கடைக்காப்புப்பாடி வணங்குதலும்.—எ-று. ஏ-அசை.

சிவபிரான், ஆளுடையபிள்ளையார் தொண்டின்மேன்மை விளக்குங்காரணமாக ஒரு திருப்பாட்டில் அடைத்தல் திருவாய்மூருக்கு வரச்சொல்லி வழிகாட்டிமுன்சென்று மறைதல் முதலியன இவர்பயன்கருதிச்செய்தலில் பயன்றுய்த்தலாயிற்று. (உ௬அ)

திருமறைக்காடு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஓதமால்கடல்பரவியுலகெலா
மாதரார்வலங்கொண்மறைக்காடனைக்
காதல்செய்துகருதப்படுமவர்
பாதமேத்தப்பறையுநம்பாவமே. (க)

பூக்குந்தாழைபுறணியருகெலா
மாக்கந்தானுடைமாமறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரியாரடியார்தம்மை
நோக்கிக்காண்பதுநும்பணிசெய்யிலே. (உ)

புன்னைநாழல்புறணியருகெலா
மன்னினார்வலங்கொண்மறைக்காடரோ
வன்னமென்னடையாளையோர்பாகமாச்
சின்னவேடமுகப்பதுசெல்வமே. (௩)

அட்டமாமலர்சூடியடம்பொடு
வட்டப்புன்சடைமாமறைக்காடரோ
நட்டமாடியுநான்மறைபாடியு
மிட்டமாகவிருக்குமிடமதே. (௪)

நெய்தலாம்பல்நிறைவயல்சூழ்தரு
மெய்யினார்வலங்கொள்மறைக்காடரோ
தையல்பாகங்கொண்டீர்கவர்புன்சடைப்
பைதல்வெண்பிறைபாம்புடன்வைப்பதே. (௫)

துஞ்சும்போதுந்துயிலின்றியேத்துவார்
வஞ்சின்றிவலங்கொள்மறைக்காடரோ
பஞ்சின்மெல்லடிப்பாவைபலிகொணர்ந்
தஞ்சிநிற்பதுமைந்தலைநாகமே. (௬)

விண்ணுளார்விரும்பியெதிர்கொள்ளவே
மண்ணுளார்வணங்கும்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. (௭)

திருவினார்செல்வமல்குவிழாவணி
மருவினார்வலங்கொண்மறைக்காடரோ
வுருவினாளுமையாளையோர்பாகமாய்
மருவினாய்கங்கையைச்சென்னிதன்னிலே. (௮)

சங்குவந்தலைக்குந்தடங்கானல்வாய்
வங்கமார்வலங்கொண்மறைக்காடரோ
கங்கைசெஞ்சடைவைப்பதுமன்றியே
யங்கையில்லனலேந்தலழகிதே. (௯)

குறைக்காட்டான்விட்டகோகுத்தமாமலை
யிறைக்காட்டியெடுத்தான்றலையீரைந்து
மறைக்காட்டானிறையூன்றலும்வாய்விட்டா
னிறைக்காட்டாயெம்பிரானுனையேத்தவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருமறைக்காடு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழி யாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ் செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக் காணக்கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள்செய்ம்மினே. (௧)

ஈண்டுசெஞ்சடை யாகத்துளீசரோ
மூண்டகார்முகி லின்முறிக்கண்டரோ
வாண்டுகொண்டநீ ரேயருள்செய்திடும்
நீண்டமாக்கத வின்வலிநீக்குமே. (௨)

அட்டமூர்த்திய தாகியவப்பரோ
துட்டர்வான்புரஞ் சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டிய சென்னிப்பரமரோ
சட்டவிக்கதவந் திறப்பிம்மினே. (கூ)

அரியநான்மறை யோதியநாவரோ
பெரியவான்புரஞ் சுட்டசுவண்டரோ
விரிகொள்கோவண வாடைவிருத்தரோ
பெரியவான்கத வம்பிரிவிக்கவே. (ச)

மலையில்நீடிருக்கும் மறைக்காடரோ
கலைகள்வந்திறைஞ் சுங்கழலேத்தரோ
விலையில்மாமணி வண்ணவுருவரோ
தொலைவிலாக்கத வந்துணைநீக்குமே. (ரு)

பூக்குந்தாழை புறணியருகெலா
மாக்குந்தண்பொழில் சூழ்மறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரி யீரடிகேளுமை
நோக்கிக்காணக் கதவைத்திறவுமே. (சு)

வெந்தவெண்பொடிப் பூசும்விகிர்தரோ
வந்தமில்லி யணிமறைக்காடரோ
எந்தைநீயடியார் வந்திறைஞ்சிட
விந்தமாக்கத வம்பிணிநீக்குமே. (எ)

ஆறுசூடு மணிமறைக்காடரோ
கூறுமாதுமைக் கீந்தகுழகரோ
ஏறதேறிய வெம்பெருமானிந்த
மாறிலாக்கத வம்வலிநீக்குமே. (அ)

சுண்ணவெண்பொடிப் பூசுஞ்சுவண்டரோ
பண்ணியேறுகந் தேறும்பரமரோ
வண்ணலாதி யணிமறைக்காடரோ
திண்ணமாக்கத வந்திறப்பிம்மினே. (கூ)

அரக்கனைவிர லாலடர்த்திட்டநீ
ரிரக்கமொன்றிலீ ரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள் சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கத வந்திறப்பிம்மினே. (கo)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மறைக்காட்டீசர், தேவியார்-யாழைப்பழித்தநாயகி.



அப்பர்சுவாமிகளும் திருஞானசம்பந்தசுவாமிகளும் திருமறைக்காடடைந்து வேதம்பூசித்துச்சாத்திவிட்ட கதவை திறக்கப்பதிகமோதும்படி திருஞானசம்பந்தசுவாமிகள் திருநாவுக்கரசுசுவாமிகளை வேண்ட அவர் பதிகமோதித்திறந்தனர்.

வேதவனத்தின்மெய்ப்பொருளி னருளால்விளங்குமணிக்கதவங்
காதலன்பர்முன்புதிருக் காப்புநீங்கக்கலைமொழிக்கு
நாதர்ஞானமுனிவருடன் றொழுதுவிழுந்தார்ஞாலத்து
ளோதவொலியின்மிக்கெழுந்ததும்பரார்ப்புமறையொலியும்.

(இ-ள்.) வேதவனத்தின்மெய்ப்பொருளினருளால்—திருமறைக்காட்டில் வீற்றிருந்தருளும் சிவபிரான் திருவருளினால்; விளங்குமணிக்கதவம்—விளக்கமான மணிகளழுத்திய திருக்கதவமானது; காதலன்பர்முன்பு திருக்காப்புநீங்க—பேரன்பையுடைய திருவடியார் முன்பு திருக்காப்புத்திறக்க; கலைமொழிக்குநாதர்ஞானமுனிவருடன்தொழுதுவிழுந்தார்—எல்லா நூற்பொருளுக்கும் முதல்வராகிய ஆளுடையபிள்ளையார் வாகீசமுனிவரோடு நிலமுறவிழுந்து வணங்கினார்; ஞாலத்துள் உம்பரார்ப்புமறையொலியும்—நிலவுலகத்துள் தேவர்கள் வாழ்த்தும் ஆரவாரமும் வேதங்களியல்பாயொலிக்குமொலியும்; ஓதவொலியின்மிக்கெழுந்தது—கடலொலியினும் அதிகமாகக்கிளர்ந்தது. ()

அன்பரீட்டங்களிசிறப்ப வாண்டவரசுஞ்சிவக்கன்று
மின்பவெள்ளத்திடைமூழ்கி யெழுந்துள்புகுந்துதம்பெருமான்
முன்புபணிந்துபோற்றிசைத்துப் பரவிமொழிமாலைகள்பாடி
யென்புகரையவுள்ளுருகி யிறைஞ்சியரிதிற்புறத்தணைந்தார்.

(இ-ள்.) அன்பரீட்டங்களிசிறப்ப—அடியார்கூட்டம் மகிழ்ச்சி மீக்கூர; ஆண்டவரசுஞ்சிவக்கன்றும்—வாகீசமுனிவரும் ஆளுடையபிள்ளையாரும்; இன்பவெள்ளத்திடைமூழ்கியெழுந்து—பேரானந்தவெள்ளத்தில் முழுகி எழுந்து; உள்புகுந்து—ஆலயத்தினுள் புகுந்து; தம்பெருமான்முன்புபணிந்துபோற்றிசைத்து—தமது முதல்வராகிய சிவபிரான் திருமுன்பு வணங்கித்துதித்து; மொழிமாலைகள்பரவிப்பாடி—திருப்பதிகமாலைகளைப் புகழ்ந்துபாடி; என்புகரையவுள்ளுருகியிறைஞ்சி—எலும்பு நெக்குருகும்படி திருவுள்ளங்கனிந்து வணங்கிக்கொண்டு; அரிதிற்புறத்தணைந்தார்—பிரிவாற்றாமையோடு புறம்பே எழுந்தருளினார்கள்.—எ-று.

தொழுது விழுந்தாரென முற்செய்யுளிற் கூறினமையின் ஈண்டு எழுந்து என்றதற்கு வணங்கியபின் எழுந்து என்று பொருள்கொள்க. (உ௭௦)

புறம்புநின்றவாகீசர் புனிதரருளாலிக்கதவந்
திறந்துமடைத்துஞ்செல்லுநெறி திருந்தமலையாடிருமுலையிற்
கறந்தஞானங்குழைத்தமுது செய்தபுகலிக்கவுணியரை
நிறைந்தகதவமடைக்கும்வகை நீரும்பாடியருளுமென.

(இ-ள்.) புறம்புநின்றவாகீசர்—திருவாயிலின் புறம்பேநின்ற வாகீசமுனிவர்; புனிதரருளாலிக்கதவம்—சிவபிரான் திருவருளால் இத்திருக்கதவம்; திறந்துமடைத்துஞ்செல்லுநெறிதிருந்த—நாடோறும் திறந்தும் அடைத்தும்வரும் முறைமை வழக்கமாம்படி; மலையாடிருமுலையிற்கறந்தஞானங்குழைத்து—பார்ப்பதியாரது திருமுலையினின்றும் கறந்த பாலோடு சிவஞானத்தைச்சேர்த்து; அமுதுசெய்தபுகலிக்கவுணியரை—அமுதுசெய்தருளிய ஆளுடையபிள்ளையாரை; நிறைந்தகதவமடைக்கும்வகை—நிறைவான திருக்கதவை அடைக்கும்வண்ணம்; நீரும்பாடியருளுமென—தேவரீரும் பாடியருளுமென்று சொல்ல.—எ-று. (உ௭௧)

சண்பையாளுந்தமிழ்விரகர் தாமுந்திருநாவுக்கரசர்
பண்பின்மொழிந்தவுரைகொண்டு பதிகம்பாடுமவ்வளவிற்
கண்பொற்பமைந்தநுதற்காள கண்டரருளாற்கடிதுடனே
திண்பொற்கதவந்திருக்காப்புச் செய்ததெடுத்ததிருப்பாட்டில்.

(இ-ள்.) சண்பையாளுந்தமிழ்விரகர்தாமும்=சீகாழித்திருப்பதிக்கு முதல்வராகிய ஆளுடையபிள்ளையாரும்; திருநாவுக்கரசர்பண்பின்மொழிந்தவுரைகொண்டு=வாகீசமுனிவர் பண்போடருளிய திருவாக்கைக்கொண்டு; பதிகம்பாடுமவ்வளவில்=திருப்பதிகத்தை யருளிச்செய்யுங்கால்; கண்பொற்பமைந்நுதற்காளகண்டரருளால்=கண்ணினால் அழகமைந்த நுதலையுடைய நீலகண்டராகிய சிவபிரான் திருவருளினால்; எடுத்த திருப்பாட்டில்=முதலில் அருளிய திருப்பாட்டிலே; கடிதுடனேதிண்பொற்கதவந்திருக்காப்புச்செய்தது=விரைந்து உடனே திண்ணிய பொன்மயமான திருக்கதவமானது திருக்காப்புச்செய்யப்பட்டது.—எ-று. (உஎஉ)

அதுகண்டுடையபிள்ளையார் தாமுமாண்டவரசுமகிழ்ந்
திதுநம்பெருமானருள்செய்யப் பெற்றோமென்றங்கிறைஞ்சியபின்
பதிகநிரம்பப்பிள்ளையார் பாடித்தொழுதுபணிவுற்றார்
எதிர்பொற்றிருவாயிலின்வழக்க மென்றுநிகழ்ச்சியெய்தியதால்.

(இ-ள்.) அதுகண்டுடையபிள்ளையார்தாமும்=அதைக்கண்டு ஆளுடையபிள்ளையாரும்; ஆண்டவரசுமகிழ்ந்து=வாகீசமுனிவரும் மகிழ்ச்சியடைந்து; இதுநம்பெருமானருள்செய்யப்பெற்றோமென்று=இப்பேற்றை நமது சிவபிரான் அருள்செய்யும்படி பெற்றுக்கொண்டோமென்று; அங்கிறைஞ்சியபின்=அவ்விடத்து வணங்கியபின்பு; பதிகநிரம்பப்பிள்ளையார்பாடி=பதிகமுழுதும் ஆளுடையபிள்ளையார் பாடியருளி; தொழுதுபணிவுற்றார்=தொழுது வணங்கினார்; எதிர்பொற்றிருவாயிலின்வழக்கம்=எதிரிலுள்ள திருவாயிலின் முன்னேசென்று மீளும் வழக்கம்; என்றுநிகழ்ச்சியெய்தியது=எந்நாளும் நடந்துவந்தது.—எ-று. ஆல்-அசை.

முன் உண்ணீர்மையினாற் பிள்ளையாருரைசெய்தருள என்றதனாலும் பின் சண்பையாளுந் தமிழ்விரகர் என்னும் செய்யுளில் நாவுக்கரசர் பண்பின்மொழிந்த வுரைகொண்டு என்றதனாலும் இவ்விருவரும் திருவுள்ளக்கலப்புடையாரென்பது பெறப்படும். அவ்வாறாகப் பிள்ளையார் திருத்தொண்டைச் சிறப்பிக்குங்கருத்தால் பிரானார் கருத்தில் சிறிது வேற்றுமை யிருந்ததெனக்கொள்க. பிரானார்க்கு வேற்றுமைகாட்டுங் கருத்துண்மை அரிதிற்றிறக்க என்னும் செய்யுளிற்காண்க. எதிர்பொற்றிருவாயிலின் வழக்கம் என்றதனால் முதற்பிரகாரத்தின் சந்நிதிவாயில் அடைக்கப்பட்டிருந்ததென்றும் அதனையே திறக்கவும் அடைக்கவும் பாடினரென்றுங்கொள்க. அடைத்திருக்குங்கால் தெற்குமதிலில் ஓர்வாயில் சோழராஜனால் விடப்பட்டு வழங்கிவந்ததென்று அத்தலத்தில் ஐதிகமாகக்கூறுவர். (உஎங)

அங்குநிகழ்ந்தவச்செயல்கண் டடியாரெல்லாமதிசயித்துப்
பொங்குபுளகமெய்திடமெய் பொழியுங்கண்ணீர்பரந்திழிய
எங்குநிகரொன்றில்லாத விருவர்பாதமிறைஞ்சினார்
நங்கள்புகலிப்பெருந்தகையு மரசுமடத்தினண்ணியபின்.

(இ-ள்.) அங்குநிகழ்ந்தவச்செயல்கண்டு=அவ்விடத்து நிகழ்ந்த அரிய செய்கையைப்பார்த்து; அடியாரெல்லாமதிசயித்து=அடியவர்களெல்லாம் அதிசயித்து; பொங்கு

புளகமெய்திட=மிக்க மயிர்க்கூச்சுண்டாக; மெய்பொழியுங்கண்ணீர்பரந்திழிய=திருமேனியில் சொரியும் ஆனந்தக்கண்ணீர் ஆறுய்ப்பெருக; எங்குநிகரொன்றில்லாத=எவ்விடத்தும் தமக்கு நிகராக ஒருபொருளையும் எடுத்துக்கூறப்படாத; இருவர்பாதமிறைஞ்சினர்=அவ்விருவர் திருவடிகளையும் வணங்கினர்கள்; நங்கள்புகலிப்பெருந்தகையும் அரசுமடத்தினண்ணியபின்=நமது ஆளுடையபிள்ளையாரும் ஆண்டவரசும் திருமடத்திற்குச் சென்றபின்பு.—எ-று. (உஎச)

அரிதிற்றிறக்கத்தாம்பாட வடைக்கவவர்பாடியவெளிமை
கருதிநம்பர்திருவுள்ள மறியாதயர்ந்தேனெனக்கவன்று
பெரிதுமஞ்சித்திருமடத்தி லொருபாலடைந்துபேழ்கணித்து
மருவுமுணர்விற்றுயில்கொண்டார் வாய்மைதிறம்பாவாகீசர்.

(இ-ள்.) அரிதிற்றிறக்கத்தாம்பாட=தாம் பாடுங்கால் கதவம் அரிதிற்றிறக்கவும்; அவரடைக்கப்பாடியவெளிமைகருதி=ஆளுடையபிள்ளையார் அதை அடைக்கப்பாடிய எளிமையைக்கருதி; நம்பர்திருவுள்ளமறியாதயர்ந்தேனெனக்கவன்று=சிவபிரான் திருவுள்ளம் இவ்வாறென்றறியாமல் இயற்றினேனென்று கவலையுற்று; பெரிதுமஞ்சி=தம்பிழைக்கு மிகவும் பயந்து; திருமடத்திலொருபாலடைந்து=திருமடத்தின் ஓர்பகுதியிலிருந்து; பேழ்கணித்துமருவுமுணர்விற்றுயில்கொண்டார்=தம்பிழைகுறித்துச் சிந்தித்து அப்பொழுதுநிகழ்ந்த அறிதுயில்செய்தார்; வாய்மைதிறம்பாவாகீசர்=உண்மைநிலையில் வழாத வாகீசமுனிவர்.— எ-று.

அரிதிற்றிறக்கத்தாம்பாட என்னுங்கால் திறக்கத்தாம் அரிதிற்பாட எனக்கொண்டு கூட்டியுரைத்தலுமொன்று. அரிதிற்றிறத்தல் இரக்கமொன்றிலீரொன வருந்திப்பாடத் திறத்தல். நம்பர்திருவுள்ளமறியாமை=இக்காரணத்தால் பிள்ளையார் திறக்கத்தாம் அடைக்கவேண்டுமென்னும் முறைமை யறியாமை, அயர்தல்=செய்தல், பெரிதுமஞ்சுதல்=அப்பிழைகாரணத்தால் அச்சமுறல், பேழ்கணித்தல்=தம்பிழைகருதிச்சிந்தித்தல். "பிற்பானின்று பேழ்கணித்தாற் பெறுதற்கரியன்பெம்மானே" என்னும் திருவாசகத்தானுமுணர்க. உணர்விற்றுயில்=அறிதுயில், யோகநித்திரையெனினுமமையும். இவ்விரண்டுங்குளகம். (உஎரு)

மன்னுஞ்செல்வமறைக்காட்டு மணியின்பாதமனத்தின்க
ணுன்னித்துயிலும்பொழுதின்க ணுமையோர்பாகமுடையவர்தாம்
பொன்னின்மேனிவெண்ணீறு புனைந்தகோலப்பொலிவினொடுந்
துன்னியவர்க்குவாய்மூரி லிருப்போந்தொடரவாவென்றார்.

(இ-ள்.) மன்னுஞ்செல்வமறைக்காட்டுமணியின்பாதம்=நிலைபெற்ற செல்வம் நிறைந்த வேதாரணியத்தில் எழுந்தருளியிருக்கும் மணவாளேசுரரது திருவடிகளை; மனத்தின்கணுன்னித்துயிலும்பொழுதின்கண்=மனதில் தியானித்து அறிதுயில்செய்யும் சமயத்து; உமையோர்பாகமுடையவர்தாம்=உமாதேவியை ஓர்பாகத்திலுடைய சிவபிரான்; பொன்னின்மேனி=பொன்போலும் திருமேனியினிடத்து; வெண்ணீறுபுனைந்த=வெள்ளிய விபூதியணிந்த; கோலப்பொலிவினொடுந்துன்னி=திருக்கோலப் பொலிவோடெழுந்தருளி; அவர்க்குவாய்மூரிலிருப்போம்=அவ்வாகீசமுனிவர்க்குத் திருவாய்மூரில் வீற்றிருந்தருளுவோம்; தொடரவாவென்றார்=நம்மைப் பின்தொடர்ந்துவாவென்றருளிச்செய்தார்.—எ-று. (உஎசு)

போதநிகழவாவென்று போனாரென்கொலெனப்பாடி
யீதெம்பெருமானருளாகில் யானும்போவேனென்றெழுந்து

வேதவனத்தைப்புறப்பட்டு விரைந்துபோகவவர்முன்னே
யாதிமூர்த்திமுன்காட்டு மவ்வேடத்தாலெழுந்தருள.

(இ-ள்.) போதநிகழவாவென்றுபோனார்=நாம் செல்லத்தொடர்ந்துவாவென்று அருளிச்செய்துபோனார்; என்கொலெனப்பாடி=ஈதென்கொலென்று பதிகம்பாடி; (அதாவது வாவென்றுபோனாரதென்கொலோ என்றபடி) ஈதெம்பெருமானருளாகில்= இது எமது சிவபிரான் திருவருளாகில்; யானும்போவேனென்றெழுந்து=அடியேனும் அவ்வாறே செல்வேனென்றெழுந்து; வேதவனத்தைப்புறப்பட்டு=வேதாரணியத்தினின்றும் நீங்கி; விரைந்துபோக=விரைவாகப் பின் தொடர்ந்துசெல்ல; அவர்முன்னே=அவ்வாகீசருக்கு முன்பாக; ஆதிமூர்த்தி=யாவர்க்கும் முதல்வராகிய சிவபிரான்; முன்காட்டும்=முன்பு அவ்வாகீசமுனிவர்க்குச் சொற்பனத்திற்காட்டிய; அவ்வேடத்தாலெழுந்தருள=அத்திருக்கோலத்துடனே எழுந்தருள.—எ-று. (உஎஎ)

திருவாய்மூர்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எங்கேயென்னை யிருந்திடந்தேடிக்கொண்
டங்கேவந்தடை யாளமருளினார்
தெங்கேதோன்றுந் திருவாய்மூர்ச்செல்வனா
ரங்கேவாவென்று போனாரதென்கொலோ. (க)

மன்னுமாமறைக் காட்டுமணாளனா
ருன்னியுன்னி யுறங்குகின்றேனுக்குத்
தன்னைவாய்மூர்த் தலைவனுமாசொல்லி
யென்னைவாவென்று போனாரதென்கொலோ. (உ)

தஞ்சேகண்டேன் றரிக்கிலாதாரொன்றே
னஞ்சேயுன்னை யழைக்கவந்தேனென்று
ருஞ்சேனென்றுகந் தேயெழுந்தோட்டந்தேன்
வஞ்சேவல்லரோ வாய்மூரடிகளே. (ங)

கழியக்கண்டிலேன் கண்ணெதிரேகண்டே
னொழியப்போந்திலே னொக்கவேயோட்டந்தேன்
வழியிற்கண்டிலேன் வாய்மூரடிகடஞ்
சுழியிற்பட்டுச் சுழல்கின்றதென்கொலோ. (ச)

ஒள்ளியாரிவ ரன்றிமற்றில்லையென்
றுள்கியுள்கி யுவந்திருந்தேனுக்குத்
தெள்ளியாரிவர் போலத்திருவாய்மூர்க்
கள்ளியாரவர் போலக்கரந்ததே. (ரு)

யாதேசெய்துமி யாமலோநீயென்னி
லாதேயேயு மளவில்பெருமையன்
மாதேவாகிய வாய்மூர்மருவினார்
போதேயென்று புகுந்ததும்பொய்கொலோ. (சா)

பாடிப்பெற்ற பரிசில்பழங்காசு
வாடவாட்டந் தவிர்ப்பாரவரைப்போற்
றேடிக்கொண்டு திருவாய்மூர்க்கேயெனு
வோடிப்போந்திங் கொளித்தவாறென்கொலோ. (எ)

திறக்கப்பாடிய வென்னினுஞ்செந்தமி
ழுறைக்கப்பாடி யடைப்பித்தாருந்நின்றூர்
மறைக்கவல்லரோ தம்மைத்திருவாய்மூர்ப்
பிறைக்கொள்செஞ்சடை யாரிவர்பித்தரே. (அ)

தனக்கேருமை தவிர்கென்றுவேண்டினு
நினைத்தென்பொய்க்கருள் செய்திடுநின்மல
னெனக்கேவந்தெதிர் வாய்மூருக்கேயெனுப்
புனற்கேபோற்கோயில் புக்கதும்பொய்கொலோ. (கூ)

தீண்டற்கரிய திருவடியொன்றினல்
மீண்டற்கும்மிதித் தாரரக்கன்றனை
வேண்டிக்கொண்டேன்றிரு வாய்மூர்விளக்கினைத்
தூண்டிக்கொள்வனு னென்றலுந்தோன்றுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வாய்மூரீசுவரர், தேவியார்-பாலினுநன்மொழியம்மை.

சீரார்பதியினின்றெழுந்து செல்லுந்திருநாவுக்கரச
ராராவன்பிலாரமுத முண்ணவெய்தாவாறேபோ
னீரார்சடையாரெழுந்தருள நெடிதுபின்புசெல்லுவர்
பேராளரைமுன்றொடர்ந்தணையப் பெறுவாரெய்தப்பெற்றிலரால்.

(இ-ள்.) சீரார்பதியினின்றெழுந்து=சிறப்புத்தங்கிய திருமறைக்காட்டினின்றும் நீங்கி; செல்லுந்திருநாவுக்கரசர்=செல்லாநின்ற வாகீசமுனிவர்; ஆராவன்பிலாரமுதம்=அடங்காத அன்பினால்நிறைந்த அமுதம்கிடைத்தும்; உண்ணவெய்தாவாறேபோல்=தாம் அதனை உண்ணப்பெறாததுபோல; நீரார்சடையாரெழுந்தருள=கங்கைநீர் தங்கிய சடைமுடியையுடைய சிவபிரான்முன்னே எழுந்தருள; நெடிதுபின்புசெல்லுமவர்=நெடுந்தூரம் பின்தொடர்ந்து செல்லுகின்ற அவர்; பேராளரைமுன்றொடர்ந்து=தாம் முதற்கடவுளென்னும் பெயருடைய சிவபிரானை முன்னேதொடர்ந்து; அணையப்பெறுவாரெய்தப்பெற்றிலர்=அணையப்பெற்றும் கிட்டப்பெறவில்லை. — எ-று.

ஆல்-அசை. இவ்விரண்டுங்குளகம். (உஎஅ)

அன்னவண்ணமெழுந்தருளி யணித்தேகாட்சிகொடுப்பார்போற்
பொன்னின்கோயிலொன்றெதிரே காட்டியதனுட்புக்கருளத்
துன்னுந்தொண்டரம்மருங்கு விரைந்துதொடரப்போந்தபடி
மன்னும்புகலிவள்ளலார் தாமுங்கேட்டுவந்தணைந்தார்.

(இ-ள்.) அன்னவண்ணமெழுந்தருளி=அவ்வாறு பின்தொடர்ந்தும் அடையாவண்ணம் எழுந்தருளி; அணித்தேகாட்சிகொடுப்பார்போல்=சமீபத்திலேயே காட்சி

கொடுப்பவர்போல்; பொன்னின்கோயிலொன்றெதிரோகாட்டி—பொன்மயமான ஓர் திருக்கோயிலை அவருக்குத் தோற்றுவித்து; அதனுட்புக்கருள—அதனுள்ளே புகுந்தருள; துன்னுந்தொண்டர்—மிக்க தொண்டையுடைய வாகீசமுனிவர்; அம்மருங்குவிரைந்து தொடரப்போந்தபடி—அவ்விடத்து விரைவாகச் சிவபிரானைப் பின்தொடர்ந்துபோனதை; மன்னும்புகலிவள்ளலார்தாமுங்கேட்டுவந்தணைந்தார்—நிலைபெற்ற சீகாழிப்பதியில் அவதரித்த ஆளுடையபிள்ளையாரும் கேள்விபுற்று எழுந்தருளிவந்தார்.—எ-று. ()

அழைத்துக்கொடுபோந்தணியார்போற் காட்டிமறைந்தானெனவயர்ந்து
பிழைத்துச்செவ்வியறியாதே திறப்பித்தேனுக்கேயல்லா
லுழைத்தாமொளித்தாற்கதவந்தொண் டுறைக்கப்பாடியடைப்பித்த
தழைத்தமொழியாருப்பாலார் தாமிங்கெப்பான்மறைவதென.

(இ-ள்.) அழைத்துக்கொடுபோந்து—என்னை அழைத்துக்கொண்டுவந்து; அணியார்போற்காட்டிமறைந்தானெனவயர்ந்து—நெருங்கினவர்போற்காட்டிக் கரந்தருளினானென்றுவருந்தி; உழைத்தாமொளித்தால்—ஈண்டு தாம் ஒளித்தருளினால்; பிழைத்துச்செவ்வியறியாதேதிறப்பித்தேனுக்கேயல்லால்—பிழைபட்டுத் திருவுள்ளக்கருத்து அறியாமல் திறப்பித்த அடியேனுக்கேயன்றி; கதவந்தொண்டுறைக்கப்பாடி—திருக்கதவத்தை தன்தொண்டின்பெருமை விளங்கப்பாடி; அடைப்பித்ததழைத்தமொழியாருப்பாலார்—ஒரு திருபாட்டில் அடைப்பித்த ஓங்கிய புகழையுடைய ஆளுடையபிள்ளையார் புறம்பே வருகின்றார்; தாமிங்கெப்பான்மறைவதென—தாம் இவ்விடத்து எவ்வண்ணம் மறைவதென்றுசொல்லி.—எ-று.

செவ்வியறியாதே திறம்பித்தேனென்றது பிள்ளையாரைத் திறக்கச்செய்யாது தான் திறப்பித்த குற்றமுடைமை விளக்கியது. திருவுள்ளக்கருத்து ஆளுடையபிள்ளையாரே திறக்கவேண்டுமென்பது. அதுகாரணத்தானே காட்சிகொடுப்பதுபோல் வெளிப்பட்டு மறைந்து ஆளுடையபிள்ளையார்க்குக் காட்சிகொடுத்தபிறகு காட்சிகொடுத்ததுமென்க.

மாடநீடுதிருப்புகலி மன்னரவர்க்குமாலயனு
நேடிபின்னங்காணுதார் நேரேகாட்சிகொடுத்தருள
வாடல்கண்டுபணிந்தேத்தி யரசுங்காணக்காட்டுதலும்
பாடவடியாரொன்றெடுத்துப் பரமர்தம்மைப்பாடினார்.

(இ-ள்.) மாடநீடுதிருப்புகலிமன்னரவர்க்கு—மாடங்களுயர்ந்த சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையாருக்கு; மாலயனுநேடியின்னங்காணுதார்—திருமால் பிரமன் என்னும் இருவரும் அடியையும் முடியையும்தேடி இன்னும்காணாத சிவபிரான்; நேரேகாட்சிகொடுத்தருள—வெளிப்பட்டுத் தரிசனங்கொடுக்க; ஆடல்கண்டுபணிந்தேத்தி—அவரது திருக்கூத்தைத்தரிசித்து வணங்கித் துதித்து; அரசுங்காணக்காட்டுதலும்—வாகீசமுனிவரும் தரிசிக்கும்படி பிள்ளையார்காட்டுதலும்; பாடவடியாரொன்றெடுத்து—பாடவடியாரொன்று முதலெடுத்து; பரமர்தம்மைப்பாடினார்—சிவபிரானைப் பாடியருளினார்.

இவ்விரண்டுங்குளகம். (உஅக)

திருவாய்மூர்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாடவடியார்பரவக்கண்டேன் பத்தர்கணங்கண்டேன்மொய்த்தபூத
மாடன்முழவமதிரக்கண்டே னங்கையனல்கண்டேன்கங்கையாளைக்[டேன்
கோடலரவார்சடையிற்கண்டேன் கொக்கினிதழ்கண்டேன்கொன்றைகண்
வாடற்றலையொன்றுகையிற்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்டவாறே.

பாலின்மொழியாளோர்பாகங்கண்டேன் பதினெண்கணமும்பயில
க்கண்டே, னீலநிறமுண்டகண்டங்கண்டே னெற்றிநுதல்கண்டேன் பெற்
றங்கண்டேன், காலைக்கதிர்செய்மதியங்கண்டேன் சரந்தைதிருமுடிமேற்
றோன்றக்கண்டேன், மாலைச்சடையுமுடியுங்கண்டேன் வாய்மூரடிகளைநா
ன்கண்டவாறே. (௨)

மண்ணைத்திகழநடமதாடும் வரைசிலம்பார்க்கின்றபாதங்கண்டேன்
விண்ணிற்றிகழுமுடியுங்கண்டேன் வேடம்பலவாஞ்சரிதைநண்டே
னண்ணிப்பிரியாமழுவுங்கண்டே னாலுமறையங்கமோதக்கண்டேன் [றே.
வண்ணப்பொலிந்திலங்குகோலங்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்டவா

விளைத்தபெரும்பத்திகூரநின்று மெய்யடியார்தம்மைவிரும்பக்கண்
டேன், இளைக்குங்கதநாகமேனிகண்டே னென்பினகலந்திகழ்ந்துதோன்ற
க்கண்டேன், றிளைக்குந்திருமார்பினீறுகண்டேன் சேணார்மதின்மூன்றும்
பொன்றவன்று, வளைத்தவரிசிலையுங்கையிற்கண்டேன் வாய்மூரடிகளைநா
ன்கண்டவாறே. (௪)

கான்மறையும்போதகத்தினுரிவைகண்டேன் காலிற்கழல்கண்டேன்
கரியின்றோல்கொண், டூன்மறையப்போர்த்தவடிவுங்கண்டே னுள்கமனம்
வைத்த வுணர்வுங்கண்டே, னான்மறையானோடுநெடியமாலு நண்ணிவரக்
கண்டேன்றிண்ணமாக, மான்மறிதங்கையின்மருவக்கண்டேன் வாய்மூரடி
களைநான்கண்டவாறே. (௫)

அடியார்சிலம்பொலிகளார்ப்பக்கண்டே னவ்வவர்க்கேயீந்தகருணைகண்டே
முடியார்சடைமேலரவமூழ்கி மூரிப்பிறைபோய்மறையக்கண்டேன் [ன்
கொடியாரதன்மேலிடவங்கண்டேன் கோவணமுங்கீளுங்குலாவக்கண்டேன்
வடியாருமூவிலைவேல்கையிற்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்டவாறே.

குழையார்திருத்தோடுகாதிற்கண்டேன் கொக்கரையுஞ்சச்சரியுங்
கொள்கைகண்டே, னிழையார்புரிநூல்வலத்தேகண்டே னேழிசையாழ்வீ
ணைமுரலக்கண்டேன், றழையார்சடைகண்டேன்றன்மைகண்டேன் றங்
கையொடுதாளங்க்றங்கக்கண்டேன், மழையார்திருமிடறுமற்றுங்கண்டேன்
வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (எ)

பொருந்தாதசெய்கைபொலியக்கண்டேன் போற்றிசைத்துவிண்ணோர்
புகழக்கண்டேன், பரிந்தார்க்கருளும்பரிசுங்கண்டேன் பாராகிப்புனலாகி
நிற்கைகண்டேன், விருந்தாய்ப்பரந்ததொகுதிகண்டேன் மெல்லியலும்வி
னாயகனுந்தோன்றக்கண்டேன்,மருந்தாயப்பிணிதீர்க்குமாறுகண்டேன் வா
ய்மூரடிகளைநான்கண்டவாறே. (அ)

மெய்யன்பரானார்க்கருளுங்கண்டேன் வேடுவனாய்நின்றநிலையுங்கண்டேன்
கையம்ப்ரணெரித்தகாட்சிகண்டேன் கங்கணமுமங்கைக்கனலுங்கண்டே
னையம்பலவூர்திரியக்கண்டே னற்றவன்றன்வேள்வியழித்துகந்து
வையம்பரவவிருத்தல்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௯)

கலங்கவிருவர்க்கழலாய்நீண்ட காரணமுங்கண்டேன்கருவாய்நின்று
பலங்கடரித்துகந்தபண்புங்கண்டேன் பாடலொலியெலாங்கூடக்கண்டே
னிலங்கைத்தலைவன்சிரங்கள்பத்து மிறுத்தவனுக்கீந்தபெருமைகண்டேன்
வலங்கைத்தலத்துளனலுங்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்டவாறே.()

திருச்சிற்றம்பலம்.

பாடுந்தமிழ்மாலைகள்கொண்டு பரமர்தாமுமெழுந்தருள
நீடுந்திருவாய்மூரடைந்து நிலவுங்கோயில்வலஞ்செய்து
சூடும்பிறையார்பெருந்தொண்டர் தொழுதுபோற்றித்துதிசெய்து
நாடுங்காதல்வளர்ந்தோங்க நயந்தந்நகரிலுடனுறைந்தார்.

(இ-ள்.) பாடுந்தமிழ்மாலைகள்கொண்டு=வாகீசமுனிவரருளிய திருப்பதிகமாலையைச் சாத்திக்கொண்டு; பரமர்தாமுமெழுந்தருள=சிவபிரானும் மறைந்தருள; நீடுந்திருவாய்மூரடைந்து=உயர்ந்த திருவாய்மூரை அடைந்து; நிலவுங்கோயில்வலஞ்செய்து=விளங்கிய திருக்கோயிலை வலமாகவந்து; சூடும்பிறையார்பெருந்தொண்டர்=பிறையைச்சூடிய சிவபிரானுடைய பெரிய அடியாராகிய வாகீசமுனிவர்; தொழுதுபோற்றித்துதிசெய்து=வணங்கித் திருப்பதிகங்கள்பாடித் தோத்திரஞ்செய்து; நாடுங்காதல்வளர்ந்தோங்க=நிலைபெற்ற காதலானது மேன்மேல்வளர; நயந்தந்நகரிலுடனுறைந்தார்=விரும்பி ஆளுடையபிள்ளையாருடன் அந்நகரிலிருந்தருளினார்.—எ-று. (உஅஉ)

ஆண்டவரசும்பிள்ளையா ருடனேயங்கணினிதமர்ந்து
பூண்டகாதல்பொங்கியெழ வாய்மூரடிகளடிபோற்றி
மூண்டவன்பின்மொழிமாலை சாத்திஞானமுனிவரொடு
மீண்டுவந்துதிருமறைக்காட் டெய்திவிமலர்தாள்பணிந்தார்.

(இ-ள்.) ஆண்டவரசும்பிள்ளையாருடனே=வாகீசமுனிவரும் ஆளுடையபிள்ளையாரோடு; அங்கணினிதமர்ந்து=வாய்மூரில் இனிதாக எழுந்தருளியிருந்து; பூண்டகாதல்பொங்கியெழ=கலந்த பேரன்பானது மேற்கொண்டெழ; வாய்மூரடிகளடிபோற்றி=திருவாய்மூரில் எழுந்தருளியிருக்கும் பிரானது திருவடிகளைத்துதித்து; மூண்டவன்பின்மொழிமாலைசாத்தி=உள்ளத்துக்கிளர்ந்த பேரன்போடு பதிகமாலைகளைச்சாத்தி; ஞானமுனிவரொடு=ஆளுடையபிள்ளையாரோடு; மீண்டுவந்துதிருமறைக்காட்டெய்தி=திரும்ப எழுந்தருளிவந்து வேதாரணியத்தையடைந்து; விமலர்தாள்பணிந்தார்=சிவ்பிரான் திருவடிகளைவணங்கினார்.—எ-று. (உஅ௩)

ஆதிமுதல்வர்தமைப்பணிந்தங் கானபணிசெய்தமருநாட்
சீதமதிவெண்குடைவளவர் மகளார்தென்னன்றேவியாங்
கோதில்குணத்துப்பாண்டிமா தேவியார்முன்குலச்சிறையார்
போதவிட்டார்சிலர்வந்தார் புகலிவேந்தர்தமைக்காண.

(இ-ள்.) ஆதிமுதல்வர்தமைப்பணிந்து=ஆதிகாரணராகிய சிவபிரானைவணங்கி; அங்கானபணிசெய்தமருநாள்=அத்திருமறைக்காட்டில் தமக்குரிய திருப்பணிகளைச் செய்திருக்குநாளில்; சீதமதிவெண்குடைவளவர்மகளார்=குளிர்ந்த பூரணசந்திரன்போலும் வெள்ளிய குடையையுடைய வளவர்கோன்மகளும்; தென்னன்றேவியார்=பாண்டியனது மனையாளுமாகிய; கோதில்குணத்துப்பாண்டிமாதேவியார்முன்=குற்றமற்ற குணத்தினையுடைய மங்கையர்க்கரசியார் திருமுன்னே; குலச்சிறையார்போதவிட்டார்சிலர்வந்தார்=குலச்சிறைநாயனாரனுப்பிய சிலவேவுகாரர் வந்தார்; புகலிவேந்தர்

தமைக்காண=ஆளுடையபிள்ளையாரைக் காணுதற்கு.—எ-று. சிலர் காணவந்தாரென இயையும். (உஅச)

வந்துசிவனூர்திருமறைக்காட் டெய்திமன்னுவேணுபுரி
யந்தணளர்தமக்கறிவித் தவர்பாலெய்தியடிவணங்கச்
சிந்தைமகிழ்ந்துதீதின்மை வினவத்தீங்குமுளவாமோ
விந்தவுலகமுயவருவீ ரிருதாணிணைவார்க்கென் றுரைப்பார்.

(இ-ள்.) சிவனூர்திருமறைக்காடுவந்தெய்தி=அவ்வேவுகாரர் திருமறைக்காட்டுக்கு வந்தடைந்து; மன்னுவேணுபுரியந்தணளர்தமக்கறிவித்து=நிலைபெற்ற சீகாழிப்பதியில் அவதரித்த ஆளுடையபிள்ளையாருக்குத் தம்முடைய வரவை அறிவித்து; அவர்பாலெய்தியடி வணங்க=அவர் திருமுன்னேசென்று திருவடிகளில் வணங்க; சிந்தைமகிழ்ந்துதீதின்மைவினவ=அவர் திருவுள்ளமகிழ்ந்து அவர் நன்குவாழும் நிலைமையை ஆளுடையபிள்ளையார் விசாரிக்க; இந்தவுலகமுயவருவீர்=இந்த நிலவுலகத்தார் ஈடேற அவதாரம்செய்யும் உம்முடைய; இருதாணிணைவார்க்கு=இரண்டுதிருவடிகளைத் தியானிக்கும் எமக்கு; தீங்குமுளவாமோவென்றுரைப்பார்=குறைவுமுண்டாகுமோ என்று சொல்லிச்சொல்வாராயினர்.—எ-று. (உஅ௫)

சைவநெறிவைதிகநிற்கச் சழக்குநெறியைத்தவமென்னும்
பொய்வல்லமணர்செயறன்னைப் பொறுக்ககில்லோமெனக்கேட்டே
யவ்வன்றொழிலோர்செயன்மாற்றி யாதிசைவநெறிவிளக்கத்
தெய்வநீறுநினைந்தெழுந்தார் சீர்கொள்சண்பைத்திருமறையோர்.

(இ-ள்.) சைவநெறிவைதிகநிற்க=வேதமூலமான சைவமார்க்கம் உலகத்தில் அழியாதுநிற்க; சழக்குநெறியைத்தவமென்னும்=தாழ்ந்த மார்க்கத்தைத் தவநெறியென்றுகொள்ளும்; பொய்வல்லமணர்செயறன்னை=பொய்சொல்லுதலில் வல்லவர்களாகிய சமணர்களது கொடியசெய்கைகளை; பொறுக்ககில்லோமெனக்கேட்டே=பொறுக்க மாட்டோமென்று சொல்ல அதைக்கேட்டு; அவ்வன்றொழிலோர்செயன்மாற்றி=அக்கொடுந்தொழி லுடைபோரது தீயநெறியை நீக்கி; ஆதி சைவநெறி விளக்க=முதன்மையாகிய சைவமார்க்கத்தை விளக்கும்படி; தெய்வநீறுநினைந்தெழுந்தார்=தெய்வீகமானதிருவெண்ணீற்றைச் சிந்தித்துக்கொண்டு எழுந்தருளினர்; சீர்கொள்சண்பைத்திருமறையோர்=சிறப்பினையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்.—எ-று.

தெய்வநீறு திருவருள்வடிவாதலில் அதனை அந்நாட்டில் பரம்பச்செய்யக்கருதி எழுதலில் தெய்வநீறு நினைந்தெழுந்தாரென்றார். (உஅசு)

ஆயபொழுதுதிருநாவுக் கரசும்புகலியாண்டகைக்குக்
காயமாசுபெருக்கியுழல் கலதியமணர்கடுவினைசெய்
மாயைசாலமிகவல்லா ரவர்மற்றென்னை முன்செய்த
தீயதொழிலும்பலகெட்டேன் செல்லவிசையேன்யானென்றார்.

(இ-ள்) ஆயபொழுதுதிருநாவுக்கரசும்=ஆளுடையபிள்ளையார் பாண்டிநாட்டிற் செழுந்தருளும்போது வாகீசமுனிவரும்; புகலியாண்டகைக்கு=ஆளுடையபிள்ளையாருக்கு; காயமாசுபெருக்கியுழல்=உடம்பின்கண் அழுக்கையுண்டாக்கித் திரிகின்ற; கலதியமணர்=பொய்யராகிய சமணர்கள்; கடுவினைசெய்=கடுந்தொழில் செய்கின்ற; மாயைசாலமிகவல்லார்=வஞ்சனை மிகவல்லவர்கள்; அவர்மற்றென்னை=அச்சமணர்கள் அச்சமயம் புகுந்துவந்த என்னை; முன்செய்ததீயதொழிலும்பல=முன்னே

செய்த கொடுந்தொழில்களும்பல; கெட்டேன்செல்லவிசையேன்யானென்றார்—கெட்டேன் அங்குப்போக யான் உடன்படேனென்று அருளிச்செய்தார்.—எ-று.

கெட்டேன் - இரக்கக்குறிப்பு. (உஅஎ)

என்றுகூறவெல்லையிலா நீறுபோற்றுமிருவரையுஞ்
சென்றுகாணுங்கருத்துடையே னங்குத்தீங்குபுரியமணர்
நின்றநிலைமையழிவித்துச் சைவநெறிபாரித்தன்றி
யொன்றுஞ்செய்யேனுணையும தென்றாருடையபிள்ளையார்.

(இ-ள்.) என்றுகூற—இவ்வாறு வாகீசமுனிவர் அருளிச்செய்ய; எல்லையிலாநீறுபோற்றுமிருவரையும்—அளவுபடாத மகிமையையுடைய விபூதியைப் பேணியொழுகும் மங்கையர்க்கரசியார் குலச்சிறைநாயனார் என்னு மிருவரையும்; சென்றுகாணுங்கருத்துடையேன்—அங்குச்சென்று காணும் உளக்கருத்துடையேன்; அங்குத்தீங்குபுரியமணர்—அப்பாண்டிநாட்டில் குற்றம்விளைக்கும் சமணர்கள்; நின்றநிலைமையழிவித்து—நிற்கின்ற நெறியை அரசனால் அழியும்படிசெய்து; சைவநெறிபாரித்தன்றி—சைவநெறியை வளர்த்தலல்லாமல்; ஒன்றுஞ்செய்யேன்—பிறிதொன்றுஞ் செய்யேன்; ஆணையுமதென்றாருடையபிள்ளையார்—உம்முடைய ஆணைப்படி யென்றருளிச்செய்தார் ஆளுடையபிள்ளையார்.—எ-று. (உஅஅ)

போமாதுணிந்துநீரங்குப் போதப்போதாவவ்வமணர்
தீமாயையினையானேபோய்ச் சிதைத்துவருகின்றேனென்ன
ஆமாறெல்லாமுரைத்தவரை மறுக்கமாட்டாதரசிருப்பத்
தாமாதரவாற்றமிழ்நாட்டிற் போனார்ஞானத்தலைவனார்.

(இ-ள்.) போமாதுணிந்துநீரங்குப்போதப்போதா—போம்படிதுணிந்து நீர் அவ்விடத்துச்செல்லுதல் தகாது; அவ்வமணர்தீமாயையினையானேபோய்—அந்தச் சமணர்களது கொடிய வஞ்சனையை யானேசென்று; சிதைத்துவருகின்றேனென்ன—அழித்துவருகின்றேனென்று சொல்ல; ஆமாறெல்லாமுரைத்து—பொருந்தும்படி யெல்லாம்கூறி; அவரைமறுக்கமாட்டாதரசிருப்ப—மேல் ஆளுடையபிள்ளையாரை மறுக்கமாட்டாமல் வாகீசமுனிவரிருக்க; ஆதரவாற்றமிழ்நாட்டிற்போனார்—அன்போடு பாண்டிநாட்டிற் சென்றார்; ஞானத்தலைவனார்—ஆளுடையபிள்ளையார்.—எ-று. தாம்-அசை. (உஅகூ)

வேணுபுரக்கோனெழுந்தருள விடைகொண்டிருந்தவாகீசர்
பூணுமன்பான்மறைக்காட்டிற் புனிதர்தம்மைப்போற்றிசைத்துப்
பேணியிருந்தங்குறையுநாட் பெயர்வார்வீழிமிழலையமர்
தாணுவின்றன்செய்யகழன் மீண்டுஞ்சாரநினைக்கின்றார்.

(இ-ள்.) வேணுபுரக்கோனெழுந்தருள—சீகாழியில் அவதரித்த ஆளுடையபிள்ளையார் பாண்டிநாட்டிற்கெழுந்தருள; விடைகொண்டிருந்தவாகீசர்—அவரிடத்து விடைபெற்றுக்கொண்டிருந்த வாகீசமுனிவர்; பூணுமன்பான்மறைக்காட்டில்—பொருந்திய அன்பினால் திருமறைக்காட்டில் வீற்றிருந்தருளும்; புனிதர்தம்மைப்போற்றிசைத்து—மணவாளேசரைத்துதிசெய்து; பேணியிருந்தங்குறையுநாள்—ஆசையுற்று அவ்விடத்து வசிக்கும்நாளில்; பெயர்வார்வீழிமிழலையமர்—அங்குநின்று நீங்குவாராய்த் திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளும்; தாணுவின்றன்செய்யகழல்—சிவபிரானது சிவந்த திருவடிகளை; மீண்டுஞ்சாரநினைக்கின்றார்—மீளவும் அடைய நினைக்கின்றார்.—எ-று. (உகூ0)

பாண்டிநாடு சமண்காடாகக்கிடப்பதறிந்த பாண்டிமாதேவியாரும் குலச்சிறைநயாரும் மனம்வருந்தி பிள்ளையாரிடத்தில் ஸ்ரீ நமசிவ்ப

சோலைமறைக்காட்டமர்ந்தருளுஞ் சோதியருள்பெற்றகன்றுபோய்
வேலைவிடமுண்டவர்வீழி மிழலைமீண்டுஞ்செல்வனென
ஞாலநிகழ்ந்தநாகைக்கா ரோணம்பிறவும்பணிந்தணைவார்
சாலுமொழிவண்டமிழ்பாடித் தலைவர்மிழலைவந்தடைந்தார்.

(இ-ள்.) சோலைமறைக்காட்டமர்ந்தருளும்=சோலைகளையுடைய திருமறைக்காட்டில் வீற்றிருந்தருளும்; சோதியருள்பெற்றகன்றுபோய்=சிவபிரான் திருவருள்பெற்று அங்குநின்றும் நீங்கிப்போய்; வேலைவிடமுண்டவர்=பாற்கடலின்கணுதித்த ஆலாகலத்தை யமுதுசெய்த சிவபிரான் வீற்றிருந்தருளும்; வீழிமிழலைமீண்டுஞ்செல்வனென=திருவீழிமிழலைக்கு மீண்டும் செல்வேன் என்று; ஞாலநிகழ்ந்தநாகைக்காரோணம்=நிலவுலகத்தில் விளங்கிய திருநாகைக்காரோணம்முதலிய; பிறவும்பணிந்தணைவார்=பிறதலங்களையும் வணங்கிச் செல்லுகின்றவர்; சாலுமொழிவண்டமிழ்பாடி=மேன்மையான மொழிகளாலாகிய வளவிய தமிழ்ப்பதிகத்தைப்பாடி; தலைவர்மிழலைவந்தடைந்தார்=சிவபிரான் வீற்றிருந்தருளும் திருவீழிமிழலையை வந்தடைந்தார்.—எ-று. (உகூக)

வீழிமிழலைதனைப்பணிந்து வேதமுதல்வர்தாமிருப்ப
வாழிவலமேந்தியவரியா லாகாசத்தினின்றிழிந்த
வாழிமலர்ந்தகோயிறனின் மன்னும்பொருளைப்போற்றிசைத்துத்
தாழுநாளிற்பிறபதியும் பணியுங்காதறலைநிற்பார்.

(இ-ள்.) வீழிமிழலைதனைப்பணிந்து=திருவீழிமிழலையைவணங்கி; வேதமுதல்வர்தாமிருப்ப=வேதமுதல்வராகிய சிவபிரான் வீற்றிருந்தருள; ஆழிவலமேந்தியவரியால்=சக்கரத்தை வலக்கரத்தி லேந்தும்பொருட்டு திருமாலினால்; ஆகாசத்தினின்றிழிந்த=ஆகாசத்தினின்று மிறங்கிய; மலர்ந்தகோயிறனின்=மலர்ந்த விமானக்கோயிலில்; மன்னும்பொருளைப்போற்றிசைத்து=வீற்றிருக்கும் அச்சிவபிரானைத் துதிசெய்து; தாழுநாளிற்பிறபதியும்பணியுங்காதறலைநிற்பார்=வணங்கிவரும்நாளில் பிற திருப்பதிகளையும் வணங்கும் மெய்யன்பின்வழியே நிற்கின்றவர்.—எ-று. வாழி-அசை. (உகூஉ)

பூவிற்பொலியும்புனற்பொன்னிக் கரைபோய்ப்பணிவார்பொற்பமைந்த
வாவுக்கருளுமாவடுதண் டுறையார்பாதமணைந்திறைஞ்சி
நாவுக்கரசர்ஞானபோ னகர்க்குச்செம்பொனாயிரமும்
பாவுக்களித்ததிறம்போற்றிப் போந்துபிறவும்பணிகின்றார்.

(இ-ள்.) பூவிற்பொலியும்புனற்பொன்னிக்கரைபோய்=மலர்களாற் பொலிவடைந்த நீரையுடைய காவிரியினது தென்கரையேசென்று; பணிவார்=பணிகின்றவர்; பொற்பமைந்தவாவுக்கருளும்=அழகமைந்த பசுவுக்கு முத்திகொடுக்கும்; ஆவடுதண்டுறையார்பாதமணைந்திறைஞ்சி=மாசிலாமணியீசரது திருவடிகளையணைந்து வணங்கி; நாவுக்கரசர்=வாகீசமுனிவர்; ஞானபோனகர்க்குச்செம்பொனாயிரமும்=ஆளுடையபிள்ளையாருக்கு ஆயிரம்பொன்; பாவுக்களித்ததிறம்போற்றிப்போந்து=திருப்பதிகத்திற்காகக்கொடுத்த நிலைமையையும் பதிகத்தில் வைத்துப்பாடி அங்குநின்றும்போய்; பிறவும்பணிகின்றார்=பிறதிருப்பதிகளையும் வணங்குவாராயினர்.—எ-று. (உகூ௩)

திருஆவடுதுறை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மாயிருஞாலமெல்லா மலரடிவணங்கும்போலும்
பாயிருங்கங்கையாளைப் படர்சடைவைப்பர்போலுங்
காயிரும்பொழில்கள்சூழ்ந்த கழுமலவூரர்க்கம்பொ
னாயிரங்கொடுப்பர்போலு மாவடுதுறையனாரே. (க)

மடந்தைபாகத்தர்போலு மான்மறிக்கையர்போலுங்
குடந்தையிற்குழகர்போலுங் கொல்புலித்தோலர்போலுங்
கடைந்தநஞ்சுண்பர்போலுங் காலனைக்காய்வர்போலு
மடைந்தவர்க்கன்பர்போலு மாவடுதுறையனாரே. (உ)

உற்றநோய்தீர்ப்பர்போலு முறுதுணையாவர்போலுஞ்
செற்றவர்புரங்கண்மூன்றுந் தீயெழச்செறுவர்போலுங்
கற்றவர்பரவியேத்திக் கலந்துவந்தலந்துபாடு
மற்றவர்க்கன்பர்போலு மாவடுதுறையனாரே. (ங)

மழுவமர்கையர்போலு மாதவள்பாகர்போலு
மெழுநுனைவேலர்போலு மென்புகொண்டணிவர்போலுந்
தொழுதெழுந்தாடிப்பாடித் தோத்திரம்பலவுஞ்சொல்லி
யழுமவர்க்கன்பர்போலு மாவடுதுறையனாரே. (ச)

பொடியணிமெய்யர்போலும் பொங்குவெண்ணூலர்போலுங்
கடியதோர்விடையர்போலுங் காமனைக்காய்வர்போலும்
வெடிபடுதலையர்போலும் வேட்கையாற்பரவுந்தொண்ட
ரடிமையையளப்பர்போலு மாவடுதுறையனாரே. (ரு)

வக்கரனுயிரைவவ்வக் கண்மலர்கொண்டுபோற்றச்
சக்கரங்கொடுப்பர்போலுந் தானவர்தலைவர்போலுந்
துக்கமாமூடர்தம்மைத் துயரிலேவீழ்ப்பர்போலு
மக்களையார்ப்பர்போலு மாவடுதுறையனாரே. (சா)

விடைதருகொடியர்போலும் வெண்புரிநூலர்போலும்
படைதருமழுவர்போலும் பாய்புலித்தோலர்போலு
முடைதருகீளர்போலு முலகமுமாவர்போலு
மடைபவரிடர்கடீர்க்கு மாவடுதுறையனாரே. (எ)

முந்திவானோர்கள்வந்து முறைமையால்வணங்கியேத்த
நந்திமாகாளரென்பார் நடுவுடையார்கணிற்பச்
சிந்தியாதேயொழிந்தார் திரிபுரமெரிப்பர்போலு
மந்திவான்மதியஞ்சூடு மாவடுதுறையனாரே. (அ)

பானமரேனமாகிப் பாரிடந்திட்டமாலுந்
தேனமர்ந்தேறுமல்லித் திசைமுகமுடையகோவுந்
தீனைத்தியக்கறுத்த திருவுருவுடையர்போலு
மானையேற்றர்போலு மாவடுதுறையனாரே. (கூ)

பார்த்தனுக்கருள்வர்போலும் படர்சடைமுடியர்போலு
மேத்துவாரிடர்கடீர வின்பங்கள்கொடுப்பர்போலுங்
கூத்தராய்ப்பாடியாடிக் கொடுவலியரக்கன்றன்னை
யார்த்தவாயலறுவிப்பா ராவடுதுறையனாரே, (க௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மாசிலாமணியீசுரர், தேவியார்-ஒப்பிலாமுலையம்மை.

திருநாவுக்கரசர் பழையாறையில் சமணர்களால் மறைக்கப்பட்ட வடதளியென்னும் ஆலயத்தில் சிவபிரானைக்காண வருந்தியிருக்க, அதையுணர்ந்த சிவபிரான் அரசன் சொற்பனத்திற்றோன்றி அவனைக்கொண்டு அவ்வாலயமுதலியவற்றைத் திறப்பித்துச் சமணர்களை யழித் அத் திருநாவுக்கரசரை வணங்கச்செய்தது.

செய்யசடையார்பழையாறை யெய்தவதனிற் செல்பொழுதின்
மையலமணர்மறைக்கவட தளியின்மன்னுஞ்சிவனைக்
கைகள்கூப்பித்தொழுதருளக் கண்டவாற்றாலமணர்கடம்
பொய்கொள்விமானமெனக்கேட்டுப் பொறாதவுள்ளமிகப்புழுங்கி.

(இ-ள்.) செய்யசடையார்பழையாறையெய்த=சிவந்த சடையையுடைய சிவபிரான் வீற்றிருந்தருளும் பழையாறையென்னும் திருப்பதிமார்க்கத்தில்வர; அதனிற் செல்பொழுதில்=அத்திருப்பதியில் வாகீசமுனிவர் செல்லுங்கால்; மையலமணர்மறைக்க=மயக்கத்தையுடைய சமணர்கள் மறைக்க; வடதளியின்மன்னுஞ்சிவனை=வடதளியின்கண்ணே வீற்றிருந்தருளும் சிவபிரானை; கைகள்கூப்பித்தொழுதருளக்கண்டவாற்றால்=கரங்களைக்குவித்து வாகீசமுனிவர் வணங்கக்கண்டதனால்; அமணர்கடம்பொய்கொள்விமானமென=இது சமணர்கள் கொண்டாடும் பொய்த்தெய்வத்தின் விமானமென்றுசொல்ல; கேட்டுப்பொறாதவுள்ளமிகப்புழுங்கி=அதைக்கேட்டுச் சகிக்காத திருவுள்ளத்தில் மிகப்புழுக்கமடைந்து.—எ-று. (உகூச)

அந்தவிமானந்தனக்கருகா வாங்கோரிடத்தின்பாங்கெய்திக்
கந்தமலருங்கடிக்கொன்றை முடியார்செய்யகழலுன்னி
மந்தவமணர்வஞ்சனையான் மறைத்தவஞ்சமொழித்தருளிப்
பந்தங்கொண்டகுண்டர்திறம் பாற்றுமென்றுபணிந்திருந்தார்.

(இ-ள்.) அந்தவிமானந்தனக்கருகா=அந்த விமானத்தின் சமீபமாக; ஆங்கோரிடத்தின்பாங்கெய்தி=அங்குள்ள ஓரிடத்தையடைந்து; கந்தமலருங்கடிக்கொன்றைமுடியார்=வாசனையோடுமலரும் புதிதாகிய கொன்றைமாலையைச்சூடிய முடியையுடைய சிவபிரான்; செய்யகழலுன்னி=சிவந்த திருவடிகளைக்கருதி; மந்தவமணர்வஞ்சனையால்=அறிவில்லாத சமணர்கள் தம்வஞ்சனையால்; மறைத்தவஞ்சமொழித்தருளி=மறைத்த மறைப்பை நீக்கியருளி; பந்தங்கொண்டகுண்டர்திறம்=கன்மபந்தத்தையுடைய சமணர்கள் செய்கையை; பாற்றுமென்றுபணிந்திருந்தார்=அழித்துவிடுமென்று வணங்கியிருந்தார்.—எ-று. இவ்விரண்டுங் குளகம். (உகூரு)

வண்ணங்கண்டுநானுமமை வணங்கியன்றிப்போகேனென்
றெண்ணமுடிக்கும்வாகீச ரிருந்தாரமுதுசெய்யாதே
யண்ணலாருமதுவுணர்ந்தங் கரசுதம்மைப்பணிவதற்குத்
திண்ணமாகமன்னனுக்குக் கனவிலருளிச்செய்கின்றார்.

(இ-ள்.) வண்ணங்கண்டுநான்=அடியேன் உமது திருவுருவைக்கண்டு; உம்மை வணங்கியன்றிப்போகேனென்று=உம்மைத்தரிசித்தன்றிப்போகமாட்டேனென்று; எண்ணமுடிக்கும்வாகீசர்=தமது கருத்தை முடிக்கு மியல்புடைய வாகீசமுனிவர்; இருந்தாரமுதுசெய்யாதே=திருவமுது செய்யாமலிருந்தார்; அண்ணலாருமதுவுணர்ந்து=சிவபிரானும் அக்கருத்தையறிந்து; அங்கரசுதம்மைப்பணிவதற்கு=அவ்விடத்து வாகீசமுனிவர் தம்மை வணங்குதற்கு; திண்ணமாகமன்னனுக்கு=உறுதியாகச் சோழராசனுக்கு; கனவிலருளிச்செய்கின்றார்=கனவில் வெளிப்பட்டு அருளிச்செய்வாராயினார்—எ-று.

அறிவிலமணர்நமைமறைப்ப விருந்தோமென்றங்கடையாளக்
குறிகளருளிச்செய்தருளி நம்மையரசுகும்பிடுவா
னெறியிலமணர்தமையழித்து நீக்கிப்போக்கென்றருள்புரியச்
செறிவிலறிவுற்றெழுந்தவனுஞ் செங்கைதலைமேற்குவித்திறைஞ்சி.

(இ-ள்.) அறிவிலமணர்நமைமறைப்ப—நல்லுணர்வில்லாத சமணர்கள் நம்மை மறைக்கும்படியாக; இருந்தோமென்று—அவ்விடத்து வீற்றிருந்தோமென்று; அங்கடையாளக்குறிகளருளிச்செய்தருளி—அக்கோயிலுள் அடையாளமான குறிகளைத் திருவாய் மலர்ந்தருளி; நம்மையரசும்பிடுவான்—நம்மை வாகீசமுனிவர் வணங்கும்பொருட்டு; நெறியிலமணர்தமையழித்து—நன்னெறியில்லாத அமணர்களையழித்து; நீக்கிப்போக்கென்றருள்புரிய—அவர்கள்செய்த இடையூற்றை நீக்கிவிடென்று அருள்புரிய; செறிவிலறிவுற்றெழுந்தவனும்—கனவுணர்வு நீங்கி நனவுணர்வுபெற்றெழுந்த அச்சோழனும்; செங்கைதலைமேற்குவித்திறைஞ்சி—சிவந்த தன்கரங்களைச்சிரமேற்குவித்து வணங்கி—எ-று.

கண்டவியப்புமந்திரிகட் கியம்பிக்கூடக்கடிதெய்தி
யண்டர்பெருமானருள்செய்த வடையாளத்தின்வழிகண்டு
குண்டர்செய்தவஞ்சனையைக் குறித்துவேந்தன்குலவுபெருந்
தொண்டர்தம்மையடிவணங்கித் தொக்கவமணர்தூரறுத்தான்.

(இ-ள்.) கண்டவியப்புமந்திரிகட்கியம்பி—தான் இரவிற்கண்ட சொற்பனத்தின் அதிசயத்தை மந்திரிமார்கட்கு எடுத்துக்கூறி; கூடக்கடிதெய்தி—அவரோடு விரைந்து அவ்வாலயத்தடைந்து; அண்டர்பெருமானருள்செய்த—சிவபிரான் அருளிச்செய்த; அடையாளத்தின்வழிகண்டு—குறியின்வழியே சிவபிரானிருக்கு மிடத்தைக்கண்டு; குண்டர்செய்தவஞ்சனையைக்குறித்து—சமணர்கள்செய்த வஞ்சகத்தைக்கருதி; வேந்தன்குலவுபெருந்தொண்டர்தம்மை—அச்சோழன் விளங்கிய பெரியதொண்டராகிய வாகீசமுனிவரை; அடிவணங்கித்தொக்கவமணர்தூரறுத்தான்—திருவடிகளில்வணங்கிக் கூட்டமாயிருக்கும் அமணர்களது வேரை அறுத்துவிட்டான்.—எ-று. (உகஅ)

ஆனையினத்திற்றுகைப்புண்ட வமணாயிரமுமாய்ந்ததற்பின்
மேன்மையரசனீசர்க்கு விமானமாக்கிவிளக்கியபி
ளுனவழிபாட்டர்ச்சனைக்கு நிபந்தமெல்லாமமைத்திறைஞ்ச
ஞானவரசும்புக்கிறைஞ்சி நாதர்முன்புபோற்றுவார்.

(இ-ள்.) ஆனையினத்திற்றுகைப்புண்டு—அரசனேவிய யானைகளால் துவைக்கப்பட்டு; அவமணாயிரமுமாய்ந்ததற்பின்—அந்த ஆயிரம் அமணர்களும் இறந்தபின்பு; மேன்மையரசனீசர்க்கு—மேன்மைதங்கிய அவ்வரசன் சிவபிரானுக்கு; விமானமாக்கிவிளக்கியபின்—விமானஞ்செய்து ஆலயத்திருப்பணிசெய்தபின்; ஆனவழிபாட்டர்ச்சனைக்கு—செய்யத்தக்க நித்தியபூசைமுதலிய ஆராதனங்களுக்கு; நிபந்தமெல்லாமமைத்திறைஞ்ச—படிக்கட்டளைகளையெல்லா மமைத்துவணங்க; ஞானவரசும்புக்கிறைஞ்சி—ஞானம் நிறைந்த வாகீசமுனிவரும் ஆலயத்துட்புகுந்து வணங்கி; நாதர்முன்புபோற்றுவார்—சிவபிரான் முன்பாகத் துதிசெய்வாராயினர்.—எ-று. (உகக)

தலையின்மயிரைப்பறித்துண்ணுஞ் சாதியமணர்மறைத்தாலு
நிலையிலாதார்நிலைமையினுன் மறைக்கவொண்ணுமோவென்னும்
விலையில்வாய்மைக்குறுந்தொகைகள் விளம்பிப்புறம்போந்தங்கமர்ந்தே
யிலைகொள்சூலப்படையார்சே ரிடங்கள்பிறவுந்தொழவணைவார்.

(இ-ள்.) தலையின்மயிரைப்பறித்துண்ணும்—தலைமயிரைப்பறித்து நின்றுண்ணும்; சாதியமணர்மறைத்தாலும்—சாதியாராகிய சமணர்கள் மறைத்தாலும்; நிலையிலாதார்நிலைமையினுல்—தமக்கோர் நன்னிலையில்லாத சமணர்கள் நிலைமையினுல்; மறைக்கவொண்

1 திருநாவுக்கரசர் 2 அரசன்



அரசன் வடதளி ஆலயத்தைக்கண்டு விதானமுதலியதும் கட்டுவித்து நித்திய நைமித்தியங்களமைத்துத் திருவிழாமுதலியவை செய்வித்த திருநாவுக்கரசர், சுவாமியை வணங்கிப் பதிகமோதிக்கொண்டங்கு சிலநாளிருந்தது.

ணுமோவென்னும்=மறைக்கவொண்ணுமோ என்னும்; விலையில்வாய்மைக்குறுந்தொகைகள்விளம்பி=அளவுபடாத மெய்மையையுடைய திருக்குறுந்தொகைப் பதிகத்தைப் பாடி; புறம்போந்தங்கமர்ந்தே=புறம்பேவந்து அவ்விடத்திருந்து; இலைகொள்சூலப்படையார்சேர்=அச்சவடிவையுடைய சூலாயுதத்தையேந்திய சிவபிரான் வீற்றிருந்தருளும்; இடங்கள்பிறவுந்தொழவணைவார்=பிறதிருப்பதிகளையும் வணங்கச்செல்வாராயினார்.—எ-று. (௫00)

திரு ஆறைவடதளி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தலையெலாம்பறிக்குஞ்சமண்கையரு
ணிலையினான்மறைத்தான்மறைக்கொண்ணுமே
யலையினார்பொழிலாறைவடதளி
நிலையினானடியேநினைந்துய்ம்மினே. (௧)

மூக்கினால்முரன்றோதியக்குண்டிகை
தூக்கினார்குலந்தூரறுத்தேதனக்
காக்கினானணியாறைவடதளி
நோக்கினார்க்கில்லையாலருநோய்களே. (௨)

குண்டரைக்குணமில்லாரைக்கூறையில்
மிண்டரைத்துரந்தவிமலன்றனை
யண்டரைப்பழையாறைவடதளிக்
கண்டரைத்தொழுதுய்ந்தனகைகளே. (௩)

முடையரைத்தலைமுண்டிக்குமொட்டரைக்
கடையரைக்கடிந்தார்கனல்வெண்மழுப்
படையரைப்பழையாறைவடதளி
யுடையரைக்குளிர்ந்துள்குமென்னுள்ளமே. (௪)

ஒள்ளரிக்கணார்முன்னமணின்றுணுங்
கள்ளரைக்கடிந்த * கருப்பூறலை
யள்ளலைப்புனலாறைவடதளி
வள்ளலைப்புகழத்துயர்வாடுமே. (௫)

நீதியைக்கெடநின்றமணேயணுஞ்
சாதியைக்கெடுமாசெய்தசங்கர
வாதியைப்பழையாறைவடதளிச்
சோதியைத்தொழுவார்துயர்தீருமே. (௬)

திரட்டிரைக்கவளந்திணிக்குஞ்சமண்
பிரட்டரைப்பிரித்தபெருமான்றனை

* கருப்பூறல்-என்பது—கரும்புரசம். கருப்பு-வலித்தல்விகாரம்.

யருட்டிறத்தணியாறைவடதளித்
தெருட்டரைத்தொழத்தீவினைதீருமே. (எ)

ஓதினத்தெழுத்தஞ்சுணராச்சமண்
† வேதினைப்படுத்தானைவெங்கூற்றுதை
பாதனைப்பழையாறைவடதளி
நாதனைத்தொழநம்வினைநாசமே. (அ)

வாயிருந்தமிழேபடித்தாளுரு
வாயிரஞ்சமணும்மழிவாக்கினன்
பாயிரும்புனலாறைவடதளி
மேயவன்னெனவல்வினைவீடுமே. (கூ)

செருத்தனைச்செயுஞ்சேணரக்கனுட
லெருத்திறவிரலாலிறையூன்றிய
வருத்தனைப்பழையாறைவடதளித்
திருத்தனைத்தொழுவார்வினைதேயுமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சோமேசுவரர், தேவியார்-சோமகலாநாயகியம்மை.

பொங்குபுனலார்பொன்னியினி லிரண்டுகரையும்பொருவிடையார்
தங்குமிடங்கள்புக்கிறைஞ்சித் தமிழ்மாலைகளுஞ்சாத்திப்போ
யெங்குநிறைந்தபுகழாள ரீறிலிருண்டரெதிர்கொள்ளச்
செங்கண்விடையார்திருவானைக் காவின்மருங்குசென்றணைந்தார்.

(இ-ள்.) பொங்குபுனலார்=மிகப்பெருகுகின்ற நீர்நிறைந்த; பொன்னியினிலி ரண்டுகரையும்=காவிரிநதியின் இரண்டுகரையிலும்; பொருவிடையார்தங்குமிடங்கள் புக்கிறைஞ்சி=போர்செய்யும் விடையையுடைய சிவபிரான் வீற்றிருந்தருளும் திருப்ப திகளில்சென்றுவணங்கி; தமிழ்மாலைகளுஞ்சாத்திப்போய்=திருப்பதிகமாலைகளையும் சா த்திச்சென்று; எங்குநிறைந்தபுகழாளர்=உலகமெங்கும் பரம்பிய புகழையுடைய வாகீச முனிவர்; ஈறிலிருண்டரெதிர்கொள்ள=அழிவில்லாத அடியார்கள் தம்மையெதிர்கொள் ளும்படி; செங்கண்விடையார்=சிவந்த கண்ணையுடைய இடபத்தை வாகனமாகக்கொ ண்டருளும் சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருவானைக்காவின்மருங்குசென்றணைந்தார்= திருவானைக்காவிற்குப்போய்ச் சேர்ந்தார்.—எ-று. (௩0க)

சிலந்திக்கருளுங்கழல்வணங்கிச் செஞ்சொன்மாலைபலபாடி
யிலங்குசடையாரெறும்பியூர் மலையுமிறைஞ்சிப்பாடிப்பின்
மலர்ந்தசோதித்திருச்சிராப் பள்ளிமலையுங்கற்குடியு
நலங்கொள்செல்வத்திருப்பராய்த் துறையுந்தொழுவானண்ணினர்.

(இ-ள்.) சிலந்திக்கருளுங்கழல்வணங்கி=சிலந்திப்பூச்சிக்குக் கோச்செங்கட்சோ ழனாக அருளிச்செய்த திருவடியைவணங்கி; செஞ்சொன்மாலைபலபாடி=செப்பமான

---

† வேது-என்பது—வெப்பம்.

திருநாவுக்கரசர் திருப்பைஞ்ஞீலியை நோக்கிவருகையில், அப்பசியால் வருந்தியதறிந்து சிவபெருமான் அங்கே சோலையும் அமைத்து தாம் அந்தணராக்கொண்டு பொதிசோறுதவ இளைப்பாறினர் பின்னர் யாமென்று அவர் இளைப்பாறியதறிந்து நீரெங்கே செல்கின்றீரெனத் தாம் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்வதாகச் சொல்லத் தாமும் தொடர்ந்து மறைந்தனர்.

சொல்லாலாகிய திருப்பதிகமாலைகள் பலவற்றைப்பாடி; இலங்குசடையார்=விளங்கிய சடையையுடைய சிவபிரான் வீற்றிருந்தருளும்; எறும்பியூர்மலையுமிறைஞ்சிப்பாடிப்பின்=திருவெறும்பியூர் மலையையும்வணங்கித் திருப்பதிகம்பாடி அதன்பின்பு; மலர்ந்தசோதித்திருச்சிராப்பள்ளிமலையுங்கற்குடியும்=பரம்பிய சோதியையுடைய திருச்சிராப்பள்ளிமலையையும் கற்குடிமலையையும்;நலங்கொள்செல்வத்திருப்பராய்த்துறையும்=நன்மைமிக்க செல்வமுள்ள திருப்பராய்த்துறையையும்; தொழுவானண்ணினூர்=தொழுதற்குச்சென்றார்.—எ-று. (௩௦௨)

மற்றப்பதிகண்முதலான மருங்குள்ளனவுங்கைதொழுது
பொற்புற்றமைந்ததிருப்பணிகள் செய்துபதிகங்கொடுபோற்றி
யுற்றவருளாற்காவிரியை யேறியொன்னார்புரமெரியச்
செற்றசிலையார்திருப்பைஞ்ஞீ லியினைச்சென்றுசேர்கின்றார்.

(இ-ள்.) மற்றப்பதிகள்முதலான=அத்திருப்பதிகள்முதலான; மருங்குள்ளனவுங்கைதொழுது=அருகிலுள்ள திருவீங்கோய்மலை முதலியவற்றையும்வணங்கி;பொற்புற்றமைந்ததிருப்பணிகள்செய்து=சிறப்புற்றமைந்த பலதிருப்பணிகளைச்செய்து; பதிகங்கொடுபோற்றி=திருப்பதிகங்கொண்டு துதித்து; உற்றவருளாற்காவிரியையேறி=தம்மிடத்துள்ள திருவருள்வழியினால் காவிரியைக்கடந்து; ஒன்னார்புரமெரியச்செற்றசிலையார்=பகைவர்களது புரங்களையெரித்த வில்லையுடைய சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருப்பைஞ்ஞீலியினைச்சென்றுசேர்கின்றார்=திருப்பைஞ்ஞீலியென்னுந் தலத்தைச்சென்றடைவாராயினார்.—எ-று. (௩௦௩)

வழிபோம்பொழுதுமிகவிளைத்து வருத்தமுறநீர்வேட்கையொடு
மழிவாம்பசிவந்தணைந்திடவு மதற்குச்சித்தமலையாதே
மொழிவேந்தருமுன்னெழுந்தருள முருகார்சோலைப்பைஞ்ஞீலி
விழியேந்தியநெற்றியினார்தந் தொண்டர்வருத்தமீட்பாராய்.

(இ-ள்.) வழிபோம்பொழுதுமிகவிளைத்து=வழியிற்செல்லும்பொழுது அதனால் மிகவும் இளைப்படைந்து; வருத்தமுறநீர்வேட்கையொடும்=வருந்துதற்கேதுவாக நீர்வேட்கையும்; அழிவாம்பசிவந்தணைந்திடவும்=மிக்க பசியும் வரவும்; அதற்குச்சித்தமலையாதே=அதனால் திருவுள்ளம் சலியாது; மொழிவேந்தருமுன்னெழுந்தருள=வாகீசமுனிவரும் முன்னே எழுந்தருள; முருகார்சோலைப்பைஞ்ஞீலி=வாசனைகமழும் சோலைசூழ்ந்த திருப்பைஞ்ஞீலியில் வீற்றிருந்தருளும்; விழியேந்தியநெற்றியினார்=நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானார்; தந்தொண்டர்வருத்தமீட்பாராய்=தமது அடியாராகிய வாகீசமுனிவரது வருத்தத்தைத் தவிர்ப்பாராய்.—எ-று. (௩௦௪)

காவுங்குளமுமுன்சமைத்துக் காட்டிவழிபோங்கருத்தினான்
மேவுந்திருநீற்றந்தணராய் விரும்புபொதிசோறுங்கொண்டு
நாவின்றனிமன்னவர்க்கெதிரே நண்ணியிருந்தார்விண்ணின்மேற்
றாவும்புள்ளுமண்கிழிக்குந் தனியேனமுங்காண்பரியவர்தாம்.

(இ-ள்.) காவுங்குளமுமுடனமைத்துக்காட்டி=ஒருசோலையையுங் குளத்தையும் அவ்வழியில் முன்னே யுண்டாக்கிக்காட்டி; வழிபோங்கருத்தினால்=வழிநடந்துசெல்லுமெண்ணத்தோடு; மேவுந்திருநீற்றந்தணராய்=அங்கு வீற்றிருக்கும் மறையவராய்; விரும்புபொதிசோறுங்கொண்டு=விரும்பத்தக்க பொதிசோற்றையுங்கொண்டு; நாவின்

றனிமன்னவர்க்கெதிரோநண்ணியிருந்தார்=ஒப்பற்ற வாகீசமுனிவருக்கெதிரோ எழுந்தருளியிருந்தார்; விண்ணின்மேற்றுவும்புள்ளும்=ஆகாயத்தின்மீது முடிதேடிப்பரந்த அன்னமாகிய பிரமனும்; மண்கிழிக்குந்தனியேனமுங்காண்பரியவர்தாம்=அடிதேடி மண்ணைக்கீண்ட பன்றியாகிய திருமாலும் காணுதற்கரிய சிவபிரான்.—எ-று. (௬0ரு)

அங்கணிருந்தமறையவர்பா லாண்டவரசுமெழுந்தருள
வெங்கண்விடைவேதியர்நோக்கி மிகவும்வழிவந்திளைத்திருந்தீ
ரிங்கென்பாலேபொதிசோறுண் டிதனையுண்டுதண்ணீரிப்
பொங்குகுளத்திற்குடித்திளைப்புப் போக்கிப்போவீரெனப்புகன்றார்.

(இ-ள்.) அங்கணிருந்தமறையவர்பால்=அவ்விடத்து வீற்றிருந்த வேதியரிடத்து; ஆண்டவரசுமெழுந்தருள=வாகீசமுனிவரு மெழுந்தருள; வெங்கண்விடைவேதியர்நோக்கி=கோபக்கண்ணையுடைய இடபத்தை வாகனமாகக்கொண்டருளுஞ் சிவபிரானாகிய மறையவர்பார்த்து; மிகவும்வழிவந்திளைத்திருந்தீர்=நெடுந்தூரம் வழிநடந்து அதனால் இளைப்படைந்திருந்தீர்; இங்கென்பாலேபொதிசோறுண்டு=இங்கே என்னிடத்துப் பொதிசோறுளது; இதனையுண்டு=இப்பொதி சோற்றையுண்டு; தண்ணீரிப்பொங்குகுளத்திற்குடித்து=பொலிவினையுடைய இக்குளத்தில் நீரைக்குடித்து; இளைப்புப்போக்கிப்போவீரெனப்புகன்றார்=வழிவந்த இளைப்பை யகற்றிப்போமென்று சொன்னார்.—எ-று. (௬0சு)

நண்ணுந்திருநாவுக்கரசர் நம்பரருளென்றறிந்தார்போ
லுண்ணுமென்றுதிருமறையோ ருரைத்துப்பொதிசோறளித்தலுமே
யெண்ணிநினையாதெதிர்வாங்கி யினிதாவமுதுசெய்தினிய
தண்ணீரமுதுஞ்செய்தருளித் தூய்மைசெய்துதளர்வொழிந்தார்.

(இ-ள்.) நண்ணுந்திருநாவுக்கரசர்=அங்குவரும் வாகீசமுனிவர்; நம்பரருளென்றறிந்தார்போல்=சிவபிரான் றிருவருளென்று உணர்ந்தார்போன்று; உண்ணுமென்றுதிருமறையோருரைத்து=அவ்வேதியர் இதைப் புசியுமென்றுசொல்லி; பொதிசோறளித்தலுமே=கட்டமுதைக் கொடுக்கவும்; எண்ணிநினையாதெதிர்வாங்கி=தம்முள்ளத்துச் சிவபிரானென்பதைச் சிறிது முணராமல் அவரெதிரே அதனைவாங்கி; இனிதாவமுதுசெய்து=இனிமையோடு திருவமுதுசெய்து; இனியதண்ணீரமுதுஞ்செய்தருளி=இனிய நீரையுங் குளத்திற்பருகி; தூய்மைசெய்துதளர்வொழிந்தார்=வாய்பூசி இளைப்பு நீங்கினார்.—எ-று.

இது சிவபிரான் திருவருளென்று பொதுமையாலுணர்ந்ததன்றிச் சிறப்புவகையாலுணராமையின் அறிந்தார்போலென்றார். (௬0எ)

எய்ப்புநீங்கிநின்றவரை நோக்கியிருந்தமறையவனா
ரப்பாலெங்குநீர்போவ தென்றாரரசுமவர்க்கெதிரோ
செப்பவரியான்றிருப்பைஞ்ஞீ லிக்குப்போவதென்றுரைத்தா
ரொப்பிலாரும்யானங்குப் போகின்றேனென்றுடன்போந்தார்.

(இ-ள்.) எய்ப்புநீங்கிநின்றவரைநோக்கி=வழிநடந்த இளைப்பு நீங்கியிருந்த வாகீசமுனிவரைப்பார்த்து; இருந்தமறையவனார்=தாமும் வழிச்செல்வார்போல அங்கிருந்த வேதியரும்; அப்பாலெங்குநீர்போவதென்றார்=இனி எவ்விடத்து நீர் செல்வதென்று வினவினார்; அரசுமவர்க்கெதிரோசெப்புவார்=வாகீசமுனிவரும் அவரெதிர் சொல்

வாராயினர் எவ்வாறெனில்; யான்திருப்பைஞ்ஞீலிக்குப்போவதென்றுரைத்தார்=நான் திருப்பைஞ்ஞீலிக்குப் போவதென்றருளிச்செய்தார்; ஒப்பிலாரும்யானங்குப்போகின்றேனென்றுடன்போந்தார்=சிவபிரானாகிய மறையவரும் யானும் அவ்விடத்துச் செல்கின்றேனென்று அவருடன் சென்றருளினார்.—எ-று. (கூ0அ)

கூடவந்தும‌றையவனார் திருப்பைஞ்ஞீலிகுறுகியிட
வேடமவர்முன்மறைத்தலுமே மெய்ம்மைத்தவத்துமேலவர்தா
மாடல்புரிந்தாரடியேனைப் பொருளாவளித்தகருணையெனப்
பாடல்புரிந்துவிழுந்தெழுந்து கண்ணீர்மாரிபயில்வித்தார்.

(இ-ள்) கூடவந்தமறையவனார்=வாகீசமுனிவருடன்வந்த அவ்வேதியர்; திருப்பைஞ்ஞீலிகுறுகியிட=திருப்பைஞ்ஞீலியென்னும் திருப்பதிக்குவர; வேடமவர்முன் மறைத்தலுமே=அம்மறையவர் வேடத்தை அவ்வாகீசமுனிவர்முன்னே மறைக்கவும்: மெய்ம்மைத்தவத்துமேலவர்தாம்=மெய்மைதங்கிய தவத்தையுடைய வாகீசமுனிவர்; ஆடல்புரிந்தார்=நிருத்தஞ் செய்தருளும் சிவபிரான்; அடியேனைப்பொருளாவளித்தகருணையென=அடியேனை யொருபொருளாகக் கருதியபெருங்கருணை ஈதென்று; பாடல்புரிந்துவிழுந்தெழுந்து=பதிகம்பாடி நிலமுற விழுந்தெழுந்து; கண்ணீர்மாரிபயில்வித்தார்=கண்ணீர் மழையைச்சொரிந்தார்.—எ-று. இப்பதிகமிறந்துவிட்டது. (கூ0கூ)

பைஞ்ஞீலியினிலமர்ந்தருளும் பரமர்கோயில்சென்றெய்தி
மைஞ்ஞீலத்துமணிகண்டர் தம்மைவணங்கிமகிழ்சிறந்து
மெய்ஞ்ஞீர்மையினிலன்புருக விரும்புந்தமிழ்மாலைகள்பாடிக்
கைஞ்ஞீடியதந்திருத்தொண்டு செய்துகாதலுடனிருந்தார்.

(இ-ள்.) பைஞ்ஞீலியினிலமர்ந்தருளும்=திருப்பைஞ்ஞீலியென்னுந் திருப்பதியில் வீற்றிருந்தருளும்; பரமர்கோயில்சென்றெய்தி=சிவபிரான் திருக்கோயிலையடைந்து; மைஞ்ஞீலத்துமணிகண்டர்தம்மைவணங்கி=கரிய நீலமணிபோலும் கண்டத்தையுடைய சிவபிரானைவணங்கி; மகிழ்சிறந்து=மகிழ்கூர்ந்து; மெஞ்ஞீர்மையினிலன்புருக=மெய்ம்மைத் தன்மையோடு அன்பானது உருக; விரும்புதமிழ்மாலைகள்பாடி=யாவரும் விரும்பத்தக்க திருப்பதிகமாலைகளைப்பாடி; கைஞ்ஞீடியதந்திருத்தொண்டுசெய்து=திருக்கரத்தால் தாஞ்செய்தருளும் உழவாரத்தொண்டையுஞ்செய்து; காதலுடனிருந்தார்=விருப்போடு அங்கெழுந்தருளியிருந்தார்.—எ-று. (கூக0)

நாதர்மருவுதிருமலைக ளுடும்பதிகள்பலமிகவுங்
காதல்கூரச்சென்றிறைஞ்சிக் கலந்தவிசைவண்டமிழ்பாடி
மாதொர்பாகரருளாலே வடபாலுனேக்கிவாகீச
ராதிதேவரமர்ந்ததிரு வண்ணுமலையைநண்ணினர்.

(இ-ள்.) நாதர்மருவுதிருமலைகளுடும்பதிகள்பல=சிவபிரான் வீற்றிருந்தருளும் கொல்லிமுதலிய மலைகளிலுள்ள திருப்பதிகள் பலவற்றை; மிகவுங்காதல்கூரச்சென்றிறைஞ்சி=மிக்க விருப்போடுசென்றுவணங்கி; கலந்தவிசைவண்டமிழ்பாடி=இசையோடுகூடிய வளந்தங்கிய திருப்பதிகமாலைகளைப்பாடி; மாதொர்பாகரருளாலேவடபாலுனேக்கிவாகீசர்=சிவபிரான் திருவருளாலே வடதிசையைக்கருதி வாகீசமுனிவர்; ஆதிதேவரமர்ந்ததிருவண்ணுமலையைநண்ணினர்=சிவபிரான் வீற்றிருந்தருளும் திருவண்ணுமலையை யடைந்தார்.—எ-று. (கூகக)

செங்கண்விடையார்திருவண்ணா மலையைத்தொழுதுவலங்கொண்டு
துங்கவரையின்மிசையேறித் தொண்டர்தொழும்புக்கெதிர்நிற்கு
மங்கணரசைத்தொழுதெழுந்து திளைத்துத்திருநாவுக்கரசர்
தங்குபிறப்பேவீட்டினுக்கு மேலாம்பெருமைசாதித்தார்.

(இ-ள்.) செங்கண்விடையார்திருவண்ணாமலையைத்தொழுது—சிவந்த கண்களை யுடைய இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபிரான் வீற்றிருந்தருளும் திருவண்ணா மலையைவணங்கி; வலங்கொண்டு—வலமாகவந்து; துங்கவரையின்மிசையேறி—உயர் வாகிய மலையின்மீதேறி; தொண்டர்தொழும்புக்கெதிர்நிற்கும்—அடியார்செய்யும் பணி க்கிரங்கி வெளிப்பட்டுநிற்கும்; அங்கணரசைத்தொழுதெழுந்து—அழகிய கருணையையு டைய சிவபிரானைவணங்கி எழுந்து; திளைத்துத்திருநாவுக்கரசர்—ஆனந்தத்தில்முழுகி வாகீசமுனிவர்; தங்குபிறப்பே—ஒருவனுக்குக் கிடைத்தமானுடப்பிறவியே; வீட்டினு க்குமேலாம்பெருமைசாதித்தார்—வீடடைதற்கேதுவான மேலாம்பெருமை யுடைத் தென்பதை விளக்கிக்காட்டினார்.—எ-று. ஏகாரம்-தேற்றம்.

பெருமைசாதித்தலாவது:—உடற்புளகமும் ஆனந்தக்கண்ணீரும் பேரானந்தத் திற் றிளைத்தலும் கண்டார்க்கு இம்மானுடப்பிறவியே வீடடைதற்குச் சாதனமென்று ணர்த்திநிற்றல். (௫௧௨)

அண்ணாமலைமேன்மணிமலையை யாராவன்பினடியவர்தங்
கண்ணாரமுதைவிண்ணோரைக் காக்கக்கடலில்வந்தெழுந்த
வுண்ணாநஞ்சமுண்டானைக் கும்பிட்டுருகுஞ்சிந்தையுடன்
பண்ணார்பதிகத்தமிழ்பாடிப் பணிந்துபரவிப்பணிசெய்தார்.

(இ-ள்.) அண்ணாமலைமேன்மணிமலையை—திருவண்ணாமலையின்மேல் வீற்றிருந் தருளும் மாணிக்கமலையைப்போல்வாரை; ஆராவன்பினடியவர்தங்கண்ணாரமுதை— அடங்காத அன்பினையுடைய அடியவர்கள் கண்ணுக்குநிறைந்த அமுதம்போல்வாரை; விண்ணோரைக்காக்க—தேவர்களைக் காக்கும்பொருட்டு; கடலில்வந்தெழுந்தவுண்ணா நஞ்சமுண்டானை—பாற்கடலிலெழுந்த யாவருமுண்ணத்தகாத ஆலாகலத்தையமுதுசெ ய்த சிவபிரானை; கும்பிட்டுருகுஞ்சிந்தையுடன்—வணங்கிக் கசிந்துருகு முள்ளத்தோடு; பண்ணார்பதிகத்தமிழ்பாடி—இசைநிறைந்த தமிழ்த் திருப்பதிகமாலைகளைப்பாடி; பணி ந்துபரவிப்பணிசெய்தார்—வணங்கித் துதித்து கைத்திருத்தொண்டுசெய்தார்.—எ-று.()

திருவண்ணாமலை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கடூவி யுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட் சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவே யணியண்ணாமலையுளானே
நீதியால்நின்னையல்லால் நினையுமாநினைவிலேனே. (௧)

பண்டனைவென்றவின்சொற் பாவையோர்பங்கநீல
கண்டனேகார்கொள்கொன்றைக் கடவுளேகமலபாதா
வண்டனேயமரர்கோவே யணியண்ணாமலையுளானே
தொண்டனேனுன்னையல்லாற் சொல்லுமாசொல்லிலேனே. (௨)

உருவமுமுயிருமாகி யோதியவுலகுக்கெல்லாம்
பெருவினைபிறப்புவீடாய் நின்றவெம்பெருமான்மிக்க
வருவிபொன்சொரியுமண்ணு மலையுளாயண்டர்கோவே
மருவிநின்பாதமல்லான் மற்றொருமாடிலேனே. (௩)

பைம்பொனேபவளக்குன்றே பரமனேபால்வெண்ணீற்றாய்
செம்பொனேமலர்செய்பாதா சீர்தருமணியேமிக்க
வம்பொனேகொழித்துவீழு மணியணுமலையுளானே
யென்பொனேயுன்னையல்லா லேதுநானினைவிலேனே. (௪)

பிறையணிமுடியினானே பிஞ்ஞகாபெண்ணொர்பாகா
மறைவலாயிறைவாவண்டார் கொன்றையாய்வாமதேவா
வறைகழலமரரேத்து மணியணுமலையுளானே
யிறைவனேயுன்னையல்லா லியாதுநானினைவிலேனே. (௫)

புரிசடைமுடியின்மேலோர் பொருபுனற்கங்கைவைத்துக்
கரியுரிபோர்வையாகக் கருதியகாலகாலா
வரிகுலமலிந்தவண்ணு மலையுளாயலரின்மிக்க
வரிமிகுவண்டுபண்செய் பாதநான்மறப்பிலேனே. (௬)

இரவியுமதியும்விண்ணு மிருநிலம்புனலுங்காற்று
முரகமார்புவனமெட்டுந் திசையொளியுருவமானா
யரவமிழ்மணிகொள்சோதி யணியணுமலையுளானே
பரவுநின்பாதமல்லாற் பரமநான்பற்றிலேனே. (௭)

பார்த்தனுக்கன்றுநல்கிப் பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கை நெடுமுடிநிலாவவைத்தா
யார்த்துவந்தாண்டுகொண்ட வணியணுமலையுளானே
தீர்த்தனேநின்றன்பாதத் திறமலால்திறமிலேனே. (௮)

பாலுநெய்முதலாய்மிக்க பசுவிலைந்தாடுவானே
மாலுநான்முகனுங்கூடிக் காண்கிலாவகையுணின்றா
யாலுநீர்கொண்டல்பூக மணியணுமலையுளானே
வாலுடைவிடையாயுன்றன் மலரடிமறப்பிலேனே. (௯)

இரக்கமொன்றியாதுமில்லாக் காலனைக்கடந்தவெம்மா
னுரத்தினால்வரையையூக்க வொருவிரனுதியினாலே
யரக்கனைநெரித்தவண்ணு மலையுளாயமரரேறே
சிரத்தினால்வணங்கியேத்தித் திருவடிமறப்பிலேனே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அருணசலேசுவரர்-தேவியார்-உண்ணாமுலையம்மை.

பணியார்வேணிச்சிவபெருமான் பாதம்போற்றிப்பணிசெயுநாண்
மணியார்கண்டத்தெம்பெருமான் மண்மேன்மகிழுமிடமெங்குந்
தணியாக்காதலுடன்சென்று வணங்கித்தக்கபணிசெய்வா
ரணியார்தொண்டைத்திருநாட்டி லருளாலணைவாராயினர்.

(இ-ள்.) பணியார்வேணிச்சிவபெருமான்=பாம்புகள்தங்கிய சடைமுடியையுடைய சிவபிரான்; பாதம்போற்றிப்பணிசெயுநாள்=திருவடிகளைத்துதித்துத் திருப்பணி செய்துகொண்டிருக்குநாளில்; மணியார்கண்டத்தெம்பெருமான்=நீலமணிபோலும் திருமிடற்றையுடைய சிவபிரான்; மண்மேன்மகிழுமிடமெங்கும்=நிலவுலகின்கண் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருப்பதிகள்தோறும்; தணியாக்காதலுடன்சென்றுவணங்கி=அடங்காத பேரன்போடுசென்று தொழுது; தக்கபணிசெய்வார்=தக்க திருப்பணிகளைச் செய்வாராய்; அணியார்தொண்டைத்திருநாட்டில்=அழகிய திருத்தொண்டைநாட்டில்; அருளாலணைவாராயினர்=சிவபிரான் திருவருளினால் வாகீசமுனிவர் வழிச்செல்வாராயினர்.—எ-று. (௩கச)

காதல்செய்யுங்கருத்தினுடன் காடுமலையுங்கான்யாறுஞ்
சூதமலிதண்பணைப்பதிகள் பலவுங்கடந்துசொல்லினுக்கு
நாதர்போந்துபெருந்தொண்டை நன்னாடெய்திமுன்னாகச்
சீதமலர்மென்சோலைசூழ் திருவோத்தூரிற்சென்றடைந்தார்.

(இ-ள்.) காதல்செய்யுங்கருத்தினுடன்=தொண்டைநாட்டிலுள்ள திருப்பதிகளைத் தெரிசிக்கவேண்டுமென்னும் விருப்பம்மீக்கூரும் எண்ணத்தோடு; காடுமலையுங்கான்யாறும்=காடுகளும் மலைகளும் கான்யாறுகளும்; சூதமலிதண்பணைப்பதிகள்பலவுங்கடந்து=மாமரங்கள்நெருங்கிய குளிர்ந்த மருதநிலத்தூர்கள் பலவற்றையுங்கடந்து; சொல்லினுக்குநாதர்போந்து=வாகீசமுனிவரெழுந்தருளி;பெருந்தொண்டைநன்னாடெய்தி=பெருமைதங்கிய தொண்டைநாட்டையடைந்து; முன்னாகச்சீதமலர்மென்சோலைசூழ்=முன்னேகுளிர்ந்த மிருதுவானமலர்களையுடைய சோலைசூழ்ந்த; திருவோத்தூரிற்சென்றடைந்தார்=திருவோத்தூரென்னும் திருப்பதியை யடைந்தருளினர்.—எ-று. (௩கரு)

செக்கர்ச்சடையார்திருவோத்தூர்த் தேவர்பிரானர்தங்கோயில்
புக்குவலங்கொண்டெதிரிறைஞ்சிப் போற்றிக்கண்கள்புனல்பொழிய
முக்கட்பிரானைவிரும்புமொழித் திருத்தாண்டகங்கள்முதலாகத்
தக்கமொழிமாலைகள்சாத்திச் சார்ந்துபணிசெய்தொழுகுவார்.

(இ-ள்.) செக்கர்ச்சடையார்=செக்கர்போலும் சிவந்தசடையையுடைய; திருவோத்தூர்த்தேவர்பிரானர்கோயில்=திருவோத்தூரில்வீற்றிருந்தருளும்தேவர்க்குமுதல்வராகிய சிவபிரான் திருக்கோயிலில்; புக்குவலங்கொண்டெதிரிறைஞ்சிப்போற்றி=சென்றுவலமாகவந்து திருமுன்னேவணங்கித்துதித்து; கண்கள்புனல்பொழிய=கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம்சொரிய; முக்கட்பிரானைவிரும்புமொழித்திருத்தாண்டகங்கண்முதலாக=சிவபிரானைவிரும்பிப்பாடும் மொழிகளையுடைய திருத்தாண்டகங்கள்முதலாக; தக்கமொழிமாலைகள்சாத்தி=தக்கதிருப்பதிகமாலைகளைச் சாத்தி; சார்ந்துபணிசெய்தொழுகுவார்=அங்கிருந்து திருப்பணிசெய்வாராயினர்.—எ-று. (௩கசு)

செய்யவையர்திருவோத்தூ ரேத்திப்போந்துசெழும்புவன
முய்யநஞ்சுண்டருளுமவ ருறையும்பதிகள்பலவணங்கித்

றைதயறழுவக்குழைந்தபிரான் றங்குந்தெய்வப்பதியென்று
வையமுழுதுந்தொழுதேத்து மதில்சூழ்காஞ்சிமருங்கணைந்தார்.

(இ-ள்.) செய்யமெய்யர்திருவோத்தூரேத்திப்போந்து=சிவந்த திருமேனியை யுடையசிவபிரான் வீற்றிருந்தருளும் திருவோத்தூரென்னுந் தலத்தைத்துதித்து அங்கு நின்றும்நீங்கி; செழும்புவனமுய்யநஞ்சுண்டருளுமவர்=செழுமையினையுடைய புவனங் களிலுள்ளார் பிழைக்கும்பொருட்டு ஆலாகலத்தை யமுதுசெய்தருளும் சிவபிரான்; உறையும்பதிகள்பலவணங்கி=வீற்றிருந்தருளும் திருப்பதிகள்பலவற்றையுந்தொழுது; றைதயறழுவக்குழைந்தபிரான்=காமாட்சிதேவியார்தழுவுங்கால்திருமேனிகுழைந்த ஏகா ம்பரநாதர்; தங்குந்தெய்வப்பதியென்று=வீற்றிருந்தருளும் தெய்வீகமான திருப்ப தியென்று; வையமுழுதுந்தொழுதேத்தும்=நிலவுலகமுழுதுந் தொழுதுதுதிக்கும்; மதில் சூழ்காஞ்சிமருங்கணைந்தார்=மதில்சூழ்ந்த காஞ்சிநகரத்தின் சமீபத்தையடைந்தார். எ-று.

ஞாலமுய்யத்திருவதிகை நம்பர்தம்பேரருளினாற்
சூலைமடுத்துமுன்னாண்ட தொண்டர்வரப்பெற்றோமென்று
காலைமலருங்கமலம்போற் காஞ்சிவாணர்முகமெல்லாஞ்
சாலமலர்ந்துகளிசிறப்பத் தழைத்தமனங்கடாங்குவார்.

(இ-ள்.) ஞாலமுய்யத்திருவதிகைநம்பர்தம்பேரருளினால்=உலகத்தாரீடேறத்தி ருவதிகையில் வீற்றிருந்தருளும் சிவபிரான்திருவருளினால்; சூலைமடுத்துமுன்னாண்ட= சூலைநோயைவிடுத்து முன்னே அடிமைக்கொண்ட; தொண்டர்வரப்பெற்றோமென்று= வாகீசமுனிவரெழுந்தருளப் பெற்றோமென்று; காலைமலருங்கமலம்போல்=விடியற்கா லத்தில் மலரும்தாமரைமலரையொத்து; காஞ்சிவாணர்முகமெல்லாஞ்சாலமலர்ந்து= காஞ்சிநகரத்தில் வாழ்கின்றவர்கள் முகங்களெல்லாம் மிகவும்மலர்ந்து; களிசிறப்பத்த ழைத்தமனங்கடாங்குவார்=களிப்போங்கத் தளிர்த்த மனமுடையவர்களானார்கள். ()

மாடவீதிமறுகெல்லா மணிவாயில்களிற்றோரணங்க
ணீடுகதலியுடன்கமுகு நெருங்குநிறைபொற்குடந்தீபந்
தோடுகுலவுமலர்மாலை சூழ்ந்தவாசப்பந்தர்களு
மாடுகொடியுமுடனெடுத்தங் கணிநீள்காஞ்சியலங்கரித்தார்.

(இ-ள்.) மாடவீதிமறுகெல்லாம்=மாடவீதியும் அதைச்சேர்ந்தகுறுந்தெருக்களு மாகிய எல்லா இடங்களிலுமுள்ள; மணிவாயில்களிற்றோரணங்கள்=அழகியதிருவாயி ல்களில் மகரதோரணங்களையும்; நீடுகதலியுடன்கமுகு=உயர்ந்தவாழைமரங்களோடு கமுகமரங்களையும்; நெருங்குநிறைபொற்குடந்தீபம்=நெருங்கியநீர்நிறைந்த பொற்குட ங்களையும் தீபங்களையும்; தோடுகுலவுமலர்மாலை=இதழ்விண்டலர்ந்த பூமாலைகளையும்; சூழ்ந்தவாசப்பந்தர்களும்=சூழ்ந்தவாசனை கமழும்தண்ணீர்ப்பந்தர்களையும்; ஆடுகொடி யுமுடனெடுத்து=ஆடுகின்றகொடிகளையும்நிரைத்து; அங்கணிநீர்காஞ்சியலங்கரித்தார்= அவ்விடத்து அழகுமிக்ககாஞ்சிநகரத்தை அலங்காரஞ்செய்தார்கள்.—எ-று (கூகக)

தொண்டரீண்டியெதிர்கொள்ள வெழுந்துசொல்லுக்கரசர்பாற்
கொண்டவேடப்பொலிவினொடுங் குலவும்வீதிபணிசெய்யு
மண்டரறிதற்கரியதிரு வலகுமுதலாமவையேந்தி
யிண்டைபுனைந்தசடைமுடியார்க் கன்பர்தம்மையெதிர்கொண்டார்.

(இ-ள்.) தொண்டரீண்டியெதிர்கொள்ளவெழுந்து=அடியார்கூட்டம் நெருங்கி எதிர்கொள்ளும் படிவந்து; சொல்லுக்கரசர்பால்=வாகீசமுனிவரிடத்தில்; கொண்டவே

டப்பொலிவினொடும்=கொண்டவேடப் பொலிவோடும்; குலவும்வீதிபணிசெய்யும்= விளங்கிய திருவீதியிற் பணிசெய்கின்ற; அண்டரறிதற்கரிய=தேவர்களாலும் அறிதற்க ரிய பெருமையையுடைய; திருவலகுமுதலாமவையேந்தி=திருவலகுமுதலிய கருவிக ளைத் தாங்கிக்கொண்டு; இண்டைபுனைந்தசடைமுடியார்க்கு=இண்டைமாலையைச் சூடி யசடைமுடியையுடைய சிவபிரானுக்கு, அன்பர்தம்மையெதிர்கொண்டார்=அடியாரா கிய வாகீசமுனிவரை எதிர்கொண்டார்.—எ-று.

முதலாமென்றதனல் உழவாரமுங்கொள்க. இண்டைமாலையென்பது கொண் டைமாலையிற் சிறிதாய் வட்டமாகச்சாத்துமோர்மாலை. (ருஉ0)

எதிர்கொண்டிறைஞ்சுஞ்சீரடியார் தம்மையிறைஞ்சியெழுந்தருளி
மதில்கொண்டணிந்தகாஞ்சிநகர் மறுகுட்போந்துவானநதி
குதிகொண்டிழிந்தசடைக்கம்பர் செம்பொற்கோயில்குறுகினு
ரதிர்கொண்டலைநேர்மணிமிடற்ரு ராண்டதிருநாவுக்கரசர்.

(இ-ள்) எதிர்கொண்டிறைஞ்சும்=தம்மை எதிர்கொண்டு வந்துதொழும்; சீரடி யார்தம்மை=சிறப்புப்பொருந்திய அடியார்களை; இறைஞ்சியெழுந்தருளி=தாமும் எதிர் வணங்கி அவரோடெழுந்தருளி; மதில்கொண்டணிந்தகாஞ்சிநகர்மறுகுட்போந்து=மதி லாற்சிறந்த காஞ்சிநகரத்தின் வீதியிற்புகுந்து; வானநதிகுதிகொண்டெழுந்தசடைக்கம் பர்=கங்கைநதியானது குதித்துப் பாய்கின்ற சடையையுடைய ஏகாம்பரநாதரது; செம்பொற்கோயில்குறுகினர்=சிவந்த பொன்னுலாகிய திருக்கோயிலையடைந்தார்; அதிர்கொண்டலைநேர்மணிமிடற்ருராண்டதிருநாவுக்கரசர்=அதிர்கின்ற மேகத்தையொ த்த நீலமணிபோலுந் திருமிடற்றையுடைய சிவபிரான் சூலைநோயைக்கொடுத்துத் தடுத் தாட்கொண்ட வாகீசமுனிவர்.—எ-று. (ருஉக)

திருவாசலினைப்பணிந்தெழுந்து செல்வத்திருமுன்றிலையணைந்து
கருவார்கச்சியேகம்பர் கனகமணிமாளிகைசூழ்ந்து
வருவார்செம்பொன்மலைவல்லி தழுவக்குழைந்தமணிமேனிப்
பெருவாழ்வினைமுன்கண்டிறைஞ்சிப் பேராவன்புபெருகினர்.

(இ-ள்.) திருவாசலினைப்பணிந்தெழுந்து=திருக்கோபுரத்தின் திருவாயிலைவண ங்கி யெழுந்து; செல்வத்திருமுன்றிலையடைந்து=செல்வம்நிறைந்த திருமுற்றத்தைய டைந்து; கருவார்கச்சியேகம்பர்=எப்பொருட்குங் காரணராகிய திருவேகம்பரது; கன கமணிமாளிகைசூழ்ந்துவருவார்=பொன்னுலும் மணியினுலுமியற்றிய விமானத்தை வல மாகவருகின்ற வாகீசமுனிவர்; செம்பொன்மலைவல்லிதழுவக்குழைந்த=மலையரசன் புதல்வியாகிய காமாட்சியம்மை தழுவுங்காரணத்தால் குழைவடைந்த; மணிமேனிப்பெ ருவாழ்வினை=மாணிக்கமணிபோலும் சிவந்த திருமேனியையுடைய பேரானந்தப்பெ ருக்கை; முன்கண்டிறைஞ்சி=முன்னே கண்டுவணங்கி; பேராவன்புபெருகினர்=நீங் காத பேரன்பைவளரச்செய்தார்.—எ-று. (ருஉஉ)

வார்ந்துசொரிந்தகண்ணருவி மயிர்க்காருறும்வரும்புளக
மார்ந்தமேனிப்புறம்பலைப்ப வன்புகரைந்தென்புள்ளலைப்பச்
சேர்ந்தநயனப்பயன்பெற்றுத் திளைப்பத்திருவேகம்பர்தமை
நேர்ந்தமனத்திலுறவைத்து நீடும்பதிகம்பாடுவார்.

(இ-ள்.) வார்ந்துசொரிந்தகண்ணருவி=பெருகிச் சொரிகின்ற கண்ணீராகிய அருவியும்; மயிர்க்காருறும்வரும்புளகம்=மயிர்க்கால்கள்தோறும் வரும்புளகாங்கித

மும்; ஆர்ந்தமேனிப்புறம்பலேப்ப=பூரித்த திருமேனியின் புறம்பேகாண; அன்புகரைந்தென்புள்ளலேப்ப=அன்பானதுகரைந்து உள்ளே எலும்பை யுருக்க; சேர்ந்தநயனப்பயன்பெற்றுத்திளேப்ப=தமக்குக்கிடைத்த கண்ணுலாகிய பயனைப்பெற்று ஆனந்தத்தில் முழுக; திருவேகம்பர்தமை=ஏகாம்பரநாதரை; நேர்ந்தமனத்திலுறவைத்து=உருகிய மனதிலே பொருந்தும்படி வைத்து; நீடும்பதிகம்பாடுவார்=உயர்ந்த திருப்பதிகத்தைப் பாடுவாராயினர்.—எ-று. (நஉந)

வேறு.

கரவாடும்வன்னெஞ்சர்க் கரியானையென்றெடுத்துப்
பரவாயசொன்மாலைத் திருப்பதிகம்பாடியபின்
விரவார்தம்புரமெரித்த விடையவனர்வெள்ளையெயிற்
றரவாரம்புனைந்தவர்தந் திருமுன்றிற்புறத்தணைந்தார்.

(இ-ள்.) கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானையென்றெடுத்து=கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானையென்று முதலெடுத்து; பரவாயசொன்மாலைத்திருப்பதிகம்பாடியபின்=துதித்தற்குரிய சொல்லாலாகிய திருப்பதிகமாலையைப் பாடியபின்பு; விரவார்தம்புரமெரித்தவிடையவனர்=அசுரர்களது முப்புரத்தையெரித்த இடபவாகனத்தையுடையவராகிய; வெள்ளையெயிற்றரவாரம்புனைந்தவர்தம்=வெள்ளியபற்களையுடைய பாம்பாகிய ஆபரணத்தையணிந்த சிவபிரானது; திருமுன்றிற்புறத்தணைந்தார்=திருக்கோயிலின் திருமுற்றத்திற்குப் புறத்தேவந்தருளினர்.—எ-று. (நஉச)

திருவேகம்பம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரவாடும்வன்னெஞ்சர்க் கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானை விடையேறும்வித்தகனை
யரவாடச்சடைதாழ வங்கையிலனலேந்தி
யிரவாடும்பெருமானை யென்மனத்தேவைத்தேனே. (க)

தேனேக்குங்கிளிமழலை யுமைகேள்வன்செழும்பவளந்
தானேக்குந்திருமேனி தழலுருவாஞ்சங்கரனை
வானேக்கும்வளர்மதிசேர் சடையானைவானேர்க்கு
மேனேர்க்கும்பெருமானை யென்மனத்தேவைத்தேனே. (உ)

கைப்போதுமலர்தூவிக் காதலித்துவானேர்கள்
முப்போதுமுடிசாய்த்துத் தொழநின்றமுதலவனை
யப்போதுமலர்தூவி யைம்புலனுமகத்தடக்கி
யெப்போதுமுனியானை யென்மனத்தேவைத்தேனே. (ந)

அண்டமாயாதியா யருமறையோடைம்பூதப்
பிண்டமாயுலகுக்கோர் பெய்பொருளாம்பிஞ்ஞகனைத்
தொண்டர்தாமலர்தூவிச் சொன்மாலைபுனைகின்ற
விண்டைசேர்சடையானை யென்மனத்தேவைத்தேனே. (ச)

ஆறேறுசடையானை யாயிரம்பேரம்மானைப்
பாறேறுபடுதலையிற் பலிகொள்ளும்பரம்பரனை

நீறேறுதிருமேனிநின்மலனை நெடுந்தூவி
யேறேறும்பெருமானை யென்மனத்தேவைத்தேனே. (ரு)

தேசனைத்தேசங்கள் தொழநின்றதிருமாலாற்
பூசனைப்பூசனைக ளுகப்பானைப்பூவின்கண்
வாசனைமலைநிலநீர் தீவளியாகாசமா
மீசனையெம்மானை யென்மனத்தேவைத்தேனே. (சா)

நல்லானைநல்லான நான்மறையோடாறங்கம்
வல்லானைவல்லார்கள் மனத்துறையுமைந்தனைச்
சொல்லானைச்சொல்லார்ந்த பொருளானைத்துகளேது
மில்லானையெம்மானை யென்மனத்தேவைத்தேனே. (எ)

விரித்தானைநால்வர்க்கு வெவ்வேறுவேதங்கள்
புரித்தானைப்பதஞ்சந்திப் பொருளுருவாம்புண்ணியனைத்
தரித்தானைக்கங்கைநீர் தாழ்சடைமேல்மதின்மூன்று
மெரித்தானையெம்மானை யென்மனத்தேவைத்தேனே. (அ)

ஆகம்பத்தரவணையா னயனறிதற்கரியானைப்
பாகம்பெண்ணாண்பாக மாய்நின்றபசுபதியை
மாகம்பமறையோது மிறையானைமதிட்கச்சி
யேகம்பமேயானை யென்மனத்தேவைத்தேனே. (கூ)

அடுத்தானையுரித்தானை யருச்சுனற்குப்பாசுபதங்
கொடுத்தானைக்குலவரையே சிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப்புரமெரியச் சுனைமல்குகயிலாய
மெடுத்தானைத்தடுத்தானை யென்மனத்தேவைத்தேனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்—ஏகாம்பரநாதர்-தேவியார்—காமாட்சியம்மை.

கையார்ந்ததிருத்தொண்டு கழியமிகுங்காதலொடுஞ்
செய்யாநின்றேயெல்லாச் செந்தமிழ்மாலையும்பாடி
மையார்ந்தமிடற்றர்திரு மயானத்தைவலங்கொண்டு
மெய்யார்வமுறத்தொழுது விருப்பினுடன்மேவுவார்.

(இ-ள்.) கையார்ந்ததிருத்தொண்டு=கையாரச்செய்கின்ற உழவாரத்திருத்தொண்டை; கழியமிகுங்காதலொடுஞ்செய்யாநின்றே=மிகுந்த பெருவிருப்போடுசெய்து; எல்லாச்செந்தமிழ்மாலையும்பாடி=எல்லாச் செந்தமிழ்ப்பதிகமாலைகளையும் பாடியருளி; மையார்ந்தமிடற்றர்திருமயானத்தைவலங்கொண்டு=கருமைநிறந்தங்கிய திருமிடற்றை யுடைய சிவபிரான் வீற்றிருந்தருளும் திருமயானத்தை வலமாகவந்து; மெய்யார்வமுறத்தொழுது=மெய்ப்பத்தியோடுவணங்கி; விருப்பினுடன்மேவுவார்=விருப்பத்தோடுவீற்றிருந்தருள்வாராயினார்.—எ-று. (சூஉ௫)

சீர்வளருமதிற்கச்சி நகர்த்திருமேற்றளிமுதலா
நீர்வளருஞ்சடையவர்தா நிலவியுறையாலயங்க
ளார்வமுறப்பணிந்தேத்தி யாய்ந்ததமிழ்ச்சொன்மலராற்
சார்வுறுமாலைகள்சாத்தித் தகுந்தொண்டுசெய்திருந்தார்.

(இ-ள்.) சீர்வளருமதிற்கச்சிநகர்—சிறப்புத்தங்கிய மதில்சூழ்ந்த காஞ்சிநகரத்திலுள்ள; திருமேற்றளிமுதலா—திருமேற்றளிமுதலாக; நீர்வளருஞ்சடையவர்தாம்—கங்கைநதிவளருஞ் சடையையுடைய சிவபிரான்; நிலவியுறையாலயங்கள்—விளங்கி வீற்றிருக்கின்ற ஆலயங்களை; ஆர்வமுறப்பணிந்தேத்தி—விருப்போடுவணங்கித் துதித்து; ஆய்ந்த தமிழ்ச்சொன்மலராற்சார்வுறு—ஆராய்வாகிய தமிழ்ச்சொன் மலராற்சமைத்த; மாலைகள் சாத்தி—திருப்பதிகமாலைகளைச்சாத்தி; தகுந்தொண்டுசெய்திருந்தார்—தக்க திருப்பணிகளைச் செய்துகொண்டிருந்தார்.—எ-று. (௩௨௬)

அந்நகரிலவ்வண்ண மமர்ந்துறையுநாளின்கண்
மன்னுதிருமாற்பேறு வந்தணைந்துதமிழ்பாடிச்
சென்னிமிசைமதிபுனைவார் பதிபலவுஞ்சென்றிறைஞ்சித்
துன்னினார்காஞ்சியினைத் தொடர்ந்தபெருங்காதலினால்.

(இ-ள்.) அந்நகரிலவ்வண்ணமமர்ந்துறையுநாளின்கண்—அக்காஞ்சிநகரத்தில் அவ்வாறு விரும்பியிருக்கும்நாளில்; மன்னுதிருமாற்பேறுவந்தணைந்துதமிழ்பாடி—நிலைபெற்ற திருமாற்பேறென்னும் திருப்பதியையடைந்து திருப்பதிகம்பாடி; சென்னிமிசைமதிபுனைவார்—திருமுடியின்கண்ணே இளம்பிறையைச்சூடிய சிவபிரான் வீற்றிருந்தருளும்; பதிபலவுஞ்சென்றிறைஞ்சி—திருப்பதிகள் பலவற்றையும்சென்று வணங்கி; துன்னினார்காஞ்சியினை—காஞ்சியையடைந்தார்; தொடர்ந்தபெருங்காதலினால்—தம்மிடத்துதித்த பெருவிருப்போடு.—எ-று. (௩௨௭)

ஏகம்பன்காணவனென் னெண்ணத்தானெனப்போற்றிப்
பாகம்பெண்ணுருவானைப் பைங்கண்விடையுயர்த்தானை
நாகம்பூணுவந்தானை நலம்பெருகுந்திருநீற்றி
னாகந்தோயணியானை யணைந்துபணிந்தின்புற்றார்.

(இ-ள்.) ஏகம்பன்காணவனென்னெண்ணத்தானெனப்போற்றி—ஏகம்பன் காணவனென்னெண்ணத்தானென்று இறுதியில்வைத்துப் பதிகம்பாடி; பாகம்பெண்ணுருவானை—ஓர்பாகத்தில் பெண்ணுருவுடையவனை; பைங்கண்விடையுயர்த்தானை—பசிய கண்களையுடைய இடபக்கொடியை உயர்த்தவனை; நாகம்பூணுவந்தானை—பாம்பை ஆபரணமாக அணிந்தவனை; நலம்பெருகுந்திருநீற்றின்—நன்மைமிகுந்த விபூதியினால்; ஆகந்தோயணியானை—திருமேனியிற்றங்கிய அழகுடையவனை; அணைந்துபணிந்தின்புற்றார்—கிட்டிவணங்கி யின்படைந்தார்.—எ-று. இவ்விரண்டுங்குளகம். (௩௨௮)

திருவேகம்பம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கூற்றுவன்காண்கூற்றுவனைக்குமைத்தகோன்காண் குவலையன்காண் குவலையத்தின்னீரானான்காண், காற்றவன்காண்கனலவன்காண்கலிக்குமின்காண் கனபவளச்செம்மேனிகலந்தவெள்ளை, நீற்றவன்காணிலாவூருஞ்செ

ன்னியான்காணிறையார்ந்தபுனற்கங்கைநிமிர்சடைமே,லேற்றவன்காணெ ழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (க)

பரந்தவன்காண்பல்லுயிர்களாகியெங்கும் பணிந்தெழுவார்பாவமும் வினையும்போகத், துரந்தவன்காண்மேலரங்கண்ணியான்காண் டோற்றநிலை யிறுதிப்பொருளாய்வந்த, மருந்தவன்காண்வையங்கள்பொறைதீர்ப்பான் காண் மலர்தூவிநினைந்தெழுவாருள்ளநீங்கா, திருந்தவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (உ)

நீற்றவன்காணீராகித்தீயானான்கா ணிறைமழுவுந்தமருகமுமெரியுங் கையிற், றேற்றவன்காண்டோற்றக்கேடில்லாதான்காண் டுணையிலிகாண்டு ணையென்றுதொழுவாருள்ளம், போற்றவன்காண்புகழ்கடனைப்படைத்தா ன்றான்காண் பொறியரவும்விரிசடைமேற்புனலுங்கங்கை, யேற்றவன்கா ணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

தாயவன்காணுலகிற்குத்தன்னொப்பில்லாத் தத்துவன்காண்மலைமங் கைபங்காவென்பார், வாயவன்காண்வரும்பிறவிநோய்தீர்ப்பான்காண் வா னவர்க்குந்தானவர்க்குமண்ணுளோர்க்குஞ், சேயவன்காணினைவார்க்குச்சி த்தமாரத் திருவடியேயுள்கிநினைந்தெழுவாருள்ள, மேயவன்காணெழிலா ரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (ச)

அடுத்தானையுரித்தான்காண். (ரு)

அழித்தவன்காணெயின்மூன்றுமயில்வாயம்பா லெயாறுமிடைமருது மாள்வான்றான்காண், பழித்தவன்காணடையாரையடைவார்தங்கள் பற்ற வன்காண்புற்றரவநாணினான்காண், சுழித்தவன்காண்முடிக்கங்கையடியே போற்றுந் தூயமாமுனிவர்க்காப்பார்மேனிற்க, விழித்தவன்காணெழிலா ரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (சு)

அசைந்தவன்காணடமாடிப்பாடல்பேணி யழல்வண்ணத்தில்லடியு முடியுந்தேடப், பசைந்தவன்காண்பேய்க்கணங்கள்பரவியேத்தும் பான் மையன்காண்பரவிநினைந்தெழுவார்தம்பாற், கசிந்தவன்காண்கரியினுரிபோ ர்த்தான்றான்காண் கடலில்விடமுண்டமரர்க்கமுதமீய, விசைந்தவன்கா ணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

முடித்தவன்காண்வன்கூற்றைச்சீற்றத்தீயால் வலியார்தம்புரமூன்று ம்வேவச்சாபம், பிடித்தவன்காண்பிஞ்ஞகனும்வேடத்தான்காண் பிணைய ல்வெறிகமழ்கொன்றையரவுசென்னி, முடித்தவன்காண்மூவிலைநல்வேலி னான்காண் முழங்கியுருமெனத்தோன்றுமழையாய்மின்னி, யிடித்தவன்கா ணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே

வருந்தான்காண்மனமுருகிநினையாதார்க்கு வஞ்சன்காணஞ்செழு த்துநினைவார்க்கென்று, மருந்தவன்காண்வான்பிணிகடீரும்வண்ணம் வான

கமுமண்ணகமுமற்றுமாகிப், பரந்தவன்காண்படர்சடையெட்டுடையான்றான்காண் பங்கயத்தோன்றன்சிரத்தையேந்தியூரு, ரிரந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (கூ)

வெம்மானவுழுவையதளுரிபோர்த்தான்காண் வேதத்தின்பொருளான்காணென்றியம்பி, விம்மாநின்றழுவார்கட்களிப்பான்றான்காண் விடையேறித்திரிவான்காணடுஞ்செய்பூதத், தம்மான்காணகலிடங்கடாங்கினன்காணற்புதன்காண்சொற்பதமுங்கடந்துநின்ற, வெம்மான்காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (க0)

அறுத்தான்காணயன்சிரத்தையமரர்வேண்ட வாழ்கடலினஞ்சுண்டங்கணிநீர்க்கங்கை, செறுத்தான்காண்டேவர்க்குந்தேவன்றான்காண் டிசையனைத்துந்தொழுதேத்தக்கலைமான்கையிற், பொறுத்தான்காண்புகலிடத்தைநலியவந்து பொருகயிலையெடுத்தவன்றன்முடிதோளுலஞ், சிறுத்தான்காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஏகாம்பரநாதர், தேவியார் - காமாட்சியம்மை.

திருக்கச்சியேகம்பம் பணிந்தேத்தித்திங்களார்
நெருக்கச்செஞ்சடைக்கணிந்தார் நீடுபதிதொழநினைவார்
வருக்கைச்செஞ்சுளைபொழிதேன்வயல்விளக்குநாட்டிடைப்போய்ப்
பருக்கைத்திண்களிற்றுரியார் கழுக்குன்றின்பாங்கணைந்தார்.

(இ-ள்.) திருக்கச்சியேகம்பம்பணிந்தேத்தி=திருக்கச்சியேகம்பத்தை வணங்கித் துதித்து; திங்களார்நெருக்கச்செஞ்சடைக்கணிந்தார்=திங்களையும் ஆத்திமாலையையும் நெருக்கமாகிச் சிவந்த சடைமுடியின்கணணிந்தருளிய சிவபிரான்; நீடுபதிதொழநினைவார்=வீற்றிருந்தருளும் பிற திருப்பதிகளைத் தொழும்படி நினைகின்றவர்; வருக்கைச்செஞ்சுளைபொழிதேன்=பலாவினது சிவந்த சுளையினின்றும் பொழிகின்ற தேனானது; வயல்விளக்குநாட்டிடைப்போய்=வயல்களை விளையச்செய்யும் தொண்டைநாட்டின்கண்சென்று; பருக்கைத்திண்களிற்றுரியார்=பருத்த கையையுடைய வலிய யானையினது தோலைப்போர்த்த சிவபிரான் வீற்றிருந்தருளும்; கழுக்குன்றின்பாங்கணைந்தார்=திருக்கழுக்குன்றின் பக்கலில்வந்தார்.—எ-று. (ருஉகூ)

நீடுதிருக்கழுக்குன்றி னிருத்தனார்கழல்வணங்கிப்
பாடுதமிழ்த்தொடைபுனைந்து பாங்குபலபதிகளிலுஞ்
சூடுமிளம்பிறைமுடியார் தமைத்தொழுதுபோற்றிப்போய்
மாடுபெருங்கடலுடுத்த வான்மியூர்மருங்கணைந்தார்.

(இ-ள்.) நீடுதிருக்கழுக்குன்றினிருத்தனார்கழல்வணங்கி=உயர்ந்த திருக்கழுக்குன்றத்தில் வீற்றிருந்தருளும் சிவபிரான் திருவடிகளைவணங்கி; பாடுதமிழ்த்தொடைபுனைந்து=பாடுகின்ற தமிழ்ப்பதிகமாலைகளைச்சாத்தி; பாங்குபலபதிகளிலும்=அருகிலுள்ள பல திருப்பதிகளிலும்; சூடுமிளம்பிறைமுடியார்தமைத்தொழுது=இளம்பிறை

யைச்சூடிய திருமுடியையுடைய சிவபிரானைவணங்கி; போற்றிப்போய்—துதித்துச் சென்று; மாடுபெருங்கடலுடுத்தவான்மியூர்மருங்கணைந்தார்—அருகிற் பெரிய கடல்சூழ்ந்த திருவான்மியூரையடைந்தார்.—எ-று. (௬௰)

திருவான்மியூர்மருந்தைச் சேர்ந்துபணிந்தன்பினொடும்
பெருவாய்மைத்தமிழ்பாடி யம்மருங்குபிறப்பறுத்துத்
தருவார்தங்கோயில்பல சார்ந்திறைஞ்சித்தமிழ்வேந்தர்
மருவாருமலர்ச்சோலை மயிலாப்பூர்வந்தடைந்தார்.

(இ-ள்.) திருவான்மியூர்மருந்தைச்சேர்ந்து—திருவான்மியூரில் வீற்றிருந்தருளும் பிறவிநோய்க்கு மருந்தாயுள்ள சிவபிரானையடைந்து; பணிந்தன்பினொடும்—அன்போடு வணங்கி; பெருவாய்மைத்தமிழ்பாடி—பெரிய மெய்ம்மையாகிய தமிழ்த்திருப்பதிகங்களைப்பாடி; அம்மருங்கு—அத்திருவான்மியூரருகில்; பிறப்பறுத்துத்தருவார்தம்—பிறப்பை நீக்கி வீட்டைக்கொடுத்தருளும் சிவபிரானுடைய; கோயில்பலசார்ந்திறைஞ்சி—திருக்கோயில் பலவற்றை அடைந்துவணங்கி; தமிழ்வேந்தர்—வாகீசமுனிவர்; மருவாருமலர்ச்சோலை—வாசனைகமழும் பூஞ்சோலைகளையுடைய; மயிலாப்பூர்வந்தடைந்தார்—திருமயிலாப்பூரை வந்தடைந்தார்.—எ-று. (௬௧)

வரைவளர்மாமயிலென்ன மாடமிசைமஞ்சாடுந்
தரைவளர்சீர்த்திருமயிலைச் சங்கரனார்தாள்வணங்கி
யுரைவளர்மாலைகளணிவித் துழவாரப்படையாளி
திரைவளர்வேலைக்கரைபோய்த் திருவொற்றியூர்சேர்ந்தார்.

(இ-ள்.) வரைவளர்மாமயிலென்ன—மலையினிடத்து வளர்கின்ற பெருமைதங்கிய மயில்போல; மாடமிசைமஞ்சாடும்—மேல்மாடங்களின்மீது மேகங்கள் தவழ்கின்ற; தரைவளர்சீர்த்திருமயிலை—நிலவுலகின்கண் வளர்ந்த சிறப்பினையுடைய திருமயிலாப்பூரில் வாழும்; சங்கரனார்தாள்வணங்கி—சிவபிரானுடைய திருவடிகளைவணங்கி; உரைவளர்மாலைகளணிவித்து—சொல்நிறைந்த திருப்பதிகமாலைகளை அணிந்து; உழவாரப்படையாளி—உழவாரப்படையையுடைய வாகீசமுனிவர்; திரைவளர்வேலைக்கரைபோய்—அலைவீசுகின்ற கடற்கரையின் வழியேபோய்; திருவொற்றியூர்சேர்ந்தார்—திருவொற்றியூரை யடைந்தார்.—எ-று. (௬௨)

ஒற்றியூர்வளநகரத் தொளிமணிவீதிகள்விளக்கி
நற்கொடிமாலைகள்பூக நறுங்கதலிநிரைநாட்டிப்
பொற்குடங்கடூபங்க டீபங்கள்பொலிவித்து
மற்றவரையெதிர்கொண்டு கொடுபுக்கார்வழித்தொண்டர்.

(இ-ள்.) ஒற்றியூர்வளநகரத்து—திருவொற்றியூரென்னும் வளந்தங்கிய நகரத்தின்கணுள்ள; ஒளிமணிவீதிகள்விளக்கி—ஒளியினையுடைய அழகிய திருவீதிகளை விளக்கி; நற்கொடிமாலைகள்பூகம்—நல்ல கொடிகளையும் பூமாலைகளையும் கமுகமரங்களையும்; நறுங்கதலிநிரைநாட்டி—நல்ல வாழைமரங்களையும் வரிசையாகநிறுத்தி; பொற்குடங்கடூபங்கடீபங்கள்பொலிவித்து—பொன்மயமாகிய குடங்களையும் தூபங்களையும் தீபங்களையும் பொலிவாகச்செய்து; மற்றவரையெதிர்கொண்டு—அவ்வாகீசமுனிவரை எதிர்கொண்டு; கொடுபுக்கார்வழித்தொண்டர்—பரம்பரையாகத் தொண்டுசெய்கின்ற அடியார்கள் அழைத்துக்கொண்டு சென்றார்கள்.—எ-று. (௬௩)

திருநாவுக்கரசருமத் திருவொற்றியூரமர்ந்த
பொருநாகத்திண்சிலையார் கோபுரத்தையிறைஞ்சிப்புக்
கொருஞானத்தொண்டருட னுருகிவலங்கொண்டடியார்
கருநாமந்தவிர்ப்பாரைக் கைதொழுதுமுன்வீழ்ந்தார்.

(இ-ள்.) திருநாவுக்கரசரும்= வாகீசமுனிவரும்; அத்திருவொற்றியூரமர்ந்த= அந்தத் திருவொற்றியூரில் வீற்றிருந்தருளிய; பொருநாகத்திண்சிலையார்=ஒப்பற்ற மேருவாகிய வலிய வில்லையுடைய சிவபிரானது; கோபுரத்தையிறைஞ்சிப்புக்கு=கோபுரத்தைவணங்கி உள்ளேபுகுந்து; ஒருஞானத்தொண்டருடன்=ஒப்பற்ற சிவஞானத்தையுடைய அடியார்களோடு; உருகிவலங்கொண்டு=மனமுருகி வலமாகவந்து; அடியார்கருநாமந்தவிர்ப்பாரை=அடியவர்களது பிறவிநாமத்தை நீக்கியருளுமவரை; கைதொழுது முன்வீழ்ந்தார்=கைகுவித்துத் திருமுன்னேவிழுந்து வணங்கினர்.—எ-று. (ருஅச)

எழுதாதமறையளித்த வெழுத்தறியும்பெருமானைத்
தொழுதார்வமுறநிலத்திற் றேய்ந்தெழுந்தேயங்கமெலா
முழுதாயபரவசத்தின் முகிழ்த்தமயிர்க்கான்மூழ்க
விழுதாரைகண்பொழிய விதிர்ப்புற்றுவிம்மினர்.

(இ-ள்.) எழுதாதமறையளித்த=எழுதப்படாத ஒலிவடிவாகிய வேதங்களை அருளிச்செய்த; எழுத்தறியும்பெருமானைத்தொழுது=அரசனிறக்கிய வரியை ஒற்றியூர் நீங்கவென்று எழுதிய எழுத்தறிந்த பெருமானை வணங்கி; ஆர்வமுறநிலத்திற்றேய்ந்தெழுந்து=விருப்பு மிக்கூரப் பூமியில் விழுந்தெழுந்து; அங்கமெலாமுழுதாய=அங்கமுழுதுமுண்டாகிய; பரவசத்தின்முகிழ்த்த=ஆனந்த பரவசத்தால் முகிழ்த்த; மயிர்க்கான்மூழ்க=மயிர்க்கால்கள் மறையும்படி; விழுதாரைகண்பொழிய=விழுகின்ற அருவித்தாரை கண்ணினின்றும்பெருக; விதிர்ப்புற்றுவிம்மினர்=மெய்நடுங்கி விம்மியழுதார்.

வண்டோங்குஞ்செங்கமல மெனவெடுத்துமனமுருகப்
பண்டோய்ந்தசொற்றிருத்தாண் டகம்பாடிப்பரவுவார்
விண்டோய்ந்தபுனற்கங்கை வேணியார்திருவுருவங்
கண்டோங்குகளிசிறப்பக் கைதொழுதுபுறத்தணைந்தார்.

(இ-ள்.) வண்டோங்குஞ்செங்கமலமெனவெடுத்துமனமுருக=வண்டோங்குஞ் செங்கமலமென முதலெடுத்து மனமுருகும்படி; பண்டோய்ந்தசொற்றிருத்தாண்டகம் பாடிப்பரவுவார்=பண்ணமைந்த சொல்லாலாகிய திருத்தாண்டகத்தைப் பாடித்துதிக்கின்ற வாகீசமுனிவர்; விண்டோய்ந்தபுனற்கங்கைவேணியார்=விண்ணுலகத்தைச்சேர்ந்த நீர்நிறைந்த கங்கையைத்தரித்த சிவபிரானது; திருவுருவங்கண்டோங்குகளிசிறப்ப=திருவுருவத்தைத் தரிசித்து மிக்க களிப்பானது உண்டாக; கைதொழுதுபுறத்தணைந்தார்=கைகூப்பி வணங்கிப் புறம்பேவந்தார்.—எ-று. (ருஅரு)

திருவொற்றியூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டோங்குசெங்கமலக்கழுநீர்மல்கு மதமத்தஞ்செஞ்சடைமேன் மதியஞ்சூடித், திண்டோள்களாயிரமும்வீசிநின்று திசைசேரநடமாடிச் சிவலோகனு, ருண்டார்நஞ்சுலகுக்கோருறுதிவேண்டியொற்றியூர்மேயவொ

ளிவண்ணனார், கண்டேனான் கனவகத்திற்கண்டேற்கென்றன் கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங்கைவிட்டவே. (க)

ஆகத்தோர்பாம்பசைத்துவெள்ளேறேறி யணிகங்கைசெஞ்சடைமே லார்க்கச்சூடிப், பாகத்தோர்பெண்ணுடையாரானுமாவர் பசுவேறியுழித ருமெம்பரமயோகி, காமத்தாலங்கணையான்றன்னைவீழக் கனலாவெரிவிழி த்தகண்மூன்றினு, ரோமத்தானுன்மறைகளோதலோவா வொளிதிகழுமொ ற்றியூருறைகின்றாரே. (உ)

வெள்ளத்தடஞ்சடைமேல்விரும்பிவைத்தீர் வெண்மதியும்பாம்புமுட னேவைத்தீர், கள்ளத்தைமனத்தகத்தேகரந்துவைத்தீர் கண்டார்க்குப்பொ ல்லாதுகண்டீரல்லே, கொள்ளத்தானிசைபாடிப்பலியுங்கொள்ளீர் கோளர வுங்குளிர்மதியுங்கொடியுங்காட்டி, யுள்ளத்தைநீர்கொண்டீரோதலோவா வொளிதிகழுமொற்றியூருடையகோவே. (ங)

நரையார்ந்தவிடையேறிநீறுபூசி நாகங்கச்சரைக்கார்த்தோர்தலைகை யேந்தி, யுரையாவந்தில்புகுந்துபலிதான்வேண்ட வெம்மடிகளும்மூர்தா னேதோவென்ன, விரையாதேகேட்டியேல்வேற்கணல்லாய் விடுங்கலங்க ணெடுங்கடலுணின்றுதோன்றுந், திரைமோதக்கரையேறிச்சங்கமூருந் தி ருவொற்றியூரென்றார்தீயவாறே. (ச)

மத்தமாகளியானையுரிவைபோர்த்து வானகத்தார்தானகத்தாராகின்று, பித்தர்தாம்போலங்கோர்பெருமைபேசிப் பேதையரையச்சுறுத்திப்பெயர க்கண்டு, பத்தர்கடாம்பலருடனேகூடிப்பாடிப் பயின்றிருக்குமூரேதோப ணியீரென்ன, வொத்தமைந்தவுத்திரநாடீர்த்தமாக வொளிதிகழுமொற்றியூ ரொன்கின்றாரே. (ரு)

கடியவிடையேறிக்காளக்ண்டர் கலையோடுமழுவாளோர்கையிலேந்தி, யிடியபலிகொள்ளார்போவாரல்ல ரெல்லாந்தானிவ்வடிகள்யாரென்பாரே, வடிவுடையமங்கையுந்தாமுமெல்லாம் வருவாரையெதிர்கண்டோமயிலாப் புள்ளே, செடிபடுவெண்டலையொன்றேந்திவந்து திருவொற்றியூர்புக்கார் தீயவாறே. (சு)

வல்லராய்வானவர்களெல்லாங்கூடி வணங்குவார்வாழ்த்துவார்வந்து நிற்பா, ரெல்லையெம்பெருமானைக்காணோமென்ன வெவ்வாற்றாலெவ்வகை யாற்காணமாட்டார், நல்லார்கணான்மறையோர்கூடிநேடி நாமிருக்குமூர்ப ணியீரடிகேளென்ன, வொல்லைத்தான்றிரையேறியோதமீளு மொளிதிகழு மொற்றியூரொன்கின்றாரே. (எ)

நிலைப்பாடேநான்கண்டதேடிகேளாய் நெருநலைநற்பகலிங்கோரடிகள் வந்து, கலைப்பாடுங்கண்மலருங்கலக்கநோக்கிக் கலந்துபலியிடுவேனெங்கு ங்காணேன், சலப்பாடேயினியொருநாட்காண்பேனாகிற் றன்னாகத்தென்னா

கமொடுங்கும்வண்ண, மூலைப்பாடேபடத்தழுவிப்போகலொட்டே னொற்றியூருறைந்திங்கேதிரிவானையே. (அ)

மண்ணல்லைவிண்ணல்லைவலையமல்லை மலையல்லைகடலல்லைவாயுவல்லை, யெண்ணல்லையெழுத்தல்லையெரியுமல்லை யிரவல்லைபகலல்லையாவுமல்லை, பெண்ணல்லையாணல்லைபேடுமல்லை பிறிதல்லையானாயும்பெரியாய்நீயே,யுண்ணல்லைநல்லார்க்குத்தீயையல்லை யுணர்வரியவொற்றியூருடையகோவே.(கூ)

மருவுற்றமலர்க்குழலிமடவாளஞ்ச மலைதுளங்கத்திசைநடுங்கச்செறுத்துநோக்கிச், செருவுற்றவாளரக்கன்வலிதான்மாளத் திருவடியின்விரலொன்றாலலறவூன்றி, யுருவொற்றியங்கிருவரோடிக்காண வோங்கினவவ்வொள்ளழலாரிங்கேவந்து, திருவொற்றியூரநம்மூரொன்றுபோனார் செறிவளைகளொன்றொன்றாச்சென்றவாறே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாணிக்கத்தியாகர், தேவியார் - வடிவுடையம்மை.

விளங்குபெருந்திருமுன்றின் மேவுதிருப்பணிசெய்தே
யுளங்கொடிருவிருத்தங்க ளோங்குதிருக்குறுந்தொகைகள்
களங்கொடிருநேரிசைகள் பலபாடிக்கைதொழுது
வளங்கொடிருப்பதியதனிற் பலநாள்கள்வைகினார்.

(இ-ள்.) விளங்குபெருந்திருமுன்றின்மேவுதிருப்பணிசெய்தே=விளக்கமான பெரிய கோயில்வாசலிற் செய்தற்கரிய திருப்பணிகளைச்செய்து; உளங்கொடிருவிருத்தங்கள்=திருவுள்ளத்திலமைந்த திருவிருத்தங்களும்; ஓங்குதிருக்குறுந்தொகைகள்=உயர்வாகிய திருக்குறுந்தொகைகளும்; களங்கொடிருநேரிசைகள்=மிடற்றினின்று மெழுந் திருநேரிசைகளுமாகிய; பலபாடிக்கைதொழுது=பல திருப்பதிகங்களைப்பாடி வணங்கி; வளங்கொடிருப்பதியதனில்=வளந்தங்கிய திருவொற்றியூரில்; பலநாள்கள்வைகினார்=பலநாளளவும் வீற்றிருந்தருளினார்.—எ-று. (ருருஎ)

அங்குறையுநாளின்க ணருகுளவாஞ்சிவாலயங்க
ளெங்குஞ்சென்றினிதிறைஞ்சி யேத்துமவரிறையருளாற்
பொங்குபுனற்றிருவொற்றி யூர்தொழுதுபோந்துமையாள்
பங்குடையாரமர்ந்ததிருப் பாசூராம்பதியணைந்தார்.

(இ-ள்.) அங்குறையுநாளின்கண்=அத்திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கின்ற நாளில்; அருகுளவாஞ்சிவாலயங்களெங்கும்=அருகிலுள்ள சிவாலயங்களெங்கும்; சென்றினிதிறைஞ்சியேத்துமவர்=சென்று இனிதாகவணங்கித் துதிக்கின்ற வாகீசமுனிவர்; இறையருளால்=சிவபிரான் திருவருளினால்;பொங்குபுனற்றிருவொற்றியூர்தொழுதுபோந்து=பொலிவுதங்கிய புனல்சூழ்ந்த திருவொற்றியூரை வணங்கிச்சென்று; உமையாள்பங்குடையாரமர்ந்த=உமாதேவியாரை ஓர்கூற்றிலுடைய சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருப்பாசூராம்பதியடைந்தார்=திருப்பாசூரென்னுந் திருப்பதியையடைந்தருளினார்.—எ-று.

தலவிருட்சமாக மூங்கிலையுடைமையால் திருப்பாசூரென்றாயிற்று. (ருருஅ)

திருப்பாசூர்நகரெய்திச் சிந்தையினில்வந்தூறும்
விருப்பார்வமேற்கொள்ள வேயிடங்கொண்டுலகுய்ய
விருப்பாரைப்புரமூன்று மெரித்தருளவெடுத்ததனிப்
பொருப்பார்வெஞ்சிலையாரைத் தொழுதெழுந்துபோற்றுவார்.

(இ-ள்.) திருப்பாசூர்நகரெய்தி—திருப்பாசூரென்னுந் திருப்பதியையடைந்து; சிந்தையினில்வந்தூறும்—தமது திருவுள்ளத்தில் வந்துதிக்கும்; விருப்பார்வமேற்கொள்ள—ஆசையாகிய விருப்பம் மேற்கொண்டுதிக்க; வேயிடங்கொண்டுலகுய்யவிருப்பாரை—மூங்கிலை இடமாகக்கொண்டு உலகத்தாரீடேற எழுந்தருளி யிருக்கின்றவரை; புரமூன்றுமெரித்தருளவெடுத்த—முப்புரங்களையு மெரித்தருளும்படியேந்திய; தனிப்பொருப்பார்வெஞ்சிலையாரை—ஒப்பற்ற மேருவாகிய கொடிய வில்லையுடையவரை தொழுதெழுந்துபோற்றுவார்—வணங்கியெழுந்து துதிப்பாராயினர்.—எ-று. (௩௩௧)

முந்திமூவெயிலெய்த முதல்வனாரெனவெடுத்துச்
சிந்தைகரைந்துருகுதிருக் குறுந்தொகையுந்தாண்டகமுஞ்
சந்தநிறைநேரிசையு முதலானதமிழ்பாடி
யெந்தையார்திருவருள்பெற் றேகுவார்வாகீசர்.

(இ-ள்.) முந்திமூவெயிலெய்தமுதல்வனாரெனவெடுத்து—முந்தி மூவெயிலெய்த முதல்வனார் என்று முதலெடுத்து; சிந்தைகரைந்துருகுதிருக்குறுந்தொகையும்—மனங்கரைந் துருகுதற்கேதுவான திருக்குறுந்தொகையையும்; தாண்டகமுஞ்சந்தநிறைநேரிசையும்முதலான—தாண்டகத்தையும் அழகுநிறைந்த திருநேரிசைமுதலான; தமிழ்பாடி—தமிழ்ப்பதிகங்களையும்பாடி; எந்தையார்திருவருள்பெற்றேகுவார்வாகீசர்—எமது பிரானாரது திருவருளைப்பெற்றுக்கொண்டு செல்வாராயினர் வாகீசமுனிவர்.—எ-று.

திருப்பாசூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முந்திமூவெயிலெய்தமுதல்வனார்
சிந்திப்பார்வினைதீர்த்திடுஞ்செல்வனா
ரந்திக்கோன்றனக்கேயருள்செய்தவர்
பந்திச்செஞ்சடைப்பாசூரடிகளே. (க)

மடந்தைபாகமகிழ்ந்தமணாளனார்
தொடர்ந்தவல்வினைபோக்கிடுஞ்சோதியார்
கடந்தகாலனைக்கால்கொடுபாய்ந்தவர்
படர்ந்தநாகத்தர்பாசூரடிகளே. (உ)

நாறுகொன்றையுநாகமுந்திங்களு
மாறுஞ்செஞ்சடைவைத்தவமுதனார்
காறுகண்டத்தர்கையதோர்சூலத்தர்
பாறினொட்டினர்பாசூரடிகளே. (௩)

வெற்றியூருறைவேதியராவர்நல்
லொற்றியேறுகந்தேறுமொருவனார்

நெற்றிக்கண்ணினர்நீளரவந்தனைப்
பற்றியாட்டுவர்பாசூரடிகளே. (ச)

மட்டவிழ்ந்தமலர்நெடுங்கண்ணிபா
லிட்டவேட்கையராகியிருப்பவர்
துட்டரோலறியேனிவர்சூழ்ச்சிமை
பட்டநெற்றியர்பாசூரடிகளே. (ரு)

பல்லிலோடுகையேந்திப்பகலெலா
மெல்லிநின்றிடுபெய்பலியேற்பவர்
சொல்லிப்போய்ப்புகுமூரறியேன்சொலீர்
பல்குநீற்றினர்பாசூரடிகளே. (சா)

கட்டிவிட்டசடையர்கபாலிய
ரெட்டிநோக்கிவந்தில்புகுந்தவ்வவ
ரிட்டமாவறியேனிவர்செய்வன
பட்டநெற்றியர்பாசூரடிகளே. (எ)

வேதமோதிவந்தில்புகுந்தாரவர்
காதில்வெண்குழைவைத்தகபாலியார்
நீதியொன்றறியார்நிறைகொண்டனர்
பாதிவெண்பிறைப்பாசூரடிகளே. (அ)

சாம்பற்பூசுவர்தாழ்சடைகட்டுவ
ரோம்பன்மூதெருதேறுமொருவனர்
தேம்பல்வெண்மதிசூடுவர்தீயதோர்
பாம்புமாட்டுவர்பாசூரடிகளே. (கூ)

மாலினோடுமறையவன்றானுமாய்
மேலுங்கீழுமளப்பரிதாயவ
ராலினீழலறம்பகர்ந்தார்மிகப்
பால்வெண்ணீற்றினர்பாசூரடிகளே. (கo)

திரியுமூவெயில்செங்கணையொன்றினு
லெரியவெய்தனரேனுமிலங்கைக்கோ
னெரியவூன்றியிட்டார்விரலொன்றினாற்
பரியர்நுண்ணியர்பாசூரடிகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பாசூர்நாதர், தேவியார் - பசுபதிநாயகி.

அம்மலர்ச்சீர்ப்பதியையகன் றயலுளவாம்பதியனைத்தின்
மைம்மருவுங்களத்தாரை வணங்கிமகிழ்வொடும்போற்றி
மெய்ம்மைநிலைவழுவாத மேன்மைநெறிவிழுக்குடிமைச்
செம்மையினூர்பழையனூர்த் திருவாலவனம்பணிந்தார்.

(இ-ள்.) அம்மலர்ச்சீர்ப்பதியையகன்று—அந்த விசாலமான சிறப்பினையுடைய பாசூரென்னும் திருப்பதியைநீங்கி; அயலுளவாம்பதியனைத்தின்—அயலிலுள்ள திரு

ப்பதி எல்லாவற்றிலும் வீற்றிருந்தருளும்; மைம்மருவுங்களத்தாரைவணங்கி—கருமை தங்கிய திருமிடற்றினையுடைய சிவபிரானைவணங்கி; மகிழ்வொடும்போற்றி—மகிழ்ச்சி யோடு துதித்து; மெய்ம்மைநிலைவழுவாத—உண்மைநெறியில் நின்றும் தவறாத; மேன் மைநெறி—மேன்மையான ஒழுக்கத்தையுடைய; விழுக்குடிமைச்செம்மையினார்—உயர் ந்த குடிப்பிறப்பையுடைய மேன்மக்களாகிய வேளாளர்களிருக்கின்ற; பழையனூர்த்திரு வாலவனம்பணிந்தார்—பழையனூரின்கணுள்ள திருவாலங்காட்டை வணங்கினார். எ-று.

திருவாலங்காடுறையுஞ் செல்வர் தாமெனச்சிறப்பி
னொருவாதபெருந்திருத்தாண் டகமுதலாவோங்குதமிழ்ப்
பெருவாய்மைத்தொடைமாலை பலபாடிப்பிறபதியு
மருவார்வம்பெறவணங்கி வடதிசைமேல்வழிக்கொள்வார்.

(இ-ள்.) திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமென—திருவாலங்காடுறையுஞ் செல்வர்தாமென்று ஈற்றில்வைத்து; சிறப்பினொருவாதபெருந்திருத்தாண்டகமுதலா—சிற ப்பினின்றும் நீங்காத பெரிய திருத்தாண்டகமுதலாக; ஓங்குதமிழ்ப்பெருவாய்மைத்தொ டைமாலைபலபாடி—உயர்ந்த தமிழாலாகிய மிக்கமெய்ந்நிறைந்த பல திருப்பதிகமாலை களைப்பாடி; பிறபதியுமருவார்வம்பெறவணங்கி—பிறதிருப்பதிகளையும் மிக்க அன்போடு வணங்கி; வடதிசைமேல்வழிக்கொள்வார்—வடதிசைநோக்கிச்செல்வாராயினார்.-எ-று.

திருவாலங்காடு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றாவுலகனைத்துமானார்தாமேயூழிதோறூழியுயர்ந்தார்தாமே
நின்றாகியெங்குநிமிர்ந்தார்தாமே நீர்வளிதீயாகாசமானார்தாமே
கொன்றாடுங்கூற்றையுதைத்தார்தாமே கோலப்பழனையுடையார்தாமே
சென்றாடுதீர்த்தங்களானார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. க

மலைமகளைப்பாகமமர்ந்தார்தாமே வானோர்வணங்கப்படுவார்தாமே
சலமகளைச்செஞ்சடைமேல்வைத்தார்தாமேசரணென்றிருப்பார்கட்கன்பர்
பலபலவும்வேடங்களானார்தாமே பழனைபதியாவுடையார்தாமே [தாமே
சிலைமலையாமூவெயிலுமட்டார்தாமேதிருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

ஆவுற்றவைந்துமுகந்தார்தாமே யளவில்பெருமையுடையார்தாமே
பூவுற்றநாற்றமாய்நின்றார்தாமே புனிதப்பொருளாகிநின்றார்தாமே
பாவுற்றபாடலுகப்பார்தாமே பழனைபதியாவுடையார்தாமே
தேவுற்றடிபரவநின்றார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (ங)

நாறுபூங்கொன்றைமுடியார்தாமே நான்மறையோடாறங்கஞ்சொன்னார்தாமே
மாறிலாமேனியுடையார்தாமே மாமதியஞ்செஞ்சடைமேல்வைத்தார்தாமே
பாறினார்வெண்டலையிலுண்டார்தாமே பழனைபதியாவுடையார்தாமே
தேறினார்சித்தத்திருந்தார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (ச)

அல்லும்பகலுமாய்நின்றார்தாமே யந்தியுஞ்சந்தியுமானார்தாமே
சொல்லும்பொருளெலாமானார்தாமேதோத்திரமுஞ்சாத்திரமுமானார்தாமே
பல்லுரைக்கும்பாவெலாமானார்தாமே பழனைபதியாவுடையார்தாமே
செல்லுநெறிகாட்டவல்லார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

தொண்டாய்ப்பணிவார்க்கணியார்தாமே தூநீறணியுஞ்சுவண்டர்தாமே
தண்டாமரையானுமாலுந்தேடத் தழலுருவாயோங்கிநிமிர்ந்தார்தாமே
பண்டானிசைபாடநின்றார்தாமே பழனைபதியாவுடையார்தாமே
திண்டோள்களெட்டுமுடையார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

மையாருங்கண்டமிடற்றார்தாமே மயானத்திலாடல்மகிழ்ந்தார்தாமே
யையாறுமாரூருமானைக்காவு மம்பலமுங்கோயிலாக்கொண்டார்தாமே
பையாடரவமசைத்தார்தாமே பழனைபதியாவுடையார்தாமே
செய்யாள்வழிபடவுநின்றார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

விண்முழுதுமண்முழுதுமானார்தாமே மிக்கோர்களேத்துங்குணத்தார்தாமே
கண்விழியாற்காமனையுங்காய்ந்தார்தாமே காலங்களூழிகடந்தார்தாமே
பண்ணியலும்பாடலுகப்பார்தாமே பழனைபதியாவுடையார்தாமே
திண்மழுவாளேந்துகரத்தார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

காரார்கடனஞ்சையுண்டார்தாமே கயிலைமலையையுடையார்தாமே
யூராவேகம்பமுகந்தார்தாமே யொற்றியூர்பற்றியிருந்தார்தாமே
பாரார்புகழப்படுவார்தாமே பழனைபதியாவுடையார்தாமே
தீராதவல்வினைநோய்தீர்ப்பார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

மாலைப்பிறைசென்னிவைத்தார்தாமே வண்கயிலைமாமலையைவந்தியாத
நீலக்கடல்சூழிலங்கைக்கோனை நெரியவிரலாலடர்த்தார்தாமே
பாலொத்தமேனிநிறத்தார்தாமே பழனைபதியாவுடையார்தாமே
சீலத்தாரேத்துந்திறத்தார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. ()

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஊர்த்ததாண்டவேசுரர்-தேவியார்-வண்டார்குழலியம்மை.

பல்பதியுநெடுங்கிரியும் படர்வனமுஞ்சென்றடைவார்
செல்கதிமுன்னளிப்பார்தந் திருக்காரிக்கரைபணிந்து
தொல்கலையின்பெருவேந்தர் தொண்டர்கள்பின்னும்பர்குழா
மல்குதிருக்காளத்தி மாமலைவந்தெய்தினர்.

(இ-ள்.) பல்பதியுநெடுங்கிரியும்படர்வனமுஞ்சென்றடைவார்=பல திருப்பதிகளும் நீண்டமலைகளும்படர்ந்த வனங்களுங்கடந்து அடைந்தவாகீசமுனிவர்; செல்கதிமுன்னளிப்பார்தந்திருக்காரிக்கரைபணிந்து=முத்தியை வெளிப்பட்டு நின்றுகொடுக்கும் சிவபிரான்வீற்றிருந்தருளும் திருக்காரிக்கரையென்னும்திருப்பதியைவணங்கிச் சென்று; தொல்கலையின்பெருவேந்தர்=வாகீசமுனிவர்; தொண்டர்கள்பின்னும்பர்குழாமல்கு=அடியார்களுக்குப்பின்னே தேவர்குழாங்கள் நெருங்கியிருக்கும்; திருக்காளத்திமாமலைவந்தெய்தினர்=திருக்காளத்தியென்னும் பெருமைதங்கிய மலையைவந்தடைந்தார்—எ-று.

பொன்முகலித்திருநதியின் புனிதநெடுந்தீர்த்தத்தின்
முன்மூழ்கிக்காளத்தி மொய்வரையின்றாழ்வரையிற்

சென்னியுறப்பணிந்தெழுந்து செங்கண்விடைத்தனிப்பாகர்
மன்னுமலைமிசையேறி வலங்கொண்டுவணங்குவார்.

(இ-ள்.) பொன்முகலித்திருநதியின்=பொன்முகலியென்னும் திருநதியின்; புனிதநெடுந்தீர்த்தத்தின்முன்மூழ்கி=தூய்மையான மிக்கநீரில் முன்னேமுழுகி; காளத்திமொய்வரையின்றாழ்வரையில்=திருக்காளத்தியென்னும் மொய்த்த திருமலையினது அடிவாரத்தில்; சென்னியுறப்பணிந்தெழுந்து=சிரசுபொருந்தும்படி வணங்கியெழுந்து; செங்கண்விடைத்தனிப்பாகர்=சிவந்தகண்களையுடைய இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபிரான்; மன்னுமலைமிசையேறிவலங்கொண்டுவணங்குவார்=வீற்றிருந்தருளும் மலையின்மேலேறி வலமாகவந்து வணங்குவாராயினர்.—எ-று. (௩௪௪)

காதணிவெண்குழையானைக் காளத்திமலைக்கொழுந்தை
வேதமொழிமூலத்தை விழுந்திறைஞ்சியெழுந்துபெருங்
காதல்புரிமனங்களிப்பக் கண்களிப்பப்பரவசமாய்
நாதனையென்கண்ணுள்ளா னெனுந்திருத்தாண்டகநவின்றார்.

(இ-ள்.) காதணிவெண்குழையானை=காதிலணிந்த வெள்ளிய சங்கக்குழையுடையவனை; காளத்திமலைக்கொழுந்தை=திருக்காளத்தியென்னும் திருமலையின்கண்வீற்றிருந்தருளுங் கொழுந்துபோல்வானை; வேதமொழிமூலத்தை=வேதத்தாலெடுத்துக்கூறப்படுங் காரணப்பொருளை; விழுந்திறைஞ்சியெழுந்து=நிலமுறவிழுந்து வணங்கியெழுந்து; பெருங்காதல்புரிமனங்களிப்ப=பேரன்பைவிளைக்கும் மனமானது களிப்படையவும்; கண்களிப்பப்பரவசமாய்=தரிசித்த கண்குளிரவும் ஆனந்த பரவசமடைந்து; நாதனையென்கண்ணுளானெனுந்திருத்தாண்டகநவின்றார்=நாதனை என்கண்ணுளானென்று இறுதியிலுடைய திருத்தாண்டகத்தைப் பாடியருளினர்.—எ-று. (௩௪௫)

திருக்காளத்தி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விற்றூணொன்றில்லாத நல்கூர்ந்தான்காண் வியன்கச்சிக்கம்பன்காண் பிச்சையல்லால், மற்றூணொன்றில்லாத மாசதுரன்காண் மயானத்துமைந்தன்காண் மாசொன்றில்லாப், பொற்றூண்காண்மாமணிநற் குன்றொப்பான்காண் பொய்யாதபொழிலேழுந் தாங்கிநின்ற, கற்றூண்காண்காளத்தி காணப்பட்ட கணநாதன்காணவனென் கண்ணுளானே. (க)

இடிப்பான்காணென்வினையை யேகம்பன்கா ணெலும்பர்பரணன்கா ணெல்லாமுன்னே, முடிப்பான்காண் மூவுலகுமாயினான்காண்முறைமுறையாலைம்பொறியும் வழுவாவண்ணம், படித்தான்றலையறுத்த பாசுபதன்காண் பராய்த்துறையான் பழனம்பைஞ்ஞீலியான்காண், கடித்தார்கமழ்கொன்றைக்கண்ணியான்காண் காளத்தியானவனென்கண்ணுளானே. (உ)

நாரணன்காணான்முகன்கா ணால்வேதன்காண் ஞானப்பெருங்கடற்கோர்நாவாயன்ன, பூரணன்காண்புண்ணியன்காண் புராணன்றான்காண் புரிசடைமேற்புனலேற்ற புனிதன்றான்காண், சாரணன்காண்சந்திரன்காண் கதிரோன்றான்காண் தன்மைக்கட்டானேகாண் டக்கோர்க்கெல்லாங், காரணன்காண்காளத்திகாணப்பட்ட கணநாதன்காணவனென் கண்ணுளானே.

செற்றான்கா ணென்வினையைத்தீயாடிகாண் டிருவொற்றியூரான்கா ண் சிந்தைசெய்வார்க், குற்றான்காணேகம்பமேவினான்கா னுமையாணற் கொழுநன்கா ணிமையோரேத்துஞ், சொற்றான்காண் சோற்றுத்துறையு ளான்காண் சுறாவேந்தனேவலத்தை நீறாநோக்கக், கற்றான்காண்காளத்தி காணப்பட்ட கணநாதன்காணவனென்கண்ணுளானே. (ச)

மனத்தகத்தான்றலைமேலான் வாக்கிலுள்ளான் வாயாரத்தன்னடியே பாடுந்தொண்ட, ரினத்தகத்தானிமையவர்தஞ் சிரத்தின் மேலானேழண் டத்தப்பாலா னிப்பாற்செம்பொன், புனத்தகத்தானறுங்கொன்றைப் போ தினுள்ளான் பொருப்பிடையானெருப்பிடையான் காற்றினுள்ளான், கனத் தகத்தான்கயிலாயத் துச்சியுள்ளான் காளத்தியானவனென்கண்ணுளானே.

எல்லாமுன்றோன்றுமே தோன்றினான்கா ணேகம்பமேயான் காணி மையோரேத்தப்,பொல்லாப்புலனைந்தும் போக்கினான்காண் புரிசடைமேற் பாய்கங்கை பூரித்தான்காண், நல்லவிடைமேற்கொண்டு நாகம்பூண்டு நளி சிரமொன்றேந்தியோர் நாணுயற்ற, கல்லாடைமேல்கொண்ட காபாலிகா ண் காளத்தியானவனென் கண்ணுளானே. (சு)

கரியுருவுகண்டத்தெங் கண்ணுளான்காண் கண்டன்காண்வண்டுண்ட கொன்றையான்கா, ணெரிபவளவண்ணன்கா ணேகம்பன்கா ணெண்டிசை யுந்தானாய குணத்தினான்காண், திரிபுரங்கடீயிட்டதீயாடிகாண் டீவினைகள் தீர்த்திடுமென் சிந்தையான்காண், கரியுரிவைபோர்த்துகந்தகபாலிகாண் கா ளத்தியானவனென் கண்ணுளானே. (எ)

இல்லாடிச்சில்பலிசென் றேற்கின்றான்கா ணிமையவர்கடொழுதிறை ஞ்ச விருக்கின்றான்காண், வில்லாடிவேடனா யோடினான்காண் வெண்ணூ லுஞ்சேர்ந்த வகலத்தான்காண், மல்லாடுதிரடோண்மேன் மழுவாளன்கா ண் மலைமகடன்மணாளன்காண் மகிழ்ந்துமுன்னாட், கல்லாலின்கீழிருந்தகா பாலிகாண் காளத்தியானவனென் கண்ணுளானே. (அ)

தேனப்பூவண்டுண்ட கொன்றையான்காண் டிருவேகம்பத்தான்காண் டேனார்ந்துக்க, ஞானப்பூங்கோதையாள்பாகத்தான்கா ணம்பன்காண்ஞான த் தொளியானான்காண், வானப்பேருருமறியவோடி மட்டித்துநின்றான்கா ண் வண்டார்சோலைக்,கானப்பேரூரான்காண் கறைக்கண்டன்காண் காளத் தியானவனென் கண்ணுளானே. (கூ)

இறையவன்காணேழுலகுமாயினான்கா ணேழ்கடலுஞ்சூழ்மலையுமாயி னான்காண், குறையுடையார்குற்றேவல் கொள்வான்றான்காண் குடமூக்கி ற்கீழ்க்கோட்டமேவினான்காண், மறையுடையவானோர் பெருமான்றான்கா ண் மறைக்காட்டுறையு மணிகண்டன்காண், கறையுடைய கண்டத்தெங் காபாலிகாண் காளத்தியானவனென் கண்ணுளானே. (க0)

உண்ணாவருநஞ்சமுண்டான்றான்கா ணூழித்தீயன்னான்கா ணுகப்பார் காணப், பண்ணாரப்பல்லிலயம் பாடினான்காண் பயின்றநால்வேதத்தின் ப ண்பினான்காண், அண்ணாமலையான்காணடியாரீட்ட மடியிணைகடொழுதே த்த வருளுவான்காண், கண்ணாரக்காண்பார்க்கோர் காட்சியான்காண் காள த்தியானவனென் கண்ணுளானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் - தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - காளத்திநாதர் - தேவியார் - ஞானப்பூங்கோதையார்.

மலைச்சிகரச்சிகாமணியின் மருங்குறமுன்னேநிற்குஞ்
சிலைத்தடக்கைக்கண்ணப்பர் திருப்பாதஞ்சேர்ந்திறைஞ்சி
யலைத்துவிழுங்கண்ணருவி யாகத்துப்பாய்ந்திழியத்
தலைக்குவித்தகையினராய்த் தாழ்ந்துபுறம்போந்தணைந்தார்.

(இ-ள்.) மலைச்சிகரச்சிகாமணியின்=திருக்காளத்திமலையின் அடிவாரச் சிகரத்தில் முளைத்த சிகாமணியினுடைய; மருங்குறமுன்னேநிற்கும்=வலப்பாலிற்பொருந்தத் திருமுன்னேநிற்கும்; சிலைத்தடக்கைக்கண்ணப்பர்=வில்லேந்திய நீண்டகையையுடைய கண்ணப்பநாயனாரது; திருப்பாதஞ்சேர்ந்திறைஞ்சி=திருவடிகளையடைந்து வணங்கி; அலைத்துவிழுங்கண்ணருவி=ததும்பி விழுகின்ற கண்ணீரருவியானது; ஆகத்துப்பாய்ந்திழிய=திருமேனியில்பெருகி சொரிய; தலைக்குவித்தகையினராய்=சிரசில் குவித்த கையையுடையவராய்; தாழ்ந்துபுறம்போந்தணைந்தார்=வணங்கிப் புறம்பே வந்தார்.—எ-று. (௩௪௬)

சேணிலவுதிருமலையிற் றிருப்பணியாயினசெய்து
தாணுவினையம்மலைமேற் றாள்பணிந்தகுறிப்பினாற்
பேணுதிருக்கயிலைமலை வீற்றிருந்தபெருங்கோலங்
காணுமதுகாதலித்தார் கலைவாய்மைக்காவலனார்.

(இ-ள்.) சேணிலவுதிருமலையில்=விண்ணுலகளவுமுயர்ந்த திருக்காளத்தி மலையில்; திருப்பணியாயினசெய்து=தாம்செய்யும் திருப்பணிகளைச்செய்து; தாணுவினையம்மலைமேற்றாள்பணிந்தகுறிப்பினால்=சிவபிரானை அத்திருக்காளத்தி மலையின்மேல் பிராட்டியாரோடு திருக்கயிலையில் வீற்றிருக்குங் கோலமாகவணங்கிய திருவுளக்குறிப்பால்; பேணுதிருக்கயிலைமலை=யாவராலும் துதிக்கத்தக்க திருக்கைலாயமலையில்; வீற்றிருந்தபெருங்கோலம்=வீற்றிருந்தருளும் பெரிய திருக்கோலத்தை; காணுமதுகாதலித்தார்=தரிசிக்க விரும்பினார்; கலைவாய்மைக்காவலனார்=நூல்களின் மெய்ம்மையுணர்ந்த வாகீச முனிவர்.—எ-று. (௩௪௭)

வேறு.

அங்கண்மாமலை மேன்மருந்தை வணங்கியாரரு ளான்மிகப்
பொங்குகாதலி னுத்தரத்திசை மேல்விருப்பொடு போதுவார்
துங்கமால்வரை கானியாறு தொடர்ந்தநாடு கடந்தபின்
செங்கண்மால்விடை யண்ணன்மேவு திருப்பருப்பத மெய்தினார்.

(இ-ள்.) அங்கண்மாமலைமேன்மருந்தைவணங்கி=இடமகன்ற பெரிய திருக்காளத்திமலையின்மேல் வீற்றிருந்தருளும் பிறவிநோய்க்கு மருந்தாயுள்ள சிவபிரானைவண

ங்கி; ஆரருளால்மிகப்பொங்குகாதலின்—நிறைந்த திருவருளினாலே மிகவும் அதிகரித்த பெருவிருப்போடு; உத்தரத்திசைமேல்விருப்பொடுபோதுவார்—உத்தரதிசையின்கண் அவாவோடு செல்கின்ற வாகீசமுனிவர்; துங்கமாமலைகானியாறு—உயர்வாகிய பெரிய மலைகளும் கான்யாறுகளும்; தொடர்ந்தநாடுகடந்தபின்—சேர்ந்தநாடுகள் பலவற்றைக் கடந்தபின்பு; செங்கண்மால்விடையண்ணன்மேவு—சிவந்த கண்களையுடைய திருமாலாகிய இடபத்தை வாகனமாகக் கொண்ட சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருப்பருப்பதமெய்தினார்—ஸ்ரீசைலத்தையடைந்தார்.—எ-று. (ருசஅ)

மானவிஞ்சையர் வானநாடர்கள் வானியக்கர்கள் சித்தர்கள்
கானகின்னரர் பன்னகாதிபர் காமசாரிக ளேமுதன்
ஞானமோனிக ளுநாளும்பணி வந்திறைஞ்சி நலம்பெறுந்
தானமான திருச்சிலம்பை வணங்கிவண்டமிழ் சாற்றினார்.

(இ-ள்.) மானவிஞ்சையர்வானநாடர்கள்—வீரத்தையுடைய வித்தியாதரர்களும் விண்ணுலகத்திலுள்ள தேவர்களும்; வானியக்கர்கள்சித்தர்கள்—வானின்கண் இயங்குகின்ற இயக்கர்களும் சித்தர்களும்; கானகின்னரர்பன்னகாதிபர்—கானம்பாடுகின்ற கின்னரர்களும் நாகலோகத்தாரும்; காமசாரிகளேமுதல்—இச்சைகளிற் சஞ்சரிக்கின்றவர்களுமன்றி; ஞானமோனிகள்—ஞானம்நிறைந்த மௌனிகளும்; நாளுநம்பணிவந்திறைஞ்சிநலம்பெறுந்தானமான—நாள்தோறும் சிவபிரானை வந்துவணங்கி நலம்பெறுதற்கிடமான; திருச்சிலம்பைவணங்கி—ஸ்ரீசைலத்தைவணங்கி; வண்டமிழ்சாற்றினார்—வளம்நிறைந்த திருப்பதிகத்தைப் பாடியருளினார்.—எ-று. (ருசகூ)

அம்மருங்கு கடந்துபோமவ ரார்கொள்சூல வயிற்படைச் [யா
செம்மல்வெண்கயி லைப்பொருப்பை நினைந்தெழுந்ததொர் சிந்தை
லெம்மருங்குமொர் காதலின்றி யிரண்டுபாலும் வியந்துளோர்
கைம்மருங்கணை யுந்தெலுங்கு கடந்துகன்னட மெய்தினார்.

(இ-ள்.) அம்மருங்குகடந்துபோமவர்—அத்திருப்பருப்பதத்தை நீங்கிச்செல்லுகின்ற வாகீசமுனிவர்; ஆர்கொள்சூலவயிற்படைச்செம்மல்—நிறைவுதங்கிய கூரிய சூலாயுதத்தையேந்திய சிவபிரான் வீற்றிருந்தருளும்; வெண்கயிலைப்பொருப்பைநினைந்து—வெள்ளிய கயிலைமலையைக் கருதிக்கொண்டு; எழுந்ததோர்சிந்தையால்—எழாநின்ற ஓர் கருத்துடன்; எம்மருங்குமோர்காதலின்றி—அந்நாட்டிள்ள எந்தத்தலங்களிலும் விருப்பமில்லாமல்; இரண்டுபாலும்வியந்துளோர்—இருபக்கத்திலும் வியந்துவருகின்ற அடியார்கள்; கைம்மருங்கணையுந்தெலுங்குகடந்து—தம்மிருமருங்குஞ் சூழ்ந்துவருகின்ற தெலுங்குநாட்டைக்கடந்து; கன்னடமெய்தினார்—கன்னடதேயத்தை யடைந்தார்.—எ-று. ()

கருநடங்கழி வாகவெய்திய பின்கலந்தவ னங்களுந்
திருநதித்துறை யாவையும்பயில் சேணெடுங்கிரி வட்டையும்
பெருநலங்கிளர் நாடுமெண்ணில பிற்படச்செறி பொற்பினால்
வருநெடுங்கதிர் கோலுசோலைய மாளவத்தினை நண்ணினார்.

(இ-ள்.) கருநடங்கழிவாகவெய்தியபின்—கன்னடதேசம் நீங்கும்படி போனபின்பு; கலந்தவனங்களுந்திருநதித்துறையாவையும்—நெருங்கிய பலவனங்களையும் அழகிய நதிக்கரைகள்முழுதும்; பயில்சேணெடுங்கிரிவட்டையும்—நெருங்கிய நெடுந்தூரத்திலுயர்ந்த மலைவழிகளும்; பெருநலங்கிளர்நாடுமெண்ணிலபிற்பட—பெரியவளமிக்க

நாடுமாகிய அளவில்லாத வழிகள் பிற்படும்படி; செறிபொழ்பினல்—மரங்களுயர்ந்து நெருங்கிய அழகினல்; வருநெடுங்கதிர்கோலும்—வராநின்ற சூரியன் வலமாகவருகின்ற; சோலையமாளவத்தினைநண்ணினர்—சோலையையுடைய மாளவதேசத்தையடைந்தார்.

அங்குமுற்றி யகன்றுபோகி யருஞ்சுரங்கள் கடந்துசென்
றெங்குமிக்க வறங்கணீடு மிலாடபூமி யிகந்துபோய்
மங்குல்சுற்றிய வெற்பினேடு வனங்களாறு கடந்தயற்
பங்கயப்பழ னத்துமத்திம பைதிரத்தினை யெய்தினர்.

(இ-ள்.) அங்குமுற்றியகன்றுபோகி—அந்நாட்டைக்கடந்து நீங்கிச்சென்று; அருஞ்சுரங்கள்கடந்துசென்று—அரியகாடுகளையுங் கடந்துபோய்; எங்குமிக்கவளங்கணீடும்—எவ்விடத்தும் மேலான வளங்களோங்கும்; இலாடபூமியிகந்துபோய்—இலாடதேசத்தைக்கடந்து சென்று; மங்குல்சுற்றியவெற்பினேடு—மேகங்கள் சூழ்ந்திருக்கின்ற மலைகளோடு; வனங்களாறுகடந்து—வனங்களையும் நதிகளையுந்தாண்டி; அயற்பங்கயப்பழனத்து—அருகில் தாமரைகளோடுகூடிய வயல்கள்சூழ்ந்த; மத்திமபைதிரத்தினையெய்தினர்—மத்தியதேயத்தையடைந்தார்.—எ-று.

மத்தியதேயமாவது:—பிரயாகைக்குமேற்கும் விநசத்திற்குக்கிழக்கும் ஆகிய தேசமென்றுணர்க. (சுருஉ)

அன்னநாடு கடந்துகங்கை யணைந்துசென்று வலங்கொளு
மின்னுவேணியர் வாரணசி விருப்பினேடு பணிந்துடன்
பின்னணைந்தவர் தம்மையங்க ணெழிந்துகங்கை கடந்துபோய்
மன்னுகாதல்செய் நாவின்மன்னவர் வந்துகற்சுர முந்தினர்.

(இ-ள்.) அன்னநாடுகடந்து—அந்த மத்தியதேயத்தைக்கடந்து; கங்கையணைந்து சென்றுவலங்கொளும்—கங்காநதி பெருகிவந்து வலமாகவரும்; மின்னுவேணியர்வாரணசி—ஒளிவீசும் சடைமுடியையுடைய சிவபிரான் வீற்றிருந்தருளும் வாரணசியை; விருப்பினேடுபணிந்து—விருப்போடுவணங்கி; உடன்பின்னணைந்தவர்தம்மை—உடனே பின்னுகவந்தவர்களை;அங்கணெழிந்து—அவ்விடத்துநீங்கி;கங்கைகடந்துபோய்—கங்கையைக்கடந்து சென்று; மன்னுகாதல்செய்நாவின்மன்னவர்—நிலைபெற்ற பெருவிருப்பை வளரச்செய்கின்ற வாகீசமுனிவர்;வந்துகற்சுரமுந்தினர்—வந்துகற்களையுடைய அருநெறியை முன்னிட்டார்.—எ-று. (சுருகூ)

மாகமீது வளர்ந்தகானக மாகியெங்கு மனித்தராற்
போகலாநெறி யன்றியும்புரி கின்றகாதல் பொலிந்தெழச்
சாகமூல பலங்கடய்ப்பன வுந்தவிர்ந்து தனித்துநே
ரேகினரிர வும்பெருங்கயி லைக்குலக்கிரி யெய்துவார்.

(இ-ள்.) மாகமீதுவளர்ந்தகானகமாகி—விண்ணுலகளவுமுயர்ந்த காடுடையதாகி; எங்குமனித்தராற்போகலாநெறியன்றியும்—எவ்விடத்தும் மனிதர்களால் செல்லக்கூடாத அருநெறியாயும்; புரிகின்றகாதல்பொலிந்தெழ—தாம்விரும்பிய பெருவிருப்பானது மீக்கூர; சாகமூலபலங்கடய்ப்பதுவுந்தவிர்ந்து—இலைகிழங்கு பழமாகிய இவைகளைப் புசித்தலையுந்தவிர்ந்து; தனித்துநேரேகினர்—தனித்து நேரேசென்றூர்; இரவும்பெருங்கயிலைக்குலக்கிரியெய்துவார்—பகலேயன்றி யிரவிலும் பெரியகுலமலையாகிய கயிலையையடைய விருப்பங்கொண்ட திருநாவுக்கரசர்.—எ-று. (சுருச)

ஆயவாறிரு ளின்கணேகுமவ் வன்பர்தம்மை யணைந்துமுன்
றீயவாய விலங்குவன்றொழில் செய்யவஞ்சின நஞ்சுகால்
வாயநாக மணிப்பணங்கொள் விளக்கெடுத்தன வந்துகால்
தோயவானவ ராயினுந்தனி துன்னருஞ்சுர மன்னினார்.

(இ-ள்.) ஆயவாறிருளின்கணேகுமவ்வன்பர்தம்மை=அவ்வாறு இரவின்கண் ணே யாத்திரைசெல்லும் வாகீசமுனிவரை; அணைந்துமுன்=அடைந்து அவர் திருமு ன்னர்; தீயவாயவிலங்கு=கொடிய மிருகங்கள்; வன்றொழில்செய்யவஞ்சின=கொடுந் தொழிலைச்செய்ய அச்சமுற்றிருந்தன; நஞ்சுகால்வாயநாகம்=நஞ்சைக் கக்குகின்ற வா யையுடைய பாம்புகள்; மணிப்பணங்கொள்விளக்கெடுத்தன=படத்திலுள்ள மணிகளா கிய விளக்கையெடுத்தன; வானவரேனும்வந்துகால்தோய=தேவராயினும் நிலவுலகத்து வந்து கால்படும்படி; தனிதுன்னருஞ்சுரமுன்னினார்=தனியே செல்லுதற்கரிய அருநெ றியையடைந்தார்.—எ-று. (ருடு)

வெங்கதிர்ப்பக லக்கடத்திடை வெய்யவன்கதிர் கைபரந்
தெங்குமிக்க பிளப்பினாகர்த மெல்லைபுக்கெரி கின்றன
பொங்கழற்றெறு பாலைவெந்நிழல் புக்கசூழல் புகும்பகற்
செங்கதிர்க்கனல் போலுமத்திசை திண்மைமெய்த்தவர் நண்ணினார்.

(இ-ள்.) வெங்கதிர்ப்பகல்=கொடிய கிரணங்களையுடைய பகற்காலத்தில்; அக் கடத்திடை=அப்பாலைநிலத்தில்; வெய்யவன்கதிர்கைபரந்து=சூரியனுடைய கிரணங் கள் பரவி; எங்குமிக்கபிளப்பில்=தம்மால் எவ்விடங்களிலும் அதிகரித்திருக்கும் வெடி ப்பின்வழியே; நாகர்தமெல்லைபுக்கெரிகின்றன=நாகலோகத்தினெல்லையையடைந்து வி ளங்குகின்ற தோற்றம்; பொங்கழற்றெறுபாலை=சுவாலிக்கின்ற அக்கினியையும் வருத்த த்தக்க அப்பாலையினது; வெந்நிழல்=கொடிய நிழல்; புக்கசூழல்=இருந்துள்ள விட த்தை; புகும்=(அப்பாலை தன்னைவருத்தாது) புகலடையும்; பகற்செங்கதிர்க்கனல்போ லும்=சூரியனுடைய செவ்விய கிரணங்களின் காந்தியை ஒத்திருக்கும்; அத்திசை=அத் திசையின்கண்; திண்மைமெய்த்தவரெய்தினார்=உறுதியான மெய்த்தவத்தையுடைய வாகீசமுனிவர் அடைந்தார்.—எ-று.

இதனால் இயல்பாய பாலையின் வெப்பத்தோடு சூரியகிரணமுமிருந்து வெம்மை செய்யும் அருஞ்சுரமென்றாராயிற்று. (ருடுசு)

இங்ஙனம்மிர வும்பகற்பொழு தும்மருட்சுர மெய்துவார்
பங்கயம்புரை தாள்பரட்டள வும்பசைத்தசை தேயவு
மங்கைபாகர்தம் வெள்ளிமால்வரை வைத்தசிந்தை மறப்பரோ
தங்கரங்களி ரண்டுமேகொடு தாவியேகுதன் மேவினார்.

(இ-ள்.) இங்ஙனம்மிரவும் பகற்பொழுதும்=இவ்வாறு இராக்காலமும் பகற் காலமும்; அருஞ்சுரமெய்துவார்=செல்லுதற்கரிய பாலைநிலத்திற் செல்லுகின்ற வாகீச முனிவர்; பங்கயம்புரைதாள்=தாமரைமலர்போலும் சிவந்த திருவடிகள்; பரட்டளவும் பசைத்தசைதேயவும்=பரண்டைக்காலளவும் பசையையுடைய மாமிசந் தேய்ந்துபோக வும்; மங்கைபாகர்தம்வெள்ளிமால்வரை=உமாதேவிபாகராகிய சிவபிரான் வீற்றிருந்த ருளும் திருக்கயிலாயமலையில்; வைத்தசிந்தைமறப்பரோ=சென்று தரிசிக்கவேண்டுமெ

ன்று தாம்வைத்த எண்ணத்தை மறக்கமாட்டாமல்; தங்கரங்களிரண்டுமேகொடு=தம்முடைய திருக்கரங்களிரண்டையுமே ஆதரவாகக்கொண்டு; தாவியேகுதன்மேவினார்=தாவிச்செல்வாராயினார்.—எ-று. (ரூடுஎ)

கைகளும்மணி பந்தசைந்தற வேகரைந்து சிதைந்தபின்
மெய்கலந்தெழு சிந்தையன்பின் விருப்புமீமிசை பொங்கிட
மொய்கடுங்கனல் வெம்பரற்புகை மூளுமத்த முயங்கியே
மைகொள்கண்டர்த மன்பர்செல்ல வருந்தியுந்தினர் மார்பினால்.

(இ-ள்.) கைகளும்மணிபந்தசைந்தற=இரண்டுகைகளும் மணிக்கட்டிலுள்ள கட்டுவிட; கரைந்துசிதைந்தபின்=கரைந்து தேய்ந்தபின்பு; மெய்கலந்தெழுசிந்தை=மெய்யோடு விரவியெழாநின்ற திருவுள்ளத்தின்கண்; அன்பின்விருப்புமீமிசைபொங்கிட=அன்பாலாகிய பெருவிருப்பு மேலும்மேலும் அதிகரிப்ப; மொய்கடுங்கனல்வெம்பரற்புகை=நெருங்கிய கடிய தீப்போலும் பருக்கைக்கற்களிலுண்டாகிய புகைகள்; மூளுமத்தமுயங்கி=எழாநின்ற வழியைக்கூடி; மைகொள்கண்டர்தமன்பர்=கரிய திருமிடற்றையுடைய சிவபிரானடியாராகிய வாகீசமுனிவர்; செல்லவருந்தியுந்தினர்மார்பினால்=போவதற்கு வருத்தமடைந்து மார்பினால் நகர்ந்துசென்றார்.—எ-று. ஏ-இரண்டும்-அசை. (ரூடுஅ)

மார்பமுந்தசை நைந்துசிந்தி வருந்தவென்பு முரிந்திட
நேர்வருங்குறை நின்றசிந்தையி னேசமீசனை நேருநீ
டார்வமங்குயிர் கொண்டுகைக்கு முடம்படங்கவு முன்கொடச்
சேர்வரும்பழு வம்புரண்டு புரண்டுசென்றனர் செம்மையோர்.

(இ-ள்.) மார்பமுந்தசைநைந்துசிந்திவருந்த=மார்பும் தசைகள் நேர்ந்து சிதறிவருந்த; என்புமுரிந்திட=பிணிக்கப்பட்ட எலும்புகள் முறிபட; நேர்வருங்குறைநின்றசிந்தையில்=தான் திருக்கயிலையை அடையாமையாகிய குறைநிற்கின்ற திருவுள்ளத்தில்; நேசமீசனைநேருநீடார்வம்=தம்மால் நேசிக்கப்படும் சிவபிரானை யடையவேண்டுமென்கிற பெருவிருப்பானது; அங்குயிர்கொண்டுகைக்கும்=அவ்விடத்தி உயிரால் நடத்தும்; உடம்படங்கவுமுன்கொடு=உடம்புமுழுவதையும் முன்னே கொண்டு; அச்சேர்வரும்பழுவம்புரண்டுபுரண்டுசென்றனர்செம்மையோர்=யாவராலும் அடைதற்கரிய அக்காட்டில் புரண்டு புரண்டு வாகீசமுனிவர் சென்றார்.—எ-று. (ரூடுகூ)

அப்புறம்புரள் கின்றநீளிடை யங்கமெங்கு மரைந்திடச்
செப்பருங்கயி லைச்சிலம்படி சிந்தைசென்றுறு மாதலால்
மெய்ப்புறத்தி லுறுப்பழிந்தபின் மெல்லவுந்து முயற்றியுந்
தப்புறச்செய லின்றியந்நெறி தங்கினார்தமி ழாளியார்.

(இ-ள்.) அப்புறம்புரள்கின்றநீளிடை=அதன்மேல் புரண்டுசெல்கின்ற நெடுந்தூரத்தில்; அங்கமெங்குமரைந்திட=அங்கமுழுவதும் தேய; செப்பருங்கயிலைச்சிலம்படி=சொல்லுதற்கரிய கயிலாயமலையினிடத்தில்; சிந்தைசென்றுறுமாதலால்=தரிசிக்கவேண்டுமென்கின்ற கருத்து செல்லுமாதலினால்; மெய்ப்புறத்திலுறுப்பழிந்தபின்=திருமேனியின்கணுள்ள உறுப்புமுழுவதும் அழிந்தபின்பு; மெல்லவுந்துமுயற்றியுந்தப்புற=மிருதுவாக வுந்திச்செல்கின்ற உயிர்முயற்சியும் நீங்க; செயலின்றி=செயலற்று; அந்நெறிதங்கினார்தமிழாளியார்=அம்மார்க்கத்திலிருந்தார் தமிழ்வல்லவராகிய வாகீசமுனிவர்.—எ-று.

அப்பர்

வாகீசர் அசரீரிபணித்தவாறு தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றிலுள்ள ஒரு வாவியிற்றேன்றி ஆலயத்துக்கு முன்செல்ல, அது கயிலாசகிரியேயாக அதனிடத்தே பிரமவிஷ்ணு இந்திரன் முதலாய சகலதேவர்கள் துதித்து நிற்க, பூதகணங்கள் புடைசூழ நந்திதேவர் பொற்பிரம்புகொண்டு பணிசெய்யப் பரமசிவன் உமாதேவியாருடன் வீற்றிருந்தருளியதைக்கண்டு ஆனந்தக்கூத்தா ... ப்பின்பு இறைவன் மறைந்தருளினது.

வேறு.

அன்னதன்மையார் கயிலையையணைவதற் கருளார்
மன்னுதீந்தமிழ் புவியின்மேற்பின்னையும் வழுத்த
நன்னெடும்புனற் றடமுமொன் றுடன்கொடு நடந்தார்
பன்னகம்புனை பரமரோர்முனிவராம் படியால்.

(இ-ள்.) அன்னதன்மையார்கயிலையையணைவதற்கருளார்=அத்தன்மையையுடைய வாகீசமுனிவர் கயிலைமலையையடைவதற்குச் சிவபிரான் அருள்செய்யாராக; (அதனால்) மன்னுதீந்தமிழ்புவியின்மேற்பின்னையும்வழுத்த=நிலைபெற்ற மதுரமான தமிழ்ப்பதிகத்தால் அவர் பூமியின்மேற் பின்பும் துதிக்க; பன்னகம்புனைபரமரோர்முனிவராம்படியால்=சர்ப்பத்தை ஆபரணமாகத்தரித்த சிவபிரான் ஓர்முனிவரொன்று சொல்லத்தக்க முறைமையினால்; நன்னெடும்புனற்றடமுமொன்றுடன்கொடுநடந்தார்=நலமிக்க புனலுடைய ஓர் தடாகத்தையும் உண்டாக்கிக்கொண்டு எழுந்தருளினார்.—எ-று. (கூசுக)

வந்துமற்றவர் மருங்குறவணைந்துநேர் நின்று
நொந்துநோக்கிமற் றவரெதிர்நோக்கிட நுவல்வார்
சிந்தியிவ்வுறுப் பழிந்திடவருந்திய திறத்தால்
இந்தவெங்கடத் தெய்தியதென்னென விசைத்தார்.

(இ-ள்.) வந்துமற்றவர்மருங்குறவணைந்துநேர்நின்று=வந்து வாகீசமுனிவர் சமீபத்திற்கிட்டி நேரேநின்று; நொந்துநோக்கி=இரக்கத்தோடு பார்த்து; மற்றவரெதிர்நோக்கிடநுவல்வார்=வாகீசமுனிவர் தம்மை எதிரே பார்க்குங்கால் அம்முனிவர் வினவுவார் எவ்வாறெனில்; சிந்தியிவ்வுறுப்பழிந்திடவருந்தியதிறத்தால்=சிதறி இவ்வுறுப்புகளெல்லாம் அழியும்படி மனம் வருந்துதற்கேதுவாக நீர்; இந்தவெங்கடத்தெய்தியதென்னெனவிசைத்தார்=இந்தக் கொடிய காட்டில்வந்த காரணம் யாதென்று வினவினார். ()

மாசில்வற்கலை யாடையுமார்பின்முந் நூலுந்
தேசுடைச்சடை மவுலியுநீறுமெய் திகழ
ஆசின்மெய்த்தவ ராகிநின்றவர்தமை நோக்கிப்
பேசவுற்றதோ ருணர்வுறவிளம்புவார் பெரியோர்.

(இ-ள்.) மாசில்வற்கலையாடையும்=குற்றமற்ற மரவுரியாடையும்; மார்பின்முந்நூலும்=மார்பினிடத்துப் பூணூலும்; தேசுடைச்சடைமவுலியும்=ஒளிவீசுகின்ற சடைமுடியும்; நீறுமெய்திகழ=விபூதியும் திருமேனியில் விளங்க; ஆசின்மெய்த்தவராகிநின்றவர்தமைநோக்கி=குற்றமற்ற மெய்ம்மையாகிய தவவேடங்கொண்டவராய்நின்ற சிவபிரானாகிய முனிவரைப்பார்த்து; பேசவுற்றதோருணர்வுற=பேசும்படி ஒருணர்வு உள்ளத்திலுதிக்க; விளம்புவார்பெரியோர்=வாகீசமுனிவர் அருளிச்செய்தார்.—எ-று. (கூசுங)

வண்டலாங்குழன் மலைமகளுடன்வட கயிலை
யண்டர்நாயக ரிருக்குமப்பரிசவ ரடியேன்
கண்டுகும்பிட விருப்பொடுங்காதலி னடைந்தேன்
கொண்டவென்குறிப் பிதுமுனியேயெனக் கூற.

(இ-ள்.) வண்டலாங்குழன்மலைமகளுடன்=வண்டுகள் தேன் நசையால் சஞ்சரிக்கின்ற கூந்தலையுடைய பார்வதியாரோடு; வடகயிலையண்டர்நாயகரிருக்குமப்பரிசு=வட

கயிலைக்கண் தேவர்நாயகராகிய சிவபிரான் வீற்றிருந்தருளும் அத்திருக்கோலத்தை; அவ ரடியேன்கண்டுகும்பிடவிருப்பொடும்=அவர்க்கடியேனாகிய யான் தரிசித்துக் கும்பிடும் படி விருப்பத்தோடு; காதலினடைந்தேன்=அவாவுடையனாய் வந்தேன்; கொண்டவெ ன்குறிப்பிது=கருதிய என்னுடைய குறிப்பிது; முனியேயெனக்கூற=முனியே என்று சொல்ல.—எ-று. (கசுச)

கயிலைமால்வரை யாவதுகாசினி மருங்கு
பயிலுமானிடப் பான்மையோரடைவதற் கெளிதோ
யயில்கொள்வேற்படை யமரருமணுகுதற் கரிதால
வெயில்கொள்வெஞ்சுரத் தென்செய்தீர்வந்தென விளம்பி.

(இ-ள்.) கயிலைமால்வரையாவது=கயிலாசகிரியாவது; காசினிமருங்குபயிலும்= பெருமைதங்கிய நிலவுலகத்தில்வாழும்; மானிடப்பான்மையோரடைவதற்கெளிதோ= மானிடத்தன்மையுடையவர் அடைவதற்கெளிதல்ல; அயில்கொள்வேற்படையமரரும ணுகுதற்கரிது=கூர்மைதங்கிய வேலையுடைய தேவர்களும் அடைதற்கரிதாயிருக்கிறது; வெயில்கொள்வெஞ்சுரத்தென்செய்தீர்வந்தெனவிளம்பி=வெம்மைவீசுகின்ற கொடிய சுரத்தின்கண்வந்து என்னகாரியம் செய்தீரென்று சொல்லி.—எ-று. ஆல்-அசை.(கசுரு)

மீளுமத்தனை யுமக்கினிக்கடனென விளங்குந்
தோளுமாகமுந் துவளுமுந்நூன்முனி சொல்ல
ஆளுநாயகன் கயிலையிலிருக்கைகண் டல்லால்
மாளுமிவ்வுடல் கொண்டுமீளேனென மறுத்தார்.

(இ-ள்.) மீளுமத்தனையுமக்கினிக்கடனென=மீண்டுபோவதே உமக்கினிக்கட னென்று; விளங்குந்தோளுமாகமுந்துவளுமுந்நூன்முனிசொல்ல=விளங்குகின்ற தோளி லும் மார்பிலும் அசைகின்ற பூணூலைத்தரித்த சிவபிரானாகிய முனிவரர் சொல்ல; ஆளு நாயகன்=நம்மை அடிமைக்கொண்ட சிவபிரான்; கயிலையிலிருக்கைகண்டல்லால்=கயி லையில் வீற்றிருக்குந் திருக்கோலத்தைத்தரிசித்தல்லாமல்; மாளுமிவ்வுடல்கொண்டுமீளே னெனமறுத்தார்=இறந்துபோகு மிவ்வுடலைக்கொண்டு திரும்பேனென்று மறுத்துவிட் டார்.—எ-று. இம்மூன்றுங் குளகம். (கசுசு)

ஆங்குமற்றவர் துணிவறிந்தவர்தமை யறிய
நீங்குமாதவர் விசும்பிடைக்கரந்துநீண் மொழியால்
ஓங்குநாவினுக் கரசனேயெழுந்திரென் றுரைப்பத்
தீங்குநீங்கிய யாக்கைகொண் டெழுந்தொளி திகழ்வார்.

(இ-ள்.) ஆங்குமற்றவர்துணிவறிந்து=அவ்விடத்தில் வாகீசமுனிவர்கொண்ட உறுதியைத் திருவுள்ளத்தறிந்து; அவர்தமையறிய=அவ்வாகீசமுனிவர் தம்மைக் கயிலா பதியென்று அறிந்துகொள்ள; நீங்குமாதவர்விசும்பிடைக்கரந்து=அவ்விடத்தினின்றும் நீங்கிய முனிவரர் வானின்கண் மறைந்து; நீண்மொழியால்=எடுத்துக்கூறும் அசரீரியி னால்; ஓங்குநாவினுக்கரசனே=உயர்ந்த திருநாவுக்கரசனே; எழுந்திரென்றுரைப்ப= எழுந்திரு என்று சொல்ல; தீங்குநீங்கியயாக்கைகொண்டெழுந்து=அழிந்த உறுப்புகள் சேர்ந்த உடம்போடெழுந்து; ஒளிதிகழ்வார்=ஒளியோடு விளங்குவாராயினர்.—எ-று.

அண்ணலேயெனை யாண்டுகொண்டருளிய வமுதே
விண்ணிலேமறைந் தருள்புரிவேதநா யகனே
கண்ணினாற்றிருக் கயிலையிலிருந்தநின் கோல
நண்ணிநான்றொழ நயந்தருள்புரியெனப் பணிந்தார்.

1அப்பர் - 2-சிவபெருமான்.

வாகீசர் காசியைத்தரிசித்து வடகயிலைத்தரிசிக்க அவாகொண்டு தம்முடலை முழுதும்தேய்ந்தும் சிவகோயிருந்து காணமுயல பரமசிவன் அந்தணருருக்கொண்டு நீர் கயிலையைக்காண்பதரிது. இந்தடாகத்தில் மூழ்கினராயின் உம்மைத் திருவையாறென்னும் சிவக்ஷேத்திரத்திலுள்ள தடாகத்தில்விடும். அங்கேநாம் கயிலையிலிருந்த கோலத்தைக்காட்டுகிறோமென்று அருளிச்செய்தது.

(இ-ள்.) அண்ணலேயெனையாண்டுகொண்டருளியவமுதே=பெருமையுடையவரே அடியேனை யாட்கொண்டருளிய வமுதமே; விண்ணிலேமறைந்தருள்புரிவேதநாயகனே=ஆகாயத்தின்கண்மறைந்து அசரீரியாய் அருள்புரிந்த வேதமுதல்வரே; கண்ணினாற்றிருக்கயிலையிலிருந்தநின்கோலம்=கண்ணினால் திருக்கயிலையில் வீற்றிருந்த நின் திருக்கோலத்தை; நண்ணிநான்றொழநயந்தருள்புரியெனப்பணிந்தார்=அடைந்து நான் தரிசிக்கும்படி கருணைகூர்ந்தருள்செய்யென்று வணங்கினார்.—எ-று. (௩௬௮)

தொழுதெழுந்தநற் றொண்டரைநோக்கிவிண் டலத்தில்
எழுபெருந்திரு வாக்கினாலிறைவரிப் பொய்கை
முழுகிநம்மைநீ கயிலையிலிருந்தவம் முறைமை
பழுதில்சீர்த்திரு வையாற்றிற்காணெனப் பணித்தார்.

(இ-ள்.) தொழுதெழுந்தநற்றொண்டரைநோக்கி=வணங்கி எழுந்த நல்ல வாகீசமுனிவரைப்பார்த்து; விண்டலத்திலெழுபெருந்திருவாக்கினால்=ஆகாயத்திலெழாநின்ற பெரிய அசரீரிவாக்கினால்; இறைவர்=சிவபிரான்; நீயிப்பொய்கைமுழுகி=நீ இவ்வாவியின்கண் முழுகி; நம்மைக்கயிலையிலிருந்தவம்முறைமை=நம்மைத் திருக்கயிலையில் வீற்றிருக்கும் முறைமையாக; பழுதில்சீர்த்திருவையாற்றிற்காணெனப்பணித்தார்=குற்றமற்ற சிறப்பினையுடைய திருவையாற்றில் தரிசிப்பாயாகவென்று கட்டளையிட்டார்.—எ-று.

ஏற்றினாரரு டலைமிசைக்கொண்டெழுந் திறைஞ்சி
வேற்றுமாகிவிண் ணாகிநின்றார்மொழி விரும்பி
யாற்றல்பெற்றவ ரண்ணலாரஞ்செழுத் தோதிப்
பாற்றடம்புனற் பொய்கையின்மூழ்கினார் பணியால்.

(இ-ள்.) எற்றினாரருடலைமிசைக்கொண்டு=இடபத்தை வாகனமாகவுடைய சிவபிரான் திருவருளைச் சிரசின்மேற்கொண்டு, எழுந்திறைஞ்சி=எழுந்து வணங்கி; வேற்றுமாகிவிண்ணாகிநின்றார்மொழிவிரும்பி=வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி என்னும் திருத்தாண்டகத்தை அருளிச்செய்து; ஆற்றல்பெற்றவர்=சிவபிரான் திருவருளினால் திருமேனிக்கணுள்ள ஊறுநீங்கி வலிபெற்ற வாகீசமுனிவர்; அண்ணலாரஞ்செழுத்தோதி=சிவபிரான் திருவைந்தெழுத்தைத்துதித்து; பாற்றடம்புனற்பொய்கையின்மூழ்கினார்பணியால்=பால்போலும் மிக்க புனலையுடைய வாவியில் சிவபிரான் கட்டளைப்படி மூழ்கினார்.—எ-று. (௩௭௦)

போற்றித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றி மீளாமேயாளென்னைக்கொண்டாய்போற்றி
யூற்றாகியுள்ளேயொளித்தாய்போற்றி யோவாதசத்தத்தொலியேபோற்றி
யாற்றாகியங்கேயமர்ந்தாய்போற்றி யாறங்கநால்வேதமானாய்போற்றி
காற்றாகியெங்குங்கலந்தாய்போற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௧)

பிச்சாடல்பேயோடுகந்தாய்போற்றி பிறவியறுக்கும்பிரானேபோற்றி
வைச்சாடனன்றுமகிழ்ந்தாய்போற்றி மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி
பொய்ச்சார்புரமூன்றுமெய்தாய்போற்றி போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கச்சாகநாகமசைத்தாய்போற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௨)

மருவார்புரமூன்றுமெய்தாய்போற்றி மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி
யுருவாகியென்னைப்படைத்தாய்போற்றி யுள்ளாவிவாங்கியொளித்தாய்போற்றி
திருவாகிநின்றதிறமேபோற்றி தேசம்பரவப்படுவாய்போற்றி
கருவாகியோடுமுகிலேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (ரு)

வானத்தார்போற்றுமருந்தேபோற்றி வந்தென்றன்சிந்தைபுகுந்தாய்போற்றி, யூனத்தைநீக்குமுடலேபோற்றி யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி, தேனத்தைவார்த்ததெளிவேபோற்றி தேவர்க்குந்தேவனாய்நின்றாய்போற்றி, கானத்தீயாடலுகந்தாய்போற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி.()

ஊராகிநின்றவுலகேபோற்றி யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
பேராகியெங்கும்பரந்தாய்போற்றி பேராதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
நீராவியானநிழலேபோற்றி நேர்வாரொருவரையுமில்லாய்போற்றி
காராகிநின்றமுகிலேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௬)

சில்லுருவாய்ச்சென்றுதிரண்டாய்போற்றி தேவரறியாததேவேபோற்றி, புல்லுயிர்க்கும்பூட்சிபுணர்ந்தாய்போற்றி போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி, பல்லுயிராய்ப்பார்தோறுநின்றாய்போற்றி பற்றியுலகைவிடாதாய்போற்றி, கல்லுயிராய்நின்றகனலேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (சு)

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றியென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி மேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி
கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (எ)

இமையாதுயிராதிருந்தாய்போற்றி யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
யுமைபாகமாகத்தணைத்தாய்போற்றி யூழியேழானவொருவாபோற்றி
யமையாவருநஞ்சமார்ந்தாய்போற்றி யாதிபுராணனாய்நின்றாய்போற்றி
கமையாகிநின்றகனலேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (அ)

மூவாய்பிறவாயிறவாய்போற்றி முன்னமேதோன்றிமுளைத்தாய்போற்றி
தேவாதிதேவர்கொழுந்தேபோற்றி சென்றேறியெங்கும்பரந்தாய்போற்றி
யாவாயடியேனுக்கெல்லாம்போற்றி யல்லலறியவலந்தேன்போற்றி
காவாய்கனகத்திரளேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (கூ)

நெடியவிசும்போடுகண்ணேபோற்றி நீளவகலமுடையாய்போற்றி
யடியுமுடியுமிகலிப்போற்றி யங்கொன்றறியாமைநின்றாய்போற்றி| போற்றி
கொடியவன்கூற்றமுதைத்தாய்போற்றி கோயிலாவென்சிந்தைகொண்டாய்
கடியவுருமொடுமின்னேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (க0)

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றி யோதாதேவேதமுணர்ந்தாய்போற்றி, யெண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றி யிறைவிரலால்வைத்துகந்தவீசாபோற்றி, பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போற்றி பண்டேயென்சிந்தைபுகுந்தாய்போற்றி, கண்ணாயுலகுக்குநின்றாய்போற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆதிதேவர்தந் திருவருட்பெருமையா ரறிந்தார்
போதமாதவர் பனிமலர்ப்பொய்கையின் மூழ்கி
மாதொர்பாகனூர் மகிழுமையாற்றிலோர் வாவி
மீதுதோன்றிவந் தெழுந்தனருலகெலாம் வியப்ப.

(இ-ள்.) ஆதிதேவர்தந்திருவருட்பெருமையாரறிந்தார்—முதற்கடவுளாகிய சிவபிரானது திருவருளின்பெருமை யார் அறிந்தவர்கள்; போதமாதவர்பனிமலர்ப்பொய்கையின்மூழ்கி—ஞானநிறைந்த தவத்தையுடைய வாகீசமுனிவர் குளிர்ந்த மலர்கள் நிறைந்த வாவிக்கண்முழுகி; மாதொர்பாகனூர்மகிழுமையாற்றில்—உமாதேவியை ஓர் கூற்றிலுடைய சிவபிரான் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருவையாற்றின்கணுள்ள; ஓர்வாவிமீதுதோன்றிவந்து—ஓர் தடாகத்தின்கண் வெளிப்பட்டு வந்து; எழுந்தனருலகெலாம்வியப்ப—எழுந்தார் உலகத்தார் வியக்கும்படி.—எ-று. (கூஎக)

வம்புலாமலர் வாவியின்கரையின்வந் தேறி
யும்பர்நாயகர் திருவருட்பெருமையை யுணர்ந்தார்
எம்பிரான்றருங் கருணைபோலிதுவென விருகண்
பம்புதாரைநீர் வாவியிற்படிந்தெழும் படியார்.

(இ-ள்.) வம்புலாமலர்வாவியின்கரையின்வந்தேறி—வாசனை வீசுகின்ற மலர்களையுடைய தடாகத்தினின்று கரையிலேறி; உம்பர்நாயகர்திருவருட்பெருமையையுணர்ந்தார்—தேவர்நாயகராகிய சிவபிரான் திருவருட்பெருமையையறிந்த வாகீசமுனிவர்; எம்பிரான்றருங்கருணையிதுவென—எமது சிவபிரான் செய்யுங் கருணை யிதுவென்று; இருகண்பம்புதாரைநீர்வாவியில்—இரண்டு கண்களினின்றும் ததும்புகின்ற தாரையாகிய ஆனந்தக்கண்ணீர் என்னுங் குளத்தில்; படிந்தெழும்படியார்—மீளவும் மூழ்கி எழுந்தன்மையுடையவரானார்.—எ-று. போல்-அசை. (கூஎஉ)

மிடையுநீள்கொடி வீதிகள்விளங்கிய வையா
றுடையநாயகர் சேவடிபணியவந் துறுவார்
அடையவப்பதி நிற்பவுஞ்சரிப்பவு மான
புடையமர்ந்ததந் துணையொடும்பொலிவன கண்டார்.

(இ-ள்.) மிடையுநீள்கொடிவீதிகள்விளங்கிய—நெருங்கும்படி நீண்ட கொடிகளைக் கட்டியிருக்கின்ற வீதிகளால் விளங்கிய; ஐயாறுடையநாயகர்—திருவையாற்றில் எழுந்தருளியிருக்கின்ற சிவபிரானது; சேவடிபணியவந்துறுவார்—சிவந்த திருவடிகளை வணங்கும்படி வருவார்; அடையவப்பதிநிற்பவுஞ்சரிப்பவுமான—அத்திருப்பதிக்கண் நிற்பனவும் சரிப்பனவுமாகிய பொருள்களெல்லாம்; புடையமர்ந்ததந்துணையொடும்பொலிவனகண்டார்—அருகில் விரும்பிய தங்கள் பெண்ணோடு கூடியிருக்கும் தோற்றத்தைப்பார்த்தார்.—எ-று.

எல்லாப்பொருளும் துணையொடும் பொலிவனகண்டார் என்றது சிவசத்திரூபமாயிருக்கக் கண்டாரென்னுங்கருத்தால். அது மேல்வருஞ் செய்யுளாலுமுணர்க. (கூஎஙு)

பொன்மலைக்கொடி யுடனமர்வெள்ளியம் பொருப்பிற்
றன்மையாம்படி சத்தியுஞ்சிவமுமாஞ் சரிதைப்
பன்மையோனிகள் யாவையும்பயில்வன பணிந்தே
மன்னுமாதவர் தம்பிரான்கோயின்முன் வந்தார்.

(இ-ள்.) பொன்மலைக்கொடியுடன்=பார்வதிதேவியாரோடு; அமர்வெள்ளியம் பொருப்பிற்றன்மையாம்படி=வீற்றிருந்தருளும் கயிலாய தரிசனம்போலிருக்கும்படி; சத்தியுஞ்சிவமுமாஞ்சரிதை=சத்தியும் சிவமுமாகவிருக்கின்ற நிலைமையோடு; பன்மை யோனிகள்யாவையும்=பல யோனிகளெல்லாம்; பயில்வனபணிந்து=இருக்கும் முறை மையை வணங்கி; மன்னுமாதவர்=நிலைபெற்ற தவத்தையுடைய வாகீசமுனிவர்; தம்பி ரான்கோயின்முன்வந்தார்=சிவபிரான் கோயிலுக்கு முன்பாக வந்தார்.—எ-று.(கூஎச)

காணுமப்பெருங் கோயிலுங்கயிலைமால் வரையாய்ப்
பேணுமாலய னிந்திரன்முதற்பெருந் தேவர்
பூணுமன்பொடு போற்றிசைத்தெழுமொலி பொங்கத்
தாணுமாமறை யாவையுந்தனித்தனி முழங்க.

(இ-ள்.) காணுமப்பெருங்கோயிலும்=அத்திருவையாற்றிற் காணப்படும் அத்தி ருக்கோயிலும்; கயிலைமால்வரையாய்=பெருமைதங்கிய திருக்கயிலைமலையாய்; பேணுமா லயனிந்திரன்முதற்பெருந்தேவர்=யாவரும் விரும்பத்தக்க திருமால் பிரமன் இந்திரன் முதலான பெரிய தேவர்கள்; பூணுமன்பொடுபோற்றிசைத்தெழுமொலிபொங்க=அவர வருள்ளத்து நிலைபெறும் பேரன்போடு தோத்திரஞ்செய்து அதனால் எழுகின்ற ஒலியா னது எவ்விடத்தும் நிறையவும்; தாணுமாமறையாவையுந்தனித்தனிமுழங்க=அழியாத மகிமையையுடைய வேதங்களெல்லாம் தனித்தனியே ஒலிக்கவும்.—எ-று. (கூஎரு)

தேவர்தானவர் சித்தர்விச்சாதர ரியக்கர்
மேவுமாதவர் முனிவர்கள்புடையெலா மிடையக்
காவிவாள்விழி யரம்பையர்கானமு முழவுந்
தாவிலேழ்கடன் முழக்கினும்பெருகொலி தழைப்ப.

(இ-ள்.) தேவர்தானவர்சித்தர்விச்சாதரரியக்கர்=தேவர்களும் அசுரர்களும் சித் தர்களும் வித்தியாதரர்களும் இயக்கர்களும்; மேவுமாதவர்முனிவர்கள்புடையெலாமிடை ய=நிலைபெற்ற தவத்தர்களும் முனிவர்களும் பக்கங்களிலெல்லாம் நெருங்கியிருக்கவும்; காவிவாள்விழியரம்பையர்கானமுமுழவும்=காவிமலரையும் வாளையுமொத்த விழிகளையு டைய தேவரம்பையர்களது கீதமும் மத்தளவோசையும்; தாவிலேழ்கடன்முழக்கினும் பெருகொலிதழைப்ப=கெடுதலில்லாத ஏழுசமுத்திரங்களின் ஒலியினும் அதிகமான பேரொலியுண்டாகவும்.—எ-று. (கூஎசு)

கங்கையேமுதற் றீர்த்தமாங்கடவுண்மா நதிகண்
மங்கலம்பொலி புனற்பெருந்தடங்கொடு வணங்க
எங்குநீடிய பெருங்கணநாதர்க ளிறைஞ்சப்
பொங்கியங்களாற் பூதவேதாளங்கள் போற்ற.

(இ-ள்.) கங்கையேமுதற்றீர்த்தமாங்கடவுண்மாநதிகள்=கங்கைமுதலிய தீர்த்த மென்று சொல்லப்படும் பெருமையையுடைய தேவநதிகள்; மங்கலம்பொலிபுனற்பெருந் தடங்கொடுவணங்க=மங்கலமிக்க நீர்நிறைந்த பெரிய வாவிரூபங்கொண்டு வணங்க வும்; எங்குநீடியபெருங்கணநாதர்களிறைஞ்ச=எவ்விடத்திலும் மிக்க பெருமையையு டைய சிவகணங்கள் தொழவும்; பொங்கியங்களாற்பூதவேதாளங்கள்போற்ற=பொலி வினையுடைய வாத்தியங்களினால் ஒலிசெய்து பூதவேதாளங்கள் துதிசெய்யவும்.—எ-று.

அந்தண்வெள்ளிமால் வரையிரண்டாமென வணைந்தோர்
சிந்தைசெய்திடச் செங்கண்மால்விடை யெதிர்நிற்ப

முந்தைமாதவப் பயன்பெறுமுதன்மையான் மகிழ்ந்தே
நந்தியெம்பிரா னடுவிடையாடிமுன் னணுக.

(இ-ள்.) அந்தண்வெள்ளிமால்வரையிரண்டாமென=அழகும் தட்பமுமுடைய பெரிய வெள்ளிமலை யிரண்டென்று; அணைந்தோர்சிந்தைசெய்திட=அடைந்தவர்கள் நினைக்கும்படி; செங்கண்மால்விடையெதிர்நிற்ப=சிவந்த கண்ணையுடைய திருமாலாகிய இடபம் திருமுன் நிற்க; முந்தைமாதவப்பயன்பெறுமுதன்மையான்மகிழ்ந்து=முன்னாளில் பெரிய தவப்பயனைத் தான் அத்தலத்தில்பெற்ற முதன்மையினால் மகிழ்ச்சியடைந்து; நந்தியெம்பிரானடுவிடையாடிமுன்னணுக=நந்தியாகிய எமது பிரான் நடுவின்கணுள்ள கண்ணாடிமுன் நிற்கவும்.—எ-று. ஏ-அசை.

செங்கண்மால்விடை ஆலயத்தின்புறத்தும் நந்திப்பிரான் ஆலயத்தின்நடுவேயுள்ள கண்ணாடிமுன்னும் நிற்க எனக்கொள்க. முந்தைமாதவப் பயன்பெறு முதன்மையென்றதனால் சிலாதரமுனிவர் புத்திரராய் மானுட இருடியாயிருந்து அத்திருவையாற்றில் செய்த தவப்பயனால் அச்சரீரத்தையே திரித்துக் கயிலாசசரீரமாக்கி நந்தியாயினதொன்று போதரும். நடுவிடையாடி முன்னணுக என்பதற்குக் கனகசபையின்கண் நிருத்தஞ்செய்தருளும் பிரானார் திருமுன்பு நிற்க என்றுரைப்பாருமுளர். (௩எ௮)

வெள்ளிவெற்பின்மேன் மரகதக்கொடியுடன் விளங்குந்
தெள்ளுபேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகங்
கொள்ளுமாமலை யாளுடன்கூடிவீற் றிருந்த
வள்ளலாரைமுன் கண்டனர்வாக்கின்மன் னவனார்.

(இ-ள்.) வெள்ளிவெற்பின்மேல் மரகதக்கொடியுடன் விளங்கும்=வெள்ளிமலையின்மேல் மரகதக்கொடியுடன் பிரகாசிக்கின்ற; தெள்ளுபேரொளிப்பவளவெற்பெனவிடப்பாகம்=தெள்ளிய மிக்க ஒளியினையுடைய பவளமலைபோல இடதுபாகத்தில்; கொள்ளுமாமலையாளுடன்கூடவீற்றிருந்த=தனக்குத் திருமேனியாகக்கொண்ட பார்வதியாரோடுகூடி வீற்றிருந்தருளுகின்ற; வள்ளலாரைமுன்கண்டனர்வாக்கின்மன்னவனார்=சிவபிரானை முன்னே தரிசித்தார் வாகீசமுனிவர்.—எ-று. (௩எ௯)

கண்டவானந்தக் கடலினைக்கண்களான் முகந்து
கொண்டுகைகுவித் தெதிர்விழுந்தெழுந்துமெய் குலைய
அண்டர்முன்புநின் றாடினார்பாடினா ரழுதார்
தொண்டனார்க்கங்கு நிகழ்ந்தனயார்சொல வல்லார்.

(இ-ள்.) கண்டவானந்தக்கடலினை=தான் கண்டு தரிசித்த பேரானந்தக்கடலாகிய சுவாமியை; கண்களான்முகந்துகொண்டு=தன் கண்களாகிய பாத்திரத்தால் முகந்துகொண்டு; கைகுவித்தெதிர்விழுந்தெழுந்து=இருகைகளையுங் குவித்துத் திருமுன்னே வணங்கித் தொழுதெழுந்து; மெய்குலைய=திருமேனி பரவசமாக; அண்டர்முன்புநின்று=சிவபிரான் திருமுன்னர் நின்று; ஆடினார்பாடினாரழுதார்=ஆடிப்பாடி யழுதார்; தொண்டனார்க்கு=அடியவராகிய வாகீசமுனிவர்க்கு; அங்குநிகழ்ந்தனயார்சொலவல்லார்=அவ்விடத்தில் நிகழ்ந்த பேரானந்தத்தை யார் எடுத்துச்சொல்லவல்லவர்கள்.—எ-று. (௩௮௦)

முன்புகண்டுகொண் டருளினாரமுதுண்ண மூவா
அன்புபெற்றவ ரளவிலாவார்வமுன் பொங்கப்
பொன்பிறங்கிய சடையரைப்போற்றுதா ... ட்கங்கள்
இன்பமோங்கிட வேத்தினாரொல்லையி றவத்தோர்.

(இ-ள்.) முன்புகண்டுகொண்டு—திருமுன்னே தரிசித்துக்கொண்டு; அருளிஞரமுதுண்ண—திருவருளிஞல் விளைந்த சிவானந்தத்தெள்ளமுதை யுண்ணும்படி; மூவாவன்புபெற்றவர்—கெடாத அன்பைப்பெற்ற வாகீசமுனிவர்; அளவிலாவார்வமுன்பொங்க—அளவுபடாத பெருவிருப்பானது முற்பட்டு மீக்கூர;பொன்பிறங்கியசடையானை—பொன்போல் ஒளிவிடுகின்ற சடையுடைய சிவபிரானை; போற்றுதாண்டகங்கள்—துதிக்கின்ற திருத்தாண்டகங்களை; இன்பமோங்கிடவேத்திஞர்—இன்பமுண்டாகத் துதித்தார்;எல்லையிறவத்தோர்—அளவுபடாத தவத்தையுடைய வாகீசமுனிவர்—எ-று.(கூஅக)

திருவையாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரார்திரிபுரங்கணீருநோக்கு மனலாடியாரமுதேயென்றேனுனே
கூரார்மழுவாட்படையேந்திக் குறட்பூதப்பல்படையானென்றேனுனே
பேராயிரமுடையாயென்றேனுனே பிறைசூடும்பிஞ்ஞகனேயென்றேனுனே
யாராவமுதேயென்னையாறனே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. ()

தீவாயின்முப்புரங்கணீருநோக்குந் தீர்த்தாபுராணனேயென்றேனுனே
மூவாமதிசூடியென்றேனுனே முதல்வாமுக்கண்ணனேயென்றேனுனே
யேவார்சிலையானேயென்றேனுனே யிடும்பைக்கடனின்றுமேறவாங்கி
யாவாவென்றருள்புரியுமையாறனே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே.

அஞ்சுண்ணவண்ணனேயென்றேனுனே யடியார்கட்காரமுதேயென்றேனுனே, நஞ்சணிகண்டனேயென்றேனுனே நாவலர்கணுன்மறையேயென்றேனுனே, நெஞ்சுணரவுள்புக்கிருந்தபோது நிறையுமமுதமேயென்றேனுனே, யஞ்சாதேயாள்வானேயையாறனே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (ங)

தொல்லைத்தொடுகடலேயென்றேனுனே துலங்குமிளம்பிறையாயென்றேனுனே, யெல்லைநிறைந்தானேயென்றேனுனே யேழ்நரம்பினின்னிசையாயென்றேனுனே, யல்லற்கடல்புக்கழுந்துவேனை வாங்கியருள்செய்தாயென்றேனுனே, யெல்லையாமையாருவென்றேனுனே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (ச)

இண்டைச்சடைமுடியாயென்றேனுனே யிருசுடர்வானத்தாயென்றேனுனே, தொண்டாற்றொழப்படுவாயென்றேனுனே துருத்திநெய்த்தானத்தாயென்றேனுனே, கண்டங்கறுத்தானேயென்றேனுனே கனலாகுங்கண்ணனே யென்றேனுனே, யண்டத்துக்கப்பாலாமையாறனே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (ரு)

பற்ருர்புரமெரித்தாயென்றேனுனே பசுபதிபாண்டரங்காவென்றேனுனே, கற்ருர்கணுவினுயென்றேனுனே கடுவிடையோன்றூர்தியாயென்றேனுனே, பற்ருஞர்நெஞ்சுளாயென்றேனுனே பார்த்தற்கருள்செய்தாயென்றேனுனே, யற்ருர்க்கருள்செய்யுமையாறனே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (சா)

விண்ணோர்தலைவனேயென்றேனானே விளங்குமிளம்பிறையாயென்றே னானே, யெண்ணாரெயிலெரித்தாயென்றேனானே யேகம்பமேயானேயென் றேனானே, பண்ணார்மறைபாடியென்றேனானே பசுபதீபானீற்றாயென்றே னானே, யண்ணாவையாறனேயென்றேனானே யென்றென்றேநானரற்றிநைகி ன்றேனே. (எ)

அவனென்றுநானுன்னையஞ்சாதேனை யல்லலறுப்பானேயென்றேனா னே, சிவனென்றுநானுன்னையெல்லாஞ்சொல்லச் செல்வந்தருவானேயெ ன்றேனானே, பவனாகியென்னுள்ளத்துள்ளேநின்று பண்டைவினையறுப்பா யென்றேனானே, யவனென்றேயாதியேயையாறனே யென்றென்றேநானரற் றிநைகின்றேனே. (அ)

கச்சியேகம்பனேயென்றேனானே கயிலாயாகாரோணாவென்றேனானே
நிச்சன்மணாளனேயென்றேனானே நினைப்பார்மனத்துளாயென்றேனானே
யுச்சம்போதேறேறீயென்றேனானே யுள்குவாருள்ளத்தாயென்றேனானே
யச்சம்பிணிதீர்க்குமையாறனே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே.()

வில்லாடிவேடனேயென்றேனானே வெண்ணீறுமெய்க்கணிந்தாயென் றேனானே, சொல்லாயசூழலாயென்றேனானே சுலாவாயதொன்னெறியே யென்றேனானே, யெல்லாமாயென்னுயிரேயென்றேனானே யிலங்கையர்கோ ன்றோளிறுத்தாயென்றேனானே, யல்லாவினைதீர்க்குமையாறனே யென்றெ ன்றேநானரற்றிநைகின்றேனே. (கய)

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓசையொலியெலாமானாய்நீயே யுலகுக்கொருவனாய்நின்றாய்நீயே
வாசமலரெலாமானாய்நீயே மலையான்மருகனாய்நின்றாய்நீயே
பேசப்பெரிதுமினியாய்நீயே பிரானாயடியென்மேல்வைத்தாய்நீயே
தேசவிளக்கெலாமானாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (க)

நோக்கரியதிருமேனியுடையாய்நீயே நோவாமேநோக்கருளவல்லாய்நீ யே, காப்பரியவைம்புலனுங்காத்தாய்நீயே காமனையுங்கண்ணழலாற்காய்ந் தாய்நீயே, யார்ப்பரியமாநாகமார்த்தாய்நீயே யடியானென்றடியென்மேல் வைத்தாய்நீயே, தீர்ப்பரியவல்வினைநோய்தீர்ப்பாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. (உ)

கனத்தகத்துக்கடுஞ்சுடராய்நின்றாய்நீயே கடல்வரைவானாகாயமானாய் நீயே, தனத்தகத்துத்தலைகலனாக்கொண்டாய்நீயே சார்ந்தாரைத்தகைந்தா ளவல்லாய்நீயே, மனத்திருந்தகருத்தறிந்துமுடிப்பாய்நீயே மலர்ச்சேவடி யென்மேல்வைத்தாய்நீயே, தினத்திருந்ததிருநீலகண்டனீயே திருவையா றகலாதசெம்பொற்சோதீ. (ங)

வானுற்றமாமலைகளானாய்நீயே வடகயிலைமன்னியிருந்தாய்நீயே [தாய்நீயே
யூனுற்றவொளிமழுவாட்படையாய்நீயே யொளிமதியோடரவுபுனல்வைத்
ஆனுற்றவைந்துமமர்ந்தாய்நீயே யடியானென்றடியென்மேல்வைத்தாய்நீயே
தேனுற்றசொன்மடவாள்பங்கனீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ.

பெண்ணாண்பிறப்பிலியாய்நின்றாய்நீயே பெரியார்கட்கெல்லாம்பெரியாய்நீ
யுண்ணவருநஞ்சமுண்டாய்நீயே யூழிமுதல்வனாய்நின்றாய்நீயே [யே
கண்ணாயுலகெலாங்காத்தாய்நீயே கழற்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
திண்ணார்மழுவாட்படையாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ.()

உற்றிருந்தவுணர்வெலாமானாய்நீயே வுற்றவர்க்கோர்சுற்றமாய்நின்றாய்நீயே
கற்றிருந்தகலைஞானமானாய்நீயே கற்றவர்க்கோர்கற்பகமாய்நின்றாய்நீயே
பெற்றிருந்ததாயவளினல்லாய்நீயே பிரானாயடியென்மேல்வைத்தாய்நீயே
செற்றிருந்ததிருநீலகண்டனீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. ௬

எல்லாவுலகமுமானாய்நீயே யேகம்பமேவியிருந்தாய்நீயே
நல்லாரைநன்மையறிவாய்நீயே ஞானச்சுடர்விளக்காய்நின்றாய்நீயே
பொல்லாவினைகளறுப்பாய்நீயே புகழ்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
செல்வாயசெல்வந்தருவாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (எ)

ஆவினிலைந்துமமர்ந்தாய்நீயே யளவில்பெருமையுடையாய்நீயே
பூவினினாற்றமாய்நின்றாய்நீயே போர்க்கோலங்கொண்டெயிலெய்தாய்நீயே
நாவினடுவுரையாய்நின்றாய்நீயே நண்ணியடியென்மேல்வைத்தாய்நீயே
தேவரறியாததேவனீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (அ)

எண்டிசைக்குமொண்சுடராய்நின்றாய்நீயே யேகம்பமேயவிறைவனீயே
வண்டிசைக்குநறுங்கொன்றைத்தாராய்நீயே வாராவுலகருளவல்லாய்நீயே
தொண்டிசைத்துன்னடிபரவநின்றாய்நீயே தூமலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
திண்சிலைக்கோர்சரங்கூட்டவல்லாய்நீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதீ.

விண்டார்புரமூன்றுமெய்தாய்நீயே விண்ணவர்க்குமேலாகிநின்றாய்நீயே, கண்டாரைக்கொல்லுநஞ்சுண்டாய்நீயே காலங்களூழியாய்நின்றாய்நீயே, தொண்டாயடியேனையாண்டாய்நீயே தூமலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே, திண்டோள்விட்டெரியாடலுகந்தாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. (௧0)

ஆருமறியாவிடத்தாய்நீயே யாகாயந்தேரூரவல்லாய்நீயே
பேரும்பெரியவிலங்கைவேந்தன் பெரியமுடிபத்திறுத்தாய்நீயே
யூரும்புரமூன்றுமட்டாய்நீயே யொண்டாமரையானுமாலுங்கூடித்
தேரும்டியென்மேல்வைத்தாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ.

திருச்சிற்றம்பலம்.

ஆயவாறுமற் றவர்மனங்களிப்புறக் கயிலை
மேயநாதர்தந் துணையொடும்வீற்றிருந் தருளித்
தூயதொண்டருந் தொழுதெதிர்நிற்கவக் கோலஞ்
சேயதாக்கினர் திருவையாறமர்ந்தமை திகழ.

(இ-ள்.) ஆயவாறுமற்றவர்மனங்களிப்புற—அவ்விதமாக அப்பர்சுவாமிகள் திருவுள்ளங் களிப்படையும்படி; கயிலைமேயநாதர்—திருக்கயிலையில் வீற்றிருந்தருளும் சிவபிரான்; தந்துணையொடும்வீற்றிருந்தருளி—தந்துணையாகிய பார்வதியாரோடு காட்சிகொடுத்தருளி, தூயதொண்டருந்தொழுதெதிர்நிற்க—பரிசுத்தராகிய வாகீசமுனிவரும் தொழுது திருமுன்னே நிற்க; அக்கோலஞ்சேயதாக்கினர்—அத்திருக்கோலத்தை மறைத்தருளினர்; திருவையாறமர்ந்தமைதிகழ—திருவையாற்றில் அத்திருக்கோலத்தோடு வீற்றிருந்தருளுந் தன்மையை உலகத்தாரறியும்படி.—எ-று. (௩௭௨)

அய்யர்கோலமங் களித்தகன்றிடவடித் தொண்டர்
மையல்கொண்டுள மகிழ்ந்திடவருந்திமற் றிங்குச்
செய்யவேணிய ரருளிதுவோவெனத் தெளிந்து
வையமுய்ந்திடக் கண்டமைபாடுவார் மகிழ்ந்து.

(இ-ள்.) ஐயர்கோலமங்களித்தகன்றிட—சிவபிரான் திருக்கோலத்தை யவ்விடத்துக் காட்சிகொடுத்து நீங்க; அடித்தொண்டர்—வாகீசமுனிவர்; மையல்கொண்டுளமகிழ்ந்திடவருந்தி—மயக்கங்கொண்டு மனமகிழ்ச்சியடைய வருத்தமுற்று; மற்றிங்குசெய்யவேணியரருளிதுவோவெனத்தெளிந்து—இவ்வாறுதற்கு இங்கு சிவந்த சடைமுடியையுடைய சிவபிரானருளிதுவோவென்று தெளிவடைந்து; வையமுய்ந்திடக்கண்டமைபாடுவார்மகிழ்ந்து—நிலவுலகத்தாருய்யும்படி தரிசித்தமையைத் திருவுளமகிழ்ந்து பாடுவாராயினர்.—எ-று. (௩௭௩)

வேறு.

மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான்மகளொடுமென்னுங்
கோதறுதண்டமிழ்ச்சொல்லாற் குலவுதிருப்பதிகங்கள்
வேதமுதல்வரையாற்றில் விரவுஞ்சராசரமெல்லாங்
காதற்றுணையொடுங்கூடக் கண்டேனெனப்பாடிநின்றார்.

(இ-ள்.) மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடுமென்னும்—மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான்மகளொடுமென்னும் முதலையுடைய; கோதறுதண்டமிழ்ச்சொல்லாற்குலவுதிருப்பதிகங்கள்—குற்றமற்ற தட்பமான இனிய சொல்லினால் விளங்கிய திருப்பதிகங்களை; வேதமுதல்வரையாற்றில்—வேதத்தை அருளிச்செய்த சிவபிரான் வீற்றிருந்தருளும் திருவையாற்றில்; விரவுஞ்சராசரமெல்லாம்—நெருங்கியிருக்கும் இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகிய உயிர்வர்க்கங்களெல்லாம்; காதற்றுணையொடுங்கூடக்கண்டேனெனப்பாடிநின்றார்—விருப்போடுகூடிய தம் துணையோடு கூடியிருக்கும்படி கண்டேனென்று பாடியருளினர்.—எ-று.

சரங்கள் துணையொடுநிற்றல் - பெண்ணுமாணுமாய்நிற்றல். அசரங்கள் துணையொடுநிற்றல் - பெண்மரம் ஆண்மரமெனநிற்றல். இவ்வாறு காரியப்பொருள்களெல்லாம் பெண்ணுணுய்நிற்றல் சிவம் சத்தியென்னு மிருபொருளின் வேறுபாடாதலில் இதனை முன்கண்டமையால் காரணப்பொருளாகிய சிவபிரானையும் தன்துணையாகிய பராசத்தியோடு வீற்றிருந்தருளத் தரிசித்தேனென்று விதந்து கூறினரெனப் போந்தவாறறிக. (௩௭௪)

திருவையாறு-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாம லையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங் களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன்.

போழிளங்கண்ணியினானைப் பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்தி வட்டமிட்டாடாவருவே
னாழிவலவனின்றேத்து மையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக் குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (உ)

எரிப்பிறைக்கண்ணியினானை யேந்திழையாளொடும்பாடி
முரித்தவிலயங்களிட்டு முகமலர்ந்தாடாவருவேன்
அரித்தொழுகுவெள்ளருவி யையாறடைகின்றபோது
வரிக்குயில்பேடையொடாடி வைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (ஙூ)

பிறையிளங்கண்ணியினானைப் பெய்வளையாளொடும்பாடித்
துறையிளம்பன்மலர்தூவித் தோளைக்குளிர்த்தொழுவேன்
அறையிளப்பூங்குயிலாலு மையாறடைகின்றபோது
சிறையிளம்பேடையொடாடிச் சேவல்வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (ச)

ஏடுமதிக்கண்ணியானை யேந்திழையாளொடும்பாடிக்
காடொடுநாடுமலையுங் கைதொழுதாடாவருவே
னாடலமர்ந்துறைகின்ற வையாறடைகின்றபோது
பேடைமயிலொடுங்கூடிப் பிணைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (ரு)

தண்மதிக்கண்ணியினானைத் தையனல்லாளொடும்பாடி
யுண்மெலிசிந்தையனாகி யுணராவுருகாவருவே
னண்ணலமர்ந்துறைகின்ற வையாறடைகின்றபோது
வண்ணப்பகின்றிலோடாடி வைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (சு)

கடிமதிக்கண்ணியினானைக் காரிகையாளொடும்பாடி
வடிவொடுவண்ணமிரண்டும் வாய்வேண்டுவசொல்லிவாழ்வே
னடியிணையார்க்குங்கழலா னையாறடைகின்றபோது
இடிகுரலன்னதோரேன மிசைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (எ)

விரும்புமதிக்கண்ணியானை மெல்லியலாளொடும்பாடிப்
பெரும்புலர்காலையெழுந்து பெறுமலர்கொய்யாவருவே
னருங்கலம்பொன்மணியுந்து மையாறடைகின்றபோது
கருங்கலைபேடையொடாடிக் கலந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (அ)

முற்பிறைக்கண்ணியினானை மொய்குழலாளொடும்பாடி
பற்றிக்கயிறறுக்கில்லேன் பாடியுமாடாவருவேன்
அற்றருள்பெற்றுநின்றாரோ டையாறடைகின்றபோது
நற்றுணைப்பேடையொடாடி நாரைவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (கூ)

திங்கள்மதிக்கண்ணியானைத் தேமொழியாளொடும்பாடி
யெங்கருணல்குங்கொலெந்தை யெனக்கினியென்னாவருவேன்
அங்கிளமங்கையராடு மையாறடைகின்றபோது
பைங்கிளிபேடையொடாடிப் பறந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (க௦)

வளர்மதிக்கண்ணியினானை வார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததோர்காலங் காண்பான்கடைக்கணிக்கின்றே
னளவுபடாததோரன்போ டையாறடைகின்றபோது
இளமணநாகுதழுவி யேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (கக)

திருச்சிற்றம்பலம்.

இது இந்தத்தலத்திலிருக்கும் ஆலயமே
கயிலாயமாகச் சுவாமி தரிசனங் கட்டளையிட்டபோது வோதி அருளியபதிகம்.

கண்டுதொழுதுவணங்கிக் கண்ணுதலார்தமைப்போற்றிக்
கொண்டதிருத்தாண்டகங்கள் குறுந்தொகைநேரிசையன்பின்
மண்டுவிருத்தங்கள்பாடி வணங்கித்திருத்தொண்டுசெய்தே
யண்டர்பிரான்றிருவையா றமர்ந்தனர்நாவுக்கரசர்.

(இ-ள்.) கண்ணுதலார்தமைக்கண்டுதொழுதுவணங்கிப்போற்றி—அவ்வாறு சிவபிரானைப் பார்ப்பதியாரோடு தரிசித்து அஞ்சலிசெய்து நிலமுறவணங்கித் துதித்து; கொண்டதிருத்தாண்டகங்கள்—எடுத்துக்கொண்ட திருத்தாண்டகங்களும்; குறுந்தொகைநேரிசை—திருக்குறுந்தொகைகளும் திருநேரிசைகளும்; அன்பின்மண்டுவிருத்தங்கள்—அன்போடு விரவிய திருவிருத்தங்களும்; பாடிவணங்கித்திருத்தொண்டுசெய்து—பாடியருளித் தொழுது கைத்திருத்தொண்டும்செய்து; அண்டர்பிரான்றிருவையாறமர்ந்தனர்நாவுக்கரசர்—சிவபிரான் வீற்றிருந்தருளும் திருவையாற்றில் எழுந்தருளியிருந்தார் வாகீசமுனிவர்.—எ-று. ஏ-அசை. (௩அ௫)

திருவையாறு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைவாய்த லுளான்வந்துசீரியன்
பொந்துவார்புலால் வெண்டலைக்கையினன்
முந்திவாயதோர் மூவிலைவேல்பிடித்
தந்திவாயதோர் பாம்பரையாறரோ.

அரக்கின்மேனிய னந்தளிர்மேனியன்
அரக்கின்சேவடி யாளஞ்சவஞ்சலென்
றரக்கனீரைந்து வாயுமலறவே
யரக்கினனடி யாலுமையாறனே.

திருச்சிற்றம்பலம்.

நீடியவப்பதிநின்று நெய்த்தானமேமுதலாக
மாடுயர்தானம்பணிந்து மழபாடியாரைவணங்கிப்
பாடியசெந்தமிழ்மாலை பகர்ந்துபணிசெய்துபோற்றித்
தேடியமாலுக்கரியார் திருப்பூந்துருத்தியைச்சேர்ந்தார்.

(இ-ள்.) நீடியவப்பதிநின்றும்=உயர்வாகிய அத்திருவையாற்றினின்றும்; நெய்த்தானமேமுதலாக=திருநெய்த்தானமுதலாக; மாடுயர்தானம்பணிந்து=அருகிலுள்ள மேன்மைதங்கிய திருப்பதிகளைவணங்கி; மழபாடியாரைவணங்கி=திருமழபாடியின்கண் வீற்றிருந்தருளும் சிவபிரானையும் தொழுது; பாடியசெந்தமிழ்மாலைபகர்ந்து=தாம் பாடுதற்கேதுவான செந்தமிழ்த் திருப்பதிகத்தை யருளிச்செய்து; பணிசெய்துபோற்றி=திருப்பணிகளைச்செய்து துதித்து; தேடியமாலுக்கரியார்=முன்னாளில் திருவடியைத்தேடிய திருமாலுக்கு அரியவராகிய சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருப்பூந்துருத்தியைச்சேர்ந்தார்=திருப்பூந்துருத்தியென்னும் திருப்பதியையடைந்தனர் வாகீசமுனிவர்.—எ-று. ()

திருவையாறு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைவண்ணத்த ராய்த்திறம்பாவண
முந்திவண்ணத்த ராய்முழுநீறணி
சந்திவண்ணத்த ராய்த்தழல்போல்வதோ
ரந்திவண்ணமு மாவரையாறரோ.

எடுத்தவாளரக் கன்திறல்வண்ணமும்
இடர்க்கள்போற்பெரி தாகியவண்ணமுங்
கடுத்தகைந்நரம் பாலிசைவண்ணமு
மடுத்தவண்ணமு மாவரையாறரோ.

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செம்பொற்சோதீசுவரர்-தேவியார்-அறம்வளர்த்தநாயகி.

திருவையாறு - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கங்கையைச்சடையுள்வைத்தார் கதிர்பொறியரவும்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார் திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார் மான்மறிமழுவும்வைத்தா
ரங்கையுளனலும்வைத்தா ரையனையாறனாரே. (௧)

பொடிதனைப்பூசவைத்தார் பொங்கும்வெண்ணூலும்வைத்தார்
கடியதோர்நாகம்வைத்தார் காலனைக்காலில்வைத்தார்
வடிவுடைமங்கைதன்னை மார்பிலோர்பாகம்வைத்தா
ரடியிணைதொழவும்வைத்தா ரையனையாறனாரே. (௨)

உடைதருகீளும்வைத்தா ருலகங்களனைத்தும்வைத்தார்
படைதருமழுவும்வைத்தார் பாய்புலித்தோலும்வைத்தார்
விடைதருகொடியும்வைத்தார் வெண்புரிநூலும்வைத்தா
ரடைதரவருளும்வைத்தா ரையனையாறனாரே. (௩)

தொண்டர்கள்தொழவும்வைத்தார் தூமதிசடையில்வைத்தா
ரிண்டைவைத்திகழவைத்தா ரெமக்கென்றுமின்பம்வைத்தார்
வண்டுசேர்குழலினாளை மருவியோர்பாகம்வைத்தா
ரண்டவானவர்களேத்து மையனையாறனாரே. (௪)

வானவர்வணங்கவைத்தார் வல்வினைமாயவைத்தார்
கானிடைநடமும்வைத்தார் காமனைக்கனலாவைத்தா
ரானிடையைந்தும்வைத்தா ராட்டுவார்க்கருளும்வைத்தா
ரானையினுரிவைவைத்தா ரையனையாறனாரே. (௫)

சங்கணிகுழையும்வைத்தார் சாம்பல்மெய்ப்பூசவைத்தார்
வெங்கதிரெரியவைத்தார் விரிபொழிலனைத்தும்வைத்தார்
கங்குலும்பகலும்வைத்தார் கடுவினைகளையவைத்தா
ரங்கமதோதவைத்தா ரையனையாறனாரே. (௬)

பத்தர்கட்கருளும்வைத்தார் பாய்விடையேறவைத்தார்
சித்தத்தையொன்றவைத்தார் சிவமதேநினையவைத்தார்
முத்தியைமுற்றவைத்தார் முறைமுறைநெறிகள்வைத்தா
ரத்தியினுரிவைவைத்தா ரையனையாறனாரே. (௭)

ஏறுகந்தேறவைத்தா ரிடைமருதிடமும்வைத்தார்
நாறுபூங்கொன்றைவைத்தார் நாகமுமரையில்வைத்தார்
கூறுமையாகம்வைத்தார் கொல்புலித்தோலும்வைத்தா
ராறுமோர்சடையில்வைத்தா ரையனையாறனாரே. (௮)

பூதங்கள்பலவும்வைத்தார் பொங்குவெண்ணீறும்வைத்தார்
கீதங்கள்பாடவைத்தார் கின்னரந்தன்னைவைத்தார்
பாதங்கள்பரவவைத்தார் பத்தர்கள்பணியவைத்தா
ராதியுமந்தம்வைத்தா ரையனையாறனாரே. (கூ)

இரப்பவர்க்கீயவைத்தா ரீபவர்க்கருளும்வைத்தார்
கரப்பவர்தங்கட்கெல்லாங் கடுநரகங்கள்வைத்தார்
பரப்புநீர்க்கங்கைதன்னைப் படர்சடைப்பாகம்வைத்தா
ரரக்கனுக்கருளும்வைத்தா ரையனையாறனாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குண்டனாய்ச்சமணரோடே கூடிநான்கொண்டமாலைத்
துண்டனேசுடர்கொள்சோதி தூநெறியாகிநின்ற
வண்டனேயமரரேறே திருவையாறமர்ந்ததேனே
தொண்டனேன்றொழுதுன்பாதஞ் சொல்லினானறிகின்றேனே.

அறிவிலாவரக்கனோடி யருவரையெடுக்கலுற்று
முறுகினான்முறுகக்கண்டு மூதறிவாளனோக்கி
நிறுவினான்சிறுவிரலா னெரிந்துபோய்நிலத்தில்வீழ
வறிவினாலருள்கள்செய்தான் றிருவையாறமர்ந்ததேனே.

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தானலாதுலகமில்லைச் சகமலாதடிமையில்லைக்
கானலாதாடலில்லைக் கருதுவார்தங்களுக்கு
வானலாதருளுமில்லை வார்குழல்மங்கையோடு
மானலாலூர்வதில்லை யையனையாறனார்க்கே.

மலையலாலிருக்கையில்லை மதித்திடாவரக்கன்றன்னைத்
தலையலானெரித்ததில்லைத் தடவரைக்கீழடர்த்து
நிலையிலார்புரங்கள்வேவ நெருப்பலால்விரித்ததில்லை
யலையினார்பொன்னிமன்னு மையனையாறனார்க்கே.

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குறுவித்தவாகுற்ற நோய்வினைகாட்டிக் குறுவித்தநோ
யுறுவித்தவாவுற்ற நோய்வினைதீர்ப்பா னுகந்தருளி
யறிவித்தவா றடி யேனையையாற னடிமைக்கனே
செறிவித்தவாதொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே.

கறுத்துமிட்டார்கண்டங் கங்கைச்சடைமேற் கரந்தருளி
யிறுத்துமிட்டாரிலங் கைக்கிறைதன்னை யிருபதுதோ
ளறுத்துமிட்டாரடி யேனையையாற னடிமைக்களே
பொறுத்துமிட்டார்தொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே.

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப்பொழிவன முத்திகொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்துநின்ற பழவினைதீர்ப்பன பாம்புசுற்றி
யந்திப்பிறையணிந் தாடுமையாற னடித்தலமே. (க)

இழித்தனவேழேழ் பிறப்புமறுத்தன வென்மனத்தே
பொழித்தனபேரெழிற் கூற்றையுதைத்தன போற்றவர்க்காய்
கிழித்தன தக்கன் கிளரொளிவேள்வியைக் கீழ்முன்சென்று
அழித்தனவாறங்க மானவையாற னடித்தலமே. (உ)

மணிநிறமொப்பன பொன்னிறமன்னின மின்னியல்வாய்
கணிநிறமன்ன கயிலைப்பொருப்பன காதல்செய்யத்
துணிவனசீலத்த ராகித்தொடர்ந்து விடாததொண்டர்க்
கணியனசேயன தேவர்க்கையாற னடித்தலமே. (ங)

இருடருதுன்பப் படலமறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருடருகண்ணிழந் துண்பொருணாடிப் புகலிழந்த
குருடருந்தம்மைப் பரவக்கொடுநர கக்குழியின்
றருடருகைகொடுத் தேற்றுமையாற னடித்தலமே. (ச)

எழுவாயிறுவா யிலாதனவெங்கட் பிணிதவிர்த்து
வழுவாமருத்துவ மாவனமாநர கக்குழிவாய்
விழுவாரவர்தம்மை வீழ்ப்பனமீட்பன மிக்கவன்போர்
டழுவார்க்கமுதங்கள் காண்கவையாற னடித்தலமே. (ரு)

துன்பக்கடலிடைத் தோணித்தொழில்பூண்ட தொண்டர்தம்மை
யின்பக்கரைமுகந் தேற்றுந்திறத்தன மாற்றயலே
பொன்பட்டொழுகப் பொருந்தொளிசெய்யுமப் பொய்பொருந்தா
வன்பர்க்கணியன காண்கவையாற னடித்தலமே. (சு)

களித்துக்கலந்ததொர் காதற்கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத்தொழுதுமுன் னின்றவிப்பத்தரைக் கோதில்செந்தேன்
றெளித்துச்சுவையமு தூட்டியமரர்கள் சூழிருப்ப
வளித்துப்பெருஞ்செல்வ மாக்குமையாற னடித்தலமே. (எ)

திருத்திக்கருத்தினைச் செவ்வேநிறுத்திச் செறுத்துடலை
வருத்திக்கடிமலர் வாளெடுத்தோச்சி மருங்குசென்று
விருத்திக்குழக்கவல் லோர்கட்குவிண்பட் டிகையிடுமா
லருத்தித்தருந்தவ ரேத்துமையாற னடித்தலமே. (அ)

பாடும்பறண்டையு மொந்தையுமார்ப்பப் பரந்துபல்பேய்
கூடிமுழவக் குவிகவிழ்கொட்டக் குறுநரிகள்
நீடுங்குழல்செய்ய வையநொளிய நிணப்பிணக்காட்
டாடுந்திருவடி காண்கவையாற னடித்தலமே. (கூ)

நின்போலமரர்க ணீண்முடிசாய்த்து நிமிர்த்துகுத்த
பைம்போதுழக்கிப் பவளந்தழைப்பன பாங்கறியா
வென்போலிகள்பறித் திட்டவிலையு முகையுமெல்லா
மம்போதெனக்கொள்ளு மையனையாற னடித்தலமே. (க௦)

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அந்திவட்டத்திங்கட் கண்ணியனையா றமர்ந்துவந்தென்
புந்திவட்டத்திடைப் புக்குநின்றானையும் பொய்யென்பனோ
சிந்திவட்டச்சடைக் கற்றையலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட்டத்தொடு கொன்றையளாவிய நம்பனையே.

பாடகக்கால்கழற் கால்பருதிக்கதி ருக்கவந்தி
நாடகக்கானங்கை முன்செங்கணேனத்தின் பின்னடந்த
காடகக்கால்கணங் கைதொழுங்காலெங்க ணாய்நின்றகா
லாடகக்காலரி மான்றேர்வல்லனை யாற்றனவே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-செம்பொற்சோதிநாதர், தேவியார்-அறம்வளர்த்தநாயகி.

சேர்ந்துவிருப்பொடுப் புக்குத் திருநெடுமாளிகைமுன்னர்ச்
சார்ந்துவலங்கொண்டிறைஞ்சித் தம்பெருமான்றிருமுன்பு
நேர்ந்தபரிவொடுந்தாழ்ந்து நிறைந்தொழியாவன்புபொங்க
வார்ந்தகண்ணீர்மழைதூங்க வயர்வுறுந்தன்மையரானார்.

(இ-ள்.) சேர்ந்துவிருப்பொடும்புக்கு=திருப்பூந்துருத்தியையடைந்து விருப்போடு உள்ளேபுகுந்து; திருநெடுமாளிகைமுன்னர்ச்சார்ந்து=திருக்கோயிலின் முன்னடைந்து; வலங்கொண்டிறைஞ்சி=அதை வலமாகவந்துவணங்கி; தம்பெருமான்றிருமுன்பு=தமது சிவபிரான் திருமுன்னே; நேர்ந்தபரிவொடுந்தாழ்ந்து=தமக்குண்டாகிய பேரன்போடுவணங்கி; நிறைந்தொழியாவன்புபொங்க=நிறைந்து நீங்காத அன்பு மேம்பட; ஆர்ந்தகண்ணீர்மழைதூங்க=நிறைந்த ஆனந்தக்கண்ணீர் மழைபோலச்சொரிய; அயர்வுறுந்தன்மையரானார்=பரவசமடைகின்ற தன்மையுடையவரானார் அவ்வாகீசமுனிவர்.—எ-று. (௩அஎ)

திருப்பூந்துருத்தியமர்ந்த செஞ்சடையானையானேற்றுப்
பொருப்பூர்ந்தருளும்பிரானைப் பொய்யிலியைக்கண்டேனென்று
விருப்புறுதாண்டகத்தோடு மேவியகாதல்விளைப்ப
இருப்போந்திருவடிக்கீழ்நா மென்னுங்குறுந்தொகைபாடி.

(இ-ள்.) திருப்பூந்துருத்தியமர்ந்தசெஞ்சடையானை=திருப்பூந்துருத்தியென்னும் திருப்பதியில் வீற்றிருந்தருளும் சிவந்த சடைமுடியையுடையவரும்; ஆனேற்றுப்பொருப்பூர்ந்தருளும்பிரானை=இடபேமாகிய மலையை வாகனமாகக்கொண்டருளும் பிரானுமாகிய; பொய்யிலியைக்கண்டேனென்று=பொய்யிலியைத் திருப்பூந்துருத்தியில் தரிசித்தேனென்று; விருப்புறுதாண்டகத்தோடு=அன்பமைந்த திருத்தாண்டகத்தோடு; மேவியகாதல்விளைப்ப=உளத்துதித்த பேரன்பானது மேம்பட; இருப்போந்திருவடிக்கீழ்நாமென்னுங்குறுந்தொகைபாடி=சேவடிக்கீழ் நாமிருப்பதே என்னும் இறுதியையுடைய திருக்குறுந்தொகையை அருளிச்செய்து.—எ-று. (௩அஅ)

திருப்பூந்துருத்தி-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நில்லாதநீர்சடைமேனிற்பித்தானை நினையாவென்னெஞ்சைநினைவித்தானைக், கல்லாதனவெல்லாங்கற்பித்தானைக் காணாதனவெல்லாங்காட்டினானைச், சொல்லாதனவெல்லாஞ்சொல்லியென்னைத் தொடர்ந்திங்கடியேனையாளாக்கொண்டு, பொல்லாவென்னோய்தீர்த்தபுனிதன்றன்னைப் புண்ணியனைப்பூந்துருத்திகண்டேனானே. (க)

குற்றாலங்கோகரணமேவினானைக் கொடுங்கைக்கடுங்கூற்றைப்பாய்ந்தான்றன்னை, யுற்றாலஞ்சுண்டொடுக்கினானை யுணராவென்னெஞ்சையுணர்வித்தானைப், பற்றாலின்கீழங்கிருந்தான்றன்னைப் பண்ணார்ந்தவீணைபயின்றான்றன்னைப், புற்றாடரவார்த்தபுனிதன்றன்னைப் புண்ணியனைப்பூந்துருத்திகண்டேனானே. (௨)

எனக்கென்றுமினியானையெம்மான்றன்னை யெழிலாருமேகம்பமேயான்றன்னை, மனக்கென்றும்வருவானைவஞ்சர்நெஞ்சி னில்லானைநின்றியூர்

மேயான்றன்னைத், தனக்கென்றுமடியேனையாளாக்கொண்ட சங்கரனைச்ச
ங்கவார்குழையான்றன்னைப்,புனக்கொன்றைத்தாரணிந்தபுனிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திகண்டேனானே. (௩)

வெறியார்மலர்க்கொன்றைசூடியானை வெள்ளானைவந்திறைஞ்சும்வெ
ண்காட்டானை, யறியாதடியேனகப்பட்டேனை யல்லற்கடனின்றுமேறவா
ங்கி, நெறிதானிதுவென்றுகாட்டினானை நிச்சனலிபிணிகடீர்ப்பான்றன்னைப்,
பொறியாடரவார்த்தபுனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திகண்டே
னானே. (௪)

மிக்கானைவெண்ணீறுசண்ணித்தானை விண்டார்புரமூன்றும்வேவநோ
க்கி, நக்கானைநான்மறைகள்பாடினானை நல்லார்கள்பேணிப்பரவநின்ற, தக்
கானைத்தண்டாமரைமேலண்ண றலைகொண்டுமாத்திரைக்கணுலகமெல்லா
ம், புக்கானைப்புண்ணியனைப்புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்
திகண்டேனானே. (௫)

ஆர்த்தானைவாசுகியையரைக்கோர்கச்சா வசைத்தானையழகாயபொ
ன்னார்மேனிப், பூத்தானத்தான்முடியைப்பொருந்தாவண்ணம் புணர்த்தா
னைப்பூங்கணையானுடலம்வேவப், பார்த்தானைப்பரிந்தானைப்பனிநீர்க்கங்கை
படர்சடைமேற்பயின்றானைப்பதைப்பயானை, போர்த்தானைப்புண்ணியனை
ப்புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திகண்டேனானே. (௬)

எரித்தானையெண்ணார்புரங்கண்மூன்று மிமைப்பளவிற்பொடியாகவெ
ழிலார்கையா, லுரித்தானைமதகரியையுற்றுப்பற்றி யுமையதனைக்கண்டஞ்
சிநடுங்கக்கண்டு, சிரித்தானைச்சீரார்ந்தபூதஞ்சூழத் திருச்சடைமேற்றிங்க
ளும்பாம்புநீரும், புரித்தானைப்புண்ணியனைப்புனிதன்றன்னைப் பொய்யிலி
யைப்பூந்துருத்திகண்டேனானே. (௭)

வைத்தானைவானோருலகமெல்லாம் வந்திறைஞ்சிமலர்கொண்டுநின்று
போற்றும், வித்தானைவேண்டிற்றொன்றீவான்றன்னை விண்ணவர்தம்பெரு
மானைவினைகள்போக, வுய்த்தானையொலிகங்கைசடைமேற்றாங்கி யொளித்
தானையொருபாகத்துமையோடாங்கே, பொய்த்தானைப்புண்ணியனைப்புனி
தன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திகண்டேனானே. (௮)

ஆண்டானைவானோருலகமெல்லா மந்நாளறியாததக்கன்வேள்வி, மீண்
டானைவிண்ணவர்களோடுங்கூடி விரைமலர்மேனான்முகனுமாலுந்தேர, நீண்
டானைநெருப்புருவமானான்றன்னை நிலையிலார்மும்மதிலும்வேவவில்லைப், பூ
ண்டானைப்புண்ணியனைப்புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திகண்
டேனானே. (௯)

மறுத்தானைமலைகோத்தங்கெடுத்தான்றன்னை மணிமுடியோடிருபது
தோணெரியக்காலா, லிறுத்தானையெழுநரம்பினிசைகேட்டானை யெண்டி

சைக்குங்கண்ணனுன்சிரமேலொன்றை, யறுத்தானையமரர்களுக்கமுதீந்தானை யாவர்க்குந்தாங்கொணுநஞ்சமுண்டு, பொறுத்தானைப்புண்ணியனைப்புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திகண்டேனுனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூந்துருத்தித் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொடிகொள்செல்வ விழாக்குணலையருக்
கடிகொள்பூம்பொழிற் கச்சியேகம்பனுர்
பொடிகள்பூசிய பூந்துருத்திந்நக
ரடிகள்சேவடிக் கீழ்நாமிருப்பதே.

துடித்ததோள்வலி வாளரக்கன்றனைப்
பிடித்தகைக்நெரிந் துற்றனகண்ணெலாம்
பொடிக்கவூன்றிய பூந்துருத்திந்நகர்ப்
படிக்கொள்சேவடிக் கீழ்நாமிருப்பதே.

திருச்சிற்றம்பலம்.

அங்குறையுந்தன்மைவேண்டி நாமடிபோற்றுவதென்று
போங்குந்தமிழ்ச்சொல்விருத்தம் போற்றியபாடல்புரிந்து
தங்கித்திருத்தொண்டுசெய்வார் தம்பிரானுரருள்பெற்றுத்
திங்களுநாயிறுந்தோயுந் திருமடமாங்கொன்றுசெய்தார்.

(இ-ள்.) அங்குறையுந்தன்மைவேண்டி=அத்திருப்பூந்துருத்தியில் வீற்றிருந்தருளும் திருக்கோலத்தை விரும்பி; நாமடிபோற்றுவதென்று=நாமடிபோற்றுவதென்று இறுதியிலுள்ள; பொங்குதமிழ்ச்சொல்விருத்தம்=பொலிவமைந்த தமிழ்ச்சொல்லாலாகிய திருவிருத்தமாக; போற்றியபாடல்புரிந்து=துதித்த திருப்பாடலையருளிச்செய்து; தம்பிரானுரருள்பெற்று=சிவபிரான் திருவருள்பெற்று; தங்கித்திருத்தொண்டுசெய்வார்=அங்குவசித்துத் திருத்தொண்டுசெய்கின்ற வாகீசமுனிவர்; திங்களுநாயிறுந்தோயும்=சந்திரனும் சூரியனும்வந்து தவழும்படியான; திருமடமாங்கொன்றுசெய்தார்=அவ்விடத்தில் ஒருதிருமடத்தைச் செய்வித்தார்.—எ-று. இவ்விரண்டும் குளகம். (௩௮௬)

திருப்பூந்துருத்தி - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாலினைமாலுறநின்ருன்மலைமக டன்னுடைய
பாலனைப்பான்மதிசூடியைப்பண்புண ரார்மதின்மேற்
போலனைப்போர்விடையேறியைப்பூந் துருத்திமகிழு
மாலனையாதிபுராணனைநாமடி போற்றுவதே.

பைக்கையும்பாந்திவிழிக்கையும்பாம்பு சடையிடையே
வைக்கையும்வானிழிகங்கையுமங்கை நடுக்குறவே
மொய்க்கையரக்கனையூன்றினன்பூந் துருத்தியுறையு
மிக்கநல்வேதவிகிர்தனைநாமடி போற்றுவதே.

திருச்சிற்றம்பலம்.

பல்வகைத்தாண்டகத்தோடும் பரவுந்தனித்தாண்டகமு
மல்லலறுப்பவர்தானத் தடைவுதிருத்தாண்டகமுஞ்
செல்கதிகாட்டிடப்போற்றுந் திருவங்கமாலையுமுள்ளிட்
டெல்லையில்பன்மைத்தொகையு மியம்பினரேத்தியிருந்தார்.

(இ-ள்.) பல்வகைத்தாண்டகத்தோடும்=பலவகைத் திருத்தாண்டகத்தோடு; பரவுந்தனித்தாண்டகமும்=பாடியருளுகின்ற தனித்திருத்தாண்டகமும்; அல்லலறுப்பவர் தானத்து=பிறவிநோயைக்கெடுக்கும் சிவபிரானது திருப்பதிகளை எடுத்துச்சொல்லும்; அடைவுதிருத்தாண்டகமும்=அடைவு திருத்தாண்டகமும்; செல்கதிகாட்டிடப்போற்றும்=வீடடையும் நெறியைக்காட்டும்படி துதிக்கத்தக்க; திருவங்கமாலையுமுள்ளிட்டு=திருவங்கமாலையுமடங்க; எல்லையில்பன்மைத்தொகையும்=எண்ணிறந்த பலதிருப்பதிகங்களையும்; இயம்பினரேத்தியிருந்தார்=பாடித் துதித்தெழுந்தருளியிருந்தார்.—எ-று. ()

பலவகைத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நேர்ந்தொருத்தியொருபாகத்தடங்கக்கண்டு நிலைதளரவாயிரமாமுகத்தினோடு, பாய்ந்தொருத்திபடர்சடைமேற்பயிலக்கண்டு படவரவும்பனிமதியும்வைத்தசெல்வர்; தாந்திருத்தித்தம்மனத்தையொருக்காத்தொண்டர் தனித்தொருதண்டேன்றிமெய்தளராமுன்னம், பூந்துருத்திபூந்துருத்தியென்பீராகிற் பொல்லாப்புலாற்றுருத்திபோக்கலாமே. (க)

ஐத்தானத்தகமிடறுசுற்றியாங்கே யகத்தடைந்தாலியாதொன்றுமிடுவாரில்லை, மைத்தானக்கண்மடவார்தங்களோடு மாயமனைவாழ்க்கைமகிழ்ந்துவாழ்வீர், பைத்தானத்தொண்மதியும்பாம்புநீரும் படர்சடைமேல்வைத்துகந்தபண்பன்மேய, நெய்த்தானநெய்த்தானமென்பீராகி னிலாவாயபுலாற்றானநீக்கலாமே. (உ)

பொய்யாறுவாறேபுனைந்துபேசிப் புலர்ந்தெழுந்தகாலைப்பொருளேதேடிக், கையாறுக்கரணமுடையோமென்று களித்தமனத்தராய்க்கருதிவாழ்வீர், நெய்யாறுவாடியநீலகண்டர் நிமிர்புன்சடைநெற்றிக்கண்ணர்மேய, ஐயாறேயையாறேயென்பீராகி லல்லறீர்ந்தமருலகமாளலாமே. (ங)

இழவொன்றுதாமொருவர்க்கிட்டொன்றீயா ரீன்றெடுத்ததாய்தந்தை பெண்டீர்மக்கள், கழனங்கோவையாதல்கண்டுந்தேறார் களித்தமனத்தராய்க்கருதிவாழ்வீ, ரழனம்மைநீக்குவிக்குமனையனுக்கு மமருலகமாள்விக்குமம்மான்மேய, பழனம்பழனமேயென்பீராகிற் பயின்றெழுந்தபழவினைநோய்பாற்றலாமே. (ச)

ஊற்றுத்துறையொன்பதுண்ணின்றூரீ ரொக்கவடைக்கும்போதுணரமாட்டீர், மாற்றுத்துறைவழிகொண்டோடாமுன்ன மாயமனைவாழ்க்கைமகிழ்ந்துவாழ்வீர், வேற்றுத்தொழில்பூண்டார்புரங்கண்மூன்றும் வெவ்வழல்வாய்வீழ்விக்கும்வேந்தன்மேய, சோற்றுத்துறைசோற்றுத்துறையென்பீராகிற் றுயர்நீங்கித்தூநெறிக்கட்சேரலாமே. (ரு)

கலஞ்சுழிக்குங்கருங்கடல்சூழ்வையந்தன்னிற் கள்ளக்கடலிலழுந்தி
வாளா, நலஞ்சுழியாவெழுநெஞ்சேயின்பம்வேண்டி னெம்பன்றன்னடியிணை
க்கேநவில்வாயாகி, லலஞ்சுழிக்குமன்னாகந்தன்னான்மேயவருமறையோடா
றங்கமானார்கோயில், வலஞ்சுழியேவலஞ்சுழியேயென்பீராகில் வல்வினைக
டீர்ந்துவானாளலாமே. (௬)

தண்டிக்குண்டோதரன்பிங்கிருடி சார்ந்தபுகழ்நந்திசங்குகன்னன்
பண்டையுலகம்படைத்தான்றானும் பாரையளந்தான்பல்லாண்டிசைப்பத்
திண்டிவயிற்றுச்சிறுகட்பூதஞ் சிலபாடச்செங்கண்விடையொன்றூர்வான்
கண்டியூர்கண்டியூரென்பீராகிற் கடுகநும்வல்வினையைக்கழற்றலாமே. (௭)

விடமூக்கப்பாம்பேபோற்சிந்திநெஞ்சே வெள்ளேற்றான்றன்றமரைக்
கண்டபோது, வடமூக்கமாமுனிவர்போலச்சென்று மாதவத்தார்மனத்து
ளார்மழுவாட்செல்வர், படமூக்கப்பாம்பணையிற்பள்ளியானும் பங்கயத்து
மேலயனும்பரவிக்காணக், குடமூக்கேகுடமூக்கேயென்பீராகிற் கொடுவி
னைகடீர்ந்தரனைக்குறுகலாமே. (௮)

தண்காட்டாச்சந்தனமுந்தவளநீறுந் தழையணுகுங்குறுங்கொன்றை
மாலைசூடிக், கண்காட்டாக்கருவரைபோலனையகாஞ்சிக் கார்மயிலஞ்சாய
லார்கலந்துகாண, வெண்காட்டாக்காடங்கிடமாகின்று வெரிவீசியிரவாடுமி
றைவர்மேய, வெண்காடேவெண்காடேயென்பீராகில் வீடாதவல்வினையை
வீட்டலாமே. (௯)

தந்தையார்தாயாருடன்பிறந்தார் தாரமார்புத்திரரார்தாந்தாமாரே, வந்
தவாறெங்ஙனேபோமாறேதோ மாயமாமிதற்கேதுமகிழவேண்டா, சிந்தை
யீருமக்கொன்றுசொல்லக்கேண்மின் றிகழ்மதியும்வாளரவுந்திளைக்குஞ்செ
ன்னி, யெந்தையார்திருநாமநமச்சிவாய வென்றெழுவார்க்கிருவிசும்பிலிரு
க்கலாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

தனித் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பனீயம்மைநீயையனுநீ யன்புடையமாமனுமாமியுநீ, யொப்புடை
யமாதருமொண்பொருளுநீ யொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ, துய்ப்பனவு
முய்ப்பனவுந்தோற்றுவாய்நீ துணையாயென்னெஞ்சந்துறப்பிப்பாய்நீ, யிப்
பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீ யிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே. (௧)

வெம்பவருகிற்பதன்றுகூற்றம் வெய்யவினைப்பகையும்பையநையு,
மெம்பரிவுதீர்ந்தோமிடுக்கணில்லோ மெங்கெழிலென்ஞாயிறெளியோமல்
லோ, மம்பவளச்செஞ்சடைமேலாறுசூடி யனலாடியானஞ்சுமாட்டுகந்த,
செம்பவளவண்ணர்செங்குன்றவண்ணர் செவ்வானவண்ணரென்சிந்தையாரே.

ஆட்டுவித்தாலாரொருவராடாதாரோ யடக்குவித்தாலாரொருவரடங்காதாரோ, யோட்டுவித்தாலாரொருவரோடாதாரோ யுருகுவித்தாலாரொருவருருகாதாரோ, பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரோ பணிவித்தாலாரொருவர்பணியாதாரோ, காட்டுவித்தாலாரொருவர்காணுதாரோ காண்பாரார்கண்ணுதலாய்காட்டாக்காலே. (ங)

நற்பதத்தார்நற்பதமேஞானமூர்த்தி நலஞ்சுடரோநால்வேதத்தப்பானின்ற, சொற்பதத்தார்சொற்பதமுங்கடந்துநின்ற சொலற்கரியசூழலாயிதுவுன்றன்மை, நிற்பதொத்துநிலையிலாநெஞ்சந்தன்னு ணிலாவாதபுலாவுடம்பேபுகுந்துநின்ற, கற்பகமேயானுன்னைவிடுவேனல்லேன் கனகமாமணிநிறத்தெங்கடவுளானே. (ச)

திருக்கோயிலில்லாததிருவிலூருந் திருவெண்ணீறணியாததிருவிலூரும், பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும் பாங்கினொடுபலதளிகளில்லாவூரும், விருப்போடுவெண்சங்கமூதாவூரும் விதானமும்வெண்கொடியுமில்லாவூரு, மருப்போடுமலர்பறித்திட்டுண்ணுவூரு மவையெல்லாமூரல்லவடவிகாடே. (ரு)

திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற் றீவண்ணர்திறமொருகாற்பேசாராகி, லொருகாலுந்திருக்கோயில்சூழாராகி லுண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணுராகி, லருநோய்கள்கெடவெண்ணீறணியாராகி லளியற்றார்பிறந்தவாறேதோவென்னிற், பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே. (சு)

நின்னுவ்வார்பிறரன்றிநீயேயானாய் நினைப்பார்கண்மனத்துக்கோர்வித்துமானாய், மன்னானாய்மன்னவர்க்கோரமுதமானாய் மறைநான்குமானாயாறங்கமானாய், பொன்னானாய்மணியானாய்போகமானாய் பூமிமேற்புகழ்தக்கபொருளேயுன்னை, யென்னானாயென்னானாயென்னினல்லா லேழையேனென்சொல்லியேத்துகேனே. (எ)

அத்தாவுன்னடியேனையன்பாலார்த்தா யருளுக்கிற்றீர்த்தநீராட்டிக்கொண்டா, யெத்தனையுமரியநீயெளியையானா யெனையாண்டுகொண்டிரங்கியேன்றுகொண்டாய், பித்தனேன்பேதையேன்பேயேனாயேன் பிழைத்தனகளெத்தனையும்பொறுத்தாயன்றே, யித்தனையுமெம்பரமோவையவையோவெம்பெருமான்றிருக்கருணையிருந்தவாறே. (அ)

குலம்பொல்லேன்குணம்பொல்லேன்குறியும்பொல்லேன் குற்றமேபெரிதுடையேன்கோலமாய, நலம்பொல்லேனான்பொல்லேன்ஞானியல்லேனல்லாரோடிசைந்திலேனடுவேநின்ற, விலங்கல்லேன்விலங்கல்லாதொழிந்தேனல்லேன் வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லே, னிலம்பொல்லேனிரப்பதேயீயமாட்டே னென்செய்வான்றோன்றினேனேழையேனே. (கூ)

சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து தரணியொடுவானாளத்தருவரேனு, மங்குவாரவர்செல்வமதிப்போமல்லோ மாதேவர்க்கேகாந்தரல்லராகி, லங்கமெல்லாங்குறைந்தழுகுதொழுநோயரா யாவுரித்துத்தின்றுழலும்புலையரேனுங், கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகி லவர்கண்டீர்நாம்வணங்குங்கடவுளாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திரு அடைவு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொருப்பள்ளிவரைவில்லாப்புரமூன்றெய்து புலந்தழியச்சலந்தரனைப்பிளந்தான்பொற்சக், கரப்பள்ளிதிருக்காட்டுப்பள்ளிகள்ளார் கமழ்கொல்லியறைப்பள்ளிகலவஞ்சாரற், சிரப்பள்ளிசிவப்பள்ளிசெம்பொன்பள்ளி செழுநனிபள்ளிதவப்பள்ளிசீரார், பரப்பள்ளியென்றென்றுபகர்வோரெல்லாம் பரலோகத்தினிதாகப்பாலிப்பாரே.

கயிலாயமலையெடுத்தான்கரங்களோடு சிரங்களுரநெரியக்கால்விரலாற்செற்றோன், பயில்வாயபராய்த்துறைதென் பாலைத்துறைபண்டெழுவர்தவத்துறைவெண்டுறைபைம்பொழிற், குயிலாலந்துறைசோற்றுத்துறைபூந்துறை பெருந்துறையுங்குரங்காடுதுறையினோடு, மயிலாடுதுறைகடம்பந்துறையாவடு துறைமற்றுந்துறையனைத்தும்வணங்குவோமே.

திருச்சிற்றம்பலம்.

திரு அங்கமாலை - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய், தலை-மாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத், தலையேநீவணங்காய். (க)

கண்காள்காண்மின்களோ, கடல்-நஞ்சுண்டகண்டன்றன்னை
யெண்டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக், கண்காள்காண்மின்களோ. (உ)

செவிகாள்கேண்மின்களோ, சிவ-னெம்மிறைசெம்பவள
மெரிபோல்மேனிப்பிரான்றிறமெப்போதுஞ், செவிகாள்கேண்மின்களோ. ()

மூக்கேநீமுரலாய், முது-காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை, மூக்கேநீமுரலாய். (ச)

வாயேவாழ்த்துகண்டாய், மத-யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னை, வாயேவாழ்த்துகண்டாய். (ரு)

நெஞ்சேநீநினையாய், நிமிர்-புன்சடைநின்மலனை
மஞ்சாடும்மலைமங்கைமணாளனை, நெஞ்சேநீநினையாய். (சு)

கைகாள்கூப்பித்தொழீர், கடி-மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரையார்த்தபரமனைக், கைகாள்கூப்பித்தொழீர். (எ)

ஆக்கையாற்பயனென், னரன்-கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ், வாக்கையாற்பயனென். (அ)

கால்களாற்பயனென், கறைக்-கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக், கால்களாற்பயனென். (கூ)

உற்றாருளரோ, வுயிர்-கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக், குற்றாருளரோ. (க0)

இறுமாந்திருப்பன்கொலோ, வீசன்-பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்றங், கிறுமாந்திருப்பன்கொலோ. ()

தேடிக்கண்டுகொண்டேன், திரு-மாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே. தேடிக்கண்டுகொண்டேன். (கஉ)

திருச்சிற்றம்பலம்.

வேறு.

பொன்னிவலங்கொண்டதிருப் பூந்துருத்தியிவரிருப்பக்
கன்மனத்துவல்லமணர் தமைவாதிற்கட்டழித்துத்
தென்னவன்கூனிமிர்த்தருளித் திருநீற்றினொளிகண்டு
மன்னியசீர்ச்சண்பைநகர் மறையவனார்வருகின்றார்.

(இ-ள்.) பொன்னிவலங்கொண்ட=காவிரிநதியானது வலமாகச்சூழ்கின்ற; திருப்பூந்துருத்தியிவரிருப்ப=திருப்பூந்துருத்தியென்னும் திருப்பதியில் வாகீசமுனிவர் எழுந்தருளியிருக்க; கன்மனத்துவல்லமணர்தமை=இரங்காமனமுடைய வலியசமணர்களை; வாதிற்கட்டழித்து=வாதினால் வென்று; தென்னவன்கூனிமிர்த்தருளி=நின்றசீர்நெடுமாறநாயனாரது கூனை நிமிரச்செய்து; திருநீற்றினொளிகண்டு=விபூதியினொளியை விளங்கச்செய்து; மன்னியசீர்ச்சண்பைநகர்மறையவனார்வருகின்றார்=நிலைபெற்ற சிறப்பினையுடைய சீகாழியில் அவதரித்த ஆளுடையபிள்ளையார் பாண்டிநாட்டினின்றும் எழுந்தருளுவாராயினார்.—எ-று.

துருத்தி என்றது ஆற்றினிடைக்குறை. காவிரி வலமாய்வருதலால் பூந்துருத்தியென்றாயிற்று. (ஙககக)

தீந்தமிழ்நாட்டிடைநின்று மெழுந்தருளிச்செம்பொன்னி
வாய்ந்தவளந்தருநாட்டு வந்தணைந்தார்வாக்கினுக்கு
வேந்தரிருந்தமைகேட்டு விரைந்தவர்பாற்செல்வனெனப்
பூந்துருத்திவளம்பதியின் புறம்பணையில்வந்தணைந்தார்.

(இ-ள்.) தீந்தமிழ்நாட்டிடைநின்றுமெழுந்தருளி=இனிய தமிழ்நாட்டின்கணின்றும் எழுந்தருளி; செம்பொன்னி=செந்நிறமான காவிரிநதியானது; வாய்ந்தவளந்தருநாட்டு வந்தணைந்தார்=சிறந்த வளத்தைக்கொடுக்கும் சோழநாட்டில் எழுந்தருளிவந்த ஆளுடையபிள்ளையார்; வாக்கினுக்குவேந்தரிருந்தமைகேட்டு=ஆண்டவரசு அங்கெழுந்தரு

1-அப்பர் - 2-சம்பந்தர்

வாகீசர் திருப்பூந்துருத்தியிலிருக்க ஆளுடையபிள்ளையார் பாண்டிநாட்டிற் சைவமணம் பரவச்செய்து சோணாட்டிலே அவரைக் காணவருகையில் வாகீசரும் அப்பிள்ளையாருடைய திருச்சிவிகையைத்தாங்கும் பேறடைய அப்பரெங்குற்றாரென, யாமிங்குற்றேமென்றது.

ரியிருந்தமையைக் கேள்வியுற்று; விரைந்தவர்பாற்செல்வனெனா=அவரிடத்து விரைந்துசெல்வேனென்று; பூந்துருத்திவளம்பதியின்=திருப்பூந்துருத்தியென்னும் வளந்தங்கிய திருப்பதிக்கணுள்ள; புறம்பணையில்வந்தணைந்தார்=மருதநிலத்தில் எழுந்தருளிவந்தார்.

சண்பைவருந்தமிழ்விரக ரெழுந்தருளத்தாங்கேட்டு
மண்பரவும்பெருங்கீர்த்தி வாகீசர்மனமகிழ்ந்து
கண்பெருகுங்களிகொள்ளக் கண்டிறைஞ்சுங்காதலினா
லெண்பெருகும்விருப்பெய்த வெழுந்தருளியெதிர்சென்றார்.

(இ-ள்.) சண்பைவருந்தமிழ்விரகர்=சீகாழியில் அவதரித்த ஆளுடையபிள்ளையார்; எழுந்தருளத்தாங்கேட்டு=எழுந்தருளத் தாம் அதைக்கேள்வியுற்று; மண்பரவும்பெருங்கீர்த்திவாகீசர்மனமகிழ்ந்து=நிலவுலகத்தார்வணங்கும் மிக்க புகழையுடைய ஆண்டவரசு திருவுள்ளமகிழ்ந்து,கண்பெருகுங்களிகொள்ள=தம்முடைய கண்கள் பெருங்களிப்படைய; கண்டிறைஞ்சுங்காதலினால்=தரிசித்துவணங்கும் பேரன்பினால்; எண்பெருகும்விருப்பெய்த=எண்ணத்தக்க பேரவாவானது உண்டாக; எழுந்தருளியெதிர்சென்றார்=எழுந்தருளி யெதிரேபோனார்.—எ-று. (ருகரு)

காழியர்கோன்வருமெல்லை கலந்தெய்திக்காதலித்தார்
சூழுமிடைந்திடுநெருக்கிற் காணாமேதொழுதருளி
வாழியவர்தமைத்தாங்கு மணிமுத்தின்சிவிகையினைத்
தாழுமுடலிதுகொண்டு தாங்குவன்யானெனத்தரித்தார்.

(இ-ள்.) காழியர்கோன்வருமெல்லைகலந்தெய்தி=ஆளுடையபிள்ளையார் எழுந்தருளிவருகின்ற இடத்தைத் தாமும் திருக்கூட்டத்திற் கலந்து கிட்டி; காதலித்தார்சூழுமிடைந்திடுநெருக்கில்=அடியார்கள் நாற்புறமும் சூழ்ந்திருக்கும் மிடைந்த நெருக்கத்தில்; காணாமேதொழுதருளி=தம்மைப் பிள்ளையார் அறியாதவண்ணம் வணங்கியருளி; அவர்தமைத்தாங்குமணிமுத்தின்சிவிகையினை=அவ்வாளுடைய பிள்ளையாரை அடியார்கள் சுமக்கின்ற அழகிய முத்துச்சிவிகையை; தாழுமுடலிதுகொண்டுதாங்குவன்யானெனத்தரித்தார்=தாழ்ந்த இவ்வுடம்பைக்கொண்டு யானும் சுமப்பேனென்று அதனைத் தாங்கியருளினார்.—எ-று. வாழி-அசை.

பிணிமுதலியவற்றாலிழிவரலுடைமையின் தாழுமுடலென்றும் இவ்வுடற்கு இப்பணி பெரும்பேறு விளக்குமென்னும் கருத்தினராய் இதுகொண்டு தாங்குவனென்றுங் கருதினரென்க. (ருகச)

வந்தொருவரறியாமே மறைந்தவடிவொடும்புகலி
யந்தணனாரேறியெழுந் தருளிவருமணிமுத்தின்
சந்தமணிச்சிவிகையினைத் தாங்குவாருடன்றாங்கிச்
சிந்தைகளிப்புறவருவார் தம்மையாருந்தெளிந்திலரால்.

(இ-ள்.) வந்தொருவரறியாமேமறைந்தவடிவொடும்=ஒருவருமறியாமல் வந்து மறைந்த திருவுருவோடு; புகலியந்தணனாரேறியெழுந்தருளிவரும்=சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் இவர்ந்தெழுந்தருளிவரும்; அணிமுத்தின்சந்தமணிச்சிவிகையினை=அழகிய முத்துக்களாலிழைத்த சிறந்த இரத்தினச்சிவிகையை; தாங்குவாருடன்றாங்கி=தாங்கும் அடியார்களோடு தாங்கி; சிந்தைகளிப்புறவருவார்தமையாருந்தெளிந்திலர்=திருவுள்ளக்களிப்போடுவரும் வாகீசமுனிவரை யாவரும் தெரிந்திலர்.—எ-று. ஆல் - அசை.

அரன்பணிபோலன்பர்பணியும் ஒருதன்மைத்தெனக்கோடலில் தாங்கிச் சிந்தை களிப்புற வருவாரென்றார். (௩௧௫)

திருஞானமாமுனிவ ரரசிருந்தபூந்துருத்திக்
கருகாகவெழுந்தருளி யெங்குற்றாரப்பரென
வுருகாநின்றும்மடியே னும்மடிகடாங்கிவரும்
பெருவாழ்வுவந்தெய்தப் பெற்றிங்குற்றேனென்றார்.

(இ-ள்.) திருஞானமாமுனிவர்=ஆளுடையபிள்ளையார்; அரசிருந்தபூந்துருத்திக்கருகாகவெழுந்தருளி=வாகீசமுனிவர் எழுந்தருளியிருந்த திருப்பூந்துருத்திக்குச் சமீபமாக எழுந்தருளி; எங்குற்றாரப்பரென=அப்பர் எங்குற்றாரென்று வினவியருள; உருகாநின்றும்மடியேனும்மடிகடாங்கிவரும்=உமதடியேன் மனங்கசிந்து உம்முடைய திருவடிகளைச் சுமந்துசெல்லும்; பெருவாழ்வுவந்தெய்தப்பெற்று=பேரானந்தவாழ்வு கிடைக்கப்பெற்று; இங்குற்றேனென்றார்=இங்கிருக்கின்றேனென்றருளிச்செய்தார்.

மெய்யடியார்க்கடியராகும் தம்மியல்புவிளக்கிய உம்மடியேனென்றும் பிள்ளையாரடிகள் தாங்கிவரும்பணி முதல்வன் பணியாய்க்கோடலில் பெருவாழ்வுவந்ததென்றுங் கூறினரென்க. (௩௧௬)

பிள்ளையாரதுகேளாப் பெருகுவிரைவுடனிழிந்தே
யுள்ளமிகுபதைப்பெய்தி யுடையவரசினைவணங்க
வள்ளலார்வாகீச ரவர்வணங்காமுன்வணங்கத்
துள்ளுமான்மறிக்கரத்தார் தொண்டரெலாந்தொழுதார்த்தார்.

(இ-ள்.) பிள்ளையாரதுகேளா=ஆளுடையபிள்ளையார் வாகீசமுனிவரருளிய திருவார்த்தையைக்கேட்டு; பெருகுவிரைவுடனிழிந்து=மிக்க விரைவோடு சிவிகையினின்றுமிறங்கி; உள்ளமிகுபதைப்பெய்தி=திருவுள்ளத்தில் மிக்க பதைபதைப்படைந்து; உடையவரசினைவணங்க=ஆண்டவரசைவணங்க; வள்ளலார்வாகீசர்=அருள்வள்ளலாகிய வாகீசமுனிவர்; அவர்வணங்காமுன்வணங்க=பிள்ளையார்வணங்குமுன் தாமும் விரைந்துவணங்க; துள்ளுமான்மறிக்கரத்தார்=துள்ளுகின்ற மான்கன்றையேந்திய திருக்கரத்தையுடைய சிவபிரான்; தொண்டரொலாந்தொழுதார்த்தார்=திருவடியார்களெல்லாரும் வணங்கி ஆரவாரித்தார்கள்.—எ-று. ஏ-அசை.

ஆண்டவரசு இது செய்யப்பெறுதென்னும் அருமைப்பாட்டால் பிள்ளையார் விரைவுடனிழிந்து பதைப்பெய்தி வணங்கினரென்றும் வாகீசமுனிவரும் அவர் வணங்குதல் தகாதென்னும் அருமைப்பாட்டால் அவர் வணங்காமுன் தாமும் வணங்கினரென்றுங் கொள்க. இச்செய்யுள்களால் இருவர்மாட்டுமுள்ள பொய்விரவா அன்பும் அடிமைத் தன்மையும் விளக்கியவாறு காண்க. (௩௧௭)

கழுமலக்கோன்றிருநாவுக் கரசருடன்கலந்தருளிச்
செழுமதியந்தவழ்சோலைப் பூந்துருத்தித்திருப்பதியின்
மழுவிடைனுமோனேந்து திருக்கரத்தார்மலர்த்தாள்கள்
தொழுதுருகியின்புற்றுத் துதிசெய்தங்குடனிருந்தார்.

(இ-ள்.) கழுமலக்கோன்றிருநாவுக்கரசருடன்கலந்தருளி=ஆளுடையபிள்ளையார் ஆண்டவரசுடன் திருவுள்ளக்கலப்பாய்; செழுமதியந்தவழ்சோலைப்பூந்துருத்தித்திருப்பதியில்=அழகமைந்த சந்திரன் தவழ்கின்ற சோலைசூழ்ந்த திருப்பூந்துருத்தியென்னும்

1-அப்பர் - 2-சம்பந்தர் -

அப்பர்சுவாமிகள் பிள்ளையார் சிவிகையைத் தாங்குவதைக்கண்டு மனம்பதைத்து அதைவிட்டிழிந்து தாம் அப்பர்சுவாமிகளை வணங்க அவர் வணங்குவதற்குமுன் தாம் வணங்கினர். பின்பு பிள்ளையாரும் பாண்டிநாட்டில் நடந்தவிஷயங்களை அப்பர் சுவாமிகளுக்கறிவித்து அவருடன் சிலநாள் எழுந்தருளியிருந்தது

திருப்பதியில்; மழுவினொடுமானேந்துதிருக்கரத்தார்மலர்த்தாள்கள்—மழுவோடு மான்கன்றையேந்திய திருக்கரங்களையுடைய சிவபிரான் மலர்போலும் திருவடிகளை; தொழுதுருகியின்புற்றுத்துதிசெய்தங்குடனிருந்தார்—வணங்கி மனமுருகி இன்பமடைந்து திருப்பதிகங்கள்பாடி அவ்விடத்தில் இருவரும் வசித்திருந்தருளினார்கள்.—எ-று. (௬௯அ)

வல்லமணர்தமைவாதில் வென்றதுவும்வழுதிபாற்
புல்லியகூனிமிர்த்ததுவுந் தண்பொருந்தப்புனனாட்டி
லெல்லையிலாத்திருநீறு வளர்த்ததுவுமிருந்தவத்தோர்
சொல்லவதுகேட்டுவந்தார் தூயபுகழ்வாகீசர்.

(இ-ள்.) வல்லமணர்தமைவாதில்வென்றதுவும்—கொடியசமணர்களை வாதிலே வென்றதும்; வழுதிபாற்புல்லியகூனிமிர்த்ததுவும்—பாண்டியனிடத்துச் சேர்ந்திருந்த கூனை நிமிரும்படி செய்ததும், தண்பொருந்தப்புனனாட்டில்—குளிர்ச்சிதங்கிய தாம்பிரபர்ணிநீர்பாயும் பாண்டிநாட்டில்; எல்லையிலாத்திருநீறுவளர்த்ததுவும்—அளவுபடாத மகிமையையுடைய விபூதியைப் பரம்பச்செய்ததும்; இருந்தவத்தோர்சொல்ல—ஆளுடையபிள்ளையார் அருளிச்செய்ய; அதுகேட்டுவந்தார்தூயபுகழ்வாகீசர்—அதைக்கேட்டுத் தூய்மையான புகழையுடைய வாகீசமுனிவர் மகிழ்ச்சியடைந்தார்.—எ-று.

எல்லையிலாத்திருநீறென்றது மலமலவாசனைகளைக்கெடுக்கும் குறியாய் அருட்சம்பத்தாயிருக்குமியல்பு பற்றியென்க. வளர்த்தல் - இது முக்கியசாதனமென்று உலகத்தார் ஐயமின்றித்தெளிந்து வாழச்செய்தல். (௬௯௯)

பண்புடையபாண்டிமா தேவியார்தம்பரிவு
நண்புடையகுலச்சிறையார் பெருமையுஞானத்தலைவ
ரொண்பெருகவுரைத்தருள வெல்லையில்சீர்வாகீசர்
மண்குலவுதமிழ்நாடு காண்பதற்குமனங்கொண்டார்.

(இ-ள்.) பண்புடையபாண்டிமாதேவியார்தம்பரிவும்—நல்லொழுக்கமுடைய மங்கையர்க்கரசியாரது சிவநேசமும்; நண்புடையகுலச்சிறையார்பெருமையும்—அடியார் பத்தியிற்சிறந்த குலச்சிறைநாயனாரது தகுதியுடைமையும்; ஞானத்தலைவரொண்பெருகவுரைத்தருள—ஆளுடையபிள்ளையார் விரித்தருளிச்செய்ய; எல்லையில்சீர்வாகீசர்—அளவுபடாத சிறப்பினையுடைய வாகீசமுனிவர்; மண்குலவுதமிழ்நாடுகாண்பதற்குமனங்கொண்டார்—நிலவுலகத்திற் சிறந்துவிளங்கும் பாண்டிநாட்டைத் தரிசிக்கும்படிக்குத் தம் திருவுள்ளத்திற் கொண்டருளினார்.—எ-று. (௭00)

பிரமபுரத்திருமுனிவர் பெருந்தொண்டைநன்னாட்டி
லரன்மகிழுந்தானங்க ளணைந்திறைஞ்சிப்பாடுவதற்
குரனுடையதிருநாவுக் கரசருரைசெய்தருளப்
புரமெரித்தார்திருமகனார் பூந்துருத்திதொழுதகன்றார்.

(இ-ள்.) பிரமபுரத்திருமுனிவர்—ஆளுடையபிள்ளையார்; பெருந்தொண்டைநன்னாட்டில்—பெருமைதங்கிய திருத்தொண்டைநாட்டில்; அரனுறையுந்தானங்கள்—சிவபிரான்வீற்றிருந்தருளும் திருவேகம்பமுதலிய திருப்பதிகளை; அணைந்திறைஞ்சிப்பாடுவதற்கு—அடைந்து வணங்கித் திருப்பதிகங்கள்பாடும் வண்ணம்; உரனுடையதிருநாவுக்கரசருரைசெய்தருள—அருண்ஞானமுடைய திருநாவுக்கரசர் அருளிச்செய்ய; புரமெரித்தார்திருமகனார்—சிவபிரான் திருமகனாராகிய ஆளுடையபிள்ளையார்; பூந்துருத்திதொழுதகன்றார்—திருப்பூந்துருத்தியைவணங்கி அங்குநின்றும் எழுந்தருளினார்.—எ-று.

ஆண்டவரசங்கணர்சீ ரருள்பெற்றப்பதிநின்றும்
பாண்டிநாட்டெழுந் தருளும் பான்மையராய்த்தென்றிசைபோய்க்
காண்டகையதிருப்புத்தூர் பணிந்தேத்திக்கதிர்மதியுந்
தீண்டுகொடிமதின்மதுரைத் திருவாலவாய்சேர்ந்தார்.

(இ-ள்.) ஆண்டவரசங்கணர்சீரருள்பெற்று=வாகீசமுனிவர் சிவபிரானது சிறந்த திருவருளைப்பெற்று; அப்பதிநின்றும்=அத்திருப்பூந்துருத்தியினின்றும்; பாண்டிநாட்டெழுந்தருளும்பான்மையராய்த்தென்றிசைபோய்=திருப்பாண்டிநாட்டிற்கு எழுந்தருளுங் கருத்துடையராய்த் தென்றிசைக்கண்சென்று; காண்டகையதிருப்புத்தூர்பணிந்தேத்தி=காணத்தக்க சிறப்பினையுடைய திருப்புத்தூரை வணங்கித்துதித்து; கதிர்மதியுந்தீண்டுகொடிமதில்=சூரியனையும் சந்திரனையும் அளாவுகின்ற கொடியையுடைய மதில் சூழ்ந்த; மதுரைத்திருவாலவாய்சேர்ந்தார்=மதுரையின்கணுள்ள திருவாலவாயென்னும் ஆலயத்தையடைந்தார்.—எ-று. (௪௦௨)

சென்றணைந்துமதுரையினிற் றிருந்தியநூற்சங்கத்து
ளன்றிருந்துதமிழாராய்ந் தருளியவங்கணர்கோயின்
முன்றிலினை வலங்கொண்டு முன்னிறைஞ்சியுள்புக்கு
வன்றனிமால்விடையாரை வணங்கிமகிழ்வொடுந்திளைத்தார்.

(இ-ள்.) சென்றணைந்து=திருக்கோயிலையடைந்து; மதுரையினிற்றிருந்தியநூற்சங்கத்துள்=மதுரையில் திருத்தமான தமிழ்நூல்களை யாராயும் முதற்சங்கத்தில்; அன்றிருந்துதமிழாராய்ந்தருளிய=அந்நாளில் சவுந்தரபாண்டியராய் வீற்றிருந்து தமிழை ஆராய்ச்சிசெய்தருளிய; அங்கணர்கோயில்வலங்கொண்டு=சுந்தரேசரது திருவாலவாயைவலமாகவந்து; முன்றிலினைமுன்னிறைஞ்சியுள்புக்கு=திருமுற்றத்தில் முன்னேவணங்கி உள்ளேசென்று; வன்றனிமால்விடையாரைவணங்கி=வலிதங்கிய ஒப்பில்லாத திருமாலாகிய விடையினையுடைய அச்சுந்தரேசரைத்தொழுது; மகிழ்வொடுந்திளைத்தார்=மகிழ்ச்சியோடும் பேரானந்தத்தழுந்தினார்.—எ-று. (௪௦௩)

எய்தியபேரானந்த வின்பத்தினிடையழுந்தி
மொய்திகழுஞ்சடையானை முளைத்தானையென்றெடுத்துச்
செய்தவத்தோர்தாண்டகச்செந் தமிழ்பாடிப்புறத்தணைவார்
கைதொழுதுபணிந்தேத்தித் திருவுள்ளங்களிசிறந்தார்.

(இ-ள்.) எய்தியபேரானந்தவின்பத்தினிடைமூழ்கி=தாமடைந்த அடங்காத ஆனந்தவெள்ளத்தில்முழுகி; மொய்திகழுஞ்சடையானை=நெருங்கி விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபிரானை; முளைத்தானையென்றெடுத்து=முளைத்தானையென்று முதலிலெடுத்து; செய்தவத்தோர்தாண்டகச்செந்தமிழ்பாடிப்புறத்தணைவார்=செய்கின்றதவத்தையுடைய வாகீசமுனிவர் திருத்தாண்டகமென்னும் செப்பமான தமிழ்ப்பதிகத்தைப் பாடியருளிப் புறத்தில் வருகின்றவராய்; கைதொழுதுபணிந்தேத்தி=கைகுவித்து வணங்கித்துதித்து; திருவுள்ளங்களிசிறந்தார்=திருவுள்ளத்திற் களிப்படைந்தவரானார். ௪௦௪

திருவாலவாய்த் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி முதிருஞ்சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள், வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும் வரைசிலை

யாவாசுகிமாநாணாக்கோத்துத், துளைத்தானைச்சுடுசரத்தாற்றுவளநீறாத்
தூமுத்தவெண்முறுவலுமையோடாடித், திளைத்தானைத்தென்கூடற்றிரு
வாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௧)

விண்ணுலகின்மேலார்கண்மேலான்றன்னை மேலாடுபுரமூன்றும்பொ
டிசெய்தானைப், பண்ணிலவுபைம்பொழில்சூழ்பழனத்தானைப் பசும்பொன்
னிறத்தானைப்பானீற்றானை, யுண்ணிலவுசடைக்கற்றைக்கங்கையாளைக்
கரந்துமையோடுடனாகியிருந்தான்றன்னைத், தெண்ணிலவுதென்கூடற்றிரு
வாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௨)

நீர்த்திரளைநீள்சடைமேனிறைவித்தானை நிலமருவிநீரோடக்கண்டா
ன்றன்னைப், பாற்றிரளைப்பயின்றாடவல்லான்றன்னைப் பதைத்தெழுந்தவெ
ங்கூற்றைப்பாய்ந்தான்றன்னைக், காற்றிரளாய்மேகத்தினுள்ளேநின்று கடுங்
குரலாயிடிப்பானைக்கண்ணோர்நெற்றித், தீத்திரளைத்தென்கூடற்றிருவால
வாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௩)

வானமிதுவெல்லாமுடையான்றன்னை வரியரவக்கச்சானைவன்பேய்
சூழக், கானமதினடமாடவல்லான்றன்னைக் கடைக்கண்ணான்மங்கையுமை
நோக்காவென்மே, லூனமதுவெல்லாமொழித்தான்றன்னை யுணர்வாகியடி
யேனதுள்ளேநின்ற, தேனமுதைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியே
சிந்திக்கப்பெற்றேனானே. (௪)

ஊரானையுலகேழாய்நின்றான்றன்னை யொற்றைவெண்பிறையானையு
மையோடென்றும், பேரானைப்பிறர்க்கென்றுமரியான்றன்னைப் பிணக்காட்
டினடமாடல்பேயோடென்று, மாரானையமரர்களுக்கமுதீந்தானை யருமறை
யானான்முகனுமாலும்போற்றுஞ், சீரானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவ
னடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௫)

மூவனைமூர்த்தியைமூவாமேனி யுடையானைமூவுலகுந்தானேயெங்கும்
பாவனைப்பாவமறுப்பான்றன்னைப் படியெழுதலாகாதமங்கையோடு
மேவனைவிண்ணோர்நடுங்கக்கண்டு விரிகடலினஞ்சுண்டமுதமீந்த
தேவனைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

துறந்தார்க்குத்தூநெறியாய்நின்றான்றன்னைத் துன்பந்துடைத்தாளவ
ல்லான்றன்னை, யிறந்தார்களென்பேயணிந்தான்றன்னை யெல்லிநடமாடவ
ல்லான்றன்னை, மறந்தார்மதின்மூன்றுமாய்த்தான்றன்னை மற்றொருபற்றி
ல்லாவடியார்க்கென்றுஞ், சிறந்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவன
டியேசிந்திக்கப்பெற்றேனானே. (௭)

வாயானைமனத்தானைமனத்துணின்ற கருத்தானைக்கருத்தறிந்துமுடி
ப்பான்றன்னைத், தூயானைத்தூவெள்ளையேற்றான்றன்னைச் சுடர்த்திங்கட்
சடையானைத்தொடர்ந்துநின்ற, தாயானைத்தவமாயதன்மையானைத் தலை

யாயதேவாதிதேவர்க்கென்றுஞ், சேயானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சி வனடியேசிந்திக்கப்பெற்றேனே. (அ)

பகைச்சுடராய்ப்பாவமறுப்பான்றன்னைப் பழியிலியாய்நஞ்சமுண்ட மிர்தீந்தானை, வகைச்சுடராய்வல்லசுரர்புரமட்டானை வளைவிலியாயெல்லா ர்க்குமருள்செய்வானை, மிகைச்சுடரைவிண்ணவர்கண்மேலப்பாலை மேலா யதேவாதிதேவர்க்கென்றுந், திகைச்சுடரைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனே. (கூ)

மலையானைமாமேருமன்னினானை வளர்புன்சடையானைவானோர்தங்க டலையானையென்றலையினுச்சியென்றுந் தாபித்திருந்தானைத்தானேயெங்கு ந், துலையாகவொருவரையுமில்லாதானைத் தோன்றாதார்மதில்மூன்றுந்தூ ளாவெய்த, சிலையானைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்க ப்பெற்றேனே. (க0)

தூர்த்தனைத்தோண்முடிபத்திறுத்தான்றன்னைத் தொன்னரம்பினின் னிசைகேட்டருள்செய்தானைப், பார்த்தனைப்பணிகண்டுபரிந்தான்றன்னைப் பரிந்தவர்க்குப்பாசுபதமீந்தான்றன்னை, யாத்தனையடியேனுக்கன்பன்றன் னை யளவிலாப்பல்லூழிகண்டுநின்ற, தீர்த்தனைத்தென்கூடற்றிருவாலவா ய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சீர்திகழும்பாண்டிமா தேவியார்திருமேனி
சேரவருளுடையதனாற் கூனிமிர்ந்ததென்னவனார்
பார்பரவுங்குலச்சிறையார் வாகீசர்தமைப்பணிவுற்
றாரகிலாக்காதன்மிக வடிபோற்றவங்கிருந்தார்.

(இ-ள்.) சீர்திகழும்பாண்டிமாதேவியார்=சிறப்பமைந்த மங்கையர்க்கரசியா ரும்; திருமேனிசேரவருளுடையதனால்=அவர் திருமேனியைச்சேரும்படிக்குத் திருவ ருளுடைமையால்; கூனிமிர்ந்ததென்னவனார்=தன்கூன் நிமிரப்பெற்ற நின்றசீர்நெடு மாறநாயனாரும்; பார்பரவுங்குலச்சிறையார்=நிலவுலகிலுள்ளாரால் துதிக்கப்படும் குல ச்சிறைநாயனாரும்; வாகீசர்தமைப்பணிவுற்று=வாகீசமுனிவரைவணங்கி; ஆரகிலாக்கா தன்மிக=அடங்காத பேரன்புமிகும்படி; அடிபோற்றவங்கிருந்தார்=அவர் திருவடிக ளைத்துதிக்க அங்கெழுந்தருளியிருந்தார்.—எ-று. (௪0௫)

திருவாலவாயமர்ந்த செஞ்சுடரைச்செழும்பொருணூ
றருவானைநேரிசையுந் தாண்டகமுமுதலான
பெருவாய்மைத்தமிழ்பாடிப் பேணுதிருப்பணிசெய்து
மருவார்தம்புரமெரித்தார் பூவணத்தைவந்தடைந்தார்.

(இ-ள்.) திருவாலவாயமர்ந்தசெஞ்சுடரை=திருவாலவாயின்கண் வீற்றிருந்தரு ளும் செவ்விய ஞானப்பிழம்பாயுள்ளவரை; செழும்பொருணூறருவானை=செழுமையா ன அகப்பொருணூலை யருளிச்செய்தவரை; நேரிசையுந்தாண்டகமுமுதலான=திருநேரி

சையும் திருத்தாண்டகமும்முதலான; பெருவாய்மைத்தமிழ்பாடி=பெரிய மெய்ம்மையான தமிழ்த்திருப்பதிகங்களைப் பாடியருளி; பேணுதிருப்பணிசெய்து=தாம்விரும்பிய உழவாரத் திருப்பணியையும்செய்து; மருவார்முப்புரமெரித்தார்=பகைவர்களது முப்புரத்தையெரித்த சிவபிரான் வீற்றிருந்தருளும்; பூவணத்தைவந்தடைந்தார்=திருப்பூவணத்தை யடைந்தருளினார்.—எ-று. (சos)

திருவாலவாய்த் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வேதியர்வேதகீதர் விண்ணவரண்ணாவென்றென்
றோதியேமலர்கடூவி யொருங்கிநின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய் படர்சடைமதியஞ்சூடு
மாதியேயாலவாயி லப்பனேயருள்செயாயே.

பொடிக்கொடுபூசிப்பொல்லாக் குரம்பையிற்புந்தியொன்றிப்
பிடித்துநின்றாள்களென்றும் பிதற்றிநானிருக்கமாட்டே
னெடுப்பனென்றிலங்கைக்கோன்வந் தெடுத்தலுமிருபதுதோ
ளடர்த்தனேயாலவாயி லப்பனேயருள்செயாயே.

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சொக்கநாதேசுவரர் - தேவியார் - மீனாட்சியம்மை.

கொடிமாடநிலவுதிருப் பூவணத்துக்கோயிலினு
ணெடியானுக்கறிவரியார் நேர்தோன்றக்கண்டிறைஞ்சி
வடிவேறுதிரிசூலத் தாண்டகத்தால்வழுத்திப்போய்ப்
பொடிநீடுதிருமேனிப் புனிதர்பதிபிறபணிவார்.

(இ-ள்.) கொடிமாடநிலவு=கொடிகள்கட்டிய மண்டபங்கள் விளங்கியிருக்கின்ற; திருப்பூவணத்துக்கோயிலினுள்=திருப்பூவணமென்னும் திருப்பதிக்கணுள்ள திருக்கோயிலில்; நெடியானுக்கறிவரியார்=திருமால் பிரமன் என்னும் இருவருக்கும் காணுதற்கரியராகிய சிவபிரான்; நேர்தோன்றக்கண்டிறைஞ்சி=அவரெதிரே காட்சி கொடுத்தருளத் தரிசித்துவணங்கி; வடிவேறுதிரிசூலத்தாண்டகத்தால்வழுத்திப்போய்=வடிவேறு திரிசூலமென்னும் முதலையுடைய திருத்தாண்டகத்தால் துதித்துச்சென்று; பொடிநீடுதிருமேனிப்புனிதர்பதி=விபூதிநிறைந்த திருமேனியையுடைய சிவபிரானது திருப்பதிகள்; பிறபணிவார்=பிறவற்றையும் பணிவாராயினார்.—எ-று. (சoஎ)

திருப்பூவணம்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவேறுதிரிசூலந்தோன்றுந்தோன்றும் வளர்சடைமேலிளமதியந் தோன்றுந்தோன்றுங், கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன்றுங் காதில்வெண்குழைதோடுகலந்துதோன்று, மிடியேறுகளிற்றுரிவைப்போர்வை தோன்று மெழிறிகழுந்திருமுடியுமிலங்கித்தோன்றும், பொடியேறுதிருமேனி பொலிந்துதோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (க)

ஆணாகிப்பெண்ணாயவடிவுதோன்று மடியவர்கட்காரமுதமாகித்தோன்று, மூணாகியூர்திரிவானாகித்தோன்று மொற்றைவெண்பிறைதோன்றும் பற்றார்தம்மேற், சேணாகவரைவில்லாலெரித்தரேன்றுஞ் செத்தவர்தம்மெலும்பினாற்செறியச்செய்த, பூணாணுமரைநாணும்பொலிந்துதோன்றும்பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (உ)

கல்லாலினீழலிற்கலந்துதோன்றுங் கவின்மறையோர்நால்வர்க்குநெறிகளன்று, சொல்லாகச்சொல்லியவாதோன்றுந்தோன்றுஞ் சூழரவுமான்மறியுந்தோன்றுந்தோன்றும், அல்லாதகாலனைமுன்னடர்த்தரேன்று மைவகையானினைவார்பாலமர்ந்துதோன்றும், பொல்லாதபுலாலெலும்புபூணாய்த்தோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (ஙு)

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும் பன்னிரண்டுகண்ணுடையபிள்ளைதோன்றும், நடைமலிந்தவிடையோடுகொடியுந்தோன்று நான்மறையினொலிதோன்றுநயனந்தோன்று, முடைமலிந்தகோவணமுங்கீளுந்தோன்று மூரல்வெண்சிரமாலையுலாவித்தோன்றும், புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (ச)

மயலாகுந்தன்னடியார்க்கருளுந்தோன்று மாசிலாப்புன்சடைமேன்மதியந்தோன்று, மியல்பாகவிடுபிச்சையேற்றரேன்று மிருங்கடனஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றுங், கயல்பாயக்கடுங்கலுழிக்கங்கைநங்கை யாயிரமாமுகத்தினொடுவானிற்றேன்றும், புயல்பாயச்சடைவிரித்தபொற்புத்தோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (ரு)

பாராழிவட்டத்தார்பரவியிட்ட பன்மலருநறும்புகையும்பரந்துதோன்றுஞ், சீராழித்தாமரையின்மலர்களன்ன திருந்தியமாநிறத்தசேவடிகடோன்று, மோராழித்தேருடையவிலங்கைவேந்த னுடலுணித்தவிடர்பாவங்கெடுப்பித்தன்று, போராழிமுன்னீந்தபொற்புத்தோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (சா)

தன்னடியார்க்கருள்புரிந்ததகவுதோன்றுஞ் சதுமுகனைத்தலையரிந்ததன்மைதோன்று, மின்னனையநுண்ணிடையாள்பாகந்தோன்றும் வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தரேன்றுந், துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந் தூயமாமதியுடனேவைத்தரேன்றும், பொன்னனையதிருமேனிபொலிந்துதோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (எ)

செறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந் திரிபுரத்தையெரிசெய்தசிலையுந்தோன்று, நெறியதனைவிரித்துரைத்தநீர்மைதோன்று நெற்றிமேற்கண்டோன்றும்பெற்றந்தோன்று, மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்று மலைமகளுஞ்சலமகளுமலிந்துதோன்றும், பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே, (அ)

அருப்போட்டுமுலைமடவாள்பாகந்தோன்று மணிகிளருமுருமென்ன வடர்க்குங்கேழன், மருப்போட்டுமணிவயிரக்கோவைதோன்று மணமலிந் தடந்தோன்றுமணியார்வையைத், திருக்கோட்டிநின்றதோர்திறமுந்தோன்றுஞ் செக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப், பொருப்போட்டிநின்ற திண்புயமுந்தோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (கூ)

ஆங்கணைந்ததண்டிக்குமருளியன்று தன்முடிமேலலர்மாலையளித்த றோன்றும், பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று பல்பிறவியறுத்தருளும்பரிசுதோன்றுங், கோங்கணைந்தகூவிளமுமதமத்தமுங் குழற்கணிந்த கொள்கையொடுகோலந்தோன்றும், பூங்கணைவேளுருவழித்தபொற்புத் தோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (க0)

ஆரொருவருள்குவாருள்ளத்துள்ளே யவ்வுருவாய்நிற்கின்றவருளுந் தோன்றும், வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுதோன்று, நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும், போருருவக்கூற்றுதைத்தபொற்புத் தோன்றும் பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் - பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பூவணநாதர் - தேவியார் - மின்னும்பிகையம்மை.

தென்னிலங்கையிராவணன்றன் சிரமீரைந்துந்துணித்த
மன்னவனாமிராமனுக்கு வரும்பெரும்பாதகந்தீர்க்கும்
பின்னுகனைத்தொழுவதற்கு நினைந்துபோய்ப்பெருமகிழ்ச்சி
துன்னிமனங்கரைந்துருகத் தொழுதெழுந்தார்சொல்லரசர்.

(இ-ள்.) தென்னிலங்கையிராவணன்றன்=தெற்கின்கணுள்ள இலங்கையில்வாழ்ந்த இராவணனுடைய; சிரமீரைந்துந்துணித்த=தலைகள்பத்தையும் வெட்டிய; மன்னவனாமிராமனுக்கு=அரசராகிய இராமருக்கு; வரும்பெரும்பாதகந்தீர்க்கும்=வந்த பிரமகத்தியைநீக்கிய; பின்னுகனைத்தொழுவதற்குநினைந்துபோய்=சிவபிரானை வணங்குவதற்குக் கருதிச்சென்று; பெருமகிழ்ச்சிதுன்னிமனங்கரைந்துருக=அதனால் பேரானந்தமுண்டாய் மனங்கரைந்துருகும்படி; தொழுதெழுந்தார்சொல்லரசர்=வணங்கி யெழுந்தார் வாகீசமுனிவர்.—எ-று. (சOஅ)

தேவர்தொழுந்தனிமுதலைத் திருவிராமேச்சரத்து
மேவியசங்கரனையெதிர் நின்றுவிருப்புறுமொழியாற்
பாவுதிருநேரிசைகண் முதலானதமிழ்பாடி
நாவரசர்திருத்தொண்டு நலம்பெருகச்செய்தமர்ந்தார்.

(இ-ள்.) தேவர்தொழுந்தனிமுதலை=தேவர்களால் வணங்கப்படும் ஒப்பற்ற முதல்வனை; திருவிராமேச்சரத்துமேவியசங்கரனை=திருவிராமேச்சரமென்னும் திருப்பதியில் வீற்றிருந்தருளும் சிவபிரானை; எதிர்நின்று=திருமுன்னேநின்று; விருப்புறுமொழியால்=இனிய சொற்களினால்; பாவுதிருநேரிசைகண்முதலானதமிழ்பாடி=அமைந்த

திருநேரிசைமுதலிய தமிழ்ப்பதிகங்களைப்பாடியருளி; நாவரசர்திருத்தொண்டு—திருநாவுக்கரசர் உழவாரத்திருத்தொண்டை; நலம்பெருகச்செய்தமர்ந்தார்—நன்மையுண்டாகச்செய்து அங்கு வீற்றிருந்தருளினர்.—எ-று. (சo௧)

திருவிராமேச்சரம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பாசமுங்கழிக்ககில்லா வரக்கரைப்படுத்துத்தக்க
வாசமிக்கலர்கள்கொண்டு மதியினல்மால்செய்கோயி
னேசமிக்கன்பினலே நினைமினீர்நின்றுநாளுந்
தேசமிக்கானிருந்த திருவிராமேச்சரமே. (க)

முற்றினநாள்களென்று முடிப்பதேகாரணமா
யுற்றவன்போர்களாலே யுணர்விலாவரக்கர்தம்மைச்
செற்றமால்செய்தகோயிற் றிருவிராமேச்சரத்தைப்
பற்றிநீபரவுநெஞ்சே படர்சடையீசன்பாலே. (உ)

கடலிடைமலைகடம்மா லடைத்துமால்கருமமுற்றித்
திடலிடைச்செய்தகோயிற் றிருவிராமேச்சரத்தைத்
தொடலிடைவைத்துநாவிற் சுழல்கின்றேன்றூய்மையின்றி
யுடலிடைநின்றும்பேரா வைவராட்டுண்டுநானே. (௩)

குன்றுபோற்றோளுடைய குணமிலாவரக்கர்தம்மைக்
கொன்றுபோராழியம்மால் வேட்கையாற்செய்தகோயில்
நன்றுபோனெஞ்சமேநீ நன்மையையறிதியாயிற்
சென்றுநீதொழுதுய்கண்டாய் திருவிராமேச்சரமே. (ச)

வீரமிக்கெயிறுகாட்டி விண்ணுறநீண்டரக்கன்
கூரமிக்கவனைச்சென்று கொன்றுடன்கடற்படுத்துத்
தீரமிக்கானிருந்த திருவிராமேச்சரத்தைக்
கோரமிக்கார்தவத்தாற் கூடுவார்குறிப்புளாரே. (௫)

ஆர்வலநம்மின்மிக்கா ரென்றவவ்வரக்கர்கூடிப்
போர்வலஞ்செய்துமிக்குப் பொருதவர்தம்மைவீட்டித்
தேர்வலஞ்செற்றமால்செய் திருவிராமேச்சரத்தைச்
சேர்மடநெஞ்சமேநீ செஞ்சடையெந்தைபாலே. (௬)

வாக்கினலின்புரைத்து வாழ்கிலார்தம்மையெல்லாம்
போக்கினற்புடைத்தவர்க ளுயிர்தனையுண்டுமால்தான்
றேக்குநீர்செய்தகோயில் திருவிராமேச்சரத்தை
நோக்கினல்வணங்குவார்க்கு நோய்வினைநுணுகுமன்றே. (எ)

பலவுநாடீமைசெய்து பார்தன்மேற்குழுமிவந்து
கொலையிலார்கொடியராய வரக்கரைக்கொன்றுவீழ்த்த

சிலையினுன்செய்தகோயில் திருவிராமேச்சரத்தைத்
தலையினல்வணங்குவார்கள் தாழ்வராந்தவமதாமே. (அ)

கோடிமாதவங்கள்செய்து குன்றினர்தம்மையெல்லாம்
வீடவேசக்கரத்தா லெறிந்துபின்னன்புகொண்டு
தேடிமால்செய்தகோயில் திருவிராமேச்சரத்தை
நாடிவாழ்நெஞ்சமேநீ நன்னெறியாகுமன்றே. (கூ)

வன்கண்ணர்வாளரக்கர் வாழ்வினையொன்றறியார்
புன்கண்ணராகிநின்று போர்கள்செய்தாரைமாட்டிச்
செங்கண்மால்செய்தகோயில் திருவிராமேச்சரத்தைத்
தங்கணுலெய்தவல்லார் தாழ்வராந்தலைவன்பாலே. (க0)

வரைகளொத்தேயுயர்ந்த மணிமுடியரக்கர்கோனை
விரையமுற்றறவொடுக்கி மீண்டுமால்செய்தகோயில்
திரைகள்முத்தால்வணங்குந் திருவிராமேச்சரத்தை
யுரைகள்பத்தாலுரைப்பா ருள்குவாரன்பினுலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - இராமலிங்கேசுவரர் - தேவியார் - பருவதவர்த்தனியம்மை.

அங்குறைந்து கண்ணுதலா ரருள்சூடியகன்றுபோய்ப்
பொங்குதமிழ்த்திருநாட்டுப் புறம்பணைசூழ்நெல்வேலி
செங்கண்விடையார்மன்னுந் திருக்கானப்பேர்முதலா
யெங்குநிகழ்தானங்க ளெல்லாம்புக்கிறைஞ்சுவார்.

(இ-ள்.) அங்குறைந்துகண்ணுதலாரருள்சூடி = அவர் அங்கே எழுந்தருளியிருந்து சிவபிரானது திருவருளைவணங்கிக்கொண்டுபின்; அகன்றுபோய் = அங்குநின்றும் எழுந்தருளி; பொங்குதமிழ்த்திருநாட்டு = பொலிவினையுடைய தமிழ்நாட்டின்கண்; புறம்பணைசூழ்நெல்வேலி = மருதநிலஞ்சூழ்ந்த திருநெல்வேலியும்; செங்கண்விடையார் மன்னும் = சிவந்தகண்ணையுடைய இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபிரான் வீற்றிருந்தருளும்; திருக்கானப்பேர்முதலா = திருக்கானப்பேரூரும்முதலாக; எங்குநிகழ்தானங்களெல்லாம் = பாண்டிநாடு முழுதுமிருக்கின்ற திருப்பதிகளையெல்லாம்; புக்கிறைஞ்சுவார் = சென்று வணங்குவாராயினர். — எ-று.

திருக்கானப்பேரூர் என்பது காளையார்கோயில். (சக0)

தொழுதுபலவகையாலுஞ் சொற்றொடைவண்டமிழ்பாடி
வழுவிறிருப்பணிசெய்து மனங்கசிவுற்றெப்பொழுது
மொழுகியகண்பொழிபுனலு மோவாதுசிவன்றாள்க
டழுவியசிந்தையிலுணர்வுந் தங்கியசீர்மையிற்சரித்தார்.

(இ-ள்.) தொழுதுபலவகையாலும் = அவர் அங்கங்குவணங்கித் திருக்குறுந்தொகை திருத்தாண்டகமுதலிய பல வேறுபாட்டாலும்; சொற்றொடைவண்டமிழ்பாடி = சொல்லாற்றொடுத்தவளவிய தமிழ்ப்பதிகங்களைப் பாடியருளி; வழுவிறிருப்பணிசெய்து

மனங்கசிவுற்று—குற்றமற்ற உழைவாரப் பணியிடையைச்செய்து மனங்கனிந்து; எப்பொழுதுமொழுகியகண்பொழிபுனலும்—இடைவிடாது பெருகுகின்ற ஆனந்தக்கண்ணீரும்; ஓவாதுசிவன்றருள்கடமுவியசிந்தையிலுணர்வும்—எப்பொழுதும் சிவபிரானது திருவடிகளிற்கலந்த திருவுள்ளத்தில் மெய்யுணர்வும்; தங்கியசீர்மையிற்சரித்தார்—பொருந்திய குணத்தோடொழுகினர்.—எ-று. (சகக)

தேம்பொழியுஞ்செந்தமிழ்நாட் டினிலெங்குஞ்சென்றிறைஞ்சிப்
பாம்பணிவார்தமைப்பணிவார் பொன்னிநாடதுவணைந்து
வாம்புனல்சூழ்வளநகர்கள் பின்னும்போய்வணங்கியே
பூம்புகலூர்வந்தடைந்தார் பொய்ப்பாசம்போக்குவார்.

(இ-ள்.) பொய்ப்பாசம்போக்குவார்—பொய்ப்பாசம் போக்குவாராகிய அவர்; தேம்பொழியுஞ்செந்தமிழ்நாட்டினில்—கேட்டார்க் கினிமையைவிளைக்கும் செந்தமிழ்நாட்டின்கண்; எங்குஞ்சென்றிறைஞ்சி—எவ்விடத்தும் சென்றுவணங்கி; பாம்பணிவார்தமைப்பணிவார்—பாம்பையணியாகவணிந்த சிவபிரானைப் பணிவாராய்; பொன்னிநாடதுவணைந்து—காவிரிநாட்டையடைந்து; வாம்புனல்சூழ்வளநகர்கள்—பெருகுகின்ற நீர்சூழ்ந்தவளந்தங்கிய அங்குள்ள பிறதிருப்பதிகளையும்; பின்னும்போய்வணங்கி—மீண்டும் சென்று வணங்கிக்கொண்டு; பூம்புகலூர்வந்தடைந்தார்—திருப்புகலூரை வந்தணைந்தார்.—எ-று. ஏ-அசை. (சகஉ)

பொய்கைசூழ்பூம்புகலூர்ப் புனிதர்மலர்த்தாள்வணங்கி
நையுமனப்பரிவோடு நாடோறுந்திருமுன்றிற்
கைகலந்ததிருத்தொண்டு செய்துபெருங்காதலுடன்
வைகுநாளெண்ணிறந்த வண்டமிழ்மாலைகள்மொழிவார்.

(இ-ள்.) பொய்கைசூழ்பூம்புகலூர்ப்புனிதர்மலர்த்தாள்வணங்கி—அவர்வாவிகள் சூழ்ந்த பொலிவினையுடைய திருப்புகலூரில் வீற்றிருந்தருளும் சிவபிரானது மலர்போலும் திருவடிகளைவணங்கி; நையுமனப்பரிவோடும்—கசிந்துருகுகின்ற திருவுள்ளப்பற்றோடும்; நாடோறுந்திருமுன்றில்—நாள்தோறும் திருமுற்றத்தின்கண்; கைகலந்ததிருத்தொண்டுசெய்து—கையினால் செய்தற்குரிய திருத்தொண்டைச்செய்து; பெருங்காதலுடன்வைகுநாள்—பெருவிருப்போடிருக்கும் நாளில்; எண்ணிறந்தவண்டமிழ்மாலைகள்மொழிவார்—அளவில்லாதவளவிய தமிழ்ப்பதிகமாலைகளை அருளிச்செய்வாராயினர். ()

நின்றதிருத்தாண்டகமு நீடுதனித்தாண்டகமு
மன்றுறைவார்வாழ்பதிகள் வழுத்துதிருத்தாண்டகமுங்
கொன்றைமலர்ச்சடையார்பாற் குறைந்தடைந்தநேரிசையுந்
துன்றுதனிநேரிசையு முதலானதொடுத்தமைத்தார்.

(இ-ள்.) நின்றதிருத்தாண்டகமும்—எம்மடிகணின்றவாறே என்னும் இறுதியையுடைய நின்றதிருத்தாண்டகமும்; நீடுதனித்தாண்டமும்—உயர்ந்த தனித்திருத்தாண்டகமும்; மன்றுறைவார்வாழ்பதிகள்வழுத்து—கனகசபையின்கண் வாழ்கின்ற சிவபிரான் வீற்றிருந்தருளும் திருப்பதிகளைத் துதிக்கின்ற; திருத்தாண்டகமும்—திருப்பதிக்கோவைத் திருத்தாண்டகமும்; கொன்றைமலர்ச்சடையார்பால்—கொன்றைப்பூமாலையைமுடித்த சடைமுடியையுடைய சிவபிரானிடத்து; குறைந்ததிருநேரிசையும்—குறைந்த திருநேரிசையும்; துன்றுதனிநேரிசையுமுதலான—நெருங்கிய தனித்திருநேரிசையுமுதலான திருப்பதிகங்களை; தொடுத்தமைத்தார்—பாடியருளினர்.—எ-று. சகச

நின்றதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

இருநிலனாய்த்தீயாகிநீருமாகியியமானனாயெறியுங்காற்றுமாகி
யருநிலையதிங்களாய்ஞாயிறாகியாகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும்பிறருருவுந்தம்முருவுந்தாமேயாகி
நெருநலையாயின்றாகிநாளையாகிநிமிர்புன்சடையடிகணின்றவாறே. (௧)

மண்ணாகிவிண்ணாகிமலையுமாகிவயிரமுமாமாணிக்கந்தானேயாகிக், கண்ணாகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக்கலையாகிக்கலைஞானந்தானேயாகிப், பெண்ணாகிப்பெண்ணுக்கோராணுமாகிப்பிரளயத்துக்கப்பாலோரண்டமாகி, யெண்ணாகியெண்ணுக்கோரெழுத்துமாகி யெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௨)

கல்லாகிக்களறாகிக்கானுமாகிக்காவிரியாய்க்காலாறாய்க்கழியுமாகிப்,புல்லாகிப்புதலாகிப்பூடுமாகிப்புரமாகிப்புரமூன்றுங்கெடுத்தானாகிச், சொல்லாகிச்சொல்லுக்கோர்பொருளுமாகிச்சுலாவாகிச்சுலாவுக்கோர்சூழலாகி, நெல்லாகிநிலனாகிநீருமாகிநெடுஞ்சுடராய்நிமிர்ந்தடிகணின்றவாறே. (௩)

காற்றாகிக்கார்முகிலாய்க்காலமூன்றாய்க்கனவாகிநனவாகிக்கங்குலாகிக், கூற்றாகிக்கூற்றுதைத்தகொல்களிறாயாகிக்குரைகடலாய்க்குரைகடற்கோர்கோமானுமாய், நீற்றானாய்நீறேற்றமேனியாகிநீள்விசும்பாய்நீள்விசும்பினுச்சியாகி, யேற்றானாயேறூர்ந்தசெல்வனாகியெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௪)

தீயாகிநீராகித்திண்மையாகித்திசையாகியத்திசைக்கோர்தெய்வமாகித்
தாயாகித்தந்தையாய்ச்சார்வுமாகித்தாரகையுஞாயிறுந்தண்மதியுமாகிக்
காயாகிப்பழமாகிப்பழத்தினின்றவிரதங்கணுகர்வானுந்தானேயாகி
நீயாகிநானாகிநேர்மையாகிநெடுஞ்சுடராய்நிமிர்ந்தடிகணின்றவாறே. (௫)

அங்கமாயாதியாய்வேதமாகியருமறையோடைம்பூதந்தானேயாகிப்,பங்கமாய்ப்பலசொல்லுந்தானேயாகிப்பான்மதியோடாதியாய்ப்பான்மையாகிக், கங்கையாய்க்காவிரியாய்க்கன்னியாகிக்கடலாகிமலையாகிக்கழியுமாகி; யெங்குமாயேறூர்ந்தசெல்வனாகியெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௬)

மாதாபிதாவாகிமக்களாகிமறிகடலுமால்விசும்புந்தானேயாகிக்,கோதாவிரியாய்க்குமரியாகிக்கொல்புலித்தோலாடைக்குழகனாகிப், போதாய்மலர்கொண்டுபோற்றிநின்றுபுனைவார்பிறப்பறுக்கும்புனிதனாகி; யாதானுமெனநினைந்தார்க்கெளிதேயாகியழல்வண்ணவண்ணர்தாநின்றவாறே. (௭)

ஆவாகியாவினிலைந்துமாகியறிவாகியழலாகியவியுமாகி
நாவாகிநாவுக்கோருரையுமாகிநாதனாய்வேதத்தினுள்ளானாகிப்
பூவாகிப்பூவுக்கோர்நாற்றமாகிப்புக்குளால்வாசமாய்நின்றானாகித்
தேவாகித்தேவர்முதலுமாகிச்செழுஞ்சுடராய்ச்சென்றடிகணின்றவாறே.()

நீராகிநீளகலந்தானேயாகிநிழலாகிநீள்விசும்பினுச்சியாகிப், பேராகிப் பேருக்கோர்பெருமையாகிப்பெருமதில்கண்மூன்றினையுமெய்தானுகி, யாரோனுந்தன்னடைந்தார்தம்மையெல்லா மாட்கொள்ளவல்லவெம்மீசனார்தாம், பாராகிப்பண்ணாகிப்பாடலாகிப்பரஞ்சுடராய்ச்சென்றடிகணின்றவாறே. ()

மாலாகிநான்முகனும்மாபூதமாய்மருக்கமாயருக்கமாய்மகிழ்வுமாகிப்
பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப்பரப்பாகிப்பரலோகந்தானேயாகிப்
பூலோகபுவலோகசுவலோகமாய்ப்பூதங்களாய்ப்புராணன்றானேயாகி
யேலாதனவெலாமேல்விப்பானாயெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. க0

திருச்சிற்றம்பலம்.

தனித்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆமயந்தீர்த்தடியேனையாளாக்கொண்டாரதிகைவீரட்டானமாட்சிகொண்டார், தாமரையோன்சிரமரிந்துகையிற்கொண்டார்தலையதனிற்பலிகொண்டார்நிறைவாந்தன்மை, வாமனனார்மாகாயத்துதிரங்கொண்டார்மானிடங்கொண்டார்வலங்கைமழுவாட்கொண்டார், காமனையுமுடல்கொண்டார்கண்ணால்நோக்கிக்கண்ணப்பர்பணியுங்கொள்கபாலியாரே.

சூராமலரோடராமதியஞ்சடைமேற்கொண்டார்குடமுழநந்தீசனைவாசகனாக்கொண்டார், சிராமலைதஞ்சேர்விடமாத்திருந்தக்கொண்டார்தென்றனெடுந்தேரோனைப்பொன்றக்கொண்டார், பராபரனென்பதுதமதுபேராக்கொண்டார்பருப்பதங்கைக்கொண்டார்பயங்கள்பண்ணி, இராவணனென்றவனைப்பேரியம்பக்கொண்டாரிடருறுநோய்தீர்த்தென்னையாட்கொண்டாரே.

திருச்சிற்றம்பலம்.

க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலஞ்செம்பொன்பள்ளிதேவன்குடிசிராப்பள்ளிதென்கூர்
கொல்லிக்குளிரறைப்பள்ளிகோவல்வீரட்டங்கோகரணங்கோடிகாவு
முல்லைப்புறவமுருகன்பூண்டிமுனையூர்பழையாறைசத்திமுற்றங்
கல்லிற்றிகழ்சீரார்காளத்தியுங்கயிலாயநாதனையேகாணலாமே.

புலிவலம்புத்தூர்புகலூர்புன்கூர்புறம்பயம்பூவணம்பொய்கைநல்லூர், வலிவலமாற்பேறுவாய்மூர்வைகல்வலஞ்சுழிவாஞ்சியமருகல்வன்னி, நிலமலிநெய்த்தானத்தோடெத்தானத்துநிலவுபெருங்கோயில்பலகண்டாற்றொண்டீர், கலிவலிமிக்கோனைக்கால்விரலாற்செற்ற கயிலாயநாதனையேகாணலாமே.

திருச்சிற்றம்பலம்.

குறைந்ததிருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வென்றிலேன்புலன்களைந்தும்வென்றவர்வளாகந்தன்னில்
சென்றிலேனாதலாலேசெந்நெறியதற்குஞ்சேயே
னின்றுளேதுளும்புகின்றேனீசனேனீசனேயோ
வின்றுளேனாளையில்லேனென்செய்வான்தோன்றினேனே.

வெட்டனவுடையனாகிவீரத்தான்மலையெடுத்த
துட்டனைத்துட்டுத்தீர்த்துச்சுவைபடக்கீதங்கேட்ட
வட்டமாமூர்த்தியாயவாதியையோதிநாளு
மெட்டனையெட்டமாட்டேனென்செய்வான்தோன்றினேனே.

திருச்சிற்றம்பலம்.

தனித்திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டனேன்பட்டதென்னேதூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதியாட்டிக்குங்குமக்குழம்புசாத்தி
யிண்டைகொண்டேறநோக்கியீசனையெம்பிரானைக்
கண்டனைக்கண்டிராதேகாலத்தைக்கழித்தவாறே.

பெருவிரலிறைதானூன்றப்பிறையெயிறிலங்கவங்காந்
தருவரையனையதோளானரக்கனன்றலறிவீழ்ந்தா
னிருவருமொருவனாயவுருவமங்குடையவள்ளல்
திருவடிசுமந்துகொண்டுகாணநான்றிரியுமாறே.

திருச்சிற்றம்பலம்.

ஆருயிரின் றிருவிருத்தந் தசபுராணத்தடைவும்
பார்பரவும் பாவநாசப்பதிகம் பன்முறையும்
நேர்படநின் றறைகூவுந் திருப்பதிக முதற்பிறவும்
பேரருளின் கடலளிக்கும் பெருமானைப் பாடினார்.

(இ-ள்.) ஆருயிரின்றிருவிருத்தம்=ஆருயிர்த்திருவிருத்தமும்; தசபுராணத்தடைவும்=தசபுராணத்தடையென்னும் திருப்பதிகமும்; பார்பரவும்பாவநாசப்பதிகம்=பாரிலுள்ளாரால் பரவத்தக்க பாவநாசத்திருப்பதிகமும்; பன்முறையுநேர்படநின்று=பலதரமும் நேராகநின்று; அறைகூவுந்திருப்பதிகமுதற்பிறவும்=அழைக்கும்பொருளையுடைய சரக்கறைத்திருவிருத்தமுமுதலான பிறதிருப்பதிகங்களும், பேரருளின்கடலளிக்கும்=பெரியதிருவருட்கடலைத் தமக்குக்கொடுக்கும்; பெருமானைப்பாடினார்=சிவபிரானைப்பாடியருளினார்.—எ-று. (௪௧௫)

ஆருயிர்த்திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாந்திசைக்குமிருதிசைக்குமிறைவாமுறையென்
றிட்டாரமரர்வெம்பூசலெனக்கேட்டெரிவிழியா

வொட்டாக்கயவர்திரிபுரமூன்றையுமோரம்பினு
லட்டானடிகிழற்கீழதன்றேவென்றனுருயிரே.

பழகவொரூர்தியரன்பைங்கட்பாரிடம்பாணிசெய்யக்
குழலுமுழவொடுமோநடமாடியுயரிலங்கைக்
கிழவனிருபதுதோளுமொருவிரலாலிறுத்த
வழகனடிகிழற்கீழதன்றேவென்றனுருயிரே.

திருச்சிற்றம்பலம்.

த்சபுராணம்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பருவரையொன்றுசுற்றியரவங்கைவிட்டவிமையோரிரந்துபயமாய்த்
திருநெடுமால்நிறத்தையடுவான்விசும்புசுடுவானெழுந்துவிசைபோய்ப்
பெருகிடமற்றிதற்கோர்பிதிகாரமொன்றையருளாய்பிரானேயெனவு
மருள்கொடுமாவிடத்தையெரியாமலுண்டவவனண்டரண்டரரசே.

கடுகியதேர்செலாதுகயிலாயமீதுகருதேலுன்வீரமொழிநீ
முடுகுவதன்றுகாண்டியெனநின்றுபாகன்மொழிவோனைநன்றுமுனியா
விடுவிடுவென்றுசென்றுவிரைவுற்றரக்கன்வரையுற்றெடுக்கமுடிதோ
ணெடுநெடுவிற்றுவீழவிரலுற்றபாதநினைவுற்றதென்றன்மனமே.

திருச்சிற்றம்பலம்.

பாவநாசம்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பற்றற்றார்சேர்பழம்பதியைப்பாசூர்நிலாயபவளத்தைச்
சிற்றம்பலத்தெந்திகழ்கனியைத்தீண்டற்கரியதிருவுருவை
வெற்றியூரில்விடுசுடரைவிமலாகரனைத்திரைசூழ்ந்த
வொற்றியூரெமுத்தமனையுள்ளத்துள்ளேவைத்தேனே.

முந்தித்தானேமுளைத்தானைமூரிவெள்ளேறூர்ந்தானை
யந்திச்செவ்வான்படியானையரக்கனுற்றலழித்தானைச்
சிந்தைவெள்ளப்புனலாட்டிச்செஞ்சொன்மாலையடிசேர்த்தி
யெந்தைபெம்மானென்னெம்மானென்பார்பாவநாசமே.

திருச்சிற்றம்பலம்,

சரக்கறைத்திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

விடையும்விடைப்பெரும்பாகாவென்விண்ணப்பம்வெண்மழுவாட்
படையும்படையாய்நிரைத்தபல்பூதமும்பாய்புலித்தோ
லுடையுமுடைதலைமாலையும்மாலைப்பிறையொதுங்குஞ்
சடையுமிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே.

வாகீசர் திருப்புகலூரர்மீது பல்பாமாலைகளைச்சாற்றி திருப்பணியில் உழவாரம் நுழைந்தவிடமெங்கும் பொன்நவமணிகளாகத் தோற்றுவிக்க, அவற்றைக சற்களோடு உழவாரத்திலேந்தி வாவியிலெறிந்துவிட, அரம்பாஸ்திரீகள் கூடியமட்டில் வாகீசரை மோகிக்கச் செய்தும் சித்தம் சிறிதும் நிலைமாறாததால் வணங்கிச்சென்றது.

விவந்தாடியகழலெந்தாயென் விண்ணப்பமேலிலங்குந்
தவந்தானெடுக்கத்தலைபத்திறுத்தனை தாழ்புலித்தோல்
சிவந்தாடியபொடிநீறுஞ்சிரமாலைசூடிநின்று
தவந்தானிருக்குஞ்சரக்கறையோவென் றனிநெஞ்சமே.

திருச்சிற்றம்பலம்.

அந்நிலைமை தனிலாண்ட வரசுபணி செய்யவவர்
நன்னிலைமை காட்டுவார் நம்பர்திரு மணிமுன்றி
றன்னில்வரு முழவார நுழைந்தவிடந் தானெங்கும்
பொன்னினொடு நவமணிகள் பொலிந்திலங்க வருள்செய்தார்.

(இ-ள்.) அந்நிலைமைதனிலாண்டவரசுபணிசெய்ய=அவ்விதநிலைமையால் வாகீச முனிவர் கைத்திருத்தொண்டுசெய்ய; அவர்நன்னிலைமைகாட்டுவார்=அம்முனிவரது அவாவின்மையாகிய நிலைமையை உலகத்தாருக்குக்காட்டுங் கருத்துடையராய்; நம்பர் திருமணிமுன்றிறன்னில்=சிவபிரான் அழகிய திருமுற்றத்தில்; வருமுழவாரநுழைந்த விடந்தானெங்கும்=அவர் திருக்கரத்திற்றாங்கிய உழைவாரப்படை புல்லைச்செதுக்க நுழைந்தவிடங்கடோறும்; பொன்னினொடுநவமணிகள்=பொன்னோடு நவரத்தினங்களும்; பொலிந்திலங்கவருள்செய்தார்=பொலிவடைந்து விளங்கியிருக்கும்படி செய்தார்.

செம்பொன்னு நவமணியுஞ் சேண்விளங்க வாங்கவையு
மும்பர்பிரான் றிருமுன்றி லுருள்பருக்கை யுடனொக்க
வெம்பெருமான் வாகீச ருழவாரத் தினிலேந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புகவெறிந்தார்.

(இ-ள்.) செம்பொன்னுநவமணியும்=சிவந்தபொன்னும் நவரத்தினங்களும்; சேண்விளங்க=நெடுந்தூரத்தில் விளங்கித்தோன்ற; ஆங்கவையும்=அவைகளையும்; உம்பர் பிரான்றிருமுன்றில்=சிவபிரானது திருமுற்றத்தின்கண்; உருள்பருக்கையுடனொக்க= உருள்கின்ற பருக்கைக்கல்லோடு சமமாக; எம்பெருமான்வாகீசர்=எமது முதல்வராகிய வாகீசமுனிவர்; உழவாரத்தினிலேந்தி=உழைவாரப்படையாலெடுத்து; வம்பலர் மென்பூங்கமலவாவியினிற்புகவெறிந்தார்=ஆலயத்தைச் சூழ்ந்திருக்கும் வாசனைகமழ்கின்ற மிருதுவான பொலிவினையுடைய தாமரைத்தடத்தில் விழும்படி எறிந்துவிட்டார்.

புல்லோடுங் கல்லோடும் பொன்னோடு மணியோடுஞ்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் றிருப்புகலூர் நாயகனார் திருவருளால்
வில்லோடு நுதன்மடவார் விசும்பூடு வந்திழிந்தார்.

(இ-ள்.) புல்லோடுங் கல்லோடும் பொன்னோடு மணியோடும்=புல்லும் கல்லும் பொன்னும் மணியுமாகிய இப்பொருள்களோடும்; சொல்லோடும்வேறுபாடிலாநிலைமை துணிந்திருந்த=புல் பொன் கல் மணி என்று அப்பொருள்களை விளக்குஞ் சொல்லோடும் தமக்கோர் சிறிதேனும் வேறுபாடில்லா நிலைமையை நிச்சயித்தறிந்த; நல்லோர்முன்=வாகீசமுனிவர்முன்; திருப்புகலூர்நாயகனார் திருவருளால்=திருப்புகலூரின்கண் எழுந்தருளிய சிவபிரான் திருவருளினால்; வில்லோடுநுதன்மடவார்=வில்லையொத்த நெற்றியையுடைய அரமகளிர்கள்; விசும்பூடுவந்திழிந்தார்=விண்ணுலகினின்றும் மண்ணுலகில் இறங்கினார்கள்.—எ-று.

சொல்லோடும் என்ற உம்மை பொருளோடு வேறுபாடிலாமையேயன்றியென இறந்தது தழீஇயது சொல்லும் பொருளும் பேதாபேதமாதலில். அவாவின்மையை வரையறுத்தற்பொருட்டு உம்மை தழீஇச்கூறினர், பொருளில் வேறுபாடுண்டேல் சொல்லினும் வேறுபாடுண்டு, சொல்லில் வேறுபாடுண்டேல் பொருளினும் வேறுபாடுண்டு என்பதை விளக்குதற்கு. (௪௧௮)

வானகமின் னுக்கொடிகள் வந்திழிந்தா லெனவந்து
தானநிறை சுருதிகளிற் றருமலங்கா ரத்தன்மை
கானவமு தம்பரக்குங் கனிவாயி லொளிபரப்பப்
பானனெடுங் கண்கள்வெளி பரப்பியிசை பாடுவார்.

(இ-ள்.) வானகமின்னுக்கொடிகள்=விண்ணுலகின்கணின்ற மின்கொடிகள்; வந்திழிந்தாலெனவந்து=மண்ணுலகின்கண் வந்திறங்கினாற்போலவந்து; தானநிறைசுருதிகளில்=உரம் கண்டம் உச்சிமுதலிய தானங்களிலே நிறைந்த சுருதிகளினாலே; தருமலங்காரத்தன்மை=உண்டாகின்ற இனிமையோடுகூடிய; கானவமுதம்பரப்பும்=கானமாகிய இசையமுதமானது வெளிப்பட்டுவருகின்ற; கனிவாயிலொளிபரப்ப=கொவ்வைக்கனிபோலும் வாயினிடத்துத் தந்தங்களின் ஒளிவிளங்க; பானனெடுங்கண்கள்=நீலமலர்போலும் நெடியகண்களை; வெளிபரப்பியிசைபாடுவார்=வெளியே பரப்பி இசையைப்பாடுவாராயினார்.—எ-று.

அலங்காரத்தன்மையென்றது சிருங்காராதிரசமெனினுமமையும். (௪௧௯)

கற்பகப்பூந் தளிரடிபோங் காமருசா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறுமக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர
வற்புதப்பொற் கொடிநுடங்கி யாடுவபோ லாடினார்.

(இ-ள்.) கற்பகப்பூந்தளிரடி=கற்பகதருவின் பொலிவுதங்கிய தளிர்போலும் அடிகள்; போங்காமருசாரிகைசெய்ய=தாம் தேர்ந்த அழகிய சாரிகைகளைச்செய்ய; உற்பலமென்முகிழ்விரல்=செங்கழுநீரது பூவரும்புபோலும் விரல்; வட்டணையோடுங்கைபெயர=சுழலுதலோடு எடுத்த கையானது அசைய; பொற்புறுமக்கையின்வழி=அழகிய அவ்வட்டணைசெய்யும் கையின்வழியே; பொருகயற்கண்புடைபெயர=பொராநின்ற கயல்போலுங் கண்கள் புடைபெயர்ந்து செல்ல; அற்புதப்பொற்கொடி=அதிசயம் விளைக்குங் காமவல்லியென்னுங் கொடியானது; நுடங்கியாடுவபோலாடினார்=ஒசிந்தாடுதல்போன்றாடினார்.—எ-று.

போம் சாரிகையென இயையும். போதல்=தேர்தல். முற்றப்பயிறல். (௪௨௦)

ஆடுவார் பாடுவா ரலர்மாரி மேற்பொழிவார்
கூடுவார் போன்றணைவார் குழலவிழ விடைநுடங்க
வோடுவார் மாரவே ளுடன்மீள்வ ரொளிபெருக
நீடுவார் துகிலசைய நிற்பாரு மாயினார்.

(இ-ள்.) ஆடுவார்பாடுவார்=அவ்வரமகளிர் பரதநாட்டியஞ் செய்வாரும் பாட்டுகளைப்பாடுவாரும்; அலர்மாரிமேற்பொழிவார்=மலர்மழைகளை மேலேசொரிவாரும்; கூடுவார்போன்றணைவார்=தழுவிக்கொள்வார் போன்றுகிட்டுவாரும்; குழலவிழவிடைநுடங்கவோடுவார்=கேசபாரம் அவிழ இடைதுவள எதிரில் ஓடுவாரும்; மாரவேளுடன்மீள்வார்=மயக்கத்தோடு திரும்புவாரும்; ஒளிபெருகநீடுவார்=சரீரகாந்தியுண்டாகப்

பின்செல்வாரும் அன்றி; துகிலசையநிற்பாருமாயினார்=உடுத்ததுகில்நழுவ நிற்பவர்களு மானார்கள்.—எ-று. (௬உ௧)

இத்தன்மை யரம்பையர்க ளெவ்விதமுஞ் செயல்புரிய
வத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா வன்புருகு
மெய்த்தன்மை யுணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தஞ்
சித்தநிலை திரியாது செய்பணியின் றலைநின்றார்.

(இ-ள்.) இத்தன்மையரம்பையர்கள்=இவ்வாறு தெய்வப்பெண்கள்; எவ்வித முஞ்செயல்புரிய=பலவகையாலும் மயக்கம்விளைவிக்கும் நாட்டியத்தைச்செய்ய; அத்த னார்திருவடிக்கீழ்=சிவபிரான் திருவடிநிழலில்; நினைவகலாவன்புருகும்=தங்கருத்து நீங்காத அன்பாலுருகும்; மெய்த்தன்மையுணர்வுடைய=மெய்யுணர்ச்சியையுடைய; விழுத்தவத்துமேலோர்=மேலானதவத்திற் சிறந்த வாகீசமுனிவர்; தஞ்சித்தநிலைதிரியா து=தங்கருத்து வேறுபடாது; செய்பணியின்றலைநின்றார்=தாம்செய்யும் திருத்தொண் டின்வழியே நின்றருளினார்.—எ-று.

நிலைதிரியாமை=இவர் மகளிரொன்றுணர்ந்தவாறேயன்றி விளைவு, வெறுப்பு, நாணம், அச்சமடைந்து அதனால் வேறுபடாமை. இவற்றினொன்றாறினும் நிலைதிரியுமாத லின் சித்தநிலைதிரியாதென்றார். உலகத்தாரை நிலைதிரிவிக்கும் பொருள், பொன், மணி முதலியனவும் மகளிருமாதலின் முன் இவர்க்குப் பொன்மணிமுதலிய பொருள்களிடத் தாசையின்மையை விளக்கிப் பின் மகளிரிடத்தாசையின்மையையும் சிவபிரான் உலகி னருக்கு விளக்கினரென்க மெய்த்தன்மையுணர்வுடைய விழுத்தவம் என்றது அவ்வர மகளிர்செயலால் மயங்காத்திருவருண்ஞானச் செல்வமுடையதவமென அதன்சிறப்பை விளக்கியது. (௬உஉ)

இம்மாயப் பவத்தொடக்கா மிருவினைக டமைநோக்கி
யும்மாலிங் கென்னகுறை யுடையேன்யான் றிருவாரூ
ரம்மானுக் காளானே னலையேன்மி னீரொன்று
பொய்ம்மாயப் பெருங்கடலு ளெனுந்திருத்தாண் டகம்புகன்றார்.

(இ-ள்.) இம்மாயப்பவத்தொடக்காம்=மயக்கத்தைவிளைக்கும் இந்தப்பிறப்பின் சம்பந்தமாகவிருக்கின்ற; இருவினைகடமைநோக்கி=நல்வினைதீவினைகளை முன்னிலைபா க்கி; உம்மாலிங்கென்னகுறையுடையேன்யான்=உங்களால்யானடையுங் கைம்மாறு எ ன்ன உடையவன்; திருவாரூரம்மானுக்காளானேன்=திருவாரூரின்கண் வீற்றிருந்தரு ளும் சிவபிரானுக்குத் தொண்டுபூண்டேன்; அலையேன்மினீரொன்று=நீங்கள் என்னை வருத்தாதொழியுங்களென்று; பொய்ம்மாயப்பெருங்கடலுளெனும்=பொய்ம்மாயப்பெ ருங்கடலுளென்னு முதலையுடைய; திருத்தாண்டகம்புகன்றார்=திருத்தாண்டகத்தைப் பாடியருளினார்.—எ-று.

ஒருவனுக்கு முற்பிறப்பிற்செய்த இதமகிதங் காரணமாக இருவினைகள் விளைத லிற் பவத்தொடக்கா மிருவினையென்றும், பிறப்பைவிளைத்தலில் சமபுத்தியுடையார்க்கு நல்வினையும் ஆகாதென்னுங் கருத்தால் இருவினைகடமைநோக்கி என்றும், சுகதுக்க மிர ண்டும் மயக்கமென்று துணிந்தமையால் உம்மாலிங்கென்ன குறையுடையேனென்றும், நீர் அலைத்தல் அஞ்ஞானவசத்தராய் நும்வழிச்சென்று மயங்குவாரையேயன்றிச் சிவ பிரானுக் கடிமைபூண்ட எம்மையன்றென்னுந்துணிபால் ஆளானேனென்றும், எம்மைய லைத்தல் உமக்குத்தகாதென்பார் அலையேன்மினீரொன்றுங் கூறினர். குறை=உபகாரம்.

திருவாரூர்த்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்ம்மாயப்பெருங்கடலிற்புலம்பாநின்றபுண்ணியங்காடீவினைகாடீருவேநீங்க, ளிம்மாயப்பெருங்கடலையரித்துத்தின் பீர்க்கில்லையேகிடந்துதான்யானேல்வானோர், தம்மானைத்தலைமகனைத்தண்ணலாரூர்த்தடங்கடலைத்தொடர்ந்தோரையடங்கச்செய்யு,மெம்மான்றனடித்தொடர்வானுழிதர்கின்றேனிடையிலேன்கெடுவீர்காளிடறேன் மின்னே. (க)

ஐம்பெருமாபூதங்காளொருவிர்வேண்டிற் றொருவிர்வேண்டீரீண்டிவ்வவனியெல்லா, மும்பரமேயும்வசமேயாக்கவல்லீர்க்கில்லையேனுகர்போகம்யானேல்வானோ ரும்பருமாயூழியுமாயுலகேழாகியொள்ளாரூர்நள்ளமிர்தாம்வள்ளல்வானோர், தம்பெருமானாய்நின்றவரனைக்காண்பேன்றடைப்படுவேனுக்கருதித்தருக்கேன் மின்னே. (உ)

சில்லுருவிற்குறியிருத்திநித்தல்பற்றிச்செழுங்கணூனுக்குமிதுவூக்கமன்று, பல்லுருவிற்றொழில்பூண்டபஞ்சபூதப் பளகீரும்வசமன்றேபாரோலெல்லாஞ், சொல்லுருவிற்சுடர்மூன்றாயுருவுமூன்றாய்த்தூநயனமூன்றாகியாண்டவாரூர், நல்லுருவிற்சிவனடியேயடைவேனும்மானமைப்புண்ணேன்கமைத்துநீர்நடமின்களே. (ங)

உன்னுருவிற்சுவையொளியூறோசைநாற்றத் துறுப்பினதுகுறிப்பாகுமைவீர்நுங்கண், மன்னுருவத்தியற்கைகளால்வைப்பீர்க்கையோவையகமேபோதாதேயானேல்வானோர், பொன்னுருவைத்தென்னூரர்மன்னுகுன்றைப்புவிக்கெழிலாஞ்சிவக்கொழுந்தைப்புகுந்தென்சிந்தை, தன்னுருவைத்தந்தவனையெந்தைதன்னைத்தலைப்படுவேன்றுலைப்படுபபான்றருக்கேன்மின்னே.

துப்பினைமுன்பற்றறுவிறலேமிக்கசோர்வுபடுசூட்சியமேசுகமேநீங்க, ளொப்பினையைப்பாவித்திவ்வுலகமெல்லா முழறுமிதுகுறைமுடிப்பீர்க்கரிதேயென்றன், வைப்பினைப்பொன்மதிலாரூர்மணியைவைகன்மணாளனையெம்பெருமானைவானோர்தங்க, ளப்பனைச்செப்படவடைவேனும்மானுனுமாட்டுணேனோட்டந்தீங்கலையேன் மின்னே. (ரு)

பொங்குமதமானமேயார்வச்செற்றக்குரோதமேயுலோபமேபொறையேநீங்க, ளுங்கள்பெருமாநிலத்தினெல்லையெல்லாமுழறுமதுகுறைமுடிப்பீர்க்கரிதேயானே, லங்கமலத்தயனொடுமாலாகிமற்றுமதற்கப்பாலொன்றாகியறியவொண்ணாச்,செங்கனகத்தனிக்குன்றைச்சிவனையாரூர்ச்செல்வனைச்சேர்வேனும்மாற்செலுத்துணேனே. (சு)

இடர்பாவமெனமிக்கதுக்கவேட்கைவெறுப்பேயென்றனைவிருமூலகையோடிக், குடைகின்றீரக்குலங்கள்குலுங்கிநுங்கள்குறிநின்றதமையாதேயானேல்வானோ, ரடையார்தம்புரமூன்றுமெரிசெய்தானையமரர்கடம்பெருமானையரனையாரு, ருடையானைக்கடுகச்சென்றடைவேனும்மாலாட்டுணேனோட்டந்தீங்கலையேன் மின்னே. (எ)

விரைந்தாளுநல்குரவேசெல்வேபொல்லாவெகுட்சியேமகிழ்ச்சியேவெறுப்பேநீங்க, ணிரைந்தோடிமானிலத்தையரித்துத்தின்பீர்க்கில்லேயேநுகர்போகம்யானேல்வானேர், கரைந்தோடவருநஞ்சையமுதுசெய்த சற்பகத்தைத்தற்பரத்தைத்திருவாரூரிற், பரஞ்சோதிதனைக்காண்பேன்படேனும்பண்பிற்பரிந்தோடியோட்டந்துபகட்டேன்மின்னே. (அ)

மூள்வாயதொழிற்பஞ்சேந்திரியவஞ்சமுகரிகாண்முழுதுமிவ்வுலகையோடி,நாள்வாயுநும்முடையமம்மராணைடாத்துகிறீர்க்கமையாதேயானேல்வானேர், நீள்வானமுகடதனைத்தாங்கிநின்றநெடுந்தூணைப்பாதாளக்கருவையாரூ, ராள்வானைக்கடுகச்சென்றடைவேனும்மாலாட்டுணேனேட்டந்திங்கலேயேன்மின்னே. (௯)

சுருக்கமொடுபெருக்கநிலேநீத்தல்பற்றித்துப்பறையென்றனைவீரிவ்வுலகையோடிச், செருக்கிமிகைசெலுத்தியுமசெய்கைவைகல்செய்கின்றீர்க்கமையாதேயானேன்மிக்க, தருக்கிமிகவரையெடுத்தவரக்கனுகந்தளரவடியெடுத்தவன்றன்பாடல்கேட்டு, விரக்கமெழுந்தருளியவெம்பெருமான்பாதத்திடையிலேன்கெடுவீர்காளிடறேன்மின்னே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

மாதரவர் மருங்கணைய வந்தெய்தி மதனவசக்
காதலவர் புரிந்தொழுகுங் கைதவங்கள் செய்திடவும்
பேதமிலா வோருணர்விற் பெரியவரைப் பெயர்விக்க
யாதுமொரு செயலில்லா மையிலிறைஞ்சி யெதிரகன்றார்.

(இ-ள்.) மாதரவர்மருங்கணையவந்தெய்தி—அரமகளிர்கள் வாகீசமுனிவரிடத்துக்கிட்டிவந்து; மதனவசக்காதலவர்புரிந்தொழுகுங்கைதவங்கள்செய்திடவும்—மன்மதனுல் தந்நிலேமையிழக்கும் விகாரத்தை அவ்வாகீசமுனிவர் விரும்பி அம்மயக்கவழியிற் செல்லுதற்கேதுவான வஞ்சனைகள் பலவற்றைச்செய்யவும்; பேதமிலாவோருணர்விற்பெரியவரைப்பெயர்விக்க—அவராற் சித்தநிலேதிரியாத ஒருப்பட்ட உணர்ச்சியையுடைய அவரைச்சித்தநிலேதிரிவிக்க; யாதுமொருசெயலில்லாமையிலிறைஞ்சியெதிரகன்றார்—ஒருசிறிதும் தமக்கோர்செயலில்லாமையில் அவர்திருமுன்னே வணங்கிநீங்கினார்.

அவர்செய்யும் வஞ்சனைகளால் வஞ்சிக்கப்படாது அவைகளை வஞ்சித்துத் தாம் நிற்றலிற் பேதமிலாவோருணர்விற் பெரியவரொன்றும், அவ்வரமகளிர் வஞ்சித்தற்குரிய செயல் முழுதும் செய்து பிறசெயலொன்றும் இலராதலின் யாதுமொரு செயலில்லாமையிலென்றுங்கூறினர். (௪௨௪)

இந்நிலேமை யுலகேழு மெய்தவறிந் தியல்பேத்த
மன்னியவன் புறுபத்தி வடிவான வாகீசர்
மின்னிலவுஞ் சடையார்த மெய்ப்பொருடா னெய்தவரு
மந்நிலேமை யணித்தாகச் சிலநாளங் கமர்ந்திருந்தார்.

(இ-ள்.) இந்நிலேமையுலகேழுமெய்த—இவ்வாறன நிலேமை ஏழுலகத்தின்கண்ணும்பரம்ப; அறிந்தியல்பேத்த—அவ்வுலகத்தார் அதனையறிந்து வாகீசமுனிவரது சிறப்பைத்துதிக்க; மன்னியவன்புறுபத்திவடிவானவாகீசர்—நிலேபெற்ற அன்புமிக்கபத்தி

பேவடிவமாக உடையவாகீசமுனிவர்; மின்னிலவுஞ்சடையார்தம்=மின்போலவிளங்குகின்ற சடையையுடைய சிவபிரானது; மெய்யருடானெய்தவரும்=மெய்ம்மையாகிய திருவருளைத் தானடைதற்கேதுவாகவருகின்ற; அந்நிலைமைபணித்தாக=அக்காலம் சமீபமாக;சிலநாளங்கமர்ந்திருந்தார்=சிலநாள் அத்திருப்புகலூரின்கண் வீற்றிருந்தருளினார்.

இந்நிலைமையென்றது ஓடும்பொன்னும் ஒன்றாகக்கருதும்புத்தியும் அரமகளிர் வசமாகாதமெய்யுணர்ச்சியும் என்க. மெய்யருளென்றது நிரதிசயவின்பம்விளைக்கும் சீவன்முத்தி ஞானத்துக்கு மேலான அருண்ஞானத்தை. அணித்தாதல் அந்த ஞானமடையப் பாத்திரராங்காலம் அணித்தாதல். எனவேமுன்னிருந்த நிலைமையின் மிகமுறுகிவளரும் பேரன்போடு மல களங்கமற்றொளிவிடும் தூயஞானச்செல்வமுடையரா யிருந்தன ரென்க. (௪உ௫)

மன்னியவந் தக்கரண மருவுதலைப் பாட்டினாற்
றன்னுடைய சரணான தமியேனைப் புகலூர
னென்னையினிச் சேவடிக்கீ ழிருத்திடுமென் றெழுகின்ற
முன்னுணர்வின் முயற்சியினாற் றிருவிருத்தம் பலமொழிந்தார்.

(இ-ள்.) மன்னியவந்தக்கரணமருவுதலைப்பாட்டினால்=நிலைபெற்ற மனமுதலிய கரணங்கள் நான்கும் அடைந்த ஒருமைப்பாட்டோடு; புகலூரன்=திருப்புகலூரில் வீற்றிருந்தருளும் சிவபிரான்; தன்னுடையசரணானதமியேனையென்னை=தனக்குப்புகலாகவிருக்கின்ற அடியேனாகிய என்னை; இனிச்சேவடிக்கீழிருத்திடுமென்று=இனிச்சிவந்த திருவடிநீழலில் சேர்க்குமென்று; எழுகின்றமுன்னுணர்வின்முயற்சியினால்=உதிக்கின்ற முற்சனனவாசனையாலுண்டாகும் பிரயத்தனத்தால்; திருவிருத்தம்பலமொழிந்தார்=பல திருப்பதிகங்களைப் பாடியருளினார்.—எ-று.

அந்தக்கரண மருவுதலைப்பாடென்றது நான்குகரணமும் வேறு வேறு தமக்குரிய தொழில்செய்யாது சத்துவகுணோதிக்கத்தால் ஒருப்பாடடைந்துநிற்றல். முன்னுணர்வின் முயற்சியென்றது முன்னம் முனியாயிருந்தவாசனை. இதனைமன்னுதபோதனியார் என்னுந் திருவிருத்தத்தின் உரையிற்காண்க. (௪உ௬)

மண்முதலா முலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
யண்ணலார் சேவடிக்கீ ழாண்டவர சமர்ந்திருந்தார்.

(இ-ள்.) மண்முதலாமுலகேத்த=நிலவுலகத்துள்ளார்முதலாக மூவுலகத்துள்ளாரும் துதித்தற்கேதுவாக; மன்னுதிருத்தாண்டகத்தை=நிலைபெற்றிருக்கும் எண்ணுகேனென்னும் முதலையுடைய திருத்தாண்டகத்தை; புண்ணியாவுன்னடிக்கேபோதுகின்றேனெனப்புகன்று=புண்ணியாவுன்னடிக்கே போதுகின்றேனென்றீற்றில் வைத்துப்பாடியருளி; நண்ணரியசிவானந்தஞானவடிவேயாகி=அருண்ஞானமில்லார் அடைதற்கரிய சிவஞானானந்தப்பிழம்பேயாய்; அண்ணலார்சேவடிக்கீழாண்டவரசமர்ந்திருந்தார்=அவ்வியல்புடையசிவபிரான் திருவடிக்கீழ் வாகீசமுனிவர் வீற்றிருந்தருளினார்.—எ-று.

சிவஞானானந்தவடிவாகி எனமுற்கூறியதனால் சேவடி என்றவிடத்தும் அவ்வியல்புடையசேவடி எனச்சுட்டியுரைக்கப்பட்டது. அச்சேவடியின்குணமே அதனையடைந்த முத்தான்மாவுக்கும் தாதான்மியத்தாற்குணமாதலின், சிறிது வியாப்பிய வியாபகபாவந்தோன்றக்கீழென்றுகூறினார். (௪உ௭)

திருப்புகலூர்த்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனோவெம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லாற், கண்ணிலேன்மற்றோர்களைகணில்லேன்கழலடியேகைதொழுதுகாணினல்லா, லொண்ணுளேயொன்பதுவாசல்வைத்தாயொக்கவடைக்கும்போதுணரமாட்டேன், புண்ணியாவுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧)

அங்கமேபூண்டாயனலாடினாயாதிரையாயாநிழலாயானேறூர்ந்தாய், பங்கமொன்றில்லாதபடர்சடையினாய்பாம்பொடுதிங்கள்பகைதீர்த்தாண்டாய், சங்கையொன்றின்றியேதேவர்வேண்டச்சமுத்திரத்தினஞ்சுண்டுசாவாமூவாச், சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன்றிருப்புகலூர்மேவியதேவதேவே.

பையரவக்கச்சையாய்பால்வெண்ணீற்றாய்பளிக்குக்குழையினாய்பண்ணாரின்சொன், மைவிரவுகண்ணாளைப்பாகங்கொண்டாய்மான்மறிக்கையேந்தினாய்வஞ்சக்கள்வ, ரைவரையுமென்மேற்றரவறுத்தாயவர்வேண்டுங்காரியமிங்காவதில்லை, பொய்யுரையாதுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே, (௩)

தெருளாதார்மூவெயிலுந்தீயில்வேவச்சிலைவளைத்துச்செங்கணைமாற்செற்றதேவே, மருளாதார்தம்மனத்தில்வாட்டந்தீர்ப்பாய்மருந்தாய்ப்பிணிதீர்ப்பாய்வானோர்க்கென்றும், அருளாகியாதியாய்வேதமாகியலர்மேலாளீர்மேலானுய்த்தாங்காணாப், பொருளாவாபுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௪)

நீரேறுசெஞ்சடைமேனிலாவெண்டிங்கணீங்காமைவைத்துகந்தநீதியானே, பாரேறுபடுதலையிற்பலிகொள்வானேபண்டனங்கைப்பார்த்தானேபாவநாசா, காரேறுமுகிலனையகண்டத்தானேகருங்கைக்களிற்றுரிவைகதறப்போர்த்த, போரேறேயுன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௫)

விரிசடையாய்வேதியனேவேதகீதாவிரிபொழில்சூழ்வெண்காட்டாய்மீயச்சூராய், திரிபுரங்களெரிசெய்ததேவதேவேதிருவாரூர்த்திருமூலத்தானமேயாய், மருவினியார்மனத்துளாய்மாகாளத்தாய்வலஞ்சுழியாய்மாமறைக்காட்டெந்தாயென்றும், புரிசடையாயுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௬)

தேவார்ந்ததேவனைத்தேவரெல்லாந்திருவடிமேலலரிட்டுத்தேடிநின்று, நாவார்ந்தமறைபாடிநட்டமாடிநான்முகனுமிந்திரனுமாலும்போற்றக், காவார்ந்தபொழிற்சோலைக்கானப்பேராய்கழுக்குன்றத்துச்சியாய்கடவுளேநின், பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

நெய்யாடிநின்மலனேநீலகண்டாநிறைவுடையாய்மறைவல்லாய்நீதியானே
மையாடுகண்மடவாள்பாகத்தானேமான்றோலுடையாய்மகிழ்ந்துநின்றாய்
கொய்யாடுகூவிளங்கொன்றைமாலைகொண்டடியேனிட்டுக்கூறிநின்று
பொய்யாதசேவடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. ௮

துன்னஞ்சேர்கோவணத்தாய்தூயநீற்ருய்துதைந் திலங்குவெண்மழுவாள்கையிலேந்தித், தன்னனையுந்தண்மதியும்பாம்புநீருஞ்சடைமுடிமேல்வைத்துகந்ததன்மையானே, யன்னநடைமடவாள்பாகத்தானேயக்காரம்பூண்டானேயாதியானே, பொன்னங்கழலடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (கூ)

ஒருவனையுமல்லாதுணராதுள்ளமுணர்ச்சித்தடமொற்றத்துள்ளேநின்ற, விருவரையுமூவரையுமென்மேலேவியில்லாததரவறுத்தாய்க்கில்லேனேலக், கருவரைசூழ்கானலிலங்கைவேந்தன்கடுந்தேர்மீதோடாமைக்காலாற்செற்ற, பொருவரையாயுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

வானவர்கண் மலர்மாரி மண்ணிறைய விண்ணுலகின்
மேனிறைந்த வைந்துபே ரியவொலியும் விரிஞ்சன்முதல்
யோனிகளா யினவெல்லா முண்ணிறைந்த பெருமகிழ்ச்சி
தானிறைந்த சித்திரையிற் சதயமாந் திருநாளில்.

(இ-ள்.) வானவர்கண்மலர்மாரிமண்ணிறைய—தேவர்கள் தூவும் மலர்மழையானது நிலவுலகின்கண் நிறைந்திருக்க; விண்ணுலகின்மேனிறைந்தவைந்துபேரியவொலியும்—தேவருலகின்கண் பரம்பியிருக்கும் ஐந்துதுந்துபிகளின் ஓசையேயன்றி; விரிஞ்சன்முதல்யோனிகளாயினவெல்லாம்—பிரமன்முதல் தாவரமீருன உயிர்வர்க்கங்களெல்லாம்; உண்ணிறைந்தபெருமகிழ்ச்சிதானிறைந்த—தம்முள்ளே இயல்பாலடைந்த பெருமகிழ்ச்சியானது நிறைந்திருக்கும்; சித்திரையிற்சதயமாந்திருநாளில்—சித்திரைமாதத்தின்கண்வரும் சதயநாளில்.—எ-று.

சித்திரைச்சதயநாளில் உன்னடிக்கேபோதுகின்றேனெனப்புகன்று சிவானந்தஞானவடிவாகிச் சேவடிக்கீழமர்ந்திருந்தார் என முன்விருத்தத்தோடு கூட்டிமுடிக்க.

அடியனே னுதரவா லாண்டவர சின்சரிதப்
படியையா னறிந்தபடி பகர்ந்தேனப் பான்முனிவன்
கடிமலர்மென் சேவடிகள் கைதொழுது குலச்சிறையார்
முடிவில்புகழ்த் திருத்தொண்டின் முயற்சியினை மொழிகின்றேன்.

(இ-ள்.) அடியனேனுதரவால்—அடியேனுள்ளத்துதித்தபெருவிருப்பினுல்; ஆண்டவரசின்சரிதப்படியை—வாகீசத்திருவடிகளுடைய சரித்திரத்தின் வரலாற்றை; யானறிந்தபடிபகர்ந்தேன்—யானறிந்தவாறு சொன்னேன்; அப்பான்முனிவன்கடிமலர்மென்சேவடிகள்கைதொழுது—அதன்மேல் அவ்வாகீசமுனிவரது மணங்கமழ்கின்ற தாமரைமலர்போலும் மிருதுவான சிவந்த திருவடிகளைக் கைகுவித்து வணங்கி; குலச்சிறையார்முடிவில்புகழ்த்திருத்தொண்டின்—குலச்சிறைநாயனுரது அழியாத புகழையுடைய திருத்தொண்டின்; முயற்சியினைமொழிகின்றேன்—தாளாண்மையைச் சொல்கின்றேன்.

யானறிந்தபடி ஆதரவாற் சரிதப்படியைப் பகர்ந்தேனெனவும், தொழுது அப்பால் குலச்சிறையார் திருத்தொண்டின் முயற்சியினை மொழிகின்றேனெனவும் கூட்டுக. அப்பரமுனிவனென்றும் பாடமுண்டு. (சஉக)

திருநாவுக்கரசுசுவாமிகள்புராணம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கஎoச.



திருநாவுக்கரசர் இனி என்னை புகலூரர் தமது திருவடிக்கீழிருத்திடுவரென்று பூர்வஞானத்தாலுணர்ந்து பலபாமாலைகளைச் சாத்தி, சித்திரைமதி சதயத்தில் அவரது திருவடிநீழலை யடைந்தது.

குலச்சிறைநாயனர் பாண்டிநாட்டில் மணமேற்குடியிற்றோன்றி விபூதி உருத்திராக்கமணிந்து பஞ்சாக்கரஞ் செபிப்பார் வரின் திருவமுதுசெய்வித்து சதா பரமசிவத்தை சிந்தித்து நெடுமாரபாண்டியனுக்கு முதன்மந்திரியும், மங்கையர்க்கரசியார் தொண்டுகுத்துணைவரும், திருஞானசம்பந்தசுவாமிகள் திருவடிக்கன்பருமாகி அவரோடு வாதில் தோற்ற சமணர்களை கழுவேற்றுவித்தது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

குலச்சிறைநாயனூர்புராணம்.

பன்னுதொல்புகழ்ப் பாண்டிநன்னாட்டிடைச்
செந்நெலார்வயற் றீங்கரும்பின்னயற்
றுன்னுபூகப் புறம்பணைசூழ்ந்தது
மன்னுவண்மையி னூர்மணமேற்குடி.

(இ-ள்.) மன்னுவண்மையினூர்மணமேற்குடி=நிலைபெற்ற கொடையுடையார் வாழும் மணமேற்குடி என்னும் ஊர்; பன்னுதொல்புகழ்ப்பாண்டிநன்னாட்டிடை=புலவரால் எடுத்துக்கூறும் பழமையாகிய புகழையுடைய நல்ல பாண்டிநாட்டின்கண்; செந்நெலார்வயற்றீங்கரும்பின்னயல்=செந்நெல்கள் நிறைந்த வயலின்கணுள்ள இனிய கருப்பம்வேலியின் அருகில்; துன்னுபூகப்புறம்பணைசூழ்ந்தது=நெருங்கிய கமுகமரங்களையுடைய மருதநிலத்தாற்சூழப்பட்டுள்ளது.—எ-று. (க)

அப்பதிக்குமுதல்வர்வன் றொண்டர்தா
மொப்பரும்பெரு நம்பியென்றோதிய
செப்பருஞ்சீர்க் குலச்சிறையார்திண்மை
வைப்பினூற்றிருத் தொண்டின்வழாதவர்.

(இ-ள்.) அப்பதிக்குமுதல்வர்=அம்மணமேற்குடிக்குத் தலைவராயுள்ளவர் (யாரெனில்); வன்றொண்டர்தாம்=வன்றொண்டப்பெருமான்; ஒப்பரும்பெருநம்பியென்றோதிய=உவமை கூறுதற்கரிய பெருநம்பியென்று திருத்தொண்டத்தொகையில் அருளிச்செய்த; செப்பருஞ்சீர்க்குலச்சிறையார்=சொல்லுதற்கரிய மிகு புகழையுடைய குலச்சிறைநாயனொன்னும் திருநாமமுடையவர்; திண்மைவைப்பினூற்றிருத்தொண்டின்வழாதவர்=அவர் திட்பமான உறுதிப்பாடுடைய பத்தியோடு திருத்தொண்டில் தவறாதவர்.—எ-று. (உ)

காரணங்கண்ணு தற்கன்பரென்னவே
வாரமாகிமகிழ்ந்தவர் தாண்மிசை
யாருமன்பொடு வீழ்ந்தஞ்சலிமுகிழ்த்
தீரநன்மொழி யெய்தவிசைத்துளார்.

(இ-ள்.) காரணங்கண்ணுதற்கன்பரென்ன=அவர் வீடடைதற்குரிய காரணம் சிவபிரான் அடியரென்று; வாரமாகிமகிழ்ந்து=அன்புடையராயுளமகிழ்ந்து; அவர்தாண்மிசையாருமன்பொடுவீழ்ந்து=அவ்வடியார் திருவடியின்கண் நிறைந்த பேரன்போடு வணங்கி; அஞ்சலிமுகிழ்த்து=கைகூப்பிநின்று; ஈரநன்மொழியெய்தவிசைத்துளார்=அன்போடுவிரவிய நல்ல இன்சொற்களை அவர்க்கேற்கச்சொல்கின்றவர்.-எ-று. ஏ-அசை.

மன்னன் புதல்வனைச்செய்யும் வழிபாடு மன்னனை யடைதற்கேதுவாதலில் அன்பர் வழிபாடு வீடடைதற்குக் காரணமாயிற்று. கண்ணுதலையடைதற்கு அன்பர் காரணமென்று மாற்றியுரைப்பினுமமையும். (௩)

குறியினான்கு குலத்தினராயினு
நெறியினக்குல நீங்கினராயினு
மறிவுசங்கரற் கன்பரெனப்பெறிற்
செறிவுறப்பணிந் தேத்தியசெய்கையார்.

(இ-ள்) குறியினான்குகுலத்தினராயினும்=அவர் அந்தணர்முதலிய குறியினையுடைய நான்குசாதியர்களாயினும்; நெறியினக்குலநீங்கினராயினும்=ஒழுக்கத்தினையுடைய அச்சாதிவரம்பில் வழுவினவர்களாயினும்; அறிவுசங்கரற்கன்பரெனப்பெறில்=அவர் அறிவாற் சிவபிரானுக்கு அன்புடையரென்று தாம் அறிந்தால்; செறிவுறப்பணிந்தேத்தியசெய்கையார்=பொருந்தும்வண்ணம் வணங்கித்துதிக்கும் செய்கையுடையவர்.

இது குலமிலராகக் குலமதுண்டாக என்னும் பிள்ளையார் திருப்பதிகப்பொருளைச் சூசிப்பித்து நின்றது. குலமாவது:—இன்னமரபில் இன்னகுலத்தினரென்று உயர்வுவிளக்குவது. அது வேள்வித்தொழில் முதலியவற்றால் வரும் சோமயாஜிபோன்ற சிறப்புப்பெயர். குலமின்மை வேள்வி முதலியவற்றால் அப்பெயர்பெறாமை. (ச)

உலகர்கொள்ளு நலத்தினராயினு
மலகிறீமைய ராயினுமம்புலி
யிலகுசெஞ்சடை யாரடியாரெனிற்
றலமுறப்பணிந் தேத்துந்தகைமையார்.

(இ-ள்.) உலகர்கொள்ளுநலத்தினராயினும்=அவர் அறிஞர்களாற்கொள்ளப்படும் நல்லொழுக்கமுடையோராயினும்; அலகிறீமையராயினும்=எண்ணிறந்த கொடுந்தொழிலுடையராயினும்; அம்புலியிலகுசெஞ்சடையாரடியாரெனில்=மூன்றாம்பிறை தவழ்கின்ற சிவந்த சடைமுடியையுடைய சிவபிரான் அடியராகில்; தலமுறப்பணிந்தேத்துந்தகைமையார்=சாஷ்டாங்கமாக நிலமுறவணங்கித்துதிக்கும் தகுதியுடையவர்.

இது நலமிலராக நலமதுண்டாக என்னும் பிள்ளையார் திருப்பதிகப்பொருளைச் சூசிப்பித்து நின்றது. நலமென்பது நல்லொழுக்கம். (ரு)

பண்பின்மிக்கார் பலராயணையினு
முண்பவேண்டி யொருவரணையினு
மெண்பெருக்கிய வன்பாலெதிர்கொண்டு
நண்புகூர்ந்தமு தூட்டுநலத்தினர்.

(இ-ள்.) பண்பின்மிக்கார்பலராயணையினும்=அவர் அன்புமிகுதியுடைய அடியார்கள் பலர் கூடிவரினும்; உண்பவேண்டியொருவரணையினும்=உண்ணுதற்கு விரும்பித் தனித்து ஒருவர் வரினும்; எண்பெருக்கியவன்பாலெதிர்கொண்டு=அளவுபடாத அன்பால் எதிர்கொண்டு; நண்புகூர்ந்தமுதூட்டுநலத்தினர்=அவரிடத்து நண்பு மேற்கொண்டு திருவமுது செய்விக்கும் நன்மையுடையவர்.—எ-று.

இது கணங்களாய்வரினும் தமியராய்வரினும் என்னும் பிள்ளையார் திருப்பதிகப் பொருளைச் சூசிப்பித்து நின்றது. (சு)

பூதிகோவணஞ் சாதனத்தாற்பொலிந்
தாதிதேவர்த மஞ்செழுத்தாமவை
யோதுநாவணக் கத்தாலுரைப்பவர்
பாதமாளும் பரவியபண்பினர்.

(இ-ள்) பூதிகோவணஞ்சாதனத்தாற்பொலிந்து=அவர் திருவெண்ணீறு கோவணம் உருத்திராக்கம் ஆகிய இவற்ருற் பொலிவடைந்து; ஆதிதேவர்தமஞ்செழுத்தாமவை=சிவபிரானுடைய திருவைந்தெழுத்தாகிய அவைகளை; ஓதுநாவணக்கத்தாலுரைப்பவர்=தன்னியல்பால் ஓதும் நாவானது வணங்கும் இயல்பால் உரைக்கின்ற அடியார்களது; பாதநாளும்பரவியபண்பினர்=திருவடிகளை நாள்தோறும் வணங்கிய பண்பையுடையவர்.—எ-று.

இது நாவணங்கியல்பாமென்னும் பிள்ளையார் திருப்பதிகப்பொருளைச் சூசிப்பித்து நின்றது. சாதனமென்னும் பொதுமையால் இனம்பற்றிச் சடை கல்லவட்டம் முதலிய சிவவேடமுங்கொள்க. கோவணம் கல்லவட்டம் முதலியன இளமையிற்றுறந்த நைட்டிகப்பிரமசரியர்க்கே யுரியனவென்க. ஓதுநாவென்றது - திருவைந்தெழுத்தை ஓதும் அடியார் மறப்பினும் தன்னியல்பால் ஓதலை விளக்கிநின்றது. நாவணக்கம்=நாவிற்பொருந்த இடையறுதோதல், நாத்தழும்பேற ஓதலெனினுமொக்கும். (எ)

இன்னநல்லொழுக் கத்திஞரீறில்சீர்த்
தென்னவன்னெடு மாறற்குச்சீர்திகழ்
மன்னுமந்திரி கட்குமேலாகியார்
ஒன்னலர்ச்செற் றுறுதிக்கணின்றுளார்.

(இ-ள்.) இன்னநல்லொழுக்கத்திஞர்=இவைபோலும் நல்லொழுக்கத்தையுடைய அவர்; ஈறில்சீர்த்தென்னவன்னெடுமாறற்கு=நின்றசீர்நெடுமாறனென்னும் கூன்பாண்டியனுக்கு; சீர்திகழ்மன்னுமந்திரிகட்குமேலாகியார்=சிறப்போங்கிய நிலைபெற்ற மந்திரிகட்கு மேலாகியவர்; ஒன்னலர்ச்செற்றுறுதிக்கணின்றுளார்=பகைவரையழித்து அரசுசெலுத்தும் ஒருப்பாட்டின்கண் நிலைபெற்றுள்ளார்.—எ-று.

இது வெற்றவேயடியாரென்னும் பிள்ளையார் திருப்பதிகப்பொருளைச் சூசிப்பித்து நின்றது. உறுதிக்கணிற்றல்:—அரசர்க்குக் களைகணாய் அறநூல் கூறும்வழி நிற்றல்.

ஆயசெய்கைய ராயவராறணி
நாயனூர்திருப் பாதநவின்றுளார்
பாயசீர்புனை பாண்டிமாதேவியார்
மேயதொண்டுக்கு மெய்த்தொண்டராயினர்.

(இ-ள்.) ஆயசெய்கையராயவர்=பாண்டியன்மந்திரிகட்கெல்லாம்முதன்மந்திரியாராகிய அவர்; ஆறணிநாயனூர்திருப்பாதநவின்றுளார்=கங்கைநதியணிந்த சிவபிரானது திருவடிகளைத் தியானித்துத்துதிக்கு மியல்புடையவர்; பாயசீர்புனைபாண்டிமாதேவியார்=பரம்பிய புகழையுடைய மங்கையர்க்கரசியாரது; மேயதொண்டுக்குமெய்த்தொண்டராயினர்=தக்க திருத்தொண்டை வழுவாது நடத்தும் தொண்டராயுள்ளவர்.

புன்னயத்தரு கந்தர்பொய்நீக்கவுந்
தென்னர்நாடு திருநீறுபோற்றவு
மன்னுகாழியர் வள்ளலார்பொன்னடி
சென்னிசேர்த்தி மகிழ்ந்தசிறப்பினர்.

(இ-ள்.) புன்னயத்தருகந்தர்பொய்நீக்கவும்=அவர் பெரும்பயனற்ற சைனர்களுடைய பொய்க்கொள்கையை அழிக்கவும்; தென்னர்நாடுதிருநீறுபோற்றவும்=பாண்டிநாடுமுழுதும் திருவெண்ணீற்றைத் தரித்துக்கொள்ளவும் ஏதுவாக; மன்னுகாழியர்வ

ள்ளலார்பொன்னடி—நிலைபெற்ற சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் திருவடிகளை; சென்னிசேர்த்திமகிழ்ந்தசிறப்பினார்—சிரசின்மேற்சூடி அதனால் மகிழ்வடைந்த சிறப்புடையவர்.—எ-று. (௰)

வாதிற்றோற்ற வமணரைவன்கழுத்
தீதுநீங்கிட வேற்றுவித்தார்திறம்
யாதுபோற்றினேன் மேலினியேத்துகேன்
வேதநீதி மிழலைக்குறும்பர்தாள்.

(இ-ள்) வாதிற்றோற்றவமணரை—தாம் செய்யும் வாதத்தில் தோல்வியடைந்த சமணர்களை; வன்கழு—வலிய கழுமுனையில்; தீதுநீங்கிடவேற்றுவித்தார்திறம்—உலகத்தார் தீமையினின்றும் நீங்கும்படி ஏற்றுவித்த இக்குலச்சிறைநாயனாரது நிலைமையை; யாதுபோற்றினேன்—எவ்வளவு அறிந்து துதித்தேன்; வேதநீதிமிழலைக்குறும்பர்தாள்—வேதமுடிபுகளிற்கூறும் அறநெறியையுடைய பெருமிழலைக்குறும்பநாயனாரது திருவடிகளை; மேலினியேத்துகேன்—இனிமேல் துதிக்கின்றேன்.—எ-று.

துதிக்கு அளவுபடாமையின் யாதுபோற்றினேனென்றும், உபநிடதங்களிற்கூறும் ஞானயோகம் கைவந்தவராகலின் வேதநீதி மிழலைக்குறும்பனென்றும் கூறினர்.

குலச்சிறைநாயனார்புராணம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௰௪௫.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பெருமிழலைக்குறும்பநாயனார்புராணம்.

சூதநெருங்கு குலைத்தெங்கு பலவுபூகஞ் சூழ்புடைத்தாய்
வீதிதோறு நீற்றினொளி விரியமேவி விளங்குபதி
நீதிவழுவா நெறியினராய் நிலவுங்குடியா னெடுநிலத்து
மீதுவிளங்குந் தொன்மையது மிழலைநாட்டுப் பெருமிழலை.

(இ-ள்.) சூதநெருங்குகுலைத்தெங்கு—மாமரங்களும்நெருங்கிய குலைகளையுடைய தென்னமரங்களும்; பலவுபூகஞ்சூழ்புடைத்தாய்—பலாமரங்களும் கமுகமரங்களும் ஒன்றன்பின்னொன்று சூழ்ந்தபக்கங்களையுடையதாய்; வீதிதோறுநீற்றினொளிவிரியமேவி—வீதிகடோறும் திருவெண்ணீற்றினொளியானது விரியும்படிபெற்று; விளங்குபதி—விளங்கியிருக்கும் ஊர் (யாதெனில்); நீதிவழுவாநெறியினராய்நிலவுங்குடியால்—அறநூல் கூறும் ஒழுக்கத்து வழுவாத நிலைகளையுடையராய் விளங்குகின்ற குடிகளால்; நெடுநிலத்துமீதுவிளங்குந்தொன்மையது—நீண்ட உலகத்தின்கண் விளங்கியிருக்கும்பழமையுடையது; மிழலைநாட்டுப்பெருமிழலை—அது மிழலைநாட்டின்கணுள்ள பெருமிழலையாம்.—எ-று. (௧)

குறும்பநாயனார். மிழலைநாட்டிற் பெருமிழலைப்பதியில் சிவபக்தி அடியார்பக்தியிற் சிறந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் தன்மை யையுணர்ந்து அவர்பா லன்பராகி அஷ்டமாசித்தியைப்பெற்று பஞ்சாக்ஷரத்தை அநுஷ்டித்துவருங்கால் சுந்தரமூர்த்திசுவாமிகள் உத்திரகை லைக்கெழுந்தருளுவதை ஞானத்தாலுணர்ந்து அவரைப் பிரியமனமின்றி யோகத்தினால் உடலினின்றும் பிரிந்து ஸ்ரீகைலாயத்தையடைந்தது.

அன்னதொன்மைத் திருப்பதிக்க ணதிபர்மிழலைக் குறும்பனார்
சென்னிமதியம் வைத்தவர்த மடியார்க்கான செய்பணிக
ளின்னவண்ண மென்றவர்தா முரையாமுன்ன மெதிரேற்று
முன்னமுவந்து செய்வாராய் முதிருமறிவின் பயன்கொள்வார்.

(இ-ள்.) அன்னதொன்மைத்திருப்பதிக்கண்=அத்தன்மையவாகிய பழையதிருப்பதியினிடத்து; அதிபர்மிழலைக்குறும்பனார்=தலைவராயுள்ள பெருமிழலைக்குறும்பரென்னும் பெயரையுடைய நாயனார்; சென்னிமதியம்வைத்தவர்தமடியார்க்கான=சிரசின்கண் இளம்பிறையைச்சூடிய சிவபிரானடியார்க்குரிய; செய்பணிகளின்னவண்ணமென்று=திருத்தொண்டுகளை இவ்வாறு செய்யவேண்டுமென்று; அவர்தாமுரையாமுன்னம்=அவ்வடியார்கள் சொல்லுமுன்; எதிரேற்றுமுன்னமுவந்துசெய்வாராய்=அவரை எதிர்கொண்டு முன்னே திருவுள்ளமுவந்து செய்கின்றவராய்; முதிருமறிவின்பயன்கொள்வார்=தமக்குப் பேரறிவுகிடைத்த பயனையடைவாராயினார்.—எ-று.

பேரறிவுடைய அடியார்கட்குக் குறிப்பறிந்தாம்பணிசெய்தல் தாம் பேரறிவடைந்ததன்பயனாதலின் முதிருமறிவின்பயன் கொள்வாரென்றார். (உ)

தொண்டர்பலரும் வந்தீண்டி யுண்ணத்தொலையா வமுதூட்டிக்
கொண்டுசெல்ல விருநிதிய முகந்துகொடுத்துக் குறைந்தடைவார்
வண்டுமருவுங் குழலுமையாள் கேள்வன்செய்ய தாளென்னும்
புண்டரீக மகமலரில் வைத்துப்போற்றும் பொற்பினார்.

(இ-ள்.) தொண்டர்பலரும்வந்தீண்டியுண்ண=அடியார்கள் பலரும் திரண்டுவந்தமுதுசெய்ய; தொலையாவமுதூட்டி=குறையாத திருவமுதைப் புசிப்பித்து; கொண்டுசெல்லவிருநிதியமுகந்துகொடுத்து=அவர்கள் எடுத்துக்கொண்டு போம்படி மிகுந்ததிரவியத்தை அள்ளிக்கொடுத்து; குறைந்தடைவார்=அவர்க்குத்தாழ்ந்தநடையுடையராயிருக்கின்ற அவர்; வண்டுமருவுங்குழலுமையாள்கேள்வன்=வண்டுகள் தங்கிய கூந்தலையுடைய உமாதேவியாருக்கு நாயகராகிய சிவபிரானது; செய்யதாளென்னும்புண்டரீகம்=சிவந்ததிருவடிகளென்னும் தாமரைமலர்களை; அகமலரில்வைத்துப்போற்றும்பொற்பினார்=இதயமலரின்கணிருத்தி வழிபாடுசெய்யும் நிலைமையுடையவர்.—எ-று.

இத்தன்மையராய் நிகழுநா ளெல்லையில்லாத் திருத்தொண்டின்
மெய்த்தன்மையினை யுலகறிய விதியால்வணங்கி மெய்யடியார்
சித்தநிலவுந் திருத்தொண்டத் தொகைபாடியநம் பியைப்பணிந்து
நித்தனருள்பெற் றவர்பாத நினைக்குநியமத் தலைநின்றார்.

(இ-ள்.) இத்தன்மையராய்நிகழுநாள்=இவ்வியல்புடையராய் ஒழுகும்நாளில்; எல்லையில்லாத்திருத்தொண்டின்=அளவுபடாத திருத்தொண்டினது; மெய்த்தன்மையினையுலகறிய=உண்மைத்தன்மையை உலகத்தாரறியும்படி; விதியால்வணங்கி=விதிப்படிவணங்கி; மெய்யடியார்சித்தநிலவும்=மெய்யன்பர்களது இதயத்தில் விளங்குகின்ற; திருத்தொண்டத்தொகைபாடிய=திருத்தொண்டத்தொகையை அருளிச்செய்த; நம்பியைப்பணிந்து=நம்பியாரூரரைவணங்கி; நித்தனருள்பெற்ற=சிவபிரான் திருவருளைப் பெற்ற; அவர்பாதநினைக்குநியமத்தலைநின்றார்=அந்நம்பியாரூரரது திருவடிகளைத்தியானிக்கும் நியமத்தில் நின்றவர்.—எ-று. (௪)

மையார்தடங்கட் பரவையார் மணவாளன்றன் மலர்க்கழல்கள்
கையாற்றொழுது வாய்வாழ்த்தி மனத்தானினைக்குங் கடப்பாட்டிற்
செய்யாள்கோனு நான்முகனு மறியாச்செம்பொற் றாளிணைக்கீ
ழுய்வான்சேர வுற்றநெறி யிதுவேயென்றன் பினிலுய்த்தார்.

(இ-ள்) மையார்தடங்கட்பரவையார்=மைதீட்டிய விசாலமாகிய கண்களையுடைய பரவைநாச்சியாரது; மணவாளன்றன்மலர்க்கழல்கள்=கணவராகிய நம்பியாரூரரது மலர்போலும் திருவடிகளை; கையாற்றொழுது=கைகளால்வணங்கி; வாய்வாழ்த்தி=வாயினாற்றுதித்து; மனத்தானினைக்குங்கடப்பாட்டில்=மனதினால் தியானிக்கும் முறைமையில்; செய்யாள்கோனுநான்முகனுமறியா=திருமால்பிரமன்என்னுமிருவரும் தேடியறியாத சிவபிரானது; செம்பொற்றாளிணைக்கீழ்=சிவந்தபொன்போலும் திருவடிக்கீழ்; உய்வான்சேரவுற்றநெறியிதுவேயென்று=உய்யும்பொருட்டு நாமடைய உறுதியானமார்க்கம் இதுவேயென்று; அன்பினிலுய்த்தார்=அன்புகாரணமாக மனதைச்செலுத்திவந்தார் —எ-று.

கடப்பாட்டில் அன்பினிலுய்த்தார் எனக்கூட்டுக. (௫)

நாளுநம்பி யாரூரர் நாமநவின்ற நலத்தாலே
யாளும்படியா லணிமாதி சித்தியான வணைந்ததற்பின்
மூளுங்காத லுடன்பெருக முதல்வர்நாமத் தஞ்செழுத்துங்
கேளும்பொருளு முணர்வுமாம் பரிசுவாய்ப்பக் கெழுமினார்.

(இ-ள்.) நாளுநம்பியாரூரர்நாமநவின்றநலத்தாலே=தினந்தோறும் நம்பியாரூரரது திருநாமத்தையுச்சரித்த நன்மையால்; ஆளும்படியால்=தாம் எடுத்தாளும்வண்ணம்; அணிமாதிசித்தியானவணைந்ததற்பின்=அணிமாமுதலிய எண்சித்திகளும் தம்மையடைந்தபின்பு; மூளுங்காதலுடன்பெருக=இடைவிடாதுவளரும் பெருவிருப்பொடுமிகவும்; முதல்வர்நாமத்தஞ்செழுத்தும்=சிவபிரான் திருநாமமாகிய திருவைந்தெழுத்தையும்; கேளும்பொருளுமுணர்வுமாம்=தமக்கு உறவும்பொருளும் உணர்வும் அவைகளேயாமென்னும்; பரிசுவாய்ப்பக்கெழுமினார்=கருத்துவாய்க்கும்படி உச்சரித்துவந்தார்.எ-று.

அணிமாமுதலியசித்திகள் எட்டும் அவர்செய்ய எளிதாய்வசப்பட்டு நிற்றலில் ஆளும்படியாலென்றார். அணைந்ததற்பின் காதலுடனைஞ்செழுத்துங்கெழுமினார் என்றதனால் அரிதில் அடையும் எண்சித்திகளும் ஐந்தெழுத்தோதி அதன்நிலைமைமுற்றும் கைவந்தநம்பியாரூரர் நாமம்நவின்ற திறத்தாற்கிடைத்தலின் அந்நம்பியாரூரர் திருவருளானே முதல்வர் திருநாமமாகியதிருவைந்தெழுத்தையும் காதலுடன் நிலையாகநின்று ஓதப்பெற்றனரென்க கேள் பொருள் உணர்வு இம்மூன்றும் தம்மையுடையானுக்குக் களைகணாயிருந்திடரொழித்தல்போல் இத்திருவைந்தெழுத்துமிருத்தலின் அங்ஙனங்கூறினார்.

இன்னவாறே யிவரொழுக வேறுகொடிமே லுயர்த்தவர்தம்
பொன்னின்கழல்கண் மண்ணின்மேற் பொருந்தவந்து வழக்குரைத்து
மன்னுமோலை யவைமுன்பு காட்டியாண்ட வன்றொண்டர்
சென்னிமதிதோய் மாடமலி கொடுங்கோளூரைச் சேர்வுற்றார்.

(இ-ள்.) இன்னவாறேயிவரொழுக=இந்நாயனார் இவ்வாறுநடந்துவர; ஏறுகொடிமேலுயர்த்தவர்=இடபக்கொடியையுயர்த்த சிவபிரான்; தம்பொன்னின்கழல்கண்மண்ணின்மேற்பொருந்தவந்து=தமது பொன்போலும் திருவடிகள் நிலவுலகின்கண்

பொருந்தும்படியாக எழுந்தருளி; வழக்குரைத்து=அடிமையென்னும் வழக்கையுரைத்து; மன்னுமோலையவைமுன்புகாட்டியாண்டவன்றொண்டர்=நிலைபெற்ற ஆவணவோலையைச்சபையார்முன்புகாட்டித் தடுத்தாட்கொண்ட நம்பியாரூரர்; சென்னிமதிதோய் மாடமலி=சிரசின்கண் சந்திரன்தவழ்கின்ற மாடங்கள்நிறைந்த; கொடுங்கோளூரைச் சேர்வுற்றார்=கொடுங்கோளூரை அடைந்தார்.—எ-று. (எ)

அஞ்சைக்களத்து நஞ்சுண்ட வமுதைப்பரவி யணைவுறுவார்
செஞ்சொற்றமிழ்மா லைகண்மொழியத் தேவர்பெருமா னருளாலே
மஞ்சிற்றிகழும் வடகயிலைப் பொருப்பிலெய்த வரும்வாழ்வு
நெஞ்சிற்றெளிய விங்குணர்ந்தார் நீடுமிழலைக் குறும்பனார்.

(இ-ள்.) அஞ்சைக்களத்துநஞ்சுண்டவமுதைப்பரவியணைவுறுவார்=திருவஞ்சைக்களத்தில் ஆலாலத்தையமுதுசெய்தருளிய சிவபிரானைத்துதித்தடையும் நம்பியாரூரர்; செஞ்சொற்றமிழ்மாலைகண்மொழிய=மதுரமான சொற்களாலாகியபதிகங்களை அருளிச்செய்ய; தேவர்பெருமானருளாலே=சிவபிரான்திருவருளாலே; மஞ்சிற்றிகழும்வடகயிலைப்பொருப்பிலெய்த=மேகங்களால்விளங்கிய வடகைலைக்குச்செல்ல; வரும்வாழ்வு நெஞ்சிற்றெளிய=வருகின்றபெருவாழ்வானது தம்முடைய உள்ளத்தில்தெளியும்படி; இங்குணர்ந்தார்நீடுமிழலைக்குறும்பனார்=தாமிருக்கும் இவ்விடத்தே யோகப்பிரத்தியட்சத்தாலுணர்ந்தார் உயர்ந்த பெருமிழலைக்குறும்பநாயனார்.—எ-று. (அ)

மண்ணிற்றிகழுந் திருநாவ லூரில்வந்த வன்றொண்டர்
நண்ணற்கரிய திருக்கயிலை நாளையெய்த நான்பிரிந்து
கண்ணிற்கரிய மணிகழிய வாழ்வார்போல வாழேனென்
றெண்ணிச்சிவன்றா ளின்றேசென் றடைவன்யோகத் தாலென்பார்.

(இ-ள்.) மண்ணிற்றிகழுந்திருநாவலூரில்வந்தவன்றொண்டர்=அவர் நிலவுலகின்கண்விளங்கும் திருநாவலூரில் அவதரித்த நம்பியாரூரர்; நண்ணற்கரியதிருக்கயிலைநாளையெய்த=யாவரும் அடைதற்கரிய திருக்கைலாயத்தைநாளைக்கு அடைய; நான்பிரிந்து=அடியேன் அவரைப்பிரிந்து, கண்ணிற்கரியமணிகழியவாழ்வார்போல=கண்ணினுளிருக்கின்ற கருமணியானது நீங்கவாழ்கின்றவர்போல; வாழேனென்றெண்ணி=வாழமாட்டேனென்றுகருதி; சிவன்றாளின்றேசென்றடைவன்யோகத்தாலென்பார்=இன்றைக்கே சிவபிரானதுதிருவடிகளை யோகத்தாலடைவனென்னுங் கருத்துடையவராய்.

நாலுகரணங் களுமொன்றா நல்லவறிவு மேற்கொண்டு
காலும்பிரம நாடிவழிக் கருத்துச்செலுத்தக் கபாலநடு
வேலவேமுன் பயின்றநெறி யெடுத்தமறைமூ லந்திறப்ப
மூலமுதல்வர் திருப்பாத மடைவார்கயிலை முன்னடைந்தார்.

(இ-ள்.) நாலுகரணங்களுமொன்றா=மனம் முதலிய உட்கரணங்கள் நான்கும் இந்திரியவழிச் செல்லாமல் ஒன்றுதற்கேதுவாக; நல்லவறிவுமேற்கொண்டு=பிரத்தியாகாரத்தாலுதிக்கும் அறிவைமேற்படுத்தி; காலும்பிரமநாடிவழி=ஒளியை வீசுகின்ற சுழுனைநாடிவழியே; கருத்துச்செலுத்த=சித்தம் செல்லும்படி செய்யும் தாரணையால்; கபாலநடுவேலவேமுன்பயின்றநெறி=பிரமரந்திரநடுவிற் றங்கும்படி முன்பழகிய தாரணை மார்க்கத்தில்; எடுத்தமறைமூலந்திறப்ப=தாம் உச்சரிப்பாக எடுத்த பிரணவமானது பிரமரந்திர வாயிலைத்திறக்க; மூலமுதல்வர்திருப்பாதமடைவார்=அப்பிரணவ

த்துக்கு முதல்வராகிய சிவபிரானது திருவடிகளை யடையுங் கருத்துடையராய்; கயிலைமுன்னடைந்தார்=திருக்கயிலையை முன்னே அடைந்தார்.—எ-று. இவ்விரண்டுங் குளகம்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் கரணம் நான்கும் தமக்குப்பிரேரகமாகவிருக்கும் சுத்தவித்தை ஈஸ்வரன் சாதாக்கியம் விந்துவென்று பெயர்பெறும் அகாரமுதலிய நான்கனுள் ஒன்றனுளொன்றாய் அடங்குங்கால் கரணவியாபாரமற்றுச் சித்தவியாபாரமாத்திரமாய் நிற்றலின் நாலுகரணங்களுமொன்றா நல்லவறிவுமேற்கொண்டென்றும், பிரதானநாதம் மும்மண்டல உபாதியால் முச்சுடரின் ஒளி வடிவாயும் தன்னியல்பால் மின்கொடிப் பிழம்பாயுமிருத்தலின் காலும் பிரமநாடியென்றும் கூறினர். மறைமூலம்=பிரணவம். எடுத்தமறைமூல மென்றதனால் யுனுதம் முதலியமாத்திரைவடிவாய் உச்சரிக்கப்படும் பிரணவமென்றாயிற்று. திறப்ப என்றதனால் அப்பிரணவகலைகட்கதிட்டானமாயிருக்கும் இதயம், கண்டம், தாலு,புருவமத்தியம் முதலிய ஸ்தானங்களிலிருக்கும் கமலமுடிச்சுகள் திறந்தபின்பிரமரந்திரந்திறக்கவெனப் பொருள் கொள்க. (௧௦)

பயிலச்செறிந்த யோகத்தாற் பரவைகேள்வன் பாதமுறக்
கயிலைப்பொருப்ப ரடியடைந்த மிழலைக்குறும்பர் கழல்வணங்கி
மயிலைப்புறங்கொண் மென்சாயன் மகளிர்கிளவி யாழினெடுங்
குயிலைப்பொருவுங் காரைக்கா லம்மைபெருமை கூறுவாம்.

(இ-ள்.) பயிலச்செறிந்தயோகத்தால்=நாள்தோறும் பயின்றுவரத் தம்மை யடைந்தயோக சமஸ்காரத்தால்; பரவைகேள்வன்பாதமுற=நம்பியாரூரரது திருவடியைப்பொருந்தும்படி; கயிலைப் பொருப்பரடியடைந்த=திருக்கைலை நாதரது திருவடியடைந்த; மிழலைக்குறும்பர்கழல்வணங்கி=பெருமிழலைக்குறும்ப நாயனாரது திருவடிகளைவணங்கி; மயிலைப்புறங்கொண்மென்சாயன்மகளிர்கிளவி=மயிலையும் வெல்லுகின்றமிருதுவான நடையினையுடைய மகளிர்கள் மொழியானது; யாழினெடுங்குயிலைப்பொருவும்=யாழொலியையும் குயிலோசையையு மொத்திருக்கும்; காரைக்காலம்மைபெருமைகூறுவாம்=காரைக்காலில் அவதரித்த அம்மையாரது பெருமையைச் சொல்வாம்.—எ-று

பயிலச்செறிந்த யோகமென்றது ஈண்டு பிராகாமிய சித்தியை. அதாவது ஒருடம்புவிட்டோருடம்படைதல். (௧௧)

பெருமிழலைக்குறும்பநாயனார்புராணம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௬௫௪.

1. புனிதவதியார்விவாகம். 2. காரைக்காலம்மையார் சீதனநிதியில் கணவன்வியாபாரம் நடாத்தினது. 3. கணவனனுப்பின மாங்கனியி லிரண்டிலொன்றைச் சிவனடியார்க்களித்தது.

4. எஞ்சியகனியிலொன்றைக் கணவனுக்களிக்க உண்டு மற்றொன் றைக்கேட்க சிவனருளால் பெற்றளித்தது. 5. கணவ னிக்கனியினது சிறப்பும்வரவுமுணர்ந்து பிறிதொன்று தருவிக்ககேட்க புனிதவதியாரதையும் சிவனருளால் பெற்றது. 6. அக்கனியைத் தன்பாத்தாரத்தி லளித்தவுடன் மறைந்துவிட அச்சமுற்று மனைவியைவிட்டுப் பிறியக்கருதினது

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்புராணம்.

மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினி
லூனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி யோங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானன்மிசை யுலவுவளம் பெருகுதிருக் காரைக்கால்.

(இ-ள்.) மானமிகுதருமத்தின்வழிநின்று=அளவுபடாத அறநூல்கூறும் ஒழுக்கநெறியில் வழுவாமல் நின்று; வாய்மையினிலூனமில்சீர்ப்பெருவணிகர்=மெய்சொல்லுதலினாற் குற்றமற்ற சிறப்பினையுடைய பெரிய செட்டிகளது; குடிதுவன்றியோங்குபதி=குடிகள் நெருங்கியுள்ள ஊர் (யாதெனில்); கூனல்வளைதிரைசுமந்துகொண்டேக=வளைந்தசங்குகளை அலைகள் தாங்கிக்கொண்டு கரையில் செல்ல; மண்டுகழிக்கானன்மிசையுலவு=அச்சங்குகள் நெருங்கியகழிக்கரையின்மேல் உலாவுகின்ற; வளம்பெருகுதிருக்காரைக்கால்=வளம்மிக்க திருக்காரைக்கால்.—எ-று. (க)

வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்த னார்தவத்தா
லங்கவர்பாற் றிருமடந்தை யவதரித்தா ளெனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார்.

(இ-ள்.) வங்கமலிகடற்காரைக்காலின்கண்வாழ்=நாவாய்கள்மிக்க கடற்கரையின்கணுள்ள காரைக்காலில்வாழ்கின்ற; வணிகர்தங்கள்குலத்தலைவனார்=செட்டிகள் குலத்திற்கு முதல்வராகிய; தனதத்தனார்தவத்தால்=தனதத்தரென்பவருடைய தவத்தினால்; அங்கவர்பாற்றிருமடந்தையவதரித்தாளெனவந்து=அவ்வூரில் அவரிடத்தில் சீதேவியானவள் வந்துதித்தாளென்று சொல்லும்படி வந்து; பொங்கியபேரழகுமிக=பொலிவுமிக்க பேரழகானது விளங்கும்படி; புனிதவதியார்பிறந்தார்=புனிதவதியார் அவதாரஞ்செய்தார்.—எ-று. (உ)

வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபி
னணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காத றதும்பவரு மொழிபயின்றார்.

(இ-ள்.) வணிகர்பெருங்குலம்விளங்க=செட்டிகளுடைய பெரிய குலமானது விளக்கமடையும்படி; வந்துபிறந்தருளியபின்=வந்துதிருவவதாரஞ்செய்தருளியபின்பு; அணிகிளர்மெல்லடிதளர்வுற்று=அழகுவிளங்குகின்ற மிருதுவான அடி தளர்ந்து; அசையுநடைப்பருவத்தே=அசைந்து வைக்கும் தளர்நடைப்பருவத்தில்; பணியணிவார்கழற்கு=பாம்பை ஆபரணமாக அணிந்த சிவபிரானது திருவடிக்கு; அடிமைப்பழகிவரும்பாங்குபெற=தொண்டாதற்குரிய முறைமையைப் பழகிவருகின்ற தன்மையுண்டாதற்கேதுவாக; தணிவில்பெருமனக்காதறதும்பவருமொழிபயின்றார்=மேலானபெரியமனதிலே விருப்பானது ததும்ப வருகின்ற மொழியைப் பழகினார்.—எ-று.

மொழிபயின்றுஒன்றது ஈண்டு சிவபிரானிடத்துப் பொதுமையாயுதித்த அன்பின் விசேடத்தை. (ங)

பல்பெருநற் கிளையுவப்பப் பயில்பருவச் சிறப்பெல்லாஞ்
செல்வமிகுந் தாதையார் திருப்பெருகுஞ் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர்பா
லல்கியவன் புடனழகின் கொழுந்தெழுவ தெனவளர்வார்,

(இ-ள்.) பல்பெருநற்கிளையுவப்ப=பலபெருமையினையுடைய நல்லசுற்றத்தார் களிப்படைய; பயில்பருவச்சிறப்பெல்லாம்=வருகின்றபருவங்கள் தோறும் செய்யும் சிறப்புகளையெல்லாம்; செல்வமிகுந்தாதையார்=செல்வத்தான்மிக்க தனதத்தனென்னும் தந்தையார்; திருப்பெருகுஞ்செயல்புரிய=சீரோங்கும் வண்ணம் செய்ய; மல்குபெரும்பாராட்டின்வளர்கின்றார்=மிக்கபெருமை பாராட்டிவளர்க்க வளர்கின்றவர்; விடையவர்பாலல்கியவன்புடன்=சிவபிரானிடத்து குறைந்தடைந்த அன்புடன்; அழகின்கொழுந்தெழுவதெனவளர்வார்=அழகின் கொழுந்து வளர்வதுபோல் வளர்வாராயினர்.—எ-று.

அல்கியவன்பு=பற்றும்பொருளை யறத்துறந்து சிவபிரானிடத்துத் தாழ்ந்த இயல்போடுதிக்கு மன்பு. (ச)

வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
யண்டர்பிரான் திருவார்த்தை யணையவரு வனபயின்று
தொண்டர்வரிற் றொழுதுதா தியர்போற்றத் துணைமுலைகள்
கொண்டுநுசுப் பொதுங்குபதக் கொள்கையினிற் குறுகினார்.

(இ-ள்.) வண்டல்பயில்வனவெல்லாம்=வண்டலாட்டமருங்காற் பயிலும் மொழிகளெல்லாம்; வளர்மதியம்புனைந்தசடையண்டர்பிரான்=வளரும் இளம்பிறையைச் சூடிய சடைமுடியை யுடைய சிவபிரானது; திருவார்த்தையணையவருவனபயின்று=திருவார்த்தை பொருந்த வருவனவாகப் பயின்று; தொண்டர்வரிற்றொழுது=அடியார்கள் வந்தால் அவரைவணங்கி; தாதியர்போற்ற=செவிலித்தாயர்கள் துதிக்க; துணைமுலைகள்கொண்டுநுசுப்பொதுங்குபதக்கொள்கையினிற்குறுகினார்=இரண்டுதனங்களைத்தாங்கி இடையொசியும் பருவமுடையவராயினர்.—எ-று. (ரு)

நல்லவென வுறுப்புநூ லவருரைக்கு நலநிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினா
லில்லிகவாப் பருவத்தி லிவர்கண்மர பினுக்கேற்குந்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார்.

(இ-ள்.) நல்லவெனவுறுப்புநூலவருரைக்குநலநிரம்பி=அவயவங்கள்நல்ல இலக்கணமுடையன வென்று சாமுத்திரிக விலக்கணமறிந்தவர்கள் கூறும் அழகு நிறைந்து; மல்குபெருவனப்புமீக்கூரவருமாட்சியினால்=மிக்கபேரழகானது அதிகரிக்க வருஞ்சிறப்பினால்; இல்லிகவாப்பருவத்தில்=இல்லினின்றும் வெளியேபுறப்படாதபருவத்தில்; இவர்கண்மரபினுக்கேற்கும்=இந்தவணிகரது குலத்திற்கு ஒத்த; தொல்குலத்துவணிகர்=பழையகுடிப்பிறப்பினையுடையவணிகர்; மகட்பேசுதற்குத்தொடங்குவார்=அப்புதல்வியை விவாகம்பேசுதற்குத் தொடங்குவாராயினர்.—எ-று. (சூ)

நீடியசீர்க் கடனாகை நிதிபதியென் றுலகின்கட்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபிற் சேயிழையை மகட்பேச
மாடமலி காரைக்கால் வளநகரின் வரவிட்டார்.

(இ-ள்.) நீடியசீர்க்கடனாகைநிதிபதியென்று=மிக்கசிறப்பினையுடைய கடற்கரையின்கணுள்ள நாகபட்டினத்தில் நிதிபதியென்று; உலகின்கட்பாடுபெறுபுகழ்வணிகன்=உலகத்திலே பெருமைபெற்ற புகழையுடைய செட்டி; பயந்தகுலமைந்தனுக்கு=ஈன்றகுலத்திற் பிறந்த பரமதத்தனென்னும் புதல்வனுக்கு; தேடவருந்திருமரபிற்சேயிழையை=தாம் தேடியடைதற்கரிய உயர்ந்த மரபில் அவதரித்த புனிதவதியாரை; மகட்பேசமாடமலிகாரைக் கால்வளநகரின்வரவிட்டார்=மகட்கேட்கும்படி மாடங்கணிறைந்தகாரைக்காலென்னும் வளந்தங்கிய நகரத்தில் அனுப்பினர்.—எ-று. (எ)

வந்தமூ தறிவோர்கண் மணங்குறித்த மனைபுகுந்து
தந்தையாந் தனதத்தன் றனைநோக்கி நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு
முந்தைமர பினுக்கேற்கு முறைமைமணம் புரிகென்றார்.

(இ-ள்.) வந்தமூதறிவோர்கள்=மகட்பேசவந்த பேரறிவினையுடைய வணிகர்கள்; மணங்குறித்தமனைபுகுந்து=தாம்மணம்பேசுதற்குக்குறித்துவந்த தனதத்தனுடையமனையிலேபுகுந்து; தந்தையாந்தனதத்தன்றனைநோக்கி=அப்புதல்விக்குத் தந்தையாகிய அவனைப்பார்த்து; நீபயந்தபைந்தொடியை=நீபெற்றபுத்திரியை; நிதிபதிமைந்தன்பரமதத்தனுக்கு=நிதிபதியினுடைய புதல்வனாகிய பரமதத்தனென்பவனுக்கு; முந்தைமரபினுக்கேற்குமுறைமை=முதன்மையான நம்மரபினுக்குரிய விதிப்படி; மணம்புரிகென்றார்=மணஞ்செய்து கொடுவென்று கேட்டார்கள்.—எ-று. (அ)

மற்றவனு முறைமையினுன் மணமிசைந்து செலவிடச்சென்
றுற்றவர்க ளுரைகேட்ட நிதிபதியு முயர்சிறப்புப்
பெற்றனன்போ லுவந்துதனிப் பெருமகற்குத் திருமலியுஞ்
சுற்றமுடன் களிகூர்ந்து வதுவைவினைத் தொழில்பூண்டான்.

(இ-ள்.) மற்றவனுமுறைமையினுல்மணமிசைந்துசெலவிட=அத்தனதத்தனும் முறைப்படி மணஞ்செய்துகொடுத்தற்குடன்பட்டுவந்தவர்களையனுப்ப; சென்றுற்றவர்களுரைகேட்டநிதிபதியும்=மணம்பேசிவந்தவர்களுடைய மண இசைவைக் கேட்ட நிதிபதியென்பவனும்: உயர்சிறப்புப்பெற்றனன்போலுவந்து=மிக்க சிறப்பையடைந்தவன்போல மனமகிழ்ந்து; தனிப்பெருமகற்கு=ஒப்பற்ற பெரிய தன் புதல்வனுக்கு; திருமலியுஞ்சுற்றமுடன்களிகூர்ந்து=செல்வமிக்க உறவினரோடு மகிழ்ச்சி மிக்குடையனாய்; வதுவைவினைத்தொழில்பூண்டான்=மணஞ்செய்தலுக் குரிய செயன்முறைகளைச் செய்தான் —எ-று. (கூ)

மணமிசைந்த நாளோலை செலவிட்டு மங்கலநா
ளணையவது வைத்தொழில்க ளானவெலா மமைவித்தே
யிணரலங்கன் மைந்தனையு மணவணியி னெழில்விளக்கிப்
பணைமுரச மெழுந்தார்ப்பக் காரைக்காற் பதிபுகுந்தார்.

கணவன்றான் வரவிடுத்த கனியிரண்டுங் கைக்கொண்டு
மணமலியு மலர்க்கூந்தன் மாதரார் வைத்ததற்பின்
பணவரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்ட
ருணவின்மிகு வேட்கையினு லொருவர்மனை யுட்புகுந்தார்.

(இ-ள்.) கணவன்றான்வரவிடுத்த=தன்கணவன்கொடுத்தனுப்பிய; கனியிரண் டுங்கைக்கொண்டு=மாங்கனிகளிரண்டையும் கையிலெடுத்துக்கொண்டு; மணமலியு மலர்க்கூந்தன்மாதரார்=மணம்வீசும் மலர்களைமுடித்த கேசபாரத்தையுடைய புனித வதியார்; வைத்ததற்பின்=மனையில் வைத்தபின்பு; பணவரவம்புனைந்தருளும்பரமனார் திருத்தொண்டரொருவர்=படந்தங்கிய பாம்பையணிந்த சிவபிரானாரது அடியார் ஒரு வர்; உணவின்மிகுவேட்கையினால்=திருவமுதின்மிக்க விருப்பத்தால்; மனையுட்புகுந் தார்=அம்மனையிற்புகுந்தார்.—எ-று. (கஎ)

வேதங்கண் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு
நாதன்ற னடியாரைப் பசிதீர்ப்பே னெனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம்வைத்
தேதந்தீர் நல்விருந்தா வின்னடிசி லூட்டுவார்.

(இ-ள்.) வேதங்கண்மொழிந்தபிரான்=வேதங்களை அருளிச்செய்த சிவபிரா னது; மெய்த்தொண்டர்நிலைகண்டு=மெய்யடியார் திருவமுது விரும்பிவந்த நிலைமை யைக்கண்டு; நாதன்றனடியாரைப்பசிதீர்ப்பேனெனநண்ணி=இவ்வடியாரை நலியும் பசிநோயைத்தீர்ப்பேனென்று அவரையடைந்து; பாதங்கள்விளக்கநீர்முன்னளித்து= அவர் திருவடிகளை விளக்கும்படிக்கு நீரைமுன்னேகொடுத்து; பரிகலம்வைத்து=பரி கலந்திருத்தி; ஏதந்தீர்நல்விருந்தா=குற்றமற்றநல்ல விருந்தினராக எண்ணி; இன்னடி சிலூட்டுவார்=இனிய திருவமுதை ஊட்டுவாராயினர்.—எ-று. (கஅ)

கறியமுதங் குதவாதே திருவமுது கைகூட
வெறிமலர்மேற் றிருவனையார் விடையவன்ற னடியாரோ
பெறலரிய விருந்தானாற் பேறிதன்மே லில்லையெனு
மறிவினரா யவரமுது செய்வதனுக் காதரிப்பார்.

(இ-ள்.) கறியமுதங்குதவாதே=அந்த இடத்துக் கறியமுது பாகமாகாமல்; திரு வமுதுகைகூட=திருவமுது மாத்திரம் பாகமாயிருக்க; வெறிமலர்மேற்றிருவனையார் =வாசனைகமழும் தாமரைமலர்மேல் வீற்றிருக்கும் சிதேவியையொத்த புனிதவதியார்; விடையவன்றனடியாரோபெறலரியவிருந்தானால்=சிவபிரான் திருவடியாரோ கிடைத்த ற்கரிய விருந்தினரானால்; பேறிதன்மேலில்லையெனுமறிவினராய்=இதன்மேல் நமக்குப் பெரும்பேறு பிறிதொன்றில்லையென்னும் விவேகமுடையவராகி; அவரமுதுசெய்வ தனுக்காதரிப்பார்=அவ்வடியார் திருவமுது செய்வதற்காக உபசாரஞ் செய்வாராய்.

இல்லாளன் வைக்கவெனத் தம்பக்கன் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிக ளிரண்டினிலொன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினு
லல்லறீர்ப் பவரடியார் தமையமுது செய்வித்தார்.

(இ-ள்.) இல்லாளன்வைக்கவென=தங்கணவன் வைத்திருக்கவென்று கொடு க்க; தம்பக்கன்முன்னிருந்த=தம்மிடத்து முன்னேயிருந்த; நல்லநறுமாங்கனிகளிரண்

டினில்=நல்லமதுரமான மாங்கனிகளிரண்டில்; ஒன்றைக்கொண்டு=ஒன்றை எடுத்துக்கொண்டு; வல்விரைந்துவந்தணைந்துபடைத்து=அதிவிரைவாகவந்து அவர்பரிகலத்திலிட்டு; மனமகிழ்ச்சியினால்=மனக்களிப்பினால்; அல்லறீர்ப்பவரடியார்தமையமுதுசெய்வித்தார்=பிறவிநோயைத்தீர்த்தருளும் சிவபிரான் அடியாரை அமுதுசெய்வித்தார்.—எ-று.

இவ்விரண்டுங் குளகம். (௨0)

மூப்புறுமத் தளர்வாலு முதிர்ந்துமுடு கியவேட்கைத்
தீப்பசியி னிலையாலு மயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவையடிசின் மாங்கனியோ டினிதருந்திப்
பூப்பயின்மென் குழன்மடவார் செயலுவந்து போயினார்.

(இ-ள்.) மூப்புறுமத்தளர்வாலும்=மூப்பு மிகுதலாலுண்டாகிய தளர்ச்சியினாலும்; முதிர்ந்துமுடுகியவேட்கைத்தீப்பசியினிலையாலும்=மிகுந்து கிட்டிய வேட்கையோடு கூடிய கொடிய பசியின் நிலைமையினாலும்; அயர்ந்தணைந்ததிருத்தொண்டர்=வருத்தமுற்றுவந்த அத்திருவடியார்: வாய்ப்புறுமென்சுவையடிசில்=இனிமைதங்கிய மிருதுவான சுவையோடு கூடிய திருவமுதை; மாங்கனியோடினிதருந்தி=மாங்கனியோடு இனிதாக அமுதுசெய்து; பூப்பயின்மென்குழன்மடவார்=பூக்களைமுடித்தமிருதுவான கேசத்தையுடைய புனிதவதியாரது; செயலுவந்துபோயினார்=தொண்டின்நிலைமையை மகிழ்ந்துபோவாராயினார்.—எ-று. (௨௧)

மற்றவர்தாம் போயினபின் மனைப்பதியா கியவணிக
னுற்றபெரும் பகலின்க ணோங்கியபே ரில்லெய்திப்
பொற்புறமுன் னீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாருங் கடப்பாட்டி லூட்டுவார்.

(இ-ள்.) மற்றவர்தாம்போயினபின்=அவ்வடியார்தாம் செல்லுமிடநோக்கிச்சென்றபின்; மனைப்பதியாகியவணிகன்=அம்மனைக்கு முதல்வனாகிய பரமதத்தன்; உற்றபெரும்பகலின்கண்=வந்தநண்பகலில்; ஓங்கியபேரில்லெய்தி=உயர்ந்தபெரிய மாளிகையில்வந்து; பொற்புறமுன்னீராடிப்புகுந்து=அழகாகமுன்னே நீரில்முழுகிமனையிற்புகுந்து; அடிசில்புரிந்தயில=சோற்றைவிரும்பியுண்ண; கற்புடையமடவாரும்=கற்பினையுடைய புனிதவதியாரும்; கடப்பாட்டிலூட்டுவார்=முறைமையால் அமுதூட்டுவாராயினார்.—எ-று. (௨௨)

இன்னடிசில் கறிகளுட னெய்துமுறை யிட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்றான் மனையிடைமுன் வைப்பித்த
நன்மதுர மாங்கனியி லிருந்ததனை நறுங்கூந்த
லன்னமனை யார்தாமுன் கொடுவந்து கலத்தளித்தார்.

(இ-ள்.) இன்னடிசில்கறிகளுடன்=அவர் இனியசோற்றைக்கறிவர்க்கங்களோடு; எய்துமுறையிட்டதற்பின்=பொருந்திய முறைமையாக்ப்படைத்தபின்பு; மன்னியசீர்க்கணவன்=நிலைபெற்ற சிறப்பினையுடைய பரமதத்தன்; தான்மனையிடைமுன்வைப்பித்த=தான்முன்னே மனையில்கொடுத்துவைக்கும்படி செய்த; நன்மதுரமாங்கனியிலிருந்ததனை=நல்லமதுரமான மாங்கனியில் இருந்த ஒன்றை; நறுங்கூந்தலன்னமனையார்தாம்=நறுமணங்கமழுங் கூந்தலையுடைய அன்னத்தையொத்த புனிதவதியார்; முன்

கொண்டுவந்துகலத்தளித்தார்=முன்னே எடுத்துக்கொண்டுவந்து அவன் உண்ணும் கலத்திற் படைத்தார்.—எ-று. (உங)

மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனி
தனைநுகர்ந்த வினியசுவை யாராமைத் தார்வணிக
னினையதொரு பழமின்னு முளததனை யிடுகவென
வனையதுதாங் கொண்டுவர வணைவார்போ லங்ககன்றார்.

(இ-ள்.) மனைவியார்தாம்படைத்த=புனிதவதியார்படைத்த; மதுரமிகவாய்த்தகனிதனை=மதுரமிருத்துள்ள அம்மாங்கனியை; நுகர்ந்தவினியசுவையாராமை=புசித்தகாரணத்தாலுண்டாகிய இனியசுவையானது தனக்குத்தெவிட்டாமையால்; தார்வணிகன்=மாலையை அணிந்த அப்பரமதத்தன்; இனையதொருபழமின்னுமுளது=இத்தன்மைமதுரமுடைய ஓர்பழம் இன்னுமிருக்கின்றது; அதனையிடுகவென=அதனையும் படையென்றுசொல்ல; அனையதுதாங்கொண்டுவர=அம்மாங்கனியைத்தாம் எடுத்துக்கொண்டுவர; அணைவார்போலங்ககன்றார்=போகின்றவர்போல அவ்விடத்தினின்றும் நீங்கினார்.—எ-று. (உச)

அம்மருங்கு நின்றயர்வா ரருங்கனிக்கங் கென்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தா
டம்மனங்கொண் டுணர்தலுமே யவரருளாற் றாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று.

(இ-ள்.) அம்மருங்குநின்றயர்வார்=தாம் சென்றவிடத்தினின்று வருந்துகின்றவர்; அருங்கனிக்கங்கென்செய்வார்=அரியமாங்கனிக்கு அவ்விடத்து என்செய்வார்; மெய்ம்மறந்து நினைந்து=பரவசமாய் நினைத்து; உற்றவிடத்துதவும்விடையவர்தாள்=ஆபத்துற்றுழி உதவிசெய்யும் சிவபிரான்திருவடிகளை; தம்மனங்கொண்டுணர்தலும்=தம் மனதிலிருத்தித் தியானிக்கவும்; அவரருளாற்றாழ்குழலார்கைம்மருங்கு=அச்சிவபிரான் திருவருளினாலே தாழ்ந்தகேசத்தையுடைய புனிதவதியார் திருக்கரத்தில்; வந்திருந்ததிமதுரக்கனியொன்று=வந்திருந்தது அதிமதுரமான மாங்கனியொன்று.—எ-று.

மற்றோர்கனியின்மையின் அருங்கனிக்கென் செய்வாரென்றார். ஏ-அசை. (உரு)

மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திட லு மயின்றகனி
யுற்றசுவை யமுதினுமேற் படவுளதா யிடவிதுதான்
முற்றருமாங் கனியன்று மூவுலகிற் பெறற்கரிதாற்
பெற்றதுவே றெங்கென்று பெய்வளையார் தமைக்கேட்டான்.

(இ-ள்.) மற்றதனைக்கொடுவந்துமகிழ்ந்திடலும்=சிவபிரான் திருவருளால் தன் கரத்தில்வந்த அப்பழத்தைக்கொண்டுவந்து மகிழ்ச்சியோடுபடைக்கவும்; அயின்றகனியுற்றசுவை=அவன்புசித்த அக்கனியின் சுவையானது; அமுதினுமேற்படவுளதாயிட=தேவாமுதினும் அதிக மதுரமுள்ளதாயிருக்க; இதுதான்முற்றருமாங்கனியன்று=இது முன்னே எனக்குக்கொடுத்த பழமல்ல; மூவுலகிற்பெறற்கரிது=மூவுலகத்தினும் பெறுதற்கரியதாயிருக்கின்றது; பெற்றதுவேறெங்கென்று=வேறெங்கே இக்கனிபெற்றுக் கொண்டதென்று; பெய்வளையார்தமைக்கேட்டான்=புனிதவதியாரைக் கேட்டான்.—எ-று. ஆல்-அசை. (உசு)

அவ்வுரைகேட் டலுமடவா ரருளுடையா ரளித்தருளுஞ்
செவ்வியபே ரருள்விளம்புந் திறமன்றென் றுரைசெய்யார்
கைவருகற் புடைநெறியார் கணவனுரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார்.

(இ-ள்) அவ்வுரைகேட்டலுமடவார்=அவ்வார்த்தையைக் கேட்டபொழுதே புனிதவதியார்; அருளுடையாரளித்தருளும்=சிவபிரான் தம் அடியார்க்குப் பிரசாதிக்கும்; செவ்வியபேரருள்=செப்பமான திருவருளின் பெருமை; விளம்புந்திறமன்றென்று=பிறர்க்கு விளம்பும் பகுதியுடையதன்றென்று; உரைசெய்யார்=சொல்லாதவராய்; கைவருகற்புடைநெறியார்=கற்புமார்க்கம் கைவந்தவர்கள்; கணவனுரைகாவாமை=கணவன்சொல்லைக் காவாதிருத்தல்; மெய்வழியன்றென=அறக்கற்புடைமையன்றென்று; விளம்பல்விடமாட்டார்=கணவன் கேட்ட உரைக்கு உண்மை கூறுதலையுங் கைவிடாதவராய்; விதிர்ப்புறுவார்=அஞ்சிநிற்பார்.—எ-று.

சிவபிரான்திருவருளை யாவரும் அறியவிளம்புதல் குற்றமாதலின் உரைசெய்யாராயும் கற்புடையமகளிர் கணவன்கேள்விக்குப் பொய்விடைகூறுதல் கற்பன்மையின் விளம்புங்கருத்துடையராயும் அச்சமுற்றனரென்க. (உஎ)

செய்தபடி சொல்லுவதே கடனென்னுஞ் சீலத்தார்
மைதழையுங் கண்டர்சே வடிகண்மனத் துறவணங்கி
யெய்தவருங் கனியளித்தா ரியாரென்னுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழன்மடவார் புகுந்தபடி தனைமொழிந்தார்.

(இ-ள்.)செய்தபடிசொல்லுவதேகடனென்னுஞ்சீலத்தால்=பழத்தின் பொருட்டுத்தான் செய்தவண்ணஞ் சொல்லுவதே தகுதியென்றுகருதும் ஒழுக்கத்தினால்; மைதழையுங்கண்டர்சேவடிகள்=கருநிறம் விளங்குகின்ற மிடற்றினையுடைய சிவபிரான்திருவடிகளை; மனத்துறவணங்கி=மனதிற் பொருந்தும்படிவணங்கி; எய்தவருங்கனியளித்தாரியார்=பெறுதற்கரிய இப்பழத்தைக்கொடுத்தார் யார்; என்னுங்கணவனுக்கு=என்றுவினவும் தன் கணவனுக்கு; மொய்தருபூங்குழன்மடவார்=பூக்கள்நெருங்கிய கேசத்தையுடைய புனிதவதியார்; புகுந்தபடிதனைமொழிந்தார்=நடந்தபிரகாரத்தை வழுவின்றிச்சொன்னார்.—எ-று.

செய்தபடி சொல்லுவதே கடனென்றதனால் அடியார்க்குத் திருவமுதுசெய்விக்குங்காற் கறியமுதுதவாமையின் ஓர்கனியிட்டமுது செய்வித்ததும் மேல் அக்கனியிலொன்றைக்கேட்ட கணவனுக்குக் கனியுதவாமையின் சிவபிரானை வணங்கிக் கனிபெற்றுக்கொடுத்ததும் அடங்கிக்கிடந்தவாறு காண்க. (உஅ)

ஈசனரு ளெனக்கேட்ட வில்லிறைவ னதுதெளியான்
வாசமலர்த் திருவனையார் தமைநோக்கி மற்றிதுதான்
றேசுடைய சடைப்பெருமான் றிருவருளே லின்னமுமோ
ராசில்கனி யவனருளா லழைத்தளிப்பாயெனமொழிந்தான்.

(இ-ள்) ஈசனருளெனக்கேட்டவில்லிறைவன்=சிவபிரான் திருவருளென்றுகேள்வியுற்ற பரமதத்தன்; அதுதெளியான்=அவருரையைத்தெளியாதவனாய்; வாசமலர்த்திருவனையார்தமைநோக்கி=வாசனைகமழும் தாமரைமலரில் வீற்றிருக்கும் சீதேவியையொத்த புனிதவதியாரைப்பார்த்து; மற்றிதுதான்=இவ்வாறு கனி அழைப்பித்தது; தே

சடையசடைப்பெருமான்றிருவருளேல்=ஒளிவீசுகின்ற சடைமுடியையுடைய சிவபிரான் திருவருளாகில்; இன்னமுமோராசில்கனி=இன்னமும் ஒருகுற்றமற்ற மாங்கனியை; அவனருளாலழைத்தளிப்பாயெனமொழிந்தான்=அச்சிவபிரான் திருவருளாலே அழைத்துக்கொடுப்பாயென்றுசொன்னான்.—எ-று. (உ௯)

பாங்ககன்று மனைவியார் பணியணிவார் தமைப்பரவி
யீங்கிதளித் தருளீரோ லென்னுரைபொய் யாமென்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலு மற்றதனை
யாங்கவன்கைக் கொடுத்தலுமே யதிசயித்து வாங்கினான்.

(இ-ள்.) பாங்ககன்றுமனைவியார்=புனிதவதியார் அங்குநின்றும் நீங்கி; பணியணிவார்தமைப்பரவி=பாம்பை யாபரணமாகவணிந்த சிவபிரானைவணங்கி; ஈங்கிதளித்தருளீரோல்=இவ்விடத்து இம்மாங்கனியொன்று கொடுக்காதொழிந்தால்; என்னுரைபொய்யாமென்ன=அடியேன்சொல் பொய்யாமென்றுகூற; மாங்கனியொன்றருளால்வந்தெய்துதலும்=மாங்கனியொன்று பின்னும் திருவருளால் அவர் கரத்தில்வருதலும்; மற்றதனையாங்கவன்கைக்கொடுத்தலும்=அக்கனியை அப்பரமதத்தன் கையிற்கொடுக்க; அதிசயித்துவாங்கினான்=அவன் அதிசயமடைந்து வாங்கினான்.—எ-று. ஏ-அசை. (௩௦)

வேறு.

வணிகனுந் தன்கைப்புக்க மாங்கனி பின்னைக்காணான்
றணிவரும் பயமேற்கொள்ள வுள்ளமுந் தடுமாறெய்தி
யணிகுழ லவளைவேறோ ரணங்கெனக் கருதிநீங்குந்
துணிவுகொண் டெவர்க்குஞ்சொல்லான் றொடர்வின்றி யொழுகுநாளில்.

(இ-ள்.) வணிகனுந்தன்கைப்புக்கமாங்கனிபின்னைக்காணான்=அப்பரமதத்தனும் தன்கையில்வந்த மாங்கனியைப்பின்பு காணாதவனாய்; தணிவரும்பயமேற்கொள்ள=அடங்காத அச்சமானது அதிகப்பட; உள்ளமுந்தடுமாறெய்தி=மனமுங்கலங்கி; அணிகுழலவளைவேறோரணங்கெனக்கருதி=அலங்கரித்த கேசத்தையுடைய புனிதவதியாளை வேறோர் தெய்வமகளென்று நினைத்து; நீங்குந்துணிவுகொண்டு=அவளைவிட்டு நீங்கும் நிச்சயத்தை உள்ளத்தில்வைத்து; எவர்க்குஞ்சொல்லான்=எவர்க்கும் இச்செய்தியை எடுத்துச்சொல்லாதவனாய்; தொடர்வின்றியொழுகுநாளில்=மனதிற்பற்றின்றியிருக்கும்நாளில்.—எ-று.

தொடர்வின்றியொழுகுதல்:—அந்தரங்கத்தில் மனையாளென்னும் பாவனையொழித்துத் தெய்வமென்னும் பாவனைவைத்தொழுகுதல். (௩௧)

விடுவதே யெண்ணமாக மேவிய முயற்சிசெய்வான்
படுதிரைப் பரவைமீது படர்கலங் கொண்டுபோகி
நெடுநிதி கொணர்வேனென்ன நிரந்தபல் கிளைஞராகும்
வடுவில்சீர் வணிகமாக்கள் மரக்கலஞ் சமைப்பித்தார்கள்.

(இ-ள்.) விடுவதேயெண்ணமாக=புனிதவதியாளை விட்டுத்தான் நீங்குவதே மனக்கருத்தாக; மேவியமுயற்சிசெய்வான்=அதற்கேற்ற பிரயத்தனத்தைச்செய்கின்றபரமதத்தன்; படுதிரைப்பரவைமீது=மேன்மேலும் உண்டாகின்ற அலைகளையுடைய கடலினிடத்து; படர்கலங்கொண்டுபோகி=செல்லாநின்ற மரக்கலத்தைச்செலுத்திக்கொண்டுபோய்; நெடுநிதிகொணர்வேனென்ன=அதிகதிரவியத்தைச் சம்பாதித்து வருவே

னென்றுசொல்ல்; நிரந்தபல்கிளைஞராகும்=அவனைச்சூழ்ந்தபல சுற்றத்தாராகிய; வடுவி ல்சீர்வணிகமாக்கள்=குற்றமற்ற சிறப்பினையுடைய வணிகர்கள்; மரக்கலஞ்சமைப்பி த்தார்கள்=ஒரு மரக்கலத்தைச்செய்வித்தார்கள்.—எ-று. இவ்விரண்டுங்குளகம். (௬உ)

கலஞ்சமைத் ததற்குவேண்டுங் கம்மிய ருடனேசெல்லும்
புலங்களில் விரும்புபண்டம் பொருந்துவ நிரம்பவேற்றிச்
சலந்தரு கடவுட்போற்றித் தலைமையா நாய்கன்முனு
நலந்தரு நாளிலேறி நளிர்திரைக் கடன்மேற்போனான்.

(இ-ள்.) கலஞ்சமைத்து=ஒரு மரக்கலத்தைச்செய்து; அதற்குவேண்டுங்கம்மி யருடனே=அம்மரக்கலத்தை ஓட்டுதற்குரிய மாலுமிமுதலானவர்களுடனே; செல்லும் புலங்களில்விரும்புபண்டம்=தான்செல்லும் ஊரில்விரும்பிக்கொள்ளும் பண்டங்களாக; பொருந்துவநிரம்பவேற்றி=உரியவைகளை அம்மரக்கலம் நிறைய ஏற்றி; சலந்தருகடவு ட்போற்றி=கடற்கிறைவனாகியவருணனைத்துதித்து; தலைமையாநாய்கன்முனும்=முத ல்வனான பரமதத்தனும்; நலந்தருநாளிலேறி=நன்மைவிளைக்கும் முகூர்த்தத்திற்கப்ப லிலேறி; நளிர்திரைக்கடன்மேற்போனான்=குளிர்ந்த அலைகளையுடைய கடல்மேற் போ னான் —எ-று. (௬௩)

கடன்மிசை வங்கமோட்டிக் கருதிய தேயந்தன்னி
லடைவுறச் சென்றுசேர்ந்தங் களவில்பல் வளங்கண்முற்றி
யிடைசில நாட்கணீங்க மீண்டுமக் கலத்திலேறிப்
படர்புனற் கன்னிநாட்டோர் பட்டின மருங்குசார்ந்தான்.

(இ-ள்.) கடன்மிசைவங்கமோட்டி=கடலின்மேல் நாவாயைச்செலுத்தி; கரு தியதேயந்தன்னில்=தான் எண்ணிய ஊரில்; அடைவுறச்சென்றுசேர்ந்து=முறையாகப் போய்த்தங்கி; அங்களவில்பல்வளங்கண்முற்றி=அவ்விடத்தில் அளவில்லாத பலசம்பத் துக்களைச்சம்பாதித்து; இடைசிலநாட்கணீங்க=அதற்கிடையில் சிலநாள்கழிய; மீண்டு மக்கலத்திலேறி=திரும்பவும் அம்மரக்கலத்திலேறி; படர்புனற்கன்னிநாட்டு=பரம்பி யநீரையுடைய பாண்டிநாட்டிலுள்ள; ஓர்பட்டினமருங்குசார்ந்தான்=ஒரு பட்டினத் தின் கரையை அடைந்தான்.—எ-று. (௬௪)

அப்பதி தன்னிலேறி யலகில்பல் பொருள்களாக்கு
மொப்பின்மா நிதியமெல்லா மொருவழி பெருகவுய்த்து
மெய்ப்புகழ் விளங்குமவ்வூர் விரும்பவோர் வணிகன்பெற்ற
செப்பருங் கன்னிதன்னைத் திருமலி வதுவைசெய்தான்.

(இ-ள்.) அப்பதிதன்னிலேறி=அந்த நகரத்திற்சென்று; அலகில்பல்பொருள்க ளாக்கும்=அளவில்லாத பலபொருள்களைவிற்று அதனாலாக்கிய; ஒப்பின்மாநிதியமெல் லாம்=ஒப்பில்லாத மிகுந்த திரவியங்களையெல்லாம்; ஒருவழிபெருகவுய்த்து=வட்டி முதலிய ஓரோர்வழிகளில் விர்த்தியாகும்படிவிட்டு; மெய்ப்புகழ்விளங்குமவ்வூர்விரு ம்ப=மெய்ம்மையான புகழால்விளங்குகின்ற அந்த ஊரிலுள்ளார் யாவரும் விரும்பும்படி; ஓர்வணிகன்பெற்ற=ஒருவணிகன்பெற்றெடுத்த; செப்பருங்கன்னிதன்னை=சொல்லுத ற்கரிய சிறப்பினையுடைய கன்னிகையை; திருமலிவதுவைசெய்தான்=அழகுமிக்க வி வாகஞ்செய்துகொண்டான்.—எ-று. (௬௫)

பெறலருந் திருவினாளைப் பெருமணம் புணர்ந்துமுன்னை
யறலிய னறுமென்கூந்த லணங்கனு டிறத்திலற்றம்

புறமொரு வெளியுறாமற் பொதிந்தசிந் தனையினோடு
முறைமையின் வழாமைவைகி முகமலர்ந் தொழுகுநாளில்.

(இ-ள்.) பெறலருந்திருவினுளை=பெறுதற்கரிய திருமகளையொத்த அக்கன்னிகையை; பெருமணம்புணர்ந்து=பெருமையோடுமணஞ்செய்து; முன்னையறலியனறுமென்கூந்தல்=தான் முன்மணஞ்செய்த கருமணல்போலும் நறியமிருதுவான கூந்தலையுடைய; அணங்கனுடி றத்தில்=திருமகளையொத்த புனிதவதியாரிடத்தில்; அற்றம்புறமொருவெளியுறாமல்=தான்செய்த கபடத்தைப்புறம்பே ஒருவருக்கும் வெளிப்படுத்தாமல்; பொதிந்தசிந்தனையினோடு=மறைந்த எண்ணத்தோடு; முறைமையின்வழாமைவைகி=இல்லற நெறியில் தவறாமலிருந்து; முகமலர்ந்தொழுகுநாளில்=முகமலர்ச்சியோடொழுகும்நாளில்.—எ-று. (கூசு)

முருகலர்ச் சோலைமூதூ ரதின்முதல் வணிகரோடு
மிருநிதிக் கிழவனென்ன வெய்திய திருவின்மிக்குப்
பொருகடற் கலன்கள்போக்கும் புகழினன் மனைவிதன்பாற்
பெருகொளி விளக்குப்போலோர் பெண்கொடி யரிதிற்பெற்றான்.

(இ-ள்.) முருகலர்ச்சோலைமூதூ ரதில்=வாசனைதங்கிய மலர்களையுடைய சோலைசூழ்ந்த பழைய அவ்வூரிலிருக்கின்ற; முதல்வணிகரோடும்=முதன்மையான செட்டிகளோடு; இருநிதிக்கிழவனென்ன=குபேரனைப்போல; எய்தியதிருவின்மிக்கு=வாணிகத்தினுல்வாய்த்த செல்வத்தாலோங்கி; பொருகடற்கலன்கள்போக்கும்புகழினன்=அலைமோதுகின்ற கடலில் மரக்கலங்களைச்செலுத்தி வாணிபம்புரியும் புகழையுடைய பரமதத்தன்; மனைவிதன்பாற்பெருகொளிவிளக்குப்போல்=தன் புதிய மனையாளிடத்துமிக்க ஒளியைவீசுகின்ற விளக்குப்போல்; ஓர்பெண்கொடியரிதிற்பெற்றான்=ஓர் புதல்வியை அருமையாகப்பெற்றான்.—எ-று.

இவ்விரண்டுங் குளகம். (கூஎ)

மடமக டன்னைப்பெற்று மங்கலம் பேணித்தான்முன்
புடனுறை வஞ்சிநீத்த வொருபெரு மனைவியாரைத்
தொடர்வற நினைந்துதெய்வத் தொழுகுல மென்றேகொண்டு
கடனமைத் தவர்தநாமங் காதல்செய் மகவையிட்டான்.

(இ-ள்.) மடமகடன்னைப்பெற்று=மடப்பத்தையுடைய அப்புத்திரியைப் பெற்று; மங்கலம்பேணி=அதற்குச் செய்யும் மங்களங்களைச்செய்து; தான்முன்புடனுறைவஞ்சிநீத்த=தான்முன்னே அவருடனுறைதலுக்குப் பயந்துநீங்கிவந்த; ஒருபெருமனைவியாரை=ஒப்பற்ற மூத்தமனைவியாராகிய புனிதவதியாரை; தொடர்வறநினைந்து=தன்மனையாளென்னும் தொடர்ச்சி நீங்கும்படி நினைந்து; தெய்வத்தொழுகுலமென்றேகொண்டு=தெய்வமாக வணங்குங்குலத்தினரவரென்று கருதிக்கொண்டு; கடனமைத்து=நாமகரணத்துக்குச்செய்யும் சடங்குகளைச்செய்து; அவர்தநாமம்=அந்தப் புனிதவதியார் திருநாமத்தை; காதல்செய்மகவையிட்டான்=தான்காதலித்தொழுகும் புத்திரிக்குத்தரித்தான்.—எ-று. (கூஅ)

இந்நிலை யிவனிங்கெய்தி யிருந்தன னிப்பாணீடுங்
கன்னிமா மதில்சூழ்மாடக் காரைக்கால் வணிகனுன
தன்னிகர் கடந்தசெல்வத் தனதத்தன் மகளார்தாமு
மன்னிய கற்பினோடு மனையறம் புரிந்துவைக.

(இ-ள்.) இந்நிலையிவனிங்கெய்தியிருந்தனனிப்பால்—இவ்வாறு இப்பரமதத்தன் பாண்டிநாட்டின்கண் ஒருநாள் அடைந்திருந்தான் அதன்மேல்; நீடுங்கன்னிமாமதில்சூழ் மாடக்காரைக்கால்வணிகனுன—நீண்ட அழிவில்லாத பெரிய மதில்கள் சூழ்ந்த மாடங்களையுடைய காரைக்காலில் வாழும் வணிகனாகிய; தன்னிகர்கடந்தசெல்வத்தனதத்தன் மகளார்தாமும்—தனக்கு நிகரில்லாத செல்வத்தையுடைய தனதத்தனது புதல்வியாராகிய புனிதவதியாரும்; மன்னியகற்பினேடுமனையறம்புரிந்துவைக—நிலைபெற்ற கற்போடு இல்லறத்தை நடத்திக்கொண்டிருக்க.--எ-று. (ருகூ)

விளைவளம் பெருக்கவங்க மீதுபோம் பரமதத்தன்
வளர்புகழ்ப் பாண்டிநாட்டோர் மாநகர் தன்னின்மன்னி
யளவின்மா நிதியமாக்கி யமர்ந்தினி திருந்தானென்று
கிளரொளி மணிக்கொம்பன்னார் கிளைஞர்தாங் கேட்டாரன்றே.

(இ-ள்) விளைவளம்பெருக்க—திரண்டிருக்கின்ற செல்வத்தைப் பெருக்கும் பொருட்டு; வங்கமீதுபோம்பரமதத்தன்—கப்பலிற் செல்லும் பரமதத்தனென்பவன்; வளர்புகழ்ப்பாண்டிநாட்டு—மிக்கபுகழையுடைய பாண்டிநாட்டிலுள்ள; ஓர்மாநகர்தன்னின்மன்னி—ஒருபெரிய நகரத்திலிருந்து;அளவின்மாநிதியமாக்கி—எண்ணிறந்தமிக்க திரவியங்களைச் சம்பாதித்து; அமர்ந்தினிதிருந்தானென்று—விரும்பி அங்கு இனிதாக இருக்கின்றானென்று; கிளரொளிமணிக்கொம்பன்னார்—விளங்குகின்ற ஒளியையுடைய மணிக்கொம்புபோலும் புனிதவதியாரது; கிளைஞர்தாங்கேட்டார்—சுற்றத்தார் கேள்வியுற்றார்.—எ-று. அன்று-ஏ-அசை.

இவ்விரண்டுங் குளகம். (சுo)

அம்மொழி கேட்டபோதே யணங்கனார் சுற்றத்தாருந்
தம்முறு கிளைஞர்ப்போக்கி யவனிலை தாமுங்கேட்டு
மம்மர்கொண் மனத்தராகி மற்றவ னிருந்தபாங்கர்க்
கொம்மைவெம் முலையினாைக் கொண்டுபோய் விடுவதென்பார்.

(இ-ள்.) அம்மொழிகேட்டபோதே—அப்பரமதத்தன் பாண்டிநாடடைந்து கல்யாணஞ் செய்துகொண்டு புதல்வியைப் பெற்றிருக்கின்றானென்னும் வார்த்தைகேட்டவளவில்; அணங்கனார்சுற்றத்தாரும்—புனிதவதியாருடைய உறவினரும்; தம்முறு கிளைஞர்ப்போக்கி—தமக்குரிய உறவினரை அனுப்பி; அவனிலைதாமுங்கேட்டு—அந்தப்பரமதத்தனுடைய நிலைமையைத் தாமும் அறிந்துகொண்டு; மம்மர்கொண்மனத்தராகி—துயருறுகின்ற மனமுடையவராய்; மற்றவனிருந்தபாங்கர்—அப்பரமதத்தன் இருந்தவிடத்தில்; கொம்மைவெம்முலையினாை—பருத்த தனங்களையுடைய புனிதவதியாரை; கொண்டுபோய்விடுவதென்பார்—அழைத்துக் கொண்டுபோய் விடுவதென்று சொல்வாராயினர்.—எ-று. (சுக)

மாமணிச் சிவிகைதன்னின் மடநடை மயிலன்னாைத்
தாமாைத் தவிசில்வைகுந் தனித்திரு வென்னவேற்றிக்
காமரு கழனிவீழ்த்துக் காதல்செய் சுற்றத்தாருந்
தேமொழி யவருஞ்சூழச் சேணிடைக் கழிந்துசென்றார்.

(இ-ள்.) மாமணிச்சிவிகைதன்னில்—மாணிக்கங்கள்பதித்த யானத்தில்; மடநடைமயிலன்னாை—மிருதுவானநடையை யுடையமயில்போலும் புனிதவதியாரை; தாமாைத்தவிசில்வைகும்—தாமரையாதனத்தில் வீற்றிருக்கும்;தனித்திருவென்னவேற்றி—

ஒப்பற்ற ஸ்ரீதேவியைப்போல ஏறச்செய்து; காமருகழனிவீழ்த்து—அழகிய இடுதிரை யைவிடுத்து; காதல்செய்சுற்றத்தாரும்—விருப்பம்செய்கின்ற உறவினரும்; தேமொழிய வருஞ்சூழ—இனியமொழியையுடைய மகளிர்களுஞ் சூழ்ந்துவர; சேணிடைக்கழிந்து சென்றார்—நெடுந்தூரத்தில் நீங்கிப்போனார்கள்.—எ-று. (சஉ)

சிலபகல் கடந்துசென்று செந்தமிழ்த் திருநாடெய்தி
மலர்புகழ்ப் பரமதத்தன் மாநகர் மருங்குவந்து
குலமுதன் மனைவியாரைக் கொண்டுவந் தணைந்ததன்மை
தொலைவில்சீர்க் கணவனார்க்குச் சொல்லிமுன் செல்லவிட்டார்.

(இ-ள்.) சில்பகல்கடந்துசென்று—சிலநாள்கழிந்தபின்; செந்தமிழ்த்திருநாடெய்தி—பாண்டிநாட்டையடைந்து; மலர்புகழ்ப்பரமதத்தன்—பரந்தபுகழையுடைய பரமதத்தனிருக்கும்; மாநகர்மருங்குவந்து—பெரியநகரத்தில் வந்து; குலமுதன்மனைவியாரை—குலத்திற்கு முதன்மனைவியாயிருக்கின்ற புனிதவதியாரை; கொண்டுவந்தணைந்த தன்மை—இவ்விடத்தில் அழைத்துவந்த நிலைமையை; தொலைவில்சீர்க்கணவனார்க்கு—அழியாதசிறப்பினையுடைய பரமதத்தனுக்கு; சொல்லிமுன்செல்லவிட்டார்—முன்னே போய்த் தெரிவிக்கும்படி சொல்லியனுப்பினார்கள்.—எ-று. (சங)

வந்தவ ரணைந்தமாற்றங் கேட்டலும் வணிகன்றானுஞ்
சிந்தையி லச்சமெய்திச் செழுமணம் பின்புசெய்த
பைந்தொடி தனையுங்கொண்டு பயந்தபெண் மகவினோடு
முந்துறச் செல்வேனென்று மொய்குழ லவர்பால்வந்தான்.

(இ-ள்.) வந்தவரணைந்தமாற்றங்கேட்டலும்—தன் மனைவியார் வந்து சேர்ந்த செய்தியைக் கேட்டவுடனே; வணிகன்றானுஞ் சிந்தையிலச்சமெய்தி—பரமதத்தனும் தன்மனதில் அச்சமடைந்து; செழுமணம்பின்புசெய்த—செழுமையான விவாகத்தைப் பின்னேசெய்த; பைந்தொடிதனையுங்கொண்டு—மனைவியையுங்கூட அழைத்துக்கொண்டு; பயந்தபெண்மகவினோடும்—தான்பெற்ற பெண்குழந்தையோடும்; முந்துறச்செல்வேனென்று—முற்பட்டுப் போகின்றேனென்று; மொய்குழலவர்பால்வந்தான்—புனிதவதியாரிடத்தில்வந்தான்.—எ-று. (சச)

தானுமம் மனைவியோடுந் தளர்நடை மகவினோடு
மானிளம் பிணைபோனின்ற மனைவியா ரடியிற்றாழ்ந்தே
யானும தருளால்வாழ்வே னிவ்விளங் குழவிதானும்
பான்மையா லுமதுநாம மென்றுமுன் பணிந்துவீழ்ந்தான்.

(இ-ள்.) தானுமம்மனைவியோடும்—அப்பரமதத்தனும் புதிதாக மணஞ்செய்தமனையாளோடும்; தளர்நடைமகவினோடும்—தளர்ந்த நடையையுடைய பெண்குழந்தையோடும்; மானிளம்பிணைபோனின்ற—இளமைதங்கிய பெண்மான்போல அங்குநிற்கின்ற; மனைவியாரடியிற்றாழ்ந்து—புனிதவதியாருடைய திருவடிகளில் வணங்கி; யானுமதருளால்வாழ்வேன்—நான் உம்முடைய திருவருளினாலே இவ்விடத்தில்வாழ்ந்திருக்கின்றேன்; இவ்விளங்குழவிதானும்—இந்த இளமை தங்கிய பெண்மகவும்; பான்மையாலுமதுநாமமென்று—முறைமையால் உம்முடைய நாமம் இடப்பெற்றதென்று; முன்பணிந்துவீழ்ந்தான்—அவர்திருமுன்னே சாஷ்டாங்கமாக வணங்கினான்.—எ-று.

ஏ-அசை. (சரு)

30. 1. பரமதத்தன் [illegible] மதுரையில் மணம்புரிந்து வியாபாரியாகவிருந்தது. 2. புனிதவதியாரைச் சிவிகையிலெழுந்தருளுவித்து மதுரைக்குச்சென்றது 3. புனிதவதியார் வரவை பரமதத்தனுக்கு அறிவித்தது.

4. பரமதத்தன் தன் பெண்பிள்ளைகளுடன் புனிதவதியார் பாதத்தில் நமஸ்கரித்தது. 5. புனிதவதியார் கணவன்பொருட்டுத் தம்மிட அழகுபொருந்தி யதசைப்பொதியைநீக்கிப் பேய்வடிவம்பெற்றது. 6. பேய்வடிவமாகி அற்புதத்திருவந்தாதி முதலியன ஓதினது.

கணவர்தாம் வணங்கக்கண்ட காமர்பூங் கொடியனாரு
மணைவுறுஞ் சுற்றத்தார்பா லச்சமோ டொதுங்கிநிற்ப
வுணர்வுறு கிளைஞர்வெள்கி யுன்றிரு மனைவிதன்னை
மணமலி தாரினாய்நீ வணங்குவ தென்கொலென்றார்.

(இ-ள்.) கணவர்தாம்வணங்கக்கண்ட=நாயகன்தம்மை வணங்கக்கண்ட; காமர்பூங்கொடியனாரும்=அழகியபூங்கொடிபோலும் புனிதவதியாரும்; அணைவுறுஞ்சுற்றத்தார்பால்=தம்மையடைந்து நிற்கின்ற கிளைஞர்களிடத்து; அச்சமோடொதுங்கிநிற்ப=பயத்தோடு ஓரிடத்தில் ஒதுங்கிநிற்க; உணர்வுறுகிளைஞர்வெள்கி=அவர்களில் உணர்வுமிக்க சுற்றத்தார்கள் இவன் செய்கைக்கு வெட்கமடைந்து; உன்றிருமனைவிதன்னை=உன்னுடைய திருமனையாளை; மணமலிதாரினாய்=வாசனைமிக்க மாலையை யணிந்த பரமதத்தனே; நீவணங்குவதென்கொலென்றார்=நீவணங்கவேண்டியதென்னகாரணமென்றுகேட்டார்கள்.—எ-று. (௬௬)

மற்றவர் தம்மைநோக்கி மானிட மிவர்தாமல்லர்
நற்பெருந் தெய்வமாத னானறிந் தகன்றபின்பு
பெற்றவிம் மகவுதன்னைப் பேரிட்டே னாதலாலே
பொற்பதம் பணிந்தேனீரும் போற்றுதல் செய்மினென்றான்.

(இ-ள்.) மற்றவர்தம்மைநோக்கி=அவ்வாறுகேட்ட சுற்றத்தாரைப் பரமதத்தன் பார்த்து; மானிடமிவர்தாமல்லர்=இவர் மனிதப்பிறப்பிற்குரியரல்லர்; நற்பெருந்தெய்வமாதல்=நல்ல பெருமைதங்கிய தெய்வப்பிறப்பாயிருத்தலை; நானறிந்தகன்றபின்பு=நான்தெரிந்து அவரை நீங்கியபின்பு; பெற்றவிம்மகவுதன்னை=நான் பெற்ற இப்பெண்குழந்தையை; பேரிட்டேனாதலாலே=அவர் திருநாமமிட்டழைத்தேனாகையாலே; பொற்பதம்பணிந்தேன்=இவருடைய அழகிய திருவடிகளை வணங்கினேன்; நீரும்போற்றுதல்செய்மினென்றான்=நீங்களும் அவர் திருவடிகளை வணங்குங்களென்றுசொன்னான்.

என்றபின் சுற்றத்தாரு மிதுவென்கொ லென்றுநின்றார்
மன்றலங் குழலினாரும் வணிகன்வாய் மாற்றங்கேளாக்
கொன்றைவார் சடையினார்தங் குரைகழல் போற்றிச்சிந்தை
யொன்றிய நோக்கின்மிக்க வுணர்வுகொண் டுரைசெய்கின்றார்.

(இ-ள்.) என்றபின்சுற்றத்தாரும்=என்று அப்பரமதத்தன் சொன்னபின்பு உறவினரும்; இதுவென்கொலென்றுநின்றார்=இது என்ன ஆச்சரியமென்று நின்றார்கள்; மன்றலங்குழலினாரும்=வாசனைகமழும் கேசத்தையுடைய புனிதவதியாரும்; வணிகன்வாய்மாற்றங்கேளா=பரமதத்தனுடைய வாயிற்பிறந்த சொல்லைக்கேட்டு; கொன்றைவார்சடையினார்தம்=கொன்றைமலரையணிந்த நீண்ட சடையையுடைய சிவபிரானது; குரைகழல்போற்றி=ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளைவணங்கி; சிந்தையொன்றியநோக்கின்=சித்தமொருப்பட்ட திருவுள்ளக்குறிப்போடு; மிக்கவுணர்வுகொண்டுரைசெய்கின்றார்=மேம்பட்ட உணர்வுடையவராய்ச் சொல்லத் தொடங்கினார். ()

ஈங்கிவன் குறித்தகொள்கை யிதுவினி யிவனுக்காகத்
தாங்கிய வனப்புநின்ற தசைப்பொதி கழித்திங்குன்பா
லாங்குநின் றார்கள்போற்றும் பேய்வடி வடியேனுக்குப்
பாங்குற வேண்டுமென்று பரமர்தாள் பரவிநின்றார்.

(இ-ள்.) ஈங்கிவன்குறித்தகொள்கையிது=அவர் இப்பரமதத்தன் மனதிற்கொண்டநிச்சயம் இவ்வாறாயிருந்தது; இனியிவனுக்காகத்தாங்கிய=அதனால் இனிமேல் இவன்பொருட்டுச்சுமந்த; வனப்புநின்றதசைப்பொதிகழித்து=அழகுநிற்றற்கிடமாகிய ஊன்பொதியை நீக்கி, இங்குன்பாலாங்குநின்றார்கள்=இவ்விடத்தில் அக்கயிலைக்கண் உம்மிடத்துநின்ற ஏனையகணங்கள்; போற்றும்பேய்வடிவு=வணங்குதற்குரிய பேய்க்கணங்களின் வடிவம்; அடியேனுக்குப்பாங்குறவேண்டுமென்று=அடியேனுக்கு முறைமையாகப்பொருந்தும்படி அருளவேண்டுமென்று; பரமர்தாள்பரவிநின்றார்=சிவபிரான்திருவடிகளை வணங்கிநின்றார்.—எ-று. (௪௯)

ஆனவப் பொழுதுமன் று ளாடுவா ரருளினாலே
மேனெறி யுணர்வுகூர வேண்டிற்றே பெறுவார்மெய்யி
லூனடை வனப்பையெல்லா முதறியெற் புடம்பேயாக
வானமு மண்ணுமெல்லாம் வணங்குபேய் வடிவமானார்.

(இ-ள்.) ஆனவப்பொழுது=அவ்வாறு வேண்டுதல் செய்யும்பொழுது; மன்றுளாடுவாரருளினாலே=கனகசபையில் ஆனந்தநிருத்தஞ்செய்யும் சிவபிரான் திருவருளினாலே; மேனெறியுணர்வுகூர=வீடடையும் நெறியாகிய உணர்ச்சிமிக; வேண்டிற்றே பெறுவார்=தாம் வேண்டியவண்ணம் பெறுகின்ற கருத்துடைய அப்புனிதவதியார்; மெய்யிலூனடைவனப்பையெல்லாமுதறி=தம் திருமேனியில் தசையாலடைந்த அழகையெல்லாம் உதறி; எற்புடம்பேயாக=என்புடம்பாக; வானமுமண்ணுமெல்லாம்=விண்ணுலகமும் மண்ணுலகமுமாகிய எல்லா உலகங்களும்; வணங்கும்=வணங்கத்தக்க; பேய்வடிவமானார்=பேய்வடிவமடைந்தார்.—எ-று. (௫௰)

மலர்மழை பொழிந்ததெங்கும் வானதுந் துபியினாத
முலகெலா நிறைந்துவிம்ம வும்பரு முனிவர்தாமுங்
குலவினர் கணங்களெல்லாங் குணலையிட் டனமுன்னின்ற
தொலைவில்பல் சுற்றத்தாருந் தொழுதஞ்சி யகன் றுபோனார்.

(இ-ள்.) மலர்மழைபொழிந்ததெங்கும்=எவ்விடத்தும் மலர்மாரிபொழிந்தது; வானதுந்துபியினாதம்=தேவதுந்துபியின் நாதமானது; உலகெலாநிறைந்துவிம்ம=உலகமுழுதும் பரம்பியொலிக்க; உம்பருமுனிவர்தாமுங்குலவினர்=தேவர்களும் முனிவர்களும் கொண்டாடினார்கள்; கணங்களெல்லாங்குணலையிட்டன=பைசாசகணங்களெல்லாம் வீராவேசத்தாற் கொக்கரித்தன; முன்னின்றதொலைவில்பல்சுற்றத்தாரும்=அவர் திருமுன்னே நின்ற எண்ணிறந்தபல உறவினர்களும்; தொழுதஞ்சியகன்றுபோனார்=வணங்கிப்பயந்து நீங்கிப்போனார்கள்.—எ-று. (௫௧)

உற்பவித் தெழுந்தஞானத் தொருமையி னுமைகோன் றன்னை
யற்புதத் திருவந்தாதி யப்பொழு தருளிச்செய்வார்
பொற்புடைச் செய்யபாதப் புண்டரீ கங்கள்போற்று
நற்கணத் தினிலொன்றானே னென்று நயந்துபாடி.

(இ-ள்.) உற்பவித்தெழுந்தஞானத்தொருமையின்=அவர்தம்முள் உதித்தெழுந்த அருண்ஞானத்தின் ஒருமைப்பாட்டால்; உமைகோன்றன்னை=உமாதேவிக்கு நாயகராகிய சிவபிரானுக்கு; அற்புதத்திருவந்தாதியப்பொழுதருளிச்செய்வார்=அற்புதத்திருவந்தாதியை அப்பொழுதே அருளிச்செய்வாராய்; பொற்புடைச்செய்யபாதப்புண்டரீகங்கள்போற்றும்=அழகமைந்த சிவந்த பாதமாகிய தாமரைமலர்களைத்துதிக்கும்; நற்கண

த்தினிலொன்றானேனென்று—நல்லகணங்களுள் நான் ஒன்றாய்விட்டனனென்று; நய ந்துபாடி—விரும்பிப்பாடி.—எ-று. (௩௨)

அற்புதத் திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

உரையினு லிம்மாலை யந்தாதி வெண்பா
கரைவினாற் காரைக்காற் பேய்ச்சொற்—பரவுவா
ராராத வன்பினோ டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து.

திருச்சிற்றம்பலம்.

ஆய்ந்தசீ ரிரட்டைமாலை யந்தாதி யெடுத்துப்பாடி.
யேய்ந்தபே ருணர்வுபொங்க வெயிலொரு மூன்றுமுன்னாட்
காய்ந்தவ ரிருந்தவெள்ளிக் கைலைமால் வரையைநண்ண
வாய்ந்தபே ரருண்முன்கூர வழிப்படும் வழியால்வந்தார்.

(இ-ள்.) ஆய்ந்தசீரிரட்டைமாலையந்தாதியெடுத்துப்பாடி—தெளிவான சிறப்பமைந்த திருவிரட்டைமணிமாலையை அந்தாதியாக எடுத்துப்பாடி; ஏய்ந்தபேருணர்வு பொங்க—தம்மிடத்துப்பொருந்திய பேரறிவானது மேம்பட; எயிலொருமூன்றுமுன்னாட்காய்ந்தவரிருந்த—ஒருமூன்றுமதிலையும் முன்னாளிலெரித்த சிவபிரான் வீற்றிருந்தருளும்; வெள்ளிக்கைலைமால்வரையைநண்ண—திருக்கைலாயமலையை அடைய; வாய்ந்த பேரருண்முன்கூர—தமக்குக்கிடைத்த பெரியதிருவருளானது முற்பட்டுநடத்த; வழிப்படும்வழியால்வந்தார்—அத்திருவருள் வழித்தாயிருக்கும் முறைமையினு லொழுகிவந்தார்.—எ-று. இவ்விரண்டுங் குளகம். (௩௩)

திரு இரட்டைமணிமாலை.

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

கிளர்ந்துந்துவெந்துயர் வந்தடும்போதஞ்சி நெஞ்சமென்பாய்
தளர்ந்திங்கிருந்த றவிர்திகண்டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்துகங்கையும் வானத்திடைவளர் கோட்டுவெள்ளை
யிளந்திங்களுமெருக் கும்மிருக்குஞ்சென்னி யீசனையே.

வெண்பா.

உத்தமராய் வாழ்வா ருலந்தக்கா லுற்றார்கள்
செத்த மரமடுக்கித் தியாமு—னுத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்றிறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து.

திருச்சிற்றம்பலம்.

கண்டவர் வியப்புற்றஞ்சிக் கையகன் றோடுவார்கள்
கொண்டதோர் வேடத்தன்மை யுள்ளவா கூறக்கேட்டே
யண்டர்நா யகனென்னை யறிவரே லறியாவாய்மை
யெண்டிசை மாக்களுக்கியா னெவ்வுரு வாயெனென்பார்.

(இ-ள்) கண்டவர்வியப்புற்றஞ்சி=பார்த்தவர்கள் அதிசயித்து அச்சமடைந்து; கையகன்றோடுவார்கள்=அவரைவிட்டுச் செல்வார்களாய்; கொண்டதோர்வேடத்தன்மை=தாமடைந்த அவ்வேடத்தினது நிலைமையை; உள்ளவாகூறக்கேட்டு=உள்ளபடி அவர்கள் கூற அப்புனிதவதியார்கேட்டு; அண்டர்நாயகனென்னையறிவரேல்=தேவர்நாயகராகிய சிவபிரான் என்னைத்தன் அடிமையென்று அறிவாராகில்; அறியாவாய்மையெண்டிசைமாக்களுக்கு=இவ்வடிமைத்தன்மையின் நிலைமையறியாத எட்டுத்திக்கிலுள்ள மனிதர்களுக்கு; யானெவ்வுருவாயெனென்பார்=யான் எவ்வுருவடைந்தும் என்னபிரயோசனமென்று சொல்வார்.—எ-று. ஏ-அசை.

அடிமைத்தன்மையின் நிலைமையுணர்ந்தார்க்கு எவ்வுருவாயினும் பெரிதென்னுங் கொள்கையுண்டாம். அஃதறியார்க்கியான் தேவவுருவாயினும் பேயுருவாயினும் ஒரு பயனுமின்றாதலின் அவர் அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் ஒருபொருளாகக் கருதோமென்னுங் கருத்துடையராய் அறியாவாய்மைமாக்களுக்கு யானெவ்வுருவாயென் என்றார்.

வடதிசைத் தேசமெல்லா மனத்தினுங் கடிதுசென்று
தொடையவி ழிதழிமாலைச் சூலபா ணியினார்மேவும்
படரொளிக் கைலைவெற்பின் பாங்கணைந் தாங்குக்காலி
னடையினைத் தவிர்ந்துபார்மேற் றலையினா னடந்துசென்றார்.

(இ-ள்.) வடதிசைத்தேசமெல்லாம்=வடதிசைக்கணுள்ள கன்னடம் முதலிய தேசங்களையெல்லாம்; மனத்தினுங்கடிதுசென்று=மனவேகத்தினும் வேகமாக நடந்து; தொடையவிழிதழிமாலைச்சூலபாணியினார்மேவும்=கொத்தாக விரிந்த கொன்றைமாலையைத்தரித்த சிவபிரான் வீற்றிருந்தருளும்; படரொளிக்கைலைவெற்பின் பாங்கணைந்து=பரம்பிய ஒளியையுடைய கைலைமலையினருகிற்போய்; ஆங்குக்காலினடையினைத்தவிர்ந்து=அவ்விடத்தில் காலால் நடத்தலை நீங்கி; பார்மேற்றலையினானடந்துசென்றார்=பூமியின்மேல் தலையால் நடந்துபோனார்.—எ-று. (௫௫)

தலையினா னடந்துசென்று சங்கர னிருந்தவெள்ளி
மலையின்மே லேறும்போது மகிழ்ச்சியா லன்புபொங்கக்
கலையிளந் திங்கட்கண்ணிக் கண்ணுத லொருபாகத்துச்
சிலைநுத லிமயவல்லி திருக்கணோக் குற்றதன்றே.

(இ-ள்) தலையினானடந்துசென்று=தலையால்நடந்துபோய்; சங்கரனிருந்தவெள்ளிமலையின்மேலேறும்போது=சிவபிரான்வீற்றிருந்தருளும் திருக்கைலைமலையில் ஏறும்பொழுது; மகிழ்ச்சியாலன்புபொங்க=திருவுள்ளக்களிப்பாற் கருணையானது அம்மையாரிடத்துண்டாகும்படி; கலையிளந்திங்கட்கண்ணிக்கண்ணுதல்=இளமையான சந்திரனது ஓர்கலையாகிய மாலையையணிந்த சிவபிரானுடைய; ஒருபாகத்துச்சிலைநுதலிமயவல்லி=ஒரு கூற்றிலிருக்கும் வில்லைப்போன்ற நெற்றியையுடைய பார்வதியாரது; திருக்கணோக்குற்றது=திருக்கண்ணோக்கமுண்டாயிற்று.—எ-று. அன்று-ஏ-அசை. (௫௬)

அம்பிகை திருவுள்ளத்தி னதிசயித் தருளித்தாழ்ந்து
தம்பெரு மானைநோக்கித் தலையினா னடந்திங்கேறு



காரைக்காலம்மையார் தலையால் ஸ்ரீ கைலையடைந்து இனிப்பிறவாமை முதலியவரம்பெற்றது

மெம்பெரு மானேரெற்பின் யாக்கையன் பெண்ணேயென்ன
நம்பெரு மாட்டிக்கங்கு நாயக னருளிச்செய்வான்.

(இ-ள்.) அம்பிகைதிருவுள்ளத்தி னதிசயித்தருளி=பார்வதியார்தம் திருவுள்ளத்திலேவியப்படைந்து; தாழ்ந்துதம்பெருமானைநோக்கி=வணங்கித் தமது பிரானைப் பார்த்து; எம்பெருமான்=எம்பெருமானே; தலையினனடந்திங்கேறும்=தலையினாலே நடந்து இங்கே ஏறுகின்ற; ஓரெற்பின்யாக்கையன்பெண்ணேயென்ன=ஓர் எற்புடம்புடையபைசாசத்தின் அன்பு என்னவென்று வினவ; நம்பெருமாட்டிக்கங்கு=நமது பெருமாட்டியாகிய பார்வதிதேவிக்கு அவ்விடத்தில்; நாயகனருளிச்செய்வான்=சிவபிரான் அருளிச்செய்வாராயினர்.—எ-று. (௩எ)

வருமிவ ணம்மைப்பேணு மம்மைகா ணுமையேமற்றிப்
பெருமைசேர் வடிவும்வேண்டிப் பெற்றன ளென்றுபின்னை
யருகுவந் தடையநோக்கி யம்மையே யென்னுஞ்செம்மை
யொருமொழி யுலகமெல்லா முய்யவே யருளிச்செய்தார்.

(இ-ள்.) வருமிவணம்மைப்பேணு மம்மைகாணுமையே=உமையே தலையால் நடந்துவருகின்ற இவள் நம்மைவழிபடும் புனிதவதியம்மையார்; மற்றிப்பெருமைசேர்வடிவும்=இவ்வாறான இந்தப்பெருமைதங்கிய உருவத்தையும்; வேண்டிப்பெற்றனளென்று=தான்விரும்பி என்னிடத்துப் பெற்றுக்கொண்டாளென்று அருளிச்செய்து; பின்னையருகுவந்தடையநோக்கி=பின்பு அவ்வம்மையார் தம்பக்கலில்வந் தடைந்தவுடன் அவரைப்பார்த்து; அம்மையேயென்னுஞ்செம்மையொருமொழி=அம்மையேயென்றழைக்கும் ஒருசெம்மையாகிய திருவாக்கை; உலகமெல்லாமுய்யவேயருளிச்செய்தார்=உலகங்களெல்லாம் ஈடேறும்படி யருளிச்செய்தார்.—எ-று. (௩அ)

அங்கண னம்மையேயென் றருள்செய வப்பாவென்று
பங்கயச் செம்பொற்பாதம் பணிந்துவீழ்ந் தெழுந்தார்தம்மைச்
சங்கவெண் குழையினருந் தாமெதிர் நோக்கிநம்பா
லிங்குவேண் டுவதென்னென்ன விறைஞ்சிநின் றியம்புகின்றார்.

(இ-ள்.) அங்கணனம்மையேயென்றருள்செய=சிவபிரான் அம்மையே யென்றழைத்தருள; அப்பாவென்றுபங்கயச்செம்பொற்பாதம்=அப்பனேயென்று தாமரைமலர் போலும் திருவடிகளில்; பணிந்துவீழ்ந்தெழுந்தார்தம்மை=வணங்கி விழுந்தெழுந்த அம்மையாரை; சங்கவெண்குழையினருந்தாமெதிர்நோக்கி=சங்கத்தாலமைத்த வெள்ளிய குண்டலத்தையுடைய சிவபிரானும் தாம் அவரை எதிரேபார்த்து; நம்பாலிங்குவேண்டுவதென்னென்ன=நம்பக்கல் இக்கைலையில் வேண்டிவந்தது யாதென்றருள்செய்ய; இறைஞ்சிநின்றியம்புகின்றார்=வணங்கிக்கொண்டு சொல்லத்தொடங்கினர்.-எ-று.

இறவாத வின்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டுமீண்டும் பிறப்புண்டே லும்மையென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
யறவாநீ யாடும்போதுன் னடியின்கீ ழிருக்கவென்றார்.

(இ-ள்.) இறவாதவின்பவன்புவேண்டி=அழியாத இன்பத்தை விளைக்கும் பேரன்பைக்கேட்டு; பின்வேண்டுகின்றார்=பின்னும் பிரார்த்திக்கின்றார்; பிறவாமைவேண்டும்=அவ்வன்புபெற்றால் நிலவுலகிற் பிறவாதிருத்தல் வேண்டும்; மீண்டும்பிறப்புண்டேல்=வினையின்வசத்தால் மீண்டும் உலகத்திற்பிறத்தற்கேது விருந்தால்; உன்னை

யென்றுமறவாமைவேண்டும்—தேவரீரை எப்பொழுதும் தியானஞ்செய்யவேண்டும்; இன்னும்—இன்னும் ஒருவரம்; அறவாநீயாடும்போது—புண்ணிய ரூபியே தேவரீர் ஆனந்தநிருத்தஞ்செய்யுங்கால்; நான்மகிழ்ந்துபாடி—அடியேன் மகிழ்ச்சியோடும் பாடி; உன்னடியின்கீழிருக்கவேண்டுமென்றார்—தேவரீர் திருவடிகீழலிலிருக்கவேண்டுமென்றார்.—எ-று. (௬௦)

கூடுமா றருள்கொடுத்துக் குலவுதென் றிசையினின்று
நீடுவாழ் பழனமூதூர் நிலவிய வாலங்காட்டி
லாடுமா நடமுநீகண் டானந்தஞ் சேர்ந்தெப்போதும்
பாடுவாய் நம்மையென்றான் பரவுவார் பற்றாய்நின்றான்.

(இ-ள்.) கூடுமாறருள்கொடுத்து—அவர்கேட்ட வரங்கள் பொருந்தும்படி கிருபைசெய்து; குலவுதென்றிசையினின்று—விளங்குகின்ற தெற்குத்திக்கில் நிலைபெற்று; நீடுவாழ்பழனமூதூர்—மிக்குவாழ்கின்ற வயல்சூழ்ந்த பழைய ஊர்கள்; நிலவியவாலங்காட்டில்—விளங்கிய பழயனூர்த்திருவாலங்காட்டில்; ஆடுமாநடமுநீகண்டு—நாம் ஆடியருளும் ஊர்த்த தாண்டவத்தையும் நீ தரிசித்து; ஆனந்தஞ்சேர்ந்து—ஆனந்தமடைந்து; எப்போதும்பாடுவாய்நம்மையென்றான்—நம்மை எப்பொழுதும் பாடிக்கொண்டிருவென்றருளிச்செய்தார்; பரவுவார்பற்றாய்நின்றான்—துதிக்கும் அடியார்களுக்குத் துணையாயிருக்கின்ற சிவபிரான்.—எ-று. (௬௧)

அப்பரி சருளப்பெற்ற வம்மையுஞ் செம்மைவேத
மெய்ப்பொரு ளானார்தம்மை விடைகொண்டு வணங்கிப்போந்து
செப்பரும் பெருமையன்பாற் றிகழ்திரு வாலங்காடா
நற்பதி தலையினாலே நடந்துபுக் கடைந்தாரன்றே.

(இ-ள்) அப்பரிசருளப்பெற்றவம்மையும்—அவ்வாறு சிவபிரான் அருள்செய்யப்பெற்ற காரைக்காலம்மையாரும்; செம்மைவேதமெய்ப்பொருளானார்தம்மை—செப்பமானவேதத்தின் உண்மைப்பொருளாயுள்ள சிவபிரானை; வணங்கிவிடைகொண்டுபோந்து—வணங்கி விடைபெற்றுக்கொண்டு மீண்டுவந்து; செப்பரும்பெருமையன்பால்—சொல்லுதற்கரிய பெருமையோடுகூடிய அன்பினால்; திகழ்திருவாலங்காடாநற்பதி—விளங்குகின்ற திருவாலங்காடென்னும் நல்ல திருப்பதியை; தலையினாலே நடந்துபுக்கடைந்தார்—தலையினாலே நடந்துசென்றுசேர்ந்தார்.—எ-று. அன்று-ஏ-அசை. (௬௨)

ஆலங்கா டதனிலண்ட முறநிமிர்ந் தாடுகின்ற
கோலங்காண் பொழுதுகொங்கை திரங்கியென் றெடுத்துத்தங்கு
மூலங்காண் பரியார்தம்மை மூத்தநற் பதிகம்பாடி
ஞாலங்கா தலித்துப்போற்று நடம்போற்றி நண்ணுநாளில்.

(இ-ள்.) ஆலங்காடதனில்—திருவாலங்காட்டில்; அண்டமுறநிமிர்ந்தாடுகின்ற—அண்டமளவுக்கும் திருவடியைத்தூக்கி நிருத்தஞ்செய்கின்ற; கோலங்காண்பொழுது—திருக்கோலத்தைத் தரிசிக்கும்பொழுது; கொங்கைதிரங்கியென்றெடுத்து—கொங்கை திரங்கியென்று முதலிலெடுத்து; தங்குமூலங்காண்பரியார்தம்மை—தாம் சார்ந்துநிற்றற்கு ஓர்காரணமில்லாதவரை; மூத்தநற்பதிகம்பாடி—நல்ல மூத்ததிருப்பதிகத்தைப்பாடியருளி; ஞாலங்காதலித்துப்போற்றும்—மூவுலகத்தார் விரும்பித்துதிக்கும்; நடம்போற்றிநண்ணுநாளில்—ஊர்த்ததாண்டவத்தைத் துதித்திருக்குநாளில்.—எ-று.

எப்பொருளும் தஞ்சார்பாகத் தாமொருசார்பின்றிநிற்றலில் தங்குமூலங்காண்பரியாரென்றார். (௬௩)



திருவாலங்காட்டில் நங்கையார்சென்று மூத்ததிருப்பதிகமோதி குஞ்சிதபாதத்தின்கீழ் சிவானந்தப்பெருவாழ்வைப்பெற்றிருந்தது.

திருச்சிற்றம்பலம்.

அம்மைமூத்ததிருப்பதிகம்.

பண் - நட்டபாஷை.

கொங்கைதிரங்கி நரம்பெழுந்து குண்டுகண்வெண்பற் குழிவயிற்றுப்
பங்கிசிவந்திரு பற்கணீண்டு பரடுயர்நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கியலறி யுலறுகாட்டிற் றாழ்சடையெட்டுத் திசைகள்வீசி
யங்கங்குளிர்ந்தன லாடுமெங்க ளப்பனிடந்திரு வாலங்காடே.

ஒப்பிணையில்லவன் பேய்கள்கூடி யொன்றினையொன்றடித் தொக்கலித்துப்
பப்பிணையிட்டுப் பரண்டைபாடப் பாடிருந்தந்நரி யாழமைப்ப
வப்பனையணிதிரு வாலங்காட்டு ளடிகளைச்செடி தலைக் காரைக்காற்பேய்
செப்பியசெந்தமிழ் பத்தும்வல்லார் சிவகதிசேர்ந்தின்ப மெய்துவாரே.

திருச்சிற்றம்பலம்.

வேறு.

மட்டவிழ்கொன் றையினார்தந் திருக்கூத்து முன்வணங்கு
மிட்டமிகு பெருங்காத லெழுந்தோங்க வியப்பெய்தி
யெட்டியில வம்மீகை யெனவெடுத்துத் திருப்பதிகங்
கொட்டமுழ வங்குழக னாடுமெனப் பாடினார்.

(இ ள்.) மட்டவிழ்கொன்றையினார்தம்=வாசனைகமழ்கின்ற கொன்றைப்பூமாலையை யணிந்த சிவபிரானது; திருக்கூத்துமுன்வணங்கும்=திருக்கூத்தை முன்னே தரிசிக்கும்; இட்டமிகுபெருங்காதல்=ஆசைமிக்கபெருவிருப்பானது; எழுந்தோங்கவியப்பெய்தி=எழுந்துமேம்படவியப்படைந்து; எட்டியிலவம்மீகையெனவெடுத்து=எட்டியிலவம்மீகை யெனமுதலிலெடுத்து; திருப்பதிகங்கொட்டமுழவங்குழகனாடுமெனப்பாடினார்=திருப்பதிகத்தைக் கொட்டமுழவங் கூளிபாடக்குழகனாடுமே எனப்பாடியருளினார்.—எ-று. (௬௪)

திருச்சிற்றம்பலம்.

தே வா ர ப் ப தி க ம்.

பண்-இந்தளம்.

எட்டியிலவ மீகைசூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்டசுடலை சூழ்ந்தகள்ளி சோர்ந்த குடர்கவ்வப்
பட்டபிணங்கள் பரந்தகாட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்டமுழவங் கூளிபாடக் குழகனாடுமே.

சூடுமதியஞ் சடைமேலுடையர் சுழல்வர் திருநட்ட
மாடுமரவ மரையிலார்த்த வடிக ளருளாலே
காடுமலிந்த கனல்வாயெயிற்றுக் காரைக்காற் பேய்தன்
பாடல்பத்தும் பாடியாடப் பாவ நாசமே.

திருச்சிற்றம்பலம்.

மடுத்தபுனல் வேணியினு ரம்மையென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாைக் குலவியதாண் டவத்தினவ
ரெடுத்தருளுஞ் சேவடிக்கீ ழென்றுமிருக் கின்றாை
யடுத்தபெருஞ் சீர்பரவ லாரளவா யினதம்மா.

(இ-ள்.) மடுத்தபுனல்வேணியினுர்—கங்கைநீர் பெருக்கெடுக்கும் சடைமுடியையுடைய சிவபிரான்; அம்மையெனமதுரமொழிகொடுத்தருளப்பெற்றாை—அம்மையேயென்று மதுரவாக்குக் கொடுத்தழைக்கப் பெற்றவரும்; குலவியதாண்டவத்தின்—விளங்கிய ஊர்த்ததாண்டவத்தில்; அவரெடுத்தருளுஞ்சேவடிக்கீழ்—அவர்தூக்கியதிருவடிநிழற்கீழ்; என்றுமிருக்கின்றாை—என்றுமிருக்கப்பெற்றவருமாகிய காரைக்காலம்மையாரை; அடுத்தபெருஞ்சீர்பரவல்—அடைந்தபெரும்புகழைத்துதித்தல்; ஆரளவாயினது—யார்க்கு அளவுபடும் ஒருவர்க்கும் அளவுபடாது.—எ-று.

அம்மா-விதப்புச்சொல். (சுரு)

வேறு.

ஆதியோ டந்தமில்லா னருணட மாடும்போது
கீதமுன் பாடுமம்மை கிளரொளி மலர்த்தாள்போற்றி
சீதநீர் வயல்சூழ்திங்க ளூரினப் பூதியாராம்
போதமா முனிவர்செய்த திருத்தொண்டு புகலலுற்றேன்.

(இ-ள்.) ஆதியோடந்தமில்லான்—முதலும்முடிவுமில்லாத சிவபிரான்; அருணடமாடும்போது—ஊர்த்ததாண்டவஞ் செய்யும்பொழுது; கீதமுன்பாடுமம்மை—கீதத்தை முன்னே பாடியருள்கின்ற காரைக்காலம்மையாரது; கிளரொளிமலர்த்தாள்போற்றி—விளங்கும் ஒளிதங்கிய மலர்போலும் திருவடிகளை வணங்கி; சீதநீர்வயல்சூழ்திங்களூரின்—குளிர்ந்த நீர்நிரம்பிய வயல்சூழ்ந்த திங்களூரின்கண்; அப்பூதியாராம்போதமாமுனிவர்செய்த—அப்பூதியடிகளென்னும் ஞானம்நிறைந்த பெரியமுனிவர் செய்த; திருத்தொண்டுபுகலலுற்றேன்—திருத்தொண்டைச் சொல்லத்தொடங்கினேன்—எ-று. (சுசு)

காரைக்காலம்மையார்புராணம்முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ருகஎ.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கைதிரங்கிநரம்பெழுந்துகுண்டுகண்வெண்பற்குழிவயிற்றுப்
பங்கிசிவந்திருபற்கணீண்டுபரடுயர்நீள்கணைக்காலோர்பெண்பேய்
தங்கியலறியுலறுகாட்டிற்றாழ்சடையெட்டுத்திசையும்வீசி
யங்கங்குளிர்ந்தனலாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௧)

கள்ளிக்கவட்டிடைக்காலைநீட்டிக்கடைக்கொள்ளிவாங்கிமசித்துமையை
விள்ளவெழுதிவெடுவெடென்னநக்குவெருண்டுவிலங்குபார்த்துத்
துள்ளிச்சுடலைச்சுடுபிணத்தீச்சுட்டிடமுற்றுஞ்சுளிந்துபூழ்தி
யள்ளியவிக்கநின்றாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௨)

வாகைவிரிந்துவெண்ணெற்றொலிப்பமயங்கிருள்கூர்நடுநாளையாங்கே
கூகையொடாண்டலைப்பாடவாந்தைகோடதன்மேற்குதித்தோடவீசி
யீகைபடர்தொடர்கள்ளிநீழலீமமிடுசுடுகாட்டகத்தே
யாகங்குளிர்ந்தனலாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௩)

குண்டிலோமக்குழிச்சோற்றைவாங்கிக்குறுநரிதின்னவதனைமுன்னே
கண்டிலோமென்றுகனன்றுபேய்கள்கையடித்தோடிடுகாடரங்கா
மண்டலநின்றங்குளாலமிட்டுவாதித்துவீசியெடுத்தபாத
மண்டமுறநிமிர்ந்தாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௪)

விழுதுநிணத்தைவிழுங்கியிட்டுவெண்டலைமாலைவிரவப்பூட்டிக்
கழுதுதன்பிள்ளையைக்காளியென்றுபேரிட்டுச்சீருடைத்தாவளர்த்துப்
புழுதிதுடைத்துமுலைகொடுத்துப்போயினதாயைவரவுகாணா
தழுதுறங்கும்புறங்காட்டிலாடுமப்பனிடந்திருவாலங்காடே. (௫)

பட்டடிநெட்டுகிர்ப்பாறுகாற்பேய்பருந்தொடுகூகைபகண்டையாந்தை
குட்டியிடமுட்டைகூகைபேய்கள்குறுநரிசென்றணங்காடுகாட்டிற்
பிட்டடித்துப்புறங்காட்டிலிட்டபிணத்தினைப்பேரப்புரட்டியாங்கே
யட்டமேபாயநின்றாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௬)

சுழலுமழல்விழிக்கொள்ளிவாய்ப்பேய்சூழ்ந்துதுணங்கையிட்டோடியாடித்
தழலுளெரியும்பிணத்தைவாங்கித்தான்றடிதின்றணங்காடுகாட்டிற்
கழலொலியோசைச்சிலம்பொலிப்பக்காலுயர்வட்டணையிட்டுநட்ட
மழலுமிழ்ந்தோரிகதிக்கவாடுமெப்பனிடந்திருவாலங்காடே. (எ)

நாடுநகருந்திரிந்துசென்றுநன்னெறிநாடிநயந்தவரை
மூடிமுதுபிணத்திட்டமாடேமுன்னியபேய்க்கணஞ்சூழச்சூழக்
காடுங்கடலுமலையுமண்ணும்விண்ணுஞ்சுழலவனல்கையேந்தி
யாடுமரவப்புயங்கனெங்களப்பனிடந்திருவாலங்காடே. (அ)

துத்தங்கைக்கிள்ளைவிளரிதாரமுழையிளியோசைபண்கெழுமப்பாடிச்
சச்சரிகொக்கரைதக்கையோடுதகுணிதந்துந்துபிதாளம்வீணை
மத்தளங்கரடிகைவன்கைமென்றோற்றமருகங்குடமுழாமொந்தைவாசித்
தத்தனைவிரவினோடாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (கூ)

புந்திகலங்கிமதிமயங்கியிறந்தவரைப்புறங்காட்டிலிட்டுச்
சந்தியில்வைத்துக்கடமைசெய்துதக்கவரிட்டசெந்தீவிளக்கா
முந்தியமரர்முழவினோசைதிசைகதுவச்சிலம்பார்க்கவார்க்க
வந்தியின்மாநடமாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (கய)

ஒப்பிணையில்லவன்பேய்கள்கூடியொன்றினையொன்றடித்தொக்கலித்துப்
பப்பிணையிட்டுப்பகண்டைபாடப்பாடிருந்தந்நரியாழமைப்ப
வப்பனையணிதிருவாலங்காட்டுளடிகளைச்செடிதலைக்காரைக்காற்பேய்
செப்பியசெந்தமிழ்பத்தும்வல்லார்சிவகதிசேர்ந்தின்பமெய்துவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

மூத்ததிருப்பதிகம். பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டியிலவமீகைசூரைகாரைபடர்ந்தெங்குஞ்
சுட்டசுடலைசூழ்ந்தகள்ளிசோர்ந்தகுடர்கௌவப்
பட்டபிணங்கள்பரந்தகாட்டிற்பறைபோல்விழிகட்பேய்
கொட்டமுழவங்கூளிபாடக்குழகனாடுமே. (க)

குணந்தானுருகிகிலந்தானனைப்பநெடும்பற்குழிகட்பேய்
துணங்கையெறிந்துசூழுநோக்கிச்சுடலைநவித்தெங்குங்
கணங்கள்கூடிப்பிணங்கண்மாந்திக்களித்தமனத்தவா
யணங்குகாட்டிலனல்கையேந்தியழகனாடுமே. (உ)

புட்கள்பொதுத்தபுலால்வெண்டலையைப்புறமேநரிகவ்வவ்
வட்கென்றழைப்பவாந்தைவீசவருகேசிறுகூகை
யுட்கவிழிக்கவூமன்வெருட்டவோரிகதித்தெங்கும்
பிட்கநட்டம்பேணுமிறைவன்பெயரும்பெருங்காடே. (ங)

முள்ளிதீந்துமுளரிகருகிமூளைசொரிந்துக்குக்
கள்ளிவற்றிவெள்ளில்பிறங்குகடுவெங்காட்டுள்ளே
புள்ளியுழைமான்றோலொன்றுடுத்துப்புலித்தோல்பியற்கிட்டுப்
பள்ளியிடமுமதுவேயாகப்பரமனாடுமே. (௪)

செத்தபிணத்தைத்தெளியாதொருபேய்சென்றுவிரல்சுட்டிக்
கத்தியுறுமிக்கனல்விட்டெறிந்துகடக்கப்பாய்ந்துபோய்ப்
பத்தல்வயிற்றைப்பதைக்கமோதிப்பலபேயிரிந்தோடப்
பித்தவேடங்கொண்டுநட்டம்பெருமானாடுமே. (௫)

வாளைக்கிளரவளைவாளெயிற்றுவண்ணச்சிறுகூகை
மூளைத்தலையும்பிணமும்விழுங்கிமுரலுமுதுகாட்டிற்
றாளிப்பனையினிலைபோன்மயிர்கட்டழல்வாயழல்கட்பேய்
கூளிக்கணங்கள்குழலோடியம்பக்குழகனாடுமே. (௬)

நொந்திக்கிடந்தசுடலைதடவிநுகரும்புழுக்கின்றிச்
சிந்தித்திருந்தங்குறங்குஞ்சிறுபேய்சிரமப்படுகாட்டின்
முந்தியமரர்முழவினோசைமுறைமைவழுவாமே
யந்திநிருத்தமனல்கையேந்தியழகனாடுமே. (௭)

வேய்களோங்கிவெண்முத்துதிரவெடிகொள்சுடலையு
ளோயுமுருவிலுலறுகூந்தலலறுபகுவாய
பேய்கள்கூடிப்பிணங்கண்மாந்தியணங்கும்பெருங்காட்டின்
மாயனோடமலையான்மகளுமருண்டுநோக்குமே. (௮)

கடுவனுகளுங்கழைசூழ்பொதும்பிற்கழுகும்பேயுமா
யிடுவெண்டலையுமீமப்புகையுமெழுந்தபெருங்காட்டிற்
கொடுவெண்மழுவும்பிறையுந்ததும்பக்கொள்ளென்றிசைபாடப்
படுவெண்டுடியும்பறையுங்கறங்கப்பரமனாடுமே. (௯)

குண்டைவயிற்றுக்குறியசிறியநெடியபிறங்கற்பே
யிண்டுபடர்ந்தவிருள்சூழ்மயானத்தெரிவாயெயிற்றுப்பேய்
கொண்டுகுழவிதடவிவெருட்டிக்கொள்ளென்றிசைபாட
மிண்டிமிளிர்ந்தசடைகடாழவிமலனாடுமே. (௧௦)

சூடுமதியஞ்சடைமேலுடையார்சுழல்வார்திருநட்ட
மாடுமரவமரையிலார்த்தவடிகளருளாலே
காடுமலிந்தகனல்வாயெயிற்றுக்காரைக்காற்பேய்தன்
பாடல்பத்தும்பாடியாடப்பாவநாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

திருவிரட்டைமணிமாலையுரை.

க. கிளர்ந்துந்துவெந்துயர்வந்தடும்போதஞ்சிநெஞ்சமென்பாய்
தளர்ந்திங்கிருத்தறவிர்திகண்டாய்தளராதுவந்தி
வளர்ந்துந்துகங்கையும்வானத்திடைவளர்கோட்டுவெள்ளை
யிளந்திங்களுமெருக்குமிருக்குஞ்சென்னியீசனுக்கே.

(இ-ள்.) கிளர்ந்துந்துவெந்துயர் - மேற்கொண்டெம்மைக்கீழ்ப்படுத்தும் கொடிய துயரமானது; வந்தடும்போது - வந்துவருத்தும்பொழுது; நெஞ்சமஞ்சி - மனமேநீஅச்சமுற்று; தளர்ந்திங்கிருத்தறவிர்தி - அதனால்வருந்தி இவ்வுலகத்திருத்தலையொழி; வளர்ந்துந்துகங்கையும் - உயர்ந்துபெருகுகின்றகங்கைநதியும்; வானத்திடைவளர் - வானின்கண் வளராநின்ற; கோட்டுவெள்ளையிளந்திங்களும் -கோடுபோன்றுவெண்ணிறமுடைய இளம்பிறையும்; எருக்குமிருக்குஞ்சென்னியீசனுக்கு - எருக்கமலரும்தரித்திருக்கும்திருமுடியையுடையசிவபிரானை; தளராதுவந்தி - வருந்தாதுவந்தனைசெய்.—எ-று. என்பாய்-கண்டாய் - ஏ. மூன்றும் அசை.

ஈசனுக்குவந்தியென்புழி ஈசனைவந்தியென உருபுஒத்துமயங்கியது. துயர்வருங்கால் அஞ்சித்தளர்தல்மயக்க ஏதுவாதலின் தளராதுவந்திஎன்றார். தன்செயலற்று இறைபணியினிற்பார்க்குத் துயர்வாதியாதென்பதுகருத்து.

உ. ஈசனவனல்லாதில்லையெனநினைந்து
கூசிமனத்தகத்துக்கொண்டிருந்து - பேசி
மறவாதுவாழ்வாரைமண்ணுலகத்தென்றும்
பிறவாமைக்காக்கும்பிரான்.

(இ-ள்.) ஈசனவனல்லாதில்லையெனநினைந்து - உலககாரணன்சிவபிரானன்றிவேறில்லையென்றுகருதி; கூசிமனத்தகத்துக்கொண்டிருந்து - கூசிஅவரைமனத்தினுள்ளேகருதிக்கொண்டிருந்து; பேசிமறவாதுவாழ்வாரை - வாயாரத்துதித்துமனத்தால்நினைந்திருக்கவல்லஅடியாரை; மண்ணுலகத்தென்றும்பிறவாமைக்காக்கும்பிரான் - நிலவுலகத்தில் எந்நாளும்பிறவாவண்ணம் அச்சிவபிரான்காத்தருளுவர்.—எ-று.

கூசுதல் - அவருயர்வும் தம்இழிவுங்கருதிநிகழுங்குறி. அதுதற்போதம்நிகழாமைநிற்றல். இதனாற்சிவபிரானை நினைத்தலும் வாழ்த்தலும் வீடுபேற்றிற்குக் காரணமென்றாராயிற்று.

௩. பிரானென்றுதன்னைப்பன்னாள்பரவித்தொழுவாரிடர்கண்
டிரானென்னநிற்கின்றவீசன்கண்டீர்இனவண்டுகிண்டிப்
பொராநின்றகொன்றைப்பொதும்பர்க்கிடந்துபொம்மென்றுறைவா
யராநின்றிரைக்குஞ்சடைச்செம்பொனீண்முடியந்தணனே.

(இ-ள்.) இனவண்டுகிண்டிப்பொராநின்ற - வண்டின்ரெகுதிகள் கோதிமலேகின்ற; கொன்றைப்பொதும்பர்க்கிடந்து - கொன்றைமலராகியகாட்டிலிருந்து; பொம்மென்றுறை வாயராநின்றிரைக்கும் - விரைந்துநச்சுப்பைதங்கியவாயுடைய பாம்பானதுநிலேபெற்றுச் சீறுகின்ற; சடைச்செம்பொனீண்முடியந்தணன் - சிவந்தபொன்போலும்நிறந்தங்கிய நீண்டசடைமுடியையுடையசிவபிரானை; பிரானென்றுதன்னைப்பன்னுள்பரவித்தொழுவார் - உலககாரணரென்றுதம்மைப்பன்னுளுந் துதித்துவணங்கும்அடியார்களது; இடர்கண்டிரானென்னநிற்கின்றவீசன்கண்டீர் - துயரத்தைக்கண்டு அதைநீக்கத்தாழ்த்திரானென்று சொல்லவிருக்கின்ற ஈசனென்றறியுங்கள்.—எ-று.

அந்தணன்என்புழி ஐயுருபு இறுதிக்கண்தொக்கது. ஏ. அசை. அடியாரிடர்கண்டு தரியார் அறப்பெருங்கருணையுடைய முதல்வரென்பதுகுறிப்பித்துநின்றது.

ச. அந்தணனைத்தஞ்சமென்றுட்பட்டாராழாமே
வந்தணைந்துகாத்தளிக்கும்வல்லாளன் - கொந்தணைந்த
பொன்கண்டாற்பூணுதேகோணுகம்பூண்டானே
யென்கண்டாய்நெஞ்சேயினி.

(இ-ள்.) அந்தணனை - அந்தணனுகியதன்னை; தஞ்சமென்றுட்பட்டாராழாமே - சரணென்று ஆளானுர் பிறவிப்பெருங்கடலில் ஆழாவண்ணம்; வந்தணைந்துகாத்தளிக்கும் வல்லாளன் - உருமேனிதாங்கிவந்து அக்கடலேக்கடக்கச்செய்தருள்பாலிக்கும் ஆற்றலுடையவன்; கொந்தணைந்தபொன்கண்டாற்பூணுதே - அவன்திரண்டபொன்னைக்கண்டால் அதனையணியாது; கோணுகம்பூண்டான் - கோள்விளைக்கும்பாம்பைப் பணியாகக் கொண்டான்; என்கண்டாய்நெஞ்சேயினி - இனிமனமேஇதைஎன்னென்றுகருதுவாய். எ-று. ஏ. அசை.

கொத்து கொந்தெனமெலிந்துநின்றது. உயர்வுடைத்திழிவுடைத் தென்றெருபொருளையும் விரும்பியும் வெறுத்தும் தன்பயன்கருதிக்கொள்ளாது பிறர்பயன்கருதிக்கொள்வரென்பது கருத்து.

ரு. இனிவார்சடையினிற்கங்கையென்பாளையங்கத்திருந்த
கனிவாய்மலேமங்கைகாணிலென்செய்திகையிற்சிலேயான்
முனிவார்திரிபுரமூன்றும்வெந்தன்றுசெந்தீயின்மூழ்கத்
தனிவார்கணையொன்றினுன்மிகக்கோத்தவெஞ்சங்கரனே.

(இ-ள்.) முனிவார்திரிபுரமூன்றும் - மாற்றரது இயங்குதலுடைய முப்புரமும்; வெந்தன்றுசெந்தீயின்மூழ்க - எரிக்கும்ஞான்று நீருய்சிவந்த எரியில் மூழ்கும்வண்ணம்; கையிற்சிலேயால் - திருக்கரத்திற்றுங்கியமேருவில்லாலும்; தனிவார்கணையொன்றினுல் - நிகரற்றுநீண்ட திருமாலாகிய ஒரம்பினுலும்; மிகக்கோத்தவெஞ்சங்கரனே - மிகஎய்தஎங்கள்சிவபிரானே; இனிவார்சடையினிற்கங்கையென்பாளை - இனிமேல் நீண்டசடையிற்றங்கியகங்கையை; கனிவாய்மலேமங்கைகாணிலென்செய்தி - கொவ்வைக்கனிபோலும் சிவந்தவாயையுடைய பார்ப்பதியார்கண்டால் என்செய்வாய்.—எ-று.

கோத்த என்பது ஈண்டு எய்த என்னும் பொருள்படநின்றது. இனி என்பது காலமுணர்த்துமோரிடைச்சொல். கண்டால் மலேமகள் மிகப்பிணங்குமென்பது கருத்து.

சா. சங்கரனைத்தாழ்ந்தசடையானையச்சடைமேற்
பொங்கரவம்வைத்துகந்தபுண்ணியனை - யங்கொருநா
ளாவாவென்றுழாமைக்காப்பானையெப்பொழுது
மோவாதுநெஞ்சேயுரை.

(இ-ள்.) சங்கரனைத்தாழ்ந்தசடையானை - சுகத்தைச்செய்கின்றவனை பின்றூங்குஞ்சடையையுடையவனை; அச்சடைமேற்பொங்கரவம்வைத்துகந்தபுண்ணியனை - அந்தச்சடையின்மேற்சீறுகின்றபாம்பைத்தரித்து அதனால் மகிழ்ச்சியடைந்தபுண்ணியவடிவனை; அங்கொருநாள் - இடுக்கண்வரும் அந்நாளில்; ஆவாவென்றுழாமைக்காப்பானை - ஆ ஆ என்றிரங்கி அத்துயரில்மூழ்காமற்காக்கின்றவனை; எப்பொழுதுமோவாதுநெஞ்சேயுரை - எந்நாளும்நீங்காதுமனமேநீதுதி.—எ-று.

உரைக்கில்நீதுயரடையா யென்பது கருத்து.

எ. உரைக்கப்படுவதுமொன்றுண்டுகேட்கிற்செவ்வான்றொடைமே
விரைக்கின்றபாம்பினையென்றுந்தொடேலிழிந்தோட்டத்தெங்குந்
திரைக்கின்றகங்கையுந்தேனின்றகொன்றையுஞ்செஞ்சடைமேல்
விரைக்கின்றவன்னியுஞ்சென்னித்தலைவைத்தவேதியனே.

(இ-ள்.) இழிந்தோட்டத்தெங்கும் - வழிந்துபெருகுதலால் எவ்விடத்தும்; திரைக்கின்றகங்கையும் - திரையைவீசுகின்றகங்கைநதியையும்; தேனின்றகொன்றையும் - தேன்றங்கியகொன்றைமலர்மாலையையும்; செஞ்சடைமேல்விரைக்கின்றவன்னியும் - சிவந்தசடைமுடியின்மேல் வாசனைகமழ்கின்றவன்னியையும்; சென்னித்தலைவைத்தவேதியனே- திருமுடிக்கண்சூடியமறையவனே; உரைக்கப்படுவதுமொன்றுண்டு - எம்மாற்சொல்லப்படுவதும் ஓர்பொருளுண்டு; கேட்கில் - அதுயாதென்றுநீர்வினவில்; செவ்வான்றொடைமேல் - செவ்வானிலுதிக்கும் இளம்பிறையின்மேல்; விரைக்கின்றபாம்பினையென்றுந்தொடேல் - சீறுகின்றபாம்பை எந்நாளும்வையாதிரும் என்பதே.—எ-று.

மதிபாம்பைக்கண்டஞ்சு மென்பது கருத்து.

அ. வேதியனைவேதப்பொருளானைவேதத்துக்
காதியனையாதிரைநன்னாளானைச் - சோதிப்பான்
வல்லேனமாப்புக்குமாலவனுமாட்டாது
கில்லேனமாவென்றான்கீழ்.

(இ-ள்.) வேதியனை - மறையவனை; வேதப்பொருளானை - மறைப்பொருளாயுள்ளவனை; வேதத்துக்காதியனை - அம்மறைக்கு ஆதிகாரணனை; ஆதிரைநன்னாளானை - திருவாதிரை என்னும் நல்லநாளையுடையவனை; சோதிப்பான்வல்லேனமாப்புக்கு - சோதிக்கும்பொருட்டு ஆதிவராகமாய்ப்புகுந்துதேடி; மாலவனுமாட்டாது - திருமாலும் அறியமாட்டாமல்; கில்லேனமாவென்றான்கீழ் - அறியகில்லேன் அம்மா என்றுகூறினன் முன்னாளில்.—எ-று.

இலிங்கரூபமாகிய சகள உருவைத்திருமாலுந்தேடி யறியாரெனில் சொரூபவியல்பையாரறிவாரென்பதுகருத்து.

கூ. கீழாயினதுன்பவெள்ளக்கடற்றள்ளியுள்ளுறப்போய்
வீழாதிருந்தின்பம்வேண்டுமென்பீர்விரவார்புரங்கள்
பாழாயிடக்கண்டகண்டனெண்டோளன்பைம்பொற்கழலே
தாழாதிறைஞ்சிப்பணிந்துபன்னாளுந்தலைநின்மினே.

(இ-ள்.) கீழாயினதுன்பவெள்ளக்கடற்றள்ளி - கீழானதுன்பவெள்ளமாகிய கடலை நீந்தி; உள்ளுறப்போய்வீழாதிருந்து - உள்ளேசென்றுநழுவாமலிருந்து; இன்பம்வேண்டுமென்பீர் - பேரின்பமடையவேண்டுமென்று சொல்கின்றவர்களே; விரவார்புரங்கள்பாழா

யிடக்கண்டகண்டன் - மாற்றாரதுமுப்புரங்கள்வெந்துநீறாய்விடச்செய்தவீரன்; எண்டோளன்பைம்பொற்கழலே - எண்டோளையுடையவன் அவனதுபசிய பொன்னிறமான திருவடிகளையே; தாழாதிறைஞ்சிப்பணிந்து - காலந்தாழ்த்தாதுதொழுதுநிலமுறவணங்கி; பன்னாளுந்தலைநின்மின் - நீவிர்பலகாலமுந்தலைப்பட்டு நில்லுங்கள்.—எ-று. ஏ. அசை.

என்பார் என்னும் ஆரீறு ஈரீறாய் விளியேற்றது. வீட்டின்பம்விரும்பினால் அவ்வின்பங்கொடுக்குஞ் சிவபிரானைப்பன்னாளும் தாழாதுவணங்கில் பாவந்தேய்ந்துமனந்தூயராய் வீடடைவரென்பது கருத்து.

கo. தலையாயவைந்தினையுஞ்சாதித்துத்தாழ்ந்து
தலையாயினவுணர்ந்தோர்காண்பர் - தலையாய
வண்டத்தாறாதிரையாறாலாலமுண்டிருண்ட
கண்டத்தான்செம்பொற்கழல்.

(இ-ள்.) தலையாயவைந்தினையுஞ்சாதித்துத்தாழ்ந்து - முதலான திருவைந்தெழுத்தைச்செபித்துச் சிவபிரானைவணங்கி; தலையாயினவுணர்ந்தோர் - மேலாய அதன்பொருளியல்பையுணர்ந்தவர்கள்; தலையாயவண்டத்தான் - எவ்வுலகுக்கும்மேலாய உலகத்திருக்கின்றவன்; ஆதிரையான் - திருவாதிரைநாளையுடையவன்; ஆலாலமுண்டிருண்டகண்டத்தான் - ஆலாலத்தைப்புசித்து அதனாற்கருநிறமடைந்த திருமிடற்றையுடையவன்; செம்பொற்கழல்காண்பர் - அவனது சிவந்தபொன்போலும் திருவடிகளையடைவார்.—எ-று.

அதன்பொருளாவன:—இறை சத்தி பாசம் மாயை உயிர் என்பன. இப்பொருளையுணருங்கால் உணர்ந்தவுயிர் மாயைமலம் இவற்றைநீங்கித் தம்முதலோடு சேருமென்பது கருத்து.

கக. கழற்கொண்டசேவடிகாணலுற்றார்தமைப்பேணலுற்றார்
நிழற்கண்டபோழ்தத்துநில்லாவினைநிகரேதுமின்றித்
தழற்கொண்டசோதிச்செம்மேனியெம்மானைக்கைம்மலர்தூய்த்
தொழக்கண்டுநிற்கிற்குமோதுன்னிநம்மடுந்தொல்வினையே.

(இ-ள்.) கழற்கொண்டசேவடி - வீரக்கழலையணிந்தசிவபிரான்திருவடியை; காணலுற்றார்தமைப்பேணலுற்றார் - தரிசித்த அடியார்களைவழிபடும் அடியார்களுடைய; நிழற்கண்டபோழ்தத்துநில்லாவினை - திருமேனிநிழலைக்கண்டவிடத்தும்வினைநில்லாதுஅவ்வாறாக; நிகரேதுமின்றி - எப்பொருளுந்தன்னோடொப்பின்றித் தூய்மையாகிய; தழற்கொண்டசோதிச்செம்மேனியெம்மானை - தழலே ஒருருவாகத்திரண்ட ஒளிதங்கியசிவந்ததிருமேனியையுடைய எமதுசிவபிரானை; கைம்மாமலர்தூய்த்தொழக்கண்டும் - கையிற்கொண்டநல்லமலர்களைத்தூவிவணங்கப்பார்த்தும்; துன்னிநம்மடுந்தொல்வினைநிற்கிற்குமோ - அப்பழவினையானது நிற்குமோ நில்லாது.—எ-று. ஏ. அசை.

சிவபிரான் திருவடிகளில் மலர்தூய்வணங்குமடியாரைத் தீவினைவாதியாதென்பது கருத்து.

கஉ. தொல்லைவினைவந்துசூழாமுன்றாழாமே
யொல்லைவணங்கியுமையென்னு - மெல்லியலோர்
கூற்றானைக்கூற்றுருவங்காய்ந்தானைவாய்ந்திலங்கு
நீற்றானைநெஞ்சேநினை.

(இ-ள்.) தொல்லைவினைவந்துசூழாமுன் - பழவினைவந்துசூழாமுன்; தாழாமேயொல்லைவணங்கி - காலம்தாழ்த்தாமல்விரைவில்வணங்கி; உமையென்னுமெல்லியலோர்கூற்

ருனே - உமாதேவியென்கின்றபெண்ணை ஓர் கூற்றிலுடையவனே; கூற்றுருவங்காய்ந் தானே - யமனைக்கோபித்தவனே; வாய்ந்திலங்குநீற்றானே - சிறந்துவிளங்குகின்றதிருவெண் ணீற்றையுடையவனே; நெஞ்சேநினை - மனமே நீ கருது.—எ-று.

முன் இறந்தகாலவினையெச்சம். பின்வணங்குதல் கூடாமையின் சூழாமுன்வணங் கின்வினையை வெல்லலாமென்பது கருத்து.

கங. நினையாதொழுதிகண்டாய்நெஞ்சமேயிங்கோர் தஞ்சமென்று
மனையாளையுமக்கடம்மையுந்தேறியோராறுபுக்கு
நனையாச்சடைமுடிநம்பனந்தாதைநொந்தாதசெந்தீ
யனையானமரர்பிரானண்டவாணனடித்தலமே.

(இ-ள்.) மனையாளையுமக்கடம்மையுந்தேறி - இல்லாளையும் புதல்வர்களையும்நீக்கு; ஓராறுபுக்குநனையாச்சடைமுடிநம்பன் - ஓர்கங்கையாறுபெருகியும் நனையாதசடைமுடி யையுடையநம்பனும்; நந்தாதை - நமக்குத்தந்தையும்; நொந்தாதசெந்தீயனையான் - அழி யாதசிவந்ததீவண்ணமுடையவனும்; அமரர்பிரான் - தேவர்க்குமுதல்வனும்; அண்டவா ணன் - பேரண்டத்தின்கண்ணே வாழ்கின்றவனுமாகிய சிவபிரானது; அடித்தலமேயிங் கொர்தஞ்சமென்று நினையாதொழுதிநெஞ்சமே - திருவடிகளையே இங்குநமக்கோர்துணை யென்று மனமேநீநினைந்து வணங்கு.—எ-று. கண்டாய் - ஏ. அசை.

தேறி என்பது தெறு என்னும் பகுதி விகாரப்பட்ட முன்னிலை வினைமுற்று. புறச் சார்பு நீக்கி வணங்கவேண்டுமென்பது கருத்து.

கச. அடித்தலத்தினன்றரக்கனைநான்குதோளு
முடித்தலமுநீமுரித்தவாறென் - முடித்தலத்தி
லாறுடியாறுவனலாடியவ்வனலி
னீறுடிநெய்யாடிநீ.

(இ-ள்.) அடித்தலத்தினன்று - திருவடியினால் அந்நாளில்; அரக்கனைநான்குதோ ளுமுடித்தலமும் - இராவணனுடைய இருபதுதோளையும் முடிகளையும்; முடித்தலத்தி லாறுடி - திருமுடியின்கணிருக்கின்ற கங்கையாற்றில்முழுகுகின்றவனும்; ஆறுவனலாடி- எரிகின்றதீயில் நிருத்தஞ்செய்கின்றவனும்; அவ்வனலினீறுடி - அவ்வனலின்கணுள்ள நீற்றைப்பூசுகின்றவனும்; நெய்யாடி - நெய்யில் ஆடுகின்றவனுமாகிய; நீ முரித்தவாறென்- நீகெடுத்தவாறு என்னை.—எ-று.

நீ என்பது இறுதிக்கண்பொருளின்றி இசைநிறைத்துநிற்றலின் அசைநிலைபோலும். சார்ந்தாரைக்காக்கும் பேரருளுடைமைபோன் மாறுபட்டாரைக்கெடுக்கும் பேராற்றலுமு டைய ரென்பது குறிப்பித்தது.

கரு. நீநின்றுதானவர்மாமதின்மூன்றுநிரந்துடனே
தீநின்றுவேவச்சிலைதொட்டவாறென்றிரங்குவல்வாய்ப்
பேய்நின்றுபாடப்பெருங்காடரங்காப்பெயர்ந்துநட்டம்
போய்நின்றுபூதந்தொழச்செய்யுமொய்கழற்புண்ணியனே.

(இ-ள்.) பெருங்காடரங்கா - பெரியசுடுகாடுசபையாக; திரங்குவல்வாய்ப்பேய்நின் றுபாட - திரைந்தபெரியவாயையுடைய பேய்த்தொகுதி எதிர்நின்றுபாட; போய்நின்று பூதந்தொழ - பூதங்கள்சென்றுநின்று அந்நிருத்தத்தைவணங்க; பெயர்ந்துநட்டம்செய் யும் - திருவடியைத்தூக்கிநடனம்செய்யும்; மொய்கழற்புண்ணியனே - நெருங்கியவீரக்க

ழலையணிந்தபுண்ணியமூர்த்தியே; நீநின்று - நீர்நின்று; தானவர்மாமதின்மூன்றும் - அசுரர்களதுபெரியமும்மதிலும்; நிரந்துடனேதீநின்றுவேவ - முறையாகஅப்பொழுதேதீயால் வேகும்படி; சிலைதொட்டவாறென் - வில்லினின்றும்அம்பையெய்தவாறென்னை.—எ-று.

மாமதிலெரித்ததென்னென்றது அப்பிரானுர் அருள்கருதிச்செய்த ஆற்றலுடைமை குறிப்பித்தது.

கசு. புண்ணியங்கள்செய்தனவும்பொய்ந்நெறிக்கட்சாராமே
யெண்ணியோரைந்துமிசைந்தனவாற் - றிண்ணிய
கைம்மாவினீருரிவைமூவுருவும்போர்த்துகந்த
வம்மானுக்காட்பட்டவன்பு.

(இ-ள்.) புண்ணியங்கள்எண்ணிச்செய்தனவும் - நமக்குநன்மைவிளைக்குமென்றெண்ணிச்செய்த புண்ணியங்களும்; ஓரைந்தும் - ஐம்புலன்களும்; திண்ணியகைம்மாவினீருரிவை - வலியயானையினின்றுமுரித்ததோலை; மூவுருவும்போர்த்துகந்த - தம்திருமேனியின்கணுள்ள மூவுருவிலும்போர்த்துமகிழ்ந்த; அம்மானுக்காட்பட்டஅன்பு - சிவபிரானுக்காட்பட்டஅன்பினுல்; இசைந்தன - நம்மைப்பொருந்தின.—எ-று. ஆல்-அசை.

மூவுருவும்போர்த்தென்றது திருமாலுருவினும் உமையுருவினுந் தம்முருவினும் என்க. அன்புவந்தமையின் புலனெருப்பட்டதேயன்றிச் சிவபுண்ணியமும் பயனுயினவென்பதுகருத்து. அன்பென்புழிமூன்றனுருபு விகாரத்தாற்ருெக்கது.

கஎ. அன்பாலடைவதெவ்வாறுகொன்மேலதோராடரவந்
தன்பாலொருவரைச்சாரவொட்டாததுவேயுமன்றி
முன்பாயினதலையோடுகள்கோத்தவையார்த்துவெள்ளை
யென்பாயினவுமணிந்தங்கொரேறுகந்தேறுவதே.

(இ-ள்.) அன்பாலடைவதெவ்வாறு - நாம்இவரைஅன்பாலடைவதெவ்வாறு; மேலதோராடரவம் - இவர்மேலணிந்திருக்கும் படம்விரித்தாடும் ஓர்பாம்பானது; தன்பாலொருவரைச்சாரவொட்டாது - தன்சமீபத்தில் ஒருவரையும் சேரவொட்டாது; அதுவேயுமன்றி - அதுவுமல்லாமல்; முன்பாயினதலையோடுகள்கோத்தவையார்த்து - கோத்ததலையோடுகள்கட்டப்பட்டு முன்னிருக்கின்றன; வெள்ளையென்பாயினவுமணிந்து - வெள்ளெலும்பையுமணிந்து; அங்கொரேறுகந்தேறுவது - அதுவுமன்றி அவ்விடத்து ஓர்இடபத்தை விரும்பி இவர் ஏறுவதானுல்.—எ-று. கொல் - ஏ. அசை.

விகிர்தவேடத்தால் அடையக்கூடாமை அவருழைத்தோற்றினும் அவ்வேடம்நம்மை வேறுபடுத்தும் மலமாயைகன்மங்களைப் போக்குமென்பது குறிப்பித்துநின்றது.

கஅ. ஏறலாலேறமற்றில்லையேயெம்பெருமா
னுறெலாம்பாயுமவிர்சடையார் - வேறோர்
படங்குலவுநாகமுமிழ்பண்டமரர்சூழ்ந்த
தடங்கடனஞ்சுண்டார்தமக்கு.

(இ-ள்.) எம்பெருமான் - எம்பெருமானும்; ஆறெலாம்பாயுமவிர்சடையார் - கங்கைநதிமுழுதும்பெருக்கெடுக்கின்ற விளங்கியசடையையுடையவருமாகிய; வேறோர்படங்குலவுநாகம் - படந்தங்கியவாசுகிஎன்னும் வேறான ஓர்பாம்பு; பண்டமரர்சூழ்ந்ததடங்கடலுமிழ்நஞ்சு - முன்னுளில் தேவர்கள்சூழ்ந்துகடைந்த பெரியபாற்கடலின்கண் உமிழ்ந்தஆலாகலத்தை; உண்டார்தமக்கு - அமுதுசெய்தசிவபிரானுக்கு; ஏறலாலேறமற்றில்லை - இடபமல்லாமல்ஏறுதற்கு வேறொன்றுமில்லை.—எ-று. ஏ. அசை.

அடியாரைச்சிவபுண்ணியங்கருதி ஆட்கொள்ளப் புகுங்கால் அப்புண்ணியவடிவாகிய ஏறே உரித்தென்பதுகருத்து.

கக. தமக்கென்றுமின்பணிசெய்திருப்பேமுக்குத்தாமொருநா
ளெமக்கொன்றுசொன்னலருளுங்கொலாமிணையாதுமின்றிச்
சுமக்கின்றபிள்ளைவெள்ளேறொப்பதொன்றுதொண்டைக்கனிவா
யுமைக்கென்றுதேடிப்பெறாதுடனேகொண்டவுத்தமரே.

(இ-ள்.) தமக்கென்றுமின்பணிசெய்திருப்பேமுக்கு - தமக்குஎந்நாளும்இனியதொண்டுசெய்திருக்கின்ற எங்களுக்கு; தாமொருநாளெமக்கொன்றுசொன்னலருளுங்கொல்- தாம் ஒருதினத்தில் எமக்காக ஒன்று தரவென்றுசொன்னல் அருள்செய்வாரா; இணையாதுமின்றிச்சுமக்கின்ற - ஒப்புஒருபொருளுமின்றித்தாங்குகின்ற; பிள்ளைவெள்ளேறொப்பதொன்று - தாம்ஏறும்வெள்ளியமழவிடையை ஒப்பதாகியவேறொன்று; தொண்டைக்கனிவாயுமைக்கென்றுதேடி - கொவ்வைக்கனிபோலும் சிவந்தவாயையுடைய உமாதேவிக்காகத்தேடி; பெறாதுடனேகொண்டவுத்தமர் - கிடையாமல் தம்இடப்பாகத்தில்வைத்துக் கொண்ட உத்தமர்.—எ-று.

உமையைத் தம்மோடுவேற்றுமையின்றி அபேதமாக்கியதுபோல எம்மையுந்தம்முளடக்கிப் பிறிதொன்றுங்கொடாது அபேதமாய் வைப்பரென்பது கருத்து.

உ0. உத்தமராய்வாழ்வாருலந்தக்காலுற்றார்கள்
செத்தமரமடுக்கித்தீயாமு - னுத்தமனாய்
நீளாழிநஞ்சுண்டநெய்யாடிதன்றிறமே.
கேளாழிநெஞ்சேகிளர்ந்து.

(இ-ள்.) உத்தமராய்வாழ்வாருலந்தக்கால் - செல்வச்சிறப்புடையவராய் வாழ்கின்றவர்கள் இறந்துபோனல்; உற்றார்கள்செத்தமரமடுக்கித்தீயாமுன் - சுற்றத்தார்விறகடுக்கிக் கொளுத்துவார்கள் அப்படிகொளுத்துவதன்முன்னே; உத்தமனாய்நீளாழிநஞ்சுண்ட - சிறந்தவராய் நீண்டகடலிலுதித்தநஞ்சை யமுதுசெய்த; நெய்யாடிதன்றிறமே - சிவபிரானது சீர்த்தியையே; கேளாழிநெஞ்சேகிளர்ந்து - ஆழ்ந்தகருத்துடையமனமே விரும்பிக்கேள்.

உடம்பின் நிலையின்மையை யுணர்ந்து அவர்புகழைக்கேட்டுச்சிந்தித்தொழுகென்பது கருத்து.

காரைக்காலம்மையார் அருளிச்செய்த

திருவிரட்டைமணிமாலையுரை

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

அற்புதத்திருவந்தாதியுரை.

க. பிறந்துமொழிபயின்றபின்னெல்லாங்காதல்
சிறந்துநின்சேவடியேசேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்துவானோர்பெருமானே
யெஞ்ஞான்றுதீர்ப்பதிடர்.

(இ-ள்.) பிறந்துமொழிபயின்றபின்னெல்லாம்-நில்வுலகிற்பிறந்துசொல்லைப்பழகிய பின்னாளெல்லாம்; காதல்சிறந்துநின்சேவடியேசேர்ந்தேன் - விருப்புமீக்கூர்ந்துயான் உம் திருவடியையேயடைந்தேன்; நிறந்திகழுமைஞ்ஞான்றகண்டத்து - ஒளிதிகழும் கருநிறம் தங்கியதிருமிடற்றையுடைய; வானோர்பெருமானே - விண்ணவர்முதல்வரே; எஞ்ஞான்று தீர்ப்பதிடர் - இப்பிறவிநோயை எந்நாள்நீர்தீர்ப்பது.—எ-று.

ஈண்டுச்சேர்தல் இடைவிடாதுதியானித்தல். அவ்வாறு தியானிக்கின்ற எமக்குப் பிறவிநோயை நீக்கவேண்டுமென்பது கருத்து.

உ. இடர்களையாரேனுமெமக்கிரங்காரேனும்
படருநெறிபணியாரேனுஞ்—சுடருருவி
லென்பறாக்கோலத்தெரியாடுமெம்மானார்க்
கன்பறாதென்னெஞ்சவர்க்கு.

(இ-ள்.) இடர்களையாரேனும் - எம்பிறவித்துன்பத்தை நீக்காதொழிவரேனும்; எமக் கிரங்காரேனும் - எஞ்சிறுமைநோக்கி அருள்செய்யாரெனினும்; படருநெறிபணியாரே னும் - நாம்செல்லும்செந்நெறி இதுவென்றுபணித்தருளாரேனும்; சுடருருவிலென்பறாக் கோலத்தெரியாடும்-தீப்போலும்தம்திருமேனியில் என்பாரம்நீங்காததிருக்கோலத்தோடு; புறங்காட்டெரியின்கண் ஆடுகின்ற - எம்மானார்க்குஅவர்க்கு - எம்மானாகியஅவர்க்கு; அன் பறாதென்னெஞ்சு - என்னுடையமனம் அன்பினின்றும்நீங்காது.—எ-று.

எரியாடுதல் - உலகுசங்கரிக்கப்படுங்கால் அவ்வெரியின்கணாடல். அவரருளாதொழி யினும் அவரன்பு எந்நெஞ்சகலாதென்றதனாற் பயன்கருதிவழிபடும் விண்ணவர்முதலி யோரன்புபோலன்றி எம்மன்பு இறை திருவருளுக்கொத்து ஓர்பயனுங்கருதாது இயல் பால்நிற்கு மெய்யன்பென்பதுவிளக்கியது. அற்றாகலினன்றே வீடும்வேண்டா விறலின் விளங்கினாரென மெய்யடியார்பத்தித்திறத்தைக் கூறியதூஉமென்க.

ங. அவர்க்கேயெழுபிறப்புமாளாவோமென்று
மவர்க்கேநாமன்பாவதல்லாற்—பவர்ச்சடைமேற்
பாகாப்போழ்சூடுமவர்க்கல்லான்மற்றொருவர்க்
காகாப்போமெஞ்ஞான்றுமாள்.

(இ-ள்.) அவர்க்கேயெழுபிறப்புமாளாவோம் - பிறப்பேழினும் அவர்க்கேயாளா வோம்; என்றுமவர்க்கேநாமன்பாவதல்லால் - எந்நாளும்நாம் அப்பிரானுக்கே அன்பாதலு மன்றி; பவர்ச்சடைமேற்பாகாப்போழ்சூடும் - நெருங்கியசடைமுடியின்மேல் சரிபாதியல் லாத சந்திரனுடையபிளவைச்சூடுகின்ற; அவர்க்கல்லான்மற்றொருவர்க்கு - அச்சிவபிரா னுக்கன்றிப்பிறரொருவருக்கு; ஆகாப்போமெஞ்ஞான்றுமாள் - எந்நாளும் ஆளாகாமலு மிருப்போம்.—எ-று.

சிவபிரானேமுதல்வரென்றும் பிறர் முதல்வரன்றென்றும் உண்மைத்தன்மையும் இன்மைத்தன்மையும் துணிந்தோமாதலின் அவர்க்கேயாட்படுவமென்றார். பகா என்பது பாகா எனமுதனீண்டது. அப்பாதிசரிபாதியன்மையின் அதிற்குறைந்ததென்றுகருத்து.

சு. ஆளானோமல்லலறியமுறையிட்டாற்
கேளாததென்கொலோகேளாமை—நீளாகஞ்
செம்மையானாகித்திருமிடறுமற்றொன்றா
மெம்மையாட்கொண்டவிறை.

(இ-ள்.) எம்மையாட்கொண்டவிறை - எம்மையடிமைக்கொண்டமுதல்வன்; ஆளா னோமல்லலறியமுறையிட்டால் - அடியேம் எம்துயரையறிவித்தற்கேதுவாக முறையீடு செய்தால்; கேளாததென் - கேளாதிருத்தல்என்; கேளாமை - கேளாமைக்குக்காரண மென்னெனின்; நீளாகஞ்செம்மையானாகி - அவர்திருமேனிசெந்நிறமுடையராகியும்; திரு மிடறுமற்றொன்றாம் - திருமிடறுகரியதாயிருக்கும் அதுவாம்.—எ-று.

இவர்கேட்டற்குரியரேனுங் கேளாமைக்குமிடற்றுமறுவே காரணமென்றாராயிற்று.

ரு. இறைவனேயெவ்வுயிருந்தோற்றுவிப்பான்றோற்றி
யிறைவனேயீண்டிறக்கஞ்செய்வா—னிறைவனே
யெந்தாயெனவிரங்குமெங்கண்மேல்வெந்துயரம்
வந்தாலதுமாற்றுவான்.

(இ-ள்.) இறைவனேயெவ்வுயிருந்தோற்றுவிப்பான் - சிவபிரானே எவ்வுயிரையும் உதிப்பிக்கின்றவன்; தோற்றியிறைவனேயீண்டிறக்கஞ்செய்வான் - அவ்வாறுதிப்பித்துச் சிவபிரானே அவ்வுயிர்களுக்குத்தனுவாதிகளை யழித்தலைச்செய்கின்றவன்; இறைவனே - அச்சிவபிரானே; எந்தாயெனவிரங்குமெங்கண்மேல் - எமதுதந்தையேயென்றுசொல்லித் தன் இழப்பைக்காட்டிநிற்கும் எம்மிடத்து; வெந்துயரம்வந்தாலதுமாற்றுவான் - கொடுந் துயர்வரின் அதைநீக்குவான்.—எ-று.

உயிர்நித்தியமாதலின் உடல்கரணம்புவனங்கொடுத்துணர்வுவிளக்குவித்தலே யதனை யுதிப்பித்தலும், அவற்றையொழித்து அவ்வுணர்வைமறப்பித்தலே அதனையழித்தலும் இலக்கணையாற்கொள்ளப்படுமென்க. எவ்வுயிரும் என்றதனால் விஞ்ஞானகலர் பிரளயா கலர் சகலரென்னும் மூவகையுயிருங்கொள்க.

சூ. வானத்தானென்பாருமென்கமற்றும்பர்கோன்
றானத்தானென்பாருந்தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத்தாலிருண்டமொய்யொளிசேர்கண்டத்தா
னென்னெஞ்சத்தானென்பன்யான்.

(இ-ள்.) முன்னஞ்சத்தாலிருண்ட - முன்னாளில் விடங்காரணமாகக்கருகிய; மொ ய்யொளிசேர்கண்டத்தானும்பர்கோன் - திரண்டஒளியினையுடைய திருமிடற்றனாகியசிவ பிரான்; வானத்தானென்பாருமென்க - வானத்தின்கணுளனென்று கூறுவாருங்கூறுக; தானத்தானென்பாருந்தாமென்க - மண்ணுலகத்தானென்று கூறுவாருங்கூறுக; ஞானத்

தால் - திருவருண் ஞானத்தால் (என்னெஞ்சத்தகலாதிருத்தலின்);என்னெஞ்சத்தானென் பன்யான் - என்னெஞ்சத்தின்கணுளனென்றுயான்கூறுவன்.—எ-று.

திருவருண்ஞானத்தாற் றம்நெஞ்சத்திருத்தல் சிறப்பியல்பாகலின் அதுசிறந்ததென் றாராயிற்று. நெஞ்சமென்றதீண்டுயிரை. தானமென்றதுமண்ணுலகத்தை, வானுக்குவேறு பண்ணுலகமாதலின்.

எ. யானேதவமுடையேனென்னெஞ்சேநன்னெஞ்சம்
யானேபிறப்பறுப்பானெண்ணினேன்—யானேயக்
கைம்மாவுரிபோர்த்தகண்ணுதலான்வெண்ணீற்ற
வம்மானுக்காளாயினேன்.

(இ-ள்.) யானேதவமுடையேன் - யானேதவமுடையனாயிருக்கின்றேன்; என்னெஞ்சேநன்னெஞ்சம் - என்மனமேநன்மனம்; யானேபிறப்பறுப்பானெண்ணினேன் - யானேபிறப்பை நீக்கக்கருதினேன்; யானேயக்கைம்மாவுரிபோர்த்தகண்ணுதலான் - நானேயானையினதுதோலைப் போர்வையாகப்போர்த்த நெற்றிக்கண்ணையுடைய; வெண்ணீற்றவம்மானுக்காளாயினேன்-வெள்ளியநீறணிந்தசிவபிரானுக்கு ஆட்பட்டேன்.—எ-று.

வறிஞனருஞ் செல்வம்பெற்றுழித் தன்குறைநிரப்புநீங்கிக் கழிபேருவகையாற்றன் னியனுனேனெனக்கூறுதல்போன் முதல்வர்க்காளாம் அருண்ஞானக்குறியால் இங்ஙனங்கூறியது.

அ. ஆபினேனுள்வானுக்கன்றேபெறற்கரிய
ஞயினேனஃதன்றேயாமாறு—தூய
புனற்கங்கையேற்றானோர்பொன்வரையேபோல்வா
னனற்கங்கையேற்றானருள்.

(இ-ள்.) ஆள்வானுக்காயினேன் - ஆட்கொள்ளும் இயல்பினையுடைய சிவபிரானுக்கு ஆட்பட்டேன்; அன்றேபெறற்கரியனாயினேன் - அன்றைக்கேபெரும்பேறுடையனாயினேன்; தூயபுனற்கங்கையேற்றான் - தூய்மையாகிய நீர்நிறைந்தகங்கையைப் பகீரதன்பொருட்டுத் திருமுடியிலேற்றவரும்; ஓர்பொன்வரையேபோல்வான் - நிகரற்றமேருவரையையொத்தவரும்; அனற்கங்கையேற்றான் - அனலையுங்கபாலத்தையும் திருக்கரத்தின்கணேற்றவருமாகியசிவபிரானது; அருளாமாறுஅஃதன்றே - திருவருளாமாறு அதுவே.—எ-று.

சிவபிரானுக்காட்படுதலே பெறுதற்கரிய பேறென்பதுகருத்து.

கூ. அருளேயுலகெலாமாள்விப்பதீச
னருளேபிறப்பறுப்பதானு—லருளாலே
மெய்ப்பொருளைநோக்கும்விதியுடையேனெஞ்ஞான்று
மெப்பொருளுமாவதெனக்கு.

(இ-ள்.) அருளேயுலகெலாமாள்விப்பது - சிவபிரான்திருவருளே உயிர்களையெல்லாம் ஆளாக்குவிப்பதும்; ஈசனருளேபிறப்பறுப்பதானல் - அச்சிவபிரான்திருவருளே பிறப்பையொழிப்பதுமானல்; அருளாலேமெய்ப்பொருளைநோக்கும்விதியுடையேன்-அத்திருவருளினாலே பரம்பொருளாகிய அச்சிவபிரானையுணரும் ஊழுடையேனாதலினல்; எஞ்ஞான்றுமெப்பொருளுமாவதெனக்கு - எவ்விடத்தும் எனக்கு எப்பொருளுங்கிடைக்கும்.—எ-று.

ஆள்விப்பதும் பிறப்பறுப்பதுமாகியதிருவருளால் சிவபிரானையுள்கும் ஊழையுடையவெனக்கு எவ்விடத்தும் எப்பொருளும் வேண்டிவிழுக்கின்றெண்பதுகருத்து.

௰. எனக்கினியவெம்மானையீசனையானென்று
மனக்கினியவைப்பாகவைத்தே—னெனக்கவனைக்
கொண்டேன்பிரானாகக்கொள்வதுமேயின்புற்றே
னுண்டேயெனக்கரியதொன்று.

(இ-ள்.) எனக்கினியவெம்மானையீசனை - எனக்கினியனாகிய எம்பிரானை ஈசனை; யானென்றுமனக்கினியவைப்பாகவைத்தேன் - நான் எந்நாளும்மனத்திற்கினியநிதியாக வைத்தேன்; எனக்கவனைக்கொண்டேன்பிரானாக - எனக்கு அச்சிவபிரானைக் கடவுளாக வுங்கொண்டேன்; கொள்வதுமேயின்புற்றேன் - கொள்ளுதலும் இன்பமடைந்தேன்; உண்டேயெனக்கரியதொன்று - இனி எனக்கரியபொருள் ஒன்றுமில்லை.—எ-று.

மேலாயபொருளையடைந்து வீட்டின்பமெய்தியவெமக்கு விரும்பியடையுமரியபொருளொன்று மின்றென்பதுகருத்து.

௧௧. ஒன்றேநினைந்திருந்தேனொன்றேதுணிந்தொழிந்தே
னொன்றேயென்னுள்ளத்தினுள்ளடைத்தே—னொன்றேகாண்
கங்கையான்றிங்கட்கதிர்முடியான்பொங்கொளிசே
ரங்கையாற்காளாமது.

(இ-ள்.) ஒன்றேநினைந்திருந்தேன்-பதிப்பொருளாகியசிவம் ஒன்றையே உள்கியிருந்தேன்; ஒன்றேதுணிந்தொழிந்தேன் - அப்பொருளொன்றையே நிச்சயித்தேன்; ஒன்றேயென்னுள்ளத்தினுள்ளடைத்தேன்-அப்பொருளொன்றையேஎன்னிதயத்திருத்தினேன்; ஒன்றே - (அதனால்) ஒன்றுதான்; கங்கையான்றிங்கட்கதிர்முடியான் - கங்கைநதியையுடையவனும் இளம்பிறைசூடிய திருமுடியையுடையவனுமாகிய; பொங்கொளிசேரங்கையாற்காளாமது - மிக்கொளிவீசும் அனலேந்திய கரத்தையுடைய அவர்க்கு அடிமையாவது.—எ-று. காண்-அசை.

நினைதல் சிந்தித்தலும் துணிதல் தெளிதலும் உள்ளத்தடைத்தல் தியானித்தலுமாகப்பொருள்கொள்க. இனிப்பிறர்க்காளாகவேண்டியதின்றென்பதுகருத்து. காண்-அசை.

௧௨. அதுவேபிரானாமாறாட்கொள்ளுமாறு
மதுவேயினியறிந்தோமானா—லதுவே
பனிக்கணங்குகண்ணியாரொண்ணுதலின்மேலோர்
தனிக்கணங்குவைத்தார்தகவு.

(இ-ள்.) பிரானாமாறுமதுவே - எமக்குமுதல்வராதலும்அதுவே; ஆட்கொள்ளுமாறுமதுவே - எம்மையாட்கொள்ளும்வழியும் அதுவேயாகுமென்று; இனியறிந்தோமானால் - இனிநாமறிந்தோமானால்; பனிக்கணங்குகண்ணியார் - கங்கையின்குளிர்ச்சிக்குவருந்துகின்ற கொன்றைமாலையணிந்தவரும்; ஒண்ணுதலின்மேலங்கோர்தனிக்கண் - ஒளியுடைய நெற்றியின்மேல் ஒப்பின்றிவிளங்கும் ஓர்கண்ணை; வைத்தார்தகவுஅதுவே - வைத்தவருமாகிய சிவபிரானது இயல்பும் அதுதான்.—எ-று.

பிரான் என்றதனால் முதன்மைக்குணமும் ஆட்கொள்ளுமாறென்றதனால் பேரருளுடைமையும்பெறப்படுதலின் அவரியல்பும் அதுவே என்றார்.

௧௩. தகவுடையார்தாமுளரேற்றாரகலஞ்சாரப்
புகவிடுதல்பொல்லாதுகண்டீர்—மிகவடர
வூர்ந்திடுமோநாகமொருநாண்மலைமகளைச்
சார்ந்திடுமேலேபாவந்தான்.

(இ-ள்.) தகவுடையார்தாமுளரேல் - நீர்தகுதியுடையராயிருந்தால்; மிகவடரவூர்ந்திடுமோநாகம் - மிகக்கொல்லும்படி ஊர்ந்துசெல்லும் மாநாகத்தை; தாரகலஞ்சாரப்புகவிடுதல் - மாலையாகமார்பில்பொருந்தவிடுதல்; பொல்லாதுகண்டீர் - பொல்லாதென்றறியும் (ஏனெனில்); ஒருநாண்மலைமகளைச்சார்ந்திடும் - அந்நாகம் ஒருதினத்தில் பார்ப்பதியாரையடையும்; மேலேபாவந்தான் - அவ்வாறடையின்பழிநிகழும்.—எ-று.

பழிவிளையும் எனக்காரணங்கூறிப் பாம்பையணியாதொழியுமென விலக்கியவாறு.

கச. தானேதனிநெஞ்சந்தன்னையுயக்கொள்வான்
றானேபெருஞ்சேமஞ்செய்யுமாற்—றானேயோர்
பூணாகத்தாற்பொலிந்துபொங்கழல்சேர்நஞ்சுமிழு
நீணாகத்தானைநினைந்து.

(இ-ள்.) தானேதனிநெஞ்சம்-தன்னியல்பிலே ஒப்பற்றமனமானது; தன்னையுயக்கொள்வான் - தன்னையுயக்கொள்ளும்படி; தானேபெருஞ்சேமஞ்செய்யும் - தானேபெரியகாவலைச் செய்துகொள்ளும் (எவ்வாற்றாலெனின்); தானேயோர்பூணாகத்தாற்பொலிந்து - தான் ஒருபூணாகவிருக்கும் உடம்பாற்பொலிவடைந்து; பொங்கழல்சேர்நஞ்சுமிழும் - மிக்கதீச்சேர்ந்தநஞ்சைக்கக்கும்; நீணாகத்தானைநினைந்து - நீண்டபாம்பையுடைய சிவபிரானைக்கருதி அத்தால்.—எ-று.

அடங்காமனம்தன்னியல்பில் அடங்கியதென அதன்றூய்மைகூறியவாறு. ஏ-அசை.

கரு. நினைந்திருந்துவானவர்களீண்மலராற்பாதம்
புனைந்துமடிபொருந்தமாட்டார்—நினைந்திருந்து
மின்செய்வான்செஞ்சடையாய்வேதியனேயென்கின்றேற்
கென்செய்வான்கொல்லோவினி.

(இ-ள்.) நினைந்திருந்துவானவர்கள்-தேவர்கள்பலநாள்கருதிக்கொண்டிருந்து; நீண்மலராற்பாதம்புனைந்தும் - உயர்ந்தமலர்களாற்றிருவடியிலருச்சித்தும்; அடிபொருந்தமாட்டார் - அத்திருவடியையடையமாட்டார்; நினைந்திருந்து - யானும் அவ்வாறுகருதிக்கொண்டு; மின்செய்வான்செஞ்சடையாய் - ஒளிவிடுகின்றபெருமைதங்கிய சிவந்தசடைமுடியுடையாய்; வேதியனேயென்கின்றேற்கு - மறையவனே என்றுதுதிக்கும் எனக்கு; என்செய்வான்கொல்லோவினி - இனி என்செய்வானோ அறியேன்.—எ-று.

கசு. இனியோநாமுய்ந்தோமிறைவன்றாள்சேர்ந்தோ
மினியோரிடரில்லோநெஞ்சே—யினியோர்
வினைக்கடலையாக்குவிக்குமீளாப்பிறவிக்
கனைக்கடலைநீந்தினோங்காண்.

(இ-ள்.) இனியோநாமுய்ந்தோம் - இனிநாம் உய்ந்தோம்; இறைவன்றாள்சேர்ந்தோம் - முதல்வன்திருவடியையடைந்தோம்; இனியோரிடரில்லோநெஞ்சே - இனிஓர் துயருமில்லோம்மனமே; இனியோர்வினைக்கடலையாக்குவிக்கும் - இனித்தீவினையாகிய கடலைப்பெருக்குவிக்கும்; மீளாப்பிறவிக்கனைக்கடலைநீந்தினோங்காண் - அழியாதபிறவியாகிய ஆர்ப்புடையகடலைக்கடந்தோம் நீகாண்பாய்.—எ-று.

தன்பேற்றின்பெருமைகூறியவாறு.

கஎ. காண்பார்க்குங்காணலாந்தன்மையனேகைதொழுது
காண்பார்க்குங்காணலாங்காதலாற்—காண்பார்க்குச்
சோதியாய்ச்சிந்தையுளேதோன்றுமேதொல்லுலகுக்
காதியாய்நின்றவரன்.

(இ-ள்.) தொல்லுலகுக்காதியாய்நின்றவரன் - பழையஉலகுக்கு ஆதிகாரணரான சிவபிரான்; காண்பார்க்குங்காணலாந்தன்மையனே-வெளிப்பட எவ்வகைமேம்பாட்டார்க்குங்காணுந்தன்மையுடையனல்லன் ஆயினும்; கைதொழுதுகாண்பார்க்குங்காணலாங்காதலால் - மெய்ப்பத்தியினுற்றொழுது காணவிரும்புகின்றவர்க்கும் வெளிப்படக்காணலாம்; காண்பார்க்குச்சோதியாய்ச்சிந்தையுளேதோன்றும் - அப்படிவெளிப்படத் தரிசிப்பவர்க்கு அவரிதயம்புகுந்து ஒளிவடிவாய்விளங்கும்.—எ-று. ஏ-அசை.

முதல்வன்வெளிப்பட இறைஞானம் விளங்குமென்பதுகருத்து.

கஅ. அரனென்கோநான்முகனென்கோவரிய
பரனென்கோபண்புணரமாட்டேன்—முரணழியத்
தானவனைப்பாதத்தனிவிரலாற்செற்றானை
யானவனையெம்மானையின்று.

(இ-ள்.) முரணழியத்தானவனைப்பாதத்தனிவிரலாற்செற்றானை - வலிகெடும்படி இராவணனைத்திருவடிக்கணுள்ள பெருவிரலாலழித்தவனை; அவனையெம்மானையின்று யான் - எம்மானாகிய அவனை இன்றுயான்; அரனென்கோநான்முகனென்கோ - உருத்திரரென்றுகூறுகோ பிரமனென்றுசொல்லுகோ; அரியபரனென்கோ - அரியென்னும் பெயரையுடைய திருமாலென்றுசொல்லுகோ; பண்புணரமாட்டேன் - அவ்வடிவங்களில்அதுவதுவாயிருத்தலில் அவ்வியல்புநானுணரமாட்டேன்.—எ-று.

சிவபிரான் உருத்திரமூர்த்தியில் அபேதமாய்க்கலந்து ஏனையமூர்த்திகளையும் ஏவி அததுவாயிருத்தலேயன்றி வேறாயுமிருத்தலில் ஐயப்பாற்படுத்தியறியமாட்டேனென்று கூறினர்.

கக. இன்றுநமக்கெளிதேமாலுக்குநான்முகற்கு
மன்றுமளப்பரியனானானை—யென்றுமோர்
மூவாமதியானைமூவேழுலகங்க
ளாவானைக்காணுமறிவு.

(இ-ள்.) மாலுக்குநான்முகற்குமன்றுமளப்பரியனானானை - திருமால் பிரமன் என்னுமிருவர்க்கும் அந்நாளிலும் அளத்தற்கரியனாயுள்ளவனை; என்றுமோர்மூவாமதியானை - என்றும் ஓரியல்பிற்றாய பிறைக்கண்ணியுடையானை; மூவேழுலகங்களாவானை - சுவர்க்கமத்தியம்பாதலம் என்னும் மூன்றுபகுப்போடுகூடிய ஏழுலகங்களிலும்கலந்திருக்கின்றவனை; காணுமறிவு - தரிசிக்கின்றமெய்யுணர்ச்சி; இன்றுநமக்கெளிது - இந்நாளில் நமக்கெளிதாயிற்று.—எ-று. ஏ-அசை.

பதினாலுலகங்களையுமடக்கி ஏழுலகமென்றுகூறும் மரபுபற்றி ஏழுலகமென்றார். தற்போதத்தாலுணர்தற்கரியகாட்சி இறைஞானத்தால் எளிவந்ததென்பதுகருத்து.

உ0. அறிவானுந்தானேயறிவிப்பான்றானே
யறிவாயறிகின்றான்றானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந்தானேவிரிசுடர்பாராகாய
மப்பொருளுந்தானேயவன்.

(இ-ள்.) அறிவானுந்தானே - உயிர்க்குயிராய்நிற்கின்றமுறைமையால் உயிர்களின் வினைப்பயனையறிகின்றவனுந்தானே; அறிவிப்பான்றானே - அவ்வினைப்பயனை உயிர்களுகர்தற்குக்கருவிகளைக்கூட்டி அறிவிக்கின்றவனுந்தானே; அறிவாயறிகின்றான்றானே - காணுமுபகாரத்தால் அவ்வுயிராயிருந்தறிகின்றவனுந்தானே; அறிகின்றமெய்ப்பொருளுந்தானே - அவ்வுயிராலறியப்படுகின்ற உண்மைப்பொருளுந்தானே; விரிசுடர்பாராகாய

மப்பொருளுந்தானேயவன் - அதுவன்றிவிரிந்தமுச்சுடரும், மண்புனல் அனல்கால் ஆகாயமென்னும் அப்பொருளாயிருக்கின்றவனும் அவன்தானே.—எ-று.

அறிவிப்பான் என்றது காட்டுமுபகாரமென்றும், அறிவாயறிதல்காணுமுபகாரமென்றும், இவ்விரண்டும் பந்தமுத்தியிரண்டிற்குமாமென்றுங்கொள்க.

உக. அவனேயிருசுடர்தீயாகாசமாவா
னவனேபுவிபுனல்காற்றுவா—னவனே
யியமானனுயட்டமூர்த்தியுமாய்ஞான
மயனுகிநின்றுனும்வந்து.

(இ-ள்.) அவனேயிருசுடர்தீயாகாசமாவான் - அவனேஞாயிறுந்திங்களும் அங்கியும் ஆகாயமுமாயிருக்கின்றவனும்; அவனேபுவிபுனல்காற்றுவான் - அவனேநிலனும் புனலும் காற்றுமானவனும்; அவனேயியமானனுய்அட்டமூர்த்தியுமாய் - அவனேயான்மாவாயும் இவ்வெட்டனுள்விரவி யட்டமூர்த்தியாயும்; ஞானமயனுகிநின்றுனும்வந்து - இவ்வுபாதியின்றிவெளிப்பட்டு ஞானமயனுகிநின்றவனும்.—எ-று.

நிலமுதல் இயமானனீறுய எட்டும் அட்டமூர்த்தமெனக்கூறியிருக்க அவற்றிற்பிரித்து அட்டமூர்த்தியுமாயெனக்கூறியதுஎன்னையோவெனின்; அவ்வெட்டுருவங்களையும் அதிட்டிக்கும் மூர்த்திகள் எட்டாதல்பற்றியென்க. இம்மூர்த்திகள் எட்டும் நிலமுதற்பொருள்களையதிட்டித்து அததுவாய்நிற்கும்முறைமைபற்றி ஒன்றுய்க்கூறுதலுமுண்டு. ஆயின் இயமானனுயட்டமூர்த்தியுமாயென்றதனுல் இவ்வெட்டினும் அதிட்டித்துநிற்றலேயன்றி அவ்வெட்டினும் வியாபித்துநிற்கும் முறைமையுங்கூறியவாறு. வியாபித்துநிற்குங்கால் வியாப்பியவியாபகவியல்பென்னுமியைபும்; அதிட்டித்துநிற்குங்கால் அதுவாதலென்னுமியைபுங் கொள்ளப்படும். எப்பொருள்களையுமுதிப்பித்து அதுவாயினனென்று சுருதிகூறுதலின். இவ்வெட்டுஞ் சகளமாதலின் ஞானமயனுயென்றது நிட்களவுருவையென்க. வந்துநின்றுனும் என்றது வினையெச்சமுடிபு.

உஉ. வந்திதனைக்கொள்வதேயொக்குமிவ்வாளரவின்
சிந்தையதுதெரிந்துகாண்மினே—வந்தோ
ரிராநீரிருண்டனையகண்டத்தீரெங்கள்
பிரானீருஞ்சென்னிப்பிறை.

(இ-ள்.) வந்தோரிராநீரிருண்டனையகண்டத்தீர் - இராவும்நீரும்சேர்ந்து இருண்டிருந்தாற்போலும் திருமிடறுடையவரே; எங்கள்பிரானீருஞ்சென்னிப்பிறையிதனை - எங்கள்பிரானே உமதுதிருமுடியின்கணுள்ளபிறையை; வந்துகொள்வதேயொக்குமிவ்வாளரவின்சிந்தை - வந்துகவரக்கருதியதுபோலும் வாள்போலும் கூரியபற்களையுடைய இப்பாம்பின் எண்ணம்; அதுதெரிந்துகாண்மின் - அவ்வெண்ணத்தைத்தெரிந்துகொள்வீர்.--எ-று. ஒ - அசை.

பிறை இளைதாயும் நன்காயுமிருத்தலின் மூர்க்கப்பாம்பு அதற்குத்தீங்குவிளைக்குமென ஏதுக்கூறி அதைவிலக்கியவாறு. நீரிருளல் மேகமாய்ப்பரிணமித்தல், கருமைமிகுதியுணர்த்தியவாறு.

உங. பிறையும்புனலுமனலரவுஞ்சூடு
மிறைவரெமக்கிரங்காரேனுங்—கறைமிடற்ற
வெந்தையார்க்காட்பட்டேமென்றென்றிருக்குமே
யெந்தையாவுள்ளமிது.

(இ-ள்.) பிறையும்புனலுமனலரவுஞ்சூடும் - இளம்பிறையும் கங்கைநதியும் விடத்தாற்கனலுகின்ற பாம்பும் ஆகிய இவைகளைச்சூடும்; இறைவரெமக்கிரங்காரேனும் - பிரானுர் எமக்கருள்செய்யாதொழியினும்; கறைமிடற்றவெந்தையார்க்காட்பட்டேம் - கறைமிடற்றையுடைய எம்பிரானுர்க்கு அடிமைப்பட்டோம்; என்றென்றிருக்கும் - என்றுகருதியிருக்கும்; எந்தையாவுள்ளமிது - எம் அன்புடையமனம்.—எ-று. ஏ-அசை.

தயாவுள்ளமென்றது தையாவுள்ளமெனநின்றது.

அன்பாலொருப்பட்டமனம் முதல்வனிரங்காவிடத்தும் வேறுபடாது ஆட்பட்டுநின்றதென்று அதன்சிறப்புக்கூறியவாறு.

உச. இதுவன்றேயீசன்றிருவுருவமாமா
றிதுவன்றேயென்றனக்கோர்சேம—மிதுவன்றே
மின்னுஞ்சுடருருவாய்மீண்டாயென்சிந்தனைக்கே
யின்னுஞ்சுழல்கின்றதிங்கு.

(இ-ள்.) மின்னுஞ்சுடருருவாய்மீண்டாயிதுவன்றே - மின்போலொளிரும் ஒளியுருவாய்த்தோன்றி நீமறைந்தாய்இதுவே; என்சிந்தனைக்கேயின்னுஞ்சுழல்கின்றதிங்கு-இவ்விடத்து இன்றளவும் என்சிந்தையினிடத்துச் சுழல்கின்றது; இதுவன்றேயீசன்றிருவுருவமாமாறு - இதுவே உன்னுடையதிருவுருவமாவது; இதுவன்றேயென்றனக்கோர்சேமம்- இதுவே எனக்கொரு சுகமாவது.—எ-று. ஏ-அசை.

சுடருருவாய்த்தோன்றிமறைந்த ஒளிநெறிகழிபேரன்பைவிளைத்துத் தன்னைவசமாக்கலின் இன்னுஞ்சுழல்கின்றதென்றும் அது ஈசன் திருவுருவமென்றும் தனக்கோர்சேமமென்றுங்கொண்டனர் என்க.

உடு. இங்கிருந்துசொல்லுவதெனெம்பெருமானெண்ணாதே
யெங்கும்பலிதிரியுமெத்திறமும்—பொங்கிரவி
லீமவனத்தாடுவதுமென்னுக்கென்றுராய்வோ
நாமவனைக்காணலுற்றஞான்று.

(இ-ள்.) இங்கிருந்துசொல்லுவதென்-அவரைக்காணாதவிடத்து அவரியல்பை இவ்விடத்திருந்துசொல்லுவது என்பயன்; எம்பெருமானெண்ணாது - எமது சிவபெருமான் ஒன்றுங்கருதாது; எங்கும்பலிதிரியுமெத்திறமும் - எவ்விடத்தும் பிட்சையெடுத்தல் முதலிய எப்பகுதியும்; பொங்கிரவிலீமவனத்தாடுவதும் - மிக்க இரவில் மயானத்தின்கண் துள்ளியாடுவதும்; என்னுக்கென்றுராய்வோம் - என்பயன்கருதியென்று விசாரிப்போம்; நாமவனைக்காணலுற்றஞான்று - நாமவரைக்கண்டபொழுது.—எ-று. ஏ-அசை.

உசா. ஞான்றகுழற்சடைகள்பொன்வரைபோன்மின்னுவன
போன்றகறைமிடற்றான்பொன்மார்பின்—ஞான்றெங்கு
மிக்கயலேதோன்றவிளங்கிமிளிருமே
யக்கயலேவைத்தவரவு.

(இ-ள்.) ஞான்றகுழற்சடைகள் - தூங்குகின்றதளர்வாகியசடைகள்; பொன்வரைபோன்மின்னுவன - பொன்மலைபோல் ஒளிவிடுகின்றன; போன்றகறைமிடற்றான்பொன்மார்பில் - இருள்போன்ற திருமிடறுடைய சிவபிரான்திருமார்பில்; ஞான்றெங்குமிக்கயலேதோன்றவிளங்கிமிளிரும் - தூங்கி எவ்விடத்தும்மிகுந்து அருகிற்காணவிளங்கியொளிரும்; அக்கயலேவைத்தவரவு - என்புமாலையின் அயலேவைத்தபாம்பு.—எ-று. ஏ-அசை.

கறைபோன்றவென்றது போன்றகறையெனமாறிநின்றது.

உஎ. அரவமொன்றாகத்துநீநயந்துபூணேல்
பரவித்தொழுதிரந்தோம்பன்னாண்—முரணழிய
வொன்னாதார்மூவெயிலுமோரம்பாலெய்தானே
பொன்னாரமற்றொன்றுபூண்.

(இ-ள்.) அரவமொன்று - பாம்பொன்றை; ஆகத்துநீநயந்துபூணேல் - திருமேனிக்கண் நீவிரும்பியணியற்க; பரவித்தொழுதிரந்தோம்பன்னாள் - இவ்வாறணியவேண்டாமென்று பன்னாளும் உன்னை நாம்துதித்துவணங்கி வேண்டிக்கொண்டோம்; முரணழிய வொன்னாதார்மூவெயிலுமோரம்பாலெய்தானே - வலிகெடப்பகைவர்வாழு முப்புரத்தையுந் திருமாலாகிய ஓரம்பினாலெய்தவனே; பொன்னாரமற்றொன்றுபூண் - வேறொருபொன்னணியையணிந்துகொள்.—எ-று.

உஅ. பூணாகவொன்றுபுனைந்தொன்றுபொங்கதளி
னாணாகமேன்மிளிரநன்கமைத்துக்—கோணாகம்
பொன்முடிமேற்சூடுவதுமெல்லாம்பொறியிலியேற்
கென்முடிவதாகவிவர்.

(இ-ள்.) பூணாகவொன்றுபுனைந்து - ஓர்நாகத்தை அணியாகவணிந்து; ஒன்றுபொங்கதளினாணாக - ஓர்நாகத்தைப்பொலிவுதங்கிய புலித்தோலின்கச்சாக; மேன்மிளிரநன்கமைத்து - மேலேவிளங்கநன்காகவைத்து; கோணாகம்பொன்முடிமேற்சூடுவதும் - ஓர்நாகத்தை அழகியதிருமுடியின்மேற் சூடிக்கொண்டிருப்பதும்; எல்லாம்பொறியிலியேற்கு- இச்செயலெல்லாம் அறிவிலியாகிய அடியேற்கு; என்முடிவதாகவிவர் - என்விளைவிக்க இவர்செய்வது.—எ-று.

உகூ. இவரைப்பொருளுணரமாட்டாதாரெல்லா
மிவரையிகழ்வதேகண்டீ—ரிவர்தமது
பூக்கோலமேனிப்பொடிபூசியென்பணிந்த
பேய்க்கோலங்கண்டார்பிறர்.

(இ-ள்.) இவரைப்பொருளுணரமாட்டாதார்-இவரைமெய்ப்பொருளென்று அறியமாட்டாதாராய்; பூக்கோலமேனிப்பொடிபூசி - தாமரைமலர்போலும் சிவந்ததிருமேனிக்கண் திருவெண்ணீறுபூசி; என்பணிந்தஇவர்தமதுபேய்க்கோலங்கண்டார்பிறரெல்லாம்- என்புமாலையையணிந்த இவரது பேய்க்கோலத்தைக்கண்ட பிறரெல்லாம்; இவரையிகழ்வதேகண்டீர் - இவரையிகழ்ந்துகூறுவதென்றறியுங்கள்.—எ-று.

இவரைமெய்ப்பொருளென்றுணர்ந்தவர்களிகழாரென்பதுகருத்து.

ஙo. பிறரறியலாகாப்பெருமையருந்தாமே
பிறரறியும்பேருணர்வுந்தாமே—பிறருடைய
வென்பேயணிந்திரவிற்றீயாடுமெம்மானார்
வன்பேயுந்தாமுமகிழ்ந்து.

(இ-ள்.) எம்மானார் - எம்முதல்வர்; பிறருடையவென்பேயணிந்து - இறந்தாரது என்பையணிந்து; வன்பேயுந்தாமுமகிழ்ந்து - வலியபேயுந்தாமுங்களித்து; இரவிற்றீயாடும் - நடுவிரவில் அனலின்கண் ஆடுவர் (அவ்வாறாடினும்;) பிறரறியலாகாப்பெருமையருந்தாமே - பிறராலுணரப்படாத பெருமையுடையவருந்தாமே; பிறரறியும்பேருணர்வுந்தாமே - பிறராலுணரப்படும் பேரறிவுருவமுந்தாமே.—எ-று.

௩௧. மகிழ்திமடநெஞ்சேமானுடரினீயுந்
திகழ்திபெருஞ்சேமஞ்சேர்ந்தா—யிகழாதே
யாரென்பேயேனுமணிந்துழல்வார்க்காட்பட்ட
பேரன்பேயின்னும்பெருக்கு.

(இ-ள்.) மடநெஞ்சேபெருஞ்சேமஞ்சேர்ந்தாய் - அறியாமையுடையமனமேநீ மிக்க சுகத்தையடைந்தாய்அதனால்; மகிழ்தி - மகிழ்வாய்; மானுடரினீயுந்திகழ்தி - மானுடர்களில் நீயும்மிக்குவிளங்குவாய்; இகழாதேயாரென்பேயேனுமணிந்துழல்வார்க்கு - இகழாமல்இறந்தார்யாவரென்பையேயேனும் அணியாகக்கொண்டுசஞ்சரிக்கும்பிரானார்க்கு; ஆட்பட்டபேரன்பேயின்னும்பெருக்கு - அடிமையானமெய்யன்பை இன்னும்வளரச்செய்.

௩௨. பெருகொளியசெஞ்சடைமேற்பிள்ளைப்பிறையி
னொருகதிரேபோந்தொழுகிற்றொக்குந்—தெரியின்
முதற்கண்ணான்முப்புரங்களன்றெரித்தான்மூவா
நுதற்கண்ணான்றன்மார்பினூல்.

(இ-ள்.) முதற்கண்ணான்முப்புரங்களன்றெரித்தான் - எப்பொருட்கும்முதலில்நிற்கின்றவன் அந்நாளில்முப்புரத்தையெரித்தவன்; மூவாநுதற்கண்ணான்றன்மார்பினூல் - அழியாதநெற்றிக்கண்ணையுடையவன் அவனது திருமார்பிலணிந்திருக்கும்முப்புரிநூல்; பெருகொளியசெஞ்சடைமேல் - மிக்கவொளியினையுடைய சிவந்தசடைமுடியின்மேல்வாழும்; பிள்ளைப்பிறையினொருகதிரே - இளம்பிறையினது ஓர்கலையின்கிரணமே; போந்தொழுகிற்றொக்குந்தெரியின் - பெருகிவழிந்தாற்போலும் நோக்குமிடத்து.—எ-று.

௩௩. நூலறிவுபேசிநுழைவிலாதார்திரிக
நீலமணிமிடற்றானீர்மையே—மேலுலந்த
தெக்கோலத்தெவ்வுருவாயெத்தவங்கள்செய்வார்க்கு
மக்கோலத்தவ்வுருவேயாம்.

(இ-ள்.) நூலறிவுபேசி - தாங்கற்றநூலுணர்ச்சியைப்பேசி; நுழைவிலாதார்திரிக-மெய்ப்பொருளையறியாதார் அவ்வாறுகதறித்திரிக; நீலமணிமிடற்றானீர்மை - நீலமணிபோலும் திருமிடற்றையுடையசிவபிரானதியல்பு; மேலுலந்தது - எவ்வியல்புக்கும் கடந்துநின்றதுஆயினும்; எக்கோலத்தெவ்வுருவாய் - எவ்வடிவத்துஎந்தமூர்த்தியாய்க்கருதி; எத்தவங்கள்செய்வார்க்கும் - எவ்வகையானதவத்தைச்செய்கின்றவர்க்கும்; அக்கோலத்தவ்வுருவேயாம் - அவ்வடிவத்துஅம்மூர்த்தியேயாம்.—எ-று. ஏ - அசை.

தாங்கற்ற மெய்ந்நூற்பொருளைக் கற்றவாறுணராமையின் நுழைவிலாதாரென்றும், அவர் அப்பயனடையாமையின் திரிகவென்றுங்கூறினர். மேலுலந்தது என்றதனால் அவரியல்பு நூலறிவுக்கு வேறாயுணருமுணர்வென்றும் எக்கோலத்தெவ்வுருவென்றதனால் அகம்புறமென்னும் இருவகைச்சமயிகட்கும் அவ்வவர்கருதும்பொருளாய்நிற்குமியல்பென்றுங்கொள்க.

௩௪. ஆமாறறியாமேவல்வினைகளந்தரத்தே
நாமாளென்றேத்தார்நகர்மூன்றும்—வேமா
றொருகணையாற்செற்றானையுள்ளத்தாலுள்ளி
யருகணையாதாரையடும்.

(இ-ள்.) வல்வினைகள் - வலியதீவினைகளே; அந்தரத்தேநாமாளென்றேத்தார்நகர்மூன்றும் - நாமடியோமென்றுவணங்காத அசுரர்களது அந்தரத்திற்றிரியும்முப்புரமும்;

வேமாறொருகணையாற்செற்றானை - எரியும்வண்ணம் ஓரம்பாலழித்தசிவபிரானை; ஆமாறறியாமேயுள்ளத்தாலுள்ளி - ஆம்வண்ணமீதென்றறியாமல் மனத்தாற்கருதி; அருகணையாதாரையடும் - அருகிற்சாராதாரைநீவிர்வருத்துங்கள்.—எ-று.

அருகணையாதாரை வல்வினைகளடும் என்றுரைப்பினுமமையும்.

௩௫. அடுங்கண்டாய்வெண்மதியென்றஞ்சியிருள்போந்
திடங்கொண்டிருக்கின்றதொக்கும்—படங்கொ
ளணிமிடற்றபேழ்வாயரவசைத்தான்கோல
மணிமிடற்றினுள்ளமறு.

(இ-ள்.) அடும்வெண்மதியென்றஞ்சி - வெள்ளிய இளம்பிறைதம்மைக் கொல்லுமென்றச்சமுற்று; இருள்போந்திடங்கொண்டிருக்கின்றதொக்கும் - இருள்சென்றுகுடியிருந்தாற்போலும்; படங்கொளணிமிடற்றபேழ்வாய் - படந்தங்கிய அழகியமிடற்றோடுகூடியபகுந்தவாயையுடைய; அரவசைத்தான்கோலமணிமிடற்றினுள்ளமறு - அரவையசைத்தசிவபிரானது அழகியநீலமணிபோலும் கரியதிருமிடற்றிலுள்ளமறுவானது.-எ--று. கண்டாய் - அசை.

௩௬. மறுவுடையகண்டத்தீர்வார்சடைமேனாகந்
தெறுமென்றுதேய்ந்துழலுமாவா—வுறுவான்
றளரமீதோடுமேற்றானதனையஞ்சி
வளருமோபிள்ளைமதி.

(இ-ள்.) மறுவுடையகண்டத்தீர் - மறுத்தங்கியதிருமிடற்றையுடையீர்; வார்சடைமேனாகந்தெறுமென்று - நீண்டசடையின்மேலிருக்கும் பாம்புதன்னைவருத்துமென்று; பிள்ளைமதிதேய்ந்துழலுமாவா - இளம்பிறைதேய்ந்துவருந்தும் ஆஆ ஏனெனில்; நாகமுறுவான்றளரமீதோடுமேல் - அந்நாகமானது தான்வருந்தும்வண்ணம் தன்னையடைந்துமேற்செல்லுமாகில்; தானதனையஞ்சிவளருமோ - தானதற்கச்சமுற்றுவளராது.—எ-று.

௩௭. மதியாவடலவுணர்மாமதின்மூன்றட்ட
மதியார்வளர்சடையினானை—மதியாலே
யென்பாக்கையாலிகழாதேத்துவரேலிவ்வுலகி
லென்பாக்கையாய்ப்பிறவாரீண்டு.

(இ-ள்.) மதியாவடலவுணர்மாமதின்மூன்றட்ட - தம்மைமதியாதவலிய அசுரர்களுடைய பெரியமதில்மூன்றையும் எரித்தருளிய; மதியார்வளர்சடையினானை - இளம்பிறை தங்கிய நீண்டசடைமுடியையுடைய சிவபிரானை; மதியாலேயென்பாக்கையாலிகழாது - தம்புத்தியால் எலும்பைத்திருமேனியில் தரித்தல்காரணமாக இகழ்ச்சிசெய்யாது; ஏத்துவரேலிவ்வுலகில் - இந்நிலவுலகத்தில் துதிப்பாராயின்; என்பாக்கையாய்ப்பிறவாரீண்டு - எலும்போடுகூடிய யாக்கையுடையராய் இந்நிலவுலகத்திற்பிறக்கமாட்டார்.—எ-று.

௩௮. ஈண்டொளிசேர்வானத்தெழுமதியைவாளரவந்
தீண்டச்சிறுகியதேபோலாதே—பூண்டதோர்
தாரேறுபாம்புடையான்மார்பிற்றழைந்திலங்கு
கூரேறுகாரேனக்கொம்பு.

(இ-ள்.) ஈண்டொளிசேர்வானத்தெழுமதியை - இவ்விடத்தில் ஒளிதங்கியவானத்தின்கண் எழாநின்றஇளம்பிறையை; வாளரவந்தீண்டச்சிறுகியதேபோலாதே - ஒளிதங்கியசர்ப்பம் தீண்டுமிடத்துச் சிறுகியதேயொக்கும்; பூண்டதோர்தாரேறுபாம்புடையான்-

அணிந்துகொண்ட ஓர்மாலைபோலும் பாம்பையுடையசிவபிரான்; மார்பிற்றழைந்திலங்கு - திருமார்பிற்பொலிந்துவிளங்குகின்ற; கூரேறுகாரேனக்கொம்பு - கூர்மைபொருந்தியகரிய பன்றியினதுகொம்பு.—எ-று.

௩௯. கொம்பினையோர்பாகத்துக்கொண்டகுழகன்ற
னம்பவளமேனியதுமுன்னஞ்—செம்பொ
னணிவரையேபோலும்பொடியணிந்தால்வெள்ளி
மணிவரையேபோலுமறித்து.

(இ-ள்.) கொம்பினையோர்பாகத்துக்கொண்ட - உமாதேவியை ஓர்கூற்றில்வைத்த; குழகன்றனம்பவளமேனியது - சிவபிரானது அழகியபவளம்போலும் திருமேனியானது; முன்னஞ்செம்பொனணிவரையேபோலும் - முன்சிவந்தபொன்மயமான அழகியமேருவை யொக்கும்; பொடியணிந்தால்வெள்ளிமணிவரையேபோலுமறித்து-அதன்மேல்பூதியணிந்தால் மீண்டு அழகியதிருக்கயிலைபோலிருக்கும்.—எ-று.

௪௦. மறித்துமடநெஞ்சேவாயாலுஞ்சொல்லிக்
குறித்துத்தொழுதொண்டர்பாதங்—குறித்தொருவர்
கொள்ளாததிங்கட்குறுங்கண்ணிகொண்டார்மாட்
டுள்ளாதார்கூட்டமொருவு.

(இ-ள்.) மறித்துமடநெஞ்சேவாயாலுஞ்சொல்லி - மீட்டுமடமைதங்கியமனமேநீ வாயினாலுந்துதித்து; குறித்துத்தொழுதொண்டர்பாதம் - மனதினாலுங்குறித்து அடியார் திருவடியைவணங்கு; குறித்தொருவர்கொள்ளாத - கருதிஒருவரும் அணிந்துகொள்ளாத; திங்கட்குறுங்கண்ணிகொண்டார்மாட்டு - இளம்பிறையாகிய இண்டைமாலையை அணிந்து கொண்டசிவபிரானை; உள்ளாதார்கூட்டமொருவு - கருதாதவர்களது கூட்டத்தைநீங்கு.

௪௧. ஒருபாலுலகளந்தமாலவனுமற்றை
யொருபாலுமையவளாமென்று—மிருபாலு
நின்னுருவமாகநிறந்தெரியமாட்டோமா
னின்னுருவோமின்னுருவோநேர்ந்து.

(இ-ள்.) ஒருபாலுலகளந்தமாலவனும் - தம்இடக்கூற்றில் உலகளந்ததிருமால்வடிவ மிருக்கும்; மற்றையொருபாலுமையவளாம்-மற்றொருகூறுஉமையவள்கூறாயிருக்கும்; என்றால்-ஆனால்; இருபாலும் - இடக்கூறுவலக்கூறாகிய இருபகுதியிலும்; நின்னுருவமாகநேர்ந்துநிறந்தெரியமாட்டோம்-நின்னுருவமாகக்கிட்டி உருவேறுபடுத்தறியமாட்டோம்; மானின்னுருவோ - திருமால்உமதுவடிவமோ; மின்னுருவோ - உமாதேவியாரின் உருவமோ.

இவ்விரண்டில் உன்னுருவம் வேறிருந்தால் மூவுருவாகப்பகுத்தறியலாம். அல்லாவிடத்து அறிதல்கூடாமையின் நிறந்தெரியமாட்டோமென்றார். இதனால் நின்னுரு உமையுருவிற்கலந்தபேதமாயிருக்குமென்றதுகருத்து. மால் நின்னுருவோ மின்னுருவோ என்றதனால் மால் சத்தியுருவமாயினும் பிரகிருதியம்சமாதலின் சமவேதமாகிய பராசத்தியின் பாற்படாது. அச்சத்தி யதிட்டித்தற்குரிய ஓர்கூறாயிருக்குமென்றாராயிற்று. இவை தம்முள்வேற்றுமை.

௪௨. நேர்ந்தரவங்கொள்ளச்சிறுகிற்றேயதனை
யீர்ந்தளவேகொண்டிசையவைத்தாயோ—பேர்ந்து
வளங்குழவித்தாய்வளரமாட்டாதோவென்றோ
விளங்குழவித்திங்களிது.

(இ-ள்.) நேர்ந்தரவங்கொள்ளச்சிறுகிற்றே - கிட்டிப்பாம்புகவர அதனால் நுணுகியதோ; நீயதனையீர்ந்தளவேகொண்டிசையவைத்தாயோ - நீர்அவ்விளம்பிறையைப்பிளந்து வேண்டிய அளவுக்கு எடுத்துக்கொண்டுபொருந்தவைத்தீரோ; பேர்ந்துவளங்குழவித்தாய் வளரமாட்டாதோ - இனிவளர்ந்தங்கிய இளமைத்தன்மையுடைத்தாய் மேல்வளரமாட்டாதோ; என்னேவிளங்குழவித்திங்களிது - இளங்குழவித்திங்களினியல்புயாதோ அறியோம்.—எ-று.

சந. திங்களிதுசூடிச்சில்பலிக்கென்றார்திரியே
லெங்கள்பெருமானேயென்றிரந்து—பொங்கொளிய
வானோர்விலக்காரேல்யாம்விலக்கவல்லமே
தானேயறிவான்றனக்கு.

(இ-ள்.) திங்களிதுசூடிச்சில்பலிக்கென்றார்திரியேல் - இளம்பிறைசூடி அற்பமான பிட்சைக்கென்று ஊரில்சஞ்சரிக்கவேண்டாம்; எங்கள்பெருமானேயென்றிரந்து - எங்கள் பெருமானேயென்று வேண்டிக்கொண்டு; பொங்கொளியவானோர்விலக்காரேல் - மிக்க ஒளியையுடையதேவர்கள் முன்னாளில் விலக்காதொழிவரேல்; யாம்விலக்கவல்லமே - யாம்விலக்குவதற்கு வல்லமையுடையோமல்லோம்; தானேயறிவான்றனக்கு - சுதந்தரமாகவேஅறியும் இயல்புடையபிரானார்பொருட்டு.—எ-று.

தானேயறிவான் என்றதனால் இயற்கையறிவுடையார்க்குப் போதிப்பாரின்றென்றது.

சச. தனக்கேயடியனாய்த்தன்னடைந்துவாழு
மெனக்கேயருளாவாறென்கொன்—மனக்கினிய
சீராளன்கங்கைமணவாளன்செம்மேனிப்
பேராளன்வானோர்பிரான்.

(இ-ள்.) மனக்கினியசீராளன் - மனத்திற்கினிய சீராளனும்; கங்கைமணவாளன்- கங்கைக்குமணவாளனும்; செம்மேனிப்பேராளன் - சிவந்ததிருமேனியுள்ள பெருமையையுடையவனுமாகிய; வானோர்பிரான் - தேவர்பிரான்; தனக்கேயடியனாய் - பிறருக்கின்றித்தனக்கடியவனாய்; தன்னடைந்துவாழும் - தன்னைப்பரமாக அடைந்துவாழ்கின்ற; எனக்கருளாவாறென் - எனக்கருள்செய்யாதவண்ணம் என்னோ.—எ-று.

ஏகாரமிரண்டில் முன்னையது பிரிநிலை பின்னையதும் கொல்லும் அசைநிலை.

சரு. பிரானவனைநோக்கும்பெருநெறியேபேணிப்
பிரானவன்றன்பேரருளேவேண்டிப்—பிரானவனை
யெங்குற்றானென்பீர்களென்போல்வார்சிந்தையினு
மிங்குற்றான்காண்பார்க்கெளிது.

(இ-ள்.) பிரானவனைநோக்கும் - சிவபிரானைச்சிந்திக்கும்; பெருநெறியேபேணி - பெருநெறியையே நெறியாகக்கொண்டு; பிரானவன்றன்பேரருளேவேண்டி - அவர்திருவருளையேவிரும்பி; பிரானவனையெங்குற்றானென்பீர்கள் - அவரைஎங்குற்றாரென்றுதேடுகின்றவர்களே; என்போல்வார்சிந்தையினும் - என்போல்வார்களது உள்ளத்திலும்; இங்குற்றான்காண்பார்க்கெளிது - இங்கிருக்கின்றான் அதனால் அவ்வாறுகாண்கின்றவர்களுக்குத் தரிசித்தல்கூடும்.—எ-று.

சசு. எளியதிதுவன்றேயேழைகாள்யாது
மளியீரறிவிலீராவா—வொளிகொண்மிடற்
றெந்தையராப்பூண்டுழலுமெம்மானையுண்ணினைந்த
சிந்தையராய்வாழுந்திறம்.

(இ-ள்.) எளியதிதேயேழைகாள் - எச்சாதனேயிலும் இதேஎளிதாகவிருக்கின்றது ஏழைகளேநீவிர்; யாதுமளியீரறிவிலீர்-எவ்வளவும் அளியில்லாதவர்களாயும் அறிவில்லாதவர்களாயுமிருக்கின்றீர்கள்; ஒளிகொண்மிடற்றெந்தை - ஒளிதங்கிய திருமிடற்றையுடைய எந்தையாகிய; அராப்பூண்டுழலுமெம்மானை-பாம்பையணிந்துசஞ்சரிக்கின்ற எமதுபிரானை; உண்ணினைந்த - உள்ளத்தில்சிந்திக்கின்ற; சிந்தையராய்வாழுந்திறம் - சிந்தையுடையவராய் வாழ்கின்றஇயல்பு.—எ-று.

அன்று - அசை. ஆவா - இரக்கக்குறிப்பு.

சஎ. திறத்தான்மடநெஞ்சேசென்றடைவதல்லாற்
பெறத்தானுமாதியோபேதாய்—நிறத்த
விருவடிக்கணேழைக்கொருபாகமீந்தான்
திருவடிக்கட்சேருந்திரு.

(இ-ள்.) நிறத்தஇருவடிக்கணேழைக்கு - நிறம்பொருந்திய இரண்டுகூரிய கண்களையுடையபார்வதியாருக்கு; ஒருபாகமீந்தான்றிருவடிக்கட்சேருந்திரு - ஒருகூற்றையருளிய சிவபிரானது திருவடியினிடத்துச் சேர்தற்கேதுவானமுத்தித்திருவை; திறத்தான் மடநெஞ்சே - மடமைதங்கியமனமே இடைவிடாதுசிந்திக்கும் தன்மையினுல்; சென்றடைவதல்லால் - நீகிட்டியடைவதன்றி; பெறத்தானுமாதியோபேதாய் - பேதையேநீவேறுவிதத்தால் பெறுதற்குமுரியையோ.—எ-று.

உம்மை அதனருமைகுறித்துநிற்றலில் உயர்வுசிறப்பு.

சஅ. திருமார்பிலேனச்செழுமருப்பைப்பார்க்கும்
பெருமான்பிறைக்கொழுந்தைநோக்கு—மொருநா
ளிதுமதியென்றென்றுகவின்றளவுந்தேரா
ததுமதியொன்றில்லாவரா.

(இ-ள்.) திருமார்பிலேனச்செழுமருப்பைப்பார்க்கும் - திருமார்பின்கண்ணே தரித்திருக்கும் பன்றியினதுசெழுவிய கொம்பைநோக்கும்; பெருமான்பிறைக்கொழுந்தைநோக்கும் - சிவபிரான்சூடிய இளம்பிறையைப்பார்க்கும்; ஒருநாளிதுமதியென்றென்றுக - ஒருநாளேனும்கொம்பன்று இதுமதியென்றுதுணிவாக; இன்றளவுந்தேராது - இதுகாறுந் துணியாது; மதியொன்றில்லாவராவது - தெளிந்தஉணர்ச்சியில்லாதபாம்பு.—எ-று.

சகூ. அராவிவளைத்தனையவங்குழவித்திங்கள்
விராவுகதிர்விரியவோடி—விராவுதலாற்
பொன்னேடுவெள்ளிப்புரிபுரிந்தாற்போலாவே
தன்னேடேயொப்பான்சடை.

(இ-ள்.) அராவிவளைத்தனைய - அராவிவளைத்தாலொக்கும்; அங்குழவித்திங்கள் - அழகிய இளம்பிறையின்; விராவுகதிர்விரியவோடிவிராவுதலால் - நெருங்கியகிரணம்பரந்தோடிக்கலத்தலால்; பொன்னேடுவெள்ளிப்புரிபுரிந்தாற்போலாவே - பொன்னூலோடு வெள்ளிநூலைத் திரித்தாற்போலும்; தன்னேடேயொப்பான்சடை - தனக்குத்தானேயொப்பானசிவபிரானதுசடை.—எ-று.

ருo. சடைமேலக்கொன்றைதருகனிகள்போந்து
புடைமேவித்தாழ்ந்தனவேபோலு—முடிமேல்
வலப்பாலக்கோலமதிவைத்தான்றன்பங்கின்
குலப்பாவைநீலக்குழல்.

(இ-ள்.) முடிமேல்வலப்பால் - திருமுடியின்மேல் வலப்பக்கத்தில்; அக்கோலமதி வைத்தான்றன் - அழகிய அவ்விளம்பிறையைச்சூடிய சிவபிரானது; பங்கின்குலப்பாவை நீலக்குழல் - ஒருகூற்றில்வாழும்மலையரசன் குலத்திற்பிறந்த பார்ப்பதியாரது நீலநிறந்தங்கியகேசமானது; சடைமேலக்கொன்றைதருகனிகள் - சடைமுடியின்மேலணிந்திருக்கும் மலர்களைக்கொடுக்கும் கொன்றைமரத்தின்கனிகள்; போந்துபுடைமேவித்தாழ்ந்தனவே போலும் - வந்துஅருகிற்சென்று தொங்குகின்றனவொக்கும்.—எ-று.

ருக. குழலார்சிறுபுறத்துக்கோல்வளையைப்பாகத்
தெழிலாகவைத்தேகவேண்டா—கழலார்ப்பப்
பேரிரவிலீமப்பெருங்காட்டிற்பேயோடு
மாரழல்வாய்நீயாடுமெங்கு.

(இ-ள்.) கழலார்ப்பப்பேரிரவிலீமப்பெருங்காட்டில் - வீரக்கழலாரவாரிக்க நடுயாமத்துமயானமாகிய பெரியகாட்டில்; பேயோடுமாரழல்வாய்நீயாடுமெங்கு-பேயுடன் நிறைந்த தீயினிடத்து நீநிருத்தஞ்செய்யுமவ்விடத்து; குழலார்சிறுபுறத்துக்கோல்வளையை - கேசபாரத்தோடுகூடியபிடரையுடையபார்ப்பதியாரை; பாகத்தெழிலாகவைத்தேகவேண்டா- இடப்பாகத்தில் அழகாகவைத்துச்செல்லவேண்டாம்.—எ-று.

ருஉ. அங்கண்முழுமதியஞ்செக்கரகல்வானத்
தெங்குமினிதெழுந்தாலொவ்வாதே—செங்கட்
டிருமாலைப்பங்குடையான்செஞ்சடைமேல்வைத்த
சிரமாலைதோன்றுவதோர்சீர்.

(இ-ள்.) செங்கண்திருமாலைப்பங்குடையான் - சிவந்தகண்ணையுடைய திருமாலை ஓர்பாகத்துள்ளசிவபிரான்; செஞ்சடைமேல்வைத்த - சிவந்தசடைமுடியின்மேற்சூடிய; சிரமாலைதோன்றுவதோர்சீர் - சிரமாலையானது தோன்றுகின்றசிறப்பு; அங்கண்முழுமதியம் - இடமகன்றநிறைமதியானது; செக்கரகல்வானத்து - செக்கரோடுகூடிய அகன்றவானின்கண்; எங்குமினிதெழுந்தாலொவ்வாதே-எவ்விடத்தும்கதிர்வீசி எழுந்தாற்போலும்.

ருங. சீரார்ந்தகொன்றைமலர்தழைப்பச்சேணுலவி
நீரார்ந்தபேரியாறுநீத்தமாய்ப்—போரார்ந்த
நாண்பாம்புகொண்டசைத்தநம்மீசன்பொன்முடிதான்
காண்பார்க்குச்செவ்வேயோர்கார்.

(இ-ள்.) சீரார்ந்தகொன்றைமலர்தழைப்ப - அழகமைந்தகொன்றைமலர்கள் செழித்திருப்ப; சேணுலவிநீரார்ந்தபேரியாறுநீத்தமாய் - விண்ணுலகினின்றுமிறங்கி நீர்நிறைந்த கங்கைநதியானதுபெருக; போரார்ந்தநாண்பாம்புகொண்டசைத்த - பொருதற்றொழிலமைந்தபாம்பாகிய நாணைக்கொண்டுகட்டிய; நம்மீசன்பொன்முடிதான் - நம்சிவபிரானது பொன்முடியானது; காண்பார்க்குச்செவ்வேயோர்கார் - நன்குநோக்குவார்க்கு ஓர் கார்காலமொக்கும்.—எ-று.

கார்காலம் நதிப்பெருக்குங் கொன்றைமலரு முண்மையினுவமையாயிற்று.

ருச. காருருவக்கண்டத்தெங்கண்ணுதலேயெங்கொளித்தா
யோருருவாய்நின்னோடுழிதருவா—னீருருவ
மேகத்தாற்செய்தனையமேனியானின்னுடைய
பாகத்தான்காணுமேபண்டு.

(இ-ள்.) காருருவக்கண்டத்தெங்கண்ணுதலே - மேகம்போலும்கருநிறந்தங்கியகண்டத்தையுடைய எம்சிவபிரானே; ஒருருவாய்நின்னோடொழிதருவான் - உன்னோடொருடம்பாயிருக்கின்றவன்; நீருருவமேகத்தாற்செய்தனையமேனியான் - நீராற்கறுத்தமேகத்தைத் திரித்துச்செய்தாலொத்தமேனியையுடையவன்; நின்னுடையபாகத்தான்-உன்திருமேனியில் ஓர்பாகத்தையுடையவன்; காணுமேபண்டு - அவன்காணவண்ணம்முன்னாளில்; எங்கொளித்தாய் - நீஎவ்விடத்துமறைந்தாய்.—எ-று.

ருரு. பண்டமரரஞ்சப்படுகடலினஞ்சுண்டு
கண்டங்கறுத்ததுவுமன்றியே—யுண்டு
பணியுறுவார்செஞ்சடைமேற்பான்மதியினுள்ளே
மணிமறுவாய்த்தோன்றும்வடு.

(இ-ள்.) பண்டமரரஞ்சப்படுகடலினஞ்சுண்டு - முன்னாள்தேவர்கள் அஞ்சும்படி கடலினுதித்த ஆலாகலத்தைத்திருவமுதுசெய்துஅதனால்; கண்டங்கறுத்ததுவுமன்றி - மிடறுகறுத்ததேயன்றி; பணியுறுவார்செஞ்சடைமேல் - பாம்புதங்கியநீண்டசிவந்தசடையின்மேற்சூடிய; பான்மதியினுள்ளே - வெள்ளியசந்திரனிடத்து; மணிமறுவாய்த்தோன்றும்வடுவுண்டு-கரியநீலமணிபோலும்மறுவாய்க்காணப்படும்வடுவுமுண்டு.-எ-று. ஏ-அசை.

ருசு. வடுவன்றெனக்கருதிநீமதித்தியாயிற்
சுடுவெண்பொடிநிறத்தாய்சொல்லாய்—படுவெண்
புலாற்றலையினுள்ளூண்புறம்பேசக்கேட்டோ
நிலாத்தலையிற்சூடுவாய்நீ.

(இ-ள்.) நிலாத்தலையிற்சூடுவாய்நீ-இளம்பிறையைத்திருமுடியில் சூடுகின்றவரேநீர்; படுவெண்புலாற்றலையினுள்ளூண் - இறந்தபிரமனதுவெள்ளியபுலாலையுடைய தலையிலுண்ணும்பயிக்கவுணவை; புறம்பேசக்கேட்டோம் - புறத்தினுள்ளார்நிந்திக்கநாம்கேட்டோம்; வடுவன்றெனக்கருதிநீமதித்தியாயின் - அதுகுற்றமன்றென்று நீகொண்டால்; சுடுவெண்பொடிநிறத்தாய்சொல்லாய் - வெந்தவெள்ளியபூதியையணிந்த திருமேனியையுடையவரேசொல்லும்.—எ-று.

ருஎ. நீயுலகமெல்லாமிரப்பினுநின்னுடைய
தீயவரவொழியச்செல்கண்டாய்—தூய
மடவரலார்வந்துபலியிடாரஞ்சி
விடவரவமேலாடமிக்கு.

(இ-ள்.) நீயுலகமெல்லாமிரப்பினும் - நீயுலகமுழுதும் இரந்தாலும்; நின்னுடைய தீயவரவொழியச்செல் - நீவைத்திருக்கும் கொடியபாம்பைவிட்டுச்செல்லும்ஏனெனில்; தூயமடவரலார்வந்து - நல்லமகளிர்கள்வந்து; பலியிடாரஞ்சி - அச்சமுற்றுப்பலியிடார்; விடஅரவமேலாடமிக்கு - விடந்தங்கியபாம்புகோபித்து மேலேபடம்விரித்தாட.—எ-று. கண்டாய் - அசை.

ருஅ. மிக்கமுழங்கெரியும்வீங்கியபொங்கிருளு
மொக்கவுடனிருந்தாலொவ்வாதே—செக்கர்போ
லாகத்தான்செஞ்சடையுமாங்கவன்றன்பொன்னுருவிற்
பாகத்தாள்பூங்குழலும்பண்பு.

(இ-ள்.) மிக்கமுழங்கெரியும் - அதிகமாகஒலிக்கின்றதீயும்; வீங்கியபொங்கிருளும் - அதிகமானசெறிந்தஇருளும்; ஒக்கவுடனிருந்தாலொவ்வாதே - ஓரிடத்துக்கலந்திருந்தா

லொக்கும்; செக்கர்போலாகத்தான்செஞ்சடையும்-செக்கர்போலுந்திருமேனியையுடைய சிவபிரான்சிவந்தசடையும்; ஆங்கவன்றன்பொன்னுருவில் - அச்சிவபிரானதுபொன்போலும்திருமேனியில்; பாகத்தாள்பூங்குழலும்பண்பு - ஓர்பாகத்தையுடைய உமாதேவியினது பொலிவுதங்கியகேசமும்ஆகிய இவற்றினியல்பு.—எ-று.

மிகவென்பது மிக்கவென விகாரமாயிற்று.

௫௯. பண்புணரமாட்டேனுனீயேபணித்துக்காண்
கண்புணருநெற்றிக்கறைக்கண்டா—பெண்புணரு
மவ்வுருவோமாலுருவோவானேற்றாய்நீறணிவ
தெவ்வுருவோநின்னுருவமேல்.

(இ-ள்.) கண்புணருநெற்றிக்கறைக்கண்டா - கண்சேர்ந்தநெற்றியையுடையகறைக்கண்டரே; ஆனேற்றாய் - இடபத்தைவாகனமாகக்கொண்டவரே; பெண்புணருமவ்வுருவோமாலுருவோ-உமாதேவிசேர்ந்தஒருகூறோ திருமால்சேர்ந்தகூறோ; நீறணிவது - விபூதி தரிப்பது; நின்னுருவமேல்-உம்திருமேனியினிடத்து; எவ்வுருவோ - எந்தஉருவோ; பண்புணரமாட்டேனுன்-நான்இவ்வியல்பை அறியமாட்டேன்; நீயேபணித்துக்காண் - நீரேதிருவுள்ளத்துப்பணித்தருளும்.—எ-று.

௬௦. மேலாயமேகங்கள்கூடியோர்பொன்விலங்கல்
போலாமொளிபுதைத்தாலொவ்வாதே—மாலாய
கைம்மாமதகளிற்றுக்காருரிவைபோர்த்தபோ
தம்மான்திருமேனியன்று.

(இ-ள்.) மாலாயகைம்மாமதகளிற்று - மயக்கம்பொருந்திய துதிக்கையையுடைய பெரியமதம்பொழிகின்றயானையினது; காருரிவையன்றுபோர்த்தபோது - கரியதோலைத் திருமேனியிற் போர்வையாக அந்நாளில்தரித்தபோது; அம்மான்திருமேனி - சிவபிரான் திருமேனி; மேலாயமேகங்கள்கூடி - மேன்மைதங்கிய மேகங்கள்சேர்ந்து; ஓர்பொன்விலங்கல்போலாம் - ஒருபொன்மலையைப்போலும்; ஒளிபுதைத்தாலொவ்வாதே - ஒளியைமறைத்தாலொக்கும்.—எ-று.

௬௧. அன்றுந்திருவுருவங்காணாதேயாட்பட்டே
னின்றுந்திருவுருவங்காண்கிலே—னென்றுந்தா
னெவ்வுருவோநும்பிரானென்பார்கட்கென்னுரைக்கே
னெவ்வுருவோநின்னுருவமேது.

(இ-ள்.) அன்றுந்திருவுருவங்காணாதேயாட்பட்டேன் - ஆட்பட்டஞான்றும் திருவுருவத்தைக்காணாது அடிமைப்பட்டேன்; இன்றுந்திருவுருவங்காண்கிலேன் - நிகழாநின்றஇந்நாளினும் நின்திருவுருவைக்காண்கில்லேன்; என்றுந்தானும்பிரானெவ்வுருவோ- என்றும்உமதுபிரானுருவம்எவ்வுருவோ; என்பார்கட்கென்னுரைக்கேன் - என்றுவினவினார்க்கு உத்தரம்யாதுசொல்கேன்; எவ்வுருவோநின்னுருவமேது - உன்னுடையஉருவம் எவ்வுருவமோஅறியேன்.—எ-று.

௬௨. ஏதொக்குமேதொவ்வாதேதாகுமேதாகா
தேதொக்குமென்பதனையாரறிவார்—பூதப்பால்
வில்வேடனாகிவிசயனோடேற்றநாள்
வல்வேடனானவடிவு.

(இ-ள்.) பூதப்பால்வில்வேடனாகி - முன்னாளில்வில்லையுடையவேடுவனாகி; விசயனோடேற்றநாள் - அருச்சுனனோடுபோர்செய்தநாளில்; வல்வேடனானவடிவு - அத்திருமேனி அவர்க்கிருத்தலின்; ஏதொக்குமேதொவ்வாது - அவர்வடிவுஎதனோடுபொருந்தும் எதனோடுபொருந்தாது; ஏதாகுமேதாகாது - எதுவாகஆகும் எதுவாகஆகாது; ஏதொக்குமென்பதனையாரறிவார் - எதுஅதற்குப்பொருந்துமென்பதனை யாருமறியமாட்டார்கள். எ-று.

இக்கிராதவேடம் இழிவாதலால் உயர்ந்தகாபாலம் திரிபுராந்தகம் முதலிய உயர்ந்த திருமேனியே பொருந்துமென்றலுங்கூடாது. உயர்ந்ததிருமேனியுடைமையால் இழிந்த திருமேனிபொருந்ாதென்பதும் ஒவ்வாது. இவ்வாறுகிருபையால் உயர்வுமிழிவுமாகிய வேண்டியவுருக்களை எடுப்பாராகலின் ஏதாகுமேதாகாதென்றும் இவ்வாறுபொருந்தியும் பொருந்தாமலுமுள்ள திருவுருவுடைமையால் இதுவென்றுவரையப்படாமையால் ஏதொக்குமென்பதனை யாரறிவாரென்றுங்கூறினர்.

௬௩. வடிவுடையசெங்கதிர்க்குமாறாய்ப்பகலே
நெடிதுலவிநின்றெறிக்குங்கொல்லோ—கடியுலவு
சொன்முடிவொன்றில்லாதசோதியாய்சொல்லாயா
னின்முடிமேற்றிங்கணிலா.

(இ-ள்.) நின்முடிமேற்றிங்கணிலா - உனதுதிருமுடியின்மேலிருக்கும் கதிரையுடைய இளம்பிறையானது; வடிவுடையசெங்கதிர்க்குமாறாய் - உன்திருவுருவிலுடைய சூரியனுக்குமாறாக; பகலேநெடிதுலவிநின்றெறிக்குங்கொல் - பகற்காலத்திலேமிகவும்விளங்கிநின்றுநிலவைவீசுமோ; கடியுலவுசொன்முடிவொன்றில்லாத - காப்பமைந்தசொல்லுக்கடங்காத; சோதியாய்சொல்லாய் - ஒளியுருவனேநீசொல்.—எ-று. ஓ-ஆல்-அசை.

௬௪. நிலாவிலங்குவெண்மதியைநேடிக்கொள்வான்போ
லுலாவியுழிதருமாகொல்லோ—நிலாவிருந்த
செக்கரவ்வானமேயொக்குந்திருமுடிக்கே
புக்கரவங்காலையேபோன்று.

(இ-ள்.) நிலாவிலங்குவெண்மதியை - சந்திரிகைவிளங்குகின்றவெள்ளியசந்திரனை; நேடிக்கொள்வான் - தேடிக்கொள்ளுதற்கு; உலாவியுழிதருமா - உலாவித்திரியுமாறு; நிலாவிருந்தசெக்கரவ்வானமேயொக்குந்திருமுடிக்கே - இளம்பிறையிருந்தசெக்கர்வானத்தையொத்திருக்கும் திருமுடியின்கண்ணே; புக்கரவங்காலையேபோன்று - புகுந்துபாம்பானது காற்றையொத்து.—எ-று. போல்-கொல். ஓ-அசைகள்.

௬௫. காலையேபோன்றிலங்குமேனிகடும்பகலின்
வேலையேபோன்றிலங்கும்வெண்ணீறு—மாலையின்
றாங்குருவேபோலுஞ்சடைக்கற்றைமற்றவற்கு
வீங்கிருளேபோலுமிடறு.

(இ-ள்.) காலையேபோன்றிலங்குமேனி - சிவபிரானுக்கு உதயகாலம்போலத் திருமேனிசிவந்திருக்கும்; கடும்பகலின்வேலையேபோன்றிலங்கும்வெண்ணீறு - நடுப்பகல்போலத்திருமேனிக்கண்வெண்ணீறுவிளங்கியிருக்கும்; மாலையின்றாங்குருவேபோலுஞ்சடைக்கற்றை - மாலையடைந்த உருவத்தையொத்திருக்கும் சடைத்தொகுதி; அவற்குவீங்கிருளேபோலுமிடறு - அச்சிவபிரானுக்குமிக்க இருளேபோன்றிருக்கும்மிடறு.—எ - று. மற்று - அசை.

௬௬. மிடற்றில்விடமுடையீருமிடற்றைநக்கி
மிடற்றில்விடங்கொண்டவாறே—மிடற்றகத்து
மைத்தாமிருள்போலும்வண்ணங்கரிதாலோ
பைத்தாடுநும்மார்பிற்பாம்பு.

(இ-ள்.) மிடற்றில்விடமுடையீர் - திருமிடற்றில்விடத்தையுடையவரே; உம்மிடற்றைநக்கிமிடற்றில்விடங்கொண்டவாறே-உம்முடையதிருமிடற்றைநக்கித் தான் தன் மிடற்றில் நஞ்சையடைந்ததனலோ; மிடற்றகத்துமைத்தாமிருள்போலும்வண்ணங்கரிதாலோ - உம்மிடற்றில்கரிய இருளையொத்தநிறத்தைத் தான் பெற்றுக்கொண்டதாலோ; பைத்தாடுநும்மார்பிற்பாம்பு - உம்முடையதிருமார்பிலணிந்த பாம்பானதுபடம்விரித்தாடும்.

௬௭. பாம்புமதியுமடமானும்பாய்புலியுந்
தாம்பயின்றுதாழருவிதூங்குதலா—லாம்பொ
னுருவடிவிலோங்கொளிசேர்கண்ணுதலான்கோலத்
திருவடியின்மேயசிலம்பு.

(இ-ள்.) பாம்புமதியுமடமானும்பாய்புலியும் - பாம்புடன்இளம்பிறையும் மடமைதங்கியமானும் பாய்கின்றபுலியும்; தாம்பயின்றுதாழருவிதூங்குதலால் - ஆகியஇவைகளைத்தாமணிந்துதாழ்ந்த அருவியையுடையகங்கைநதியும்இழிதலால்; பொன்னுருவடிவில் - பொன்உருவமானதிருமேனியில்; ஓங்கொளிசேர்கண்ணுதலான் - மிக்கஒளியையுடையசிவபிரானது; கோலத்திருவடியின்மேயசிலம்புஆம் - அழகியதிருவடிக்கண் தரிக்கப்பட்டவீரக்கழல் அவர்க்குரித்தாம்.—எ-று.

பகையுடையபாம்பையும் மதியையும் பகைநீக்கியும் புலிக்கஞ்சத்தக்க மானினதச்சந்தவிர்த்தும் யாவராலும்தரிக்கக்கூடாத ஆற்றலையுடைய கங்கையைத்தரித்தும் மகிமைதங்கியிருத்தலால் இவர்க்கேவீரக்கழல்உரித்து என்றதுகருத்து.

௬௮. சிலம்படியாளூடலைத்தான்றவிர்ப்பான்வேண்டிச்
சிலம்படிமேற்செவ்வரத்தஞ்சேர்த்தி—நலம்பெற்
றெதிராயசெக்கரினுமிக்கோலஞ்செய்தான்
முதிராமதியான்முடி.

(இ-ள்.) முதிராமதியான்-முதிராதஇளம்பிறைசூடியபிரானர்; சிலம்படியாளூடலை-சிலம்பணிந்ததிருவடியையுடைய பிராட்டியின்ஊடலை; தான்றவிர்ப்பான்வேண்டி-தான் நீக்குவான்கருதி; சிலம்படிமேற்செவ்வரத்தஞ்சேர்த்தி - சிலம்பணிந்தஅப்பிராட்டியின் திருவடிமேலூட்டியிருக்கும் செம்பஞ்சைச்சேர்த்துக்கொண்டு; முடி - தம்திருமுடிக்கண்; நலம்பெற்றெதிராயசெக்கரினும் - நன்மையோடுசடைக்கு மாறுபட்டிருக்கின்ற செக்கர்வானத்தினும்அதிகமாக; இக்கோலஞ்செய்தான் - இச்சிறப்பைச்செய்துவைத்தான்.—எ-று.

பார்ப்பதியாரூடநீக்குங் காரணமாகப் பணியுழியவர்பதச்செம்பஞ் சூட்டப்பட்டுச் சடைமுடி அதிகசிவப்பாயிற்றென்பதுகருத்து.

௬௯. முடிமேற்கொடுமதியான்முக்கணனல்ல
வடிமேற்கொடுமதியோங்கூற்றைப்—படிமேற்
குனியவலமாமடிமைகொண்டாடப்பெற்றோ
மினியவலமுண்டோவெமக்கு.

(இ-ள்.) முடிமேற்கொடுமதியான்முக்கணுன் - திருமுடிமேற்கோடிய இளமதியைச் சூடியசிவபிரானது; நல்லவடிமேற்கொடுமதியோங்கூற்றை - நல்லதிருவடியைச்சூடிக்கொண்டு அக்காரணத்தால்யமனை மதிக்கமாட்டோம்; படிமேற்குனியவலமாமடிமை - நிலவுலகின்கண்கூத்தாட வல்லமையுடையோமாதற்கேதுவானஅடிமையை; கொண்டாடப்பெற்ருேம் - பாராட்டும்படிபெற்றுக்கொண்டோம்; இனியவலமுண்டோவெமக்கு - இனிஎமக்குத்துயரில்லை.—எ-று.

கோடுமதியென்றது கொடுமதியெனவிகாரமாயிற்று.

எ௦. எமக்கிதுவோபேராசையென்றுந்தவிரா
தெமக்கொருநாள்காட்டுதியோவெந்தா—யமைக்கவே
போந்தெரிபாய்ந்தன்னபுரிசடையாய்பொங்கிரவி
லேந்தெரிபாய்ந்தாடுமிடம்.

(இ-ள்.) எமக்கிதுவோபேராசையென்றுந்தவிராது - எமக்குப்பேராசை இதுதான் இதுஎம்மைவிட்டு எந்நாளும்நீங்கப்படாது அதனுல்; எமக்கொருநாட்காட்டுதியோவெந்தாய் - முதல்வரேஎமக்கொருதினங்காட்டுகின்றீரா; அமைக்கவேபோந்தெரிபாய்ந்தன்ன புரிசடையாய் - எரிவேறுபடுத்துஅமைக்க அவ்வெரிவந்துபாய்ந்தாலொத்த புரிசடையையுடையவரே; பொங்கிரவிலேந்தெரிபாய்ந்தாடுமிடம் - மிக்கநடுவிரவில்சுவாலிக்கின்ற எரியின்கண்குதித்தாடுகின்றஇடத்தை.—எ-று.

எந்தாய்புரிசடையாய் ஆடுமிடம்காட்டுதியோ எனஇயையும்.

எக. இடப்பாலவானத்தெழுமதியைநீயோர்
மடப்பாவைதன்னருகேவைத்தா—லிடப்பாகங்
கொண்டாண்மலைப்பாவைகூறுென்றுங்கண்டிலங்காண்
கண்டாயேமுக்கண்ணுய்காண்.

(இ-ள்.) வானத்தெழுமதியை-வானத்தின்கண்எழாநின்றஇளம்பிறையை; நீயோர் மடப்பாவைதன்னருகேயிடப்பாலவைத்தால் - நீலப்பற்றஉமாதேவியார்கூற்றில் இடதுபக்கத்திலிருப்பதாக வைத்துக்கொண்டால்; இடப்பாகங்கொண்டாண்மலைப்பாவை - உம்இடப்பாகத்தைக்கவர்ந்துகொண்டபார்ப்பதியாரது; கூறுென்றுங்கண்டிலங்காண் - கூறுென்றையும் நாம் அறியமாட்டோம்; கண்டாயேமுக்கண்ணுய் - முக்கண்ணுய் இவ்வுபாயத்தைக்கருதியறிவாய்.—எ-று. காண்-அசை.

வைத்தால்இருமேனியுடையையென்னும் பெயர்மறைந்து ஒருமேனியுடையையென்பது நிலைப்படும் என்பதுகருத்து.

எஉ. கண்டெந்தையென்றிறைஞ்சிக்கைப்பணியான்செய்யேனே
லண்டம்பெறினுமதுவேண்டேன்—றுண்டஞ்சேர்
விண்ணுளுந்திங்களாய்மிக்குலகமேழினுக்குங்
கண்ணுளாவீதென்கருத்து.

(இ-ள்.) கண்டெந்தையென்றிறைஞ்சி - நும்மைத்தரிசித்து எம்முதல்வரென்று வணங்கி; கைப்பணியான்செய்யேனேல் - கைத்திருத்தொண்டை யான்செய்யாதொழியில்; அண்டம்பெறினுமதுவேண்டேன் - வீடுகிடைப்பினும்அதைவிரும்பேன்; துண்டஞ்சேர்விண்ணுளுந்திங்களாய்-துண்டமொத்தவிண்ணையிடமாகக்கொண்டொழுகும் இளம்

பிறையையுடையவரே; மிக்குலகமேழினுக்குங்கண்ணுளா - அதிகமானஏழுலகிற்கும் கிரு பையுடையவரே; ஈதென்கருத்து - என்கருத்துஇது.—எ-று.

உன் அடிமைக்கேற்றதொண்டுசெய்து உன்திருவடியையடைதலேயன்றித் தொண் டின்றி வீடுவரினும் பெறேனெனத்தொண்டின் சிறப்புக்கூறியவாறு.

எங. கருத்தினுனீகருதிற்றெல்லாமுடனே
திருத்தலாஞ்சிக்கெனநான்சொன்னேன்—பருத்தரங்க
வெள்ளநீரேற்றானடிக்கமலநீவிரும்பி
யுள்ளமேயெப்போதுமோது.

(இ-ள்.) உள்ளமே - மனமே; கருத்தினுனீகருதிற்றெல்லாம் - சூட்சியினுல்நீகரு திய பொருளெல்லாம்; உடனேதிருத்தலாஞ்சிக்கெனநான்சொன்னேன் - உடனேபெற லாம் சிக்கெனநான் உனக்குச்சொன்னேன்; பருத்தரங்கவெள்ளநீரேற்றான் - பருத்தஅலை யோடுகூடிய மிக்ககங்கைநீரைத் திருமுடியில்தரித்தவனது; அடிக்கமலநீவிரும்பி - திரு வடித்தாமரையைநீவிரும்பி; எப்போதுமோது - எப்பொழுதும்சொல்.—எ-று.

எச. ஓதநெடுங்கடல்களெத்தனையுமுய்த்தட்ட
வேதுநிறைந்தில்லையென்பராற்—பேதையர்க
ளெண்ணுதிடும்பலியாலென்னேநிறைந்தவா
கண்ணார்கபாலக்கலம்.

(இ-ள்.) கண்ணார்கபாலக்கலம் - இடமகன்ற உன்திருக்கரத்திலேந்திய காபாலமா கியபாத்திரம்; ஓதநெடுங்கடல்களெத்தனையுமுய்த்தட்ட - பெருக்கெடுக்கின்ற நெடியக டல்களேழையும்பெய்துநிறைக்க; ஏதுநிறைந்தில்லையென்பர் - அதுஎவ்வளவேனும்நிறைய வில்லையென்றுசொல்வார்கள்; பேதையர்களெண்ணுதிடும்பலியால் - தாருகவனமகளிர்கள் கருதாதுஇடாநின்ற பயிக்கத்தால்; என்னேநிறைந்தவா - அதுநிறைந்தவாறுஎன்.—எ-று.

எண்ணுதுஎன்றது கற்பின்நிலைமை யழிக்கவந்தாரென்பதை யறியாமை.

எரு. கலங்குபுனற்கங்கையூடாலலாலு
மிலங்குமதியியங்கலானு—நலங்கொள்
பரிசுடையானீண்முடிமேற்பாம்பியங்கலாலும்
விரிசடையாங்காணில்விசும்பு.

(இ-ள்.) நலங்கொள்பரிசுடையானீண்முடிமேல் - நன்மைமிக்ககருணையையுடைய சிவபிரான்திருமுடியின்மேல்; பாம்பியங்கலாலும் - பாம்புகள்சஞ்சரித்தலினுலும்; கலங்கு புனற்கங்கையூடாலலாலும் - கலங்கியபுனலையுடைய கங்கையானது சடையில்பெருகுத லாலும்; இலங்குமதியியங்கலாலும் - விளங்கும்இளம்பிறை சஞ்சரிக்கிறதினுலும்; விரிச டையாங்காணில்விசும்பு - யாம்கருதுமிடத்தில் விரிந்தசடையானது விசும்பாம்.—எ-று.

ஈண்டுவானிற்பாம்பென்றது இராகுவை, விசும்பின்கணுள்ள கங்கைமுதலியன ஈண் டிருத்தலின் வியோமகேசியென்றற்கேற்க இவர்க்குச்சடை விசும்பாயிற்றென்றாரென்க.

எசா. விசும்பில்விதியுடையவிண்ணோர்பணிந்து
பசும்பொன்மணிமகுடந்தேய்ப்ப—முசிந்தெங்கு
மெந்தாய்தழும்பேறியேபாவம்பொல்லாவா
மந்தாமரைபோலடி.

(இ-ள்.) விசும்பில்விதியுடையவிண்ணோர்பணிந்து - விசும்பில்வாழ்தற்கேதுவான ஊழையுடையதேவர்கள்வணங்கி; பசும்பொன்மணிமகுடந்தேய்ப்ப - பசியபொன்னாற்சமைந்த மணிமகுடங்கள்உரிஞ்ச அதனால்; எந்தாய்முசிந்தெங்குந்தழும்பேறி - எந்தையேகன்றிஎங்கும் தழும்படைந்து; பாவம்பொல்லாவாமந்தாமரைபோலடி - இதென்னபாவம் நிறம்வேறுபட்டிருந்தன அழகியதாமரைமலர்போலும் திருவடிகள்.—எ-று.

ஏ - அசை. பாவம் - இரக்கக்குறிப்பு.

எஎ. அடிபேரிற்பாதாளம்பேருமடிகண்
முடிபேரின்மாமுகடுபேருங்—கடக
மறிந்தாடுகைபேரில்வான்றிசைகள்பேரு
மறிந்தாடுமாற்றாதரங்கு.

(இ-ள்.) அடிபேரிற்பாதாளம்பேரும் - உமதுதிருவடிபெயர்ந்தால் ஏழுபாதலமும் பெயர்ந்துபோம்; முடிபேரின்மாமுகடுபேரும் - திருமுடிபெயர்ந்தால் பெரியஅண்டமுகடு பெயர்ந்துபோம்; கடகமறிந்தாடுகைபேரில்வான்றிசைகள்பேரும் - கடகம்மேற்சென்று மிழிந்துமாடுகின்றகைகள் பெயர்ந்தால் பெரியதிசையெட்டும் பெயர்ந்துபோம்; அடிகள்- அடிகளே; ஆற்றாதரங்கு-நிருத்தம்செய்யும் சபைதாங்கமாட்டாது; அறிந்தாடும்-அதனால் நீர் அறிந்துநிருத்தஞ்செய்யும்.—எ-று.

எஅ. அரங்கமாப்பேய்க்காட்டிலாடுவான்வாளா
விரங்குமோவெவ்வுயிர்க்குமேழா—யிரங்குமே
லென்னாகவையான்றானெவ்வுலகமீந்தளியான்
பன்னாளிரந்தாற்பணிந்து.

(இ-ள்.) அரங்கமாப்பேய்க்காட்டிலாடுவான் - தாம்ஆடும்அரங்காகப் பேய்வாழும் மயானத்தில்ஆடும்முதல்வன்; வாளாவிரங்குமோவெவ்வுயிர்க்குமேழாய் - எல்லாஉயிர்களுக்கும்வறிதே இரங்குவாரா ஏழையே; பன்னாளிரந்தாற்பணிந்து - பலநாளும்வணங்கிக்கேட்டால்; இரங்குமேலென்னாகவையான்றான் - அதுகாரணமாக இரங்குவாரானால் அவ்வுயிரை எவ்விதமேன்மையுடைத்தாகவையான்; எவ்வுலகமீந்தளியான் - எவ்வுலகத்தைக்கொடுத்துக்காவான்.—எ-று.

எகூ. பணிந்தும்படர்சடையான்பாதங்கள்போதா
லணிந்துமணிந்தவரையேத்தத்—துணிந்தென்று
மெந்தையார்க்காட்செய்யப்பெற்றவிதுகொலோ
சிந்தையார்க்குள்ளசெருக்கு.

(இ-ள்.) பணிந்தும்படர்சடையான்பாதங்கள் - படர்ந்தசடையையுடைய சிவபிரான்திருவடிகளைவணங்கியும்; போதாலணிந்தும் - மலர்களாலருச்சித்தும்; அணிந்தவரையேத்தத்துணிந்து - அவ்வாற்றால் அவரையடைந்த அடியார்களைத்துதிக்க நிச்சயித்து; என்றுமெந்தையார்க்காட்செய்யப்பெற்றவிதுகொலோ - எந்நாளும் எம்முதல்வர்க்குத்தொண்டுசெய்யப்பெற்றஇதுவோ; சிந்தையார்க்குள்ள செருக்கு-எம்சிந்தைக்குள்ளபெருமிதம்.

சிந்தையாரென்றது உவப்பின்கண் வந்தது.

அ௦. செருக்கினால்வெற்பெடுத்தவெத்தனையோதிண்டோ
ளரக்கனையுமுன்னின்றடர்த்த—திருத்தக்க
மாலயனுங்காணாதரற்றிமகிழ்ந்தேத்தக்
காலனையும்வென்றுதைத்தகால்.

(இ-ள்.) கால் - சிவபிரானே உமதுதிருவடிகள்; செருக்கினுல்வெற்பெடுத்தவெத்தனையோதிண்டோள் - தருக்கினுல்திருக்கயிலையைப் பெயர்த்தெடுத்த திண்ணியபலதோள்களையுடைய; அரக்கனையுமுன்னின்றடர்த்த - இராவணனையும் எதிரில்நின்று மலையோடுநெருக்கின அதுவன்றி; திருத்தக்கமாலயனுங்காணுது - மேன்மையையுடைய திருமால் பிரமன்என்னு மிருவருங்காணுமல்; அரற்றிமகிழ்ந்தேத்த - ஒலிட்டுமனமகிழ்ந்து துதிக்க; காலனையும்வென்றுதைத்த - யமனையும்வெற்றிகொண்டுதைத்தன. எ-று.

எத்தனையோஎன்றது எண்ணின்மிகுதியுணர்த்திநின்றது; இருபதென்பதுகருத்து. பெருமையுடையார் காணுதரற்றித்துதிக்கும் பெருமையும் மாறுபட்டாரது வலியிழக்கச்செய்யுமாற்றலுந் திருவடியுடைத்தென வதன்சிறப்புரைத்தவாறு.

அஎ. காலனையும்வென்ருேங்கடுநரகங்கைகழன்ருே
மேலையிருவினையும்வேரறுத்தோங்—கோல
வரணூரவிந்தழியவெந்தீயம்பெய்தான்
சரணாரவிந்தங்கள்சார்ந்து.

(இ-ள்.) கோலவரணூரவிந்தழியவெந்தீயம்பெய்தான் - அழகியதிரிபுரம்அழிந்துகெடச் சிரிப்பினுதித்தகொடிய அனலாகியஅம்பையெய்தவனது; சரணாரவிந்தங்கள்சார்ந்து - திருவடித்தாமரைகளையடைந்து; காலனையும்வென்ருேம் - யமனையும்வென்ருேம்; கடுநரகங்கைகழன்ருேம் - கடியநரகவேதனையையொழிந்தோம்; மேலையிருவினையும்வேரறுத்தோம் - முன்னுள்ளஇருவினையையும் வேருடனறுத்துவிட்டோம்.—எ-று.

தீயரைத்தெறுங்காலன் தம்மைத்தெருமையின் காலனைவென்ருேமென்றும், தீவினையான்வருநரகந்தமக்கின்மையின் கடுநரகங் கைகழன்ருேமென்றும், இருவினையும் பயன்படாதொழிய அவித்தையைக்களைதலின் இருவினையின்வேரறுத்தோ மென்றுங் கூறினர்.

அஅ. சார்ந்தார்க்குப்பொற்கொழுந்தேயொத்திலங்கிச்சாராது
பேர்ந்தார்க்குத்தீக்கொடியின்பெற்றியவா—நேர்ந்துணரிற்
ருழ்சுடரோன்செங்கதிருஞ்சாயுந்தழல்வண்ணன்
வீழ்சடையேயென்றுரைக்குமின்.

(இ-ள்.) தாழ்சுடரோன்செங்கதிருஞ்சாயுந்தழல்வண்ணன் - பரம்பியஒளியினையுடைய சூரியனதுசிவந்த கிரணமும்தோற்கும் தீப்போலும் செந்நிறத்தையுடைய சிவபிரானது; வீழ்சடையே - பின்றூங்காநின்ற சடையானது; நேர்ந்துணரின் - ஆராய்ந்துணருமிடத்து; சார்ந்தார்க்குப்பொற்கொழுந்தேயொத்திலங்கி - தம்மையடைந்த மகளிர்க்குப்பொற்கொழுந்துபோல் இனிதாய்விளங்கி; சாராதுபேர்ந்தார்க்குத்தீக்கொடியின்பெற்றியவாமென்றுரைக்குமின் - அடையாதுநீங்கின மகளிர்க்குஅனற்கொடிபோலும் வருத்துமியல்பினையுடைத்தென்று எனதுமகள்கூறுவள்.—எ-று.

அக. மின்போலுஞ்செஞ்சடையான்மாலோடுமீண்டிசைந்தா
லென்போலுங்காண்பார்கட்கென்றீரேற்—றன்போலும்
பொற்குன்றுநீலமணிக்குன்றுந்தாமுடனே
நிற்கின்றபோலுநெடிது.

(இ-ள்.) மின்போலுஞ்செஞ்சடையான் - மின்னையொக்கும் சிவந்தசடையையுடையசிவபிரான்; மாலோடுமீண்டிசைந்தால் - தம்இடக்கூற்றிலுள்ள திருமாலோடு இவ்

விடத்துஎழுந்தருளினால்; என்போலுங்காண்பார்கட்கென்றீரேல் - காண்கின்றவர்கண்களுக்கு எவ்வண்ணமாயிருக்குமென்றுவினவுவீரெனில்; தன்போலும் - வேற்றுவமைகூறப்படாத; பொற்குன்றுநீலமணிக்குன்றும் - மேருமலையும் இந்திரநீலப்பருப்பதமும்; தாமுடனேநிற்கின்றபோலுநெடிது - அவ்விரண்டும் உடனேவிரவிநிற்கின்றதையொக்கும்பெரும்பாலும்.—எ-று.

அச. நெடிதாயபொங்கெரியுந்தண்மதியுநேரே
கடிதாங்கடுஞ்சுடரும்போலுங்—கொடிதாக
விண்டார்கண்மும்மதிலும்வெந்தீயினிலழியக்
கண்டாலுமுக்கணுங்கண்.

(இ-ள்.) கொடிதாகவிண்டார்கண்மும்மதிலும் - கொடியதாகப் பகைவர்களது மும்மதிலும்; வெந்தீயினிலழியக்கண்டாலும் - சுடுந்தீயினில்வேவச்செய்தாலும்; நெடிதாயபொங்கெரியுந்தண்மதியும் - மிகச்சுவாலிக்கின்றஅனலும் தண்ணியசந்திரனும்; நேரேகடிதாங்கடுஞ்சுடரும் - காணும்படிவேகமானகொடியசூரியனும்; முக்கணுங்கண் - ஆகக்கண் மூன்றும்.—எ-று.

வெந்தீயினிலழியச்செய்தகாரணத்தாற் பிரானார்க்குக் கண் ஒன்றென்றுகொள்ளற்க. மதியுங்கதிருஞ்சேர்ந்து மூன்றாகக்கொள்கவென்றார். ஆயின்தீப்போல் மதிகதிர்க்குப் பயனென்னெனின் கதிர்க்கண் உலர்த்திவளரச்செய்தலும் மதிக்கண் குளிர்வித்துவளர்த்தலும் ஆகிய பயனுடைத்தென்றுகொள்க. போலும்-அசை.

அரு. கண்ணாரக்கண்டுமென்கையாரக்கூப்பியு
மெண்ணாரவெண்ணத்தாலெண்ணியும்—விண்ணோ
னெரியாடியென்றென்றுமின்புறுவன்கொல்லோ
பெரியானைக்காணப்பெறின்.

(இ-ள்.) பெரியானைக்காணப்பெறின் - சிவபிரானைத்தரிசிக்கயான்பெற்றால்; கண்ணாரக்கண்டும் - கண்ணுக்கமையத்தரிசித்தும்; என்கையாரக்கூப்பியும் - என்கைக்கமையத்தொழுதும்; எண்ணாரவெண்ணத்தாலெண்ணியும் - கருத்திற்கியைய மனதாற்றியானித்தும்; விண்ணோனெரியாடியென்றென்றும் - அவர்அனலாடி யென்றென்றுதுதித்தும்; இன்புறுவன் - இன்பமடைவன்.—எ-று. கொல் - ஓ - அசைநிலைகள்.

காணப்பெற்றாற் கண்ணுங் கையும் கருத்தும் வாக்கும் காண்டலும் தொழுதலும் கருதலும் துதித்தலுமாகிய தந்தொழின்முற்றச்செய்து பயனடைந்து நிற்குமென்பது கருத்து. இதுதரிசியாமையின் ஆராமைகூறியவாறு.

அசு. பெறினும்பிறிதியாதும்வேண்டேநமக்கீ
துறினுமுறுதொழியுமேனுஞ்—சிறிதுணர்த்தி
மற்றொருகணெற்றிமேல்வைத்தான்றன்பேயாய
நற்கணத்திலொன்றாயநாம்.

(இ-ள்.) சிறிதுணர்த்தி - முழுதும்விளக்காது சிறிதோருணர்வைக்கொடுத்து; மற்றொருகணெற்றிமேல்வைத்தான்றன் - அனற்கண்ணைநெற்றியில்வைத்த சிவபிரானது; பேயாயநற்கணத்திலொன்றாயநாம் - நல்லபேய்க்கணத்தி லொன்றாகியநாம்; நமக்கீதுறினுமுறுதொழியுமேனும் - எமக்குக்கிடைத்த இக்கணத்தன்மையுற்றாலும் உறுதொ

ழிந்தாலும்; பெறினும் - பெற்றாலும்; பிறிதியாதும்வேண்டேம் - ஈதன்றி வேறொன்றை யும் விரும்பமாட்டோம். எ-று.

பெறினும்என்றஉம்மைபெறவேண்டியதொன்றின்றெனமறுத்துநிற்றலின்எதிர்மறை. எப்பொருள்விருப்பும் வினைப்பயனாதலின் வினைப்பயனுலந்தவெமக்கு வேண்டப்படுவது வீட்டுநெறியொன்றேயாதலின் பிறிதியாதும் வேண்டேமென்றார். சிறிதுணர்த்துதல் - வினைநுகர்ச்சிக்குத்தகவிளக்குதல். அன்றி அனற்கண்ணானேக்கினுலகனைத்தும்வேமாத லின் மதியிரவி விழியாலுலகுக்குவிளக்கித்தான் விளக்காதொழியு மென்று கொள்ளினு மமையும். அவ்விரண்டும் அனற்கண்ணேயாதலின்.

௮௭. நாமாலைசூடியுநம்மீசன்பொன்னடிக்கே
பூமாலைகொண்டுபுனைந்தன்பாய்—நாமோ
ரறிவினையேபற்றினாலெற்றேதடுமே
யெறிவினையேயென்னுமிருள்.

(இ-ள்.) நாமாலைசூடியும் - நாம்பாமாலையைச்சூடியும்; நம்மீசன்பொன்னடிக்கு- நம்சிவபிரான்திருவடிக்கு; பூமாலைகொண்டுபுனைந்து-மலர்மாலைகொண்டலங்கரித்து; அன் பாய்நாமோரறிவினையேபற்றினால் - அன்போடுநாம் பேரறிவாகிய அச்சிவபரம்பொருளை யேபற்றறப்பற்றினால்; எறிவினையேயென்னுமிருள் - தெறுகின்ற தீவினையாகியஇருள்; எற்றேதடும்-எவ்வாற்றால் எப்படிவருத்தும் வருத்தமாட்டாதென்றபடி.—எ-று. ஏ-அசை.

பூமாலைபுனைந்துபாமாலை சூடிவழிபட்டுச் சிவபரம்பொருளை நாடுவார்க்குத்தன்னைப் பற்றியும் பிறஉயிரைப்பற்றியும் தெய்வத்தைப்பற்றியும்வரும் மூவகைத்துன்பங்களும் வா தியாமையின் இருளெற்றேதடுமென்றார் - எற்றேதடுமென்புழி எவ்வேதுவால்வருத்து மென்றுரைப்பினுமமையும்.

௮௮. இருளினுருவென்கோமாமேகமென்கோ
மருளின்மணிநீலமென்கோ—வருளெமக்கு
நன்றுடையாய்செஞ்சடைமேனக்கிலங்குவெண்மதிய
மொன்றுடையாய்கண்டத்தொளி.

(இ-ள்.) அருளெமக்குநன்றுடையாய் - திருவருள்எம்பொருட்டு மிகவுடையவரே; செஞ்சடைமேனக்கிலங்குவெண்மதியமொன்றுடையாய் - சிவந்தசடைமுடியின்மேல் ஒளிசெய்துவிளங்குகின்ற இளம்பிறையொன்றையுடையவரே; கண்டத்தொளி - உம்மு டையதிருமிடற்றின்கணுள்ளஒளியை; இருளினுருவென்கோமாமேகமென்கோ-இருளின் வடிவமென்றுசொல்லுகோபெரியமேகமென்றுசொல்லுகோ; மருளின்மணிநீலமென்கோ- களங்கமற்றநீலமணியென்றுசொல்லுகோ.—எ-று.

கண்டத்தொளியைவிதந்து ஐயவுவமைகூறியவாறு.

௮௯. ஒளிவிலிவன்மதனையொண்பொடியாநோக்கித்
தெளிவுள்ளசிந்தையினிற்சேர்வா—யொளிநஞ்ச
முண்டவாயஃதிருப்பவுன்னுடையகண்டமிருள்
கொண்டவாறென்னிதனைக்கூறு.

(இ-ள்.) ஒளிவிலி-அழியாதவனே; வன்மதனை-நீவலியமன்மதனை; ஒண்பொடியா நோக்கி - ஒள்ளியசாம்பராகஎரித்து; தெளிவுள்ளசிந்தையினிற்சேர்வாய் - கலக்கமற்றஉள்

ளத்தின்கண் அடைவாய்; ஒளிநஞ்சமுண்டவாயஃதிருப்ப - உனக்குஒளிதங்கியவிடமுண்டவாயானதிருக்க; உன்னுடையகண்டமிருள்கொண்டவாறென் - உன்னுடையதிருமிடறுனது கருநிறமடைந்தவாறெவன்; இதனைக்கூறு - இதனைநீசொல்.—எ-று.

௩௰. கூறெமக்கீதெந்தாய்குளிர்சடையைமீதழித்திட்
டேறமிகப்பெருகினென்செய்தி—சீறி
விழித்தூரும்வாளரவும்வெண்மதியுமீர்த்துத்
தெழித்தோடுங்கங்கைத்திரை.

(இ-ள்.) சீறிவிழித்தூரும்வாளரவும் - சீறிப்பார்த்து ஊருகின்றவாள்போலும் பற்களையுடைய பாம்பையும்; வெண்மதியுமீர்த்து - வெள்ளியமதியையும் இழுத்துக்கொண்டு; தெழித்தோடுங்கங்கைத்திரை - இரைத்தோடுகின்றகங்கையின்அலைகள்; குளிர்சடையை மீதழித்திட்டு - குளிர்ந்தசடையை மேலேயழித்துவிட்டு; ஏறமிகப்பெருகினென்செய்தி-அச்சடைக்குமேற்படப்பெருகினல் என்செய்வாய்; கூறெமக்கீதெந்தாய் - எந்தையே இதை எமக்குச்சொல்லு.—எ-று.

௩௧. திரைமருவுசெஞ்சடையான்சேவடிக்கேயாளா
யுரைமருவியாமுணர்ந்தோங்கண்டீர்—தெரிமினோ
விம்மைக்குமம்மைக்குமெல்லாமமைந்தோமே
யெம்மைப்புறனுரைப்பதென்.

(இ-ள்.) திரைமருவுசெஞ்சடையான்சேவடிக்கேயாளாய் - கங்கைதங்கியசிவந்த சடையையுடைய சிவபிரான்திருவடிக்கடிமையாய்; உரைமருவியாமுணர்ந்தோங்கண்டீர் - அவர்துதிருநாமத்தைத்துதித்துநாம் அவரைஅறிந்தோமென்றறியுங்கள்; இம்மைக்குமம்மைக்குமெல்லாமமைந்தோம் - இப்பிறப்பிற்கும் வருபிறப்பிற்கும்ஆகிய பயனெல்லாம் பெற்றோம்; எம்மைப்புறனுரைப்பதென் - எம்மைப்புறங்கூறுவதுஎன்னிருக்கின்றது; தெரிமின் - தெரியுங்கள்.—எ-று. ஏ-ஓ-அசை.

உரைமருவியென்றதற்கு அவர்கூறிய ஆகமவளவையை யுணர்ந்தென்றுரைப்பினுமமையும். உணர்ச்சிவழியால் வருபிறப்பின்பயனு மிம்மைப்பயனுமடைந்தவெம்மை யப்பயனடையாப்புறச்சமயிகள் கூறுங்கூற்றாற் பயனின்றென்பதுகருத்து.

௩௨. என்னையுடையானுமேகமாய்நின்றானுந்
தன்னையறியாததன்மையனும்—பொன்னைச்
சுருளாகச்செய்தனையதூச்சடையான்வானோர்க்
கருளாகவைத்தவவன்.

(இ-ள்.) என்னையுடையானும்-என்னையாளாகவுடையவனும்; ஏகமாய்நின்றானும்-உலகத்திற்கொருமுதலாயிருக்கின்றவனும்; தன்னையறியாததன்மையனும் - தன்பெருமையைத்தானறியாத இயல்புடையவனும்; வானோர்க்கருளாகவைத்த - தேவர்களுக்கு அருளுதித்தற்கிடமாகவைத்த; பொன்னைச்சுருளாகச்செய்தனையதூச்சடையானவன்-பொன்னைத்திரித்துச்செய்தாற்போலும் தூயசடையையுடைய அவனும்.—எ-று.

தன்னையறியாத தன்மையனென்றது தன்னைத்தன்னியல்பிலேயறிதலன்றிச் சுட்டியுணரும் பொருள்போலுணருமியல் புடையனன்றென்று குறிப்பித்தது. எப்பொருள்

களுந்தானுய்நிற்றலின் அப்பொருளோடு தன்னைப்பிறித்துணராத இயல்புடையரென்று ரைப்பினுமமையும்.

கூங. அவன்கண்டாய்வானோர்பிரானுவானென்று
மவன்கண்டாயம்பவளவண்ண—னவன்கண்டாய்
மைத்தமர்ந்தகண்டத்தான்மற்றவன்பானன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன்பாய்நீவிரும்பு.

(இ-ள்.) அவன்வானோர்பிரானுவான்என்றும் - அவனேதேவர்கள்பிரானென்றும்; அவன்அம்பவளவண்ணன்என்றும் - அவனேபவளம்போலும் திருமேனியுடையனென்றும்; அவன்மைத்தமர்ந்தகண்டத்தான்என்றும் - அவனேகருநிறமுடைத்தாயிருக்கும் திருமிடறுடையவனென்றும்; மற்றவன்பானன்னெஞ்சே - அச்சிவபிரானிடத்து நன்மனமே; மெய்த்தமர்ந்தன்பாய்நீவிரும்பு - நீமெய்ப்பத்தியுடையையாய் அன்புடையையாய் விரும்பு.—எ-று. கண்டாய் மூன்றும் அசை

கூச. விருப்பினுனீபிரியகில்லாயோவேறு
விருப்பிடமற்றில்லையோவென்னே—பொருப்பன்மகள்
மஞ்சுபோன்மால்விடையாய்நிற்பிரிந்துவேறிருக்க
வஞ்சுமோசொல்லாயவள்.

(இ-ள்.) மஞ்சுபோன்மால்விடையாய் - மேகம்போலுங்கரியநிறமுடையதிருமாலாகிய விடபத்தையுடையவரே; பொருப்பன்மகள் - பார்ப்பதியாரை; விருப்பினுனீபிரியகில்லாயோ - அவள்மேல்வைத்தவிருப்பால் நீபிரியமாட்டாயோ; வேறுவிருப்பிடமற்றில்லையோ-வேறுகவிருத்தற்கிடம்பிறிதில்லையோ; அவள்நிற்பிரிந்துவேறிருக்கவஞ்சுமோஎன்னேசொல்லாய்-அவள்நின்னைப்பிரிந்துதனியாயிருக்க அஞ்சுமோஎவனேஉரையாய்.-எ-று.

அபேதமாயிருப்பரென்பது கருத்து.

கூரு. அவளோர்குலமங்கைபாகத்தகலா
ளிவளோர்சலமகளுமீதே—தவளநீ
றென்பணிவீரென்றும்பிரிந்தறியீரீங்கிவரு
ளன்பணியார்சொல்லுமினிங்கார்.

(இ-ள்.) அவளோர்குலமங்கைபாகத்தகலாள் - குலப்பெண்அவள்ஓர் கூற்றில்நீங்காள்; இவளோர்சலமகளுமீதே - ஓர்கங்கைஇவளும் இவ்வாறே; தவளநீறென்பணிவீர்-தாவளியமானநீற்றையும் என்பையும் அணியும்பிரானீர்; என்றும்பிரிந்தறியீர் - நீரிவ்விருவரையும் ஒருகாலும்பிரிந்தறியமாட்டீர்; ஈங்கிவருளன்பணியார்சொல்லுமினிங்கார் - இவ்விருவருள் இவ்விடத்துயார் உம்அன்பிற்கானவர்கூறுவீர்.—எ-று.

கூசு. ஆர்வல்லார்காணவரனவனையன்பென்னும்
போர்வையதனுலேபோர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தானுமூர்ந்தனிநெஞ்சினுள்ளடைத்து
மாயத்தால்வைத்தோமறைத்து.

(இ-ள்.) அரனவனைஅன்பென்னும்போர்வையதனுலேபோர்த்தமைத்து - சிவபிரானைஅன்பாகியபோர்வையினுல் மூடிவைத்து; சீர்வல்லதாயத்தால் - சிறப்பமைந்தஉரிமை

யால்; நாமுந்தனிநெஞ்சினுள்ளடைத்து - நாமும்நல்லநெஞ்சினுள்ளடைத்து; மாயத்தால் வைத்தோமறைத்து - மறைத்துப்பிறரறியாமல்வைத்தோம் அதனால்; ஆர்வல்லார்காண - காணவல்லவர்யார்.—எ-று.

உம்மை பிறகணங்களேயன்றி நாமும் எனப்பொருள்படுதலின் இறந்ததுதழீஇயது. இவ்வாறன்பாலடைந்தாரன்றிப் பிறரறியாரென்பது கருத்து.

கூஎ. மறைத்துலகமேழினிலும்வைத்தாயோவன்றே
லுறைப்போடுமுன்கைக்கொண்டாயோ—நிறைத்திட்
டுளைந்தெழுந்துநீயெரிப்பமூவுலகுமுள்புக்
களைந்தெழுந்தசெந்தீயழல்.

(இ-ள்.) நீயெரிப்பஉளைந்தெழுந்து - நீயெரிக்குங்கால் சுவாலித்தெழுந்து; மூவுலகு நிறைத்திட்டுள்புக்கு - மூன்றுலகின்கண்ணுநிறைந்துள்புகுந்து; அளைந்தெழுந்தசெந்தீயழல் - அப்பொருள்களோடுவிரவி யெழுந்தசிவந்தஅனலை; மறைத்துலகமேழினிலும் வைத்தாயோ - ஏழுலகினும் மறைத்துவைத்தாயோ; அன்றேலுறைப்போடுமுன்கைக் கொண்டாயோ - அன்றிவலியோடு உன்கையிற்றாங்கினையோ.—எ-று.

கூஅ. அழலாடவங்கைசிவந்ததோவங்கை
யழகாலழல்சிவந்தவாறோ—கழலாடப்
பேயாடுகானிற்பிறங்கவனலேந்தித்
தீயாடுவாயிதனைச்செப்பு.

(இ-ள்.) அழலாடவங்கைசிவந்ததோ - தீயின்கணுடஅதனால் திருக்கரங்கள்சிவந்ததோ; அங்கைஅழகாலழல்சிவந்தவாறோ - அன்றித்திருக்கரத்தினழகால் அத்தீச்சிவந்ததோ; கழலாடப்பேயாடுகானிற்பிறங்க - சிலம்பசையப்பேய்க்கணமாடும்கானில்விளங்க; அனலேந்தித்தீயாடுவாய் - அனலையேந்திக்கொண்டு தீயின்கணுடுகின்றவனே; இதனைச் செப்பு - நீ இதனைச்சொல்.—எ-று.

கூகூ. செப்பேந்திளமுலையாள்காணவோதீப்படுகாட்
டப்பேய்க்கணமவைதாங்காணவோ—செப்பெனக்கொன்
றாகத்தானங்காந்தனலுமிழுமைவாய
நாகத்தாயாடுன்னடம்.

(இ-ள்.) தான்அங்காந்தனலுமிழுமைவாயநாகத்தாய் - தான்வாயைத்திறந்து தீவிடத்தைக்கக்குகின்ற ஐந்துவாயையுடைய பாம்பணிந்தவரே; ஆடுன்னடம் - ஆடுகின்ற உன்னுடையநடனம்; செப்பேந்திளமுலையாள்காணவோ - செப்பொத்தேந்திய இளமுலையுடைய உமையவள்காணவோ; தீப்படுகாட்டப்பேய்க்கணமவைதாங்காணவோ - அன்றித்தீயெரியும் அக்கானின்கண் அந்தப்பேய்க்கணங்கள்காணும்படிக்கோ; செப்பெனக்கொன்றாக - ஒருத்தரம்எனக்காகச்சொல்.—எ-று.

க00. நடக்கிற்படிநடுங்குநோக்கிற்றிசைவே
மிடிக்கினுலகனைத்துமேங்கு—மடுக்கற்
பொருமேறேவானேறேபொன்னொப்பாய்நின்னே
றுருமேறேவொன்றுவுரை.

(இ-ள்.) நடக்கிற்படிநடுங்கும் - நடந்தால்நிலவுலகம்நடுங்கும்; நோக்கிற்றிசைவேம்- பார்த்தால்திக்குகள்வெந்துபோம்; இடிக்கினுலகனைத்துமேங்கும் - உங்காரஞ்செய்தால் எல்லாவுலகுமஞ்சும் அதனால்; அடுக்கற்பொருமேறேவானேறே - மலைக்கண் வாழும் பொராநின்ற சிங்கேறே இடபந்தானோ; பொன்னொப்பாய்நின்னேறுருமேறே - பொன் போலுந்திருமேனியையுடையவரே உம்முடையஇடபமானது இடியேறே; ஒன்றுவுரை- இவற்றுள்ஒன்றாக நிச்சயித்துச்சொல்.—எ-று.

௧0௧. உரையினிம்மாலையந்தாதிவெண்பாக்
கரைவினாற்காரைக்காற்பேய்சொற்—பரவுவா
ராராதவன்பினோடண்ணலைச்சென்றேத்துவார்
பேராதகாதல்பிறந்து.

காரைக்காலம்மையாரருளிய அற்புதத்திருவந்தாதியுரை

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

அப்பூதியடிகணாயனார.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பூதியடிகணாயனார்புராணம்.

தாண்டவம் புரியவல்ல தம்பிரா னாருக்கன்ப
ரீண்டிய புகழின்பாலா ரெல்லையில் குணத்தின்மிக்கா
ராண்டசீ ரரசின்பாத மடைந்தவ ரறியாமுன்னே
காண்டகு காதல்கூரக் கலந்தவன் பினராயுள்ளார்.

(இ-ள்.) தாண்டவம்புரியவல்ல=ஆனந்தநிருத்தஞ்செய்தருளுதற்குரிய; தம்பிரானாருக்கன்பர்=சிவபிரானுக்கு அடியராயுள்ளவர்; ஈண்டியபுகழின்பாலார்=மிக்கபுகழையுடையவர்; எல்லையில்குணத்தின்மிக்கார்=அளவுபடாதகுணத்தில்மேம்பட்டவர்; ஆண்டசீரரசின்பாதமடைந்து=சிவபிரான் தடுத்தாட்கொண்ட திருநாவுக்கரசரது திருவடிகளைச்சேர்ந்து; அவரறியாமுன்னே=அவர்தம்மை யறிவதற்குமுன்னே; காண்டகுகாதல்கூர=யாவரும்காணத்தக்க பேரன்பானது மீக்கூர; கலந்தவன்பினராயுள்ளார்=தம்மிடத்துக்கலப்பான அன்புடையராயுள்ளவர்.—எ-று. (க)

களவுபொய் காமங்கோப முதலிய குற்றங்காய்ந்தார்
வளமிகு மனையின்வாழ்க்கை நிலையினர் மனைப்பாலுள்ள
வளவைக ணிறைகோல்மக்க ளாவொடு மேதிமற்று
முளவெலா மரசினாமஞ் சாற்றுமவ் வொழுக்கலாற்றார்.

(இ-ள்.) களவுபொய்காமங்கோபமுதலிய=பிறர்பொருளைக்கவர்தல் பொய்சொல்லுதல் பிறர்மனை நயத்தல் வெகுளல் முதலிய; குற்றங்காய்ந்தார்=மனக்குற்றங்களையொழித்தவர்; வளமிகுமனையின்வாழ்க்கைநிலையினர்=செல்வம்மிக்க இல்லறநிலையையுடையவர்; மனைப்பாலுள்ளவளவைகள்=தம்வீட்டின்கணிருக்கின்ற முகத்தலளவைக்கருவிகளும்; நிறைகோல்மக்கள்=எடுத்தளக்கும் நிறைகோலும் புத்திரர்களும்; ஆவொடுமேதிமற்றும்=பசுவும் எருமையும் பிறபொருள்களுமாய்; உளவெலாமரசினாமஞ்சாற்றும்=உள்ளபொருள்கட்கெல்லாம் ஆண்டவரசின் திருநாமத்தையிட்டுவழங்கும்; அவ்வொழுக்கலாற்றார்=அவ்வொழுக்கநெறியில் நிற்பவர்.—எ-று.

முதலிய என்றதனால் பொறாமை விருப்புண்மையுங்கொள்க. (உ)

வடிவுதான் காணாராயு மன்னுசீர் வாக்கின்வேந்த
ரடிமையுந் தம்பிரானா ரருளுங்கேட் டவர்நாமத்தாற்
படிநிகழ் மடங்கள்தண்ணீர்ப் பந்தர்கண் முதலாயுள்ள
முடிவிலா வறங்கள்செய்து முறைமையால் வாழுநாளில்.

(இ-ள்.) மன்னுசீர்வாக்கின்வேந்தர்=நிலைபெற்ற சிறப்பினையுடைய வாகீசமுனிவரது; வடிவுதான்காணாராயும்=திருவுருவத்தைத் தாம் காணாதிருந்தும்; அடிமையுந்தம்பிரானாரருளுங்கேட்டு=அவர் அடிமைத்திறத்தையும் சிவபிரான் அவர்க்குச்செய்யும் திருவருள் மான்மியத்தையும் கேள்வியுற்று அதனால்; அவர்நாமத்தாற்படிநிகழ்மடங்கள்=அவருடைய திருநாமத்தினாலே முறைமையாக அமைத்ததிருமடங்கள்; தண்

ணீர்ப்பந்தர்கண்முதலாயுள்ள—தண்ணீர்ப்பந்தர்கள் முதலாக விருக்கின்ற; முடிவிலா வறங்கள்செய்து—அழியாத அறங்களைச்செய்து; முறைமையால்வாழுநாளில்—ஒழுக்க நெறியோடு வாழ்ந்திருக்கும்நாளில்.—எ-று.

முதலாயுள்ள என்றதனுல் குளம் திருநந்தனவனம் நிழல்மரங்களுங்கொள்க. (ங)

வேறு.

பொருப்பரையன் மடப்பிடியி னுடன்புணருஞ் சிவக்களிற்றின்
திருப்பழனம் பணிந்துபணி செய்திருநா வுக்கரச
ரொருப்படுகா தலிற்பிறவு முடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினுடன் றிங்களூர் மருங்குவழி மேவுவார்.

(இ-ள்.) பொருப்பரையன்மடப்பிடியினுடன்புணரும்—இமவான்பெற்ற புத்திரியாகியபெண் யானையுடன்புணர்ச்சிசெய்கின்ற;சிவக்களிற்றின்திருப்பழனம்பணிந்து—சிவமாகிய ஆண்யானை வீற்றிருக்கும் திருப்பழனமென்னும் திருப்பதியைவணங்கி;பணிசெய்திருநாவுக்கரசர்—கைத்திருத்தொண்டுசெய்கின்ற வாகீசமுனிவர்; ஒருப்படுகாதலில்—ஒருப்பட்டபேரன்பால்; உடையவர்தம்பதிபிறவும்வணங்கும்—தம்மை ஆளாகவுடைய முதல்வர் வீற்றிருந்தருளும்பிற திருப்பதிகளையும் வணங்குதற்கேதுவாயுதிக்கும்; விருப்பினுடன்றிங்களூர்மருங்கு—பேரன்போடுதிங்களூரின்கணுள்ள; வழிமேவுவார்—வழியில்செல்வாராய்.—எ-று. (ச)

அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையி லருளுடையா
ருளமனைய தண்ணளித்தா யுறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போற் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவு நிழறருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்.

(இ-ள்.) அளவில்சனஞ்செலவொழியாவழிக்கரையில்—எண்ணிறந்த ஜனங்கள் வழிப்போதலினின்றும் நீங்காதவழியருகில்; அருளுடையாருளமனையதண்ணளித்தாய்—காருண்யமுடைய அப்பூதியடிகளாரது திருவுள்ளம்போலும் தட்பமுடைத்தாய்; உறுவேனிற்பரிவகற்றி—மிக்கவேனிலால்வரும் வெம்மையைநீக்கி; குளம்நிறைந்தநீர்த்தடம்போல்—நிறைந்தநீரையுடைய குளம்போலவும் தடாகம்போலவும்; குளிர்தூங்கும்பரப்பினதாய்—தண்மைமிக்கிருக்கும் பரந்தஇடத்தையுடையதாய்;வளமருவுநிழறரு—வளந்தங்கிய நிழலைக்கொடுக்கும்; தண்ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்—தண்ணீர்ப்பந்தரில் எழுந்தருளினர்.—எ-று.

இம்மூன்றுங் குளகம். (ரு)

வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருட னமுதமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை யெம்மருங்குந் தாங்கண்டார்.

(இ-ள்.) வந்தணைந்தவாகீசர்—அங்கு எழுந்தருளியவாகீசமுனிவர்; மந்தமாருதசீதப்பந்தருடன்—சிறுதென்றல்வீசும் குளிர்ந்த தண்ணீர்ப்பந்தரோடு; அமுதமாந்தண்ணீரும்பார்த்தருளி—அமுதமயமாயிருக்கும் தண்ணீரையும் திருநோக்கஞ்செய்தருளி; சிந்தைவியப்புறவருவார்—திருவுள்ளமகிழ்ச்சியோடுவருகின்ற அவ்வாகீசமுனிவர்; திருநாவுக்கரசெனும்பேர்—திருநாவுக்கரசென்னும் தம்திருப்பெயர்; சந்தமுறவரைந்ததனை—அழகாக எழுதியிருத்தலை; எம்மருங்குந்தாங்கண்டார்—எவ்விடத்தும் தாம் பார்த்தருளினர்.—எ-று. (சு)

இப்பந்த ரிப்பெயரிட் டிங்கமைத்தா ரியாரென்றூர்க்
கப்பந்த ரறிவார்க ளாண்டவர செனும்பெயராற்
செப்பருஞ்சீ ரப்பூதி யடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி யெங்குமுள சாலைகுளங் காவென்றூர்.

(இ-ள்.) இப்பந்தரிப்பெயரிட்டு=இத்தண்ணீர்ப்பந்தரை இப்பெயரெழுதி; இங்கமைத்தாரியாரென்றூர்க்கு=இவ்விடத்துச்செய்தவர் யாரென்றுவினவிய வாகீசமுனிவர்க்கு; அப்பந்தரறிவார்கள்=அத்தண்ணீர்ப்பந்தரை யறிந்தவராகிய அவ்வூரிலுள்ளோர்; ஆண்டவரசெனும்பெயரால்=திருநாவுக்கரசென்னும் திருப்பெயரால்; செப்பருஞ்சீரப்பூதியடிகளார்=சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய அப்பூதியடிகளென்னும் மறையவர்; தப்பின்றியெங்குமுளசாலைகுளங்கா=நன்காக இவ்வாறெங்குமுள்ள தண்ணீர்ப்பந்தரும் குளமும் சோலைகளுமாகிய இவைகளை; செய்தமைத்தாரென்றூர்=செய்துவைத்தாரென்று சொன்னூர்கள்.—எ-று. (௭)

என்றுரைக்க வரசுகேட் டிதற்கென்னே கருத்தென்று
நின்றவரை நோக்கியவ ரெவ்விடத்தா ரெனவினவத்
துன்றியநூன் மார்பருமித் தொல்பதியார் மனையின்கட்
சென்றனரிப் பொழுததுவுஞ் சேய்த்தன்று நணித்தென்றூர்

(இ-ள்.) என்றுரைக்கவரசுகேட்டு=என்று அவர்கள்கூற அவ்வாகீசமுனிவர் அதைக்கேட்டு; இதற்கென்னேகருத்தென்று=இவ்வாறு பெயரெழுதி யமைத்தற்குயாதோ அவருளக்கருத்தென்றுகருதி; நின்றவரைநோக்கி=அங்குநின்ற அவ்வூரரைப்பார்த்து; அவரெவ்விடத்தாரெனவினவ=அவர் எங்குள்ளாரென்றுகேட்க; துன்றியநூன்மார்பருமித்தொல்பதியார்=நெருங்கியபூணூலையணிந்த மார்பையுடைய அவ்வப்பூதியடிகளும் இந்தப்பழைய ஊரின்கணுள்ளவர்; மனையின்கட்சென்றனரிப்பொழுது=இப்பொழுது அவர் தம் திருமாளிகைக்கெழுந்தருளினூர்; அதுவுஞ்சேய்த்தன்றுநணித்தென்றூர்=அத்திருமாளிகையும் தூரத்திலுள்ளதன்று சமீபத்திலுள்ளதென்று சொன்னூர்கள்.
உம்மை நாமேயன்றியவருமென இறந்ததுதழீஇயது. சிறப்பும்மை யெனினுமமையும். (௮)

அங்ககன்று முனிவரும்போ யப்பூதி யடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன் சார்வாக வுள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் றமரொருவ ரெனக்கேட்டு நண்ணினூர்.

(இ-ள்.) அங்ககன்றுமுனிவரும்போய்=அவ்விடத்தினின்றும் நீங்கி வாகீசமுனிவரும்தாம்போய்; அப்பூதியடிகளார்தங்கும்=அப்பூதி யடிகளார் வாழ்ந்திருக்கும்; மனைக்கடைத்தலைமுன்சார்வாக=திருமாளிகையின் தலைக்கடைவாயிலின்முன்னே எழுந்தருள; உள்ளிருந்ததிங்களூர்மறைத்தலைவர்=திருமாளிகையினுள்ளிருந்த திங்களூரின்கண்வாழும் வேதமுதல்வராகிய அப்பூதியடிகள்; செழுங்கடையில்வந்தடைந்தார்=அழகிய தலைவாயிலில் வந்திருந்தார்; நங்கள்பிரான்றமரொருவர்=எங்கள் சிவபிரான் அடியார் ஒருவர்; எனக்கேட்டுநண்ணினூர்=என்று அங்குள்ளார் சொல்லக்கேட்டு அவ்விடத்துவந்தார்.—எ-று. (௯)

கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்த
மடிபணியா முன்பணியு மரசினெதி ரந்தணனூர்

முடிவிறவஞ் செய்தேன்கொன் முன்பொழியுங் கருணைபுரி
வடிவுடையீ ரென்மனையில் வந்தருளிற் றென்னென்ருர்.

(இ-ள்) சடிதணைந்துவாகீசர்கழல்பணிய—விரைந்துசென்று வாகீசமுனிவரது திருவடிகளை அப்பூதியடிகள் வணங்க; மற்றவர்தமடி பணியாமுன்பணியுமரசினெதிர்— அவ்வப்பூதியடிகள் தம் திருவடிகளை வணங்க முன்னமேதாம் வணங்காநின்ற வாகீச முனிவர் திருமுன்னே; அந்தணனர்முடிவிறவஞ்செய்தேன்கொன்முன்—அவ்வப்பூதி யடிகள் முன்னே அளவுபடாத தவத்தை யான் செய்தேனே அறியேன்; பொழி யுங்கருணைபுரிவடிவுடையீர்—பொழியாநின்ற கருணைதிரண்ட ஒரு திருவுரு வுடைய வரே; என்மனையில்வந்தருளிற்றென்னென்ருர்—எனதில்லின்கண் எழுந்தருளியது என் னகாரணமென்று வினவினர்.—எ-று. (௧௦)

ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றேம் வழிக்கரையி னீர்வைத்த வாய்ந்தவளந்
தருகின்ற நிழற்றண்ணீர்ப் பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற வறம்பிறவுங் கேட்டணைந்தோ மெனப்புகல்வார்.

(இ-ள்.) ஒருகுன்றவில்லாரை—ஒப்பற்றமேருவாகிய வில்லையுடையவரை; திரு ப்பழனத்துள்ளிறைஞ்சிவருகின்றேம்—திருப்பழனமென்னும் திருப்பதியில் தரிசித் திறைஞ்சி இப்பொழுது வராநின்றேம்; வழிக்கரையினீர்வைத்த—வழியருகே நீர் அமைத்த; வாய்ந்தவளந்தருகின்ற—சிறந்தவளத்தைத் தராநின்ற; நிழற்றண்ணீர்ப்பந்த ருங்கண்டு—நிழலையுடைய தண்ணீர்ப்பந்தரையும் பார்த்து; அத்தகைமைபுரிகின்றவறம் பிறவும்—அவ்வாறு நீர்செய்கின்ற அடியார்க்கமுதருத்தல் முதலியவாம்பிறதருமங்களை யும்; கேட்டணைந்தோமெனப்புகல்வார்—கேள்வியுற்று உம்மைக்காணவந்தோமென்று சொல்வாராய்.—எ-று. (௧௧)

ஆறணியுஞ் சடைமுடியா ரடியார்க்கு நீர்வைத்த
வீறில்பெருந் தண்ணீர்ப்பந் தரினும்பே ரெழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணமென்கொல்
கூறுமென வெதிர்மொழிந்தார் கோதின்மொழிக் கொற்றவனர்.

(இ-ள்.) ஆறணியுஞ்சடைமுடியாரடியார்க்கு—கங்கைநதியைத் தரித்தருளும் சடைமுடியையுடைய சிவபிரானடியவர்பொருட்டு; நீர்வைத்தவீறில்பெருந்தண்ணீர் ப்பந்தரில்—நீர்சமைத்துவைத்த அடங்காத பெருமையையுடைய தண்ணீர்ப்பந்தரினி டத்து; நும்பேரெழுதாது—உம்முடைய பெயரை எழுதாமல்; வேறொருபேர்முன் னெழுதவேண்டியகாரணமென்கொல்—வேறொருவருடைய பெயரை அதன்முகப்பில் எழுதுதற்குரிய காரணம்யாதோ; கூறுமெனவெதிர்மொழிந்தார்—சொல்லுமென்று அ வரெதிரில் சொன்னர்; கோதின்மொழிக்கொற்றவனர்—குற்றமற்ற வாகீசமுனிவர்.
இவ்விரண்டுங் குளகம். ஏ. அசை. (௧௨)

நின்றமறை யோர்கேளா நிலையழிந்த சிந்தையராய்
நன்றருளிச் செய்திலீர் நாணிலமண் பதகருட
னென்றியமன் னவன்சூட்சி திருத்தொண்டி னுறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ வேறொருபே ரெனவெகுள்வார்.

(இ-ள்.) நின்றமறையோர்கேளா—அங்குநின்ற அப்பூதியடிகள் அதைக்கேட்டு; நிலையழிந்தசிந்தையராய்—தந்நிலைமைவேறுபட்ட திருவுள்ளமுடையவராய்; நன்றருளிச்செய்திலீர்—பாங்காகக் கட்டளையிடாதொழிந்தீர்; நாணிலமண்பதகருடன்—வெட்கமில்லாத சமணராகிய கீழ்மக்களுடன்; ஒன்றியமன்னவன்சூட்சி—சேர்ந்தகாடவனுடைய உபாயத்தை; திருத்தொண்டினுறைப்பாலே—தாம்செய்யும் திருத்தொண்டினது அழுத்தத்தினாலே; வென்றவர்தந்திருப்பேரோ—வென்ற திருநாவுக்கரசு நாயனாரது திருப்பெயரோ; வேறொருபேரெனவெகுள்வார்—அன்னியருடைய பெயரென்றுவெகுள்வாராயினர்.—எ-று. (கங)

நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
யிம்மையிலும் பிழைப்பதென வெம்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பேரெழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீ ரெனவிளம்பி.

(இ-ள்.) நம்மையுடையவர்கழற்கீழ்—பின்னும் அவர்நம்மையடிமையாகவுடைய சிவபிரான் திருவடிக்கீழ்; நயந்ததிருத்தொண்டாலே—விரும்பிய திருத்தொண்டுகாரணமாகத்தான்; இம்மையிலும்பிழைப்பதென—மறுமையிலே யன்றி இம்மையிலேயும் உய்வதென்று; எம்போல்வாருந்தெளிய—என்போலிகளும் தெளிதற்கேதுவாக; செம்மைபுரிதிருநாவுக்கரசர்—நன்னெறிகளைச்செய்த திருநாவுக்கரசு நாயனாரது; திருப்பேரெழுத—திருப்பெயரைத் தண்ணீர்ப்பந்தர் தடாகம் முதலியவற்றில் எழுதிவைக்க; வெம்மைமொழியான்கேட்கவிளம்பினீர்—கொடுஞ்சொல்லையான்கேட்கும்படி அருளிச்செய்தீர்; எனவிளம்பி—என்றுகூறி.—எ-று.

நாமெல்லாம் இம்மை மறுமைகளில் திருத்தொண்டு செய்தே உய்யவேண்டுமென்பதைத் திருத்தொண்டாலேவிளக்கிய திருநாவுக்கரசின் திருப்பெயரை வேறொருவர் பெயரென்றது தகாதெனமறுத்துக்கூறின ரென்றறிக. ஏ-அசை. (கச)

பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறு மவர்பெருமை
யங்கணர்தம் புவனத்தி லறியாதா ரியாருளரே
மங்கலமாந் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீ
ரெங்குறைவீர் நீர்தாமியா ரியம்புமென வியம்பினர்.

(இ-ள்.) பொங்குகடற்கன்மிதப்பில்—அலைகள் பொங்குகின்ற கடலினிடத்துச் சமணர்களிட்ட கற்றூணாகிய தெப்பத்தில்; போந்தேறுமவர்பெருமை—சென்றுகரையேறுகின்ற அவ்வாகீசரது பெருமையை; அங்கணர்தம்புவனத்தில்—சிவபிரானது அடியார் தொகுதியில்; அறியாதார்யாருளர்—அறியாதவர்கள் யாருமில்லை; மங்கலமாந்திருவேடத்துடனின்று—மங்கலகரமான திருவேடத்தோ டெழுந்தருளி; இவ்வகைமொழிந்தீர்—இவ்வாறு பொருந்தாத உரையை அருளிச்செய்தீர்; எங்குறைவீர்நீர்தாமியார்—நீர் எவ்விடத்திருக்கின்றவர் உம்முடைய பெயரென்ன; இயம்புமெனவியம்பினர்—எடுத்துக்கூறுமென்று கேட்டார்.—எ-று. இவ்விரண்டுங் குளகம். ஏ-அசை.

புவனம் என்றது உலகம் என்னும் பொருள்தந்து பின் சிவனடியார்கள் என்னும் பொருள் கொடுத்து நின்றது. (கரு)

திருமறையோ ரதுமொழியத் திருநாவுக் கரசரவர்
பெருமையறிந் துரைசெயவார் பிறதுறையி னின்றேற்ற
வருள்பெருகு சூலையினா லாட்கொள்ள வடைந்துய்ந்த
தெருளுமுணர் வில்லாத சிறுமையேன் யானென்றார்.

(இ-ள்.) திருமறையோரதமொழிய—அப்பூதியடிகள் அவ்வாறருளிச் செய்ய; திருநாவுக்கரசர்—திருநாவுக்கரசுநாயனூர்; அவர்பெருமையறிந்துரைசெய்வார்—அவ்வப்பூதி யடிகளுடைய பத்திமகிமையை அறிந்து சொல்லுவார் அது எவ்வாறெனில்; பிறதுறையினின்றேற்ற—புறச்சமயத்தில் நின்றும் கரையேற்றும்பொருட்டு; அருள்பெருகுசூலையினுல்—கருணைமிக்க சூலைநோயினுல்; ஆட்கொள்ளவடைந்துய்ந்த—தடுத்தாட்கொள்ள இச்சைவம்புகுந்து பிழைத்த; தெருளுமுணர்வில்லாத—தெளிந்த உணர்ச்சியில்லாத; சிறுமையேன்யானென்றூர்—சிறியேன்யானென் றருளிச்செய்தார்.—எ-று. (௬௬)

அரசறிய வுரைசெய்ய வப்பூதி யடிகடாங்
கரகமல மிசைக்குவியக் கண்ணருவி பொழிந்திழிய
வுரைகுழறி யுடம்பெல்லா முரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை விழுந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார்.

(இ-ள்) அரசறியவுரைசெய்ய—ஆண்டவரசு அப்பூதியடிகளறியும்படி தம்சரிதத்தையருளிச்செய்ய; அப்பூதியடிகடாம்—அப்பூதியடிகளுயனூர்; கரகமலமிசைக்குவிய—கேட்டபொழுதே கரங்களாகிய தாமரைமலர்கள் சிரசின்மேற் குவிய; கண்ணருவிபொழிந்திழிய—கண்களினின்றும் ஆனந்தவருவி சொரிந்து பெருக; உரைகுழறி—உரைதடுமாறி; உடம்பெல்லாமுரோமபுளகம்பொலிய—உடம்புமுழுதும் மயிர்க்கூச் சுண்டாக; தரையின்மிசைவிழுந்து—நிலத்தில் விழுந்து; அவர்தஞ்சரணகமலம்பூண்டார்—அவருடைய திருவடித்தாமரைகளைச் சிரசிற் சூடிக்கொண்டார்.—எ-று. (௬௭)

மற்றவரை யெதிர்வணங்கி வாகீச ரெடுத்தருள
வற்றவர்க ளருநிதியம் பெற்றூர்போ லருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
யுற்றவிருப் புடன்சூழ வோடினூர் பாடினூர்.

(இ-ள்.) மற்றவரையெதிர்வணங்கி—அவ்வப்பூதி யடிகளை எதிரேவணங்கி; வாகீசரொடுத்தருள—வாகீசமுனிவர்தம் திருக்கரங்களால் எடுத்தருள; அற்றவர்களருநிதியம் பெற்றூர்போல்—அரியசெல்வம்பெற்ற வறிஞரைப்போன்று; அருமறையோர்முற்றவுளங்களிகூர—அப்பூதியடிகள் முழுதும் திருவுள்ளம் களிப்படைய; முன்னின்றுகூத்தாடி—அவர்திருமுன்னேநின்று ஆனந்தக் கூத்தாடி; உற்றவிருப்புடன்சூழ—தம்மிடத்துண்டாகிய பெருவிருப்போடு வலமாக; ஓடினூர்பாடினூர்—ஓடி வாகீசர்பேரில் தோத்திரங்களைப்பாடினூர்.—எ-று. (௬௮)

மூண்டபெரு மகிழ்ச்சியினுன் முன்செய்வ தறியாதே
யீண்டமனை யகத்தெய்தி யில்லவர்க்கு மக்களுக்கு
மாண்டவர செழுந்தருளு மோகையுரைத் தார்வமுறப்
பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடுமீளப் புறப்பட்டார்.

(இ-ள்.) மூண்டபெருமகிழ்ச்சியினுல்—திருவுள்ளத்து வளர்ந்த பெருங்களிப்பால்; முன்செய்வதறியாது—முன்னே செய்யவேண்டுவது ஈதென்பதைப் பரவசத்தாலுணராது; ஈண்டமனையகத்தெய்தி—விரைவாகத் தம் திருமாளிகையிடத்துச் சென்று; இல்லவர்க்குமக்களுக்கும்—மனையாளுக்கும் புத்திரர்களுக்கும்; ஆண்டவரசெழுந்தருளுமோகையுரைத்து—வாகீசமுனிவ ரெழுந்தருளும் வரவின்சிறப்பை எடுத்துக்கூறி; ஆர்வமுற—பெருவிருப்புண்டாக; பூண்டபெருஞ்சுற்றமெலாங்கொடு—தம்மைச்சேர்ந்த பெரிய உறவினரையெல்லாம் அழைத்துக்கொண்டு; மீளப்புறப்பட்டார்—மீண்டுவந்தார்.—எ-று. ஏ-அசை. (௬௯)

மனைவியா ருடன்மக்கண் மற்றுள்ள சுற்றத்தோ
ரனைவரையுங் கொண்டிறைஞ்சி யாராத காதலுடன்
முனைவரையுள் ளெழுந்தருளு வித்தவர்தாண் முன்விளக்கும்
புனைமலர்நீர் தங்கண்மேற் றெளித்துள்ளும் பூரித்தார்.

(இ-ள்.) மனைவியாருடன்மக்கள்=மனைவியாரோடு புத்திரர்களும்; மற்றுள்ளசுற்றத்தோர்=வேறுள்ள சுற்றத்தாருமாகிய; அனைவரையுங்கொண்டிறைஞ்சி=எல்லாரையும் வணங்கச்செய்து; ஆராதகாதலுடன்=அடங்காத பெருவிருப்போடு; முனைவரையுள்ளெழுந்தருளுவித்து=வாகீசமுனிவரை உள்ளே எழுந்தருளும்படி செய்து; அவர்தாண்முன்விளக்கும்புனைமலர்நீர்=அவர் திருவடிகளை முன்னேவிளக்குகின்ற மலரிட்டுவைத்தபாத்திய நீரை; தங்கண்மேற்றெளித்து=தங்களுடம்பில் தெளித்துக்கொண்டு; உள்ளும்பூரித்தார்=அத்தீர்த்தத்தைப் பிராசனமும் பண்ணினர்.—எ-று. (௨0)

ஆசனத்திற் பூசனைக ளமர்வித்து விருப்பினுடன்
வாசநிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கு
நேசமுற விண்ணப்பஞ் செயவவரு மதுநேர்ந்தார்.

(இ-ள்.) ஆசனத்திற்பூசனைகளமர்வித்து=பீடத்தில் எழுந்தருளச்செய்து செய்ய வேண்டிய பாதபூசைமுதலிய அர்ச்சனைகளை அவர் விரும்பச்செய்து; விருப்பினுடன் வாசநிறைதிருநீற்றுக்காப்பேந்தி=விருப்பத்தோடு வாசனைநிறைந்த விபூதிமடக்கை அவர் திருமுன்னே காட்டி; மனந்தழைப்பத்தேசமுய்யவந்தவரை=இதயம்தளிர்க்கும்படி உலகங் கடத்தேறவவதரித்த வாகீசமுனிவரை; திருவமுதுசெய்விக்குநேசமுற=திருவமுது செய்விக்கும்படியான அன்புமிக்கூர; விண்ணப்பஞ்செய=வேண்டுதல்செய்ய; அவருமதுநேர்ந்தார்=அவ்வாகீசமுனிவரும் அதற்குடன்பட்டார்.—எ-று. (௨௧)

வேறு.

செய்தவ ரிசைந்தபோது திருமனை யாரைநோக்கி
யெய்திய பேறுநம்பா லிருந்தவா றென்னேயென்று
மைதிகழ் மிடற்றினான்ற னருளினால் வந்ததென்றே
யுய்துமென் றுவந்துகொண்டு திருவமு தாக்கலுற்றார்.

(இ-ள்.) செய்தவரிசைந்தபோது=தவஞ்செய்த வாகீசமுனிவர் திருவமுதுசெய்ய உடன்பட்டபோது; திருமனையாரைநோக்கி=அப்பூதியடிகள் தம்மனைவியாரைப் பார்த்து; எய்தியபேறுநம்பால்=இவ்வடிகள் இவிடத்திற்கெழுந்தருளுதற் கேதுவான தவப்பயன் நம்மிடத்து; இருந்தவாறென்னேயென்று=இருந்தவண்ணமென்ன ஆச்சரியமென்றுசொல்லி; மைதிகழ்மிடற்றினான்றன்=இருளும்கரிய திருமிடற்றையுடைய சிவபிரானது; அருளினால்வந்ததென்றே=திருவருளினாலேயே கிடைத்ததென்றுநிச்சயித்து; உய்துமென்றுவந்துகொண்டு=இனி இதனால் நாம் உய்வோமென்று மகிழ்ச்சியடைந்து; திருவமுதாக்கலுற்றார்=திருவமுதமைக்கத்தொடங்கினர்.—எ-று. ஏ-அசை.

தாமுங்கூட நின்றமைத்தலில் ஆக்கலுற்றாரொன்றார். (௨௨)

தூயநற் கறிகளான வறுவகைச் சுவையாலாக்கி
யாயவின் னமுதுமாக்கி யமுதுசெய் தருளத்தங்கள்

சேயவர் தம்மின்மூத்த திருநாவுக் கரசைவாழை
மேயபொற் குருத்துக்கொண்டு வாவென விரைந்துவிட்டார்.

(இ-ள்.) தூயநற்கறிகளான=தூய்மையான நல்லகறியமுதுகளை; அறுவகைச்சுவையாலாக்கி=அறுவகைச் சுவையோடமைத்து; ஆயவின்னமுதுமாக்கி=அதற்குரிய இனியதிருவமுதையுஞ் சமைத்து; அமுதுசெய்தருள=ஆண்டவரசு திருவமுதுசெய்தருளும்பொருட்டு; தங்கள்சேயவர்தம்மில்=தம்புதல்வருள்; மூத்ததிருநாவுக்கரசை=மூத்ததிருநாவுக்கரசென்னும் திருப்பெயருடைய புதல்வனை; வாழைமேயபொற்குருத்து=வாழையினிடத்துள்ள பொன்னிறமமைந்த பரிகலக்குருத்தை; கொண்டுவாவெனவிரைந்துவிட்டார்=அரிந்துவாவென்று விரைவாகஅனுப்பினார்.—எ-று. (உரு)

நல்லதாய் தந்தையேவ நானிது செயப்பெற்றேனென்
றொல்லையி லணைந்துதோட்டத் துட்புக்குப் பெரியவாழை
மல்லலங் குருத்தையீரும் பொழுதினில் வாளராவொன்
றல்லலுற் றழுங்கிவீழ வங்கையிற் றீண்டிற்றன்றே.

(இ-ள்.) நல்லதாய்தந்தையேவ=நற்குணமுடைய தாய்தந்தைகள் அனுப்ப; நானிதுசெயப்பெற்றேனென்று=அப்புதல்வன்நான்இப்பணிசெய்யப்பெற்றேனென்று; ஒல்லையிலணைந்து=விரைந்துசென்று; தோட்டத்துட்புக்கு=தோட்டத்தினுள்ளே புகுந்து; பெரியவாழைமல்லலங்குருத்தை—பெரியவாழையினது வளந்தங்கியஅழகியகுருத்தை; ஈரும்பொழுதினில்=அரியுஞ்சமயத்தில்; வாளராவொன்று=ஒளியினையுடைய பாம்பொன்று; அல்லலுற்றழுங்கிவீழ=துயரமுற்று அதனால் மயங்கி விழுதற்கேதுவாக; அங்கையிற்றீண்டிற்று=அப்புதல்வன்கரத்திற்கடித்தது.—எ-று. அன்று. ஏ-அசை.உசா

கையினிற் கவர்ந்துசுற்றிக் கண்ணெரி காந்துகின்ற
பையரா வுதறிவீழ்த்துப் பதைப்புடன் பாந்தள்பற்றும்
வெய்யவே கத்தால்வீழா முன்னம்வே கத்தாலெய்திக்
கொய்தவிக் குருத்தைச்சென்று கொடுப்பனென் றோடிவந்தான்.

(இ-ள்.) கையினிற்கவர்ந்தசுற்றி=கையிடத்துக்கடித்துச்சுற்றிக்கொண்டு; கண்ணெரிகாந்துகின்ற=கண்ணினின்றும் கோபத்தீயைச் சொரிகின்ற; பையராவுதறிவீழ்த்து=படத்தையுடைய பாம்பைஉதறிக் கீழேவீழ்த்தி; பதைப்புடன்பாந்தள்பற்றும்=குருத்துக்கொண்டு செல்லவேண்டுமென்னும் பதைபதைப்போடும்பாம்புகடித்த; வெய்யவேகத்தால்வீழாமுன்னம்=கொடியவேகத்தால்தான் நிலத்தில்விழுமுன்னே; வேகத்தாலெய்தி=விரைந்தோடி; கொய்தவிக்குருத்தைச்சென்று=அரிந்த இப்பரிகலக்குருத்தைக்கொண்டுபோய்; கொடுப்பனென்றோடிவந்தான்=கொடுப்பேனென்றோடிவந்தான்.—எ-று. (உசு)

பொருந்திய விடவேகத்திற் போதுவான் வேகமுந்த
வருந்தியே யணையும்போழ்து மாசுணங் கவர்ந்ததார்க்கு
மருந்தவ ரமுதுசெய்யத் தாழ்க்கயா னறையேனென்று
திருந்திய கருத்தினோடுஞ் செழுமனை சென்றுபுக்கான்.

(இ-ள்.) பொருந்தியவிடவேகத்திற்போதுவான்=தன்னையடைந்த பாம்பின்விடவேகத்தோடுசெல்கின்ற அப்புதல்வன்; வேகமுந்தவருந்தியேயணையும்போழ்து=வேகம் மேம்படத் தான் அதனால்வருந்தி வீட்டையடையும்பொழுது; மாசுணங்கவர்ந்தது=பாம்புகடித்

தனை, அருந்தவரமுதுசெய்யத்தாழ்க்க=வாகீசமுனிவர் திருவமுதுசெய்யத்தடைப்படும்படி; ஆர்க்குமறையேனென்று=யார்க்குஞ்சொல்லேனென்று; திருந்தியகருத்தினேடும்=நிச்சயித்த எண்ணத்தோடு; செழுமனைசென்றுபுக்கான்=செழுமையாகிய திருமாளிகையில்சேர்ந்தான்.—எ-று. (உசு)

எரிவிட முறையேயேறித் தலைக்கொண்ட வேழாம்வேகந்
தெரிவுற வெயிறுங்கண்ணு மேனியுங் கருகித்தீந்து
விரியுரை குழறியாவி விடக்கொண்டு மயங்கிவீழ்வான்
பரிகலக் குருத்தைத்தாயார் பால்வைத்துப் படிமேல்வீழ்ந்தான்.

(இ-ள்.) எரிவிடமுறையேயேறி=தீப்போலும் விடமானது வரிசையாகஏறி; தலைக்கொண்டவேழாம்வேகம்=சிரசிற்செல்கின்ற ஏழாம்வேகமானது; தெரிவுறவெயிறுங்கண்ணும்=தெரியும்படிக்குப் பற்களும் கண்களும்; மேனியுங்கருகித்தீந்து=உடம்பும் கறுத்துவெதும்பி; விரியுரைகுழறி=விரிந்தசொற்கள்தடுமாறி; ஆவிவிடக்கொண்டு=பிராணன்நீங்க இக்குருத்தைக்கொடுத் துயிர்விடவேண்டுமென்னுங் கருத்தால் அதைத் தாங்கிக்கொண்டு; மயங்கிவீழ்வான்=மயங்கிவிழுகின்றவன்; பரிகலக்குருத்தை=அப்பரிகலக்குருத்தை; தாயார்பால்வைத்து=தாய்கையிற்கொடுத்துவிட்டு; படிமேல்வீழ்ந்தான்=பூமியில்வீழ்ந்தான்.—எ-று. (உஎ)

தளர்ந்துவீழ் மகனைக்கண்டு தாயருந் தந்தையாரு
முளம்பதைத் துற்றுநோக்கி யுதிரஞ்சோர் வடிவுமேனி
விளங்கிய குறியுங்கண்டு விடத்தினல் வீந்தானென்று
துளங்குத லின்றித்தொண்ட ரமுதுசெய் வதற்குச்சூழ்வார்.

(இ-ள்.) தளர்ந்துவீழ்மகனைக்கண்டு=மயங்கிவீழ்கின்ற புதல்வனைநோக்கி; தாயருந்தந்தையாரும்=அப்பூதிபடிகளும் அவர்மனைவியாரும்; உளம்பதைத்துற்றுநோக்கி=மனம்வருந்திப்புதல்வனை நன்ருகப்பார்த்து; உதிரஞ்சோர்வடிவும்=இரத்தம்சிந்தியிருக்கின்ற உடம்பையும்; மேனிவிளங்கியகுறியுங்கண்டு=அப்புதல்வனது உடம்பில்விளங்கித்தோன்றுகின்ற கருகித்தீந்த குறியையுங்கண்டு; விடத்தினல்வீந்தானென்று=அரவின்விடத்தால் இப்புதல்வன் இறந்தானென்று; துளங்குதலின்றி=தம்மனம்சலியாது; தொண்டரமுதுசெய்வதற்குச்சூழ்வார்=வாகீசமுனிவர் திருவமுதுசெய்தற்குக் கருதுவாராய்.—எ-று. (உஅ)

பெறலரும் புதல்வன்றன்னைப் பாயினுட் பெய்துமூடிப்
புறமனை முன்றிற்பாங்கோர் புடையினின் மறைத்துவைத்தே
யறிவது தெரியாவண்ண மமுதுசெய் விப்போமென்று
விறலுடைத் தொண்டனூர்பால் விருப்பொடு விரைந்துவந்தார்.

(இ-ள்.) பெறலரும்புதல்வன்றன்னை=அரும்பேருகப்பெற்ற புதல்வனை; பாயினுட்பெய்துமூடி=பாயில்வைத்துமூடி; புறமனைமுன்றிற்பாங்கோர்புடையினில்=மனைப்புறத்துள்ள முற்றத்தின் ஓர்பால்; மறைத்துவைத்து=யாருமறியாமல்வைத்து; அறவிதுதெரியாவண்ணம்=முழுதும் இச்செயல் வாகீசமுனிவர் அறியாதபடி; அமுதுசெய்விப்போமென்று=அவரைத்திருவமுது செய்விப்போமென்று; விறலுடைத்தொண்டனூர்பால்=பத்திவலியுடைய வாகீசமுனிவரிடத்து; விருப்பொடுவிரைந்துவந்தார்=ஆசையோடுவிரைவாய் வந்தார்.—எ-று. ஏ-அசை.

இவ்விரண்டுங்குளகம். (உகூ)

கடிதுவந் தமுதுசெய்யக் காலந்தாழ்க் கின்றதென்றே
யடிசிலுங் கறியுமெல்லா மழகுற வணையவைத்துப்
படியில்சீர்த் தொண்டர்முன்பு பணிந்தெழுந் தமுதுசெய்தெங்
குடிமுழு துய்யக்கொள்வீ ரென்றவர் கூறக்கேட்டு.

(இ-ள்.) கடிதுவந்து=விரைந்துவந்து; அமுதுசெய்யக்காலந்தாழ்க்கின்றதென்று=தேவரீர் திருவமுதுசெய்ய நெடுநேரமாகின்றதென்று; அடிசிலுங்கறியுமெல்லாம்=திருவமுதும் கறிகளுமாகிய எல்லாவற்றையும்; அழகுறவணையவைத்து=அழகாக ஓரிடத்தில் சூழவைத்து; படியில்சீர்த்தொண்டர்முன்பு=ஒப்பற்ற சிறப்பினையுடைய வாகீசமுனிவர்க்குமுன்னே; பணிந்தெழுந்து=வணங்கியெழுந்து; அமுதுசெய்து=தேவரீர் திருவமுதுசெய்து; எங்குடிமுழுதுய்யக்கொள்வீரென்று=எமது குடியிலுள்ள மூவேழ் சுற்றமும்கடைத்தேறத் திருவுள்ளத்தடையுமென்று; அவர்கூறக்கேட்டு=அப்பூதியடிகள் விண்ணப்பம் செய்ய வாகீசமுனிவர் அதைக்கேட்டு.—எ-று. ஏ-அசை. (௬0)

அருந்தவ ரொழுந்துசெய்ய வடியிணை விளக்கிவேறோர்
திருந்துமா சனத்திலேறிப் பரிகலந் திருத்துமுன்ன
ரிருந்துவெண் ணீறுசாத்தி யில்லுடை யிருவருக்கும்
பொருந்திய நீறுநல்கிப் புதல்வர்க்கு மளிக்கும்போழ்தில்.

(இ-ள்.) அருந்தவரொழுந்து=வாகீசமுனிவரொழுந்து; செய்யவடியிணைவிளக்கி=சிவந்ததிருவடிகளை நீரால்விளக்கி; வேறோர்திருந்துமாசனத்திலேறி=திருத்தமான வேறொரு நல்லபீடத்தி லெழுந்தருளி; பரிகலந்திருத்துமுன்னர்=அப்பூதியடிகள் பரிகலத்தைத் திருத்துதற்கு முன்னே; இருந்துவெண்ணீறுசாத்தி=அங்கிருந்துதிருவெண்ணீறு தரித்துக்கொண்டு; இல்லுடையிருவருக்கும்=இல்லின்கண்வாழும் அப்பூதியடிகளும் அவர்மனைவியாருமாகிய இருவருக்கும்; பொருந்தியநீறுநல்கி=மேன்மைபொருந்தியதிருவெண்ணீற்றைக் கொடுத்து; புதல்வர்க்குமளிக்கும்போழ்தில்=புத்திரர்களுக்கும்கொடுக்கும் சமயத்தில்.—எ-று.

அப்பூதியடிகள் பரிகலந் திருத்துமுன் இருந்து வெண்ணீறுசாத்தி யெனக் கூட்டுக. பாதம்விளக்கி ஆசனத்திலேறிப் பரிகலந்திருத்துங்கால் திருவெண்ணீறு சாத்தலும் பிறர்க்குக்கொடுத்தலும் மரபன்மையின்முன் என்றார். போசனத்திற்கு முன்னும் பின்னும் திருவெண்ணீறிடுதலு மளித்தலுமே மரபாதலின். (௬௧)

ஆதிநான் மறைநூல்வாய்மை யப்பூதி யாரைநோக்கிக்
காதலா லிவர்க்குமூத்த சேயையுங் காட்டுமென்ன
மேதகு பூதிசாத்த வென்றலும் விளைந்ததன்மை
யாதுமொன் றுரையாரிப்போ திங்கவ னுதவானென்றார்.

(இ-ள்.) ஆதிநான்மறைநூல்வாய்மை=ஆதிநூலாகிய நான்குவேதங்களின்மெய்ம்மையுணர்ந்த; அப்பூதியாரைநோக்கி=அப்பூதியடிகளைப் பார்த்து; காதலாலிவர்க்குமூத்தசேயையும்=விருப்போடு இப்புதல்வர்களுக்கு மூத்தபுதல்வனையும்; காட்டுமென்னமேதகுபூதிசாத்தவென்றலும்=மேன்மைதங்கிய விபூதியிடக்காட்டுவீரென்று கட்டளையிடவும்; விளைந்ததன்மை=நிகழ்ந்தசெய்திகள்; யாதுமொன்றுரையார்=யாதொன்றையும் சொல்லாதவராய்; இப்போதிங்கவனுதவானென்றார்=இப்பொழுது இவ்விடத்து அப்புதல்வனுதவானென்று சொன்னார்.—எ-று.

இம்மூன்றுங்குளகம். (௬௨)



திருநீலகண்டநாயனார்

அவ்வுரை கேட்டபோதே யங்கண ரருளாலன்பர்
செவ்விய திருவுள்ளத்தோர் தடுமாற்றஞ் சேரநோக்கி
யிவ்வுரைபொருதென் னுள்ளமென்செய்தானிதற்கொன் றுண்டான்
மெய்விரித் துரையுமென்ன விளம்புவார் விதிர்ப்புற்றஞ்சி.

(இ-ள்.) அவ்வுரைகேட்டபோதே=அப்பூதியடிகள் உதவானென்றுகூறிய அவ்வார்த்தையை வாகீசமுனிவர் கேட்டவளவில்; அங்கணரருளால்=சிவபிரான் திருவருளினால்; அன்பர்செவ்வியதிருவுள்ளத்து=அவ்வப்பூதியடிகளுடைய செப்பமானதிருவுள்ளத்தின்கண்; ஓர்தடுமாற்றஞ்சேரநோக்கி=ஓர் துயரமிருத்தலைப் பார்த்து; இவ்வுரைபொருதென்னுள்ளம்=என்னுடைய கருத்து நீர்கூறிய இம்மொழியைக் கேட்கலாற்றுது; என்செய்தான்=அப்புதல்வன்யாதுசெய்தான்; இதற்கொன்றுண்டு=இதற்குச் செய்யத்தக்கதீர்வு ஒன்றிருக்கின்றது; மெய்விரித்துரையுமென்ன=உண்மையை விரித்துக்கூறுமென்று கேட்க; விளம்புவார்விதிர்ப்புற்றஞ்சி=உடம்புநடுங்கி அச்சமுற்று அப்பூதியடிகள் கூறுவாராயினர்.—எ-று. ஆல்-அசை.

ஆண்டவரசு அப்பூதியடிகளுள்ளத்தின் தடுமாற்றத்தை அப்பொழுதறியா தொழியின் புதல்வனுயிர்பெறுமையும் விபூதிதரிக்கவேண்டுமென்னும் அரசின்கருத்து முடியாமையு மாகிய குறை நிகழுமாதலின் ஆண்டுத் திருவருள் அரசினுள்ளத்தில் அவர்தடுமாற்றத்தை விளக்கியதென்க. (௩௩)

பெரியவ ரமுதுசெய்யும் பேறிது பிழைக்கவென்னே
வருவதென் றுரையாரோனு மாதவர்வினவ வாய்மை
தெரிவுற வுரைக்கவேண்டுஞ் சீலத்தாற் சிந்தைநொந்து
பரிவொடு வணங்கிமைந்தர்க் குற்றது பகர்ந்தாரன்றே.

(இ-ள்.) பெரியவரமுதுசெய்யும்பேறிது=ஆண்டவரசு திருவமுது செய்தற்கேதுவான இப்பயன்; பிழைக்கவென்னேவருவதென்றுரையாரோனும்=இழக்கும்படி யாதுவருவதோவென்று சொல்லாதொழிந்தாரேனும்; மாதவர்வினவ=பெரிய தவத்தையுடைய வாகீசமுனிவர்கேட்க; வாய்மைதெரிவுறவுரைக்கவேண்டுஞ்சீலத்தால்=மெய்ம்மை அவர்திருவுள்ளத்திற்குப்பொருந்தக் கூறவேண்டுமென்கின்ற ஒழுக்கத்தால்; சிந்தைநொந்துபரிவொடுவணங்கி=திருவுள்ளம்நொந்து துயரோடுவணங்கி; மைந்தற்குற்றது பகர்ந்தார்=தம்புதல்வனுக்குவந்த கெடுதியை எடுத்துச்சொன்னர் அப்பூதியடிகள்.—எ-று. இவ்விரண்டுங் குளகம். அன்று-ஏ-அசை.

மெய்த்தவர்வினவுங்கா லுண்மைகூறுதல் மரபு, பொய்கூறின் கூறினரது அறம் பயன்படாதென்னுங் கருத்தால் தெரிவுறவுரைக்கவேண்டுஞ் சீலத்தாலென்றும், இது கேட்டால்முன்மறைத்துக்கூறியதற்காக வெகுளுமோவென்னுங் கருத்தாற்சிந்தை நொந்துபரிவொடு வணங்கி யென்றுங் கூறினர். (௩௪)

நாவினுக் கரசர்கேளா நன்றுநீர் மொழிந்தவண்ணம்
யாவரித் தன்மைசெய்தா ரொன்றுமுன் னெழுந்துசென்றே
யாவிதீர் சவத்தைநோக்கி யண்ணலா ரருளும்வண்ணம்
பாவிசைப் பதிகம்பாடிப் பணிவிடம் பாற்றுவித்தார்.

(இ-ள்.) நாவினுக்கரசர்கேளா=அவ்விடந்தீண்டி யிறந்தசெய்தியை வாகீசமுனிவர்கேட்டு; நன்றுநீர்மொழிந்தவண்ணம்=நீர் இங்குதவானென்று மொழிந்தது நன்று

யிற்று; யாவரித்தன்மைசெய்தாரென்று—யாவரித்தன்மையான செய்கையைச் செய்தார் களென்று; முன்னெழுந்துசென்று—விரைந்தெழுந்தருளி; ஆவிதீர்சவத்தைநோக்கி— உயிர் நீத்துக்கிடந்த அப்புதல்வன் பிணத்தைப்பார்த்து; அண்ணலாரருளும்வண்ணம்— சிவபிரான் அப்பிணத்திற்குயிர்கொடுக்கும்படி; பாவிசைப்பதிகம்பாடி—பரம்பியஇசை யையுடைய ஒன்றுகொலாமென்னும் திருப்பதிகத்தைப் பாடியருளி; பணிவிடம்பாற் றுவித்தார்—பாம்பின் விடத்தைப் போக்குவித்தார் —எ-று. ஏ-அசை.

இது மறைக்கத் தக்கதன்றென்னுங் கருத்தால் நன்றுநீர்மொழிந்ததென்றும், இவ் வமுது செய்விக்கும்பொருட்டுப் புதல்வன் சவத்தை மறைத்துவைத்துச் சற்றும் தடு மாற்ற மிலராயிருத்தல் யாவருக்குமேலாதாதலின் யாவரித்தன்மை செய்தாரென்றுங் கூறினரென்க. (௩௫)

தீவிட நீங்கவுய்ந்த திருமறை யவர்தஞ்சேயு
மேவிய வுறக்கநீங்கி விரைந்தெழு வானைப்போன்று
சேவுகைத் தவராட்கொண்ட திருநாவுக் கரசர்செய்ய
பூவடி வணங்கக்கண்டு புனிதநீ றளித்தாரன்றே.

(இ-ள்.) தீவிடநீங்கவுய்ந்த—கொடியவிடமானது தன்னைவிட்டுநீங்க அதனுல் உயிர்பெற்றெழுந்த; திருமறையவர்தஞ்சேயும்—அப்பூதியடிகளது மூத்தபுதல்வனும்; மேவியவுறக்கநீங்கி—தானடைந்தநித்திரையினின்றும்நீங்கி; விரைந்தெழுவானைப்போ ன்று—விரைவாகஎழும் ஒருவனையொத்து; சேவுகைத்தவராட்கொண்ட—இடபத்தை வாகனமாகக்கொண்டருளும் சிவபிரான் தடுத்தாட்கொண்ட; திருநாவுக்கரசர்—வாகீச முனிவரது; செய்யபூவடிவணங்கக்கண்டு—செவ்விதாகியமலர்போலும் திருவடிகளைப் பணியப்பார்த்து; புனிதநீறளித்தார்—தூயதிருவெண்ணீற்றைக் கொடுத்தார்.—எ-று. அன்று - ஏ-அசை. (௩௬)

பிறிவுறு மாவிபெற்ற பிள்ளையைக் காண்பார்தொண்டி
னெறியினைப் போற்றிவாழ்ந்தார் நின்றவப் பயந்தார்தாங்க
ளறிவரும் பெருமையன்ப ரமுதுசெய் தருளுதற்குச்
சிறிதிடை யூறுசெய்தா னிவனென்று சிந்தைநொந்தார்.

(இ-ள்) பிறிவுறுமாவிபெற்ற—நீங்கி உயிர்வரப்பெற்ற; பிள்ளையைக்காண்பார்— அப்புதல்வனைப் பார்த்த அவ்வூரிலுள்ளார்; தொண்டினெறியினை—அப்பூதியடிகளது திருத்தொண்டின் முறைமையை; போற்றிவாழ்ந்தார்—துதித்துய்ந்தார்கள்; நின்றவப் பயந்தார்—அங்குநின்ற அத்தந்தைதாயர்; தாங்களறிவரும்பெருமையன்பர்—தங்களால் அறியக்கூடாத பெருமையையுடைய வாகீசமுனிவர்; அமுதுசெய்தருளுதற்கு—திருவ முதுசெய்தருள; சிறிதிடையூறுசெய்தானிவனென்று—இப்புத்திரன் சிறிது தடைப்பட டுத்தினனென்று; சிந்தைநொந்தார்—அப்புதல்வனுயிர்பெற்றதற்குமகிழாது ஆண்டவ ரசு அமுதுசெய்யக்காலம்தாழ்த்ததற்கு மனம் வருந்தினர்.—எ-று. (௩௭)

ஆங்கவர் வாட்டந்தன்னை யறிந்துசொல் லரசர்கூட
வோங்கிய மனையிலெய்தி யமுதுசெய் தருளவுற்ற
பாங்கினி லிருப்பமுந்நூல் பயின்மணி மார்பர்தாமுந்
தாங்கிய மகிழ்ச்சியோடுந் தகுவன சமைத்துச்சார்வார்.

(இ-ள்.) ஆங்கவர்வாட்டந்தன்னையறிந்து=அவ்விருவரும் திருவமுது செய்தற்குக் காலந் தாழ்த்ததென்று வருந்தும் வருத்தத்தையறிந்து; சொல்லரசர்கூட=வாகீசமுனிவர் அவர்களோடு; ஓங்கியமனையிலெய்தி=உயர்ந்ததிருமாளிகைக்கெழுந்தருளி; அமுதுசெய்தருளவுற்றபாங்கினிலிருப்ப=திருவமுதுசெய்தற் கேதுவாகப்பொருந்திய ஓரிடத்தில்வீற்றிருக்க; முந்நூல்பயின்மணிமார்பர்தாமும்=அப்பூதியடிகளும்; தாங்கியமகிழ்ச்சியோடும்=தம்மிடத்துண்டாகிய பெருமகிழ்ச்சியோடும்; தருவனசமைத்துச்சார்வார்=ஏற்றபொருள்களை எடுத்துக்கொண்டடைவாராய்.—எ-று.

ஏற்றபொருள்களாவன:—நீர்-மலர்-தூபதீபம்முதலியன. (௩அ)

புகழ்ந்தகோ மயத்தினீராற் பூமியைப் பொலியநீவித்
திகழ்ந்தவான் சுதையும்போக்கிச் சிறப்புடைத் தீபமேற்றி
நிகழ்ந்தவக் கதலிநீண்ட குருத்தினை விரித்துநீரான்
மகிழ்ந்துடன் விளக்கியீர்வாய் வலம்பெற மரபின்வைத்தார்.

(இ-ள்.) புகழ்ந்தகோமயத்தினீரால்=நூல்கள்புகழ்ந்துகூறிய கோமயநீரினால்; பூமியைப்பொலியநீவி=திருவமுது செய்யுமிடத்தை விளங்கும்படியாக மெழுகி; திகழ்ந்தவான்சுதையும்போக்கி=விளங்கிய வெள்ளிய சுண்ணச்சாந்தையும் சதுரமான நாற்கோடாயிட்டு; சிறப்புடைத்தீபமேற்றி=மங்களகரமான திருவிளக்கையும் ஏற்றி; நிகழ்ந்தவக்கதலி=அப்புதல்வன் கொணர்ந்த அந்த வாழையின்; நீண்ட குருத்தினை விரித்து=நீண்ட பரிகலக்குருத்தைவிரித்து; நீரால்மகிழ்ந்துடன்விளக்கி=சலத்தால் மகிழ்ச்சியோடு உடனே அதைக்கழுவி; ஈர்வாய்வலம்பெறமரபின்வைத்தார்=அரிந்த பக்கம் வலத்திலிருக்கும்படி முறையாக இட்டார்.—எ-று. இவ்விரண்டுங்குளகம். (௩௯)

திருந்திய வாசநன்னீ ரளித்திடத் திருக்கைநீவும்
பெருந்தவர் மறையோர்தம்மைப் பிள்ளைக ளுடனேநோக்கி
யரும் புதல்வர்களுநீரு மமுதுசெய் வீரிங்கென்ன
விரும்பிய வுள்ளத்தோடு மேலவ ரேவல்செய்வார்.

(இ-ள்.) திருந்தியவாசநன்னீரளித்திட=திருத்தமானமலர்மணங்களைச்சேர்த்த நல்லநீரைக்கொடுக்க; திருக்கைநீவும்பெருந்தவர்=திருவமுதுசெய்யும்நிமித்தம் தமது திருக்கரத்தைத் தூய்மைசெய்யும் பெரியதவத்தையுடைய வாகீசமுனிவர்; மறையோர் தம்மைப்பிள்ளைகளுடனேநோக்கி=அப்பூதியடிகளை அவர் புத்திரர்களுடனேபார்த்து; அரும்புதல்வர்களுநீரும்=அரியபுத்திரர்களும் நீரும்; அமுதுசெய்வீரிங்கென்ன=இவ்விடத்தே திருவமுதுசெய்வீர்களென்று கட்டளையிட; விரும்பியவுள்ளத்தோடு=அக்கட்டளையைமறுத திருவுள்ளத்தோடு; மேலவரேவல்செய்வார்=ஆண்டவரசினது பணியைச்செய்வாராய்.—எ-று. (௪௦)

மைந்தரு மறையோர்தாமு மருங்கிருந் தமுதுசெய்யச்
சிந்தைமிக் கில்லமாதர் திருவமு தெடுத்துநல்கக்
கொந்தவிழ் கொன்றைவேணிக் கூத்தனு ரடியாரோடு
மந்தமி ழாளியாரங் கமுதுசெய் தருளினாரே.

(இ-ள்.) மைந்தருமறையோர்தாமும்=புத்திரரும் அப்பூதியடிகளும்; மருங்கிருந்தமுதுசெய்ய=அவர் அருகிலிருந்து திருவமுதுசெய்ய; சிந்தைமிக்கில்லமாதர்=திருவுள்ளத்தின்கண் மகிழ்ச்சிமிகுந்த அவர்மனைவியார்; திருவமுதெடுத்துநல்க=திருவ

முதையெடுத்துப்படைக்க; கொந்தவிழ்கொன்றைவேணிக்கூத்தனார்=கொத்தாக அலர்ந்தகொன்றை மலர்மாலையைச்சூடிய சடைமுடியையுடைய சிவபிரானது; அடியாரோடுமெந்தமிழாளியார் = திருவடியார்களோடு வாகீசமுனிவர்; அங்கமுதுசெய்தருளினார்=அவ்விடத்துத் திருவமுதுசெய்தருளினார்.—எ-று. ஏ-அசை.

இவ்விரண்டுங் குளகம். (சுக)

மாதவ மறையோர்செல்வ மனையிடை யமுதுசெய்து
காதனண் பளித்துப்பன்னாள் கலந்துட னிருந்தபின்னை
மேதகு நாவின்மன்னர் விளங்கிய பழனமூதூர்
நாதர்தம் பாதஞ்சேர்ந்து நற்றமிழ்ப் பதிகஞ்செய்வார்.

(இ-ள்.) மாதவமறையோர்=பெரியதவத்தையுடைய அப்பூதியடிகளது;செல்வமனையிடையமுதுசெய்து=செல்வமிக்கதிருமாளிகையில் திருவமுதுசெய்தருளி; காதனண்பளித்து=பெருவிருப்போடுகூடிய நேசத்தை அவரிடத்தில்வைத்து; பன்னாள்கலந்துடனிருந்தபின்னை=பலநாள்கலந்து அவரோடுகூடி யிருந்தபின்பு; மேதகுநாவின்மன்னர்=மேன்மைமிக்கவாகீசமுனிவர்; விளங்கியபழனமூதூர்=புகழ்விளங்கியதிருப்பழனமென்னும் பழையதிருப்பதியில்; நாதர்தம்பாதஞ்சேர்ந்து=சிவபிரான்திருவடிகளையடைந்து; நற்றமிழ்ப்பதிகஞ்செய்வார்=நல்லதமிழாலாகிய திருப்பதிகத்தைப்பாடியருளுவாராய்.—எ-று. (சுஉ)

அப்பூதி யடிகளார்த மடிமையைச் சிறப்பித்தான்ற
மெய்ப்பூதி யணிந்தார்தம்மை விரும்புசொன் மாலைவேய்ந்த
விப்பூதி பெற்றநல்லோ ரெல்லையி லன்பாலென்றுஞ்
செப்பூதி யங்கைக்கொண்டார் திருநாவுக் கரசர்பாதம்.

(இ-ள்.) ஆன்றமெய்ப்பூதியணிந்தார்தம்மை=வாகீசமுனிவர்நிறைந்ததிருமேனியின்கண் விபூதியைத்தரித்த சிவபிரானை; விரும்புசொன்மாலை=பாடியதிருப்பதிகத்தில்; தம்மடிமையைச்சிறப்பித்துவேய்ந்த=தமது அடிமைத்தன்மையை அஞ்சிப் போய்க்கவிமெலிய வழலோம்புமப்பூதிஎனச் சிறப்பித்துப் பாடப்பெற்ற; இப்பூதிபெற்றநல்லோர்=இச்செல்வத்தை யடைந்தநல்லோராகிய; அப்பூதியடிகளார்=அப்பூதியடிகளுயனார்; எல்லையிலன்பாலென்றும்=அளவுபடாதபேரன்பினால் எக்காலத்தும்; செப்பூதியங்கைக்கொண்டார்=அவர்திருவடிகளைத்துதிக்கும்பயனையடைந்தார்.—எ-று.

பூதி=செல்வம். திருப்பதிகத்திற்சிறப்பித்தல் பெரும்பயனாதலின் இப்பூதியென்றும், அத்திருப்பதிகத்தில் இவரது அன்புடைமையாலாய புகழ் நிலவுலகத்தென்றும் நின்றழியாது நிலவுதலின் அவர்திருநாமத்தையென்றுஞ் செப்பியதற்குப்பயன் கைக்கொண்டனரென்றுங் கூறினர். (சுங)

இவ்வகை யரசினாம மேத்தியெப் பொருளுநாளு
மவ்வருந் தவர்பொற்றாளே யெனவுணர்ந் தடைவார்செல்லுஞ்
செவ்விய நெறியதாகத் திருத்தில்லை மன்றுளாடு
நவ்வியங் கண்ணாள்பங்கர் நற்கழ னண்ணினாரே.

(இ-ள்.) இவ்வகையரசினாமமேத்தி=இவ்வாறாக ஆண்டவரசின் திருநாமத்தைத் துதித்து; எப்பொருளுநாளும்=மடம் தடம் தண்ணீர்ப்பந்தல் முதலிய எல்லாப் பொருள்களும் எந்நாளும்; அவ்வருந்தவர்பொற்றாளே யெனவுணர்ந்தடைவார்=அந்த

ஆண்டவரசின் திருவடியேயென்றறிந்தடைகின்ற அப்பூதியடிகள்; செவ்வியநெறி=தாம்செல்லும் செந்நெறி; திருத்தில்லைமன்றுளாடும்=அழகிய கனகசபையின்கண் ஆனந்தநிருத்தஞ்செய்தருளும்; நவ்வியங்கண்ணாள்பங்கர்=சிவகாமவல்லியைத் தமதிடப்பாகத்துடைய நடேசப்பிரானது; நற்கழலாகநண்ணினார்=குஞ்சிதபாதமாக அடைந்தார்.

அது பகுதிப்பொருள்விகுதி. ஏ-சை. (சச)

மான்மறிக் கையர்பொற்றாள் வாகீச ரடைவாற்பெற்ற
மேன்மையப் பூதியாராம் வேதியர் பாதம்போற்றிக்
கான்மலர்க் கமலவாவிக் கழனிசூழ் சாத்தமங்கை
நான்மறை நீலநக்கர் திருத்தொழி னவிலலுற்றேன்.

(இ-ள்.) மான்மறிக்கையர்பொற்றாள்=மான்கன்றையேந்திய திருக்கரத்தையுடைய சிவபிரான் திருவடிகளை; வாகீசரடைவாற்பெற்ற=வாகீசமுனிவர் சார்பாற்பெற்ற; மேன்மையப்பூதியாராம்=மேன்மைமிக்க அப்பூதியடிகணாயனாரென்னும்; வேதியர்பாதம்போற்றி=மறையவரது திருவடிகளைத்துதித்து; கான்மலர்க்கமலவாவிக்கழனிசூழ்=வாசனைவீசுகின்ற தாமரைமலர்களையுடைய வாவிகளோடுகூடிய வயல் சூழ்ந்த; சாத்தமங்கைநான்மறைநீலநக்கர்=சாத்தமங்கை என்னும் ஊரில் அவதரித்த நான்குவேதங்களையுணர்ந்த திருநீலநக்கநாயனாரது; திருத்தொழினவிலலுற்றேன்=திருத்தொண்டைச் சொல்லத்தொடங்கினேன்.—எ-று.

வாகீசமுனிவரைக் குருவாகக்கொண்டு வழிபட்டதொண்டு சிவபிரானை வழிபட்டதொண்டோடு வேற்றுமையின்மையின் இதுகாரணமாகச் சிவபிரான் திருவடியை அடைந்தனரெனக் கூறினர். இவ்வாறு குருசங்கமங்களிடத்துச் சிவபிரானுக்கபேதமாகச்செய்யும் தொண்டு சிவபிரானையே வழிபட்டதாம் என்க. அவ்வாறு குருசங்கமங்களை வழிபடாது அவமதித்தலும் சிவபிரானை யவமதித்த பெரும்பாவமாய் முடியும்.

அப்பூதியடிகணாயனார்புராணம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ருகூஉ.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநீலநக்கநாயனார்புராணம்.

பூத்த பங்கயப் பொகுட்டின்மேற் பொருகய லுகளுங்
காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி நாட்டுச்
சாத்த மங்கையென் றுலகெலா நிகழ்வுறுந் தகைத்தால்
வாய்த்த மங்கல மறையவர் முதற்பதி வனப்பு.

(இ-ள்.) பூத்தபங்கயப்பொகுட்டின்மேல்=மலர்ந்த தாமரைப்பொகுட்டின்மேல்; பொருகயலுகளும்=பொராநின்ற கயல்மீன்கள் சஞ்சரிக்கும்; காய்த்தசெந்நெலின்காடுசூழ்காவிரிநாட்டு=காய்க்கப்பட்ட செந்நெற்றொகுதி சூழ்ந்த காவிரிநாட்டின்கண்; வாய்த்தமங்கலமறையவர்முதற்பதிவனப்பு=சிறந்த மங்கலங்களையுடைய மறையவர்கள் வாழ்கின்ற முதன்மையான அவ்வூரின்சிறப்பு; சாத்தமங்கையென்று=சாத்தமங்கையென்று; உலகெலாநிகழ்வுறுந்தகைத்து=எல்லா உலகமும் வழங்கும் பெருமையையுடையது.—எ-று. ஆல்-அசை.

காடென்பது மிகுதியையுணர்த்திநின்றது. (க)

நன்மை சாலுமப் பதியிடை நறுநுதன் மடவார்
மென்ம லர்த்தடம் படியமற் றவருடன் விரவி
யன்ன முன்றுறை யாடுவ பாடுவ சாமம்
பன்ம றைக்கிடை யுடன்பயிற் றுவபல பூவை.

(இ-ள்) நன்மைசாலுமப்பதியிடை=நன்மைமிக்க அவ்வூரின்கண்; நறுநுதன்மடவார்=நல்ல நெற்றியையுடைய மாதர்கள்; மென்மலர்த்தடம்படிய=மிருதுவாகிய மலர்களையுடைய வாவியில்நீராட; மற்றவருடன்விரவி=அம்மாதருடன்கலந்து; அன்னமுன்றுறையாடுவ=அன்னங்களும் முன்னே அத்துறைகளில் நீராடுவன; பன்மறைக்கிடையுடன்=பலவேதங்களையோதும் பார்ப்பனச்சிறுவர்களுடன்; பாடுவசாமம்=தாங்கற்ற சாமத்தை; பயிற்றுவபலபூவை=பலபூவைகள் தங்கிளைக்குப்பயிற்றுவன.—எ-று. (உ)

ஆய்ந்த மெய்ப்பொரு ணீறென வளர்க்குமக் காப்பி
லேய்ந்த மூன்றுதீ வளர்த்துளா ரிருபிறப் பாளர்
நீந்து நல்லற நீர்மையின் வளர்க்குமத் தீயை
வாய்ந்த கற்புட னான்கென வளர்ப்பர்கண் மடவார்.

(இ-ள்.) ஆய்ந்தமெய்ப்பொருள்=தெளிவான உண்மைப்பொருள்; நீறெனவளர்க்குமக்காப்பில்=திருவெண்ணீறென்று வளர்க்கின்ற அவ்வூரில்; இருபிறப்பாளர்=மறையவர்கள்; ஏய்ந்தமூன்றுதீவளர்த்துளார்=தமக்குரிய முத்தீயை வளர்ப்பார்கள்; நீந்துநல்லறநீர்மையின்=நல்லறம் கடைபோய இயல்போடு; வளர்க்குமத்தீயை=வளர்க்கின்ற அம்முத்தீயை; வாய்ந்தகற்புடனான்கென=சிறந்த கற்புடன் நான்கென்று; வளர்ப்பர்கண்மடவார்=அம்மறையவர் மகளிர்கள் வளர்ப்பார்கள்.—எ-று.

விதிப்படி ஔபாசனம் செய்தலால் மறையவர்க்குரிய முத்தீ, ஔபாசனம் செய்யும் சாயுங்காலத்தில் வேதிகைமெழுகல் சுதையிடல் சரு பாயசமுதலியவமைத்தல் பாகஞ்சாத்தலாதிய தொழில்களால் அவர் பத்தினிகட்கு முரித்தாதலின் கற்புடனுன்கென வளர்ப்பாரென்றார். சரு எனினும் புரோடாசமெனினு மொக்கும். (௩)

சீல முய்த்தவத் திருமறை யோர்செழு மூதூர்
ஞால மிக்கான் மறைக்குலம் விளக்கிய நலத்தா
ராலம் வைத்தகண் டத்தவர் தொண்டரா மன்பர்
நீல நக்கன ரென்பவர் நிகழ்ந்துளா ரானார்.

(இ-ள்.) சீலமுய்த்தவத்திருமறையோர்=ஒழுக்கநெறியில் தம்மைச்செலுத்திய அம்மறையவர்கள்வாழும்; செழுமூதூர்=செழுமையாகிய பழைய ஊரில்; ஞாலமிக்கான்மறைக்குலம்=நிலவுலகத்தில் மேம்பட்ட மறையவர்குலத்தை; விளக்கியநலத்தார்=விளக்கும் நன்மையையுடையவர்; ஆலம்வைத்தகண்டத்தவர்=ஆலாகலத்தைமறைத்த திருமிடற்றையுடைய சிவபிரானுக்கு; தொண்டராமன்பர்=தொண்டுபூண்டொழுகு மன்பராகிய; நீலநக்கனரென்பவர்நிகழ்ந்துளாரானார்=திருநீலநக்கநாயனாரென்பவ ரிருந்தார்.—எ-று. (௪)

வேத வுள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையு மவரடி யாரையு நயந்து
பாத வர்ச்சனை புரிவதும் பணிவது மென்றே
காத லாலவை யிரண்டுமே செய்கருத் துடையார்.

(இ-ள்.) வேதவுள்ளுறையாவன=வேதங்களிற்கூறும் உட்பொருளாவன; விரிபுனல்வேணிநாதர்தம்மையும்=கங்கைநீர்பரம்பிய சடைமுடியையுடைய சிவபிரானையும்; அவரடியாரையுநயந்து=அச்சிவபிரானடியாரையும் விரும்பி; பாதவர்ச்சனைபுரிவதும்=பாதபூசைசெய்வதும்; பணிவதுமென்று=வணங்குவதுமென்று; காதலாலவையிரண்டுமே=விருப்புடன் அவ்விரண்டையுமே; செய்கருத்துடையார்=செய்கின்ற கருத்தையுடையவர்.—எ-று. ஏ-அசை. (௫)

மெய்த்த வாகம விதிவழி வேதகா ரணரை
நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ் செய்தே
யத்த ரன்பருக் கமுதுசெய் விப்பது முதலா
வெத்தி றத்தன பணிகளு மேற்றெதிர் செய்வார்.

(இ-ள்.) மெய்த்தவாகமவிதிவழி=உண்மையான சிவாகமவிதிப்படி; வேதகாரணரை = வேதத்தையருளிச்செய்த முதல்வராகிய சிவபிரானை; நித்தல்பூசனைபுரிந்தெழு=தினந்தோறும் பூசித்துவராநின்ற; நியமமுஞ்செய்து=நியமத்தையுஞ் செய்து; அத்தரன்பருக்கு=அஃதன்றிச் சிவபிரானடியாருக்கு; அமுதுசெய்விப்பதுமுதலா=திருவமுதுசெய்விப்பது முதலாக; எத்திறத்தனபணிகளும்=எவ்விதமான தொண்டுகளையும்; ஏற்றெதிர்செய்வார்=மேற்கொண்டுகொண்டு செய்கின்றவர்.—எ-று. ஏ-அசை.

எத்திறத்தனபணிகளும் என்றதனால் திருவமுதேயன்றி ஆடை உறையுள்முதலியனவுங்கொள்க. வேதத்திற்கூறும் பஞ்சமந்திரங்களுக்கும் ஆகமத்திற்கூறும் பஞ்சமந்திரங்களுக்கும் பொருளொன்றாதலின், அப்பொருள் வேறுபாடின்மையையுணர்ந்து தாம் செய்யும் வைதிகபூசையில் ஆகமத்திற்கூறும் விசேடபூசைகளையும் அபேதமாகக்கொண்டு பூசித்தனரென்பது விளக்கிய மெய்த்தவாகம விதிவழியென்றார். (௬)

ஆய செய்கையி லமருநா ளாதிரை நாளின்
மேய பூசனை நியதியை விதியினுன் முடித்துத்
தூய தொண்டனார் தொல்லைநீ டயவந்தி யமர்ந்த
நாய னாரையு மர்ச்சனை புரிந்திட நயந்தார்.

(இ-ள்) ஆயசெய்கையிலமருநாள்—அவ்வாறு சிவபூசை அடியார்பூசை செய்தொழுகிவரும்நாளில்; ஆதிரைநாளின்மேயபூசனைநியதியை—ஒருநாள் திருவாதிரைநட்சத்திரத்தில் செய்தற்குரிய ஆன்மார்த்தபூசாவிதிகளை; விதியினுன்முடித்து—முறைமையினுல்முடித்து; தூயதொண்டனார்—தூயகுணமுடைய திருநீலநக்கநாயனார்; தொல்லைநீடயவந்தியமர்ந்த—பழமையான உயர்ந்த அயவந்தியென்னும் ஆலயத்தில் வீற்றிருந்தருளும்; நாயனாரையுமர்ச்சனைபுரிந்திடநயந்தார்—சிவபிரானையும் வழிபாடுசெய்ய விரும்பினார்.—எ-று. (எ)

உறையு ளாகிய மனைநின்று மொருமையன் புற்ற
முறைமை யால்வரு பூசைக்கு முற்றவேண் டுவன
குறைவ றக்கொண்டு மனைவியார் தம்மொடுங் கூட
விறைவர் கோயில்வந் தெய்தின ரெல்லையி றவத்தோர்.

(இ-ள்.) உறையுளாகியமனைநின்றும்—தாமிருக்கும் இடமாகிய திருமாளிகையினின்றும்; ஒருமையன்புற்றமுறைமையால்வருபூசைக்கு—ஒருப்பட்ட அன்புகாரணமாகச்செய்கின்ற பூசைக்கு; முற்றவேண்டுவன—முற்றும் வேண்டியபொருள்களை; குறைவறக்கொண்டு—குறைவில்லாமல் எடுத்துக்கொண்டு; மனைவியார்தம்மொடுங்கூட—தமது பத்தினியாரோடுகூட; இறைவர்கோயில்வந்தெய்தினர்—சிவபிரான் வீற்றிருந்தருளும் அயவந்தியென்னும் ஆலயத்தையடைந்தார்; எல்லையிறவத்தோர்—அளவுபடாத் தவத்தையுடைய திருநீலநக்கநாயனார்.—எ-று. (அ)

அணைய வந்துபுக் கயவந்தி மேவிய வமுதின்
றுணைம லர்க்கழ றொழுதுபூ சனைசெயத் தொடங்கி
யிணைய நின்றங்கு வேண்டுவ மனைவியா ரேந்த
வுணர்வு மிக்கவ ருயர்ந்தவர்ச் சனைமுறை யுய்த்தார்.

(இ-ள்.) அணையவந்துபுக்கு—திருக்கோயிலின் சமீபமாகவந்து உள்ளேபுகுந்து; அயவந்திமேவியவமுதின்—அயவந்தி என்னும் ஆலயத்தில் வீற்றிருந்தருளும் சிவபிரானது; துணைமலர்க்கழறொழுது—இரண்டுதாமரைமலர்போலும் திருவடிகளை வணங்கி; பூசனைசெயத்தொடங்கி—ஆராதனைசெய்யத்தொடங்கி; இணையநின்றங்கு—அருகில்நின்று அவ்விடத்திற்கு; வேண்டுவமனைவியாரேந்த—வேண்டிய உபகரணங்களை மனைவியாரெடுத்துக்கொடுக்க; உணர்வுமிக்கவர்—அறிவின்மிக்க திருநீலநக்கநாயனார்; உயர்ந்தவர்ச்சனைமுறையுய்த்தார்—மேலான பூசையை விதிப்படிசெய்தார்.—எ-று. (கூ)

நீடு பூசனை நிரம்பியு மன்பினு னிரம்பார்
மாடு சூழ்புடை வலங்கொண்டு வணங்கிமுன் வழுத்தித்
தேடு மாமறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி
நாடு மஞ்செழுத் துணர்வுற விருந்துமுன் னவின்றார்.

(இ-ள்.) நீடுபூசனைநிரம்பியும்—மிக்க சிவபூசை விதிப்படி முற்றச்செய்தும்; அன்பினுனிரம்பார்—தம் அன்புகுறையாதவராய்; மாடுசூழ்புடைவலங்கொண்டு—அவ்வாலயத்தின் அருகிற்சூழ்ந்த பிராகாரத்தை வலமாகவந்து; வணங்கிமுன்வழுத்தி—தொழுது

திருமுன்னின்று துதித்து; தேடுமாமறைப்பொருளினை=அறிஞர்களால் தேடப்படும் பெரிய வேதப்பொருளாகிய சிவபிரானை; தெளிவுறநோக்கி=தெளிவாகத் தம் உள்ளத்துக் கருதிக்கொண்டு; நாடுமஞ்செழுத்துணர்வுற=ஆராயும் திருவைந்தெழுத்து உணர்விலே பொருந்த; இருந்துமுன்னவின்றார்=திருமுன்னிருந்து ஓதினார்.—எ-று. (௧௦)

தொலைவில் செய்தவத் தொண்டனார் சுருதியே முதலாங்
கலையி னுண்மையா மெழுத்தஞ்சுங் கணிக்கின்ற காலை
நிலையி னின்றுமுன் வழுவிட நீண்டபொன் மேருச்
சிலையி னார்திரு மேனிமேல் விழுந்ததோர் சிலம்பி.

(இ-ள்.) தொலைவில்செய்தவத்தொண்டனார்=அழிவில்லாத தவத்தைச்செய்த திருநீலநக்கநாயனார்; சுருதியேமுதலாங்கலையினுண்மையாம்=வேதமுதலாகிய கலைஞானங்களிற்கூறும் உண்மைப்பொருளாகிய; எழுத்தஞ்சுங்கணிக்கின்றகாலை=திருவைந்தெழுத்தையும் செபிக்கும்பொழுது; நிலையினின்றுமுன்வழுவிட=தான் நிற்கும் இடத்தினின்றும் முன்னே வழுவுதலால்; நீண்டபொன்மேருச்சிலையினார்திருமேனிமேல்=நீண்ட பொன்மயமாகிய மேருவில்லையுடைய சிவபிரானது திருமேனியிடத்து; விழுந்ததோர்சிலம்பி=ஓர் சிலம்பிப்பூச்சி விழுந்தது.—எ-று. (௧௧)

விழுந்த போதிலங் கயனின்ற மனைவியார் விரைவுற்
றெழுந்த வச்சமோ டிளங்குழ வியில்விழுஞ் சிலம்பி
யொழிந்து நீங்கிட வூதிமுன் றுமிப்பவர் போலப்
பொழிந்த வன்பினா லூதிமேற் றுமிந்தனர் போக.

(இ-ள்.) விழுந்தபோதில்=சிலம்பி விழுந்தபொழுது; அங்கயனின்றமனைவியார் விரைவுற்று=அவ்வாலயத்தில் அருகேநின்ற அவர்மனைவியார் விரைந்து; எழுந்தவச்சமோடு=தம் உள்ளத்துதித்த பயத்தோடு; இளங்குழவியில்விழுஞ்சிலம்பி=சிறிய குழந்தையில் விழுகின்ற நூற்பூச்சியின் விடமானது;ஒழிந்துநீங்கிடவூதி=அக்குழந்தையை விட்டுநீங்க வாயினால் ஊதி; முன்றுமிப்பவர்போல=முன்னே வாய்நீரை உமிழ்பவர்போல; பொழிந்தவன்பினால்=மேற்பட்ட அன்புகாரணமாக; ஊதிமேற்றுமிந்தனர்போக=வாயினால் ஊதித் திருமேனியில் வாய்நீர் உமிழ்ந்தார் அவ்விடம்போகும்படி.—எ-று. ()

பதைத்த செய்கையான் மனைவியார் முற்செயப் பந்தஞ்
சிதைக்கு மாதவத் திருமறை யவர்கண்டு தங்கண்
புதைத்து மற்றிது செய்ததென் பொறியிலா யென்னச்
சுதைச்சி லம்பிமேல் விழவூதித் துமிந்தன ளென்றார்.

(இ-ள்.) பதைத்தசெய்கையால்=தம் உள்ளத்துப் பதைப்புக்காரணமாகச்செய்த செய்கையால்; மனைவியார்முற்செய=மனைவியார் முன்னே இவ்வாறுசெய்ய; பந்தஞ்சிதைத்த=தம்பாசத்தைக்கெடுக்கும்; மாதவத்திருமறையவர்கண்டு=பெரிய தவத்தையுடைய திருநீலநக்கநாயனார் பார்த்து; தங்கண்புதைத்து=தம்முடைய கண்களை மூடிக்கொண்டு, மற்றிதுசெய்ததென்பொறியிலாயென்ன=இவ்வாறு செய்ததென் அறிவில்லாதவளே என்றுசொல்ல; சுதைச்சிலம்பிமேல்விழ=வெண்சிலம்பியானது திருமேனியில் விழ; ஊதித்துமிந்தனளென்றார்=அதனால் ஊதித்துமிந்தனனென்று சொன்னார்—எ-று.

மனைவி யார்செய்த வன்பினை மனத்தினிற் கொள்ளார்
புனைய நூன்மணி மார்பர்தம் பூசனைத் திறத்தி
வினைய செய்கையிங் கனுசித மாமென வெண்ணு
நினைவி னாலவர் தம்மைவிட் டகன்றிட நீப்பார்.

(இ-ள்.) மனைவியார்செய்தவன்பினை—தம்மனைவியார் சிலம்பி கொப்புளம் கொள்ளாதிருக்குமென்று ஊதித்துமிந்த அன்பை; மனத்தினிற்கொள்ளார்—தம்திருவுள்ளத்திற்கொள்ளாதவராய்; புனையுநூன்மணிமார்பர்—பூணூலணிந்த அழகியமார்பையுடைய திருநீலநக்கநாயனார்; தம்பூசனைத்திறத்தில்—தாம்செய்யும் பூசையில்; இனையசெய்கையிங்கனுசிதமாமென—இவ்வாறிவர்செய்த செய்கை இங்கே உசிதமாகாதிருக்குமென்று; எண்ணுநினைவினால்—கருதுகின்ற நினைவினையுடையவராய்; அவர்தம்மைவிட்டகன்றிட நீப்பார்—அம்மனைவியார் தம்மைவிட்டு நீங்கும்படி விலக்குவாராயினார்.—எ-று. (கச)

மின்னெ டுஞ்சடை விமலர்மேல் விழுந்தநூற் சிலம்பி
தன்னை வேறொரு பரிசினாற் றவிர்ப்பது தவிர
முன்ன ணைந்துவந் தூதிவாய் நீர்ப்பட முயன்று
யுன்னை யானினித் துறந்தன னிங்கென வுரைத்தார்.

(இ-ள்.) மின்னெடுஞ்சடைவிமலர்மேல்—மின்போலும் நீண்ட சடைமுடியையுடைய சிவபிரான் திருமேனியில்; விழுந்தநூற்சிலம்பிதன்னை—தவறிவிழுந்த நூற்சிலம்பியை; வேறொருபரிசினாற்றவிர்ப்பதுதவிர—வேறோர்வகையால் விலக்கிவிடுவதல்லாமல்; முன்னணைந்துவந்தூதி—விரைந்துவந்தூதி; வாய்நீர்ப்படமுயன்றாய்—திருமேனியில் வாய்நீர் துமியவுஞ்செய்தாய்; உன்னையானினித்துறந்தனனிங்கெனவுரைத்தார்—இங்கே உன்னை யான் இனிமேல் துறந்துவிட்டேனென்று சொன்னார்.—எ-று. (கரு)

மற்ற வேலையிற் கதிரவன் மலைமிசை மறைந்தா
னுற்ற வேவலின் மனைவியா ரொருவழி நீங்க
முற்ற வேண்டுவ பழுதுதீர் பூசனை முடித்துக்
கற்றை வேணியர் தொண்டருங் கடிமனை புகுந்தார்.

(இ-ள்.) மற்றவேலையிற்கதிரவன்மலைமிசைமறைந்தான்—அச்சமயத்தில் சூரியன் அத்தமலையின்கண் மறைந்தான்; உற்றவேவலின்—கணவனாரேவலின்படி; மனைவியாரொருவழிநீங்க—மனைவியார் ஒருவழியே மறைவாக ஒதுங்கிநிற்க; முற்றவேண்டுவ—குறைவறச்செய்யவேண்டிய; பழுதுதீர்பூசனைமுடித்து—பிராயச்சித்த பூசையைச்செய்து முடித்து; கற்றைவேணியார்தொண்டரும்—கூட்டமாகிய சடைமுடியையுடைய சிவபிரான் தொண்டரான திருநீலநக்கநாயனாரும்; கடிமனைபுகுந்தார் — காப்பமைந்த தம் திருமாளிகைக்கெழுந்தருளினார்.—எ-று. (கசு)

அஞ்சு முள்ளமோ டவர்மருங் கணைவுற மாட்டார்
நஞ்ச முண்டவர் கோயிலி னங்கையா ரிருந்தார்
செஞ்சொ லான்மறைத் திருநீல நக்கர்தா மிரவு
பஞ்சின் மெல்லணைப் பள்ளியிற் பள்ளிகொள் கின்றார்.

(இ-ள்.) அஞ்சுமுள்ளமோடு—அச்சம் விளைத்தற்கேதுவான உள்ளத்தோடு; அவர்மருங்கணைவுறமாட்டார்—தங்கணவனிருக்குமிடத்துச் சேரமாட்டாதவராய்; நஞ்சமுண்டவர்கோயிலில்—ஆலாகலத்தை யமுதுசெய்தருளிய சிவபிரான் திருக்கோயிலில்; நங்கையாரிருந்தார்—திருநீலநக்கநாயனார் மனைவியாரிருந்தார்; செஞ்சொலான்மறைத் திருநீலநக்கர்தாம்—செப்பமான சொற்களையுடைய நான்குவேதங்களையுணர்ந்த திருநீலநக்கநாயனார்; இரவுபஞ்சின்மெல்லணைப்பள்ளியில்—அன்றிரவு பஞ்சாலமைந்த மிருதுவான மெத்தையோடுகூடிய சயனத்தில்; பள்ளிகொள்கின்றார்—நித்திரைசெய்கின்றாரானார்.—எ-று. (கஎ)

பள்ளி கொள்பொழு தயவந்திப் பரமர்தாங் கனவில்
வெள்ள நீர்ச்சடை யொடுநின்று மேனியைக் காட்டி
யுள்ளம் வைத்தெம்மை யூதிமுன் றுமிந்தபா லொழியக்
கொள்ளு மிப்புறஞ் சிலம்பியின் கொப்புளென் றருள.

(இ-ள்.) பள்ளிகொள்பொழுது=அவர்துயிலுறுங்கால்; அயவந்திப்பரமர்தாம்=அயவந்தியில் வீற்றிருந்தருளும் சிவபிரான்; கனவில்வெள்ளநீர்ச்சடையொடுநின்று=அவர்கனவில் பெருகுகின்ற கங்கைநீரையுடைய சடைமுடியோடு வெளிப்பட்டு; மேனியைக்காட்டி=தம் திருமேனியை அவர்க்குக்காட்டி; உள்ளம்வைத்தெம்மையூதி=உன்மனையாள் எம்மிடத்தன்புசெய்தெம்மையூதி; முன்றுமிந்தபாலொழிய=முன்னே உமிந்த பகுதிதவிர; இப்புறம்=ஊதித்துமியாதபுறம்; சிலம்பியின்கொப்புள்கொள்ளுமென்றருள=சிலந்திப்பூச்சியின் கொப்புளமுண்டாயிருக்கிறதென் றருளிச்செய்ய.—எ-று. ()

கண்ட வப்பெருங் கனவினை நனவெனக் கருதிக்
கொண்ட வச்சமோ டஞ்சலி குவித்துடன் விழித்துத்
தொண்ட னார்தொழு தாடினார் பாடினார் துதித்தா
ரண்டர் நாயகர் கருணையே போற்றிநின் றழுதார்.

(இ-ள்.) கண்டவப்பெருங்கனவினை=தாங்கண்ட அப்பெரிய சொப்பனத்தை; நனவெனக்கருதி=சாக்கிரமென்றுகருதி; கொண்டவச்சமோடு=தம் உளத்துதித்த பயத்தோடு; அஞ்சலிகுவித்துடன்விழித்து=கைகளை அஞ்சலியாகக்குவித்து உடனே துயில்நீங்கி; தொண்டனார்தொழுதாடினார்=திருநீலநக்கநாயனார் தொழுதுகொண்டு ஆனந்தக்கூத்தாடினார்; பாடினார்துதித்தார் = பாடல்களைப்பாடினார் தோத்திரஞ்செய்தார்; அண்டர்நாயகர்கருணையே=சிவபிரானது திருவருளையே; போற்றிநின்றழுதார்=வியந்து நின்றழுதார்.—எ-று. (௧௧)

போது போயிருள் புலர்ந்திடக் கோயிலுட் புகுந்தா
ராதி நாயக ரயவந்தி யமர்ந்தவங் கணர்தம்
பாத மூலங்கள் பணிந்துவீழ்ந் தெழுந்துமுன் பரவி
மாத ராரையுங் கொண்டுதம் மனையின்மீண் டணைந்தார்.

(இ-ள்.) போதுபோயிருள்புலர்ந்திட=இரவுநீங்கிவைகறைக்காலம்வர; கோயிலுட்புகுந்தார்=திருக்கோயிலுட்புகுந்து; ஆதிநாயகர்=முதற்கடவுளாகிய; அயவந்தியமர்ந்தவங்கணர்தம்=அயவந்தியின்கண் வீற்றிருந்தருளும் சிவபிரானுடைய; பாதமூலங்கள்பணிந்துவீழ்ந்து=திருவடிகளைவணங்கி; எழுந்துமுன்பரவி=எழாநின்று திருமுன்னேநின்று துதித்து; மாதராரையுங்கொண்டு=தம்மனைவியாரையும் அழைத்துக்கொண்டு; தம்மனையின்மீண்டணைந்தார்=தம் திருமாளிகைக்கு மறுபடியும் வந்தார்.—எ-று.

பின்பு முன்னையிற் பெருகிய மகிழ்ச்சிவந் தெய்த
வின்பு றுந்திறத் தெல்லையில் பூசனை யியற்றி
யன்பு மேம்படு மடியவர் மிகவணை வார்க்கு
முன்பு போலவர் வேண்டுவ விருப்புடன் முடிப்பார்.

(இ-ள்.) பின்புமுன்னையிற்பெருகிய=அதன்மேல் முன்னையிலும் அதிகமான; மகிழ்ச்சிவந்தெய்த=மகிழ்ச்சி தம்மை வந்தடைய; இன்புறுந்திறத்து=இன்பமுண்டாகும்வ

ழியால்; எல்லையில்பூசனையியற்றி—அயவந்திநாதர்க்கு விரிவான விசேடபூசைகளைச்செய்து; அன்புமேம்படுமடியவர்—அன்பால் மிக்க அடியவர்களாய்; மிகவணைவார்க்கு—தம் மனையின்கண் கூட்டமாய் வருகின்றவர்க்கு; முன்புபோலவர்வேண்டுவ—முன்போல அவர்க்குவேண்டிய திருவமுது முதலியவைகளை; விருப்புடன்முடிப்பார்—பெருவிருப்போடு முடிப்பாராயினார்.—எ-று. (உக)

அன்ன தன்மையி லமர்ந்தினி தொழுகுமந் நாளின்
மன்னு பூந்தராய் வருமறைப் பிள்ளையார் பெருமை
பன்னி வையகம் போற்றிட மற்றவர் பாதஞ்
சென்னி வைத்துடன் சேர்வுறும் விருப்பினிற் சிறந்தார்.

(இ-ள்.) அன்னதன்மையில்—அவர் அவ்வாறான நிலைமையில்; அமர்ந்தினிதொழுகுமந்நாளில்—விரும்பி இனிதாகச் செய்துவரும்நாளில்; மன்னுபூந்தராய்வரும்—நிலைபெற்ற சீகாழியில் அவதரித்த; மறைப்பிள்ளையார்பெருமை—மறைஞானத்தையுணர்ந்த ஆளுடையபிள்ளையார் பெருமையை; பன்னிவையகம்போற்றிட — எடுத்துச்சொல்லி உலகத்தார் துதிக்க; மற்றவர்பாதம்—அப்பிள்ளையாரது திருவடிகளை; சென்னிவைத்துடன்சேர்வுறும்—சிரசின்மீது சூடிக்கொண்டு உடனே அவரைத் தரிசிக்கவேண்டுமென்னும்; விருப்பினிற்சிறந்தார்—பெருவிருப்புடையவராயிருந்தார்.—எ-று. (உஉ)

பண்பு மேம்படு நிலைமையார் பயிலுமப் பருவ
மண்பெ ருந்தவப் பயன்பெற மருவுமப் பதிகள்
விண்பி றங்குநீர் வேணியார் தமைத்தொழ வணைவார்
சண்பை மன்னருஞ் சாத்தமங் கையில்வந்து சார்ந்தார்.

(இ-ள்.) பண்புமேம்படுநிலைமையார்—பத்தியிலுயர்ந்த நிலைமையையுடையநாயனார்; பயிலுமப்பருவம்—அவ்வாறொழுகிவரும்நாளில்; மண்பெருந்தவப்பயன்பெற—நிலவுலகத்தார் தாம்செய்த பெரிய தவப்பயனை யடைதற்கேதுவாக; மருவுமப்பதிகள்—நிலைபெற்றிருக்கும் அத்திருப்பதிகளில் வீற்றிருந்தருளும்; விண்பிறங்குநீர்வேணியார் தமைத்தொழவணைவார்—கங்கைநதியைத்தரித்த சடைமுடியையுடைய சிவபிரானை வணங்க அணைகின்றவராய்; சண்பைமன்னரும்—ஆளுடையபிள்ளையாரும்; சாத்தமங்கையில்வந்துசார்ந்தார்—திருச்சாத்தமங்கையில் எழுந்தருளினார்.—எ-று. (உங)

நீடு சீர்த்திரு நீலகண் டப்பெரும் பாணர்
தோடு லாங்குழல் விறலியா ருடன்வரத் தொண்டர்
கூடு மப்பெருங் குழாத்தொடும் புகலியர் பெருமான்
மாடு வந்தமை கேட்டுள மகிழ்நீல நக்கர்.

(இ-ள்.) நீடுசீர்த்திருநீலகண்டப்பெரும்பாணர்—மிக்க புகழினையுடைய திருநீலகண்டயாழ்ப்பாணர்; தோடுலாங்குழல்விறலியாருடன்வர—மலர்களை முடித்த கூந்தலையுடைய விறலியாரோடுவர; தொண்டர்கூடுமப்பெருங்குழாத்தொடும்—அடியார்கள் திரண்ட பெரிய திருக்கூட்டத்தோடும்; புகலியர்பெருமான்மாடுவந்தமைகேட்டு—ஆளுடையபிள்ளையார் தம்மூருக்குச் சமீபமாக எழுந்தருளியதைக்கேட்டு; உளமகிழ்நீலநக்கர்—திருவுள்ளமகிழ்ச்சியடைந்த திருநீலநக்கநாயனார்.—எ-று. (உச)

கேட்ட வப்பொழு தேபெரு மகிழ்ச்சியிற் கிளர்ந்து
தோட்ட லங்கலுங் கொடிகளும் புனைந்துதோ ரணங்க
ணாட்டி நீணடைக் காவண மிட்டுநற் சுற்றத்
தீட்ட முங்கொடு தாமுமுன் பெதிர்கொள வெழுந்தார்.

(இ-ள்.) கேட்டவப்பொழுதே=ஆளுடையபிள்ளையார் வரவைத்தாங் கேட்டவுடன்; பெருமகிழ்ச்சியிற்கிளர்ந்து=மிக்கமகிழ்ச்சியினுலோங்கி; தோட்டலங்கலுங்கொடிகளும்புனைந்து=இதழ்களோடுகூடிய மலர்மாலைகளையும் கொடிகளையும் அலங்கரித்து; தோரணங்கணுட்டி=தோரணங்களை நிரைத்து; நீணடைக்காவணமிட்டு=நீண்டநடைப்பந்தருமிட்டு; நற்சுற்றத்திட்டமுங்கொடு=நல்லஉறவினரது குழாத்தையும் அழைத்துக்கொண்டு; தாமுமுன்பெதிர்கொளவெழுந்தார்=தாமும் முன்னே எதிர்கொள்ளும்படி எழுந்துசென்ருர்.—எ-று.

இவ்விரண்டுங் குளகம். (உரு)

சென்று பிள்ளையா ரெழுந்தரு ளுந்திருக் கூட்ட
மொன்றி யங்கெதிர் கொண்டுதங் களிப்பினு லொருவா
றன்றி யாடியும் பாடியுந் தொழுதெழுந் தணைவார்
பொன்ற யங்குநீண் மனையிடை யுடன்கொண்டு புக்கார்.

(இ-ள்.) சென்றுபிள்ளையாரெழுந்தருளுந்திருக்கூட்டமொன்றி=எதிர்சென்று ஆளுடையபிள்ளையாரெழுந்தருளும் திருக்கூட்டத்தைச்சேர்ந்து பிள்ளையாரை;அங்கெதிர்கொண்டு=அங்கே எதிர்கொண்டு; தங்களிப்பினுல்=தம்முடைய மனமகிழ்ச்சியினுல்; ஒருவாறன்றி=பலமுறையும்; ஆடியும்பாடியுந்தொழுதெழுந்தணைவார்=ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் வணங்கி எழுந்துசெல்கின்றவராய்; பொன்றயங்குநீண்மனையிடை=அழகுவிளங்கும் விசாலமான தம் திருமாளிகையில்; உடன்கொண்டுபுக்கார்=அழைத்துக்கொண்டு புகுந்தார்.—எ-று. (உசு)

பிள்ளையா ரெழுந் தருளிய பெருமைக்குத் தக்க
வெள்ள மாகிய வடியவர் கூட்டமும் விரும்ப
வுள்ள மாதர வோங்கிட வோங்குசீ காழி
வள்ள லாரைத்தம் மனையிடை யமுதுசெய் வித்தார்.

(இ-ள்.) பிள்ளையாரெழுந்தருளியபெருமைக்குத்தக்க=ஆளுடைய பிள்ளையார் தம் திருமாளிகைக்கெழுந்தருளிய சிறப்பிற்குத்தக்க; வெள்ளமாகியவடியவர்கூட்டமும்விரும்ப=திரண்ட அடியார்குழாங்களும் விரும்பும்படி; உள்ளமாதரவோங்கிட=தம் உள்ளத்தில்பெருவிருப்பானது வளர; ஓங்குசீகாழிவள்ளலாரை=உயர்ந்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரை; தம்மனையிடையமுதுசெய்வித்தார்=தந்திருமாளிகையினிடத்துத் திருவமுதுசெய்வித்தார்.—எ-று. (உஎ)

அமுது செய்தபின் பகலவன் கருங்கட லணையக்
குமுத வாவியிற் குளிர்மதிக் கதிரணை போழ்தி
லிமய மங்கைதன் றிருமுலை யமுதுண்டா ரிரவு
தமது சீர்மனைத் தங்கிட வேண்டுவ சமைத்தார்.

(இ-ள்.) அமுதுசெய்தபின்=திருவமுதுசெய்தபின்பு; பகலவன்கருங்கடலணைய=சூரியன்கரியமேற்றிசைக் கடலையடைய; குமுதவாவியிற்குளிர்மதிக்கதிரணைபோழ்தில்=ஆம்பல்மலர்களையுடைய வாவிகளில் குளிர்ந்த சந்திரிகை எறிக்கும்பொழுது; இமயமங்கைதன்றிருமுலையமுதுண்டார்=பார்வதியாருடைய திருமுலைப்பாலை யமுதுசெய்தருளிய ஆளுடையபிள்ளையார்;இரவுதமதுசீர்மனைத்தங்கிடவேண்டுவசமைத்தார்=அன்றிரவு தம்முடைய திருமாளிகையில் வசிக்கும்படி வேண்டிய உபகரணங்களையமைத்தார்.—எ-று.

வேண்டுவ என்றது இரவில் அமுதுசெய்தற்குரிய திருவமுதுமுதலியனவும் திருக்கூட்டத்தார்க்கு உறையுள்முதலியனவும் என்க. (உஅ)

சீல மெய்த்திருத் தொண்டரோ டமுதுசெய் தருளி
ஞால மிக்கிட நாயகியுட னம்பர் நண்ணுங்
கால முற்பெற வழுதவ ரழைத்திடக் கடிது
நீல நக்கனார் வந்தடி பணிந்துமுன் னின்றார்.

(இ-ள்) சீலமெய்த்திருத்தொண்டரோடு=ஒழுக்கமமைந்த மெய்யடியார்களுடன்; அமுதுசெய்தருளி=பிள்ளையார் திருவமுதுசெய்தருளி; ஞாலமிக்கிடநாயகியுடனம்பர்நண்ணுங்காலம்=உலகமோங்கும்படி உமாதேவியாரோடு தோணியப்பர்வெளிப்படும் பரிபாககாலம்; முற்பெறவழுதவரழைத்திட=முன்னுண்டாக அதனால் அழுத ஆளுடையபிள்ளையார் திருநீலநக்க நாயனாரை அழைக்க; கடிதுநீலநக்கனார்வந்து=திருநீலநக்கநாயனார் விரைந்துசென்று; அடிபணிந்துமுன்னின்றார்=பிள்ளையார் திருவடிகளில் வணங்கித் திருமுன்னேநின்றார்.—எ-று. (உ௯)

நின்ற வன்பரை நீலகண் டப்பெரும் பாண
ரின்று தங்கவோ ரிடங்கொடுத் தருளுவீ ரென்ன
நன்று மின்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க் கிடங்கொடுத் தார்திரு மறையோர்.

(இ-ள்.) நின்றவன்பரை=நின்ற திருநீலநக்கநாயனாரைநோக்கி; நீலகண்டப்பெரும்பாணர்=திருநீலகண்டயாழ்ப்பாணர்;இன்றுதங்கவோரிடங்கொடுத்தருளுவீரென்ன=இன்றிரவு வசிக்கும்படி ஓரிடங்கொடுத்தருளுவீரென்றருளிச்செய்ய; நன்றுமின்புற்று=மிகவும் மகிழ்ந்து; நடுமனைவேதியின்பாங்கர்ச்சென்று = தாம் ஔபாசனம்செய்யும் நடுமனையின்கணுள்ள வேதியினருகில் அழைத்துக்கொண்டுபோய்; மற்றவர்க்கிடங்கொடுத்தார்திருமறையோர்= திருநீலகண்டயாழ்ப்பாணருக்கு இடங்கொடுத்தார் திருநீலநக்கநாயனார்.—எ-று. (௩0)

ஆங்கு வேதியி லருதசெந் தீவலஞ் சுழிவுற்
றோங்கி முன்னையி லொருபடித் தன்றியே யொளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியா ருடனரு ளாற்பள்ளி கொண்டார்.

(இ-ள்.) ஆங்குவேதியிலருதசெந்தீ=அவ்விடத்து ஔபாசனவேதிகையில் நீங்காமலிருக்கும் தீக்கடவுள்; வலஞ்சுழிவுற்றோங்கி=வலஞ்சுழித்தெழுந்து; முன்னையிலொருபடித்தன்றியேயொளிர=முன்னையினு மதிகமதிகமாக விளங்க; தாங்குநூலவர்மகிழ்வுற=அதனால் திருநீலநக்கநாயனார் மகிழ்ச்சியடைய; சகோடயாழ்த்தலைவர்=சகோடயாழையுடைய திருநீலகண்டயாழ்ப்பாணர்; பாங்குபாணியாருடன்=அவ்வேதி மருங்கு விறலியாரோடு; அருளாற்பள்ளிகொண்டார்=சிவபிரான் திருவருளினாற் பள்ளிகொண்டருளினார்.—எ-று.

அருளைமுன்னிட்டவர்க்குத்துயில் அருளிற்கலப்பாதலில் அருளாற்பள்ளிகொண்டார் என்றார். வேதி=ஓமகுண்டம். ஈண்டுச்சகோடயாழென்றது பாலையாழின் பகுப்பேயாம். என்னை? திறனில் யாழாகிய நெய்தலையடக்கிப்பாலை-குறிஞ்சி-மருதம்-முல்லையென யாழ் நாலையும் நாற்பெரும்பண்ணென்பர். பாலையாழை இருபத்தொரு நரம்புடைய பேரியாழென்றும், குறிஞ்சியாழைப் பத்தொன்பதுநரம்புடைய மகரயாழெ

திருநீலநக்கர் திருமணத்திற்குச் சம்பந்தரெழுந்தருளல்

ன்றும், மருதயாழைப் பதினன்கு நரம்புடையசகோடயாழென்றும், முல்லையாழை *எழுநரம்புடைய செங்கோட்டியாழென்றும் நெய்தல்யாழை யடக்கிக் கருவிவகையால் நால்வகையாழென்பர். இவை இவ்வாறுதல் "ஒன்றேடிருபதுமொன்பதும் பத்துடனே, நின்ற பதினுலும் பின்னேழுங்-குன்ருத, நால்வகையாழிற்கு நன்னரம்பு சொன்முறையே மேல்வகைய நூலோர்விதி"என்னும் செய்யுளானும். "நிறைந்தநரம்பு நிகழும் பண்ணெனல் குறைந்தநரம்பு திறமெனக்கொள்ப" என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தானும் பெற்ரும். இதனல் பாலைமுதலிய இந்நான்குயாழுமேதனித்தனி பண்ணென்றும், ஒன்றற்கொன்று குறைநரம்புடைமையின் பாலையல்லாதமூன்றும் திறனென்றும், அதுவேமகரயாழ்-சகோடயாழ்-செங்கோட்டியாழென்றுங் சொள்ளக்கிடந்தமையின் பாலையாழென்னும் பேரியாழின்றிறமே சகோடயாழென்பது திண்ணம். இன்னும் இந்நூலாசிரியரும் திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனர் புராணத்துப் பதினன்கு நரம்புடைய சகோடயாழையே "பாலையீரேழுகோத்தபண்ணினிற் கருவிவீக்கி" எனக் கூறி அதனையே ஈண்டுச் சகோடயாழெனப் பிரித்துக்கூறுதலின் சகோடயாழ் பாலையாழின்றிறனென்பது அவர்க்குங் கருத்தாதலறிக. இன்னும் மகரயாழும் பாலையாழின் திறத்தவென்பது சிந்தாமணியில் குரல்குரலாக என்னுஞ் செய்யுளுக்குக் குரல்குரலாயது செம்பாலையெனப் பொருள்கூறி அதுவே பத்தொன்பது நரம்புடைய மரயாழென்று வரையறுத்து நச்சினார்க்கினியரியற்றிய உரையானுணர்க. ஏனைய ஆன்றோர் நூலில் வந்துழிக்காண்க. இவ்வாறு பாலையாழ் கருவியால் மூன்று திறனுதல்போலப் பண்வகையாலும் செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கொடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை என ஏழுவகையும் பாலையின்பேதமாதல் "மாறுமுதற்பண்ணின்பின் வளர்முல்லைப்பண்ணுக்கி" எனப் பாலையைக்கூறி அதினின்றும் முல்லையைத்திரித்துப் "பட்டடைக்குரலாங்கொடிப்பாலையினினிறுத்தி" என இந்நூலாசிரியர் ஆனயநாயனர்புராணத்திற் கூறியவாற்ருனுணர்க. (௬௧)

கங்கு விற்பள்ளி கொண்டபின் கவுணியர்க் கிறைவ
ரங்கு நின்றெழுந் தருளுவா ரயவந்தி யமர்ந்த
திங்கள் சூடியை நீலநக் கரைச்சிறப் பித்தே
பொங்கு செந்தமிழ்த் திருப்பதிகத் தொடை புனைந்தார்.

(இ-ள்) கங்குலிற்பள்ளிகொண்டபின் = அன்றிரவிற் பள்ளிகொண்டபின்பு; கவுணியர்க்கிறைவர்=ஆளுடையபிள்ளையார்; அங்குநின்றெழுந்தருளுவார்=அவ்விடத்தினின்றும் எழுந்தருளுவாராய்; அயவந்தியமர்ந்ததிங்கள்சூடியை=அயவந்தி என்னும் ஆலயத்தில் வீற்றிருந்தருளும் சிவபிரானுக்கு; நீலநக்கரைச்சிறப்பித்தே=திருநீலநக்கநாயனரை "நிறையினுர்நீலநக்கனெடுமாநகரென்று தொண்டரையுமூர்சாத்தமங்கை" யெனச் சிறப்பித்துப்பாடி; பொங்குசெந்தமிழ்த்திருப்பதிகத்தொடைபுனைந்தார்=பொலிவினையுடைய செந்தமிழாலாகிய திருப்பதிகமாலைசாத்தினர்.—எ-று. (௬௨)

பதிக நாண்மலர் கொண்டுதம் பிரான்கழல் பரவி
யதிக நண்பினை நீலநக் கருக்களித் தருளி
யெதிர் தொழும்பதி களிலெழுந் தருளினு ரென்றும்
புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனர்.

(இ-ள்.) பதிகநாண்மலர்கொண்டு=திருப்பதிகமாகிய புதியமலர்களைக்கொண்டு; தம்பிரான்கழல்பரவி=அயவந்திநாதரது திருவடிகளைத்துதித்து; அதிகநண்பினைநீலநக்கருக்களித்தருளி=அதிகமானநேசத்தைத் திருநீலநக்கநாயனர்க்குக்கொடுத்தருளி; எதிர்

* வடநூலார் ஏழ்நரம்புடைய யாழை விபஞ்சி என்பர்.

தொழும்பதிகளிலெழுந்தருளினர்=அதன் எதிரே தாம் தொழுதற்குரிய திருப்பதிகளில் எழுந்தருளினர்; என்றும்புதியசெந்தமிழ்ப்பழமறைமொழிந்தபூசுரனர்=எந்நாளும் புதிதான செந்தமிழினலே பழைய வேதங்களை யருளிச்செய்த ஆளுடையபிள்ளையார்—எ-று.

அதிகநண்பினைநீலநக்கருக்களித்தருளி என்றதனல் சிலநாளங்கெழுந்தருளியிருந்தனரெனக் குறிப்பித்தவாறு. (௬௩)

பிள்ளை யாரெழுந் தருளவத் தொண்டர்தாம் பின்பு
தள்ளு மன்புடன் கேண்மையுந் தப்பில வெனினும்
வள்ள லார்திரு வருளினை வலியமாட் டாமை
யுள்ள மங்குடன் போக்கிமீண் டொருவகை யிருந்தார்.

(இ-ள்.) பிள்ளையாரெழுந்தருள = ஆளுடையபிள்ளையார் சாத்தமங்கையினின்றும் எழுந்தருளுங்கால்; அத்தொண்டர்=அத்திருநீலநக்கநாயனர்; தாம் பின்புதள்ளுமன்புடன்கேண்மையும்=தாம் அவர்பின்னேசெல்லும் அன்பும்நண்பும்;தப்பிலவெனினும்=தம்முள்ளத்து நீங்காதிருந்ததேனும்; வள்ளலார் திருவருளினை=ஆளுடையபிள்ளையார் தம்பின்தொடராது ஈண்டுறைவீரென்றருளிய அவர்கருணையை; வலியமாட்டாமை=தாம்தள்ளக்கூடாமையால்; உள்ளமங்குடன்போக்கி=தம் உள்ளத்தை அப்பிள்ளையார் பின்செலுத்தி; மீண்டொருவகையிருந்தார்=திரும்பித் தம்திருமாளிகைக்குவந்து ஒருவாறிருந்தார்.—எ-று.

பிள்ளையாரைப்பிரிந்து நிற்றல்கூடாமையும் அவருடன் செல்லக்கூடாமையும் ஆகிய இவ்விரண்டும் நாயனரைநலிதலின் ஒருவகை யிருந்தாரென்றார். (௬௪)

மேவு நாளிலவ் வேதியர் முன்புபோல் விரும்புந்
தாவில் பூசனை முதற்செய்கை தலைத்தலை சிறப்பச்
சேவின் மேலவர் மைந்தராந் திருமறைச் சிறுவர்
பூவ டித்தலம் பொருந்திய வுணர்வொடும் பயின்றார்.

(இ-ள்.) மேவுநாளிலவ்வேதியர்=திருநீலநக்கநாயனர் அங்கிருக்கும்நாளில்; முன்புபோல்விரும்பும்=முன்போலவிரும்பப்படும்; தாவில்பூசனைமுதற்செய்கை=கெடுதலில்லாத சிவபூசை முதலிய செய்கைகள்; தலைத்தலைசிறப்ப=மேன்மேலும் சிறப்படைய; சேவின்மேலவர்மைந்தராம்=இடபத்தின்மேலெழுந்தருளிவரும் சிவபிரான் மகனராகிய; திருமறைச்சிறுவர்=வேதங்களையுணர்ந்த ஆளுடையபிள்ளையாரது; பூவடித்தலம்=திருவடிகளை; பொருந்தியஉணர்வொடும்பயின்றார்=கலந்த உணர்ச்சியுடனெழுகினர்.—எ-று.

திருவடிகளைக்கலந்த உணர்ச்சியோடொழுகலாவது:-இடையறாது பலகாற்சிந்தித் தொழுகல். (௬௫)

சண்பை யாளியார் தாமிருந் தருளுமெப் பதியு
நண்பு மேம்பட நாளிடைச் செலவிட்டு நண்ணி
வண்பெ ரும்புக ழவருடன் பயின்றுவந் தணைந்தார்
திண்பெ ருந்தொண்ட ராகிய திருநீல நக்கர்.

(இ-ள்.) சண்பையாளியார்தாமிருந்தருளுமெப்பதியும்=ஆளுடையபிள்ளையாரெழுந்தருளியிருக்கும் எந்தத்திருப்பதிகளிலும்; நண்புமேம்பட=அவரிடத்துண்டாகிய நண்பானது அதிகரிக்க;நாளிடைச்செலவிட்டுநண்ணி=இடையேசிலநாள்செல்லவிட்டுச்

சென்று; வண்பெரும்புகழவருடன்பயின்று—வளவிய மிகுபுகழுடைய அப்பிள்ளையாரு டன்பழகி; திண்பெருந்தொண்டராகியதிருநீலநக்கர்—திட்பமான பெருமைதங்கிய அடியராகிய திருநீலநக்கநாயனார்; வந்தணைந்தார்—தம்மூருக்குவந்தார்.—எ-று. (ருசு)

பெருகு காதலிற் பன்னெடு நாண்முறை பிறங்க
வருபெ ருந்தவ மறையவர் வாழிசீகாழி
யொருவர் தந்திருக் கல்லியா ணத்தினி லுடனே
திரும ணத்திறஞ் சேவித்து நம்பர்தாள் சேர்ந்தார்.

(இ-ள்.) பெருகுகாதலிற்பன்னெடுநாள்—மிக்கவிருப்போடு பல்நாள்; முறைபிறங்கவரு—இம்முறை நீங்காமல் வருகின்ற; பெருந்தவமறையவர்—பெரியதவத்தையுடைய திருநீலநக்கநாயனார்; சீகாழியொருவர்தந்திருக்கலியாணத்தினில்—ஆளுடைய பிள்ளையார் திருமணத்தில்; உடனேதிருமணத்திறஞ்சேவித்து—அடியார்களோடு அத்திருக்கலியாணச்சிறப்பைச் சேவைசெய்து; நம்பர்தாள்சேர்ந்தார்—சிவபிரான் திருவடிகளையடைந்தார்.—எ-று. வாழி - அசை. (ருஎ)

தரு தொழிற்றிரு மறையவர் சாத்தமங் கையினில்
வரு முதற்பெருந் திருநீல நக்கர்தாள் வணங்கி
யிரு பிறப்புடை யந்தண ரேறுயர்த் தவர்பா
லொருமை யுய்த்துணர் நமிநந்தி யார்தொழி லுரைப்பாம்.

(இ-ள்.) தருதொழிற்றிருமறையவர்—செய்கின்ற அறுதொழிலையுடைய அந்தணர்கள்வாழும்; சாத்தமங்கையினில்வரும்—திருச்சாத்தமங்கையில் அவதரித்த; முதற்பெருந்திருநீலநக்கர்தாள்வணங்கி—முதன்மையையுடைய பெரிய திருநீலநக்கநாயனாரது திருவடிகளை வணங்கி; ஏறுயர்த்தவர்பாலொருமையுய்த்துணர்—இடபத்தைக் கொடியாகக்கொண்டருளும் சிவபிரானிடத்துக் கருத்தை ஒருமையாகச்செய்து அவனையுணர்ந்த; இருபிறப்புடையந்தணர்—இருபிறப்பையுள்ள மறையவராகிய; நமிநந்தியார் தொழிலுரைப்பாம்—நமிநந்தியடிகளுயனாருடைய திருத்தொண்டைச் சொல்லுவாம்.

திருநீலநக்கநாயனார்புராணம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - சு௦௦.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நமிநந்தியடிகணாயனார்புராணம்.

வையம்புரக்குந் தனிச்செங்கோல் வளவர்பொன்னித் திருநாட்டுச்
செய்யகமலத் தடம்பணையுஞ் செழுநீர்த்தடமும் புடையுடைத்தாய்ப்
பொய்தீர்வாய்மை யருமறைநூல் புரிந்தசீலப் புகழதனா
லெய்தும்பெருமை யெண்டிசையு மேறூரேமப் பேறூரால்.

(இ-ள்.) வையம்புரக்குந்தனிச்செங்கோல்=நிலவுலகத்தை யரசாளும் ஒப்பற்ற செங்கோலையுடைய; வளவர்பொன்னித்திருநாட்டு=சோழர்களது காவிரிநாட்டில்; செய்யகமலத்தடம்பணையும்=சிவந்ததாமரை மலர்களையுடைய விசாலமானவயல்களையும்; செழுநீர்த்தடமும்புடையுடைத்தாய்=செழுவியநீர்நிறைந்த தடாகத்தையும் தன்னிடத்துள்ளதாய்; பொய்தீர்வாய்மையருமறைநூல்புரிந்த=மெய்ம்மையான அரிய வேதநூலிற்கூறிய; சீலப்புகழதனால்=ஒழுக்கத்தாலாகிய புகழினால்; எய்தும்பெருமையெண்டிசையுமேறூர்=தானடைந்த மகிமை எட்டுத்திக்கினும் பரம்புமூர் யாதெனில்; ஏமப்பேறூர்=ஏமப்பேறூரென்னும் பெயருடையது.—எ-று. ஆல்-அசை.

பொய்தீர்வாய்மை என்றதற்குப் பொய்யிலாமெய்யரென்றாற்போல விசேடியப் பொருளே பொருளாகக்கூறப்பட்டது. (க)

மாலைபயிலுந் தோரணங்கண் மருங்குபயிலு மணிமறுகு
வேலைபயிலும் புனல்பருகு மேகம்பயிலு மாடங்கள்
சோலைபயிலுங் குளிர்ந்தவிருள் சுரும்புபயிலு மரும்பூகங்
காலைபயிலும் வேதவொலி கழுநீர்பயிலுஞ் செழுநீர்ச்செய்.

(இ-ள்.) மாலைபயிலுந்தோரணங்கள்=மாலைகளோடுசேர்ந்த தோரணங்கள்; மருங்குபயிலுமணிமறுகு=அழகிய வீதிகளிடத்திருக்கும்; வேலைபயிலும்புனல்பருகுமேகம்=கடலின்கண்ணுள்ள நீரைக்குடிக்கின்ற மேகங்கள்; பயிலுமாடங்கள்=மாடங்கள்தோறுமிருக்கும்; சோலைபயிலுங் குளிர்ந்தவிருள்=குளிர்ந்த சோலைகளிடத்திருளிருக்கும்; சுரும்புபயிலுமரும்பூகம்=வண்டுகள் அரியகமுகுகளிடத் திருக்கும்; காலைபயிலும் வேதவொலி=வேதவொலி விடியற்காலையிலிருக்கும்; கழுநீர்பயிலுஞ்செழுநீர்ச்செய்=குளிர்ந்தநீரையுடைய வயலில்செங்கழுநீர்மலர்களிருக்கும்.—எ-று. (உ)

பணையில்விளைந்த வெண்ணெல்லின் பரப்பின்மீது படச்செய்ய
துணர்மென்கமல மிடையிடையே சுடர்விட்டெழுந்து தோன்றுவன
புணர்மென்புரிநூ லவர்வேள்விக் களத்திற்புனைந்த வேதிகைமேன்
மணல்வெண்பரப்பி னிடையிடையே வளர்த்தசெந்தீ மானுமால்.

(இ-ள்.) பணையில்விளைந்தவெண்ணெல்லின்=வயல்களில்விளைந்த வெள்ளைநெல்லினது; பரப்பின்மீதுபட=தொகுதியின்மேற்பட; செய்யதுணர்மென்கமலம்=சிவந்த கொத்துக்களையுடைய மெல்லியதாமரைமலர்கள்; இடையிடையேசுடர்விட்டெழுந்து தோன்றுவன=இடையிடையே ஒளிவிட்டெழுந்துதோற்றும் சிறப்பு; புணர்மென்புரி



நமிநந்தியடிகணாயனார்.

நூலவர்=முறுக்கொத்த மிருதுவான முப்புரிநூலையுடைய மறையவர்; வேள்விக்களத்திற்புனைந்தவேதிகைமேல்=யாகசாலையில் அலங்கரித்த வேதிகையினிடத்திட்ட; மணல்வெண்பரப்பினிடையிடையே=வெண்மணற்பரப்பி னிடையிடையே; வளர்த்தசெந்தீமானும்=வளர்த்த ஓமத்தீயையொக்கும்.—எ-று.

ஆல்-அசை. (௩)

பெருமைவிளங்கு மப்பதியிற் பேணுநீற்றுச் சைவநெறி
யொருமைநெறிவா ழந்தணர்த மோங்குகுலத்தி னுள்வந்தா
ரிருமையுலகு மீசர்கழ லிறைஞ்சியேத்தப் பெற்றதவத்
தருமைபுரிவர் நமிநந்தி யடிகளென்பா ராயினார்.

(இ-ள்.) பெருமைவிளங்குமப்பதியில்=மகிமைவிளங்கிய அந்த ஏமப்பேறூரில்; பேணுநீற்றுச்சைவநெறி=விபூதிதரித்தொழுகும் சைவமார்க்கத்தைப்பாதுகாக்கும்;ஒருமைநெறிவாழந்தணர்தம்=சித்தமொருங்கிய நன்னெறிக்கண்வாழ்கின்ற மறையவர்களுடைய; ஓங்குகுலத்தினுள்வந்தார்=உயர்ந்தகுலத்தில் அவதரித்தவர்; இருமையுலகுமீசர்கழல்=இம்மையிலும் மறுமையிலும் சிவபிரான் திருவடியை; இறைஞ்சியேத்தப்பெற்ற—வணங்கித்துதிக்கப்பெற்ற; தவத்தருமைபுரிவர்=அருமைத்தவஞ்செய்பவர்; நமிநந்தியடிகளென்பாராயினார்=நமிநந்தியடிகளென்று ஒருவரிருந்தார்.—எ-று.

ஒருமைநெறி என்றதற்குவீடடைதற்குரிய நெறியெனினுமமையும். (௪)

வாய்மைமறைநூற் சீலத்தால் வளர்க்குஞ்செந்தீ யெனத்தகுவார்
தூய்மைத்திருநீற் றடைவேமெய்ப் பொருளென்றறியுந் துணிவினார்
சாமகண்டர் செய்யகழல் வழிபட்டொழுகுந் தன்மைநிலை
யாமவிரவும் பகலுமுணர் வொழியாவின்ப மெய்தினார்.

(இ-ள்.) வாய்மைமறைநூற்சீலத்தால்=அவர் மெய்மையாகிய வேதநூலிற்கூறும் ஒழுக்கத்தால்; வளர்க்குஞ்செந்தீயெனத்தகுவார்=ஓம்புகின்ற ஓமத்தீயென்று சொல்லத்தக்கவர்; தூய்மைத்திருநீற்றடைவே=சுத்தமாகிய விபூதிதரித்தலே; மெய்ப்பொருளென்றறியுந்துணிவினார்=உண்மைப்பொருளென்றறியும் நிச்சயமுடையவர்; சாமகண்டர்செய்யகழல்=சிவபிரானுடைய சிவந்ததிருவடிகளில்; தலைப்பட்டொழுகுந்தன்மைநிலை=சிந்தித்தொழுகுகின்ற தியானநிலைகாரணமாக; யாமவிரவும்பகலும்=யாமத்தோடுகூடிய இரவினும்பகலினும்; உணர்வொழியாவின்பமெய்தினார்=தம் உணர்வின்கண் அழியாத இன்பத்தையடைந்தவர்.—எ-று.

இவரது தூய்மை செந்தீக்கொத்தலின் செந்தீயெனத்தகுவாரென்றார். (௫)

அவ்வூர்நின்றுந் திருவாரூ ரதனையடைவா ரடியார்மேல்
வெவ்வூறகற்றும் பெருமான்றன் விரைசூழ்மலர்த்தாள் பணிவுறுவ
தெவ்வூதியமு மெனக்கொள்ளு மெண்ணமுடையார் பலநாளுந்
தெவ்வூரெரித்த வரிச்சிலையார் திருப்பாதங்கள் வணங்கினார்.

(இ-ள்.) அவ்வூர்நின்றும்=அந்த ஏமப்பேறூரினின்றும்; திருவாரூரதனையடைவார்=திருவாரூரை அடைகின்ற அவர்; அடியார்மேல்வெவ்வூறகற்றும்பெருமான்றன்=அடியாரிடத்துக்கொடிய இடையூற்றைநீக்கியருளும் சிவபிரானுடைய; விரைசூழ்மலர்த்தாள்பணிவுறுவது=வாசனைகமழும்மலர்போலும் திருவடிகளைவணங்குவது; எவ்வூதியமுமெனக்கொள்ளும்=எமக்கு எவ்வகைப்பயனுமென்று கருதிக்கொள்ளும்; என்

ணமுடையார்=மனக்கருத்துடையராய்; பலநாளும்=பலநாட்களினும்; தெவ்வூரெரித்தவரிச்சிலையார்=முப்புரங்களை எரித்த வரிந்த வில்லையுடைய புற்றிடங்கொண்டாரது; திருப்பாதங்கள்வணங்கினார்=திருவடிகளைவணங்கிவருவாராயினார்.—எ-று. (சா)

செம்பொற்புற்றின் மாணிக்கச் செழுஞ்சோதியைநேர் தொழுஞ்சீலந்
தம்பற்றாக நினைந்தணைந்து தாழ்ந்துபணிந்து வாழ்ந்துபோந்
தம்பொற்புரிசைத் திருமுன்றி லணைவார்பாங்கோ ரரனெறியி
னம்பர்க்கிடமாங் கோயிலினுட் புக்குவணங்க நண்ணினார்.

(இ-ள்.) செம்பொற்புற்றின்=சிவந்தபொன்மயமான புற்றினிடத்துவாழும்; மாணிக்கச்செழுஞ்சோதியை=மாணிக்கத்தின் செழுமையாகிய ஒளிபோலும் வன்மீகநாதனை; நேர்தொழுஞ்சீலம் = நேரே தரிசிக்கின்ற ஒழுக்கமானது; தம்பற்றாகநினைந்தணைந்து=தமக்குரியபற்றாகக் கருதிக்கொண்டுசென்று; தாழ்ந்துபணிந்துவாழ்ந்துபோந்து=நிலமுறவணங்கி அதனால்வாழ்வடைந்துபோய்; அம்பொற்புரிசைத்திருமுன்றிலணைவார்=அழகியபொன்னாலாகிய மதில்சூழ்ந்த திருமுற்றத்தின்கண் அணைகின்ற அந்நாயனார்; பாங்கோரரனெறியில்=அவ்வாலயத்தின் ஒருபக்கத்திலுள்ள அரனெறியென்னும் ஆலயத்தில்; நம்பர்க்கிடமாங்கோயிலினுட்புக்கு=சிவபிரான் வீற்றிருந்தருளுதற்கிடமாகிய திருக்கோயிலினுள்ளேபுகுந்து; வணங்கநண்ணினார்=வணங்கும்படிக்குச் சென்றார்.—எ-று. (எ)

நண்ணியிறைஞ்சி யன்பினா னயப்புற்றெழுந்த காதலுட
னண்ணலாரைப் பணிந்தெழுவா ரடுத்தநிலைமைக் குறிப்பினாற்
பண்ணுந்தொண்டின் பாங்குபல பயின்றுபரவி விரவுவா
ரெண்ணிறீப மேற்றுவதற் கெடுத்தகருத்தி னிசைந்தெழுவார்.

(இ-ள்.) அண்ணலாரைநண்ணியிறைஞ்சியன்பினால்=ஆலயத்தையடைந்து அரனெறியப்பரைக் கைகூப்பித்தொழுது அன்புகாரணமாக; நயப்புற்றெழுந்தகாதலுடன்=விரும்பி உள்ளத்துதித்த பேராவலோடு; பணிந்தெழுவார்=வணங்கி எழுகின்றவராய்; அடுத்தநிலைமைக்குறிப்பினால்=தம்முள்ளத்துதித்த மனக்குறிப்பினால்; பண்ணுந்தொண்டின்பாங்கு=அவ்விடத்துத்தாம் செய்தற்குரியதைத்திருத்தொண்டின் பகுதிகள்; பலபயின்றுபரவிவிரவுவார்=பலவற்றைச்செய்து துதித்துக்கொண்டு அங்கிருக்கின்ற நமிநந்தியடிகள்; எண்ணிறீபமேற்றுவதற்கெடுத்த=அவ்விடத்துத் தீபங்குறைவாயிருந்ததால் எண்ணிறந்த தீபங்களை இங்கு ஏற்றவேண்டுமென்றுதித்த; கருத்தினிசைந்தெழுவார்=எண்ணத்திற்குடன்பட்டு அங்குநின்றும் புறப்படுவாராயினார்.—எ-று.

தொண்டின்பாங்குபல என்றதனால் திருவலகிடல் புற்செதுக்கல் திருப்பள்ளித்தாமமமைத்தல் இவைமுதலியன கொள்க. (அ)

எழுந்தபொழுது பகற்பொழுதிங் கிரங்குமாலை யெய்துதலுஞ்
செழுந்தண்பதியி னிடையப்பாற் செல்லிற்செல்லும் பொழுதென்ன
வொழிந்தங்கணைந்தோர் மனையில்விளக் குறுநெய்வேண்டி யுள்புகலு
மழிந்தநிலைமை யமணர்மனை யாயிற்றங்க ணவருரைப்பார்.

(இ-ள்.) எழுந்தபொழுது=அவர் தீபத்திற்கு நெய்வேண்டிப் புறப்பட்டபொழுது; பகற்பொழுதங்கு=அங்கு பகற்காலம்; இறங்குமாலையெய்தலும்=பொழுதிறங்கிய மாலையாயிருக்கவும்; செழுந்தண்பதியினிடையப்பாற்செல்லில்=செழுவிய குளிர்

ந்த இத்திருப்பதியிலே அப்பால்யான் நெய்வேண்டிச்சென்றால்; செல்லும்பொழுதென்னவொழிந்து=இரவாய்விடுமென்று செல்லாமல்; அங்கணைந்தோர்மனையில்=சமீபத்திலுள்ள ஓர்வீட்டிற்சென்று; விளக்குறுநெய்வேண்டியுள்புகலும்=விளக்கு வைத்தற்குத்தக்க நெய்யை விரும்பி உள்ளேபோகவும்; அழிந்தநிலைமையமணர்மனையாயிற்று=அதுநிலைமைகெட்ட சமணர்மனையாயிருந்தது; அங்கணவருரைப்பார்=அவ்விடத்து அச்சமணர்கள் நாயனாரைப்பார்த்துச் சொல்வாராய் —எ-று. (௯)

கையில்விளங்கு கனலுடையார் தமக்குவிளக்கு மிகைகாணு
நெய்யிங்கில்லை விளக்கெரிப்பீ ராகினீரை முகந்தெரித்தல்
செய்யுமென்று திருத்தொண்டர்க் குரைத்தார்தெளியா தொருபொருளே
பொய்யுமெய்யு மாமென்னும் பொருண்மேற்கொள்ளும் புரைநெறியார்.

(இ-ள்.) தெளியாதொருபொருளே=ஒருபொருளையே இவ்வியல்பிற்றென்று அதனுண்மையறியாமல்; பொய்யுமெய்யுமாமென்னும்=இஃது இல்லதுமாம் உள்ளதுமாமென்னும்; பொருண்மேற்கொள்ளும்புரைநெறியார்=பொருளை மேற்கொண்டு கூறும் குற்றநெறியில் ஒழுகுகின்ற அச்சமணர்கள்; கையில்விளங்குகனலுடையார்தமக்கு=விளக்கமானஎரியைக் கையிலுடையநுங்கடவுளுக்கு; விளக்குமிகைகாணும்=விளக்குவேண்டியதில்லையென்றறியும்; நெய்யிங்கில்லை=எண்ணெய் எம்மனையிலில்லை; விளக்கெரிப்பீராகில்=விளக்கெரிக்கவேண்டுமானால்; நீரைமுகந்தெரித்தல்செய்யுமென்று=நும்முடைய கடவுள்வல்லமை தெரிவிக்கும்படி குளத்துநீரை முகந்தெரிப்பீராகவென்று; திருத்தொண்டர்க்குரைத்தார்=நமிநந்தியடிகளுக்குச்சொன்னார்கள்.—எ-று.

பொய்யுமெய்யுமென்றல்=ஒருபொருளையே அஸ்தியென்றும் நாஸ்தியென்றும் கூறுதல். புரைநெறி=ஆருகதநூல். அது வேதமூலமன்மையின் புரைநெறியாயிற்று. (௧௦)

அருகர்மதியா துரைத்தவுரை யாற்றாராகி யப்பொழுதே
பெருகமனத்தில் வருத்தமுடன் பெயர்ந்துபோந்து பிறையணிந்த
முருகுவிரியு மலர்க்கொன்றை முடியார்கோயின் முன்னெய்தி
யுருகுமன்பர் பணிந்துவிழ வொருவாக்கெழுந்த துயர்விசும்பில்.

(இ-ள்.) அருகர்மதியாதுரைத்தவுரையாற்றாராகி=அருகந்தர்கள் சிவபிரானை மதியாமல் அவமதித்துக் கூறியசொல்லைத் தாம்பொறாராய்; அப்பொழுதேபெருகமனத்தில்வருத்தமுடன்=அதுகேட்டவுடன் மிகமனத்திலுதித்தவருத்தத்தோடு; பெயர்ந்துபோந்து=அங்குநின்றகன்று; பிறையணிந்த=இளம்பிறையையணிந்த; முருகுவிரியுமலர்க்கொன்றை முடியார்=வாசனைகமழும் கொன்றைமலரைச்சூடிய திருமுடியையுடைய சிவபிரானது; கோயின்முன்னெய்தி=அரனெறியென்னும் ஆலயத்தின்முன் சென்று; உருகுமன்பர்பணிந்துவிழ=மனமுருகுகின்ற அந்நாயனார் வணங்கும்பொழுது; ஒருவாக்கெழுந்ததுயர்விசும்பில்=ஓர்அசரீரிவாக்கானது வானின்கணுதித்தது.—எ-று.

வந்தகவலை மாற்றுமினி மாறாவிளக்குப் பணிமாற
விந்தமருங்கிற் குளத்துநீர் முகந்துகொடுவந் தேற்றுமென
வந்திமதிய மணிந்தபிரா னருளாலெழுந்த மொழிகேளாச்
சிந்தைமகிழ்ந்து நமிநந்தி யடிகள்செய்வ தறிந்திலரால்.

(இ-ள்.) வந்தகவலைமாற்றும்=உமக்குநேரிட்டதுயரத்தையொழியும்; இனிமாறாவிளக்குப்பணிமாற=இனிநீங்காததிருவிளக்குப்பணிசெய்ய; இந்தமருங்கிற்குளத்துநீர்=இக்கோயிலி னருகிலிருக்கின்ற வாவியின்நீரை; முகந்துகொடுவந்தேற்றுமென=முகந்துகொண்டுவந்து விளக்கேற்று மென்று; அந்திமதியமணிந்தபிரானருளால்=மாலைப்

பொழுதில்வருகின்ற இளம்பிறையைச்சூடிய சிவபிரான்திருவருளால்; எழுந்தமொழி கேளா—உதித்த அவ்வசரீரிமொழியைக்கேட்டு; சிந்தைமகிழ்ந்துநமிநந்தியடிகள்—நமிநந்தியடிகணாயனார் திருவுள்ளமகிழ்ந்து; செய்வதறிந்திலர்—செய்தொழிலொன்று மறியாதவரானார்.—எ-று.

வழிபடுமடியார் வேண்டியபொருளை வேண்டியவாறே யருள்புரியும்பெருமான் திருக்கருணை, அருகரவமதித்தமைபோக அவர்கூறியவாறு தமக்காக விளக்கெரியாநீரில் விளக்கேற்றுமென அசரீரியால் தங்கருத்துமுடித்துத் தந்துயரொழித்தமைகருதி ஆனந்தபரவசமெய்தலிற் செய்வதறிந்திலரென்றார். (கஉ)

சென்னிமிசைநீர் தரித்தபிரா னருளேசிந்தை செய்தெழுவார்
நன்னீர்ப்பொய்கை நடுப்புக்கு நாதர்நாம நவின்றேத்தி
யந்நீர்முகந்து கொண்டேறி யப்பர்கோயி லடைந்தகலுண்
முந்நீருலக மதிசயிப்ப முறுக்குந்திரிமே னீர்வார்த்தார்.

(இ-ள்.) சென்னிமிசைநீர்தரித்தபிரானருளே—திருமுடியில் கங்கைநீரைத்தரித்த சிவபிரான் திருவருளையே; சிந்தைசெய்தழுவார்—சிந்தித்துக்கொண்டெழாநின்ற நமிநந்தியடிகணாயனார்; நன்னீர்ப்பொய்கைநடுப்புக்கு—ஆலயத்தினருகிலுள்ள நல்ல நீர்நிறைந்த வாவியினடுவேசென்று; நாதர்நாமநவின்றேத்தி—சிவபிரான் திருவைந்தெழுத்தை உச்சரித்துத்துதித்து; அந்நீர்முகந்துகொண்டேறி—அக்குளத்துநீரை முகந்துகொண்டு கரையேறி; அப்பர்கோயிலடைந்து—அரனெறியப்பரது திருக்கோயிலையடைந்து; முந்நீருலகமதிசயிப்ப—கடலாற்சூழப்பட்ட நிலவுலகத்தார் அதிசயமடைய; அகலுண் முறுக்குந்திரிமேனீர்வார்த்தார்—அகலினிடத்து முறுக்கிய திரியின்மேல் அந்நீரை வார்த்தருளினார்.—எ-று.

நீரால்விளக்கேற்றல் உலகத்தில்வழங்காவழக்காதலின் முந்நீருலக மதிசயிப்ப என்றார். (கஙு)

சோதிவிளக்கொன் றேற்றுதலுஞ் சுடர்விட்டெழுந்த ததுநோக்கி
யாதிமுதல்வ ரரனெறியார் கோயிலடைய விளக்கேற்றி
யேதநினைந்த வருகந்த ரெதிரோமுதிருங் களிப்பினுட
னாதரருளாற் றிருவிளக்கு நீராலெரித்தார் நாடறிய.

(இ-ள்.) சோதிவிளக்கொன்றேற்றுதலும்—ஒளிதங்கிய ஓர்விளக்கை நீர்விட்ட அகலில்ஏற்றவும்; சுடர்விட்டெழுந்தததுநோக்கி—அவ்விளக்கு ஒளிவிட்டெழுந்தது அதைப்பார்த்து; ஆதிமுதல்வரரனெறியார்கோயிலடைய—ஆதிகாரணராகிய அரனெறியப்பரது ஆலயமுழுவதும்; விளக்கேற்றி—அந்நீரால் திருவிளக்கேற்றி; ஏதநினைந்தவருகந்தரெதிரோ—தம்திருப்பணியை நிந்தையாகக்கருதிய சமணரெதிரோ; முதிருங்களிப்பினுடன்—மிக்க மகிழ்ச்சியோடு; நாதரருளால்—சிவபிரான் திருவருளினால்; திருவிளக்குநீராலெரித்தார்நாடறிய—உலகத்தாரறியும்படி திருவிளக்கை நீரினாலே எரித்தருளினார்.—எ-று.

ஏதம்நினைத்தல்—இவர் தொண்டிற்குக் குற்றமுண்டாக்குவோமென்னுங் கருத்தால் எண்ணெய் மறுத்து நீராலெரியெனக்கூறல். (கச)

நிறையும்பரிசு திருவிளக்கு விடியுமளவு நின்றெரியக்
குறையுந்தகளி களுக்கெல்லாங் கொள்ளவேண்டு நீர்வார்த்து
மறையின்பொருளை யருச்சித்து மனையினியதி வழுவாம
லுறையும்பதியி னவ்விரவே யணைவார்பணிவுற் றெருப்பட்டார்.

(இ-ள்.) நிறையும்பரிசுதிருவிளக்கு=ஆலயம்நிறையும் முறைமையால் திருவி ர்குகள்; விடியுமளவுநின்றெரிய=விடியற்காலம்வரையில் நின்றெரிதற்கேதுவாக; கு றைபுந்தகளிகளுக்கெல்லாம்=நீர்குறைந்த அகல்களுக்கெல்லாம்; கொள்ளவேண்டுநீர் வார்த்து=தகளி கொள்ளத்தக்க நீரைவார்த்து; மறையின்பொருளையருச்சித்து=வேத ப்பொருளாகிய சிவபிரானை நித்தியவிதியால் அருச்சித்து; மனையினியதிவழுவாமல்= ம் திருமாளிகையிற்செய்யும் ஔபாசனமுதலிய தொழில்கள் வழுவாமல்; உறையும் தியினவ்விரவேயணைவார்=தாமிருக்கின்ற ஏமப்பேறூருக்கு அவ்விரவின்கண்ணே சல்லுங் கருத்துடையவராய்; பணிவுற்றெருப்பட்டார்=அரனெறியப்பரை வணங் ச்சென்றார்.—எ-று. (கரு)

ரவுசென்று தம்பதியி லெய்திமனைப்புக் கென்றும்போல்
விநியமத் தொழின்முறையே விமலர்தம்மை யருச்சித்துப்
வியமுது செய்தருளிப் பள்ளிகொண்டு புலர்காலை
ரவமணிவார் பூசையமைத் தாரூர்நகரின் மீண்டணைந்தார்.

(இ-ள்.) இரவுசென்றுதம்பதியிலெய்தி=அவ்விரவிற்சென்று தம்மூரையடை ந்து; மனைப்புக்கென்றும்போல்விரவி=தம் திருமாளிகையிற்சென்று என்றும்போலிரு ; நியமத்தொழின்முறையே=தாம் செய்யும் நித்தியகன்மவிதிப்படி; விமலர்தம்மை ருச்சித்துப்பரவி=சிவபிரானை அருச்சனைசெய்து துதித்து; அமுதுசெய்தருளிப்பள் ிகொண்டு=திருவமுதுசெய்து துயில்கொண்டு; புலர்காலையரவமணிவார்பூசையமை து=விடியற்காலத்தில் நித்தியபூசையைச்செய்து; ஆரூர்நகரின்மீண்டணைந்தார்=திரு ருக்குத்திரும்பவந்தார்.—எ-று. (கசு)

வணங்கி யரனெறியார் மகிழுங்கோயில் வலங்கொண்டு
மகிழப் பணிந்தெழுந்து புறம்புமுள்ளுந் திருப்பணிகள்
முயன்று பகலெல்லா முறையேசெய்து மறையவனு
மையத் தரியவிளக் கெங்குமேற்றி யடிபணிந்தார்.

(இ-ள்.) வந்துவணங்கி=திருவாரூரில்வந்து வன்மீகநாதரை வணங்கிக்கொ ; அரனெறியார்மகிழுங்கோயில்வலங்கொண்டு=அரனெறியப்பர் வீற்றிருக்குந்திரு ாயிலை வலமாகவந்து; சிந்தைமகிழப்பணிந்தெழுந்து=தம் உள்ளங்களிக்கும்படி சா ங்கமாகவணங்கி எழுந்து; புறம்புமுள்ளுந்திருப்பணிகள்=ஆலயத்தின் புறம்பும் மாகத் தாம்செய்யும் திருவலகுமுதலிய தொண்டுகளை; முந்திமுயன்று=முற்பட் ்சித்து; பகலெல்லாமுறையேசெய்து=பகல்முழுவதும் முறையாகச்செய்து; வனுரந்தியமயத்து=நமிநந்தியடிகள் மாலைக்காலத்தில்; அரியவிளக்கெங்குமேற் திருவிளக்குகளை ஆலயம்முழுவதும் ஏற்றி; அடிபணிந்தார்=அரனெறியப் டிகளை வணங்கினார்.—எ-று. (கஎ)

ாலப் பலநாளும் பயிலும்பணிசெய் தவரொழுகத்
ு ளாலமணர் கலக்கம்விளைக்கச் சார்விலமண்
ப வேழுலகுங் குலவும்பெருமை நிலவியதா
மான் றொண்டர்கழ லமரர்பணியு மணியாரூர்.

பண்டுபோலப்பலநாளும்=முன்போலப் பலதினமும்; பயிலும்பணி தாம் செய்யும் திருப்பணிகளை நமிநந்தியடிகள் செய்துவர அக்கால ால மணர்கலக்கம்விளைக்க=தண்டியடிகள் காரணமாகச் சமணர்க தோட்டலாகிய திருப்பணிக்கு இடையூற்றை விளைக்க; சார்வி சார்பில்லாத சமண்குண்டர்கள் கண்ணிழந்துகெட; அண்டர்

பெருமான்றெண்டர்கழல்=சிவபிரானடியார்கள் திருவடிகளை; அமரர்பணியு மணிய ரூர்=தேவர்கள் வணங்கும் திருவாரூரில்; ஏழுலகுங்குலவும்பெருமைநிலவியது=ஏா கின்கண்ணும் பரம்புதற்கேதுவான பெருமையானது விளங்கிற்று.—எ-று. ஆல்-அசை

ஏழுலகுங் குலவும்பெருமை நிலவுதலாவது:—கண்ணிழந்த தண்டியடிகள் கண் பெற்றமையும், கண்ணுள்ள சமணர்கள் கண்ணிழந்துகுழியில் விழுந்தமையுமாகிய தண் டியடிகள் சரிதத்தைக் குறிப்பித்தவாறு. (க

நாதமறைதேர் நமிநந்தி யடிகளார்நற் றெண்டாகப்
பூதநாதர் புற்றிடங்கொள் புனிதர்க்கமுது படிமுதலா
நீதிவளவன் றன்வேண்டு நிபந்தம்பலவு மரியணையின்
மீதுதிகழ விருந்தமைத்தான் வேதாகமநூல் விதிவிளங்க.

(இ-ள்.) நாதமறைதேர்நமிநந்தியடிகளார்நற்றெண்டாக=இசைவடிவான தங்களையுணர்ந்த நமிநந்தியடிகணுயஞர்செய்யும் நல்லதிருத்தொண்டாக; பூதநாதர்பு டங்கொள்புனிதர்க்கு=பூதநாதராகிய புற்றிடங்கொண்ட வன்மீகநாதர்க்கு; அமுதுப முதலாவேண்டுநிபந்தம்பலவும்=செந்நெலரிசிமுதலாக வேண்டிய பல படித்தரங்களை ம்; நீதிவளவன்றனரியணையின்மீதுதிகழவிருந்து=நீதியையுடைய சோழன் சிங்காசன த்தில் விளக்கமுடன் வீற்றிருந்து; வேதாகமநூல்விதிவிளங்கவமைத்தான்—வேதாக ளிற்கூறிய விதிப்படி ஏற்படுத்தினன்.—எ-று.

நிபந்தம்பலவுமென்றது=நித்தியம் - நித்தியாங்கம், நைமித்திகம்-நைமித்திக சம், காமியம்-காமியாங்கம்முதலிய பூசைகள்வழுவாமல் நடத்தற்குரிய பஞ்சபல சகவ்வியம் பஞ்சாமிர்தம் பஞ்சான்னம் முதலியன அமைக்கும் படித்தரங்களை நமிநந்தியடிகள் நற்றெண்டாக என்றதனல் அவர் அத்திருத்தொண்டுசெய்தற் ட்சராக என்றுகொள்க.

வென்றிவிடையார் மதிச்சடையார் வீதிவிடங்கப் பெருமாடா
மென்றுந்திருவா ரூராளு மியல்பின்முறைமைத் திருவிளையாட்
டொன்றுஞ்செயலும் பங்குனியுத் திரமாந்திருநா ளுயர்சிறப்பு
நின்றுவிண்ணப் பஞ்செய்த படிசெய்தருளு நேர்பெற்றார்.

(இ-ள்) வென்றிவிடையார்மதிச்சடையார்வீதிவிடங்கப்பெருமாடாம்=வெ தங்கிய இடபத்தை வாகனமாக உடையவரும் இளம்பிறைமுடித்த சடைமுடியை யவருமாகிய தியாகேசர்; என்றுந்திருவாரூராளுமியல்பின்=எந்நாளும் திருவாரூ சுநடாத்து மியல்பினல்; முறைமைத்திருவிளையாட்டொன்றுஞ்செயலும்=முறை னலீலைகளையாடியருளும் முறையும்; பங்குனியுத்திரமாந்திருநாளுயர்சிறப்பும்= யுத்திரத்திருநாளின் உயர்ந்தசிறப்பும்; நின்றுவிண்ணப்பஞ்செய்தபடி=தாம் ணின்று விண்ணப்பித்தபடி; செய்தருளுநேர்பெற்றார்=தியாகேசர்செய்த றைமையைப் பெற்றுக்கொண்டார்.—எ-று.

பங்குனியுத்திரத்திருநாட்சிறப்பு=திருவாழித் தேரூர்ந்து விழாவ திருவிளையாட்டொன்றுஞ்செயல்=அத்தல ஐதிகம்பற்றி நிகழும் உற்சவங்க ப்பஞ்செய்தலாவது:—திருவிழாக்கொண்டருள வேண்டுமெனப்பிரார்த் ருளுதலாவது:—அவ்வாறு திருவிழாக்கொண்டருளுதல்.

இன்னபரிசு திருப்பணிகள் பலவுஞ்செய்தே யேழுலகு
மன்னும்பெருமைத் திருவாரூர் மன்னரடியார் வழிநிற்ப
ரன்னவண்ணந் திருவிளையாட் டாடியருள வெந்நாளு
நன்மைபெருக நமிநந்தி யடிகடொழுதார் நாமுய்ய.

(இ-ள்.) நமிநந்தியடி
அ=நமிநந்தியடிகள் சிறப்போ ளின்னபரிசுநன்மைபெருகத்திருப்பணிகள்பல்வுஞ்செய்
யார்வழிநிற்பார்=அடியார்களது க இவ்வாறாகப்பல திருப்பணிகளையுஞ்செய்து; அடி-
மைத்திருவாரூர்மன்னர்=எழுலகின த்திவழியில் விரவிநிற்கின்ற; எழுலகுமன்னும்பெரு
கப்பெருமான்; எந்நாளுமன்னவண் கண்ணும் நிலைபெறும் பெருமையையுடைய தியா
வ்வாறு திருவிளையாட்டைச்செய்தருள; ந்திருவிளையாட்டாடியருள=எந்நாட்களினும் அ
ணங்கினர்.—எ-று. ஏ-அசை. தொழுதார்நாமுய்ய=நாமுய்யும்பொருட்டு வ

அடியார்பொருட்டுத் திருமேனிகொ
ண்மையின் இவர்விண்ணப்பித்தவாறு திருவி ண்டு அவர்வழிநிற்குமியல்பு பிரானார்க்கு
வாறு பணிசெய்து அத்திருவிளையாட்டைத் தெ யாட்டாடியருள வென்றும், அவர் அவ்
து தொழுதற்கேதுவாதலின் நாமுய்ய என்றுங்கூ ழுதல் எம்மனோருமவ்வாறு பணிசெய்
னர். (உக)

தேவர்பெருமா னெழுச்சிதிரு மணலூர்க்கொ
யாவரொன்று துடன்சேவித் தெல்லாக்குலத்தி நா ளெழுந்தருள
மேவவன்பர் தாமுமுடன் சேவித்தணைந்து விண் ள்ளோரு
காவலாள ரோலக்க மங்கேகண்டு களிப்புற்றார். ணவர்தங்

(இ-ள்.) தேவர்பெருமானெழுச்சி=தியாகப்பெரும
ர்க்கொருநாளெழுந்தருள=திருமணலூருக்கொருதின மெழு திருவிழா; திருமணலூ
ன்றுதுடன்சேவித்து=இது சேவித்தற்குரியார் இன்னாரொன்று ருநீங்காமல் அத்தி
ருவெழுச்சியொடுசேவித்து; எல்லாக்குலத்திலுள்ளோருமேவ=அத்திருவாரூரிலுள்ள
எல்லாக்குலத்தோரும்வர; அன்பர்தாமுமுடன்சேவித்தணைந்து=நமிநந்தியடிகளுமவரு
டன் விழாத்தரிசித்துச்சென்று; விண்ணவர்தங்காவலாளரோலக்கம்=தேவர்பிரானாகிய
தியாகேசர் திருவோலக்கத்தை; அங்கேகண்டுகளிப்புற்றார்=அங்கேதரிசித்து மகிழ்ச்சி
யடைந்தார்.—எ-று.

ஈண்டு ஓலக்கமென்றது உற்சவங்கொண்டருளுங் காட்சியை. (உஉ)

பொழுதுவைகச் சேவித்துப் புனிதர்மீண்டுங் கோயில்புகத்
தொழுதுதம்மூர் மருங்கணைந்து தூயமனையுட் புகுதாதே
யிழுதுமிருள்சே ரிரவுபுறங் கடையிற்றுயில வில்லத்து
முழுதுந்தருமம் புரிமனையார் வந்துட்புகுத மொழிகின்றார்

(இ-ள்.) பொழுதுவைகச்சேவித்து=மாலைப்பொழுதுநீங்க நமிநந்தியடிகள் உ
ற்சவந்தரிசித்து; புனிதர்மீண்டுங்கோயில்புகத்தொழுது=சிவபிரான் திருமணலூரினின்
றுமீண்டு ஆலயத்திற்புகுங்கால் தரிசித்துக்கொண்டு; தம்மூர்மருங்கணைந்து=தம்மூரா
... ஏமப்பேறூரை யடைந்து; தூயமனையுட்புகுதாதே=தூய்மைதங்கியதம் திருமாளி
கையுட்புகாமல்; இழுதுமிருள்சேரிரவு=இழுதுத்தன்மையடைந்த இருள்தங்கிய அவ்
விரவில்; புறங்கடையிற்றுயில=தலைவாயிலிற் பள்ளிகொள்ள; இல்லத்துமுழுதுந்தரு
மம்புரிமனையார்வந்து=தம் திருமாளிகையினிடத்து இல்லறநெறி முழுதும்நடத்தும் அ
வர்மனைவியார்வந்து; உட்புகுதமொழிகின்றார்=உள்ளே புகும்படி மொழிவாராயினார்.

பொழுதுவைகச்சேவித்து என்பதற்கு நெடுநேரம்சேவித்து என்றுரைப்பினும
மையும். இழுதுமிருள்=மைக்குழம்புபோன்ற இருள். அவர்க்குரிய ஔபாசனமுதலிய
அறநெறிகளை நடாத்தும் முறைமைநோக்கி முழுதுந் தருமம்புரிமனையாரென்றார். (உ௩)

திங்கண்முடியார் பூசனைகண் முடித்துச்செய்யுங் கடன்முறையா
லங்கிதனைவேட் டமுதுசெய்து பள்ளிகொள்வீ ரெனவவர்க்குத்
தங்கள்பெருமான் றிருமணலூர்க் கெழுச்சிசேவித் துடனண்ண
வெங்குமெல்லா ரும்போத விழிவுதொடக்கிற் றெனையென்று.

சிவபிரானுக்குச் செய்யும் அ

(இ-ள்.) திங்கண்முடியார்பூசனைகண்முடித்து= வட்டு= தினந்தோறுஞ்செய்யும்
ச்சனைகளைச்செய்து; செய்யுங்கடன்முறையாலங்கிதனை சய்துபள்ளிகொள்வீரென=திருவ
விதிமுறைமையினால் ஔபாசனஞ்செய்து; அமுதெ ர்க்கு=அவ்வாறுகூறிய தம்மனைவி
முதுசெய்து பள்ளிகொள்ளுமென்றுசொல்ல; அசீவித்துடனண்ண=தமது பிரான்திரு
யார்க்கு; தம்பெருமான்றிருமணலூர்க்கெழுச்சி சித்தவருடனேவர; எங்குமெல்லாரும்
மணலூருக் கெழுந்தருளுமுற்சவத்தைத் சலந்துவர அதனால்; இழிவுதொடக்கிற்றெ
போத=எவ்விடத்தும் எல்லாமரபினருங் ன்று சொல்லி.—எ-று. (உ௪)
னையென்று=என்னை விழுப்புத்தொட்ட

செய்தே யகம்புகுந்து
ஆதலாலே குளித்தடுத்த தூய்மை ண்டு மதற்குநீ
வேதநாதர் பூசனைக டொடங்க ங்கணைவா யெனச்செப்பக்
சீதநன்னீர் முதலான கொண்டி காணருமதற்குக் கடிதணைந்தார்.
காதன்மனையார் தாமுமவை

த்து=அதனால் நீரில்முழுகி; அடுத்ததூய்மைசெய்து அ
(இ-ள்.) ஆதலாலேகுள் ததற்குரிய ஸ்நானத்தைச்செய்து மனைபுகுந்து; வேதநாத
கம்புகுந்து=அவ்விழுப்பு நீங் ம=சிவபிரான் பூசனைகளைத்தொடங்கவேண்டும்; அதற்கு
ர்பூசனைகடொடங்கவேண் ணடு=அதற்குநீ குளிர்ந்த நல்லநீர் முதலானவை எடுத்துக்
நீசீதநன்னீர்முதலானகொ யெனச்செப்ப=ாண்டுவருவாயாக என்றுசொல்ல; காதன்மனை
யார்தாமும்இங்கணைவா டைய அவர் மனைவியாரும்; அவைகொணருமதற்குக்கடிதணைந்தா
ர்=அந்நீர்முதலியவற்றைக்கொண்டுவரும்படிக்குவிரைந்துசென்றார்—எ-று. ஏ-அசை.

இவ்விரண்டுங்குளகம். நீர்முதலிய என்றதனால் மிருத்திகைமுடிபஸ்பமுங்கொள்க.

ஆயபொழுது தம்பெருமா னருளாலேயோ மேனியின்மே
லேயுமசைவி னயர்வாலோ வறியோமிறையுந் தாழாதே
மேயவுறக்கம் வந்தணைய விண்ணோர்பெருமான் கழனினைந்து
தூயவன்பர் துயில்கொண்டார் துயிலும்பொழுது கனவின்கண்.

(இ-ள்.) ஆயபொழுதுதம்பெருமானருளாலேயோ=அப்பொழுது சிவபிரான் திருவருளாலேயோ; மேனியின்மேலேயுமசைவினயர்வாலோவறியோம்=அவரது திருமேனியிற் பொருந்திய வழிச்செலவினயர்ச்சியாலோ அறியமாட்டோம்; இறையுந்தாழாதேமேயவுறக்கம்வந்தணைய=கணமேனுந்தரியாமல் தம்முளடங்கிய உறக்கம்வர; விண்ணோர்பெருமான்கழனினைந்து=சிவபிரான் திருவடிகளைக்கருதிக்கொண்டு; தூயவன்பர்துயில்கொண்டார்=தூய்மையுடைய நமிநந்தியடிகள் உறங்கினார்; துயிலும்பொழுதுகனவின்கண்=அவர் உறங்கும்பொழுது அவர்கனவினிடத்து—எ-று.

விண்ணோர்பெருமான் கழனினைந்து துயில்கொண்டார் என்றதனால் மருட்கேவலமுண்டாக்குமுறக்கமெய்தாது நின்மலாவத்தையெய்தியுறங்கினரெனக்கொள்க. (உ௬)

மேன்மைவிளங்குந் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமாடா
மானவன்பர் பூசனைக்கு வருவார்போல வந்தருளி
ஞானமறையோ ராரூரிற் பிறந்தாரெல்லா நங்கணங்க
ளானபரிசு காண்பாயென் றருளிச்செய்தங் கெதிரகன்றார்.

(இ-ள்) மேன்மைவிளங்குந்திருவாரூர்வீதிவிடங்கப்பெருமாடாம்=மகிமைவிளங்கிய திருவாரூரின்கண் வீற்றிருந்தருளும் தியாகப்பெருமான்; மானவன்பர்பூசனைக்குவருவார்போலவந்தருளி=நமிநந்தியடிகள் செய்யும் நேயமிக்கபூசனையைக் கொள்ளுமோர் திருவுருப்போல எழுந்தருளி; ஞானமறையோராரூரிற்பிறந்தாரெல்லாம்=ஞான

சிறந்த மறையவர்கள்வாழும் திருவாரூரிற் பிறந்தவர்களெல்லாரும்; நங்கணங்களாக் கரிசுகாண்பாயென்று—நம்முடைய சிவகணங்களாயிருக்கும் முறைமையை நாளைத் தரிசிப்பாயென்று; அருளிச்செய்தங்கெதிரகன்றார்—அருளிச்செய்து அவரெதிர்மறைந் தருளினார்.—எ-று.

இவ்விரண்டுங்குளகம். (உஎ)

ஆதிதேவ ரெழுந்தருள வுணர்ந்தாரிரவர்ச் சனைசெய்யா
தேதநினைந்தே னெனவஞ்சி யெழுந்தபடியே வழிபட்டு
மாதரார்க்கும் புகுந்தபடி மொழிந்துவிடியல் விரைவோடு
காதலனார்தந் திருவாரூர் புகுதவெதிரங் நகர்காண்பார்.

(இ-ள்.) ஆதிதேவரெழுந்தருளவுணர்ந்தார்—முதற்கடவுளாகிய தியாகேசர்தங் கனவின்கணெழுந்தருள அதனால் துயில்நீங்கியநமிநந்தியடிகளாயனார்; இரவர்ச்சனைசெய்யாது—இரவின்கண்செய்யும்சிவார்ச்சனையைச்செய்யாது; ஏதநினைந்தேனெனவஞ்சி—விழுப்பின்மையை விழுப்பாகநினைந்தேனென் றச்சமுற்று; எழுந்தபடியேவழிபட்டு—நீரின் மூழ்காது துயிலெழுந்தபடியே கைகால்சுத்திசெய்து பூசித்து; மாதரார்க்கும்புகுந்தபடி மொழிந்து—தம்பத்தினியார்க்கும் நிகழ்ந்த முறைமையைக்கூறி; விடியல்விரைவோடு காதலனார்தந்திருவாரூர்புகுத—விடியற்காலத்தில்விரைந்து சிவபிரான் வீற்றிருக்கும் திருவாரூரெல்லையயடைய; எதிரங்நகர்காண்பார்—தம்மெதிரேதோன்றும் அத்திருவா ரூரைக்காண்கின்ற அவர்.—எ-று. (உஅ)

தெய்வப்பெருமா டிருவாரூர்ப் பிறந்துவாழ்வா ரெல்லாரு
மைவைத்தனைய கண்டரவர் வடிவேயாகிப் பெருகொளியான்
மொய்வைத்தமர்ந்த மேனியராம் பரிசுகண்டு முடிகுவித்த
கைவைத்தஞ்சி யவனிமிசை விழுந்துபணிந்து களிசிறந்தார்.

(இ-ள்.) தெய்வப்பெருமாடிருவாரூர்ப்பிறந்துவாழ்வாரெல்லாரும்—தியாகேசர் வீற்றிருந்தருளும் திருவாரூரிற்பிறந்துவாழுநர் யாவரும்; மைவைத்தனையகண்டரவர் வடிவேயாகி—கரியதிருமிடற்றையுடையதியாகப்பெருமான் சாருபமுடையவர்களாய்; பெருகொளியான்மொய்வைத்தமர்ந்தமேனியராம்பரிசுகண்டு—மிக்க ஒளிப்பிழம்பாற் றிரண்ட திருமேனியுடையவர்களாயிருக்கும் முறைமையைப்பார்த்து; முடிகுவித்த கைவைத்தஞ்சி—அஞ்சலியாக முகிழ்த்தகையை முடிமேலெடுத் தச்சமுற்று; அவனிமி சைவிழுந்துபணிந்துகளிசிறந்தார்—நிலமுறச் சாட்டாங்கமாக வணங்கி மகிழ்ச்சியடைந் தார்.—எ-று. இவ்விரண்டுங் குளகம்.

படிவமாற்றிப் பழம்படியே நிகழ்வுங்கண்டு பரமர்பா
லடியேன்பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்று பணிந்தருளாற்
குடியுந்திருவா ரூரகத்துப் புகுந்துவாழ்வார் குவலயத்து
நெடிதுபெருகுந் திருத்தொண்டு நிகழ்ச்செய்து நிலவுவார்.

(இ-ள்.) அருளாற்படிவமாற்றிப்பழம்படியேநிகழ்வுங்கண்டு—தியாகேசர்திருவருளால் அத்திருவாரூர்ப்பிறந்தார் சிவகணங்களாம் முறைமையைமறைத்து முன்போல விருக்கும் நிலைமையையுங் கண்டு; பரமர்பாலடியேன்பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்றுபணிந்து—தியாகேசரிடத்து அடியேன் செய்தகுற்றத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று வணங்கி; குடியுந்திருவாரூரகத்துப்புகுந்துவாழ்வார்—தம்மூரைவிட்டுக் குடியாகவும் அத்திருவாரூரில்வந்து வாழ்கின்றவர்; குவலயத்துநெடிதுபெருகுந்திருத் தொண்டு—நிலவுலகத்தில் நீட்டித்து நிலைபெற்றிருக்கும் திருத்தொண்டுகளை; நிகழ்ச்செய்து நிலவுவார்—நடத்திக்கொண்டு விளங்குவாராயினார்.—எ-று. (ஙo)

நீறுபுனைந்த வடியார்க்கு நெடுநாணியதி யாகவே
வேறுவேறு வேண்டுவன வெல்லாஞ்செய்து மேவுதலா
லேறுசிறப்பு மணிப்புற்றி லிருந்தார்தொண்டர்க் காணியெனும்
பேறுதிருநா வுக்கரசர் விளம்பப்பெற்ற பெருமையினர்.

(இ-ள்.) நீறுபுனைந்தவடியார்க்கு—திருவெண்ணீறுதரித்த சிவனடியவர்க்கு; நெடுநாணியதியாகவே—நீட்டித்தகாலம் முறையாகவே; வேறுவேறுவேண்டுவனவெல்லாஞ்செய்துமேவுதலால்—தனித்தனி அவரவர் விரும்பியவைகளையெல்லாங் கொடுத்துக் கொண்டிருத்தலினால்; ஏறுசிறப்புமணிப்புற்றிலிருந்தார்தொண்டர்க்காணியெனும்பேறு—உயர்ந்தசிறப்பினால் தியாகேசரடியார்களுக்கு ஓர் உறையாணியென்னும் பேற்றை; திருநாவுக்கரசர்விளம்பப்பெற்றபெருமையினர்—வாகீசமுனிவர் பதிகத்தில் ஆராய்ந்தடித்தொண்டராணிப்பொனென்று அருளிச்செய்யப்பெற்ற பெருமையையுடையவர். ()

இன்னவகையாற் றிருப்பணிக ளெல்லாவுலகுந் தொழச்செய்து
நன்மைபெருகு நமிநந்தி யடிகணயமார் திருவீதி
சென்னிமதியுந் திருநதியு மலையவருவார் திருவாரூர்
மன்னர்பாத நீழல்மிகும் வளர்பொற்சோதி மன்னினார்.

(இ-ள்.) இன்னவகையாற்றிருப்பணிகள்—இவ்வாறுதிருத்தொண்டுகளை; எல்லாவுலகுந்தொழச்செய்து—எல்லாஉலகத்தாரும் வணங்கும்படிசெய்து; நன்மைபெருகுநமிநந்தியடிகள்—நன்மைமிக்கநமிநந்தியடிகணாயனார்; நயமார்திருவீதி—சிறப்பமைந்த அணிமுடி நெடிய திருவீதியில்; சென்னிமதியுந்திருநதியுமலையவருவார்—திருமுடிக்கண் இளம்பிறையும் கங்கைநதியுமசையப்பவனிவருகின்ற; திருவாரூர்மன்னர்பாதநீழல்—தியாகேசரது திருவடிநீழலில்; மிகும்வளர்பொற்சோதிமன்னினார் — மிக்குவளர்கின்ற பொன்மயமான ஒளிப்பிழம்பிற் கலந்தருளினார்.—எ-று. (௯௨)

நாட்டாரறிய முன்னாளி னன்னாளிறந்த வைம்படையின்
பூட்டார்மார்பிற் சிறியமறைப் புதல்வன்றன்னைப் புக்கொளியூர்த்
தட்டாமரைநீர் மடுவின்கட் டனிமாமுதலை வாய்நின்று
மீட்டார்கழலே நினைவாரை மீளாவழியின் மீட்பனவே.

(இ-ள்.) முன்னாளிலிறந்த—முற்காலத்தில் முதலைவாய்ப்பட்டிறந்த; ஐம்படையின்பூட்டார்மார்பிற்சிறியமறைப்புதல்வன்றன்னை—ஐம்படையென்னும் ஓராணியணிந்த மார்பினையுடைய சிறியமறைச்சிறுவனை; புக்கொளியூர்த்தாட்டாமரைநீர்மடுவின்கண்—புக்கொளியூரின்கணுள்ள தாளோடுகூடிய தாமரைமலர்ந்த நீரையுடையமடுவிலே; தனிமாமுதலைவாய்நின்று—ஒருபெரிய அம்முதலைவாயினின்றும்; நாட்டாரறியநன்னாளின்மீட்டார்—உலகத்தாரறியும்படி உபநயனஞ்செய்யும்பருவத்தில் வரவழைத்தநம்பியாரூரரது; கழலே நினைவாரை—திருவடிகளையே தியானித்தொழுகுகின்றவரை; மீளாவழியின் மீட்பன—தொலையாதபிறவிவழியினின்றும் உய்விப்பன அத்திருவடிகள்.—எ-று. (௯௩)

நமிநந்தியடிகணாயனார்புராணம்முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௬௯௩.

திருநின்றசருக்கம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.